# சார்பெழுத்துகளின் வகைகள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : குழந்தைகளே வணக்கம்! மலர்விழி, உன் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறீர்கள்?

மலர்விழி : நான், அம்மா, அப்பா, தம்பி ஆகிய நால்வர் உள்ளோம், ஐயா.

ஆசிரியர் : சரி, வீட்டில் முதன்மையானவர்கள் நீயும் உன் தம்பியுமா?

மலர்விழி : இல்லை, ஐயா. அப்பாவும் அம்மாவும்தான்.

ஆசிரியர் : அப்படியா... நீயும் தம்பியும்...

மலர்விழி : அப்பா அம்மாவைச் சார்ந்து வாழ்கிறோம், ஐயா.

ஆசிரியர் : வீட்டில் முதல் பொறுப்பாளர்கள் பெற்றோர்கள். அவர்கள் தாமே தனித்து இயங்குகிறார்கள். எனவே, அவர்கள் முதன்மையானவர்கள். அதனைப்போலவே, நம் தமிழ்மொழியிலும் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம். குழந்தைகளாகிய நீங்கள், உம் பெற்றோரைச் சார்ந்திருப்பதனைப் போலவே, முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்கிறோம். உடல் – வண்ணமிட்ட இச்சொல்லில் உ என்பது உயிர் எழுத்து. ட, ல் என்பன என்ன எழுத்துகள்?

வேலன் : ட உயிர்மெய் எழுத்து, ல் என்பது மெய்யெழுத்து, ஐயா.

ஆசிரியர் : ட் + அ = ட. ட் என்னும் மெய்யெழுத்தும், அ என்னும் உயிர் எழுத்தும் சேர்ந்து, ட என்னும் உயிர்மெய் எழுத்தாகப் பிறந்தது. இதனைப்போன்றே மற்ற உயிர்மெய் எழுத்துகளும் உயிரையும் மெய்யையும் சார்ந்து வரும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனச் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

மாணவர்கள் : முதலெழுத்துகள், சார்பெழுத்துகள்பற்றிக் கற்றுக்கொண்டோம். ஐயா.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் முதலெழுத்துகளை வட்டமிடுக.

அ) அன்பு ஆ) கடல் இ) இன்பம் ஈ) அம்மா உ) தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

1. ஆய்தம் ________ எழுத்துவகையைச் சார்ந்தது.
   அ) முதல் எழுத்து  ஆ) மெய்யெழுத்து  இ) சார்பெழுத்து
2. சார்பெழுத்துகள்________ வகைப்படும்.
   அ) 10  ஆ) 18  இ) 12
3. முதலெழுத்துகளின் எண்ணிக்கை ________
   அ) 216  ஆ) 30  இ) 247

### ஆ) குறுவினாக்கள்

1. முதலெழுத்து என்றால் என்ன ?
2. முதலெழுத்துகள் யாவை ?
3. சார்பெழுத்து என்றால் என்ன ?
4. சார்பெழுத்து எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
5. இரண்டு – இச்சொல்லில் இடம்பெற்றுள்ள சார்பெழுத்துகளை எழுதுக.
6. சார்பெழுத்துகள் இடம்பெறாத நான்கு சொற்களை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

அடிப்படைத் திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத் திறன்கள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல், சொற்போர் முதலியனவும், மொழித்திறன் பயிற்சிகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### அ) பேசுதல் திறன்

1. மொழியே நமக்கு முகவரி இத்தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.
2. வாய்மையே வெல்லும் என்னும் தலைப்பில் கலந்துரையாடுக.

### ஆ) படித்தல் திறன்

பின்வரும் உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்க.

உழவன் காலையில் காளையை ஓட்டிச் சென்றான். அவன், கடும்பனியிலும் தன் பணியைச் சிறப்பாகச் செய்தான்; வாழைத் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சினான்; ஏழையாக இருந்தாலும் எடுத்த வேலையை வேளை தவிராது செய்து முடித்தான்.

இ) எழுதுதல் திறன்

கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. (மாதிரி)

நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்
நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்
ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்
ஒப்பற்ற ஆசான்சொல் கேட்க வேண்டும்
ஆதியிலே வாழ்ந்தமுறை நினைக்க வேண்டும்
ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்
சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்
சுகம்பெறவே வாயார வாழ்த்த வேண்டும்.

வினாக்கள் :
1. எப்படி நிற்கவேண்டும்?
2. எவ்வாறு உண்மை பேசவேண்டும்?
3. யாரை மதிக்கவேண்டும்?
4. யாருடைய சொல்லைக் கேட்கவேண்டும்?
5. பாடலுக்கேற்ற தலைப்புத் தருக.

விடைகள் :
1. நீதிநெறி வழுவாமல் நிற்கவேண்டும்
2. மனமறிய உண்மை பேசவேண்டும்.
3. கல்வி, கேள்விகளில் சிறந்த சான்றோரை மதிக்கவேண்டும்.
4. ஒப்பற்ற ஆசான் சொல் கேட்கவேண்டும்.
5. வாழும் முறை – இப்பாடலுக்கேற்ற தலைப்பு.

பயிற்சி

1. கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
உயிர் களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா. – பாரதியார்

வினாக்கள் :
1. எது பாவம்?
2. மேலோர் எத்தன்மையர்?
3. யாரிடத்தில் அன்பு செலுத்துதல் வேண்டும்?
4. வாழும் முறை யாது?
5. இப்பாடலுக்கேற்ற தலைப்புத் தருக.

ஈ) செயல்திட்டம் : பட்டி என முடியும் ஊர்ப்பெயர்களைத் தொகுக்க.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

### அ) வல்லினம் மிகும் இடங்கள்

இரண்டு சொற்கள் ஒன்றாகச் சேரும்போது இடையில் க், ச், த், ப் ஆகிய நான்கு வல்லின மெய்யெழுத்துகள் எங்கெங்கு மிகும் என்பது குறித்து அறிவோம்.

அ, இ, உ என்பன சுட்டெழுத்துகள் என்பதனை ஆறாம் வகுப்பில் கற்றீர்கள்.

இந்த எழுத்துகளின்முன் வல்லின எழுத்துகளை முதலாக உடைய சொல் வந்து சேர்ந்தால், இடையில் அவ்வெழுத்தின் மெய்யெழுத்துத் தோன்றும். இதனை வல்லொற்று மிகுதல் என்பர்.

அ + பையன் = அப்பையன்

( அ முன் பை என்னும் பகர வருக்க எழுத்து வந்ததால், அவ்வெழுத்தின் மெய்யெழுத்தாகிய ப் தோன்றியது.)

அ + சட்டை = அச்சட்டை

இ + தோட்டம் = இத்தோட்டம்

இ + குளம் = இக்குளம்

உ + பக்கம் = உப்பக்கம்

( உ என்னும் சுட்டெழுத்தானது தற்பொழுது வழக்கத்தில் இல்லை)

எ என்னும் வினா எழுத்துக்குமுன் வல்லின எழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்தாலும் வல்லினம் மிகும்.

எ + குடம் = எக்குடம்

எ + சட்டை = எச்சட்டை

**நானே செய்வேன்**

அ + குடம் =

அ + கூட்டம் =

அ + பெட்டி =

எ + பள்ளி =

எ + சட்டம் =

எ + குழந்தை =

இ + சிறுமி =

இ + தோப்பு =

இ + புத்தகம் =

### ஆ) தமிழ் எண்களை அறிவோம்

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | க | 6 | சு |
| 2 | உ | 7 | எ |
| 3 | ங | 8 | அ |
| 4 | ச | 9 | சூ |
| 5 | ரு | 10 | கO |

**பயிற்சிக்கட்டம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

### இ) கட்டுரை எழுதுதல் : எங்கள் ஊர்

குறிப்புச் சட்டகம் : முன்னுரை, ஊர்ப்பெயர்க்காரணம், ஊர் எல்லைகள், ஊர் அமைப்பு, சிறப்புகள், முடிவுரை.

### ஈ) அகரவரிசையில் அமைத்தல்

1. பின்வரும் உயிர் எழுத்துகளை அகரவரிசையில் அமைக்க.

எ, ஔ, ஈ, உ, ஐ, ஊ, ஆ, அ, ஒ, இ, ஏ, ஓ.

2. பின்வரும் சொற்களை முதலெழுத்தைக்கொண்டு அகரவரிசையில் அமைக்க.
   ஏணி, ஈசல், எலி, ஒன்று, ஔவை, ஊர், அண்ணன், இல்லம், ஆடு, ஓடம், ஐந்து, உடை.
3. உயிரெழுத்தில் தொடங்காத சொற்களை வட்டமிட்டுக் காட்டுக.
   அம்மா, கண்ணன், எல்லை, ஏன், ஆசை, சட்டை, இன்பம், குடம்.

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

(தன்னிடம் உள்ள திறமைகளை அறிந்து செயல்படுதலே தன்னையறிதல்)

மும்பையில் தமிழ்க் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அக்குடும்பத்தில் எட்டு வயது நிரம்பிய சிறுமி இருந்தாள். அச்சிறுமிக்கு நாட்டியத்தில் மிகுந்த ஈடுபாடு இருந்தது; எட்டு வயதிலேயே அரங்கேற்றம்; பன்னிரண்டு வயதுக்குள் நாட்டியக் கச்சேரியில் பங்குபெற்று பெரும்புகழை அடைந்தாள்; நாட்டியச் செல்வி என்னும் பட்டமும் பெற்றாள். ஆனால், பதினெட்டு வயதில் அப்பெண்ணுக்கு எதிர்பாராதவகையில் ஏற்பட்ட கொடிய விபத்தால் அவளது வலக்காலை எடுக்க வேண்டியதாயிற்று.

இளவயதிலேயே பேரும்புகழும் பெற்ற அப்பெண் தன் எதிர்காலமே இருண்டுவிட்டது என மூலையில் முடங்கிவிடவில்லை. தன் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டாள்; மருத்துவரிடம் சென்றாள். 'செயற்கைக்கால் பொருத்திக் கொண்டால் நடக்கலாம், நீந்தலாம், ஏன் நாட்டியம் கூட ஆடலாம்' என்று மருத்துவர் கூறினார்.

மருத்துவரின் கூற்றைக் கேட்ட அப்பெண், நான் மீண்டும் நாட்டியத்தில் ஈடுபடுவேன், வெற்றி பெறுவேன் என்று தனக்குள் சூளுரைத்துக் கொண்டாள். முதலில் செயற்கைக்காலைப் பொருத்திக் கொண்டு ஆடும்போது, அதனால் ஏற்பட்ட பெருந்துன்பத்தையும் பொறுத்துக் கொண்டாள்.

மருத்துவரின் ஊக்கமும் தன்னிடமுள்ள திறமையும் விடாமுயற்சியும் அப்பெண்ணை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்றன.

இரண்டே ஆண்டுகளில் நாட்டியப் பேரொளி என்னும் பட்டமும் அவரைத் தேடி வந்தது. அவரைப் புகழ் பெற்ற நடிகையாகவும் அடையாளம் காட்டியது.

அனைத்துக்கும் காரணம் அப்பெண்ணின் விடாமுயற்சியும் ஊக்கமும் தன்னம்பிக்கையும்தான். நடந்ததனையே நினைத்துக்கொண்டிருக்காமல், அதிலிருந்து வெளியேவர ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் வேண்டும். இழந்ததனையோ கடந்தகாலத்தையோ எண்ணிக் கொண்டிருப்பது வீண்வேலை. அடுத்தது என்னவெனச் சிந்தித்து வாழ்க்கையில் முன்னேறுதல் வேண்டும். உங்களிடமுள்ள வளம், திறமை, வாய்ப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுங்கள். அதுதான் வாழ்க்கை; அதுதான் பயணம்; அதுவே முன்னேற்றம். கேள்விக்குறியாய் வாழாமல் வியப்புக்குறியாய் வாழ்ந்துகாட்டுங்கள். கைத்தட்டுபவராக இல்லாமல், கைத்தட்டல் பெறுபவராக வாழுங்கள்.

1. இந்நிகழ்வைப்போன்று நீங்கள் வேறு ஏதேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
2. அப்பெண்ணின் நிலையிலிருந்து கற்பனை செய்து, உங்கள் செயல்பாடுகளை எழுதுங்கள்.

## மதிப்புக்கல்வி

### துணிவு

பன்னிரண்டு வயதிலேயே மற்போர், சிலம்பம், வாள்வீச்சு என வீரக்கலைகளை எல்லாம் கற்றுத் தேர்ந்திருந்தான் அச்சிறுவன். மதுரைக்கு அருகில் புலியொன்று ஊருக்குள் நுழைந்து கண்ணில்படுகின்ற மக்களையும் ஆடுமாடுகளையும் அழித்து வந்தது. அதனைக் கேள்வியுற்ற மக்கள் அச்சத்தோடு வாழ்ந்தனர். மக்களின் அச்சத்தைப் போக்கக் கருதிய அரசர் விசயரங்க சொக்கநாதர், புலியைக்கொன்று வீழ்த்துபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில், ஒருநாள் ஊருக்குள் புகுந்த அப்புலியைத் தன்கையிலிருந்த ஆயுதத்தாலேயே கொன்று வீழ்த்தினான் அச்சிறுவன். அரசரும் பரிசுகள் பல வழங்கி அவனைச் சிறப்பித்தார்.

இளமையிலேயே துணிச்சலும், வீரமும்கொண்டு விளங்கிய அச்சிறுவன்தான் பின்னாளில் புலித்தேவன் என்று அனைவராலும் போற்றப்பட்டான். இந்திய விடுதலைக்குத் தென்னகத்திலிருந்து அந்நியரை எதிர்த்த சிறந்த வீரன் புலித்தேவனாவான்.

மாணவர்களே! நீங்களும் இளமையிலேயே துணிவுடன் செயல்படுங்கள். ஏனெனில், என்றும் ஒருவர்க்குத் துணிவே துணையாக நிற்கும்.

நீங்கள் துணிந்து செய்த செயல்களை நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

### என் எதிர்காலத் திட்டங்கள்

(வருங்காலத்தில் நான்...)

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழகத்தின் சிறப்புமரம் பனைமரமாகும். புன்செய் நில வரப்புகளின்மீது பனை மரங்களை உழவர்கள் வளர்த்தார்கள். போக்குவரத்துக்காகப் பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையை வேறு யாரும் கைப்பற்றிவிடுதல் கூடாது என்பதற்காகச் சாலையின் இருமருங்கிலும் பனைமரங்களை வளர்த்தனர். ஏரி, குளம், வாய்க்கால் முதலியவற்றின் கரைகளின்மீது மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும் அதன் உறுதித் தன்மைக்காகவும் பனைமரங்கள் பெருமளவில் வளர்க்கப்பட்டன. பனைமரங்கள் தரும் நுங்கு, பதநீர், கற்கண்டு முதலியன மனித உடலுக்குப் பெரும் நன்மையைச் செய்வன. மேலும், இடி மின்னல்களைத் தாங்கிக் கொண்டு நம் வாழ்வைக் காப்பன. பெரும்பான்மைத் தமிழர் அன்றுமுதல் இன்றுவரை பனைமரத்தின் ஓலைகளால்தான் கூரைவேய்ந்து வாழ்கிறார்கள். இவ்வாறு தமிழர்தம் வாழ்வோடு இணைந்திருக்கும் பனைமரங்கள் இன்று அழிவின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கின்றன. விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறும்போது, அந்நிலங்களிலுள்ள பனைமரங்களே முதல் களப்பலியாகின்றன. மேலும், செங்கல்சூளைகளுக்காகப் பல்லாண்டுக்காலம் நெடிதுயர்ந்த பனைமரங்கள் பெருமளவில் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன.

பனைமரங்கள் சல்லிவேர்களைக் கொண்டிருப்பதனால், கட்டடங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவது இல்லை. பனைமரங்கள் மிகுதியான நீரைக்கூட உறிஞ்சுவது இல்லை. இவ்வாறு தமிழகத்தின் சிறப்புமரமாக உள்ள பனைமரத்தைக் காத்தலும் வளர்த்தலும் தமிழர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வினாக்கள்

1. தமிழகத்தின் சிறப்பு மரம் ஆலமரம். (உண்மை /பொய்)

2. மனித உடலுக்கு நன்மைதரும் பொருள்களைப் பனைமரங்கள் தருகின்றன. (உண்மை/பொய்)

3. பனைமரங்கள் மண்ணரிப்பைத் தடுக்கும். (உண்மை /பொய்)

4. பனைமரங்கள் உங்கள் வீட்டுக்கு அருகில் வளர்ந்தால் அவை கட்டடத்தைப் பாதிக்கும். (உண்மை/ பொய்)

5. பனைமரங்கள் மிகுதியான நீரை உறிஞ்சி நிலத்தடி நீர் மட்டத்தைக் குறைத்துவிடும். (உண்மை/பொய்)

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

காலடுவெல்லின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டு, உரிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.



| | | |
|---|---|---|
| பெயர் | : | கால்டுவெல் |
| பிறந்த ஆண்டு | : | 1815 |
| நாடு | : | அயர்லாந்து |
| தமிழகத்தில் வாழ்ந்த இடம் | : | இடையன்குடி (திருநெல்வேலி மாவட்டம்) |
| தமிழ்த்தொண்டு | : | திராவிடமொழிகளின் தாய் ‘தமிழ்’ என உலகுக்குப் பறைசாற்றியது. |
| இயற்றிய நூல் | : | திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் |
| மறைந்த ஊர் | : | கொடைக்கானல் |
| மறைந்த ஆண்டு | : | 1891 |

## எழுதுதல் திறன்

| அகரவரிசைப்படுத்துதல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.

சார்பு, சுக்கு, சேய்மை, சொல்லாட்சி, சட்டம், சிறுகதை, செவ்வாழை, சீர், சோளம், சூடாமணி

______________ ______________

______________ ______________

______________ ______________

______________ ______________

______________ ______________

| திருந்திய வழக்குச் சொற்கள் அறிதல் | செயல்பாடு – 4 |
|---|---|

அட்டவணையில் உள்ள பேச்சுவழக்குச் சொற்களுக்கு உரிய எழுத்துவழக்குச் சொற்களை எழுதுக.

| வ.எண் | பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. | தலகாணி | தலையணை |
| 2. | வேர்வை | |
| 3. | வூடு | |
| 4. | வெல | |
| 5. | தண்ணீ | |
| 6. | வெளக்கு | |

| அறிதல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

1. ____________________ 10. ____________________

2. ____________________ 11. ____________________

3. ____________________ 12. ____________________

4. ____________________ 13. ____________________

5. ____________________ 14. ____________________

6. ____________________ 15. ____________________

7. ____________________ 16. ____________________

8. ____________________ 17. ____________________

9. ____________________ 18. ____________________

| கண்டறிதல் | செயல்பாடு – 6 |
|---|---|

குறிப்புகளைப் பயன்படுத்தி ஊர்ப்பெயர்களைக் கண்டறிக.

1. சொல்லின் முன்னுள்ள ஈரெழுத்து மயக்கம் தரும்; பின் ஈரெழுத்துப் பெருமை தரும்; இரண்டும் சேர்ந்தால் ஊராகும். ____________
2. சொல்லின் முன் பகுதி வீடு கட்ட உதவும்; பின் பகுதி ஆடை நெய்ய உதவும்; இரண்டையும் சேர்த்தால் ஊர்ப்பெயர் காணலாம். ____________
3. சொல்லின் முதல் பகுதி மேன்மை தரும்; இரண்டாம் பகுதி உணவைத் தரும்; மூன்றாம் பகுதி காவலைத் தரும்; மூன்றும் சேர்ந்தால் ஊராகும். ____________
4. சொல்லின் முதல் பகுதி மாட்டின் பெயராகும்; இரண்டாம் பகுதி வினாச் சொல்லாகும்; மூன்றாம் பகுதி இறைவனின் வீடாகும்; மூன்றும் சேர்ந்தால் ஊராகும். ____________
5. சொல்லின் முதல் பகுதி இறைவனின் இருப்பிடமாகும்; இரண்டாம் பகுதி ஆடுகளின் இருப்பிடமாகும்; இரண்டும் சேர்ந்தால் ஊராகும். ____________
6. சொல்லின் முதல் பகுதி மேன்மை; இரண்டாம் பகுதி மலர்; மூன்றாம் பகுதி வீட்டின் நுழைவிடம்; மூன்றும் சேர்ந்தால் ஊராகும். ____________
7. சொல்லின் முதல் பகுதி வெண்ணெய்யை உருக்கினால் கிடைப்பது; இரண்டாம் பகுதி காவலைத் தருவது; இரண்டும் சேர்ந்தால் சுரங்கம் இருக்கும் ஊராகும். ____________

| தொகுத்தல் | செயல்பாடு – 7 |
|---|---|

இந்திய மாநிலங்களின் பெயர்களையும் அங்குப் பேசப்படும் மொழிகளின் பெயர்களையும் தொகுக்க.

| மாநிலம் | மொழி | மாநிலம் | மொழி |
|---|---|---|---|
| 1. தமிழ்நாடு | தமிழ் | 4. | |
| 2. கேரளா | | 5. | |
| 3. | | 6. | |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



| சொற்களஞ்சியம் பெருக்குதல் | செயல்பாடு – 8 |
|---|---|

‘மை’ என்னும் எழுத்தில் முடியும் சொற்களை உருவாக்குக.

(எ.கா.) பெண்மை

______ மை ______ மை ______ மை

______ மை ______ மை ______ மை

______ மை ______ மை ______ மை

| சொற்களை நிரப்புதல் | செயல்பாடு – 9 |
|---|---|

விடுகதைகளுக்கான விடைகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.




1. பொழுது சாய்ந்தால் பூந்தோட்டம்; விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்.
2. காலில்லாத பந்தல்; காணக்காண வியப்பு.
3. ஊருக்கெல்லாம் ஒரே கூரை; மழை வந்தால் ஒழுகும் கூரை.
4. ஊருக்கெல்லாம் ஒரே போர்வை.
5. எல்லையில்லாக் கடலிலே, எங்குப் பார்த்தும் படகு இல்லை.

6. யாரும் சுருட்ட முடியாத பட்டுத் துணியில் எங்குப் பார்த்தாலும் நீல நிறம்.
7. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி; பாதி நாள் குறைவாள்; பாதிநாள் வளர்வாள்.
8. பால் இல்லாமல் பருப்பாள்; நோய் இல்லாமல் இளைப்பாள்.
9. ஓர் அகப்பை மாவாலே ஊரெல்லாம் கல்யாணம்.
10. இளமையில் கொம்புண்டு; வளர்ந்ததும் கொம்பில்லை.
11. ஒரு கோப்பைப் பசும்பால், ஊரெல்லாம் பெருகிடுமாம்.
12. ஒரே ஒரு வெள்ளை விளக்கு; ஊருக்கெல்லாம் வெளிச்சம் தரும்.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண்: 10

**அ) பொருள் கூறுக.** 2 x 1 = 2

1. பண் ________ 2. அகம் ________

**ஆ) பிரித்து எழுதுக.** 2 x 1 = 2

1. யாதொன்றும் ________ 2. பயக்குமெனின் ________

**இ) கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.** 2 x 1 = 2

1. உலகின் மிகப்பழைமையான நிலப்பகுதி ________

அ) தக்காணப் பீடபூமி ஆ) குமரிக்கண்டம் இ) தார்ப்பாலைவனம்

2. தனித்து இயங்கும் எழுத்துகள் ________ .

அ) சார்பெழுத்து ஆ) ஆய்தஎழுத்து இ) முதலெழுத்து

**ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2 x 1 = 2

1. திரு.வி.க. ________ இதழின் ஆசிரியராக இருந்தார்.
2. ஆற்றூர் பேச்சுவழக்கில் ________ என மருவியுள்ளது .

**உ) ஓரிரு சொற்களில் விடையளிக்க.** 2 x 1 = 2

1. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார் ?
2. தமிழ்மொழியின் செவ்வியல் இலக்கியங்கள் நான்கனை எழுதுக

# உயிர்மெய், ஆய்தம்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம். கடந்த வாரம் இலக்கணத்தில் எந்தப் பகுதியைக் கற்றீர்கள்?

வளர்மதி : சார்பெழுத்துகளைக் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : பொன்னி, சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

பொன்னி : பத்து வகைப்படும், ஐயா.

ஆசிரியர் : முருகா, சார்பெழுத்துகளின் வகைகளைக் கூறு.

முருகன் : உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், ஐயா.

ஆசிரியர் : நன்று. நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய்! வளவா! கண், காண், கிளி இவற்றில் முதலிலுள்ள எழுத்துகளைக் கூறு.

வளவன் : க, கா, கி ஐயா.

ஆசிரியர் : அன்பரசி, வளவன் கூறிய எழுத்துகளுக்கான பெயரென்ன?

அன்பரசி : உயிர்மெய் எழுத்துகள், ஐயா.

ஆசிரியர் : எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும்?

அன்பரசி : உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும், ஐயா.

ஆசிரியர் : செல்வா, அன்பரசி கூறியதனைக் கரும்பலகையில் எழுதிக்காட்டு (க் + அ = க; க் + ஆ = கா; க் + இ = கி) கரும்பலகையில் எழுதியதனைப்போல மெய்யெழுத்துகள் பதினெட்டையும் உயிரெழுத்துகள் பன்னிரண்டுடன் சேர்த்து எழுத இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துகள் தோன்றும். உயிர்மெய் எழுத்து உயிரையும் மெய்யையும் சார்ந்திருப்பதால் இதனைச் சார்பெழுத்து என்கிறோம். நந்தா! உயிர், மெய்,

உயிர்மெய் எழுத்து ஆகியவற்றை விடுத்து, வேறு எழுத்து ஏதாவது இருக்கிறதா ? அப்படியிருக்குமெனில், அஃது என்ன எழுத்து எனத் தெரியுமா ? கூறு.

நந்தன் : தெரியும், ஐயா. அஃது அஃகேனம், ஐயா.

ஆசிரியர் : அஃகேனத்தைக் கூர்ந்து நோக்குங்கள். ஃ எனும் இவ்வெழுத்து மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஆகவே, இதனை முப்புள்ளி, முப்பாற்புள்ளி எனக் குறிப்பிடுவர். இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால், தனிநிலை எனவும் கூறுவர். போர் வீரர்கள் பயன்படுத்தும் தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப்புள்ளிகள்போன்று இருத்தலால் ஆய்தம் எனவும் கூறுவர். காவேரி..! ஆய்தஎழுத்து இடம்பெறும் சொற்கள் இரண்டு கூறு.

காவேரி : எஃகு, அஃதிலார், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. ஆய்தஎழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன்பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் சார்பெழுத்துகளை வட்டமிடுக.

அ) அண்ணன் ஆ) எஃகு இ) கொம்பு ஈ) பண்பு உ) செல்வம்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

உயிர்மெய் எழுத்துகள் ____________________ வகையில் அடங்கும்.

1. சார்பெழுத்து 2. சுட்டெழுத்து 3. முதல் எழுத்து

2. அன்பு, அடக்கம், எஃகு – இச்சொற்களிலுள்ள சார்பெழுத்துகளை வட்டமிடுக.

3. விடுபட்ட எழுத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. க் + – = கு | 3. ம் + எ = – | 5. – + அ = ச | 7. த் + ஈ = – |
| 2. ப் + ஏ = – | 4. – + ஐ = பை | 6. வ் + – = வெள | 8. – + – = பூ |

### ஆ) குறுவினாக்கள்

1. அஃகேனத்தின் வேறுபெயர்களை எழுதுக.

2. அஃகேனம் சொல்லில் எவ்வாறு இடம் பெறும்?

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் – இத்தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.

ஆ) எழுதுதல் திறன்

கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

பண்டைக்காலத்தில் அரசன் போர் செய்யக் கருதியவுடன், அவனது போர்ப்பறை முழங்கும். அப்பறையின் ஓசை நாற்றிசையையும் அதிரச் செய்யும். அவ்வோசையைக் கேட்ட போர்வீரர்கள் போர்க்கோலம் பூண்டு மிக்க ஆர்வத்தோடு போருக்குப் புறப்படுவார்கள். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நாற்படைகளும் திரண்டெழும். அரசன் படைத்தலைவரோடு சென்று அவற்றைப் பார்த்து மகிழ்வான்.

போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்குப் பெருவிருந்து அளிப்பான். அதனைப் 'பெருஞ்சோறு அளித்தல்' என்பர். சேனை புறப்பட்டுச் செல்லும் வழியில் அரசனும் படைத்தலைவர்களும் தங்குதற்குரிய பாடி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு அரசனும் வீரரும் இளைப்பாறுவர். அப்பொழுது ஆடலும் பாடலும் நடைபெறும்.

வினாக்கள்

1. நாற்றிசை, நாற்படை – இத்தொகைச்சொற்களை விரித்தெழுதுக.
2. உம் சேர்ந்திருக்கும் பெயர்ச்சொற்களை எடுத்தெழுதுக.
3. பெருஞ்சோறு அளித்தல் என்றால் என்ன ?

## மொழித்திறன் பயிற்சி

### வல்லினம் மிகும் இடங்கள்

1. ஓட, பாட, காண, செய்ய, எழுத, பேச, விளையாட முதலிய அகர ஈற்று வினையெச்சங்களுக்கு முன் க், ச், த், ப் மெய்யெழுத்துகளின் வருக்க எழுத்துச் சொற்கள் (வினைச்சொற்கள்) வருமாயின், உரிய வல்லெழுத்துகள் தோன்றும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | ஓட + காத்திருக்கிறான் | = | ஓடக் காத்திருக்கிறான். |
| | பாட + கேட்டேன் | = | பாடக் கேட்டேன். |
| | காண + கொடுத்தான் | = | காணக் கொடுத்தான். |
| | செய்ய + சொன்னான் | = | செய்யச் சொன்னான். |
| | எழுத + தொடங்கினார் | = | எழுதத் தொடங்கினார். |
| | பேச + செய்தார் | = | பேசச் செய்தார். |
| | விளையாட + பார்த்தான் | = | விளையாடப் பார்த்தான். |

2. நாடி, பேசி, தேடி, செதுக்கி, ஊன்றி, தழுவி, கொட்டி முதலிய 'இ'கர ஈற்று வினையெச்சச் சொற்களின்பின், வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்கள் (வினைச்சொற்கள்) வந்தால் வல்லொற்று மிகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | நாடி + சென்றான் | = | நாடிச் சென்றான். |
| | பேசி + பழகினான் | = | பேசிப் பழகினான். |
| | தேடி + திரிந்தான் | = | தேடித் திரிந்தான். |
| | செதுக்கி + கொடுத்தான் | = | செதுக்கிக் கொடுத்தான். |
| | ஊன்றி + படித்தான் | = | ஊன்றிப் படித்தான். |
| | தழுவி + கொண்டான் | = | தழுவிக் கொண்டான். |
| | கொட்டி + கிடக்கிறது | = | கொட்டிக் கிடக்கிறது. |

பயிற்சி

1. அகர ஈற்றுச் சொற்கள் ஐந்து எழுதுக.

அ) காண    ஆ) ____________    இ) ____________

ஈ) ____________    உ) ____________    ஊ) ____________

2. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ) கூடி + சென்றான் = ____________

ஆ) பதுங்கி + கொண்டான் = ____________

இ) சொல்லி + பார்த்தான் = ____________

ஈ) புலம்பி + தீர்த்தான் = ____________

உ) அள்ளி + கொடுத்தான் = ____________

3. விடுபட்ட தமிழ் எண்களை எழுதுக.

1. க, __ , __ , ச, ரு, சா, __ , அ, __ , __ .

4. அகரவரிசையில் அமைத்தல்

மெய்யெழுத்துகள், உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகிறது எனப் பார்த்தோம். சொற்களில், உயிர்மெய்யெழுத்துகளாக வரும் சொற்களை அகரவரிசையில் அமைப்போம்.

அகரவரிசை

(எ.கா.) கண், காண், கிளி, கீரி, குடுவை, கூகை, கெண்டை, கேள்வி, கை, கொல், கோடு, கௌவை.

5. கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

கிண்ணம், கூட்டம், கீற்று, காட்சி, கடமை, குடம், கெஞ்சு, கேளிர், கைக்குட்டை, கொக்கு, கோடை, கௌசிகன்.

6. செயல்திட்டம் : நும் பாடப்பகுதியில் ஏதேனும் ஒரு பாடத்தை எடுத்துக்கொண்டு அதிலுள்ள சகர வருக்கச் சொற்களைத் தொகுத்து, அவற்றை அகரவரிசைப்படுத்துக.

7. கடிதம் எழுதுதல் : சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம்

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுத்தல் திறன்

(ஒரு செயலில் நாம் எடுக்கும் முடிவு ஆக்கத்திற்கானதா, அழிவிற்கானதா எனச் சிந்தித்து முடிவு எடுத்தல் வேண்டும். ஏனெனில், விளைவுகளைப்பற்றிச் சிந்திக்காமல் நாம் எடுக்கும் சில முடிவுகள் நம்முடைய நடத்தையையும், உடல் நலத்தையும் சீரழிக்கும்.)

முருகன், வீட்டில் தன் தாய்க்கு உறுதுணையாகச் சில வேலைகளைச் செய்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டான். அவன் பள்ளி, வீட்டிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. விரைவாக நடந்தால் மணி அடிப்பதற்கு முன்னதாகப் பள்ளிக்குச் சென்றுவிடலாம். தாயிடம் விடைபெற்றுப் புத்தகப்பையைச் சுமந்தவாறு விரைவாக நடந்தான். முக்கால்பங்குத் தொலைவு கடந்தாயிற்று.

அப்பொழுது வழியில் கூன்விழுந்த பெரியவர் ஒருவர் ஊன்றுகோலைப் பிடித்தபடி நடக்கமுடியாமல் தள்ளாடியபடி சென்று கொண்டிருப்பதனைப் பார்த்தான். பாவம்! இந்த வயதிலும் அவர் எங்குப் போய்க் கொண்டிருக்கிறார்? என எண்ணியபடி அவரைக் கடந்து சென்றான் முருகன். பள்ளியின் மணியோசை கேட்டு ஓடத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் 'தடால்' என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பெரியவரின் ஊன்றுகோல் சற்றே தள்ளிக் கிடக்க, அவர் தரையில் விழுந்து கிடந்தார்.

இந்த நிலையில் முருகன் இடத்தில் நீயிருந்தால் என்ன செய்வாய்?

பள்ளிக்குச் செல்வாயா? பெரியவர்க்கு உதவுவாயா?

## மதிப்புக்கல்வி

### மனக்கட்டுப்பாடு

பெண்மணி ஒருத்தி, தன்னுடைய மகனை அழைத்துக்கொண்டு பெரியவர் ஒருவரைக் காணச் சென்றாள். அவரிடம், தன் மகன் அதிகமாக இனிப்புகளை விரும்பி உண்பதாகவும், அந்தப் பழக்கத்தை விடுவதற்கு அறிவுரை சொல்லுமாறும் கேட்டாள்.

அந்தப் பெரியவர், நாற்பது நாள் கழித்து வந்து தம்மைப் பார்க்குமாறு கூறினார். மீண்டும் அப்பெண்மணி மகனுடன் அவரைச் சந்தித்தாள். பெரியவர் அச்சிறுவனிடம், "தம்பி, இனிப்புகளை அதிகமாக உண்ணாதே; உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும்" என்று கூறினார்.

அதனைக் கேட்ட அப்பெண்மணி, 'இதனை நீங்கள் அப்பொழுதே கூறியிருக்கலாமே, ஏன் நாற்பது நாள் கழித்துச் சொல்கிறீர்கள்' என்று கேட்டாள்.

அந்தப் பெரியவரோ, 'அம்மா, எனக்கே இனிப்பு அதிகமாக உண்ணும் பழக்கம் இருந்தது. நான் முதலில் என்னைத் திருத்திக்கொண்ட பின்னரே, பிறருக்கு அறிவுரை கூற முடியும். நாற்பது நாளுக்குப் பிறகு இப்போதுதான் இனிப்பு உண்பதனை நான் குறைத்திருக்கிறேன். அதனால்தான் உன் மகனுக்கு அறிவுரை கூறினேன்' என்றார் அப்பெரியவர்.

நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொண்டு வாழவேண்டும்; இல்லையென்றால், பலவற்றுக்கும் நாம் அடிமையாகிவிடுவோம். புலனடக்கமே எல்லார்க்கும் புகழ் சேர்க்கும்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

**உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நகரம் திருச்சிராப்பள்ளி. இந்நகரம் கோவில்களும் நினைவுச்சின்னங்களும் நிறைந்துள்ள வரலாற்று நகரமாகும். இதன் பழம்பெருமைக்குச் சான்றாகத் திகழ்வது மலைக்கோட்டை. இக்கோட்டையிலுள்ள பல்லவர் காலத்துச் சிற்பங்கள் காண்போரைக் கவரும் தன்மையன.

திருச்சிராப்பள்ளியைத் தமிழ் மன்னர்கள் மட்டுமன்றி முகலாயர்கள், விசயநகர மன்னர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் ஆண்டுள்ளார்கள். சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூர், திருச்சிக்கு அருகில் அமைந்துள்ள பண்டைய நகரமாகும். இவ் உறையூர் முற்காலத்தில் கோழிமாநகரம் என்று அழைக்கப்பட்டது.

திரிசிரபுரம் என்று தொன்மைக்காலத்தில் அழைக்கப்பட்ட திருச்சியில், ஈராயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்த கவின்மிகு கல்லணை, காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்தியப் பொறியியல் சாதனைகளிலே மேம்பட்டு நிற்கும் இக்கல்லணை, பண்டைத்தமிழரின் நீர் மேலாண்மைச் சிந்தனையின் சிகரமாகும்.

திருச்சியின் சுற்றுலா இடங்களாக முக்கொம்பு, ஊமையன்கோட்டை, புளியஞ்சோலை, பச்சைமலை முதலியன உள்ளன. தாயுமானவருக்கு ஞானநெறி காட்டிய மௌனகுருவும், தமிழின் முதல் சிறுகதை எழுத்தாளரான வ.வே.சுப்பிரமணியமும் திருச்சி மண்ணில் தோன்றியவராவர்.

### வினாக்கள்

1. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நகரம் திருச்சிராப்பள்ளி. ( ஆம் / இல்லை )
2. மலைக்கோட்டையில் உள்ள சிற்பங்கள் பாண்டியர் காலத்தவை. ( ஆம் / இல்லை )
3. பல்லவர்களின் தலைநகரம் உறையூர். ( ஆம் / இல்லை )
4. பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மைக்குச் சான்று கல்லணை. ( ஆம் / இல்லை )
5. தமிழின் முதல் சிறுகதை எழுத்தாளர் வ. வே. சுப்பிரமணியம். ( ஆம் / இல்லை )

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
| --- | --- |

**மாணவன், தன்னை மோசிகீரனாராக நினைத்துக்கொண்டு பேசுதல்**

என் பெயர் மோசிகீரன். என் ஊர் தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்பதாகும். கீரன் என்பது, என் குடிப்பெயர். நான் பாடிய பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

ஒருமுறை சேரமன்னனைக் காண, அவன் அரண்மனைக்குச் சென்றேன்; மன்னனோ அரண்மனையில் இல்லை. எனக்கு ஏற்பட்ட உடற்சோர்வினால் அங்கிருந்த கட்டிலில் படுத்து உறங்கிவிட்டேன். அக்கட்டில் முரசுக்கட்டில் என்பது எனக்குத் தெரியாது. முரசுக்கட்டில் மன்னனைவிட மேலான ஒன்றாகும். அக்கட்டிலில் படுத்தால் மரணதண்டனைதான் என்பது, களைத்திருந்த என் சிந்தைக்கு எட்டவில்லை.

சிறிதுநேரத்தில் திடீரெனச் சில்லென்ற காற்று என்மீது படவே கண்விழித்துப் பார்த்தேன். ஐயோ, என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. முரசுக்கட்டிலில் படுத்துறங்கியதற்கு மரணதண்டனை அளிக்கவேண்டிய சேரமன்னன், எனக்குக் கவரி வீசிக்கொண்டிருந்தான். காரணம், என்மீதுள்ள அன்பைவிடத் தமிழ்மீதிருந்த அன்பு, அவனை அவ்வாறு செய்யச் செய்தது. இஃது என் வாழ்வில் மறக்கவியலாத நிகழ்வாகும்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் பாடலை வாய்விட்டுப் படிக்க.

ஐவர் கடமை

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

– புறநானூறு

| நடித்தல் திறன் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் நாடகத்தை வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

களம் : சோழனின் யானைக்கவுனி

பங்குபெறுவோர் : சோழன் கிள்ளிவளவன், புலவர் கோவூர்கிழார், மலையமான் பிள்ளைகள் (அண்ணன், தம்பி), யானைப்பாகன்

கிள்ளிவளவன்: யானைப்பாகனே, இன்னும் என்ன தயக்கம்? விரைந்து செலுத்து யானையை! தொலைந்து போகட்டும் அந்த மலையமானின் பிள்ளைகள்.

(பிள்ளைகளை நோக்கிப் பாகன் யானையைச் செலுத்துதல்)

# நால்வகைச் சொற்கள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! தமிழரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

தமிழரசி : நான் மதுரைக்குச் சென்றிருந்தேன், ஐயா.

ஆசிரியர் : ஓ... அப்படியா... யார் யாருடன் சென்றாய்?

தமிழரசி : என் அப்பா, அம்மாவுடன், ஐயா.

ஆசிரியர் : உடன் யார் வந்தது?

தமிழரசி : என் தம்பியும் வந்தான், ஐயா.

(ஆசிரியர் கரும்பலகையில் அம்மா, அப்பாவுடன் மாநகர் மதுரைக்குச் சென்றோம். என் தம்பியும் வந்தான் என எழுதுதல்.)

ஆசிரியர் : செல்வன்! வண்ணமிட்ட சொற்களைப் படி.

செல்வன் : படிக்கிறேன், ஐயா. அப்பா, அம்மா, மாநகர் மதுரை, தம்பி வந்தான்.

ஆசிரியர் : அம்மா, அப்பா, மாநகர் மதுரை என்பன எவ்வகைச் சொற்கள் எனத் தெரியுமா?

கண்ணன் : இம்மூன்றும் பெயர்ச்சொற்கள், ஐயா.

ஆசிரியர் : நன்று. இவை பெயரைக் குறித்து வந்ததால் பெயர்ச் சொற்கள் ஆயின. நல்லான்! அடுத்த சொல் என்னவென்று கூறு?

நல்லான் : வந்தான், ஐயா.

ஆசிரியர் : ஒரு பொருளின் செயலைக் (இயக்கத்தைக்) குறிப்பதால் இச்சொல் வினைச்சொல் ஆயிற்று. வேந்தா, அடுத்த சொல் என்னவென்று கூறு.

வேந்தன் : 'தம்பியும்'

ஆசிரியர் : தம்பி + உம். இதிலுள்ள 'உம்' என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை இடைச்சொல் என்பர்.

செந்தணல் : இது தனியாக வந்தால் பொருள் தருமா? ஐயா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய், செந்தணல். இது தனியாக வந்தால் பொருள் தராது; பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைச் சார்ந்தே வரும்.

தமிழ்

மதிவாணன் : வேறு எடுத்துக்காட்டுகள் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேனே, இராமனைப் பார்த்தேன். இராமன் + ஐ. இதில் வரும் வேற்றுமை உருபு ஐ இடைச்சொல்லாகும்.

கற்றதனா லாய பயனென் கொல். இதிலுள்ள கொல் என்னும் அசைச்சொல்லும் இடைச்சொல்லே. இவ்வாறு இடைச்சொற்கள் தனித்தியங்காமல் பெயரையோ வினையையோ சார்ந்தே வரும். அவற்றையெல்லாம் மேல் வகுப்புகளில் கற்கவிருக்கிறீர்கள். அடுத்த சொல் என்ன ?

தாமரை : மாநகர், ஐயா.

ஆசிரியர் : மாநகர் என்னும் சொல்லிலுள்ள மா என்பது உரிச்சொல் ஆகும். இதன் பொருள் பெரிய என்பது...

செல்வன் : உரிச்சொல் என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : பலவகைப்பட்ட பண்புகளைக்கொண்டு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைவிட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள். இவ்வாறு இலக்கணவகைச்சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

மாணவர் : நன்றி, ஐயா.

*****

பயிற்சி : உனக்குத் தெரிந்த பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை எழுதுக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

1. முருகன் மாமலையைப் பார்த்தான்.

   இந்த முற்றுச்சொற்றொடரில் உள்ள சொற்களை வகைப்படுத்திக் காட்டுக.

   அ) ____________ ஆ) ____________ இ) ____________ ஈ) ____________

2. பார்த்திபனும் பாரதியும் பள்ளியை அடைந்தனர். – இந்த முற்றுச்சொற்றொடரில் சொற்களை வகைப்படுத்திக்காட்டுக.

   அ) ____________ ஆ) ____________ இ) ____________

3. பொருத்துக.

   அ) பெயர்ச்சொல் – வந்தான்

   ஆ) வினைச்சொல் – ஐந்தும் ஆறும்

   இ) இடைச்சொல் – மாவீரன்

   ஈ) உரிச்சொல் – வேலன்

### ஆ) குறுவினாக்கள்

1. சொல் எத்தனை வகைப்படும்?
2. இடைச்சொல் என்றால் என்ன? சான்றுதந்து விளக்குக.
3. உரிச்சொல் என்றால் என்ன? சான்றுதந்து விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

1. வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கான வழிகள் என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. நன்றிப்பரிசுக் கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.

### ஆ) படித்தல் திறன்

பொருளுக்கேற்றவாறு குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக் காட்டுக.

ஆகாயத்தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால், ஊமைகளாய் இருந்து வந்த மக்களைப் பேச வைத்தார்; உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார்; அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில் உயிர் துறக்க அஞ்சாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார்; சிட்டுக்குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்.

### இ) எழுதுதல் திறன் : குறிப்புகளைக்கொண்டு கதை எழுதுதல் (மாதிரி)

உப்பு வணிகன் – கழுதையின்மேல் உப்புமூட்டை ஏற்றல் – நாள்தோறும் கடைக்குச் சென்று – குறைதல் – மறுநாளும் விழுதல் – உப்பு வணிகனுக்கு வருவாய் குறைதல் – கழுதையின் மனநிலையை அறிதல் – மூட்டையில் பொருளை மாற்றுதல் – அறியாத கழுதை மீண்டும் ஆற்றுநீரில் விழுதல் –எடை கூடுதல் – உண்மை உணர்தல்.

## கழுதையின் சூழ்ச்சி

ஓர் ஊரில் உப்பு விற்கும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் உப்புமூட்டை களைக் கழுதையின் மேலேற்றி ஆற்றைக் கடந்துசென்று விற்று வருவான். நாள்தோறும் அதிக எடையுள்ள உப்புமூட்டையைச் சுமந்து செல்வது கழுதைக்குப் பிடிக்க வில்லை. அது துன்பப்பட்டுக்கொண்டே வேலை செய்து வந்தது. ஒருநாள் உப்பு வணிகன் முன்னால் செல்ல, கழுதை மெதுவாக அவன் பின்னே சென்று கொண்டிருந்தது. அப்போது அது, எதிர்பாராமல் ஆற்றுநீரில் தவறி விழுந்தது; எழுந்தபோது தன்மீதுள்ள மூட்டையின் எடை குறைந்ததனைக் கண்டுகொண்டது. மறுநாளும் வேண்டுமென்றே நீரில் தவறி விழுந்தது. மூட்டையின் எடை குறைந்தது. கழுதையின் இச்செயல் நாளும் தொடர்ந்தது. படிப்படியாக வருமானம் குறைந்துகொண்டே வருவதனைக் கண்ட வணிகன், உண்மையை அறிந்துகொண்டான். தீயஎண்ணம் கொண்ட கழுதைக்குப் பாடம் புகட்ட விரும்பினான்.

மறுநாளும் கழுதை கால் தடுமாறி விழுவதுபோல, நீரில் விழுந்தது. ஆனால், அஃது எழுந்த போது, முன்பைவிட எடை கூடியுள்ளதனைக் கண்டது. அன்று, சுமக்க முடியாமல் சுமந்து சென்றது.

நாளும் கழுதை தவறி விழ, எடையும்கூட, மெதுவாக உண்மையை உணரத் தொடங்கியது. நாம் வணிகனை ஏமாற்ற நினைத்தோம். ஆனால், வணிகன் நம்முடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, உப்பு மூட்டைக்குப் பதிலாகப் பஞ்சு மூட்டையை வைத்துவிட்டான் போலும். தீமை செய்ய நினைத்த எனக்கு நன்றாகப் புரிய வைத்துவிட்டான். இந்தத் தவற்றை இனிச் செய்யக் கூடாது என்று அக்கழுதை முடிவெடுத்தது.

பயிற்சி

கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதையை விரித்து எழுதுக.

சிறுவன் – ஆடுகளை மேய்த்தல் – பிறரை ஏமாற்ற நினைக்கும் குணம் – புலி வருகிறது என எப்போதும் கூறல் – மற்றவர்கள் ஏமாறுதல் – உண்மையாகவே புலி வந்துவிடுதல் – சிறுவன் அழைத்தல் – மற்றவர்கள் இவன் எப்போதும் இப்படித்தான் என நினைத்தல் – பார்க்காமல் இருத்தல் – புலி ஆடுகளை அடித்துச்சென்றுவிடுதல் – சிறுவன் வருந்துதல்.

ஈ) செயல்திட்டம் : கணித மேதைகள் இருவரைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்க.

## அ) வல்லினம் மிகும் இடங்கள்

1. எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் மட்டும் வல்லின வருக்கச் சொற்கள் வந்தால் வல்லொற்று மிகும்.

(எ.கா.) எட்டு + கால் = எட்டுக்கால்

பத்து + பேர் = பத்துப்பேர்

எட்டு + தொகை = எட்டுத்தொகை

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

**நானே செய்வேன்**

பத்து + சட்டை =

பத்து + தோப்பு =

எட்டு + கூடை =

எட்டு + தேர் =

2. பாடாத, கேளாத, ஆடாத, செய்யாத, சொல்லாத என்பன எதிர்மறைப்பொருளில் வரும் பெயரெச்சங்கள் ஆகும். இச்சொற்களிலுள்ள ஈற்றெழுத்தானது கெட்டுப் பாடா, கேளா, ஆடா, செய்யா, சொல்லா என வருவதும் உண்டு. அவ்வாறு வருவதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். இவற்றின்முன் வல்லின வருக்க எழுத்துகள் வந்தால் வல்லொற்று மிகும்.

(எ.கா.) பாடா + குயில் = பாடாக்குயில்

கேளா + செவி = கேளாச்செவி

ஆடா + தோழி = ஆடாத்தோழி

செய்யா + செயல் = செய்யாச்செயல்

சொல்லா + சொல் = சொல்லாச்சொல்

**நானே செய்வேன்**

செய்த + தச்சன் =

பாடிய + கவிதை =

காத்த + சிறுமி =

வெடித்த + பஞ்சு =

### வல்லினம் மிகா இடங்கள்

வந்த, உடைந்த, செய்த, கிழிந்த, காய்ந்த என்பன முற்றுப்பெறாத வினைச்சொற்கள். இத்தகைய சொற்கள் பெயரைக்கொண்டு முற்றுப்பெறும். இச்சொற்களைப் பெயரெச்சம் என்பர்.

(எ.கா.) வந்த + குழந்தை = வந்த குழந்தை

உடைந்த + பலகை = உடைந்த பலகை

செய்த + பணி = செய்த பணி

கிழிந்த + துணி = கிழிந்த துணி

காய்ந்த + கட்டை = காய்ந்த கட்டை

இவ்வாறான பெயரெச்சச் சொற்கள்முன் வல்லொற்று மிகாது.

ஆ) தமிழ் எண்ணுப்பெயருக்குரிய எண்ணுருக்களைப் பொருத்துக.

எண்ணுப்பெயர் – எண்ணுரு

1. ஐந்து – அ
2. ஏழு – ௲
3. எட்டு – எ
4. மூன்று – கO
5. பத்து – ரு

இ) கட்டுரை எழுதுதல் : அன்றாட வாழ்வில் அறிவியல்

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

சோமு, வீட்டுக்கு ஒரே பிள்ளை. அவன் கேட்பது எல்லாம் உடனுக்குடன் கிடைத்துவிடும். அடம்பிடித்துத் தான் விரும்புவதனை எல்லாம் வாங்கிவிடுவான். பெற்றோர் வசதியாக இருந்தமையால், மறுப்பு எழுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

சோமு ஒருநாள், தன் தந்தையுடன் துணிக்கடைக்குச் சென்றான். அங்கு இருந்த வண்ணமயமான ஆடை அவன் மனத்தைக் கவர்ந்தது. அந்த ஆடைதான் தனக்கு வேண்டும் என்று வழக்கம்போல் அடம்பிடித்தான், சோமு. அவனுடைய தந்தை ஆடையை வாங்கிப் பார்த்தார். விலை ரூபாய் எழுநூறு என்று இருந்தது.

'அப்பா விலையை ஏன் பார்க்கிறீர்கள்? எனக்கு இதுதான் வேண்டும். வேறு எதுவும் எனக்கு வேண்டா' என்று திட்டவட்டமாகக் கூறினான் சோமு. அப்போது அங்கு ஒரு சிறுவன், அவன் பெற்றோருடன் அதே ஆடையைப் பார்த்துக்கொண்டு நின்றான். அச்சிறுவனின் பெற்றோரும் அவ்வாடையின் விலையைப் பார்த்தனர்.

உடனே அச்சிறுவனின் தந்தை, 'கண்ணா, இந்தத் துணி நன்றாக இல்லை, வா நாம் அடுத்த கடைக்குப் போகலாம்' என்று அழைத்துச் சென்றார். அச்சிறுவனோ அந்தத் துணியைப் பார்த்துக்கொண்டே சென்றான். அவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அதனைக் கவனித்த சோமு, அவர்களின் ஏழைமை நிலையினை எண்ணிப் பார்த்தான். ஒருவேளை, தான் அந்தச் சிறுவனாக இருந்து, அப்பா வாங்கித் தராமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? என்று நினைத்துப் பார்த்தான்.

பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் மனநிலையைப் பெற்றவர்கள் காரண காரியங்களை அறியும் திறன் பெறுவார்கள். இதனால், சிந்தனைத்திறன் வளர்வதோடு உதவும் மனப்பான்மை, இரக்கக்குணம் ஏற்படும். பிறரை எள்ளி நகையாடுவதோ குற்றங் காண்பதோ தீங்கிழைப்பதோ அவர்தம் மனத்தில் ஏற்படாது.

யார், எது செய்தாலும் அவர்நிலையில் நின்று ஒருநொடி சிந்தித்துப் பாருங்கள். அந்த இடத்தில், அந்தச் சூழலில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்; எப்படி நடந்துகொண்டிருப்போம்? உங்களுக்குள் உள்ள கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டுப் பாருங்கள்.

## மதிப்புக்கல்வி

### கடமை

பிரேம் சந்த், இந்திமொழியில் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர். அவருடைய கதைகள் பெரும் புகழ்பெற்றவை. பிரேம் சந்த் ஒருமுறை உடல் நலமில்லாமல் இருந்தார். ஆனால், அந்த நிலையிலும் எழுத்துப் பணியினை விடாமல் செய்து கொண்டிருந்தார். அதனைக் கண்ட அவர் மனைவி, 'ஏன் இப்படி உங்களை வருத்திக் கொள்கிறீர்கள்? சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும். உங்கள் உடல்நலம் நன்றாக இருந்தால்தானே எழுத முடியும்; எழுதுவதனை நிறுத்தி உங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்துங்கள்' என்று வற்புறுத்திக் கூறினார்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பிரேம் சந்த், 'ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் ஒளி கொடுக்க வேண்டியது, அதன் கடமை. அதனை விட்டுவிட்டு, நம்முடைய ஒளியினால் பிறருக்கு நன்மையா தீமையா என்று ஆராய்வது அதன் வேலையன்று. எண்ணெயும் திரியும் உள்ளளவும் தானாகவே எரிந்து, பின்னர் அணைந்து விடும்' என்றார்.

உடல் நலம் பாதித்தபோதும் எடுத்த வேலையை முடிக்காது, அவ்விடத்தைவிட்டுச் செல்ல விரும்பாமல் கடமையே பெரிது என வாழ்ந்தார் பிரேம் சந்த்.

கடமைக்கு முதலிடம் தருவோர் வாழ்க்கையில் வெற்றிபெறுவர். நீங்களும் அன்றாடப் பணிகளை அன்றன்றைக்கே முடிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். உங்களை வெல்ல யாராலும் இயலாது.

மாணவர்களே! நீங்கள் எப்படி? கடமையுணர்ச்சி கொண்டவர்களா?

உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்.

| உனக்குத் தெரிந்த இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் பட்டியலிடுக. |
|---|
| |

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

**கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

விவேகானந்தர் அமெரிக்காவிலுள்ள ஓரூரில் தங்கியிருந்தார். அங்கு நீரோடையைக் கடப்பதற்கு ஒரு பாலம் இருந்தது. விவேகானந்தர், அந்நீரோடைக் கரையில் ஒருநாள் நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அங்கு இளைஞர் சிலர், முட்டை ஓடுகளைத் துப்பாக்கியால் குறிவைத்துச் சுடுவதற்குப் பயிற்சி மேற்கொண்டிருந்தனர். அவர்கள், முட்டை ஓடுகளை ஒரு நூலில் கட்டி நீரோடையில் மிதக்கவிட்டிருந்தனர். அந்நூல், நீரோடைக் கரையிலிருந்த சிறிய கல்லில் கட்டப்பட்டிருந்தது. நீரின் அசைவுக்கு ஏற்ப நூலில் கட்டப்பட்டிருந்த முட்டை ஓடுகள் மெதுவாக அசைந்துகொண்டிருந்தன.

அவ்விளைஞர்கள், பாலத்தில் நின்றுகொண்டு ஓடையில் அசைந்து கொண்டிருக்கும் முட்டை ஓடுகளைச் சுடுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் துப்பாக்கியால் முட்டை ஓடுகளைச் சுட்டனர். ஆனால், அவர்கள் வைத்த குறி தப்பிப் போயிற்று. ஒரு முட்டை ஓட்டைக்கூட அவர்களால் சுட இயலவில்லை.

இளைஞர்களின் இந்தச் செயலைப் பார்த்தார் விவேகானந்தர். அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இதனை அங்கிருந்த இளைஞருள் ஒருவன் கண்டான். அவன் விவேகானந்தரிடம் இந்த முட்டை ஓடுகளைச் சுடுவதனைப் பார்ப்பதற்கு எளிதான செயல்போன்று தோன்றும்; ஆனால், நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதானதன்று. நீங்களே முயற்சி செய்து பாருங்கள். அப்போது உங்களுக்கே தெரியும் எனக் கூறினான்.

விவேகானந்தர் துப்பாக்கியைக் கையிலெடுத்தார். அப்போது அங்குப் பன்னிரண்டு முட்டை ஓடுகள் மட்டுமே நீரோடையில் மிதந்து கொண்டிருந்தன. விவேகானந்தர் அவற்றைச் சுட, அவை அனைத்தும் தூள்தூளாகிச் சிதறின. இதனைப் பார்த்த இளைஞர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். 'ஐயா, நீங்கள் துப்பாக்கி சுடுவதில் மிகவும் பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். அதனால்தான், நீங்கள் அத்தனை முட்டை ஓடுகளையும் குறி தவிராமல் சுட்டீர்கள்' எனக் கூறினார்கள்.

அதற்கு விவேகானந்தர், 'என் வாழ்நாளில் இன்றுதான் முதன்முறையாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன்' எனக் கூறினார். அவர் கூறியதனை இளைஞர்களால் நம்பமுடியவில்லை. 'அப்படியென்றால், உங்களால் எப்படிக் குறி தவிராமல் அத்தனை முட்டை ஓடுகளையும் சுடமுடிந்தது' எனக் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த விவேகானந்தர், மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் அனைத்தும் இருக்கிறது. அவ்வாறு செய்யும்போது, எந்தவொரு செயலும் வெற்றியைத் தரும் என்றார்.

### வினாக்கள்

1. பத்தியின் மையக் கருத்து யாது ?
2. பத்தியில் குறிப்பிடப்படுபவர் புகழ்மிக்கவர். அவர் பெயர் என்ன ?
3. நீரோடைக் கரையில் இளைஞர்கள் என்ன செய்துகொண்டிருந்தனர் ?
4. விவேகானந்தர் முட்டை ஓடுகளைக் குறி தவிராமல் சுட்டதனைக் கண்டு இளைஞர்கள் கூறியது என்ன ?
5. பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

### தன் விவரங்களைப்பற்றிப் பேசவைத்தல்.

(எ.கா.) என் பெயர் முத்து. என் ஊர் நாமக்கல் மாவட்டத்திலுள்ள மல்லசமுத்திரம். எங்கள் ஊரிலுள்ள அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளியில் நான் ஏழாம் வகுப்புப் படிக்கிறேன். தமிழ்ப்பாடம் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் எழுதிய பாடல்கள் பள்ளிக் கையெழுத்து இதழில் இடம்பெற்றுள்ளன. என் பாடலைப் படித்த தலைமையாசிரியர், அதனைப் பள்ளி ஆண்டுமலரில் வெளியிடுவதாகக் கூறியுள்ளார். இஃது என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகும்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

### கீழ்க்காணும் உரைப்பத்தியை உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்க.

ஆடற்கலை என்பது, முத்தமிழில் நாடகக்கலையுள் அடங்கும். நடனம், நாட்டியம் என்பனவும் ஆடற்கலையைக் குறிப்பனவே. இக்கலை, பழங்காலத்தில் கூத்துக்கலை என அழைக்கப்பட்டது. கட்புலனாம் இன்பத்தைத் தரவல்லது ஆடற்கலை. உடற்சோர்வையும் உள்ளத் துயரையும் போக்கும் வடிகால்கள் ஆடல் பாடல்கள்.

மக்கள் மனம் மகிழ்ச்சியில் திளைக்கும் பொழுதெல்லாம் ஆடிப் பாடிக் களித்தனர். அவர்கள் மரநிழல்களிலும் கோவில் முற்றங்களிலும் ஆடினார்கள். மாடம், மாளிகை, மண்டபங்களிலெல்லாம் மகளிர் சிலம்பார்ப்ப ஆடினர். கைவழிக் கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே ஆடலின் நுட்பமாகும். ஆடற்கலையில் வல்லவராய்க் கூத்தரும் விறலியரும் திகழ்ந்தனர்.

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

கொட்டகையில் குதிரைச் சேணத்தைத் தலைக்கு வைத்தவாறு மெய்மறந்து சுட்டெரிக்கும் சூரியன் உச்சிக்கு வரும்வரை ஆழ்ந்து உறங்கினார் மருதுபாண்டி. மருதுபாண்டிக்குக் கூரை வீட்டுப் பழைய சோறும் ஆழ்ந்த உறக்கமும் புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. உறைவிடமும் உணவும் அளித்த கிழவிக்கு நன்றி கூற மருதுபாண்டியின் மனம் எண்ணியது.

| எழுதுதல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

சொல்லைப் பிரித்து இருபொருள் கூறுக.

| சொல் | பொருள்–1 | பொருள்–2 |
|---|---|---|
| கண்மணி | கண் | மணி |
| மாநாடு | | |
| பொதிகை | | |
| கவிமணி | | |
| வைகறை | | |

| கண்டறிதல் திறன் | செயல்பாடு – 6 |
|---|---|

பெயருக்கேற்ற வினைச்சொற்களையும் வினைக்கேற்ற பெயர்ச்சொற்களையும் கண்டறிந்து எழுதுக.

(நிரம்பியது, மின்னியது, இடித்தது, கறுத்தது, வீசியது, பெய்தது, பெருகியது,ஊர், வளம், வயல்)

| | |
|---|---|
| வானம் கறுத்தது | வெள்ளம் ____________ |
| காற்று ____________ | ஏரி ____________ |
| மின்னல் ____________ | ____________ விளைந்தது |

| | |
|---|---|
| இடி ____________ | ____________ கொழித்தது |
| மழை ____________ | ____________ செழித்தது |

| நேர்காணல் | செயல்பாடு – 7 |
|---|---|

ஒரு மாணவனை உரிச்சொல்லாக நினைக்கச் செய்து, அம்மாணவனை மற்றொரு மாணவன் நேர்காணல் செய்க.

மாணவர் : வணக்கம், ஐயா.

உரிச்சொல் (மாணவர்) : வணக்கம்.

மாணவர் : உங்களைச் சந்தித்துப் பேசுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

உரிச்சொல் : எனக்கும் மகிழ்ச்சிதான்.

மாணவர் : தங்களைப்பற்றி விளக்கமாகச் சொல்லுங்களேன்.

உரிச்சொல் : உங்களைப்போன்றே எனக்கும் பலவகையான பண்புகள் உண்டு.

மாணவர் : அப்படியா, வியப்பாக உள்ளதே! ஏதேனும் ஒரு பண்பைப்பற்றிச் சொல்லுங்கள்.

உரிச்சொல் : மாநகர் என்னும் சொல்லில் உள்ள ‘மா’ நானே. இங்குப் பெரிய என்னும் பொருளைத் தந்துள்ளேன். இப்படிப்பட்ட பண்புகள் மிகுதியாக எனக்கு உண்டு.

மாணவர் : நீங்கள் தனியாக நின்று பொருள் தருவீர்களா ?

உரிச்சொல் : இல்லையில்லை, அஃது என்னால் இயலாது.

மாணவர் : அப்படியானால், யாருடன் சேர்ந்து பொருள் தருவீர்கள் ?

உரிச்சொல் : வேறு யார் ? பெயருடனும் வினையுடனும்தான்.

மாணவர் : ஆனால், எங்கள் பேச்சுவழக்கில் நீங்கள் அவ்வளவாக இடம் பெறுவதில்லையே, ஏன் ?

உரிச்சொல் : உண்மைதான். என்னைச் செய்யுளில்தான் மிகுதியாகப் பயன்படுத்துவர்.

மாணவர் : நன்றி, ஐயா. தங்களைச் சந்தித்தது எனக்குக் கிடைத்த மாபெரும்பேறு, விடைபெறுகிறேன் ஐயா.

உரிச்சொல் : என்னை நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்துகொண்டது போற்றுதற்குரிய மாச்சிறப்பு. சென்று வாருங்கள். வாய்ப்புக் கிடைக்கும்போது மீண்டும் சந்திப்போம்.

| நடித்தல் திறன் | செயல்பாடு – 8 |
|---|---|

இடைச்சொல்லாக மாறி நடித்துக் காட்டுக.

அ) என் பெயர் இடைச்சொல்.

ஆ) நான், என் நண்பர்களான பெயர்ச்சொல், வினைச்சொல்லுடன் சேர்ந்து வருவேன்.

இ) நான் எப்போதும் தனியாகச் செயல்படாமல், நண்பர்களுடன் சேர்ந்தே செயல்படுவேன்.

ஈ) தனியாக இருந்தால் பொருள்தரமாட்டேன்.

உ) இணைச்சொல்லாகவும் அசையாகவும் வேற்றுமை உருபாகவும், உவம உருபாகவும் நண்பர்களுடன் இணைந்தே வருவேன்.

ஊ) நான், நண்பர்களுடன் இருக்கும்போது, எளிதாகப் பொருளையும் கருத்தையும் தெளிவுபடுத்துவேன்.

| அறிதல் திறன் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.



நாங்கள்தாம் வரையாடுகள். எங்களைத் தமிழக இராஜாங்கத்தின் தேசிய மிருகங்கள் எனச் சகல ஜனங்களும் அழைக்கிறார்கள். நாங்கள் உதகையில் பெருமளவில் ஜீவித்து வருகிறோம். அழிந்துவரும் மற்ற மிருகங்களைப் போன்றே நாங்களும் விரைவாக அழிந்து வருகிறோம். எங்களைக் காப்பது உங்களின் கடமை.

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| இராஜங்கத்தின் | |
| தேசிய | |
| மிருகங்கள் | |

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| | |
| | |
| | |

| சொல்லுருவாக்கம் | செயல்பாடு – 10 |
|---|---|

வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




சொற்கள்

________________ , ________________ , ________________ , ________________

________________ , ________________ , ________________ , ________________

________________ , ________________ , ________________ , ________________

| தொடர் உருவாக்கம் | செயல்பாடு – 11 |
|---|---|

பெயர்ச்சொற்களுடன் ‘ஆர’ என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து, உரிய வினையுடன் தொடரை உருவாக்குக.




(எ.கா.) 1. மனதார வாழ்த்தினான்.

2. ______________

3. ______________

4. ______________

5. ______________

6. ______________

| படைப்பாற்றல் | செயல்பாடு – 12 |
|---|---|

பொருத்தமான சொற்களை எடுத்து எழுதிப் பாடலை நிரப்புக.

( வீழ்ச்சி, வெற்றி, உறவு, பெருமை, புகழ், அழிவு, உயர்வு, சிறப்பு, இன்பம், துன்பம் )

| | |
|---|---|
| அறம் இன்பம் தரும் | உழைப்பு ______ தரும் |
| அன்பு ______ தரும் | பகை ______ தரும் |
| ஆக்கம் ______ தரும் | பண்பு ______ தரும் |
| ஆசை ______ தரும் | முயற்சி ______ தரும் |
| உண்மை ______ தரும் | முயலாமை ______ தரும் |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண்: 10

### அ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 2 x 1 = 2

1. காளமேகப்புலவர் ______________ கோவிலில் பணிபுரிந்தார்.
2. இராமானுஜத்தின் கட்டுரைகள் ______________ தலைப்பில் வெளியானது.

### ஆ) கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக. 4 x1 = 4

1. தனிப்பாடல் திரட்டு என்னும் நூலைத் தொகுத்தவர் ______________ .

   அ) மோசிகீரனார் ஆ) காளமேகப்புலவர்

   இ) சந்திரசேகர கவிராசப்பண்டிதர்

2. இலண்டனிலுள்ள __________ கல்லூரியில் இராமானுஜம் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்.

   அ) திரினிட்டி ஆ) ஆக்ஸ்போர்டு இ) ஹார்வார்டு

3. மாநகர் என்பது ______________ .

   அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) உரிச்சொல்

4. கிழவிக்கு மருதுபாண்டி அளித்த ஊர் ______________ .

   அ) சிவகங்கை ஆ) திருநெல்வேலி

   இ) பழஞ்சோற்று குருநாதனேந்தல்

### இ) கீழ்க்காணும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. 2 x 2 = 4

1. வழிமுறை
2. சிந்தித்தவாறு

இலக்கணம்

# இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன் வகுப்பில் நடத்திய பாடங்கள் நினைவிருக்கிறதா?

மாணவர் : நன்றாக நினைவிருக்கிறதம்மா. இலக்கணவகையில் நால்வகைச் சொற்களைப்பற்றிக் கற்றுக் கொண்டோம்.

ஆசிரியர் : மெத்த மகிழ்ச்சி. (ஆசிரியர் நாற்காலியின் அருகில் செல்லுதல்)

ஆசிரியர் : பொற்கொடி, இந்த நாற்காலி எதனால் செய்யப்பட்டுள்ளது?

பொற்கொடி : மரத்தினால் அம்மா...

ஆசிரியர் : சரி. தமிழரசி, மரத்திற்கு 'மரம்' என எப்படிப் பெயர் வந்தது?

தமிழரசி : தெரியவில்லை, அம்மா. எப்படிப் பெயர் வந்ததென்று கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : 'மரம்' எனப் பெயர் வைத்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. நம் முன்னோர் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே இடுகுறிப்பெயர். காரணம் அறியவியலாப் பெயர்கள் எல்லாம் இடுகுறிப்பெயர்களே.

மணவழகன் : எல்லாப் பெயர்களுமே இடுகுறிப்பெயர்களா, அம்மா?

ஆசிரியர் : இல்லை இல்லை. மண், நாய், கோழி என்பன இடுகுறிப்பெயர்களே. இதோ, இந்த 'நாற்காலி'க்கு எப்படிப் பெயர் வந்தது தெரியுமா?

நிறைமதி : நான்கு கால்கள் இருப்பதனால் 'நாற்காலி' என வந்திருக்கலாம்.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். இப்படிக் காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் காரணப்பெயர்கள் எனப்படும்.

தமிழரசி : காரணம் கருதி வந்த சில பெயர்களைக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : தமிழில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளன. பிறமொழிகளில் இடுகுறிப்பெயர்களே மிகுதியாக உள்ளன. பறவை (பறப்பதனால்), வளையல், செங்கல், முக்காலி, கரும்பலகை எனப் பலவற்றைக் கூறலாம்.

முத்து : மலை, காடு, மாடு இவையெல்லாம் இடுகுறிப்பெயர்கள்தாமே.

ஆசிரியர் : ஆம். மலை என்பது அனைத்து மலைகளுக்கும் பொதுப்பெயர். காடு என்பது அனைத்துவகைக் காடுகளுக்கும் பொதுப்பெயர். மாடு என்பது பல்வகை மாடுகளுக்கும் பொதுப்பெயர். இவ்வாறு அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை இடுகுறிப் பொதுப்பெயர் எனக் கூறுவர்.

கனிமொழி : அம்மா, இடுகுறிப் பொதுப்பெயர் உண்டென்றால், இடுகுறிச் சிறப்புப் பெயருண்டா ?

ஆசிரியர் : உண்டு. ‘மரம்’ என்னும் சொல் மா, பலா, வாழை, தென்னை முதலிய மரவகை அனைத்திற்கும் இடுகுறிப்பெயராய்ப் பொதுவாக வரும். ‘தென்னை’ என்னும் சொல் ஒரு காரணமும் இன்றி, இடுகுறிப்பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே (தென்னைமரம்) சிறப்பாய் வருவதனால் இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

முகிலன் : அம்மா...! காரணப் பெயரிலும் பொதுப்பெயர், சிறப்புப்பெயர் உண்டா ?

ஆசிரியர் : உண்டு. ‘பறவை’ என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். பறப்பதனால் பறவை எனக் காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் ‘பறவை’ என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் காரணப் பொதுப்பெயர் என்கிறோம். கோகிலா...! அங்கே என்ன முணுமுணுப்பு ? உற்றுக்கேள்.

கோகிலம் : அம்மா, என் வளையல் உடைந்துவிட்டது.

ஆசிரியர் : கோகிலா, வளையல் என எப்படிப் பெயர் வந்தது ?

கோகிலம் : வளைந்து, வட்டமாக இருப்பதனால்....

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். வளையல்போலவே சிலபொருள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும், அவையெல்லாம் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. இருப்பினும் இச்சொல், கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதனால், காரணச் சிறப்புப் பெயர் ஆயிற்று.

கோகிலம் : நன்றி, அம்மா!

## பயிற்சி

கீழுள்ள சொற்களுள் காரணப்பெயர்களை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. காற்று | 2. பறவை | 3. முக்காலி | 4. அரிவாள் |
| 5. மரம் | 6. வளையல் | 7. கடல் | 8. மழை |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக.

அ) பெட்டி என்பது ______________ ஆகும்.

1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. சுட்டுப்பெயர்

ஆ) சித்திரை மாதத்தில் பிறந்ததனால் ______________ என அழைக்கப்பட்டான்.

1. சித்திரையான் 2. கார்த்திகேயன் 3. அமாவாசை

இ) காரணப் பொதுப்பெயர் ______________ ஆகும்.

1. வளையல் 2. மண் 3. நண்டு

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| இடுகுறிப் பொதுப்பெயர் | – | மரங்கொத்தி |
| இடுகுறிச் சிறப்புப்பெயர் | – | பறவை |
| காரணப் பொதுப்பெயர் | – | காடு |
| காரணச் சிறப்புப்பெயர் | – | பனை |

### ஆ) குறுவினாக்கள்

1. காரணப்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
3. இடுகுறிப்பெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
4. காரணப்பெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

தாய்மொழிவழிக் கல்வி கற்பதன் தேவை – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) எழுதுதல் திறன் : உரைப்பகுதியைப் படித்து மையக் கருத்தறிதல்

(எ.கா.) : நாம் வாழும் உலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பெரும்பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது. அவற்றின் இயக்கங்களால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அவற்றுள்ளும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது; அதனால்தான், திருவள்ளுவர் "நீரின்றமையாது உலகு" என்று கூறினார்.

அந்நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை, இன்றியமையாமையை உணர்ந்து, திருக்குறளில் 'வான்சிறப்பு' என்னும் ஓர் அதிகாரம் படைத்துப் புகழ்ந்து உரைக்கின்றார்.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என மழையைப் போற்றி வணங்கித் தம் காப்பியத்தைத் தொடங்கினார். மழையின்றேல் மாநிலத்தார்க்கு வளம் இல்லை.

'மாரியல்லது காரியம் இல்லை' என்பன போன்ற முதுமொழிகளும் மழையின் சிறப்புகளை நமக்கு உணர்த்துகின்றன.

### வினாக்கள்

1. பத்தியின் மையக் கருத்து யாது ?
2. ஐம்பெரும் பூதங்கள் யாவை ?
3. மழை குறித்து வள்ளுவரும் இளங்கோவடிகளும் யாது கூறுகின்றனர் ?
4. மழை தொடர்பான சொற்றொடர்கள் யாவை ?
5. பத்தியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) வழக்குச் சொற்களும் திருத்தமான சொற்களும்

ஆசிரியர் : மணி, நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை ?

மணி : நேத்து வவுத்து வலி, ஐயா.

ஆசிரியர் : தமிழரசி, மணி சொன்னது சரியா ?

தமிழரசி : தவறு, 'நேற்று வயிற்று வலி' எனச் சொல்லுதல் வேண்டும் ஐயா.

ஆசிரியர் : சிறப்பாகச் சொன்னாய். இப்படித்தான் நாம் சொற்களைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பழகுதல் வேண்டும்.

பயிற்சி : வழக்குச் சொற்களை நீக்கித் திருத்தமான சொற்களை எழுதுக.

1. பள்ளிக்கு அருகாமையில் என் வீடு இருக்கிறது.
2. என் வீட்லே யாருமே இல்லே.
3. எம் ஊர் ஆத்துல தண்ணியே இல்லே.
4. என் அப்பா அதிகமா சிலவு செய்கிறார்.

### ஆ) சொற்றொடர்ப் பொருத்தம்

சொற்கள் சேர்ந்தமைவது சொற்றொடராகும். ஒரு சொற்றொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண், இடங்களில் பொருத்தமாக அமைதல் வேண்டும். இவையே வழுவற்ற சொற்றொடர்களாம்.

(எ.கா.) திணைப்பொருத்தம் : கோலமயில் ஒயிலாக ஆடியது.
( கோலமயில் – அஃறிணை எழுவாய்; ஆடியது – அஃறிணைப் பயனிலை )

பால் பொருத்தம் : வண்டுகள் தேன் குடித்தன.
( வண்டுகள் – பலவின்பால் எழுவாய்; குடித்தன – பலவின்பால் பயனிலை )

எண் பொருத்தம் : விண்கலங்கள் விண்ணில் பறந்தன.
( விண்கலங்கள் – எழுவாய்ப் பன்மை; பறந்தன – பன்மைப் பயனிலை )

இடப்பொருத்தம் : அவன் பாடம் படித்தான்.
( அவன் – படர்க்கை எழுவாய்; படித்தான் – படர்க்கைப் பயனிலை )

சிறப்புப் பொருத்தம் : பாவேந்தர், பாரதியைப் புகழ்ந்து பாடினார். பாவேந்தர் என்னும் பெயர் பாரதிதாசனையே குறிக்கும் என்பதனால், அது சிறப்புப் பெயராயிற்று. சிறப்புப் பொருத்தம் உயர்வுமட்டுமல்லாது இழிவு கருதியும் வரும்.

(எ.கா.) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



பயிற்சி

கீழ்க்காணும் முற்றுச்சொற்றொடரில் அமைந்துள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.

1. அரசர் பலர் வந்தார்கள்.
2. மயில்கள் ஆடியது.
3. கனிமொழி பாடம் படித்தாய்.
4. ஔவையார், அதியமானிடம் பரிசில் பெறச் சென்றாள்.
5. வயலில் மாடுகள் மேய்ந்தது.

இ) உரிய தமிழ் எண்களைத் தேர்வு செய்க.

1. மூன்று என்பதன் தமிழெண்

   அ) ௩ ஆ) ௮ இ) ௧

2. ஏழு என்பதன் தமிழெண்

   அ) ௮ ஆ) ௭ இ) ௨

3. ஆறு என்பதன் தமிழெண்

   அ) ௬ ஆ) ௯ இ) ௪

ஈ) கட்டுரை எழுதுதல் : மாமரம் தன் வரலாறு கூறுதல்.

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத்திறன்

நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தலே கூர்சிந்தனைத் திறனாகும்.

வளவன் தேர்வுக்காகப் படித்துக்கொண்டு இருக்கிறான். தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறுவதாகப் பெற்றோரிடம் உறுதி அளித்துள்ளான். இந்நிலையில் அவனுடைய நண்பர்கள் விளையாட வருமாறு அவனை அழைக்கின்றனர்.

1. வளவன், நண்பர்களோடு செல்வானா ? படிப்பில் அக்கறை செலுத்துவானா ?
2. நீங்கள் வளவனாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### தன்னடக்கம்

பட்டினத்தடிகள் அரசருக்கு ஈடாகப் பெருஞ்செல்வம் படைத்தவராய் விளங்கினார். ஒரு நாள் எல்லாவற்றையும் துறந்துவிட்டுத் துறவியாகிவிட்டார். அவரைக் காண அரசன், சுற்றம்சூழ ஆரவாரத்துடன் வந்தான். அங்கு அரையாடை மட்டும் அணிந்த நிலையில் துறவுக்கோலத்தில் உட்கார்ந்திருந்தார் பட்டினத்தடிகள். அவரை வணங்கிய அரசன், “எமக்கு இணையாகச் செல்வம் படைத்திருந்த நீங்கள் இன்று கண்ட பயன் என்ன ?” என்று கேட்டார்.

அதற்குப் பட்டினத்தடிகள், “நீர் நிற்க, நான் இருக்க, இந்தச் சிறப்பு ஒன்று போதாதா ?” என்று பதில் அளித்தார். செல்வம் இருக்கும்போதும், இல்லாதபோதும் நாம் தன்னடக்கத்துடன் இருக்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | படம் பார்த்துப் பேசுதல் |
|---|---|

படத்தில் உள்ள நிகழ்வைப் பார்த்துப் பேசுக.

| நிகழ்வு – 1 | நிகழ்வு – 2 |
|---|---|
|  |  |

இவ்விரு படத்திலும் உள்ள நிகழ்வுகளில் போற்றுதற்கு உரிய நிகழ்வினைப் பற்றி மாணவர் கலந்துரையாடுக.

| செயல்பாடு : 2 | உரையாடுதல் |
|---|---|

உயிரிகளைத் துன்புறுத்துவதனைப் பற்றி மாணவர்களை உரையாடச் செய்க.

மாணவர் 1 : நண்பா! ஊர்வன, பறப்பன, சில பூச்சியினங்களைத் துன்புறுத்துகின்றோமே அது முறையா?

மாணவர் 2 : உலகிலுள்ள அனைத்தும் மனிதர்களுக்காகப் படைக்கப்பட்டவை. அவற்றைத் துன்புறுத்துவதில் தவறு என்ன?

மாணவர் 1 : உன் எண்ணம் தவறு. எல்லா உயிரிகளும் ஏதோ ஒரு காரணத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் துன்புறுத்துவதனாலும் கொல்வதனாலும் இழப்பு நமக்குத்தான்.

மாணவர் 2 : இழப்பா, நமக்கா, எப்படி?

மாணவர் 1 : சொல்கிறேன் கேள். தவளைகள் சில நச்சுப்பூச்சிகளை உண்டு, அவற்றிடம் இருந்து, நம்மைக் காக்கின்றன. பறவைகள் பழங்களை உண்டு எச்சமிடுவதனால் அதிலுள்ள விதைகள் மரங்களாக முளைக்கின்றன. இப்போது தெரிகிறதா இழப்பு யாருக்கென்று?

மாணவர் 2 : நமக்குத்தான். ஆனால், இந்தப் பாம்புகளை மட்டும் விடக்கூடாது. இதனால் மனித உயிர்களுக்குத்தான் ஆபத்தே தவிர, பயன் ஒன்றும் இல்லையே!

மாணவர் 1 : பாம்புகளால் பயன் இல்லையா? பாம்புகள் எலிகளை உணவாக உண்ணவில்லை என்றால் எலிகள் பெருகி, அவை பயிர்களை அல்லவா அழித்துவிடும்.

மாணவர் 2 : அட. . . . ஆமாம். இனி, எந்த உயிரிகளையும் துன்புறுத்தவும் மாட்டேன். கொல்லவும் மாட்டேன். நன்றி நண்பா.

மாணவர் 1 : மிக்க மகிழ்ச்சி.

| செயல்பாடு : 3 | குறிப்புகளைப் பயன்படுத்திப் பேசுதல் |
|---|---|

தாய்மொழி வழியில் கல்வி கற்பதில் உங்களுக்கு இருக்கும் அவா அல்லது பெருமிதத்தைப் பற்றிக் கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திப் பேசுக.

- தாய் சொல்லிக் கொடுத்த மொழி – கற்கும் பாடம் முழுமையாகப் புரிகிறது.
- ஒப்புயர்வற்ற அறிவை வளர்த்துக்கொள்ள இயலும்.
- நமக்கு வேண்டிய பண்பாடும் நல்ல பழக்கவழக்கமும் தாய்மொழியில்தான் உண்டு.
- தாய்மொழியில் கல்விகற்க பேரவாவும் பெருமிதமும் கொண்டுள்ளேன்.

## எழுதுதல்

| செயல்பாடு : 4 | சொல்வதனை எழுதுதல் |
|---|---|

சொல்வதனை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. தளராமை | 2. சமுதாயம் | 3. சான்றாண்மை | 4. செம்மொழி |
| 5. நிலையாமை | 6. திரிகடுகம் | 7. அறியாமை | 8. வெண்பா |
| 9. மனமயக்கம் | 10. நல்லாதனார் | 11. விண்கலங்கள் | 12. தொழிலாளி |

| செயல்பாடு : 5 | பொருள் எழுதுதல் |
|---|---|

கீழுள்ள பாடலைப் படித்துப் பொருள் எழுதுக.



கடலில் விழுந்த மழைத்துளியும் – காலைப்
பொழுதில் பயிலாக் கல்வியும்
வறுமைக்கு உதவாச் செல்வமும் – உதவிய
பொழுதில் கூறா நன்றியும்
பாறையில் விதைத்த விதையாகும் – பாழுங்
கிணற்றில் விழுந்த கல்லாகும்.

| செயல்பாடு : 6 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

படங்களின் பெயர்கள் இடுகுறிப்பெயரா, காரணப்பெயரா ? எனக் கண்டறிந்து எழுதுக.





| செயல்பாடு : 7 | வகைப்படுத்தி எழுதுதல் |
| --- | --- |

உங்களுக்குத் தெரிந்த பெயர்கள் பத்தினை எழுதி, அவற்றை இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப்பொதுப்பெயர், காரணச்சிறப்புப்பெயர் என வகைப்படுத்தி எழுதுக.

## கற்றலடைவுச் சிறு மதிப்பீடு

மதிப்பெண் : 10

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 x 1 = 6

1. நல்லாதனார் இயற்றிய நூல்

   அ. திரிகடுகம் ஆ. புறநானூறு
   இ. திருவாரூர் நான்மணிமாலை

2. நல்லாதனார் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்

   அ. மதுரை ஆ. கோவை இ. திருநெல்வேலி

3. இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம்

   அ. ஆங்கில அறிவு ஆ. தாய்மொழி அறிவு இ. வடமொழி அறிவு

4. தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்ற பேச்சு யாருடையது ?

   அ. முன்சிராம் ஆ. காந்தியடிகள் இ. மதன்மோகன் மாளவியா

5. பெரியவரின் தருமக்கணக்கில் செலவழிந்துள்ள பணம்

   அ. இருபத்து இரண்டாயிரம் ஆ. இருபத்து மூன்றாயிரம் இ. இருபத்து நான்காயிரம்

6. காரணம் கருதி இடப்படும் பெயர்கள்

   அ. இடுகுறிப்பெயர்கள் ஆ. காரணப்பெயர்கள் இ. இடுகுறிப்பொதுப்பெயர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 4 x 1 = 4

1. நம் முன்னோர் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயர். ____________ .
2. ‘நாற்காலி’ என்னும் சொல் ____________ பெயராகும்.
3. ‘மரம்’ என்னும் சொல் ____________ பெயராகும்.
4. ‘குயில்’ என்னும் சொல் ____________ பெயராகும்.

# அறுவகைப் பெயர்ச்சொற்கள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். சென்ற பாடவேளையில் படித்த இடுகுறிப்பெயர், காரணப்பெயர் ஆகியவற்றில் ஏதேனும் ஐயமிருக்கிறதா ?

மாணவர் : இல்லை, அம்மா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. பூங்கொடி, கரும்பலகையில் எழுதியுள்ளதனை அனைவருக்கும் கேட்கும்படி தெளிவாகப் படி.

பூங்கொடி : கண்ணன் பூண்டியில் படிக்கிறான். அவன் நாள்தோறும் நடந்தே வருகிறான். அவன் நண்பகல் உணவு கொண்டு வருகிறான். ஆடல், பாடல் ஆகிய இரண்டிலும் அவன் வல்லவன். அவன் முகம் வட்டவடிவில் அழகாக இருக்கும்.

ஆசிரியர் : இப்பத்தியிலுள்ள பெயர்ச்சொற்களைக் கூறுங்கள்.

எழிலி : பூண்டி, நண்பகல், உணவு...

ஆசிரியர் : இவை மட்டுந்தானா ?

செழியன் : கண்ணன், அவன், முகம்...

ஆசிரியர் : இன்னும் என்னென்ன பெயர்ச்சொற்கள் உள்ளன ? வேறு யாராவது கூற முடியுமா ?

வளவன் : இதற்குமேல் இருப்பதாகத் தெரியவில்லை, அம்மா.

ஆசிரியர் : இன்னும் உண்டு. ஆடல், பாடல், வட்டம், அழகு ஆகியனவும் பெயர்ச்சொற்களே. பெயர்ச்சொற்களை இலக்கண நூலார் அறுவகைப்படுத்துவர்.

யாழினி : அம்மா, அவை என்னென்ன என்று கூறுங்களேன்.

ஆசிரியர் : பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

எழிலி: : அம்மா, பொருட்பெயர் என்றால்....

ஆசிரியர் : பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர். இந்தப் பொருட்பெயர் இருவகைப்படும். அவை : உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள். உயிருள்ள பொருள்கள் : குமரன், மலர்க்கொடி, தென்னை, செம்பருத்தி, வெள்ளாடு, ஓணான்... முதலியன; உயிரற்ற பொருள்கள்: நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று... முதலியன. எழிலி, இப்போது விளங்கிற்றா ?

எழிலி : தெளிவாகப் புரிந்துகொண்டேன், அம்மா. இடத்தைக் குறிப்பது இடப்பெயராகுமா, அம்மா ?

ஆசிரியர் : அருமையாகக் கேட்டாய்! ஓரிடத்தைக் குறிப்பது இடப்பெயரே. வீடு, தெரு, பள்ளி, கோவில், மக்கள் வாழிடம், தோட்டம், காடு, மலை என இடங்களைக் குறிப்பனவெல்லாம் இடப்பெயர்தான். பூங்கொடி இவற்றிற்குரிய பெயர்களைச் சொல்.

பூங்கொடி : அன்பகம், பெரியார் தெரு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருநின்றவூர் என்னைப்பெற்ற தாயார் கோவில், திருமழிசை, வாழைத்தோட்டம், ஆர்க்காடு, கொல்லிமலை.

ஆசிரியர் : எல்லாவற்றிற்கும் கூறிவிட்டாயே. பூங்கொடியைப் பாராட்டிக் கை தட்டுவோம். நீங்களும் இப்படிப் பல எடுத்துக்காட்டுகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொள்ளுதல் வேண்டும்.

வளவன் : அம்மா, அறுவகைப் பெயரில் காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயரா, அம்மா ?

ஆசிரியர் : ஆம். அதிலென்ன ஐயம் வளவா! கண் இமைக்கும் நொடிப்பொழுது முதல் ஊழிக்காலம்வரை எல்லாமே காலத்தைக் குறிக்கும் பெயர்கள்தாமே. சான்றாக நொடி, வினாடி, மணி, பொழுது, கிழமை, வாரம், திங்கள், ஆண்டு, பருவகாலம் என எல்லாமே காலப்பெயர்களே. வளவா! இக்காலங்களுக்கு எடுத்துக்காட்டுகள் சொல்.

வளவன் : ஐந்துநொடி, முப்பது வினாடி, பன்னிரண்டு மணி, விடியற்பொழுது, திங்கள்கிழமை, ஒருவாரம், தைத்திங்கள், ஓராண்டு, மழைக்காலம்.

ஆசிரியர் : அருமை அருமை. அனைத்துக்கும் சொல்லிவிட்டாயே.

குழலி : சினைப்பெயர் என்றால் என்ன, அம்மா ?

ஆசிரியர் : இது மிகவும் எளிது. சினை என்பது ஒன்றன் உறுப்பின் பெயரைக் குறிப்பது. மனித உறுப்புகள், விலங்கு உறுப்புகள், தாவரப் பகுதிகள், பொருள்களின் பகுதிகள் என முழுமையான ஒன்றின் பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் சினைப்பெயர்களாம்.

எழிலா! மனித உறுப்புகளின் பெயர்களையும், தாவரப் பகுதிகளின் பெயர்களையும் சொல்.

எழிலன் : தலை, கண், மூக்கு, செவி, நாக்கு, பல், வயிறு, கை, கால், விரல், நகம் முதலியனவும், வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி, விதை முதலியனவும் சினைப்பெயர்களா, அம்மா!

ஆசிரியர் : அதிலென்ன ஐயம்? நீ கூறிய அத்தனையும் சினைப்பெயர்கள்தாம். குமரா, குணப்பெயர் என்றால் என்னவென்று சொல்.

குமரன் : கோபம், அம்மா.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய்! அதனைத் தமிழிலே சொல்லியிருக்கலாமே, தமிழில் சொல் இருக்கும்பொழுது, வேறு சொற்களைப் பயன் படுத்துவது நம்மொழிக்கு நாமே செய்யும் தீங்கல்லவா? குமரா, கோபத்திற்கான தமிழ்ச்சொல் கூறு.

குமரன் : அம்மா, பேச்சுவழக்கில் சொல்லிப் பழகிவிட்டதனால் கூறிவிட்டேன். இனிமேல், இத்தகைய பிழையைச் செய்யமாட்டேன். கோபத் திற்கான தமிழ்ச்சொல் சினம்தானே, அம்மா!

ஆசிரியர் : அதிலென்ன ஐயம்? நீ சொன்னது செந்தமிழ்ச்சொல்தான். குணப் பெயரைப் பண்புப்பெயர் எனவும் கூறுவர். குணப்பெயர்கள் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படும். வேலா, நிறப்பெயர்களையும் சுவைப் பெயர்களையும் சொல்.

வேலன் : ஏழு நிறங்கள், அறுசுவைகள் அம்மா.

ஆசிரியர் : குணா! அளவு, வடிவப் பெயர்களைச் சொல்.

குணா : பத்து மீட்டர் துணி, ஐந்துபடி எண்ணெய், பத்துக்கிலோ அரிசி; வட்டப்பலகை, சதுரவீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணக் கூம்பு அம்மா.

ஆசிரியர் : தெள்ளத்தெளிவாகச் சொன்னாய், குணா. அறுவகைப் பெயர்களில் இறுதியாக நான் கூறிய பெயர்வகை என்னவென்று சொல், அகிலன்.

அகிலன் : தொழிற்பெயர், அம்மா.

ஆசிரியர் : நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய். தொழிற்பெயர் என்றால் என்ன? யாருக்குத் தெரியும்? சொல்லுங்கள்.

கீரன் : ஆசிரியர், அம்மா.

ஆசிரியர் : கீரன், நீ கூறியது தொழில் செய்பவரைப்பற்றி, ஆனால், நான் கேட்டது அவர் செய்யும் தொழில்பற்றி... விளங்குகிறதா?

கீரன் : ஆம், அம்மா. படித்தல், கற்பித்தல் இவை தொழில் பெயர்கள்தாமே.

ஆசிரியர் : ஆமாம். செய்யும் தொழிலைக் குறிக்கும் பெயர்களெல்லாம் தொழிற் பெயர்களே. பூங்கொடி, கரும்பலகையில் படித்த பெயர்ச்சொற்களை எழுதி அவற்றை, அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துங்கள்.

மாணவர் : வகைப்படுத்துகிறோம் அம்மா.

| பெயர் வகை | பெயர் |
|---|---|
| பொருட்பெயர் | கண்ணன், நாற்காலி |
| இடப்பெயர் | வேலூர், நாமக்கல் |
| காலப்பெயர் | தைத்திங்கள், நண்பகல் |
| சினைப்பெயர் | முகம், கை |

| | |
|---|---|
| குணப்பெயர் | வட்டம், அழகு |
| தொழிற்பெயர் | ஆடல், பாடல் |

ஆசிரியர் : பிழையில்லாமல் எழுதியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

பயிற்சி : கீழுள்ள சொற்றொடரில் அமைந்துள்ள அறுவகைப் பெயர்களை வகைப்படுத்துக.

எழிலன் காலையில் தோட்டத்திற்குச் சென்றான். மரக்கிளையில் பச்சைக்கிளி உட்கார்ந்திருப்பதனைக் கண்டான்; குயிலின் பாடல்கேட்டு மகிழ்ந்தான்.

1. 3. 5.

2. 4. 6.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்வு செய்க.**

அ. மதுரை என்பது ______________ பெயர்.

1. காலப்பெயர் 2. குணப்பெயர் 3. இடப்பெயர்

ஆ. பூங்கொடி பூப் பறிக்கிறாள். இத்தொடரிலுள்ள ‘பூ’ என்பது ______________ பெயர்.

1. பொருட்பெயர் 2. சினைப்பெயர் 3. தொழிற்பெயர்

இ. சதுரம் என்பது ______________ பெயர்.

1. பொருட்பெயர் 2. காலப்பெயர் 3. குணப்பெயர்

**2. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச்சொற்களை எழுதுக.**

அ. ______________ அசைகிறது.

ஆ. ______________ பூசை நடக்கிறது.

இ. ______________ பள்ளிக்கு விடுமுறை.

ஈ. ______________ உடைந்துவிட்டது.

உ. ______________ மூன்றுகோணங்களைஉடையது.

ஊ. ______________ வல்லவன் இராமன்.

### ஆ) குறுவினாக்கள்

1. அறுவகைப்பெயர்கள் யாவை ?
2. காலப்பெயர்கள் நான்கனை எழுதுக.
3. சினைப்பெயர்கள் நான்கனை எழுதுக.
4. இடப்பெயர்கள் நான்கனை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.
2. நும் பாடப்பகுதியில் உள்ள பெயர்ச்சொற்களைத் தொகுத்து வகைப்படுத்துக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'காளியப்பன்' போன்றோர் வளரக் காரணம்' – கலந்துரையாடுக.

### ஆ) எழுதுதல் திறன்

பொருளுணர்ந்து முறைப்படுத்திப் பத்தியமைத்து எழுதுதல் (மாதிரி)

(எ.கா.)

1. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.
2. சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.
3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார்.
4. இவரின் இயற்பெயர் முத்தையா.
5. இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
6. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு.

முறைப்படுத்தப்பட்ட பத்தி

சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார். இவரின் இயற்பெயர் முத்தையா. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கிய நாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

பயிற்சி

பொருளுணர்ந்து முறைப்படுத்திப் பத்தியமைத்து எழுதுதல்

1. நீ அழுகையை நிறுத்தாவிட்டால், ஓநாயிடம் தூக்கிப் போட்டுவிடுவேன் என்று குழந்தையிடம் கூறினாள், அவள்.
2. குடிசையின் உள்ளே சிறு பையன் அழுதுகொண்டிருந்தான்.
3. இதனைக்கேட்ட ஓநாய், குடிசைக்கு வெளியே நெடுநேரம் காத்துக்கொண்டிருந்தது.
4. பசியோடு உணவுதேடி அலைந்துகொண்டிருந்த ஓநாய், ஒரு குடிசைவீட்டின் அருகே வந்தது.
5. இங்கு மக்கள் பேசுவது ஒன்று; செய்வது வேறு ஒன்றாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டே ஓநாய் சென்றது.
6. திடீரென்று 'என் கண்ணே, அழாதே. உன்னை ஓநாயிடம் போடமாட்டேன். ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். அதனை அடித்துக் கொன்றுவிடுவோம்' என்றாள்.

### இ) செயல் திட்டம் :

உங்களூர்த் திருவிழாவில் தொடக்கம்முதல் இறுதிவரை நடைபெறும் செயல்பாடுகளைத் தொகுத்தெழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) நேர் இணைச்சொற்கள் – எதிர் இணைச்சொற்கள்

நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது, சுவைபடக் கூறுவதற்காக, ஒரே பொருள்தரும் இருசொற்களைப் பயன்படுத்துவது உண்டு. அவை நேர் இணைச்சொற்கள் எனப்படும்.

(எ.கா.) 1. காவேரி கண்ணுங்கருத்துமாகப் படிப்பாள்.

2. வளவனின் தந்தை பேரும்புகழும் மிக்கவர்.

இத்தொடர்களில் உள்ள கண்ணுங்கருத்தும், பேரும்புகழும் ஆகியன நேர் இணைச்சொற்கள். எதிரான கருத்தைக் கூறும்பொழுது எதிர்ப்பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் எதிர் இணைச்சொற்கள்.

(எ.கா.) 1. கோபாலன் உயர்வுதாழ்வின்றி அனைவரிடமும் பழகும் பண்பாளர்.

2. மலர்க்கொடியின் தந்தை அல்லும்பகலும் அயராது உழைத்தவர்.

இத்தொடர்களில் உயர்வுதாழ்வின்றி, அல்லும்பகலும் என்பன எதிர் இணைச்சொற்கள்.

பயிற்சி

1. கீழ்க்காணும் நேர் இணைச்சொற்களையும், எதிர் இணைச்சொற்களையும் தொடர்களில் அமைக்க.

| | | |
|---|---|---|
| 1. ஈடுஇணையற்ற | 3. குற்றங்குறை | 5. தங்குதடையின்றி |
| 2. அல்லும்பகலும் | 4. ஓங்கியுயர்ந்த | 6. கீரியும் பாம்பும் |

2. உரிய இணைச்சொற்களை எடுத்துக் கோடிட்ட இடங்களில் நிரப்புக.

(இரவுபகல், ஏற்றத்தாழ்வு, கற்றோரும் மற்றோரும், அடித்துப்பிடித்து, பத்திப்பத்தியாக)

1. அண்ணல் அம்பேத்கர் சமுதாயத்தில் காணப்படும் ____________ களையப் பாடுபட்டார்.
2. கட்டுரை எழுதும்போது ____________ எழுதுதல் வேண்டும்.
3. உலகம், சூரியனைச் சுற்றுவதனால் ____________ தோன்றுகிறது.
4. பேருந்தில் இடம்பிடிக்க ____________ ஏறினேன்.
5. நேருவின் அறிவாற்றலைக் ____________ போற்றிப் புகழ்ந்தனர்.

### ஆ) அரபு எண்ணுக்குரிய தமிழெண்ணை எழுதுக.

| | அரபு | – | தமிழ் | | அரபு | – | தமிழ் |
|---|---|---|---|---|---|---|---|
| அ) | 7 | – | ____ | ஈ) | 2 | – | ____ |
| ஆ) | 5 | – | ____ | உ) | 9 | – | ____ |
| இ) | 10 | – | ____ | ஊ) | 8 | – | ____ |

### இ) கடிதம் எழுதுதல் : ஊர்த்திருவிழாவிற்கு வருமாறு, நண்பனுக்குக் கடிதம் எழுதுதல்.

### ஈ) அகரவரிசையில் அமைத்தல்

மெய்யெழுத்து வரிசையறிதல்: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு மெய்யெழுத்துகளும் உயிர் எழுத்தையோ உயிர்மெய்யெழுத்தையோ தொடர்ந்து மெய்யெழுத்து வரிசையாக வரும்.

பயிற்சி

கீழுள்ள சொற்களில் இரண்டாம் எழுத்து, மெய்யெழுத்து வரிசையில் அமையும்படி சொற்களை அமைக்க.

அம்மா, அப்பம், அங்கை, அஞ்சு, அக்கா, அத்தை, அச்சம், அன்பு, அந்தி, அண்ணி, அட்டை, அய்யா, அவ்வை, அல்லல், அள்ளல், அற்றம்.

## பண்பு

### கேட்டுப்பெறுதல்

தாமரை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள். அவளைப் பற்றி அறிந்தால், உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பமாட்டீர்கள். ஏனென்றால், அவளுக்குப் பிடித்த பொருளாக இருந்தால், யாரையும் கேட்காமல் உரிமையோடு எடுத்துக்கொள்வாள். பலரும் பலமுறை அறிவுறுத்தியும் அவளால் அந்தப் பழக்கத்தை விடவே முடியவில்லை. ஒருவருக்கு உரிமையான பொருளை, அவர் அனுமதியின்றி எடுத்துக்கொள்வது தவறில்லையா ?

கூடிப் பேசுவோம்

1. தாமரை போன்றோரை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வீர்களா ?
2. நீங்கள் எப்போதாவது தாமரையைப் போன்று நடந்து கொண்டதுண்டா ?
3. தாமரையின் செயலைத் திருத்தாமல் வளரவிட்டால் என்ன ஆகும் ?
4. தாமரையின் பழக்கத்தை மாற்றுவது எப்படி ?

## வாழ்க்கைத்திறன்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

நம் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கலுக்கு ஆக்கப்பூர்வமான வழியைத் தேர்ந்தெடுக்கவும் அவற்றுக்கு எளிதாகத் தீர்வு காணவும் சிக்கலுக்குத் தீர்வு காணும் திறன் உதவுகிறது. குமரனுக்குக் கால்பந்து விளையாடுவதென்றால் மிகவும் பிடிக்கும். படிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் கால்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருப்பான். ஆனால், அவனுடைய தந்தைக்கோ அவனைச் சிறந்த நீச்சல் வீரனாக்கிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. குமரனுக்கு ஏற்பட்ட சிக்கலுக்குத் தீர்வு என்ன ?

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### நாட்டுப்பற்று

ஜெர்மனி நாட்டின் கொடுங்கோலராகக் கருதப்பட்டவர் ஹிட்லர். 'இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தால், நாட்டைத் திறமையாக ஆட்சிபுரியும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா என்பது ஐயமே' என்று இந்தியர்களைக் குறைத்து மதிப்பிட்டு, ஒருமுறை அவர் கருத்துக் கூறினார். இதனைக்கேட்ட செண்பகராமன் கொதித்தெழுந்தார். ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்புக் கேட்கச் செய்தார். உலகையே நடுங்கச்செய்த கொடுங்கோலராக இருந்தாலும் அவரையே மன்னிப்புக் கேட்கச்செய்த மாவீரன் செண்பகராமனின் நாட்டுப்பற்று போற்றுதற்குரியதாகும்.

பெற்ற தாயையும் பிறந்த நாட்டையும் மதிக்கக் கற்றுக்கொள்ளாதவன் கற்றும் பதராகவே கருதப்படுவான். ஆகவே, ஒவ்வொருவரும் பெற்ற தாய்க்கும் நாட்டுக்கும் பேரும்புகழும் சேர்த்தல் வேண்டும்.

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | விடையளித்தல் |
|---|---|

**கீழுள்ள பத்தியை ஆசிரியர் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு மாணவர்கள் விடைகூறுக.**

விவேகானந்தர் நமது நாட்டின் வீரத்துறவி. அவர்தம் பேச்சு இந்திய இளைஞர்களின் மனத்தில் வீர உணர்ச்சியைத் தூண்டியது. ஒவ்வோர் இளைஞருக்குள்ளும் பொதிந்து கிடக்கும் ஆற்றலை வெளிக் கொண்டுவந்து அவர்களைச் செயல் வீரர்களாக மாற்றியது. “ இளைஞர்கள் பிறரிடமிருந்து நல்லவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் வளரமுடியும். நீங்கள் கடவுளின் குழந்தைகள். சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள்” என்று விவேகானந்தர் இளைஞர்களை நோக்கி வீரமுழக்கமிட்டார். அவர்தம் உரையினைக் கேட்ட இளைஞர்கள் துடித்தெழுந்தார்கள்; நாட்டிற்கு அரும்பெரும் தொண்டாற்றினார்கள்.

### வினாக்கள்

1. இளைஞர்களின் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பாதவர் விவேகானந்தர் (சரி /தவறு)
2. இளைஞர்கள் கடவுளின் குழந்தைகள் (சரி /தவறு)
3. பிறரிடமிருந்து நல்லன அல்லாதவற்றை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் (சரி /தவறு)
4. இளைஞர்கள் செம்மறி ஆடுகள் அல்லர், சிங்கங்கள் (சரி/தவறு)
5. இளைஞர்கள் நாட்டுக்குத் தொண்டாற்றுதல் வேண்டும் (சரி /தவறு)

| செயல்பாடு : 2 | கதை கூறுதல் |
|---|---|



**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை கூறுக.**

- வைகைஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுதல்
- கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள் புகும்நிலை
- வீட்டிற்கு ஒருவர் மண்சுமந்து கரையை வலுப்படுத்த அரிமர்த்தன பாண்டியன் ஆணையிடல்
- வந்தி கிழவிக்கு இறைவன் பிட்டுக்கு மண் சுமத்தல்
- இறைவன் மண்சுமக்காமல் மண்சுமப்போரையும் இடையூறு செய்தல்
- காவலர்கள் இச்செயலை மன்னனிடம் முறையிடல்
- மன்னன் இறைவனைப் பிரம்பால் அடித்தல்
- பிரம்படி உலகில் உள்ள எல்லா உயிரிகள் மீதும் விழுதல்

தமிழ்

| செயல்பாடு : 3 | வினாடிவினா |
|---|---|

'தூங்காநகர்' என்னும் உரைநடைப்பகுதியை ஒட்டி மாணவர்களாகவே வினாடிவினா நடத்துக. (வினா அமைப்பதும், வினாடி வினா நடத்துவதும், வினாடி வினா நிகழ்ச்சியில் பங்குபெறுவதும் மாணவர்களாகவே இருத்தல் வேண்டும்)

## எழுதுதல்

| செயல்பாடு : 4 | சொல்வதனை எழுதுதல் |
|---|---|

சொல்வதனை எழுதுக.

1. தங்கப்பதுமைத் தோழர்கள்
2. விலையில்லா மெய்ப்பொருள் கல்வி
3. விரும்பிப் படித்தால் அறிவு உண்டு
4. அழுக்கில்லா ஆடையே மேன்மை
5. கற்பிப்போர் கண்கொடுப்போரே

| செயல்பாடு : 5 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

பாடலில் அடிக்கோடிட்ட பெயர்ச்சொற்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.



கட்டை கட்டை மாட்டு வண்டி
காலம் கடந்த மாட்டு வண்டி
கறுப்புப் புகை கக்கிடாத
காளை பூட்டின கட்டைவண்டி
ஆண்டுநூறு கடந்தாலும்
அழகாய் ஓடும் மாட்டுவண்டி
காததூரம் ஓடினாலும்
கட்டுவிடாக் கட்டைவண்டி
சல்சல் மாட்டுவண்டி
சாலையில் ஓடும் மாட்டுவண்டி
வாலை நன்றாய்த் தூக்கியே
விரைந்து ஓடும் காளைகளே.

| | | |
|---|---|---|
| 1 | பொருட்பெயர் | |
| 2 | இடப்பெயர் | |
| 3 | காலப்பெயர் | |
| 4 | சினைப்பெயர் | |
| 5 | குணப்பெயர் | |
| 6 | தொழிற்பெயர் | |

தமிழ்

| செயல்பாடு : 6 | விடை எழுதுதல் |
|---|---|

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

கொல்லையிலே வாழைபலா
மாங்கனிகள் குலுங்கும்! நீள்
கரும்ப ழைக்கும்!
நெல்லரியோ வந்தகதிர்
நிறங்கண்டு தலைதாழ்த்தும்!
ஊரோ ரத்துக்
கல்லருவி முழவார்க்கும்!
காடெல்லாம் பூச்சிரிக்கும்!
குயில்கள் பாடும்!

வினாக்கள்

1. பாடலிலுள்ள முக்கனிகள் பெயரினை எழுதுக.
2. அழைப்பது எது ?
3. தலை தாழ்த்துவது எது ?
4. காடெல்லாம் சிரிப்பது எது ?
5. பாடும் பறவை எது ?

## கற்றலடைவுச் சிறு மதிப்பீடு

மதிப்பெண் :10

I. கீழ்க்காணும் தொடர்கள் சரியா, தவறா ? 6 x 1 = 6

1. 'வந்தி' கிழவிக்காக மண்சுமந்து பாண்டியனிடம் இறைவன் அடிபட்டார். (சரி/தவறு)
2. கவிஞரேறு என்னும் பட்டத்தைப் பெற்ற கவிஞர் திருக்காமு ஆவார். (சரி/தவறு)
3. வாழ்க்கைக்குக் கல்விதரும் ஆசிரியரின் சொல்கேட்டு நடத்தல் வேண்டும். (சரி/தவறு)
4. பாண்டியர்தம் தலைநகரம் தஞ்சாவூர் (சரி/தவறு)
5. மதுரையைப் புகழ்ந்து பாடிய எட்டுத்தொகை நூல், 'பரிபாடல்' ஆகும். (சரி/தவறு)
6. காளியப்பன் ஊர் போற்றும் நல்லவன். (சரி/தவறு)

II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 2 = 4

1. குணப்பெயர் நான்கனை எழுதுக.
2. பொருட்பெயர் என்றால் என்ன ?

இலக்கணம்

# வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்

தமிழ்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம்,எழினி! முன்வகுப்பில் கற்றுக் கொண்டதனைப்பற்றிச் சொல்.

எழினி : பெயர்ச்சொற்கள் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : நன்று. முகிலன்! பையில் என்ன கொண்டுவந்துள்ளாய்?

முகிலன் : பழுத்த பழம் எடுத்து வந்துள்ளேன், ஐயா.

ஆசிரியர் : (மாணவன் கூறிய தொடரைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களைப் படிக்கச் சொல்லுதல்). பழம் எடுத்து வந்தவன் யார்?

முருகன் : முகிலன், ஐயா.

ஆசிரியர் : என்ன எடுத்து வந்தான்?

முருகன் : பழுத்த பழம் எடுத்து வந்தான், ஐயா.

ஆசிரியர் : இத்தொடரில் வந்துள்ள வினைச்சொற்களைப் பற்றிக் கற்றுக் கொள்வோம். முல்லை! இத்தொடரில் வந்துள்ள வினைச்சொற்களைச் சொல்.

முல்லை : வந்தான், பழுத்த, எடுத்து ஆகியன.

ஆசிரியர் : நன்று. இவற்றுள் 'வந்தான்' என்பது 'செயல்' முற்றுப்பெற்றதனை உணர்த்துவதனால், இது வினைமுற்று ஆகும். இச்சொல், எந்தக் காலத்தைக் காட்டுகிறது?

சிந்து : இறந்தகாலம் காட்டுகிறது, ஐயா.

ஆசிரியர் : 'வந்தான்' என்னும் இச்சொல், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எவ்வாறு வரும்?

அழகன் : வருகின்றான், வருவான் என வரும், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. இவ்வாறு செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல்லே வினைமுற்று ஆகும். இது மூன்று காலங்களில் ஒன்றனை உணர்த்தும்; திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும். கோபால், அடுத்த சொல்லைப் படி.

கோபால் : 'பழுத்த' என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : பழுத்த என்னும் சொல், முற்றுப்பெறாத வினைச்சொல். இச்சொல் பழம் என்னும் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவுபெறுகிறது. இவ்வாறு ஒரு பெயரைக்கொண்டு முடியும் முற்றுப்பெறாத

வினைச்சொல்லே பெயரெச்சம் ஆகும். இது முக்காலத்திலும் வரும். பழுத்த என்னும் சொல் இறந்தகாலத்தில் வந்துள்ளதுபோல், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எவ்வாறுவரும் என்று சொல்லுங்கள்.

இனியன் : பழுக்கின்ற பழம், பழுக்கும் பழம் என வரும், ஐயா.

ஆசிரியர் : மிகவும் நன்று. அடுத்த சொல் என்ன?

இனியன் : எடுத்து என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : எடுத்து என்னும் முற்றுப்பெறாத வினைச்சொல் 'வந்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் முக்காலத்தையும் உணர்த்தும்.

எடுத்து வந்தான் – இஃது இறந்தகால வினையெச்சம். இதனைப்போல் நிகழ்கால, எதிர்காலங்களுக்கும் பொருத்திக் கூறுங்கள்.

கோபால் : எடுத்து வருகின்றான் – நிகழ்கால வினையெச்சம். எடுத்து வருவான் – எதிர்கால வினையெச்சம்

பயிற்சி :

1. பின்வரும் தொடரிலுள்ள வினைமுற்றை வட்டமிடுக.
   யாழினி கடுமையாக உழைத்தாள்.
2. பின்வரும் தொடரிலுள்ள பெயரெச்சத்தை வட்டமிடுக.
   நன்கு படித்த மாணவன் முதல் மதிப்பெண் பெற்றான்.
3. பின்வரும் தொடரிலுள்ள வினையெச்சத்தை வட்டமிடுக.
   குழந்தை ஆடிப் பாடி மகிழ்ந்தது.

## மாதிரி வினாக்கள்

அ. கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. வினைமுற்று என்றால் என்ன? சான்று தருக.
2. பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
3. வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
4. அட்டவணையை நிரப்புக.

| வ.எண் | வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|---|
| 1. | படித்தான் | | படித்து |
| 2. | | வந்த | வந்து |
| 3. | கண்டான் | | கண்டு |
| 4. | | கேட்ட | |

ஆ. பின்வரும் பத்தியிலுள்ள வினைமுற்று, பெயரெச்ச, வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.

காலையில் கண் விழித்த செல்வி, படுக்கையைவிட்டு எழுந்தாள்; பல் துலக்கி முகம் கழுவினாள்; வாசல் தெளித்துக் கோலமிட்டாள். அவளின் தாய், அவளின் செயலைக் கண்டு பாராட்டினாள். மனமகிழ்ந்த செல்வி மகிழ்ச்சியில் துள்ளி ஓடினாள்; ஆடிப்பாடி மகிழ்ந்தாள். அன்றைய பாடங்களைப் படித்து முடித்தாள்; பள்ளிக்கு விரைந்து சென்றாள்.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

1. நெசவுத்தொழில் மேம்படுவதற்குரிய வழிமுறைகள் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. தொலைக்காட்சி நாடகம் ஒன்றனைப் பற்றிக் கலந்துரையாடுக.

### ஆ) படித்தல் திறன்

இந்நாள் அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமின்றி, அவர்வழி நடந்திட, அவர் காண விரும்பியதனைக் கண்டிட, அவர் தந்து சென்றதனை உருக்குலைக்காது இருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிர் உள்ளவையாக்கிட, உறுதிபூணும் நாளாகும். மாலையின் மாண்பு மணத்தில் இருக்கிறது; விளக்கின் பயன் ஒளியில் இருக்கிறது. அதுபோல, விழாக்களின் பயன் நம் செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது.

### இ) எழுதுதல் திறன்

விளம்பரங்கள், அறிவிப்புகளைப் பார்த்துப் புரிந்துகொள்ளுதல்

மதுரையில் தென்னிந்திய நூல் விற்பனையாளர் சங்கம் நடத்தும்

**ஐந்தாவது புத்தகக் கண்காட்சி**

**கழிவு 10 விழுக்காடு**

இடம் : தமுக்கம் மைதானம்,
மதுரை – 625 002.
அனைவரும் வாரீர்!

நாள் : 2.9.2010–11.9.2010
நேரம் : காலை 11 – இரவு 9 மணி
நுழைவுக் கட்டணம் இல்லை!

வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதனைப் பற்றியது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?
4. புத்தகம் வாங்குவோருக்கு எத்தனை விழுக்காடு கழிவு தரப்படுகிறது?
5. புத்தகக் கண்காட்சி நடத்துவோர் யார்?

### ஈ) படைப்புத்திறன்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு – குறித்து நாடகம் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) மரபுச்சொற்கள்

நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு எனப்படும். மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை. யானைக்கன்று என்பதே மரபுச்சொல். இதனை யானைக்குட்டி எனக் கூறுவது மரபுப்பிழை.

**இளமை மரபுச்சொற்கள்**

**தாவரங்கள் : காய்களின் இளமை மரபு**

| | | |
|---|---|---|
| அவரைப்பிஞ்சு | கத்தரிப்பிஞ்சு | வாழைக்கச்சல் |
| வெள்ளரிப்பிஞ்சு | தென்னங்குரும்பை | மாவடு |

**விலங்குகள்: இளமை மரபு**

| | | |
|---|---|---|
| குருவிக்குஞ்சு | கோழிக்குஞ்சு | ஆட்டுக்குட்டி |
| கழுதைக்குட்டி | எருமைக்கன்று | பன்றிக்குட்டி |
| மான்கன்று | நாய்க்குட்டி | பூனைக்குட்டி |
| சிங்கக்குருளை | புலிப்பறழ் | கீரிப்பிள்ளை |

**ஒலி மரபுச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| குயில் கூவும் | மயில் அகவும் | காகம் கரையும் |
| கிளி கொஞ்சும் | கூகை குழறும் | குதிரை கனைக்கும் |
| சிங்கம் முழங்கும் | நரி ஊளையிடும் | யானை பிளிறும் |

**வினைமரபுச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| அப்பம் தின் | காய்கறி அரி | இலை பறி |
| நெல் தூற்று | களை பறி | பழம் தின் |
| நீர் பாய்ச்சு | பாட்டுப் பாடு | மலர் கொய் |

**பயிற்சி : பொருத்துக.**

1. காகம் – கூவும்
2. குதிரை – கரையும்
3. சிங்கம் – கனைக்கும்
4. நரி – முழங்கும்
5. குயில் – ஊளையிடும்

### ஆ) தமிழெண்களைக் கூட்டுக.

1. க+உ = ______
2. ச+ங = ______
3. ரு+ரு = ______
4. உ+ச = ______

### இ) கட்டுரை எழுதுதல்: உழவர் திருநாள்

### ஈ) அகரவரிசையில் அமைக்க.

சீப்பு, சங்கு, சைதை, செப்பு, சூளை, சேவல், சாவி, சுக்கு, சோலை, சிலை, சொல், சௌமியன், சக்கரம், சீரகம், சென்னை, சாறு, செல்வம், சுண்ணம், சூது, செடி.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

தொடர்வண்டி நிலையத்தில்...

பயணி : டிக்கெட் கவுண்டர் எங்கே இருக்குச் சொல்லுங்கையா?

ஒருவர் : ஸ்டெய்ட்டாபோயி லெப்ட்ல திரும்புங்க. அங்க கார்னர்ல ஒரு போர்டு இருக்கும். அங்கபோயி வாங்குங்க.

பயணி : ஐயா, தாம்பரத்திற்கு ஒரு டிக்கெட் கொடுங்க.

அலுவலர் : செவன் ருப்பீஸ் சேஞ்சா கொடுங்க.

பயணி : இந்தாங்க பத்து ரூபாயா இருக்கு.

அலுவலர் : டிக்கெட் இந்தாங்க. மீதி சேஞ்ச் எடுத்துக்கங்க.

பயணி : ஐயா, தாம்பரம் போற டிரெயின் எந்த பிளாட்பாம்ல வரும்.

ஒருவர் : ஸ்டெப்ஸ் ஏறி அந்த சைடுல எறங்கனீங்கனா பிளாட்பாம் நெம்பர் டூல டிரெயின் வரும். அங்கபோயி ஏறிக்குங்க.

இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களை நீக்கித் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி உரையாடலை அமைக்க.

## வாழ்க்கைத்திறன்

### படைப்பாற்றல் திறன்

நம் வாழ்வில் நாள்தோறும் எதிர்கொள்ளும் சூழல்களுக்குப் பல்வேறு கோணங்களில் இருந்து தீர்வு காண படைப்பாற்றல் திறன் உதவுகிறது.

தண்ணீர் குறைவாக இருந்த குடத்தினுள் கற்களை நிரப்பி, நீரின் அளவை உயரச்செய்து தாகம் தீர்ந்த காகத்தின் கதை படைப்பாற்றல் திறனுக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். நம் மனம் தளர்வடையும்போது, ஆக்கப்பூர்வமான வழிகளில் செலுத்த படைப்பாற்றல் திறன் உதவும். உங்களுடைய வாழ்வில் எந்த ஒரு சூழலிலாவது படைப்பாற்றல் திறனைப் பயன்படுத்தி உள்ளீர்களா?

எவையெவை படைப்பாற்றல் எனப் பட்டியலிடுங்கள்?

பட்டியலிட்ட படைப்பாற்றல்களில் ஏதாவது ஒன்றில் நீங்கள் திறனோ ஆர்வமோ கொண்டுள்ளீர்களா?

## மதிப்புக்கல்வி

### உயிரிரக்கம்

மன்னர் பிம்பிசாரர் ஒருமுறை வேள்வி ஒன்றனை நடத்தத் திட்டமிட்டார். அவ்வேள்வியில் பலியிடுவதற்காக ஆயிரக்கணக்கில் ஆடுகள் கட்டிப்போடப்பட்டு இருந்தன. அங்கு வந்த கௌதம புத்தர், உயிர்களைப் பலியிட வேண்டா என்று கூறினார். ஆனால், அவர்கள் பலியிடுதலைக் கைவிடவில்லை. இறுதியாக, “இந்த வாயில்லா விலங்குகளை விட்டுவிடுங்கள். என்னையே இந்த வேள்வித்தீயில் போடுங்கள்” என்று கூறிய புத்தர், வேள்வித்தீயில் விழப்போனார். புத்தரின் இச்செய்கையைக் கண்டு பிம்பிசாரர் திடுக்கிட்டார்; மனம் மாறினார்; புத்தரின் அறிவுரையை ஏற்றார். பிம்பிசாரர் நாடெங்கும் உயிர்ப்பலியைத் தடை செய்தார்.

உயிரைத் துன்புறுத்தும்போதும் கொல்லும்போதும் அதன் நிலையில் நீங்கள் இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள்.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | கலந்துரையாடுதல் |
|---|---|

நிகழ்வைப் பார்த்துக் குழுவில் கலந்துரையாடுக. (விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறுவதன் விளைவுகளைச் சிந்திக்க !)




| செயல்பாடு : 2 | பட்டிமன்றம் |
|---|---|

'நிலைத்த செல்வம் கல்விச் செல்வமா, பொருள் செல்வமா ?' என்னும் தலைப்பில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பட்டிமன்றம் ஒன்றனை நிகழ்த்துக.

## எழுதுதல்

| செயல்பாடு : 3 | நேர்காணல் |
|---|---|

உங்கள் ஊரில் உள்ள உழவர்களிடம் கீழுள்ள வினாக்களுக்கான விடையை எழுதி வருக.

1. நீங்கள் நிலத்திற்கு எந்த வகை உரங்களை இடுகிறீர்கள் ?
2. ஒரு நாளைக்கு நிலத்தில் எவ்வளவு நேரம் உழைக்கிறீர்கள் ?
3. உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்கிறதா ?
4. பாசனத்திற்குப் போதுமான நீர் வசதி உள்ளதா ?
5. நீர் வசதி இல்லாதபோது நீங்கள் செய்யும் பயிர் வகைகள் எவை ?

| செயல்பாடு : 4 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

கீழுள்ள சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. பஞ்சம் | 2. சூரியன் | 3. சேமம் |
| 4. தேசம் | 5. சொத்து | 6. ஆசை |

(அவா, வறட்சி, நலம், உடைமை, நாடு, கதிரவன்)

| செயல்பாடு : 5 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

அ. விடுகதையில் உள்ள ஊர்ப்பெயரைக் கண்டறிக.

1. முதல் எழுத்து மறைந்தால் 'துரை'
2. இரண்டாம் எழுத்து மறைந்தால் 'மரை'
3. மூன்றாம் எழுத்து மறைந்தால் 'மது' – ஊர்ப் பெயர் என்ன ?

ஆ. விடுகதையில் உள்ள விலங்கின் பெயரைக் கண்டறிக.

1. முதல் எழுத்து மறைந்தால் 'மறைக்கும்'
2. இரண்டாம் எழுத்து மறைந்தால் 'குரைக்கும்'
3. மூன்றாம் எழுத்து மறைந்தால் 'குதிக்கும்' – விலங்கின் பெயர் என்ன ?

| செயல்பாடு : 6 | எழுதுதல் |
|---|---|

உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் விடுகதைகளைக் கேட்டு எழுதி வருக.

| செயல்பாடு : 7 | எழுதுதல் |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களிலுள்ள பெயரெச்ச, வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.

1. கேட்காத கடனும் பார்க்காத பயிரும் வீடுவந்து சேராது.
2. கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

தொகுத்தல்

| செயல்பாடு : 8 | செயல்திட்டம் |
|---|---|

பலவகையான துணிவகைகளைத் திரட்டித் தொகுப்பேடு ஒன்றனை உருவாக்குக.

## கற்றலடைவுச் சிறு மதிப்பீடு

மதிப்பெண் : 10

I. கோடிட்ட இடங்களை நிரப்புக. 6 x 1 = 6

1. திரைக்கவித் திலகம் எனப் பாராட்டப்படும் கவிஞர் ____________ .
2. கலம்பக உறுப்புகளின் எண்ணிக்கை ____________ .
3. ஈசான தேசிகரின் மற்றொரு பெயர் ____________ .
4. திரு. வி. க. கூறிய சிறந்த பூ ____________ .
5. நிலைத்த செல்வம் ____________ செல்வமாகும்.
6. செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல் ____________ ஆகும்.

II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 2 = 4

1. சுவாமிநாத தேசிகர் பற்றிக் குறிப்பு வரைக.
2. நெசவுகளின் வகைகள் யாவை ?

athiyamanteam.com Video Course &  Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



## “என்னால் முடியும், நானே செய்தேன்”

## (‘I can, I did’)

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

இலக்கணம்

# வேற்றுமை, அடைமொழி

## வேற்றுமை

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். இன்று காலைவழிபாட்டுக் கூட்டத்தில் பரிசுபெற்றவர் யார் ?

மாணவர் : கண்ணன் பரிசு பெற்றான், ஐயா.

ஆசிரியர் : தலைமையாசிரியர், யாரைப் பாராட்டிப் பரிசு வழங்கினார் ?

மாணவர் : தலைமையாசிரியர், கண்ணனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார், ஐயா.

ஆசிரியர் : 1. கண்ணன் பரிசு பெற்றான்.

2. தலைமையாசிரியர், கண்ணனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்.

(இத்தொடர்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.)

முதல் தொடரில் கண்ணன் என்னும் பெயர்ச்சொல் அமைந்துள்ளது. இரண்டாம் தொடரில் அதே பெயர்ச்சொல் கண்ணனை மற்றவர் பாராட்டியதனைக் குறிக்கிறது. இத்தொடரில், கண்ணன் என்னும் பெயர்ச்சொல்லின் பொருள் வேறுபடுகிறது. இவ்வேறுபாட்டுக்குக் காரணம், கண்ணன் என்னும் பெயரோடு சேர்ந்துள்ள 'ஐ' என்னும் உருபு. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது, வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் இறுதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்பர்.

மணி : சற்று விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : இராமன் கண்டான் – இதே தொடர், இராமனைக் கண்டான் என வரும்பொழுது, இரண்டிற்குமுள்ள வேறுபாடு புரிகிறதா ?

மணிமொழி : நன்றாகப் புரிகிறது, ஐயா. முதல் தொடரானது இராமன் வேறொருவனைப் பார்த்தான் எனவும், இரண்டாம் தொடரானது வேறொருவன் இராமனைப் பார்த்தான் எனவும் பொருள் வேறுபடுகிறது, ஐயா.

ஆசிரியர் : இச்சிறுமாற்றத்திற்குக் காரணம் என்ன ? நன்றாகச் சிந்தித்துக் கூறுங்கள்.

கபிலன் : 'ஐ' என்னும் எழுத்து, ஐயா.

தமிழ்

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி. இவ்வாறு பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு வேற்றுமை உருபு எனப்படும். இவ்வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எண்வகைப்படும்.

பாரி : ஐயா, முதல் வேற்றுமை என்றால் என்ன ?

ஆசிரியர் : இயல்பான பெயர், (எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது முதல் வேற்றுமை எனவும், எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கப்படும். (இது வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகக் கொண்டு முடியும்.)

(எ.கா.) கண்ணன் வந்தான் – வினைப் பயனிலை
அவன் கண்ணன் – பெயர்ப் பயனிலை
அவன் யார் ? – வினாப் பயனிலை

எழுவாய் வேற்றுமைக்கு எனத் தனி உருபு இல்லை.

பொன்மணி: ஐயா, இரண்டாம் வேற்றுமைக்கு உருபு உண்டா ?

ஆசிரியர் : உண்டு. இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' என்பதாகும். வளவன் செய்யுளைப் படித்தான். இத்தொடரில் உள்ள செய்யுள் என்னும் பெயர்ச்சொல் 'ஐ' என்னும் உருபையேற்றுச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்வாறு பெயர்ச்சொல்லினது பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை ஆகும்.

அதியன் : ஐயா, மூன்றாம் வேற்றுமைக்கும் உருபு உண்டா ?

ஆசிரியர் : மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் ஆகியன.

(எ.கா.) நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது. – ஆல்
தூங்குகையான் ஓங்குநடை. – ஆன்
தாயொடு மகள் வந்தாள். – ஒடு
தந்தையோடு தாய் வந்தாள். – ஓடு
தந்தையுடன் தம்பியும் வந்தான். – உடன்

வைரமணி : ஐயா, நான்காம் வேற்றுமை உருபு என்ன ?

ஆசிரியர் : நான்காம் வேற்றுமை உருபு 'கு'. தலைவர் நந்தினிக்குப் பரிசு வழங்கினார். நந்தினி என்னும் சொல் 'கு' என்னும் உருபை ஏற்றுப் பொருள் வேறுபடுத்திக் காட்டுகிறது அல்லவா ?

காந்தாரி : ஐந்தாம் வேற்றுமை உருபுபற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேன். ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் என்பன.

(எ.கா.) கொடையில் சிறந்தவர் பாரி. இந்தியாவின் தெற்கு எல்லை குமரி. இத்தொடர்களில் கொடை, இந்தியா என்னும் சொற்களுடன் இல், இன் என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்துகின்றன.

மாரி : ஆறாம் வேற்றுமைக்கு உருபு உண்டா, ஐயா ?

ஆசிரியர் : ஆறாம் வேற்றுமை உருபு 'அது' என்பது. (எ.கா.) இராமனது வீடு. எனது புத்தகம். இத்தொடர்களில் இராமன், என் ஆகிய பெயர்ச்சொற்களுடன் 'அது' என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து பொருளை வேறுபடுத்துகிறது.

இளம்பிறை : ஏழாம் வேற்றுமை உருபையும் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஏழாம் வேற்றுமைக்குக் கண், உள், மேல், கீழ் என்பன உருபுகளாம்.

(எ.கா.) வீட்டின்கண் குழந்தை விளையாடுகிறது.

பெட்டிக்குள் பணம் இருக்கிறது.

கூரையின்மேல் சேவல் உள்ளது.

கட்டிலின்கீழ் நாய் படுத்துள்ளது.

இத்தொடர்களில் வீடு, பெட்டி, கூரை, கட்டில் ஆகிய சொற்களுடன் கண், உள், மேல், கீழ் ஆகிய உருபுகள் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துகின்றன.

எழிலரசு : ஐயா, எட்டாம் வேற்றுமைக்கு உருபு உண்டா ?

ஆசிரியர் : எட்டாம் வேற்றுமை உண்டு; ஆனால், அதற்கு உருபு இல்லை. இதனை 'விளி வேற்றுமை' என அழைப்பர்.

(எ.கா.) கந்தா வா !

இத்தொடரில் கந்தன் என்னும் சொல்லில் இறுதி (ன்) எழுத்தானது கெட்டு, அதன் அயல் எழுத்து (த – தா என) நீண்டு அழைத்தற் பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவதனை 'விளி வேற்றுமை' என்பர்.

பயிற்சி : கோடிட்ட இடத்தில் பொருத்தமான உருபேற்ற சொல்லைத் தேர்ந்தெழுதுக.

1. அமுதா ______________ எழுதினாள்.

அ. பாடத்தை ஆ. பாடத்துக்கு இ. பாடத்தின்

2. முருகன் ______________ உயர்ந்தான்.

அ. உழைப்பை ஆ. உழைப்பால் இ. உழைப்புக்கு

3. பண்டைய மன்னர்கள் தமிழ் ______________ பாடுபட்டனர்.

அ. வளர்ச்சிக்கு ஆ. வளர்ச்சியை இ. வளர்ச்சியின்கண்

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கலைச்செல்வன் __________ முரித்தான். (கிளை)
2. பாடம் __________ படிக்கப்பட்டது. (இராமன்)
3. பாடல் எழுதிய __________ பரிசு கிடைத்தது. (புலவர்)
4. இது __________ சட்டை. (கபிலன்)
5. __________ இலக்குமி பாடுகிறாள். (மேடை)

### ஆ. குறுவினாக்கள்

1. வேற்றுமை என்பது யாது ?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
4. உருபின்றி வரும் வேற்றுமைகள் யாவை ? விளக்குக.

### இ. மனவரைபடம் வரைக

வேற்றுமை உருபுகளின் வகைகளை நீ புரிந்துகொண்டவாறு மனவரைபடம் வரைக.

# அடைமொழி

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். அனைவரும் நலம்தானே! சென்ற வகுப்பில் படித்த பாடங்கள் எளிதாகப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். யாருக்காவது ஐயம் உள்ளதா ?

மாணவர் : நன்றாக விளங்கிற்று, ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி, பாண்டியா! இன்று என்ன கிழமை ?

பாண்டியன்: திங்கட்கிழமை, ஐயா.

ஆசிரியர் : திங்கள் என்றால் என்ன பொருள் ?

பாண்டியன்: நிலவு, மாதம் ஐயா.

ஆசிரியர் : நிலவை வெண்ணிலவு எனவும் அழைப்பார்கள் அல்லவா ?

பொன்னி : ஆமாம், ஐயா.

ஆசிரியர் : இதில் வரும் வெண்மை என்னும் சொல் நிலவுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

பொன்னி : அடைமொழி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : பல வகைப்பட்டதாக இருக்கும் ஒரு பொருளைப் பொதுவாகச் சுட்டும்பொழுது, அதன் வகை குறித்து ஐயம் ஏற்படலாம். எனவே அவற்றை, இனம் பிரித்துக்காட்டுவதற்குத் தனிச்சொல்லைப் பயன்படுத்துவர். அத்தனிச்சொல் அடைமொழி எனப்படும். சான்றாகப் பாடநூல் எனச் சொல்லும்பொழுது, அதன்வகை குறித்து ஐயம் தோன்றும். அதனைப் போக்க தமிழ்ப் பாடநூல், ஆங்கிலப் பாடநூல், கணக்குப் பாடநூல் என அடை கொடுத்துக் கூறுதல் வேண்டும். இவ்வாறு பொருள்களை இனம்பிரித்தறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழி எனப்படும்.

இளவழகி : ஐயா, இனமுள்ள அடைமொழி உண்டென்றால், இனமில்லா அடைமொழியென ஒன்று இருக்கிறதா ?

ஆசிரியர் : இருக்கிறது. வெண்ணிலவு, கருங்காக்கை, செங்கதிரோன் இவற்றுக்கெல்லாம் இனமாகக் கூற வேண்டுமானால், கருநிலவு, வெண்காக்கை, கருங்கதிரோன் எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறு ஒன்று இல்லாததனால் இவை போன்றவற்றை இனமில்லா அடைமொழிகள் எனக் கூறுவர்.

அறிவுமதி : இனமில்லா அடைமொழிகள்பற்றி நன்கு அறிந்துகொண்டோம், ஐயா.

ஆசிரியர் : அடைமொழிகளின் வகைகளைப்பற்றி நீங்கள் மேல் வகுப்பில் இன்னும் விரிவாகப் படிப்பீர்கள்.

மாணவர் : நன்றி, ஐயா.

## மாதிரி வினாக்கள்

### அ. குறுவினாக்கள்

1. அடைமொழி என்றால் என்ன ?
2. இனமுள்ள அடைமொழிக்குச் சான்றுகள் தருக.
3. இனமில்லா அடைமொழிக்குச் சான்றுகள் தருக.

### பயிற்சி

கீழுள்ள தொடர்களை இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழியெனப் பகுத்துக் காட்டுக.

1. செந்தாமரை
2. பாற்குடம்
3. உப்பளம்
4. பூமரம்
5. ஊர்மன்றம்
6. தோய்தயிர்
7. செஞ்ஞாயிறு
8. வெள்ளைப்பூனை
9. செந்தமிழ்

தமிழ்

# மூவகைப் போலிகள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : நம் பள்ளி அறிவிப்புப் பலகையில் இன்று, திருக்குறள் ஒன்று எழுதப் பட்டுள்ளது. அக்குறளை யார் யாரெல்லாம் படித்தீர்கள்? மாதரசி! அக்குறளைச் சொல்.

மாதரசி : அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.

இக்குறளில் 'அகம்' என்பதற்குப் பதில், 'அகன்' எனவும், 'முகம்' என்பதற்குப் பதில் 'முகன்' எனவும் எழுதப்பட்டுள்ளதே, இது பிழையல்லவா? அம்மா.

ஆசிரியர் : அருமையாகக் கேட்டாய். 'அகம், முகம்' என்பதற்குப் பதிலாக 'அகன், முகன்' என எழுதினாலும் பொருள் மாறுபடாது. இவ்வாறு ஒரு சொல்லின் எழுத்து வேறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பதனைப் 'போலி' என்பர்.

நன்னன் : ஒரு சொல்லில் இறுதி எழுத்து மட்டும் மாறுபட்டு வருவதுதான் போலியா?

ஆசிரியர் : அப்படியன்று. ஒரு சொல்லில், முதலிலுள்ள எழுத்தோ இடையில் உள்ள எழுத்தோ, இறுதியிலுள்ள எழுத்தோ மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பின், அது போலி எனப்படும். இப்போலி, 1. முதற்போலி, 2. இடைப்போலி, 3. இறுதிப்போலி என மூவகைப்படும். இறுதிப் போலியைக் கடைப்போலி எனவும் கூறுவர்.

கயல்விழி : ஒவ்வொன்றனைப் பற்றியும் எடுத்துக்காட்டுகளோடு கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : ஒரு சொல்லின் முதலெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது வருவது முதற்போலியாகும். (எ.கா.) மஞ்சு – மைஞ்சு; மயல் – மையல்.

ஒருசொல்லின் இடையெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது, இடைப்போலி எனப்படும். (எ.கா.) முரசு – முரைசு; இலஞ்சி – இலைஞ்சி.

ஒருசொல்லில் ஈற்றெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது, இறுதிப்போலி (கடைப்போலி) என்பர். (எ.கா.) அறம் – அறன்; பந்தல் – பந்தர்.

மாறன் : வேறு ஏதாகிலும் போலி உண்டா, அம்மா?

ஆசிரியர் : உண்டு. அஞ்சு ரூபாய் கொடு என்னும் தொடரில், 'அஞ்சு ரூபாய்' என்பது எதனைக் குறிக்கிறது?

மாறன் : ஐந்து ரூபாய் என்பதனைக் குறிக்கிறது, அம்மா.

ஆசிரியர் : இவ்வாறு அஞ்சு என்னும் சொல்லில் உள்ள அனைத்து எழுத்துகளும் மாறியுள்ளன. இருப்பினும், பொருள் மாறவில்லை. எனவே, இது முற்றுப்போலி எனப்படும்.

மாணவர் : நன்றி, அம்மா. போலிகள்பற்றித் தெளிவாக அறிந்துகொண்டோம்.

பயிற்சி : கீழுள்ள தொடர்களில் காணப்படும் போலிகளை வட்டமிடுக.

1. அஞ்சு பழங்கள் வாங்கி வா.
2. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
3. மல்லிகைப் பந்தரின் கீழே தங்கினான்.

## மாதிரி வினாக்கள்

அ. புறவய வினா

கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான போலிகளை எழுதுக.

1. கலம் –     2. இலஞ்சி –     3. குடல் –

ஆ. குறுவினாக்கள்

1. போலி என்றால் என்ன ?
2. போலி எத்தனை வகைப்படும் ?
3. இறுதிப்போலியை விளக்குக.
4. நலன், ஆனை, அரையர் – இவை எவ்வகைப் போலிகளுக்கு எடுத்துக்காட்டுகள் ?

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் – என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) எழுதுதல் திறன்

பூனையும் எலியும் சந்தித்துக்கொண்டால் என்ன பேசிக்கொள்ளும் ?

ஒரு பக்கத்திற்கு உரையாடல் வடிவில் எழுதுக.

செயல்திட்டம்

ஐந்து மூலிகைத் தாவரங்களின் படங்களை ஒட்டி, அவற்றின் பயன்களை எழுதிக் கொணர்க.

## மொழித்திறன் பயிற்சி

### அ) பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்

| பிறமொழிச் சொல் | – | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | – | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|---|---|
| அனுமதி | – | இசைவு | உபயம் | – | திருப்பணியாளர் கொடை |
| ஆதவன் | – | ஞாயிறு | உஷார் | – | விழிப்பு |
| ஆரம்பம் | – | தொடக்கம் | எதார்த்தம் | – | இயல்பு |
| ஆஸ்தி | – | சொத்து | ஐதிகம் | – | உலக வழக்கு |
| இம்சை | – | துன்பம் | காகிதம் | – | தாள் |
| இருதயம் | – | நெஞ்சகம் | கிரீடம் | – | மணிமுடி |
| ஈசன் | – | இறைவன் | குபேரன் | – | பெருஞ்செல்வன் |
| உபசரித்தல் | – | விருந்தோம்பல் | | | |

பயிற்சி : பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. இந்த வேலையில் சேர என்ன அந்தஸ்து உள்ளது ?
2. கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான்.
3. ஆகாசத்தில் பட்சி பறந்தது.
4. புஷ்பமின்றி, அபிஷேகம் உண்டா ?
5. குழந்தைக்குக் கண்திருஷ்டி சுற்றிப்போடு.

### ஆ) தமிழெண்களின் கூடுதல் காண்க.

1. க + க = ________ 2. ச + ரு = ________

3. உ + féஈ = ________ 4. கூ + க = ________

### இ) கட்டுரை எழுதுதல்

பெண் கல்வி

### ஈ) அகரவரிசையில் அமைக்க.

தை, தீ, தென்னை, தாமரை, தூண், தேன், தட்டு, திண்ணை, துணி, தொட்டி, தோட்டம், தயிர், திரள், தூள், திண்ணன், தோணி, தொடு, தீனி.

## பண்பு

### மறுத்தல்

கண்ணன் ஏழாம் வகுப்பில் படிக்கிறான். கண்ணனின் தாயார் மலர்க்கொடி, அவனை வெளியில் எங்காவது அழைத்துச்செல்ல வேண்டுமென்றால் மிகவும் தயங்குவார். காரணம், கண்ணனின் செயல்தான். யார், எதனைக் கொடுத்தாலும் உடனே கைநீட்டி வாங்கிவிடுவான். ‘வேண்டா’ என்று அவனுக்குச் சொல்லவே தெரியாது. மலர்க்கொடி எத்தனையோ முறை அவனிடம் எடுத்துக் கூறிவிட்டாள்; ஆனால், அவளால் திருத்த இயலவில்லை.

### கூடிப்பேசுவோம்

1. கண்ணனைப் போன்று உனக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் உள்ளனரா ?
2. கண்ணனின் செயல் முறையானதா ?
3. கண்ணனின் பழக்கத்தை மாற்றுவதற்கு ஏதேனும் வழி இருந்தால் குறிப்பிடுங்கள்.
4. தொடர்வண்டியில் செல்லும்போது யாராவது, எதனையாவது கொடுத்தால், நீங்கள் வாங்கிக் கொள்வீர்களா ?

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் பழகும் திறன்

ஒருவருக்கொருவர் நட்புடன் பழகவும், தொடர்ந்து மகிழ்ச்சியான நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் இத்திறன் தேவை.

மைவிழியும் மான்விழியும் இணைபிரியாத தோழிகள். ஆனால், சில நாளாக மைவிழியின் போக்கு மான்விழிக்குப் பிடிக்கவில்லை.

எப்போதும் பிறரிடம் குறை காண்பதே அவளுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. இதனால் மற்ற நண்பர்கள், இவர்களோடு சேராமல் ஒதுங்கி இருந்தார்கள்.

மான்விழி எடுக்கும் முடிவு என்னவாக இருக்கும் ?

மைவிழியின் நட்பை மான்விழி தொடர்வாளா, விலகிச் செல்வாளா ?

மான்விழி நிலையில் நீயிருந்தால் என்ன முடிவெடுப்பாய் ?

## மதிப்புக்கல்வி

### உதவும் மனப்பான்மை

சென்னையில் ஒரு குழுவினர் பள்ளி ஒன்றனை நடத்தி வந்தனர். அப்பள்ளியின் ஆசிரியரான வேமூர் நரசிம்மர் என்பவர், ஏழை மாணவர்க்கு நண்பகல் இலவய உணவு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்.

அதற்காகப் பொருளுதவிபெற அவர் அணுகியவர்களுள் மருத்துவ மாமேதை குருசாமியும் ஒருவர். அத்திட்டத்தின் சிறப்பை உணர்ந்த குருசாமி, மறுநாள் அவரைச் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டார்.

எழும்பூர்க் கென்னத்துச் சாலையில் தமக்கு உரிமையாக இருந்த மாளிகை ஒன்றனைப் பள்ளிக்கு ஆவணம் எழுதிப் பதிவு செய்துகொடுத்தார். அன்னாரின் உதவும் மனப்பான்மை அளவிடற்கரியது.

உதவிக்கு எல்லையில்லை. ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப உதவிகள் வேறுபடும். எனவே, தேவைப்படுவோருக்கு உதவுவதே உதவியாகும். அதுவே, மனிதனுக்குரிய சிறப்புப் பண்பு.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. – குறள், 226

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



## வளரறி செயல்பாடுகள்

| பேசுதல் திறன் | செயல்பாடு –1 |
|---|---|

படங்களில் உள்ள நிகழ்வுகளை முறைப்படுத்தி மூன்று மணித்துளி பேசுக.



| குழுக்கலந்துரையாடல் | செயல்பாடு – 2 |
|---|---|

சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத போகியை எவ்வாறு கொண்டாடலாம் என்பதனைக் கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் குழுவில் கலந்துரையாடுக.



1. உன் வீட்டில் போகி நாளில் எரிக்கப்படும் பொருள்கள்
2. நெகிழிப் பொருள்களை எரிப்பதனால் ஏற்படும் தீமைகள்
3. எந்தெந்தப் பொருள்களை எரிப்பதனால் கேடு விளையாது ?

| சிக்கலுக்குத் தீர்வு காணல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழுள்ள படங்கள் உணர்த்தும் சிக்கல்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் குழுவில் கலந்துரையாடுக.



| படித்தல் திறன் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழுள்ள உரைப்பத்தியை நிறுத்தக் குறிகளுக்கு ஏற்பப் படிக்கவும்.

பொங்கல்விழா நடைபெறும் காலம் இனிய காலம்; கால் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம்; இயற்கையன்னை பசுமையான புடைவை உடுத்துப் பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும் கனியும் கரும்பும் அணிந்து இன்பக்காட்சி தருங்காலம்.

பொங்கலுக்குத் தலைநாள் போகி. போகியை அடுத்து வருவது பொங்கல் புதுநாள்; அந்நாளில், 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' நிகழும்; வீட்டிலுள்ள பழம்பானைகள் விடைபெறும்; புதுப் பானைகளில் பொங்கல் நடைபெறும். பால் பொங்கும் பொழுது, "பொங்கலோ பொங்கல்" என்னும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும். அப்பொழுது, பெண்கள் குரவை ஆடுவர்; பிறகு, "பூவும் புகையும் பொங்கலும்" கொண்டு இல்லுறை தெய்வத்தை வணங்குவர். அனைவரும் வயிறார உண்டு மகிழ்வர்.

– ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழின்பம்

| அறிந்த சொற்களை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கட்டங்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி 'லை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| கா | மா | வே | 1. ______ | 5. ______ |
| இ | லை | ஆ | 2. ______<br>3. ______ | 6. ______<br>7. ______ |
| சோ | பா | ஒ | 4. ______ | 8. ______ |

| தொடர் உருவாக்குதல் | செயல்பாடு – 6 |
|---|---|

உரிய சொற்களை நிரப்பித் தொடரை நிறைவு செய்க.

( மன்னர், மோதிரம், நீடுழி, வறுமைத்துன்பம், கலப்பை )

1. ______ பிடிக்கும் கை.
2. ______ நோக்கும் கை.
3. ______ தரித்தே அருளும் கை.
4. ______ நீக்கும் கை.
5. ______ காக்கும் கை.

| பழமொழி உருவாக்குதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திப் பழமொழிகளை உருவாக்குக.

( தை, அகல, பருவத்தே, ஆடிப்பட்டம், விதை, செய், பயிர், தேடி, ஆழ உழுதல், உழுவதனைவிட, வழி, நன்று, நோயற்ற, செல்வம், பிறந்தால், வாழ்வே, குறைவற்ற, பிறக்கும். )

1. தை பிறந்தால் வழி பிறக்கும்.
2. ______________
3. ______________
4. ______________
5. ______________

| பொருத்துக | செயல்பாடு – 8 |
|---|---|

யார், யாரிடம் கூறியது ?

| வ. எண் | கூற்று | கூறியவர், கேட்டவர் | |
|---|---|---|---|
| 1. | “ என்னால் இயலாது மன்னா ! ஆளை விடுங்கள்” | அ. | ஏழை, அக்பர் |
| 2. | “ இரவு முழுவதும் இவன் ஆற்றுநீரில் நின்றிருந்தானா ?” | ஆ. | பீர்பால், அக்பர் |
| 3. | “ மன்னா தாங்கள் இப்படிக் கூறலாமா ?” | இ. | அக்பர், காவலர் |
| 4. | “ அடுப்பு எங்கே இருக்கிறது ? சோற்றுப்பானை எங்கே இருக்கிறது ? எப்படி அடுப்பில் சூடு ஏறிச் சோறு வேகும் ?” | ஈ. | அக்பர், ஏழை |
| 5. | “ அப்படியென்றால் உனக்குப் பரிசுப்பொருள் இல்லை; நீ செல்லலாம்”. | உ. | அக்பர், பீர்பால் |

| பத்தி உருவாக்குதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வினைப் பயனிலைத் தொடர்களை உருவாக்கிப் பத்தியை நிறைவு செய்க.

(வளர்க்கின்றது, பாய்கின்றது, பொழிகின்றது, விழுகின்றது, நிறைகின்றது)

மலையிலே மழை ______________; அருவியாய் ______________; ஆறாகப் ______________ ; ஆற்றுநீர் வாய்க்கால்களிலும் ஏரிகளிலும் ______________ ; பயிர்பச்சைகளையும் செடிகொடிகளையும் ______________ .

| உருபுகளைப் பயன்படுத்துதல் | செயல்பாடு – 10 |
|---|---|

வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக.

1. முகிலன் படம் ________ பார்த்தான். ( ஐ ) = முகிலன் படத்தைப் பார்த்தான்.
2. படம் முகிலன்________ வரையப்பட்டது. ( ஆல் ) = ________________
3. முகிலன் கல்வி ________ சிறந்தவன். ( இல் ) = ________________
4. முகிலன்________ படம் சிறப்பானது. ( அது ) = ________________

| கண்டறிதல் | செயல்பாடு – 11 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துத் தடித்த சொற்களிலுள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதுக.

## புனல் விழா

காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் வாழ்ந்த சோழநாட்டு மக்கள், அவ்வாற்றில் புதுவெள்ளம் வரும்பொழுது புனல்விழாக் கொண்டாடி மகிழ்வர். விழா நடைபெறும் அன்று ஆற்றலும் ஆண்மையும் மிக்க இளைஞர் பலர் அவ்வாற்று நீரில் குதித்து எதிர்த்து நீந்தி ஆண்மைதோன்ற ஆடி மகிழ்வர். அவர்கள் அவ்வாறு ஆடி மகிழ்வதை அந்நாட்டு அரசன் முதல் அவ்வூர் மக்கள் வரை அனைவரும், ஆற்றின் கரைக்கண் அமைந்த அரண்மிக்க அழகிய இடங்களில் இருந்து கண்டு மகிழ்வர்.

இவ்வாறு புனல்விழா நடைபெறும் இடங்களில் ஒன்று காவிரிப்பூம்பட்டினத்திற்கு அண்மையில் உள்ள கழாஅர்ப் பெருந்துறை. இத்துறையில் பாயும் காவிரி ஆறு ஆற்றலோடு கரைகளை மோதி அழிக்கும். ஆற்றுப்புனல் மோதி மோதிக் கரைகளை அழிப்பினும், அழிவுறாமல் வானுற வளர்ந்த மருத மரங்கள் நிறைந்தது அத்துறை. இத்துறைக்குச் சேரநாட்டுத் தலைவன் ஆட்டனத்தி புனல் ஆடி புகழ் சேர்த்தான்.

– புலவர் கா. கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர்வரிசை

| அடைமொழி உருவாக்குதல் | செயல்பாடு – 12 |
|---|---|

கட்டத்தில் உள்ள சொற்களை உரிய முறையில் சேர்த்து அடைமொழிகளை உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1. | பூ | விழா | பூமாலை |
| 2. | கரு | சோறு | |
| 3. | புளி | சுடர் | |
| 4. | திரு | மாலை | |
| 5. | இரு | மலை | |
| 6. | மா | வண்டு | |

தமிழ்

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 13 |
|---|---|

நீர்வளமிக்கது நன்செய் நிலம். இந்நிலத்தில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்கள் விளையும். நீர்வளம் குறைந்த பகுதி புன்செய். இதனை வானம் பார்த்த பூமி என நம் வேளாண் மக்கள் கூறுவர். இந்நிலத்தில் விளையும் பயிர்கள் பருவமழையை நம்பியே இருக்கும். இந்நிலத்தில் கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, துவரை, கொள்ளு, காராமணி முதலிய பயிர்கள் விளையும்.

| தொடரை நிரப்புதல் | செயல்பாடு – 14 |
|---|---|

உரிய சொற்களைக் கொண்டு தொடரை நிறைவு செய்க.

( கை, உணவு, குரல், கூலி, உயிர், மதிப்பு, சொல், விடை)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பசித்தவனுக்கு | ________ | கொடு | மனிதனுக்கு | ________ | கொடு |
| உறவுக்குக் | ________ | கொடு | மானத்துக்கு | ________ | கொடு |
| உழைப்புக்குக் | ________ | கொடு | கவலைக்கு | ________ | கொடு |
| உரிமைக்குக் | ________ | கொடு | கவிதைக்குச் | ________ | கொடு |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. உரிய இணையைத் தேர்ந்தெடுக்க. 1 x 1 = 1

அ. பொங்கல் வழிபாடு – கம்பர்

ஆ. உழவின் சிறப்பு – ந. பிச்சமூர்த்தி

இ. தூரத்து ஒளி – க. கௌ. முத்தழகர்

2. ஏழைக்குப் பரிசு கிடைக்க பீர்பால் செய்த செயல் என்ன ? 1 x 1 = 1

அ. வேட்டை ஆ. சமையல் இ. வீதியுலா

3. விளி வேற்றுமை எது ? 1 x 1 = 1

அ. மூன்றாம் வேற்றுமை ஆ. எட்டாம் வேற்றுமை இ. நான்காம் வேற்றுமை

4. இனமுள்ள அடைமொழிகளை எடுத்தெழுதுக. 3 x 1 = 3

அ. ________ ( வெண்முகில், வெண்காக்கை)

ஆ. ________ (கருநிலவு, செந்தமிழ்)

இ. ________ (செங்கல், கருங்கதிரோன்)

5. கோடிட்ட இடத்தை நிரப்புக. 4 x 1 = 4

அ. அங்கக வேளாண்மையின் வேறுபெயர் ________ .

ஆ. பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்களைக் கலந்து செய்வது ________ .

இ. உலகில் தோன்றிய உயிர்கள்அனைத்துக்கும் முதல்வன்________ .

ஈ. பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு ________ எனப்படும்.

# சொல்

## பகாப்பதம், பகுபதம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். எல்லாரும் வந்துவிட்டார்களா?

சாந்தா : கண்ணன் இன்று வரவில்லை, ஐயா. நேற்று வயிற்றுவலியால் துடித்துவிட்டான். மருத்துவமனைக்குச் சென்றுவந்தபின் இல்லத்தில் ஓய்வில் இருக்கிறான்.

ஆசிரியர் : உடல்நலம் பேணுவதுதான் முதன்மையானது; மற்றவையெல்லாம் அதன்பின்னர்தான். சுவரில்லாமல் சித்திரம் ஏது? நலமாகி வரட்டும்.

மயில்வண்ணன் : முன் வகுப்பில் ஓரெழுத்துத் தனித்து நின்றும், ஒன்றனுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து நின்றும் பொருள் தந்தால், அது சொல் எனப்படும் என்று கூறினீர்கள், ஐயா.

மேலும், அதனைப் பெயர், வினை, இடை, உரியென வகைப் படுத்தினீர்கள். ஐயா, சென்ற வகுப்பில் கணக்காசிரியர் பகு எண், பகா எண் என எண்களை வகைப்படுத்திக் காட்டினார். அதனைப்போலத் தமிழ்ச்சொற்களிலும் உண்டா? எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், ஐயா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய் மயில்வண்ணா! கணக்கைப்போலவே தமிழிலும் சொற்களைப் பகுபதம், பகாப்பதம் என இருவகையாகப் பிரிக்கலாம்.

அன்பு : பதம் என்றால் என்ன, ஐயா?

ஆசிரியர் : பதம் என்றாலும் சொல் என்றாலும் ஒன்றே. மொழி, கிளவி என்பன அதன் வேறு பெயர்கள். ஓரெழுத்தானது தனித்து நின்று பொருள் தந்தால், அஃது ஓரெழுத்து ஒருமொழி எனப்படும். இவை நாற்பத்திரண்டு உள்ளன. சிலவற்றை இங்குக் கூறுகிறேன். (எ.கா.) தை, பை, கை, பூ, தீ, வை, தா, ஈ, கா .... முதலியன.

எழுத்துகள் பல தொடர்ந்து நின்று பொருள் தந்தால், அஃது எழுத்துத் தொடர்மொழி எனப்படும்.

(எ.கா.) நூல், எழுதுகோல், வீடு, மகன், சந்தை, மாடு...முதலியன.

இளவழகி : பகாப்பதம் என்றால் என்ன, ஐயா?

ஆசிரியர் : பகுத்தல் என்றால் பிரித்தல் என்பது பொருள். பகா என்றால் பிரிக்க இயலாதது என்பது பொருள். பிரிக்கவியலாத சொல் பகாப்பதம் எனப்படும். (எ.கா.) மண், கல், பொன் இவை பெயர்ப்பகாப்பதங்கள். நட, வா, போ, செய், நில் – இவை வினைப் பகாப்பதங்கள்.

மாணவர் : பகுபதம் பற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : பகுக்க இயலும் சொற்களைப் பகுபதம் என்பர். அவ்வாறு பகுக்கும்போது இரண்டுமுதல் ஆறு உறுப்புகளாக அச்சொல்லைப் பிரிக்கலாம். அவ்வுறுப்புகளின் பெயர்களாவன: பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

மாணவர் : சொற்களைக்கூடப் பிரிக்கலாம் என்பது பற்றியும் அச்சொற்களில் ஆறு உறுப்புகள் உள்ளன என்பன பற்றியும் அறிந்துகொண்டோம், ஐயா. மிக்க நன்றி.

பயிற்சி : 1. பின்வரும் தொடரிலுள்ள பகாப்பதங்களைத் தேர்ந்தெழுதுக.

பாரதி மலர் தூவி இறைவனை வழிபட்டாள்.

2. பின்வரும் தொடரிலுள்ள பகுபதங்களைத் தேர்ந்தெழுதுக.

அன்பரசி பாட்டுப் பாடிப் பரிசு பெற்றாள்.

## மாதிரி வினாக்கள்

### சிறுவினாக்கள்

1. பகாப்பதம் என்றால் என்ன?
2. பகுபதம் என்றால் என்ன?
3. ஓரெழுத்து ஒருமொழிக்குச் சான்றுகள் ஐந்து தருக.
4. பகுபதத்தின் உறுப்புகள் யாவை?

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) படித்தல் திறன்

பின்வரும் பாடலை உரிய ஓசையுடன் படித்துக் காட்டுக.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை;

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொல் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

– பாரதியார்

இ) எழுதுதல் திறன்

உரைநடைப்பகுதியைச் சுருக்கி வரையும் திறன் பெறுதல்

(எ.கா.) மக்களாய்ப் பிறந்தவர் அறிவைத் தேடிப்பெறுதல் வேண்டும். அறிஞர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தேடிச்சென்று அவர்களிடத்திலிருந்து அறிவுச்செல்வத்தைப் பெற்று உயர்தல் வேண்டும். அறிஞர்கள் எழுதிய நூல்கள் உலகின் பல்வேறு மொழிகளில் இருக்கலாம்; உலகின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கப்பெறலாம். அப்படிப்பட்ட நூல்களை எல்லாம் வரவழைத்து அவற்றைப் படித்துப் பாதுகாத்தல் வேண்டும். அத்தகைய நூல்களின் வாயிலாக அறிவுச்செல்வத்தைப் பெற்று உயர்தல் வேண்டும்.

உரைநடைப்பகுதியின் சுருக்கம்

மக்களாய்ப் பிறந்தவர்கள் அறிஞர்களைத் தேடிச்சென்று அறிவைப் பெறுதல் வேண்டும். பல்வேறு மொழிகளில் அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படித்து அறிவுச்செல்வத்தைப் பெற்று உயர்தல் வேண்டும்.

பயிற்சி : கீழுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுக.

உலகில் கோடிக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. இவ்வுயிர்களுள் மனிதன் மட்டுமே தனது சிந்தனை ஆற்றலால் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகிறான். மனிதன், தான்பெற்ற அனுபவங்களைப் பிறர்க்கு எடுத்துரைக்கவும், பிறர் பெற்ற அனுபவங்களைத் தான் அறிவதற்கும் கருவியாக விளங்குவது மொழியே.

மனிதன் நாகரிகம் அடைவதற்கு முதற் கருவியாக விளங்கியது, மொழியே. மொழியின் சீரிய பயன்பாடு ஒருவரோடு மற்றொருவர் தொடர்புகொள்வதே. இத்தொடர்பு சீராகவும் கருத்து மாறுபாடு ஏற்படாத வண்ணமும் அமைதல் வேண்டும்.

ஈ) செயல் திட்டம் : நீ விரும்பும் விளையாட்டு வீரரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்க.

## மொழித்திறன் பயிற்சி

அ) சொற்றொடர் வகைகள்

சொற்றொடர் உணர்த்தும் பொருளைக்கொண்டு செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத்தொடர், உணர்ச்சித்தொடர் என வகைப்படுத்தலாம்.

நேற்று, எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. – செய்தித்தொடர்.

உன் இருப்பிடம் எங்குள்ளது? – வினாத்தொடர்

இளமையில் கல். – கட்டளைத்தொடர்

என்னே, இந்த ஓவியத்தின் அழகு! – உணர்ச்சித்தொடர்

கீழுள்ள சொற்றொடரை வகைப்படுத்துக.

1. காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராடினார்.
2. உன்னிடம் திருக்குறள் புத்தகம் இருக்கிறதா?
3. தொல்காப்பியன் வீட்டுக்கு வந்திலன்.
4. என்னே, தாஜ்மகாலின் அழகு!
5. வீட்டைத் தூய்மையாக வைத்திரு.

சொற்றொடர் மாற்றங்கள்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்.

(எ.கா.) முயன்றால் முடியாதது உண்டோ? இவ்வினாத்தொடரை

முயன்றால் அனைத்தும் முடியும், எனச் செய்தித்தொடராக்கலாம்.

நாள்தோறும் உடற்பயிற்சி செய். – கட்டளைத்தொடர்

நாள்தோறும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். – செய்தித்தொடர்.

பயிற்சி : கீழுள்ள சொற்றொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. மாற்றுத்திறனாளியரை மதித்தல் வேண்டும். (கட்டளைத் தொடராக்குக.)
2. உழைப்பின்றி ஊதியம் இல்லை. (உடன்பாட்டுத் தொடராக்குக.)
3. நான் திருக்குறள் படித்தேன். (வினாத்தொடராக்குக.)
4. அந்தோ, குழந்தை கீழே விழுந்துவிட்டதே! (செய்தித் தொடராக்குக.)
5. உன் கையெழுத்து மிகவும் அழகாக உள்ளது. (உணர்ச்சித் தொடராக்குக.)

ஆ) தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுதல்

மரபுத்தொடர், பழமொழித்தொடர், உவமைத்தொடர் முதலிய தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுவதன்மூலம் கருத்தை எளிதில் விளங்கச் செய்யலாம்.

(எ.கா.) தாய், தன் குழந்தையைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தாள்.

அண்ணா, தங்குதடையின்றிப் பேசும் ஆற்றல் உடையவர்.

பயிற்சி : கீழுள்ள தொடர்களைச் சொற்றொடரில் அமைத்தெழுதுக.

1. பழக்கவழக்கம்
2. தொன்றுதொட்டு
3. ஊணுறக்கமின்றி
4. அல்லும்பகலும்
5. பேரும்புகழும்
6. மேடும்பள்ளமும்

இ) தமிழெண்களை வரிசையில் அமைக்க.

க, ௩, ௬, ௫, எ, அ, உ, ௪, க௦, ௯

ஈ) கட்டுரை எழுதுதல்

உங்கள் ஊர் திருவிழாவில் நடைபெற்ற விளையாட்டுகள்.

உ) கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

பின்னல், பாட்டு, பீடம், பட்டு, பூட்டு, பையன், பேரன், பௌவம், போர், பெண், புளி, பொன், பூனை, பால், பிட்டு, பனை, பீர்க்கம், பெட்டி, பானை.

## பண்பு

### மதிப்பளித்தல்

சண்முகம் தாத்தா வீடு, எது என்று கேட்டால் சிறு குழந்தையும் அடையாளம் காட்டும். அந்த அளவுக்கு அனைவருக்கும் தெரிந்தவர் அவர். யாரைப் பார்த்தாலும் வாங்க, போங்க என மரியாதையாகத்தான் பேசுவார். ஒரு வயதுடைய குழந்தையோ தொண்ணூறு வயதுடைய முதியவரோ யாராக இருந்தாலும் அவர்களுக்கு மரியாதை தருவார்.

கூடிப்பேசுவோம் :

1. சண்முகம் தாத்தா, தன்னைவிட வயதில் இளையவருக்கு மரியாதை கொடுக்கிறார், ஏன் ?
2. உங்களைவிட வயதில் சிறியவர்களை, நீங்கள் எவ்வாறு அழைக்கிறீர்கள்?

## வாழ்க்கைத்திறன்

### மன எழுச்சிகளை எதிர்கொள்ளல்

நம்முடைய உணர்வு, எண்ணம் முதலியவற்றை உரிய முறையிலும் உரிய அளவிலும் வெளிப்படுத்த இத்திறன் உதவுகிறது. எல்லா மனவெழுச்சிகளும் நல்லனவும் அல்ல; தீயனவும் அல்ல. அவற்றை எவ்வாறு வெளிப்படுத்துகிறோம் என்பதே இன்றியமையாதது. மட்டைப்பந்து ஆட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ‘அ’ அணி சார்பாக ஆடும் வெற்றிச்செல்வன் நன்றாக ஆடவில்லையென்று, அந்த அணியின் தலைவன் தமிழ்ச்செல்வன் குறை சொல்கிறான். இருவருக்குள்ளும் சண்டை ஏற்படுகிறது. சினத்தைக் கட்டுப்படுத்த இயலாத தமிழ்ச்செல்வன், வெற்றிச்செல்வனைஅடிக்கக் கை ஓங்குகிறான். தமிழ்ச்செல்வன் செய்தது சரியா ?

சினம் வந்தால் கட்டுப்படுத்துவது எவ்வாறு ?

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். – குறள், 305

## மதிப்புக்கல்வி

### பரிவு

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெருந்தகையாளருள் மு.வரதராசனாரும் ஒருவராவார். ‘வலக்கை தருவது இடக்கைக்குத் தெரியக் கூடாது’ என்பது முதுமொழி. அதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் மு.வரதராசனார். ஒருமுறை கல்லூரிக் கட்டணம், விடுதிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் போன்றவற்றைச் செலுத்த இயலாமல் மாணவர் சிலர் துன்பப்படுவதனைக் கண்டார். அவர்களுக்குத் தேவையான அனைத்துக் கட்டணங்களையும் தாமே கட்டினார். அதுமட்டுமன்றித் தமது வீட்டையே விடுதியாக்கி, மாணவர் தங்கிப் படிக்கவும் வழிசெய்தார். இயலாதோர்க்கு இரங்குவதும் உதவுவதும் பரிவு ஆகும்.

இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
– ஔவையார்

## வளரறி செயல்பாடுகள்

| படித்தல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழுள்ள உரைப்பத்தியைக் குரலேற்ற இறக்கத்துடன் பொருளுணர்ச்சிக்கேற்றவாறு படிக்க.

### தமிழர்கள் மாவீரர்கள்

பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன்; பிறர்க்குப் புறமுதுகுகாட்டி ஓடாதவன் தமிழன்; முடியுடை வேந்தரின் சந்ததியில் வந்தவன் தமிழன்; பல தூர அயல்நாடுகளோடு சிறப்பாக வாணிகம் நடத்தியவன் தமிழன்; கடல் கடந்தவன் தமிழன்; கடல் கடந்து சென்று பர்மா தேசத்தைக் கைப்பற்றி ஆண்டவன் தமிழன்.

இமயத்தில் புலி பொறித்தவன் தமிழன்; கடாரத்தை வென்றவன் தமிழன்; ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்; இலக்கியச் சுவையைக் கண்டவன் தமிழன்; எந்நாடும் வியக்கும் வீரன் தமிழன்; ஏறு நடையுடையான் தமிழன்; இன்னல் கண்டும் புன்னகை புரிவான் தமிழன்; தன்னலங் கருதாது உழைத்தான் தமிழன்; சூதும்வாதும் விருப்பும்வெறுப்பும் அறியான் தமிழன்; மானமே பெரிதென மதித்தான் தமிழன்; கப்பலோட்டினான் தமிழன்; எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தான் தமிழன்.

–அறிஞர் அண்ணா

| சொற்பொருள் அறிதல் | செயல்பாடு – 2 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் பொருளறிந்து, அவற்றைக்கொண்டு கருத்துரையை நிறைவு செய்க.

( கசடு, உவப்ப, விழுச்செல்வம், ஏமாப்பு, மாந்தர்)

கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாத ____________ ஆகும். இப்பிறவிக்கும் மறுபிறவிக்கும் மக்களுக்கு ____________த் தரக் கூடியது. இதனால், கற்போரின் மனக் ____________ நீங்கும். அத்தகைய கல்விச் செல்வத்தை ____________ அனைவரும் பெறுதல் வேண்டும். ஏனெனில், கல்வி கற்ற மக்கள்தாம் தமக்குள் எத்தகைய வேறுபாடுமின்றி ____________க் கூடி ஒற்றுமையுடன் வாழ்வர்.

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழுள்ள சொற்களுள் பெயர்ப்பகாப்பத, வினைப்பகாப்பதச் சொற்களைக் கண்டறிந்து வகைப்படுத்துக.

(மணி, கொடு, நிலம், பேசு, மலர், கண், நில், ஓடு, தலை, தடு, மரம், பாடு )

| வ. எண் | பெயர்ப்பகாப்பதம் | வினைப்பகாப்பதம் |
|---|---|---|
| 1. | மணி | கொடு |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |

தமிழ்

| சொல் உருவாக்குதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கட்டத்திலுள்ள எழுத்துகளைக்கொண்டு பகாப்பதச் சொற்களை வட்டமிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ணி | அ | டி | ____________ | ____________ |
| ண் | ஆ | டு | ந | ____________ | ____________ |
| ம | று | கொ | னி | ____________ | ____________ |
| லா | உ | டை | ப | ____________ | ____________ |
| | | | | ____________ | ____________ |

| எழுதுதல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

சொற்களில் உள்ள மெய் எழுத்துகளை நீக்கிப் பகாப்பதச் சொற்களை உருவாக்குக.

| | |
|---|---|
| 1. சட்டை | சடை |
| 2. பட்டு | |
| 3. பட்டி | |
| 4. எட்டு | |
| 5. நண்டு | |
| 6. வண்டு | |
| 7. தண்டு | |
| 8. செல்வி | |
| 9. கன்னி | |
| 10. பாக்கு | |

| ஒரெழுத்து ஒரு மொழிகளை அறிதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் குறிக்கும் ஒரெழுத்து ஒரு மொழிகளை எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| 1. அரண் | சோ |
| 2. அரசன் | |
| 3. அம்பு | |
| 4. தலைவன் | |
| 5. நெருப்பு | |
| 6. மலர் | |

(ஏ, தீ, கோ, பூ, ஐ, சோ)

| பொருள் அறிதல் | செயல்பாடு – 7 |
|---|---|

அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளை உரிய கட்டத்தில் நிரப்புக.

| | | |
|---|---|---|
| 1 | கா | சோலை |
| 2 | தா | |
| 3 | தை | |
| 4 | பா | |
| 5 | வா | |
| 6 | ஆ | |

( பாடல், சோலை, வருக, பசு, கொடு, திங்களின் பெயர் )

| கொச்சைச் சொற்களைத் திருத்துதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்துகளிலுள்ள கொச்சைச்சொற்களைத் திருத்தி எழுதுக.

( கண்விழித்து, வியர்வை, ஆற்றங்கரை, பிட்டு விற்று, வெண்கலம், வயிற்றுப்பிழைப்பு,வேண்டும் )

ஆத்தங்கரைக்கு மேற்கே உள்ளது அந்த அழகிய சிற்றூர். அவ்வூரில் தனித்து வாழும் இசக்கிக் கிழவிக்கு உதவுவதற்கு யாரும் இல்லை. முதுமையினால் உடலும் நடையும் தளர்ந்து போனவள். அதற்காக யாரிடமும் கையேந்தி வாழ விரும்பாதவள். வேர்வை சிந்தி உழைத்து உண்ண வேண்டும் என்று எண்ணுபவள். இதற்காகப் புட்டு வித்துத் தன் வயித்துப்பிழைப்பைத் தேடிக் கொண்டாள். வெங்கலப் பாத்திரத்தில் வைத்திருக்கும் அவள் சமைத்த புட்டை உண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேணும். ஊர்த்திருவிழா நாள்களில் புட்டுக்காகக் கூட்டம் அலை மோதும். அந்நாள்களில் இரவெல்லாம் கண் முழித்துப் புட்டு சமைப்பதற்கான வேலைகளைச் செய்வாள்.

| மயங்கொலி எழுத்துகளைஅறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

உரிய எழுத்துகளை நிரப்பிப் பழமொழிகளை உருவாக்குக.

இ _____க்கும் காலம் வந்தால் பிறக்கும் ஈசலுக்கும் சி _____ கு. ( று, ற )

எ _____ ம்புக்குத் தெரியாத க _____ ம்பு இல்லை. ( று, ரு )

அ _____ ண்மனை உறவைக்காட்டிலும் அடுக்களை உ_____ வு மேல். ( ற, ர )

| எதிர்ப் பால் சொற்களை அறிதல் | செயல்பாடு – 10 |
|---|---|

வண்ண எழுத்துள்ள சொற்களுக்கு உரிய எதிர்ப் பால் சொற்களை அறிந்து தொடர்களை நிறைவு செய்க.

( பேடும், பாணனும், ஆயனும், எயிற்றியும், ஐயன், பெண்ணும்)

1. ஆணும் பெண்ணும் சமம்.
2. சேவலும் ____________ பறவைகள்.
3. ____________ ஆய்ச்சியும் முல்லை நில மக்கள்.
4. எயினனும் ____________ பாலை நில மக்கள்.
5. ____________ பாடினியும் சங்ககாலத்துப் புலவர்கள்.
6. தந்தை தாயை, ____________ ஐயை என்பர்.

| சொல் விளையாட்டு | செயல்பாடு – 11 |
|---|---|

## குறுக்கெழுத்துப்போட்டி

கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | |
| 3 | | | | 4 | | |
| | 5 | | | | | |
| 6 | | | | | | 7 |
| | | | | | 8 | |

### இடமிருந்து வலம்

1. சிறுமியர் கற்களைப் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு (6)
3. ஏறுதழுவுதல் நடைபெறும் நிலம் (3)
4. விளையாட்டில் வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கப்படுவது (4)
5. ஊர்த்திருவிழாக் காலங்களில் பானையை உறியில் கட்டி அடித்து ஆடும் விளையாட்டு (4)
6. போர் நடைபெறும் இடத்தைப் போர்க் ____________ என்பர் (3)

### வலமிருந்து இடம்

7. ‘இளையோர்’ என்பதன் எதிர்ச்சொல் (4)
8. பண்டைய மகளிர் நண்டு, ஆமை ஆகியவற்றைப் பயன்படுத்தி விளையாடும் ஆட்டம் (6)

### மேலிருந்து கீழ்

1. மதுரையில் யானைப்போர் நடைபெற்ற மைதானம் (4)
2. பாடிக்கொண்டே விளையாடும் தமிழரின் வீர விளையாட்டு (3)

### கீழிருந்து மேல்

7. ஏறுதழுவுதலின்போது முழக்கப்படும் போர் இசைக்கருவி (3)

| பாடல் எழுதுதல் | செயல்பாடு – 12 |
|---|---|

கோடிட்ட இடத்தில் 'கலை' என்னும் சொல்லை நிரப்பிப் பாடலை நிறைவு செய்க.

சிலம்பக்கலை நமது ________
சிறுவருக்கும் உரிய ________

உலகிலுள்ளோர் போற்றும் ________
உயர்ந்தகலை சிலம்பக் ________

தற்காப்பிற்கு ஏற்ற ________
தமிழர் கலை சிலம்பக் ________

கற்பதற்கு உரிய ________
காலமெல்லாம் வாழும் ________

தொன்றுதொட்டு இருக்கும் ________
துணிவுடைமை வளர்க்கும் ________

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. நிரப்புக.** 3 x 1 = 3

அ. சிவபெருமான் விரும்பிச் சூடும் பூ ________

ஆ. தமிழரின் வீர விளையாட்டு ________

இ. விளையாட்டின் அடிப்படை நோக்கம் ________

**2. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

அ. பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை

அ. 4 ஆ. 6 இ. 8 ஈ. 10

ஆ. கீழுள்ளவற்றில் எழுத்துத்தொடர் மொழி எது ?

அ. பூ ஆ. கை இ. தை ஈ. வீடு

இ. 'சேவல்' என்பதன் எதிர்ப் பால் பெயர் என்ன ?

அ. பேடு ஆ. குட்டி இ. கன்று ஈ. குருளை

ஈ. 'வேர்வை' என்பதன் திருந்திய சொல்

அ. வேற்வை ஆ. வேர்த்தல் இ. வியர்வை ஈ. வியற்வை

உ. அரசனைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி ________

அ. பூ ஆ. கோ இ. கா ஈ. ஆ

**4. குறட்பாவை நிறைவு செய்க.** 1 x 2 = 2

தொட்டனைத்து ஊறும் ________ மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் ________ .

# அணியிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், அனைவரும் உட்காருங்கள். எல்லாரும் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடினீர்களா?

முத்தழகு : ஆம், ஐயா. பொங்கலன்று வீட்டைத் தூய்மை செய்து, நாங்களும் புத்தாடை புனைந்து, பொங்கலிட்டுக் கதிரவனை வணங்கி வழிபட்டு விருந்துண்டோம்.

ஆசிரியர் : எவ்வாறு நம்மை நாம் புத்தாடைகளாலும் அணிகலன்களாலும் அழகு செய்து கொள்கிறோமோ, அதுபோலப் புலவர்களும் தாங்கள் எழுதும் பாடல்களைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவர் என்பதனை அறிந்திருக்கிறீர்களா?

பூவிழி : அப்படியா, ஐயா! பாடல்களுக்கு அணிகளா? அதுபற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஆம். அணி என்றால் அழகு என்பது பொருள். புலவர்கள் செய்யுளை அழகுபடுத்துவதனை, 'அணி' என்றே வழங்கினர். அவ்வாறான அணிகள், 'இயல்பு நவிற்சி', ' உயர்வு நவிற்சி' முதலியன.

செழியன் : இயல்பு நவிற்சியணி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறு கூறுவது இயல்பு நவிற்சியணி எனப்படும்.

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவார்.

இப்பாடலில் தயிர் கடையும் ஆய மங்கையரின் தன்மை உள்ளவாறே அழகுபடச் சொல்லப்படுவதனைக் காணலாம்.

மங்கை : உயர்வுநவிற்சியணி பற்றியும் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஒருபொருளின் தன்மையை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி எனப்படும். உயரமான மலையை 'விண்ணைத் தொடும் மலை' என வருணித்தல்; உயரமான வைக்கோல் போரை 'வானை முட்டும் வைக்கோல்போர்' என உயர்த்திக் கூறுதல்.

மாணவர் : நன்றி, ஐயா.

பயிற்சி

கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள அணிகளை எடுத்தெழுதுக.

1. தமிழ்மொழி இனிமையானது. ______________
2. வான்புகழ்கொண்ட தமிழ்நாடு. ______________
3. தென்னை மரம் உயரமானது. ______________

## மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. அணி என்றால் என்ன?
2. இயல்பு நவிற்சியணி என்றால் என்ன? விளக்கம் தருக.
3. உயர்வு நவிற்சியணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

நீ கண்டுகளித்த இன்பச் சுற்றுலாவைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) எழுதுதல் திறன் : ஒரு கதையை உரையாடலாகவோ செய்தியாகவோ நாடகமாகவோ மாற்றி எழுதுதல்.

ஒரு நிகழ்வைக் கதையாகவோ நாடகமாகவோ மாற்றி எழுதுவதனால் மொழியாற்றலும் படைப்பாற்றலும் பெருகும்.

(எ.கா.) நரியின் சாயம் வெளுத்த கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தக் கதையை உரையாடலாக எழுதுவோம்.

சிங்கம் : யார் நீ, உன்னை இதற்குமுன் நான் பார்த்ததில்லையே?

நரி : நான், இறைவனால் அனுப்பப்பட்ட இந்தக் காட்டின் அரசன்.

சிங்கம் : நீ சொல்வது உண்மைதானா?

நரி : ஆமாம், உங்களை யெல்லாம் ஆளவந்திருக்கும் அரசன். என் ஆளுமைக்கு நீங்கள் எல்லாம் அடிபணிதல் வேண்டும்.

சிங்கம் : அப்படியே செய்கிறேன்.

நரி : எனக்குப் பசிக்கிறது. உணவுக்கு உடனே ஏற்பாடு செய்.

சிங்கம் : இப்பொழுதே செய்கிறேன்.

நாள்கள் நகர்ந்தன. ஒருநாள் மழைபெய்தபொழுது காட்டிலிருந்த நரிகள் ஊளையிட்டன.

அதனைக்கேட்ட நரியரசன், தன் இனப்பற்று மற்றும் பழக்கம் காரணமாகத் தானும் ஊளையிடத் தொடங்கியது. நரி ஊளையிட்டதனைக் கேட்ட சிங்கம், நரியை அடையாளங் கண்டு துரத்தியது. நரி, தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடி மறைந்தது.

பயிற்சி : தமிழுக்குத் தலைகொடுத்த குமணன் கதையை உங்கள் ஆசிரியரிடம் கேட்டறிந்து, அதனை உரையாடல் வடிவில் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) நிறுத்தக்குறிகள்

செய்யுளையோ உரைநடையையோ படிக்கும்போது, பொருளைத் தெளிவாகப் புரிந்து படிக்கவும், உரிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் பயன்படுத்துவது நிறுத்தக்குறிகளாகும். நிறுத்தக்குறிகளுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**1. முற்றுப்புள்ளி ( . )**

ஒரு தொடர் முற்றுப்பெற்றதனைக் குறிக்க முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) கண்ணன் பள்ளிக்குச் சென்றான்.

**2. காற்புள்ளி ( , )**

பல பொருள்களைத் தொடர்ந்து சொல்லும்போது, ஒவ்வொன்றின் பின்னும் காற்புள்ளி இடுதல் வேண்டும். (கடைசிச் சொல்லுக்குப்பின் காற்புள்ளி தேவையில்லை)

(எ.கா.) மா, பலா, வாழை முக்கனிகள்.

**3. அரைப்புள்ளி ( ; )**

ஓர் எழுவாய், பல பயனிலைகளைக் ( வினைமுற்றுகளை ) கொண்டு முடியும்பொழுது, ஒவ்வொரு பயனிலைக்குப் பின்னரும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) சிந்தனைச்செல்வன் நன்றாகப் படித்தான்; முதல் மதிப்பெண் பெற்றான்; பரிசு கிடைத்தது.

**4. வினாக்குறி ( ? )**

ஒரு வினாத்தொடரின் இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும்.

(எ.கா.) பொற்கொடி பாடம் படித்துவிட்டாயா ?

**5. உணர்ச்சிக்குறி ( ! )**

ஒரு செய்தியை உணர்ச்சியாகக் கூறும்போது உணர்ச்சிக் குறியிடுதல் வேண்டும்.

(எ.கா.) என்னே, இப்பூவின் மணம்!

**6. ஒற்றை மேற்கோள் குறி (‘...’)**

ஓர் எழுத்தையோ சொல்லையோ சொற்றொடரையோ தனியே குறிக்கும் இடத்திலும், ஒரு சொற்றொடரில் நூலின் பெயர், பழமொழி முதலியன வருமிடத்திலும் ஒற்றை மேற்கோள் குறி இடுதல் வேண்டும். ‘எழில்’ என்றால் ‘அழகு’ என்பது பொருள்.

பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' மிகச் சிறந்த படைப்பு. 'சுத்தம் சோறு போடும்' என்பது பழமொழி. வண்ணமிடும்போதும், தடித்த எழுத்துகளில் எழுதும்போதும், அடிக்கோடு இடும்போதும் இக்குறி இடத் தேவையில்லை.

7. இரட்டை மேற்கோள் குறி ( "...") :

ஒருவர் கூறியதனை நேர்கூற்றாகக் கூறும்போதும், ஒரு தொடரை மேற்கோளாகக் கூறும்போதும் இரட்டை மேற்கோள் குறியிடுதல் வேண்டும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றார் ஔவையார்.

பயிற்சி

பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1. உன் பெயர் என்ன
2. என்னே இமயமலையின் உயரம்
3. இயல் இசை நாடகம் முத்தமிழாகும்
4. எழிலி என்னும் சொல் மேகம் என்னும் பொருளில் வரும்
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது பழமொழி
6. இயல் இசை நாடகம் எனத் தமிழ் மூவகைப்படும்
7. திருக்குறளை இயற்றியவர் யார்
8. தமிழ்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி
9. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ
10. அந்தோ இஃது என்ன கொடுமை

ஆ) தமிழெண்களை நினைவு கூர்க.

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | ____ | 6 | ____ |
| 2 | ____ | 7 | ____ |
| 3 | ____ | 8 | ____ |
| 4 | ____ | 9 | ____ |
| 5 | ____ | 10 | ____ |

இ) கட்டுரை எழுதுதல் : சுற்றுப்புறத் தூய்மை

ஈ) அகரவரிசையில் அமைத்தல்

கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

மீன், மண், முன், மான், மூடி, மையல், மெல்ல, மௌவல், மோர், மேடு, மொட்டு, மிளகு.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்

## குற்றியலுகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன் வகுப்பில் சார்பெழுத்துகள் பற்றியும், அவற்றின் வகைகள் பற்றியும் கற்றிருக்கிறீர்கள். இப்பொழுது குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம் ஆகியன குறித்துக் கற்றுக் கொள்ளவிருக்கிறீர்கள்.

மாணவர் : அம்மா, குற்றியலுகரம் என்றால் என்ன ?

ஆசிரியர் : குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். குறுமை என்றால் குறுகிய என்பது பொருள். இயல் என்றால் ஓசை. உகரம் என்றால் உ என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம்.

மாணவர் : குறுகிய ஓசையா, அப்படியென்றால் என்ன அம்மா ?

ஆசிரியர் : ஒவ்வோர் எழுத்துக்கும் ஒலிக்கின்ற காலஅளவு உண்டு. குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, மெய்க்கு அரை மாத்திரை என்னும் கால அளவில்தான் எழுத்துகளை ஒலித்தல் வேண்டும். உகரம் குறிலானதனால் ஒரு மாத்திரைக் கால அளவே ஒலித்தல் வேண்டும். ஆனால், அஃது ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் சில சொற்களில் அரை மாத்திரைக் கால அளவே ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பதனைத்தான் குற்றியலுகரம் என இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர் : அஃது, எங்கு எப்படிக் குறையும் ? அம்மா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டீர்கள். சில சொற்களுக்கு இறுதியில் ஆறு வல்லினமெய் எழுத்துகளுடன் உகரம் சேர்ந்து (க்+உ= கு; ச் + உ = சு; ட் + உ = டு; த் + உ = து; ப் + உ = பு; ற் + உ = று) வரும்போது, அந்த உகரம் அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். கு, சு, டு, து, பு, று ஆகிய இந்த ஆறு எழுத்துகள் சொல்லின் இறுதியில் வருமாறு சில சொற்களைச் சொல்லுங்கள்.

மாணவர் : பசு, காடு, பந்து.

ஆசிரியர் : நான் சொன்னதுபோல் சு, டு, து ஆகிய எழுத்துகள் சொல்லின் இறுதியில் வந்துள்ளன. ஆனால், பசு என்பதில் ஒலிக்கும் சு வையும், காசு என்பதில் ஒலிக்கும் சு வையும், அச்சொற்களோடு சேர்த்து ஒலித்துக்கேளுங்கள். ஏதேனும் ஒலிவேறுபாடு தெரிகிறதா ?

தமிழ்

மாணவர் : அவ்வளவாகத் தெரியவில்லையே, அம்மா.

ஆசிரியர் : பசு எனச் சொல்லும்பொழுது, அச்சொல்லிலுள்ள 'சு' ஒலியானது ஒரு மாத்திரை அளவு ஒலிக்கிறது. காசு என்னும் சொல்லை ஒலிக்கும்பொழுது, அச்சொல்லிலுள்ள 'சு' ஒலி அதற்குரிய ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் குறைந்து ஒலிப்பதனை உற்றுக்கேட்டால், ஒலிவேறுபாட்டை அறிவீர்கள். இப்பொழுது இருசொற்களையும் ஒலித்துக்கேளுங்கள். ஒலிவேறுபாட்டை உங்களால் உணர முடிகிறதா?

மாணவர் : ஆமாம், அம்மா. குற்றியலுகரங்கள் இவ்வாறு எங்கெங்கே குறைந்து ஒலிக்கும் ?

ஆசிரியர் : கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போதும், பல எழுத்துகளைச்சார்ந்து சொல்லின் இறுதியில் வரும்போதும் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம், குற்றியலுகரம் எனப்படும். சொல்லின் ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக்கொண்டு அதனை அறுவகையாகப் பிரிப்பர்.

மாணவர் : எப்படியம்மா...?

ஆசிரியர் : நாகு, காசு, ஆடு, மாது, கோபு, ஆறு – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த உகரம் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வந்துள்ளது. இவ்வெழுத்துகளுக்குமுன் என்னென்ன எழுத்துகள் உள்ளன ?

மாணவர் : உயிர்மெய் நெட்டெழுத்துகள் நான்கும், உயிர் நெட்டெழுத்துகள் இரண்டும் வந்துள்ளன, அம்மா.

ஆசிரியர் : நல்லது. இவ்வாறு உயிர்நெடில், உயிர்மெய் நெட்டெழுத்துகளை அடுத்து வரும் உகரமேறிய வல்லின எழுத்துகள் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

மாணவர் : நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது தெளிவாக விளங்குகிறது, அம்மா.

ஆசிரியர் : எஃகு, கஃசு, அஃது. இந்தச் சொற்களை ஒலித்துப் பாருங்கள். கு, சு, து என்னும் வல்லின மெய்கள்மேல் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தைத் (ஃ) தொடர்ந்து வந்துள்ளது. அதனால், இது ....

மாணவர் : ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்தானே அம்மா.

ஆசிரியர் : நன்று. கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள அழகு, அரசு, பண்பாடு, உனது, உருபு, பாலாறு – இச்சொற்களைப் படித்துப் பாருங்கள். வல்லின மெய்களை ஊர்ந்த உகர எழுத்துகள் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வந்துள்ளன. அவற்றுக்கு முன் என்னென்ன எழுத்துகள் வந்துள்ளன ?

மாணவர் : உயிர்மெய் எழுத்துகள் வந்துள்ளன, அம்மா.

ஆசிரியர் : இவ்விடத்தில் அவற்றை உயிர்மெய்யெழுத்துகள் எனச் சொல்லக் கூடாது. ழு = ழ் + அ; ர = ர் + அ; பா = ப் + ஆ எனப் பிரித்துப் பார்த்தல் வேண்டும். இப்போது சொல்லுங்கள்.

மாணவர் : உயிர்எழுத்துகள் வருகின்றன. அதனால், உயிர்த்தொடர்க் குற்றிய லுகரம்தானே அம்மா. ஆடு – என வந்தால் நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்றீர்கள். பாலாறு – இங்கும் 'று' என்னும் எழுத்துக்கு முன் லா வருகிறதே. இதனையும் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனச் சொல்லாமல், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனச் சொல்கிறீர்களே!

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய்! நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளை ஈற்றில்கொண்டு ஏடு, காசு என ஈரெழுத்துச் சொல்லாகவே வரும். உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளுக்குமுன் இரண்டனுக்கு மேற்பட்ட எழுத்துகளைப்பெற்று வரும். ஈற்றயல் எழுத்து (அரசு, பாலாறு) உயிர்மெய்க் குறிலாகவோ நெடிலாகவோ இருக்கும். என்ன புரிகிறதா ?

மாணவர் : நன்கு விளங்கிற்று, அம்மா.

ஆசிரியர் : கக்கு, கச்சு, பட்டு – இச்சொற்களைப் பாருங்கள். கு, சு, டு ஆகிய எழுத்துகளுக்குமுன், வல்லின மெய்யெழுத்துகள் வந்துள்ளன. அதனால்...

மாணவர் : வல்லினத்தொடர்க் குற்றியலுகரம்தானே, அம்மா.

ஆசிரியர் : அழகாகச் சொன்னாய்! இதனைச் சுருக்கமாக வன்றொடர்க் குற்றியலுகரம் எனக் குறிப்பிடுவர். சங்கு, மஞ்சு, நண்டு, சந்து – இச்சொற்களைப் படித்துப் பாருங்கள்.

மாணவர் : இவை மென்றொடர்க் குற்றியலுகரந்தானே, அம்மா.

ஆசிரியர் : ஆம். ஐயமே வேண்டாம். கொய்து, சார்பு, மூழ்கு... இச்சொற்கள் எவ்வகைக் குற்றியலுகரம் எனக் கூறுங்கள்.

மாணவர் : இடைத்தொடர்க் குற்றியலுகரம்தானே, அம்மா.

ஆசிரியர் : அருமையாகச் சொன்னீர்கள். இவ்வாறாக, வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த உகரம் சொல்லின் இறுதியில் நெடில் பக்கத்திலும், பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது, அது தனக்குரிய மாத்திரை யிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும். இது, தன் அயலெழுத்தை நோக்க, 1. நெடில் தொடர்க் குற்றியலுகரம், 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், 4. வன்றொடர்க் குற்றியலுகரம், 5. மென்றொடர்க் குற்றியலுகரம், 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் என அறுவகைப்படும்.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

நினைவில் கொள்க.

1. கு, சு, டு, து, பு, று என்பன வல்லினமெய்களின்மேல் உகரம் ஊர்ந்து வரும் எழுத்துகள்.
2. குற்றியலுகரத்துக்கு அரை மாத்திரை.
3. ஈற்று அயலெழுத்தாகத் தனிநெடில், ஆய்தம், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைப் பெற்று வரும்.
4. நெடில்தொடர்க் குற்றியலுகரம் மட்டுமே இரண்டு எழுத்துகளைப்பெற்று வரும்.

   (எ.கா.) ஆடு, மாடு, காது.

   ஏனைய ஐவகைக் குற்றியலுகரச் சொற்கள் இரண்டனுக்கு மேற்பட்ட எழுத்துகளைப் பெற்று வரும்.

   (எ.கா.) சுக்கு, பாலாறு, காட்டாறு.

நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. – நன்னூல், 94

## குற்றியலிகரம்

தமிழ்

**மாணவர்** : வணக்கம், அம்மா.

**ஆசிரியர்** : வணக்கம், உட்காருங்கள். முன்வகுப்பில் கற்றுக்கொண்ட இலக்கணப் பகுதியை வீட்டில் படித்துப் பார்த்தீர்களா ?

**மாணவர்** : குற்றியலுகரந்தானே அம்மா. படித்துப் பார்த்தோம்.

**ஆசிரியர்** : நல்லது. இன்று குற்றியலிகரம்பற்றிப் பார்ப்போம். இதனைக் குறுமை + இயல் + இகரம் எனப் பிரிக்கலாம். குறுமை என்றால் குறுகிய; இயல் என்றால் ஓசை; இகரம் என்றால் 'இ' என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய இகரம், குற்றியலிகரம். குற்றியலுகரத்தின் உகரம் தன் ஒருமாத்திரையில் குறைந்து ஒலிப்பதுபோலவே குற்றியலிகரத்தில் வரும் இகரமும், தன் ஒருமாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்.

**மாணவர்** : அம்மா, எங்குக் குற்றியலிகரம் குறைந்து ஒலிக்கும் ?

**ஆசிரியர்** : நாகு + யாது = நாகியாது. வீடு + யாது = வீடியாது. இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். நாகு, வீடு என்பன நெடில்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். இவை நிலைமொழியாய் நிற்க, வருமொழியின் முதல் எழுத்து 'ய'கரமாக இருப்பின், உகரம் இகரமாகும். இந்த 'இகரம்'தான் குற்றியலிகரம் எனப்படும். அதாவது, நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யகரம் வரின், நிலைமொழி உகரம், இகரமாகத் திரிந்து தன்மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்.

(எ.கா.) வண்டு + யாது = வண்டியாது; வரகு + யாது = வரகியாது; என்பது + யாது = என்பதியாது.

மாணவர் : அம்மா, வேறு எங்காவது குற்றியலிகரம் வருமா ?

ஆசிரியர் : வரும். கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் வரும்.

மியா என்னும் அசைச்சொல்லில் உள்ள இகரமும் ( மி = ம் + இ ) தன்மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். இதுவும் குற்றியலிகரம் எனப்படும்.

யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய – நன்னூல், 93

(குறள் – குறைந்த)

## முற்றியலுகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியனபற்றி முன் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள்.

மாணவர் : ஆமாம், அம்மா.

ஆசிரியர் : நல்லது. குறைந்துவரும் 'உகரம், இகரம்' ஆகியவற்றின் மாத்திரை அளவு என்ன ?

மாணவர் : அரை மாத்திரை, அம்மா.

ஆசிரியர் : நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள், மகிழ்ச்சி. தன்மாத்திரை அளவில் குறையாமல் இருந்தால், அதற்குப் பெயரென்ன ?

மாணவர் : தெரியவில்லையே, அம்மா.

ஆசிரியர் : அதற்குப் பெயர் முற்றியலுகரம். அதாவது, தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம்.

மாணவர் : முற்றியலுகரம் எங்கு வருமெனக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் :

1. பகு, பசு, படு, அது, தபு, பெறு – இவை தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரம் (கு, சு, டு, து, பு, று) பெற்ற முற்றியலுகரங்கள்.
2. காணு, உண்ணு, உருமு – இவற்றின் ஈற்றிலுள்ள மெல்லின (ணு, மு) உகரங்கள் முற்றியலுகரங்கள்.
3. எழு, தள்ளு, கதவு – இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் (ழு, ளு, வு) முற்றியலுகரங்கள்.

இவ்வாறு தனிக்குறிலை அடுத்துச் சொல்லின் இறுதியில் வரும் வல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரமும், பொதுவாகச் சொற்களின் இறுதியில் மெல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரமும், இடையின மெய்யின்மேல் ஊர்ந்துவரும் உகரமும் ஆகிய மூன்றும் முற்றியலுகரம் எனப்படும்.

மாணவர் : நன்றி, அம்மா.

தமிழ்

பயிற்சிகள்

1. கீழ்க்காணும் சொற்களில் பொருந்தாதவற்றை வட்டமிடுக.
   1. சுக்கு, மருந்து, சார்பு, மது, கஃசு.
   2. அஃது, நன்று, சீட்டு, கொசு, உயர்வு.
2. 1, 2, 3, 4, 5, 6, 8 ஆகிய எண்களை எழுத்தால் எழுதி, இவற்றுள் நெடில்தொடர்க் குற்றியலுகர எண்ணை வட்டமிட்டுக் காட்டுக.
3. நான்கு, ஆறு, எட்டு இவற்றின் அயலெழுத்தை நோக்க, எவ்வகைக் குற்றியலுகரச் சொற்கள் என எழுதுக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கீழ்க்காணும் தொடரில் உள்ள குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக.

   தம்பி, சுக்கு, மிளகு வாங்குவதற்கு நாட்டுமருந்துக் கடைக்குச் சென்றான்.

   கடைக்காரர் இரண்டனையும் எடைபோட்டு ஐந்து உருபா என்றார்.

2. கீழ்க்காணும் குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. கோங்கு | 4. பந்து | 7. குத்து | 10. இஃது |
| 2. நண்டு | 5. நாடு | 8. பாலாறு | 11. கஃசு |
| 3. கொய்பு | 6. மார்பு | 9. கொக்கு | 12. மஞ்சு |

3. கோடிட்ட இடத்தில் உரிய குற்றியலுகரச் சொற்களை எழுதி நிரப்புக.
   1. கிளைக்குக் கிளை ______________ தாவியது.
   2. சிறுவன் ______________ வைத்துக்கொண்டு விளையாடுகிறான்.
   3. பொற்கொடி பூக்களை______________ வந்தாள்.
   4. குயவர் பானையை ______________ கொண்டிருந்தார்.
   5. பாலின் நிறம் கொண்ட பறவை ______________ .
4. கீழ்க்காணும் சொற்களில் முற்றியலுகரச் சொற்களை வட்டமிடுக.

   மாடு, பசு, கடுகு, கதவு, வீடு, அன்பு, மடு, மார்பு, விடு, மூக்கு.

5. நிரப்புக.
   1. குற்றியலுகரத்துக்கு ______________ மாத்திரை.
   2. குற்றியலிகரத்துக்கு ______________ மாத்திரை.
   3. முற்றியலுகரத்துக்கு ______________ மாத்திரை.

### ஆ) குறுவினாக்கள்

1. குற்றியலுகரம் என்றால் என்ன ?
2. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை ? சான்றுகள் தருக.
3. குற்றியலிகரம் என்றால் என்ன ? சான்று தருக.
4. முற்றியலுகரம் என்றால் என்ன ? சான்று தருக.

## வகுப்பறைத்திறன்கள்

அடிப்படைத்திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத்திறன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல், சொற்போர் முதலியனவும் மொழித்திறன் பயிற்சிகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### அ) பேசுதல் திறன்

தமிழுக்குத் தொண்டாற்றிய அயல்நாட்டறிஞர் வீரமாமுனிவர் குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

### ஆ) படித்தல் திறன்

**கீழ்க்காணும் பாடலைப் படித்து அதன் நயம் உணர்க.**

**பாடலில் மெல்லின எழுத்துகள் மிகுதியாக இடம்பெற்றிருப்பதனைக் காண்க.**

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிகர் சீறடி யளாகி
அஞ்சொலின மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

– கம்பராமாயணம்

### இ) எழுதுதல் திறன்

1. பாடல் பொருளுணர்தல், மொழிப்பயன்பாட்டுத்திறன் பெறுதல்.

**கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நாம்தினம் போற்றி வணங்கிடு வோமே
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடு வோமே இந்தியர் என்றே
தேடிய சுதந்தரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப் பாடே ஆகும்
ஓடிடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப் பாடெனும் மாமருந் தாலே.

#### வினாக்கள்

1. நமது இரு கண்களாகக் கருதப்படுவன யாவை ?
2. தினம் என்பதற்குரிய இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.
3. வேற்றுமை என்பதன் எதிர்ச்சொல் யாது ?
4. பாடலில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்லை எடுத்து எழுதுக.
5. சுதந்தரம் – சுதந்திரம் இவ்விரண்டனுள் எது சரி ?

#### விடைகள்

1. நாடும் மொழியும் நமது இருகண்களாகக் கருதப்படுகின்றன.
2. நாள் 3. ஒற்றுமை 4. மாமருந்து 5. சுதந்தரம்.

தமிழ்

பயிற்சி : கீழுள்ள பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க.

நல்லொழுக்கம் ஒன்றே – பெண்ணே
நல்ல நிலை சேர்க்கும்
புல்லொழுக்கம் தீமை – பெண்ணே
பொய்யுரைத்தல் தீமை
இல்லறமே பெண்ணே– இங்கு
நல்லற மென்பார்கள்
கல்வியுடையோரே – பெண்ணே
கண்ணுடைய ராவார்.

வினாக்கள்

1. நல்ல நிலை சேர்ப்பது எது ?
2. பாடலில் உள்ள விளிச்சொல்லை எடுத்து எழுதுக.
3. துறவறம் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.
4. கண்ணுடையவர் என்பவர் யார் ?
5. தீமை என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

### 1. சொற்றொடர் வகைகள்

செய்வினை – செயப்பாட்டு வினை

(எ.கா.) கயல்விழி திருக்குறளைப் படித்தாள் – செய்வினைத்தொடர்
(எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை)

இத்தொடரைச் செயப்பாட்டுவினையாக்க,

அ. எழுவாயைச் செயப்படுபொருளாக்குதல் வேண்டும்.

ஆ. அதனுடன் மூன்றாம் வேற்றுமை உருபு சேர்த்தல் வேண்டும். ( கயல்விழி + ஆல் = கயல்விழியால்) செயப்படுபொருளில் உள்ள 'ஐ' என்ற வேற்றுமை உருபை நீக்கி, எழுவாயாக மாற்றுதல் வேண்டும்.

(திருக்குறளை = திருக்குறள் + ஐ = ஐ நீக்கினால், திருக்குறள்)

இ. பயனிலையுடன் படு, பட்டது என்னும் துணைவினை சேர்த்தல் வேண்டும்.

(படித்தாள் = படிக்கப்பட்டது)

திருக்குறள் கயல்விழியால் படிக்கப்பட்டது – செயப்பாட்டு வினைத்தொடர்.

செயப்பாட்டு வினை – செய்வினை

(எ.கா.) குறிஞ்சிக்கலி கபிலரால் இயற்றப்பட்டது – செயப்பாட்டுவினை
கபிலர் குறிஞ்சிக்கலியை இயற்றினார் – செய்வினை

இவ்வாறு செயப்பாட்டுவினைத் தொடரையும் செய்வினைத் தொடராக மாற்றலாம்.

பயிற்சி : 1. கீழ்க்காணும் தொடர்களைச் செயப்பாட்டு வினையாக்குக.

அ) கலையரசி துணியைத் தைத்தாள்.

ஆ) ஆசிரியர் பாடத்தை நடத்தினார்.

இ) பூங்குழலி உணவைச் சமைத்தாள்.

2. கீழ்க்காணும் தொடர்களைச் செய்வினையாக்குக.

அ) ஓவியம் மாறனால் வரையப்பட்டது.

ஆ) மாலை மல்லிகாவினால் தொடுக்கப்பட்டது.

இ) பாரி கபிலரால் போற்றப்பட்டார்.

## 2. செய்தி வெளிப்படும் திறன்

தொடர்களில் செய்தி வெளிப்படும் தன்மையினைப் பொருத்துச் செய்தித்தொடர், வினாத்தொடர், விழைவுத்தொடர், உணர்ச்சித்தொடர் எனப் பலவகைப்படுத்தலாம். விழைவுத்தொடர் வாழ்த்துதல், வேண்டுதல், கட்டளையிடுதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும்.

(எ.கா.) ‘முயற்சி திருவினையாக்கும்’ என்பது ஆன்றோர் மொழி – செய்தித்தொடர்

| | | |
|---|---|---|
| பாடம் படித்தாயா ? | – | வினாத்தொடர் |
| நீடூழி வாழ்க ! | – | விழைவுத்தொடர் |
| என்னே, அருவியின் அழகு ! | – | உணர்ச்சித்தொடர் |
| கண்ணன் பாடம் படித்தான். | – | உடன்பாட்டுத்தொடர் (செய்தி) |
| கண்ணன் பாடம் படித்திலன். | – | எதிர்மறைத்தொடர் (செய்தி) |

பயிற்சி : 1. கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை ?

அ) தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை.

ஆ) இந்தச் செயலைச் செய்தது யார் ?

இ) இளமையில் கல்.

ஈ) என்னே, தமிழின் இனிமை !

உ) சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பண்டைக்கால வழக்கம்.

2. கீழ்க்காணும் தொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

அ) உழைத்துப் பிழை (செய்தித் தொடராக்குக)

ஆ) மாமல்லபுரத்துச் சிற்பங்கள் மிகவும் அழகாக உள்ளன. (உணர்ச்சித்தொடராக்குக.)

இ) மணிமொழி நன்கு பாடினாள். (பொருள் மாறாமல் எதிர்மறையாக்குக.)

ஈ) கமலா பரிசு பெற்றாள். (வினாத்தொடராக்குக.)

உ) நினைவாற்றலை வளர்த்துக்கொள்க. (கட்டளைத்தொடராக்குக.)

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



### 3. தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 6 | சா | 11 | கக | 16 | கசா |
| 2 | உ | 7 | எ | 12 | கஉ | 17 | கஎ |
| 3 | ங | 8 | அ | 13 | கங | 18 | கஅ |
| 4 | ச | 9 | கூ | 14 | கச | 19 | ககூ |
| 5 | ரு | 10 | க0 | 15 | கரு | 20 | உ0 |

பயிற்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | 11 | | 16 | |
| 2 | | 7 | | 12 | | 17 | |
| 3 | | 8 | | 13 | | 18 | |
| 4 | | 9 | | 14 | | 19 | |
| 5 | | 10 | | 15 | | 20 | |

### மாதிரிக்கட்டுரை

## நான் விரும்பும் கவிஞர்

### முன்னுரை

''கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு: நானோர் தும்பி!'' என்று தமிழ்க்காதல்கொண்டு, ''உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு'' என்ற கொள்கையை உயிர்மூச்சாய்ப்பெற்றவர்; தமிழ்ச்சொல்லால் பாடல் இயற்றி, இருபதாம் நூற்றாண்டுக் கவிதைவானில் ஒளிநிலவாய்ப் பவனிவந்த பெருங்கவிஞராக விளங்கியவர் பாரதிதாசன். அவர். அறியாமை இருளில் முடங்கிக் கிடந்தவர்களைப் பகுத்தறிவு ஒளிபெற்று விழிப்புறச்செய்தார்; கொள்கையற்றவர்களைக் கொள்கை உரம்பெற்று நிமிர்ந்து நிற்கச் செய்தார்.

### பிறப்பும் சிறப்பும்

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்னும் பொய்யாமொழியாரின் பொன்மொழிக்கிணங்க, புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 29.04.1891ஆம் ஆண்டு பிறந்தார். கனகசபை என்பார் இவரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர், துள்ளித்திரியும் தம் இளமைப்பருவத்தின் துடுக்கடக்கிப் பள்ளியில் சேர்ந்து, தித்திக்கும் முத்தமிழ்ப்புலமை பெற்றார்; தமிழாசிரியராய்ப் பணியாற்றினார். பாரதியாரால் 'சுப்புரத்தினம் ஓர் கவி' என்று தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார். இவர், பாரதியின்பால் தாம்கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக்கொண்டார். அவரின் எண்ணத்திலும் எழுத்திலும் பேச்சிலும் புரட்சியின் புதுத்துடிப்பைக் கண்ணுற்ற அறிஞர் உலகம் அவரைப் புரட்சிக் கவிஞர் என அழைத்து மகிழ்ந்தது.

### தமிழ்ப்பணி

பாவேந்தர் பாரதிதாசன் தம்வாழ்நாள் முழுவதனையும், தமிழின் மறுமலர்ச்சிக்காகவும் வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் புத்தெழுச்சி காண்பதற்காகவும் தமிழரின் முன்னேற்றத்துக்குத் தடைக்கற்களாய் நிற்கும் அறியாமையை, மூடப்பழக்க வழக்கங்களை உடைத்தெறிவதற்காகவும் பாடுபட்டார். வீடெல்லாம், நாடெல்லாம், மக்களின் இதயக்கூடெல்லாம், ஏடெல்லாம் இன்பத்தமிழ் மணக்கவேண்டும் என்று அல்லும் பகலும் அயராது தமிழ்ப்பணி ஆற்றினார்.

சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது என்பதனை உணர்ந்த பாவேந்தர் புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலேயே தமது சிந்தனையைச் செலவிட்டார். இவரது புகழை இசையமுது, குடும்ப விளக்கு, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், படித்த பெண்கள், இளைஞர் இலக்கியம், குறிஞ்சித் திட்டு முதலிய நூல் மலர்கள் மலர்ந்து நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

### உவட்டாமல் இனிக்கும் பாடல் வரிகள்:

- தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்
  தமிழ் இன்பத் தமிழ்
  எங்கள் உயிருக்கு நேர்!
- இருட்டறையில் உள்ளதடா உலகம்
- புதியதோர் உலகு செய்வோம் கெட்ட
  போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

என்னும் பாரதிதாசனின் பாடல்களை, நாம் பாடும்போது உவட்டாமல் இனிக்கின்றன.

### முடிவுரை

பாரதிதாசன் தமிழ்க்கவி; தமிழரின் கவி; தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி; தமிழரின் புகழ் மேதினியோங்க வேண்டுமெனப் பிறந்த கவி. அக்கவியின் கவிதைகளைக் கற்றுப் பயன் பெறுவோமாக! பாவேந்தர் பாடல்களைப் பாரெல்லாம் பரப்புவோமாக!

### 4. கட்டுரைப்பயிற்சி

குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் – பிறந்த ஊர் – எட்டயபுரம் – பிறந்த ஆண்டு 1882 – பாடல் எழுதுவதில் விருப்பம் – விடுதலை உணர்வைத் தூண்டும்வகையில் பாடல்கள் – விடுதலைப் போராட்டத் தலைவர்களுடன் நட்பு – விடுதலைக்கவி எனப் போற்றப்படுதல் – கவிதைகள் பல படைத்தல் – உடல்நலம் குன்றுதல் – இறப்பு 1921.

## வாழ்க்கைத் திறன்

### முடிவெடுத்தல் திறன்

ஆண்டு இறுதித்தேர்வுக்காக முனைப்புடன் படித்துக்கொண்டிருந்தான் குமரன். வாசலில் மணி ஒலித்தது. குமரன் படித்துக்கொண்டிருந்ததனால், அவனுடைய தாயார் வெளியில் சென்று கதவைத் திறந்தார். அங்கே குமரனுடைய நண்பர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள், 'குமரன் இல்லையா' என்று கேட்டார்கள்; 'குமரன் படித்துக்கொண்டிருக்கிறான்; இதோ அனுப்புகிறேன்' என்று சொல்லியவாறே அவர்களை உட்கார வைத்துவிட்டுத் தாயார் உள்ளே சென்றார்.

'குமரா, உன்னுடைய நண்பர்கள் வந்திருக்கிறார்கள்; என்னவென்று கேட்டுவிட்டு வா' என்றார் தாயார். குமரன் வெளியில் வந்தான். குமரனைப் பார்த்ததும் அவனுடைய நண்பர்கள் விளையாட வருமாறு அழைத்தார்கள்; 'மட்டைப்பந்து விளையாட்டு இருப்பதனை மறந்துவிட்டாயா? விரைந்து வா. நீ வந்தால்தானே வெற்றிபெற முடியும்' என்று வற்புறுத்தினார்கள். குமரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாளை எழுதப்போகும் தேர்வில் மதிப்பெண் குறைந்தால் வகுப்பிலும் சரி, வீட்டிலும் சரி ஏளனத்துக்கு ஆளாவான். விளையாடவில்லையென்றால், அவனுடைய தலைமையின் கீழுள்ள குழு தோற்றுப்போகும். இந்த ஆண்டு கிடைக்கவேண்டிய சுழல்கோப்பை கிடைக்காது.

அ) குமரன் என்ன முடிவு எடுத்திருப்பான்?

ஆ) நீங்கள் குமரனாக இருந்தால் என்ன முடிவெடுப்பீர்கள்?

## மதிப்புக்கல்வி

### தொண்டுள்ளம்

கொல்கத்தாவின் கடைத்தெருவில் நடந்துகொண்டிருந்தார் அந்தப் பெண்மணி; ஆதரவற்ற, சமூகத்தால் தூக்கியெறியப்பட்ட, பாதுகாப்பற்ற ஏழைகளுக்காகக் கண்ணீர் சிந்தினார்; நோயாளிகள், முதியோர்கள் என அனைவருக்காகவும் பலரிடமும் கையேந்தினார்; அவர்களின் உணவுக்காகவும், உடைக்காகவும் பணம் பெறும்பொருட்டுக் கையேந்திய அவர் கைகளிலே கடும் எரிச்சல்கொண்ட ஒருவர் எச்சில் உமிழ்ந்தார்; இருப்பினும் மனம் தளர்ந்தாரில்லை.

கொடியவரின் உமிழ்நீரைத் துடைத்துவிட்டு, அப்பெண்மணி மீண்டும் அவரிடம் கையேந்தினார். "ஐயா, நீங்கள் எனக்குக் கொடுக்கவேண்டியதனைக் கொடுத்துவிட்டீர்கள்; ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டியதனை அருள்கூர்ந்து கொடுத்து உதவுங்கள்" என்று முகத்தில் கருணை பொங்கக் கேட்டார் அப்பெண்மணி.

அக்கொடியவரின் மனம் துணுக்குற்றது. அப்பெண்மணியின் தொண்டுள்ளம் கண்டு நாணித் தலைகுனிந்தார். அப்பெண்மணிதான் அன்னை தெரேசா.

மாணவர்களே! அன்னை தெரேசாவின் கருணை உள்ளத்தை அறிந்துகொண்டீர்களா? அந்த இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?

அ. கொடியவனைக் கடிந்துரைப்பேன்.

ஆ. உன்பணம் தேவையில்லை என்று கூறிவிட்டுச் செல்வேன்.

இ. பொறுத்துக்கொண்டு, மீண்டும் கேட்பேன்.

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

கவியரசு வேங்கடாசலனார், நகைச்சுவையுணர்வு மிக்கவர். கேட்பவர் விரும்புமாறு நயமாகவும் சிலேடையாகவும் பேசும் திறனுடையவர். ஒருமுறை, திருவையாறு அரசர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டுவிழாவுக்குக் கவியரசர் சென்றார். அவ்விழாவில், சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த பேச்சாளர், ‘தமிழ்மொழியை இன்று செந்தமிழ் என்று சொல்கிறோம். செந்தமிழ் எனக் கூறுவதால், ஒருகாலத்தில் தமிழ்மொழி கொடுந்தமிழாக இருந்திருத்தல் வேண்டும்’ என்றார்.

அவர் கூறுவதனைக் கேட்ட கவியரசு வேங்கடாசலனார், உடனே எழுந்து ‘கதிரவனை இந்நாளில் செஞ்ஞாயிறு எனக் கூறுகிறோம். செஞ்ஞாயிறு என்பதனால், ஒருகாலத்தில் கருஞாயிறாகத்தான் இருந்திருத்தல் வேண்டும் என்பதனை இப்பேச்சாளரின் கூற்று வெளிப்படுத்துகிறது’ எனக்கூறினார். அவர் கூறியதனைக் கேட்ட தமிழறிஞர்கள், கைகளைத் தட்டிக் குரலொலி எழுப்ப, சொற்பொழிவாற்றிய பேச்சாளர் தலைகுனிந்தார்.

மற்றொருமுறை, கவியரசுவின் திருமண விழாவுக்கு வர இயலாத நண்பர், அவரை நேரில் கண்டு வருத்தத்தைத் தெரிவித்தார். பின்னர், ‘திருமணம் சிறப்பாக நடந்ததா ?’ எனக் கவியரசுவிடம் வினவினார். நண்பருக்குப் பதிலளித்த கவியரசு, ‘ஆம், மிகவும் நன்றாக நடந்தது. நான் ஒரு முகமதியப் பெண்ணை மணந்து கொண்டேன்’ என்றார்.

அதனைக் கேட்ட நண்பர், வியப்புடன் கவியரசுவை நோக்கினார். அவரது முகக்குறிப்பினை உணர்ந்துகொண்ட கவியரசு, ‘உண்மைதான். முகம் மதியம் போன்று விளங்கும் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொண்டேன்’ எனச் சிலேடையாகக் கூற, நண்பர் கவியரசுவின் சொல்லாடலைக் கேட்டு இன்புற்றார்.

## வினாக்கள்

1. கவியரசு வேங்கடாசலனார் எத்தன்மையுடையவர் ?
2. திருவையாறு அரசர் கல்லூரி ஆண்டுவிழாவில், சொற்பொழிவாளர் பேசிய உரை யாது ?
3. சொற்பொழிவாளர் கூறிய செய்தியைக் கவியரசு எங்ஙனம் மறுத்துரைத்தார் ?
4. நண்பரிடம், கவியரசு கூறிய சிலேடை நயத்தைக் கூறுக.
5. ‘பலகை’ – இச்சொல்லுக்குச் சிலேடை நயம் காண்க.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் பேசுக.

பாரதியாருடன் கற்பனை உரையாடல்

மாணவன் : ஐயா, வணக்கம். உங்கள் உருவத்தைப் படங்களில் மட்டுமே பார்த்துள்ளேன். இன்று உங்களை நேரில் காணும் பேறுபெற்று மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடன் உரையாட விரும்புகிறேன்.

பாரதியார் : அப்படியா, மிக்க மகிழ்ச்சி.

மாணவன் : ஐயா, தங்களுக்குத் தமிழின்மீது தணியா வேட்கை ஏற்பட்டது, எவ்வாறு ?

பாரதியார் : தமிழின்மீது மட்டுமா ? தமிழ்நாடு, தமிழர், தமிழ்த்தாய் அனைத்தும் என்னுள் இரண்டறக் கலந்தவை. நான் தமிழ்நாட்டில் பிறந்தேன்; தமிழ்த்தாயின் மடியில்வளர்ந்தேன்; தமிழ்மொழியை என் உயிர்மூச்சாய்க் கொண்டேன். தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழின்மீது தணியாவேட்கை கொள்ளுதல் வேண்டுமப்பா !

மாணவன் : தங்கள், தமிழ்ப்பற்றைக் கண்டு மெத்த மகிழ்வு கொள்கிறேன். மாணவர்களாகிய நாங்கள், உங்களின் ஒவ்வொரு பாடலையும் அறிந்து வைத்துள்ளோம். இவ்வளவு உணர்ச்சிமிக்க பாடல்களைத் தாங்கள் படைக்கத் தூண்டுதலாக அமைந்தது, எது ?

பாரதியார் : நன்றாகக் கேட்டாய் ! இன்று நீ விடும் விடுதலை மூச்சுக்காற்று, அன்று எங்களுக்கு வாய்க்கவில்லை. அந்தக் காலத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த நம் பாரதத்தாயின் அடிமைத் தளையைக் கட்டவிழ்த்து விடவேண்டுமென நான் துடித்தேன். அத்துடிப்பின் வெளிப்பாடே என் பாடல்கள் அனைத்தும்.

மாணவன் : ஐயா, உங்கள் பாடல்கள் நிலைபேறு பெற்றவை; எஞ்ஞான்றும் ஏற்புடையவை. எம்போன்ற மாணவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் அறிவுரை யாது ?

பாரதியார் : மாணவர்களே, உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்; கிடைக்கும் நல்வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்; மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் விடாது பற்றிக்கொள்ளுங்கள். நம் அறிவுச் செல்வங்களாம் இலக்கியங்களை ஈடுபாட்டுடன் கற்றுத் தரமிக்க இலக்கியங்களை இயற்றுங்கள்.

மாணவன் : நன்றி, ஐயா. அவ்வாறே செய்கிறோம்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருளுணர்ச்சிக்கேற்பக் குரலேற்ற இறக்கத்துடன் படித்துக் காட்டுக.**

வீரவுணர்ச்சி

என்னருமைத் தமிழர்களே, உணர்ந்து பாருங்கள்; உங்கள் முன்னோர் வாழ்வையும், உங்கள் தாழ்வையும் உன்னிப் பாருங்கள்; தமிழன்னையின் நிலையைச் சற்று நினைவு கூருங்கள். நிமிர்ந்த நோக்கு இல்லாத நேயரே, நிதானியுங்கள். காவலன் வாயிற் கடைசென்று கணவனின் புகழைக் காத்தவள் எங்கள் கண்ணகியாம் அன்னை. பால்மணம் மாறாத பாலகனைப் படையோடு களத்துக்கனுப்பியவள் எங்கள் மற்றொரு தாய். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயவேண்டுமே! அந்தத் தாய்மரபு எங்கே ? வாழையடி வாழையாக வந்த வீரத்துக்கு வழியடைக்குங்கல்லை யார் வைத்தார்கள் ? சிந்தியுங்கள். தாய்மொழி சந்தியில் நின்று தடுமாற, தனயர் தாளிட்டுக்கொண்டு வீட்டில் கிடப்பதா ? இது முறையா ! இது தகுமா ? எழுங்கள்; உணர்ச்சியோடு எழுங்கள். கடைசி மூச்சு இருக்கும்வரை தமிழன்னையைக் காப்போம் என உறுதி செய்யுங்கள். அன்றுதான் தமிழ் தழைக்கும். தமிழினம் தலையெடுக்கும்.

| பாடுதல் திறன் | செயல்பாடு – 4 |
|---|---|

**கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் இனிமையாகப் பாடுக.**

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே எங்கள் ( செந்தமிழ் )

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி – என
மேவிய ஆறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் – மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு ( செந்தமிழ் )

தமிழ்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

– பாரதியார்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

**கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.**

கெண்டை, ஏற்றம், கல்வி, ஔவியம், கொள்கை, அகவை, குழந்தை, ஈடுபாடு, காற்று, ஐவர், இலக்கியம், கூரை, உணவு, கையுறை, ஓசை, கேள்வி, ஆய்வேடு, கோடு, ஒற்றுமை, கிளை, ஊஞ்சல், கீற்று, எழுத்து, கௌதாரி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| க | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

செந்தமிழ் ஒரு பூந்தோட்டம். அப்பூந்தோட்டத்தில் அன்றலர்ந்த மலர்கள் மணம் பரப்பி வருகின்றன.

அம்மலர்கள் ஒரு செடியிலோ கொடியிலோ பூத்தவை அல்ல; வண்ணம், வடிவம், அளவு, மணம் ஆகியவற்றால் ஒன்றுபட்டவையும் அல்ல. அவ்வாறே காலந்தோறும் நந்தமிழ் நாட்டில் தமிழ்ச் சான்றோர் பலர் தோன்றித் தமிழ்மொழிக்குப் புத்துயிரூட்டிப் புதுமணம் பரப்பி வருகின்றனர்.

தம்முள் மதம், இனம், நாடு, மொழி ஆகிய வேறுபாடுகளின்றித் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து வருகின்றனர்.

| குறிப்புகளை விரித்தெழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, விரித்தெழுதுக.




| பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் எழுதுதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ணமிட்ட எழுத்துகளுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

இண்டர்வியூவில் கேட்ட வினாக்களுக்கெல்லாம் சரளமாக விடையளித்தான், செழியன். நிச்சயமாகத் தனக்கு இந்த ஜாப் கிடைத்துவிடும் என்று நம்பினான். சிறிதுநேரம் காத்திருக்கச் சொன்ன மேனேஜரிடம் நன்றி கூறிவிட்டு வெளியில் வந்தான் செழியன்.

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| இண்டர்வியூ | |
| சரளமாக | |
| நிச்சயமாக | |
| ஜாப் | |
| மேனேஜர் | |

| படம் பார்த்து எழுதுதல் | செயல்பாடு – 9 |
|---|---|

தமிழ் வளர்த்த சான்றோர் 'மனோன்மணியம்' பெ. சுந்தரனாரைப்பற்றி ஐந்து வரிகளுக்குக் குறிப்பு எழுதுக.



| சொல் விளையாட்டு | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் பழமொழிகளில் விடுபட்ட இடங்களில் குற்றியலுகரச் சொற்களாக வரும்படி எழுதுக. அச்சொற்களைக் கட்டத்தில் நிரப்புக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 |
| | | | | 3 | | | |
| 4 | | | | | | | |
| | | | | | | 6 | |
| | | 5 | | | | | |
| 7 | | | 8 | | | | |
| | | | | | | | |
| | | 9 | | | | | 10 |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. போதுமென்ற மனமே பொன் செய்யும் ______ .<br>4. ஆத்திரக்காரனுக்குப் புத்தி ______ .<br>8. ஏற்றம் உண்டானால் இறக்கமும் ______ .<br>9. காலம் பொன் ______ . | 2. அகத்தின் ______ முகத்தில் தெரியும்.<br>3. ______ சிறுத்தாலும் காரம் குறையாது.<br>6. அடியாத ______ படியாது.<br>7. அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் ______ . |
| **வலமிருந்து இடம்**<br>5. கெடுவான் ______ நினைப்பான். | **கீழிருந்து மேல்**<br>10. ஆற்றில் போட்டாலும் ______ போடு. |

| விடுகதைகளுக்கு விடை காணல் | செயல்பாடு – 11 |
|---|---|

**கீழ்க்காணும் விடுகதைகளைப் படித்து விடை காண்க.**

1. நான் சிரித்தால் நீ சிரிப்பாய்; நான் அழுதால் நீ அழுவாய். நான் யார் ?
   ______
2. மனிதன் போடாத பந்தலில் மலர்ந்து கிடக்கும் பூக்கள். அவை யாவை ?
   ______
3. கடல் நீரில் வளர்வேன்; மழை நீரில் மடிவேன். நான் யார் ?
   ______
4. வாராதிருந்து வந்தேன்; வந்துவிட்டுப் போனேன்;
   போனபிறகு வந்தேன்; இனிப் போனால் வரமாட்டேன். நான் யார் ?
   ______
5. ஒளியில் தொடர்வான்; இருளில் மறைவான். அவன் யார் ?
   ______

### விடைகள்

1. கண்ணாடி  2. விண்மீன்கள்  3. உப்பு  4. பல்  5. நிழல்

தமிழ்

தமிழ்

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. ஓரிரு சொற்களில் விடையளிக்க.** 4 X 1 = 4

அ) முத்தே பவளமே ________________ அடுத்து வரும் சொற்றொடரைக் கூறுக.

ஆ) கேட்டதனை வழங்கும் மரம் எது ?

இ) பேச்சுக்கலையில் சிறந்து விளங்கிய தமிழறிஞர் யார் ?

ஈ) சிறுகதைக்கு உரமூட்டியவர் யார் ?

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2 X 1 = 2

அ) வாழ்த்துச் செய்யுள் ________________ நூலில் இடம் பெற்றுள்ளது.

ஆ) பராபரம் ________________ பொருளை உணர்த்துகிறது.

**3. கீழ்க்காணும் கூற்றுச் சரியா தவறா எனக் கூறுக.** 2 X 1 = 2

அ) குணங்குடி மஸ்தான் சாகிபைத் தைரியநாதர் என்றழைப்பர்.

ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர் எனப் பாடியவர் கணியன் பூங்குன்றனார்.

**4. தொடரில் அமைத்து எழுதுக.** 2 X 1 = 2

அ) மணம்

ஆ) மனம்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# இலக்கியவகைச் சொற்கள்



**மாணவர்** : வணக்கம், அம்மா.

**ஆசிரியர்** : வணக்கம். எல்லாரும் காலையில் உண்டீர்களா ?

**மாணவர்** : உண்டோம், அம்மா.

**ஆசிரியர்** : மகிழ்ச்சி. முன்வகுப்பில் சொற்களைப்பற்றிப் படித்திருப்பீர்கள், அது நினைவில் இருக்கிறதா ?

**மாணவர்** : நன்றாகவே நினைவில் இருக்கிறது, அம்மா. பெயர், வினை, இடை, உரிச்சொற்கள்தாமே அம்மா.

**ஆசிரியர்** : சரியாகச் சொன்னீர்கள். அவற்றை எந்த வகைக்குள் அடக்குவார்கள், தெரியுமா ?

**மாணவர்** : இலக்கண வகைக்குள்தானே அம்மா.

**ஆசிரியர்** : ஆமாம். இலக்கணவகைபோல, இலக்கிய வகையாலும் சொற்கள் நால்வகைப்படும். அவை: இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன.

**மாணவர்** : அப்படியா அம்மா. இயற்சொல் என்றால் என்ன ?

**ஆசிரியர்** : தீ, காடு, மரம் – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இவற்றின் பொருள் விளங்குகிறதா ?

**மாணவர்** : நீங்கள் கூறிய எல்லாச்சொற்களும் எளிதில் புரிந்துகொள்ளும் சொற்களே.

**ஆசிரியர்** : படிக்காதவர்களிடத்தில், இந்தச் சொற்களைப்பேசினால், அவர்களுக்கும் புரியுமா ?

**மாணவர்** : இவற்றைப் படிக்காதவர்களும் எளிதாகப் புரிந்துகொள்வார்கள், அம்மா.

**ஆசிரியர்** : இவ்வாறு எல்லாருக்கும் பொருள் விளங்கும்வகையில் இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் இயற்சொல் எனப்படும். இது பெயர் இயற்சொல், வினை இயற்சொல் என இருவகைப்படும்.

**மாணவர்** : அப்படியா அம்மா! எடுத்துக்காட்டுகள் தாருங்களேன்.

ஆசிரியர் : காற்று, நிலவு, ஞாயிறு, பலகை – இவை எளிதில் பொருள் விளங்கும் பெயர்ச்சொற்கள். இவற்றைப் பெயர் இயற்சொற்கள் என்பர். படித்தான், தூங்கினான், வந்தான் – இவை எளிதில் பொருள்தரும் வினைச்சொற்கள். இவற்றை வினை இயற்சொற்கள் என்பர்.

மாணவர் : நன்றாகப் புரிந்தது, திரிசொல் என்றால் என்ன ? அம்மா.

ஆசிரியர் : பீலி, உகிர், ஆழி – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இவற்றின் பொருள் என்ன ?

மாணவர் : பொருள் தெரியவில்லை அம்மா.

ஆசிரியர் : இவை கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் இருக்கின்றன. இவற்றைத் திரிசொல் என்பர்.

பீலி – மயில்தோகை; உகிர் – நகம்; ஆழி – கடல், சக்கரம்.

மாணவர் : திரிசொல்லும் பெயர், வினை ஆகிய இரண்டிலும் வருமா ? அம்மா...

ஆசிரியர் : ஆம். திரிசொல்லும் பெயர்த் திரிசொல், வினைத் திரிசொல் என இருவகையாக வரும். எயிறு, வேய், மடி, நல்குரவு – என்பன பெயர்த் திரிசொல். (எயிறு – பல்; வேய் – மூங்கில்; மடி – சோம்பல்; நல்குரவு – வறுமை.) வினவினான், விளித்தான், நோக்கினார் – இவை வினைத் திரிசொல். வினவினான் – கேட்டான்; விளித்தான் – அழைத்தான்; நோக்கினார் – பார்த்தார்.

மாணவர் : அம்மா, திசைச்சொல் என்றால் என்ன ?

ஆசிரியர் : கேணி, பெற்றம் – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இவை, தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள பிறபகுதிகளிலிருந்து தமிழில் வழங்கும் சொற்கள் திசைச்சொற்கள். (கேணி – கிணறு; பெற்றம் –பசு.)

மாணவர் : அம்மா, வடசொல் என்றால் என்ன ?

ஆசிரியர் : கமலம், விஷம், புஷ்பம் – இவற்றைப் படியுங்கள்.

இவை தமிழில் வந்து வழங்கினாலும் தமிழ்ச்சொற்கள் அல்ல, வடமொழிச் (சமஸ்கிருதம்) சொற்கள்,

| | |
|---|---|
| கமலம் | – தாமரை |
| விஷம் (விடம்) | – நஞ்சு |
| புஷ்பம் (புட்பம் ) | – மலர் |

இங்ஙனம், வடமொழிச் சொற்கள் திரிந்தும் திரியாமலும் தமிழ்மொழியில் வந்து வழங்குமானால் அவை வடசொல் எனப்படும்.

தமிழ்

தமிழ்

பயிற்சி

அன்பரசி கேணியிலிருந்து தண்ணீர் கொணர்ந்தாள்; தோட்டத்தில் ரோஜாவைப் பறித்து மாலையாக்கினாள்; கோவிலுக்குச் சென்று இறைவனுக்குப் பூஜை செய்தாள். அங்கு அந்தணர் மறைமொழி கேட்டு மெய்ம்மறந்து நின்றாள்.

மேற்கண்ட பத்தியிலுள்ள சொற்களைக் கீழ்க்குறித்தவாறு வகைப்படுத்துக.

1. இயற்சொல் ______________________
2. திரிசொல் ______________________
3. திசைச்சொல் ______________________
4. வடசொல் ______________________

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கீழ்க்காணும் திசைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைப் பொருத்துக.

| திசைச்சொல் | – | தமிழ்ச்சொல் | திசைச்சொல் | – | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|
| 1. பண்டிகை | – | மூலம் | 5. அச்சன் | – | காட்சி |
| 2. வெள்ளம் | – | வணிகம் | 6. ஜமக்காளம் | – | நீர்ப் பெருக்கு |
| 3. வியாபாரம் | – | விரிப்பு | 7. வேடிக்கை | – | தந்தை |
| 4. அசல் | – | திருவிழா | | | |

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. நிலம், நாய் | – | வினைத்திரிசொல் |
| 2. வந்தது, படித்தான் | – | பெயர் இயற்சொல் |
| 3. களிறு, புரவி | – | வினை இயற்சொல் |
| 4. வினவினான், நோக்கினான் | – | பெயர்த்திரிசொல் |

### ஆ) குறுவினாக்கள்

1. இலக்கிய வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும் ? அவையாவை ?
2. திரிசொல் என்றால் என்ன ? சான்று தருக.
3. திரிசொல் வகைகள் யாவை ? சான்று தருக.
4. வடசொல் என்றால் என்ன ? சான்று தருக

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

உனக்குப் பிடித்த கவிதையைப்பற்றி ஐந்து மணித்துளி பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பத்தியைப் படித்து நயம் உணர்க

நீலாம்பிகை அம்மையார் மறைமலையடிகளாரின் மகள் ஆவார். மறைமலையடிகள், தனித்தமிழ்மீது ஈடுபாடுகொண்டிருந்ததைப் போன்று நீலாம்பிகை அம்மையாரும் தனித்தமிழ்ப்பற்றுடன் திகழ்ந்தார்.

ஒருமுறை அவருடைய வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்விருந்தில் கலந்து கொண்ட பண்டிதமணி மு. கதிரேசனார், "நீலாம்பிகை, இரசம் கொண்டு வா'' என்றார். உடனே அம்மையார், "ஐயா, இரசம் என்பது வடசொல்; சாறு என்று கூறலாமே" என்றார்.

அவரும் உடனே, "கருப்பாயி சாறு கொண்டு வா'' என்றார்; அம்மையார் விழித்தார்.

அவரோ, "என்னம்மா, நீலம் என்றால் கருப்பு; அம்பிகை என்றால் தாய் (ஆய்), உம்முடைய பெயரையும் தமிழ்ப்பெயராக்கிக் கருப்பாயி என்றழைத்தேன். சரிதானே'' என்றார். அம்மையார் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்.

## இ) எழுதுதல் திறன்

### 1. உரைநடைப் பகுதியைப் படித்துப் பார்த்துப் பொருளறியும் திறன்பெறுதல்

(எ.கா.) : கீழுள்ள உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காகப் பாடப்படும் இலக்கியவகை பரணி. 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என்பது பரணியின் இலக்கணம். இவ்விலக்கியம் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியவகைகளுள் ஒன்று. அரசர்கள் இருவருக்கிடையேயான போரில், தோற்ற அரசனது நாட்டின் பெயரால் பரணி பாடப்படும். போருக்குரிய தெய்வமாகக் காளியைக் கருதுவர். பரணி இலக்கியங்களுள் மிகச்சிறந்தது கலிங்கத்துப்பரணி. போரில் குலோத்துங்க மன்னனிடம் கலிங்க நாட்டு மன்னன் தோற்றுப்போனான். அதனால், கலிங்கத்துப்பரணி எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்நூல் சயங்கொண்டாரால் பாடப்பட்டது.

**வினாக்கள்**

1. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களை எடுத்து எழுதுக.
2. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள இணைப்புச்சொல் எது ?
3. 'அமர்' என்பதன் பொருள் ______

   அ) யானை ஆ) போர் இ) வெற்றி
4. தொண்ணூற்றாறு – பிரிக்கும் முறை ______

   அ) தொண் + ஆறு ஆ) தொண்ணூறு + ஆறு இ) தொள்ளாயிரம் + ஆறு

விடைகள் : 1. ஆயிரம், தொண்ணூற்றாறு 2. அதனால் 3. போர் 4. தொண்ணூறு + ஆறு

**பயிற்சி**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும்.

மேற்கண்ட நான்கு பொருள்களுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து தெய்வம், அரசன், வள்ளல், குரு முதலியோரின் சிறப்பினைக் கற்பனை செய்து பாடுவது சிற்றிலக்கியம். இவற்றை வடநூலார் பிரபந்தம் என்பர்.

பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருள்.

தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்.

**வினாக்கள்**

1. பேரிலக்கியங்கள் என்றால் என்ன ?
2. பிரபந்தம் என்பதன் பொருள் யாது ?
3. உரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

4. இலக்கியம் – பிரிக்கும் முறை

அ) இல + கியம் ஆ) இலக்கிய + இம் இ) இலக்கு + இயம்

ஈ) படைப்புத்திறன்

'தமிழின் இனிமை' என்னும் தலைப்பில் எட்டு வரியில் பாடல் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### 1. நேர்கூற்று அயற்கூற்றுத் தொடர்கள்

நேர்கூற்று : "வேல்விழி, நன்றாகப் படித்துத்தேர்வில் முதன்மை பெறு'' என்று ஆசிரியர் அறிவுரை கூறினார். இது நேர்கூற்றுத்தொடர். ஒருவர் நேரே கூறுவதுபோல் அமைவது நேர்கூற்று எனப்படும். நேர்கூற்று, தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் வரும்.

அயற்கூற்று : நன்றாகப் படித்துத் தேர்வில் முதன்மை பெறுமாறு ஆசிரியர் வேல்விழிக்குக் கூறினார்.

நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்ற நினைவில் கொள்ள வேண்டியவை:

- நேர்கூற்றில் உள்ள மேற்கோள், காற்புள்ளி இவற்றை எடுத்துவிட வேண்டும்.
- 'என்று', 'என' என்ற செய்தியை முடிக்கும் சொல்லை நீக்கவேண்டும்.
- முன்னிலையிடத்தைத் தன்மையாகவோ படர்க்கையாகவோ மாற்றவேண்டும்.
- தன்மையிடத்தைப் படர்க்கையாக மாற்றவேண்டும்.
- கட்டளைச் சொல்லோடு ஆறு, ஆக எனும் சொல்லைச் சேர்க்கவேண்டும்.

நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்றும்போது மாறும் சொற்கள்

| நேர்கூற்று | அயற்கூற்று | நேர்கூற்று | அயற்கூற்று |
|---|---|---|---|
| இன்று | அன்று | நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் | இப்பொழுது | அப்பொழுது |
| இது | அது | இவை | அவை |
| இதனால் | அதனால் | நான் | தான் |
| நாம், நாங்கள் | தாம், தாங்கள் | நீ | அவன், அவள் |
| நீங்கள் | அவர்கள் | | |

அயற்கூற்றுத் தொடரையும் நேர்கூற்றாக மாற்றலாம்

(எ.கா.) கவிஞர் சங்கத்தமிழ் நூலைப் படிக்குமாறு தம்பிக்குக் கூறினார். (அயற்கூற்று) இச்சொற்றொடரில் செய்தி அடுத்தவர் கூறுவதுபோல அமைந்துள்ளது.

"தம்பி, சங்கத்தமிழ் நூலைப்படி'' என்று கவிஞர் கூறினார். (நேர்கூற்று)

பயிற்சி

கீழ்க்காணும் சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. பாரதிதாசன், "தமிழ் என் உயிர் என்பேன்'' என்றார். (அயற்கூற்றாக்குக)
2. தான் நாளை வருவதாகப் பூவிழி கூறினாள். (நேர்கூற்றாக்குக)

3. "நீ வைகறையில் துயிலெழ வேண்டும்" என்று ஆசிரியர் சிந்தனைச்செல்வனிடம் கூறினார். (அயற்கூற்றாக்குக)

4. தந்தை தம்மகனை நோக்கி, "நீ நாள்தோறும், ஒழுங்காகப் பாடத்தைப் படித்துக்கொண்டு வா" என்று கூறினார். (அயற்கூற்றாக்குக)

5. பழத்தைத் தனக்குக் கொடுக்குமாறு கபிலனை வேலன் கேட்டான். (நேர்கூற்றாக்குக)

## 2. உரையாடலைச் செய்தியாக்குதல்.

(எ.கா.) கண்ணகி : "பாண்டிய மன்னா, என் கணவன் கள்வன் அல்லன்" (உரையாடல்)

கண்ணகி, பாண்டிய மன்னனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்று கூறினாள்.

கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக்குக.

அ) அமைச்சர் : "முல்லைக்கொடியின் துயர்தீர்த்து வாழ்வளித்த பாரி வள்ளலே! இன்று உங்கள் முகம் வாட்டமுடன் இருக்கக் காரணம் என்ன?"

ஆ) குழலி : "எழில், நாளை உன்வீட்டுக்கு வரலாம் என்று எண்ணுகின்றேன்; இருவரும் சேர்ந்து கணக்குகளைப் போடலாமா?

## 3. விடுபட்ட இடங்களில் தமிழெண்களை எழுதி நிரப்புக.

1. க,_____,_____,_____, ரு,_____,_____, அ,_____,_____.

2. கக,கஉ,_____,_____,_____, கரு,_____,_____,_____, உ0

## 4. கடிதம் எழுதும் பயிற்சி (அலுவலகக் கடிதம்)

அலுவலகக் கடிதம் எழுதும்போது சில விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். அலுவலகக் கடிதத்தை ஒருவரே தனியாகவும், பலர் சேர்ந்து கூட்டு விண்ணப்பமாகவும் எழுதலாம்.

### அலுவலகக் கடிதம் எழுதுதலின் படிநிலைகள்

1. அனுப்புநர் முகவரி
2. பெறுநர் முகவரி
3. விளி
4. பொருள்
5. கடிதச் செய்தி
6. வணங்கல் பகுதி
7. ஒப்பப் பகுதி
8. நாள்
9. இடம்
10. உறைமேல் முகவரி

தமிழ்

தமிழ்

**மாதிரிக் கடிதம்**

அனுப்புநர்
அ. பூங்குழலி,
எட்டாம் வகுப்பு,
அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,
திருவள்ளூர் – 602 001.
திருவள்ளூர் மாவட்டம்.

திருவள்ளூர்,
15.10.2010.

பெறுநர்
மேலாளர்,
திருவள்ளுவர் புத்தகப்பண்ணை,
சென்னை – 600 001.

மதிப்புக்குரிய ஐயா,

பொருள் : திருக்குறள் தெளிவுரை நூல் – பதிவு அஞ்சல்மூலம் அனுப்ப வேண்டுதல்– சார்பாக.

-----

வணக்கம், தங்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ள திருக்குறள் தெளிவுரை, நாற்பது நூல்கள் தேவைப்படுகின்றன. நூல்களைப் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன். நூல் ஒன்றுக்கு உருபா இருபது வீதம் நாற்பது நூலுக்குரிய தொகை உருபா எண்ணூற்றுக்கான வரைவோலையை இத்துடன் இணைத்துள்ளேன்.

தங்கள்,
(அ. பூங்குழலி)

இணைப்பு :
வரைவோலை எண் : 562710. இந்தியன் வங்கி, நாள் : 14.10.2010 இடம் : திருவள்ளூர்.

உறைமேல் முகவரி :

பெறுநர்
மேலாளர்,
திருவள்ளுவர் புத்தகப்பண்ணை,
சென்னை – 600 001.

பயிற்சி : காணாமல்போன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## பண்பு

முரளி, நாள்தோறும் பள்ளிக்குப் பேருந்தில் செல்வான். அவனோடு பேருந்தில் செல்வதற்கு நண்பர்கள் யாரும் விரும்பமாட்டார்கள். ஏன் தெரியுமா? பேருந்து, நிறுத்தத்துக்கு வந்தவுடன், முரளி எல்லாரையும் தள்ளிவிட்டு ஓடிப்போய் ஏறிக்கொள்வான்; யாரைப்பற்றியும் அவனுக்குக் கவலையில்லை. அடித்துப்பிடித்து ஏறுவதால் அவனைப் பேருந்தில் உள்ள அனைவரும் திட்டுவர். அவனோடு சேர்ந்து சென்றால் நண்பர்களுக்கும் திட்டுவிழும். அதனால், நண்பர்களும் ஒதுங்கிவிடுவர்.

### கூடிப்பேசுவோம்

1. முரளி நடந்துகொள்வது சரியா?
2. பேருந்தில் நாம் எவ்வாறு ஏற வேண்டும்?
3. உங்களுக்கு முரளியைப் போன்று நண்பர்கள் எவரேனும் உள்ளனரா? இருந்தால், அவர்களை எவ்வாறு திருத்துவீர்கள்?

## வாழ்க்கைத்திறன்

### பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

வளவனும், இனியனும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள். இனியன் ஒருநாள் வருத்தத்துடன் இருந்ததைக் கண்ட வளவன் அதற்கான காரணத்தை வினவினான். இனியன், தன்னுடைய தாயாருக்கு உடல்நலம் சரியில்லை என்றும், மருத்துவமனையில் அனுமதித்திருப்பதாகவும் கூறினான். அதனைக் கேட்ட வளவன், அவனுக்கு ஆறுதல் கூறினான்.

சில நாளுக்குப் பிறகு இனியன் பள்ளிக்கு வருவதனை நிறுத்திவிட்டான். இனியனைக் காணாமல் வளவன் மிகவும் மனம் வருந்தினான். அவனைத் தேடி, அவனது இல்லத்துக்குச் சென்றான். வீட்டில் இனியனின் தாயார் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அதனைக் கண்ட வளவன் மனம் கலங்கினான். நண்பனுக்கு ஏற்பட்ட இழப்பை அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. இனியனின் குடும்பம் ஏழைமை நிலையில் இருந்ததனால், அவனால் படிப்பைத் தொடரமுடியவில்லை.

இனியனுக்கு உங்களால் எவ்வாறெல்லாம் உதவமுடியும்?

இனியனின் மன உணர்வுகளை உங்களால் உணரமுடியுமா?

## மதிப்புக்கல்வி

### எளியவரை மதித்தல்

விவேகானந்தர் ஒருமுறை பசியால் வாடியிருந்தார். அவர் வாடியிருப்பதனை ஒருவர் பார்த்தார். அவரது பசியைப் போக்கவிரும்பினார். ‘ஐயா, நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கிறீர்களே, உங்களைப் பார்த்தால் உணவு உண்ணாததுபோலத் தெரிகிறது, சப்பாத்தி சுடுவதற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்களே சப்பாத்தி சுட்டுக்கொள்ளுங்கள்’ என்று கூறினார். விவேகானந்தர் ‘ஏன் நீயே எனக்குச் சுட்டுக்கொடுக்கமாட்டாயா?’ என்று வினவினார். ‘ஐயா நானோ ஓர் ஏழை. என் கைகளால் உங்களுக்கு உணவு கொடுக்கக்கூடாது’ என்றார். ‘மற்றவர்கள் சொல்வதைப்பற்றி யெல்லாம் எனக்குக் கவலையில்லை, நீயே சப்பாத்தி சுட்டுக்கொடு’ என்று கூறி, அவர் சுட்டுக்கொடுத்த சப்பாத்தியை உண்டார்.

விவேகானந்தரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

உங்கள் கருத்துகளை நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

தமிழ்

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

பண்டைத்தமிழர் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். செல்வத்தை மிகுதியாகப் பெற்றிருந்தோர், இல்லாதவருக்குக் கொடுத்து உதவினர். இன்றிருந்து நாளை மடியும் பொருட்செல்வத்தினும், நின்று நிலவும் அறச்செல்வமே உயர்ந்தது என்பதனை நன்கு உணர்ந்திருந்தனர்.

நால்வகைப் படையுடைய அரசனேயானாலும், அறநெறியே அவனுக்குச் சிறப்பைத் தரும் என்னும் கருத்தில் அசையா நம்பிக்கை வைத்திருந்தனர். அமிழ்தமே கிடைப்பினும், அதனைத் தனித்து உண்ணாமல், பிறருக்கு உவந்தளிப்பவரைப் பசிப்பிணி மருத்துவர் என அழைத்து மகிழ்ந்தனர்.

மனித இனம் முழுவதனையும் ஒன்றாகக் காணும் மனம் படைத்திருந்தனர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்தனர். தன்னிலையில் தாழாமையும் தாழ்வு ஏற்படின் உயிர் வாழாமையும் மானமெனக் கருதினர்.

**வினாக்கள்**

1. பண்டைத்தமிழர் , அறச்செல்வமே உயர்ந்தது எனக் கருதக் காரணம் என்ன ?
2. அரசனுக்கு நால்வகைப் படையைக்காட்டிலும் சிறப்பைத் தருவது எது ?
3. பிறருக்கு உவப்புடன் உணவளித்தோரை எவ்வாறு அழைத்தனர் ?
4. தமிழரின் மானம் எத்தகையது ?
5. உரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

**பட்டிமன்ற முறையில் குழு அமைத்துப் பேசுக.**

**மகிழ்ச்சிக்கு வழி பணமே ! மனமே !**

**நடுவர்**

அனைவருக்கும் வணக்கம். நாம் வாழ்கின்ற வாழ்க்கையில் மகிழ்ச்சியென்ற ஒன்று இல்லையென்றால், இந்த மனித இனம் காணாமல் போய்விடும். அந்த மகிழ்ச்சிக்கான வழி, பணத்தைத் தேடும் முயற்சியில் உள்ளதா ? அன்றி, மனத்தைப் பண்படுத்தும் முறையில் உள்ளதா ? என்பதனை அறியவே இந்தப் பட்டிமன்றம்.

முதலில், மகிழ்ச்சிக்கு வழி பணமே என்னும் தலைப்பில், தன் கருத்தைக் கூற வருகிறார் அந்த அணியின் தலைவர்.

(பணமே) அணித்தலைவர் – 1

நடுவர், மாற்றுக்கருத்து அணித்தலைவர் மற்றும் அவையோர் அனைவருக்கும் என் வணக்கம். நடுவர் அவர்களே! பணமில்லாத வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது வெறும் கானல்நீர்தான். ஒன்றுக்கும் உதவாத மனத்தை வைத்துக்கொண்டு, ஞானிகளும் துறவிகளும் வேண்டுமானால் மகிழ்ச்சியைத் தேடிக்கொள்ளலாம்.

ஆனால், நம் போன்றவர்களுக்கு மனத்தை மட்டும் வைத்து மகிழ்ச்சியடைய வாய்ப்பே இல்லை. பொருளில்லாதவனுக்கு இந்த உலகம் இல்லையென்று வள்ளுவர் தெரியாமலா சொல்லிச் சென்றார். எனவே, மகிழ்ச்சிக்கு வழி பணமே எனத் தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

(மனமே) அணித்தலைவர் –2

நடுவருக்கும் மாற்றுக்கருத்து அன்பர்க்கும் மற்றும் அவையோர்க்கும் என் பணிவார்ந்த வணக்கம். நடுவர் அவர்களே! மனிதர்கள் பணம், பணம் என அலைந்து வாழ்க்கையை முழுமையாக வாழத் தெரியாதவர்களாக உள்ளார்கள்.

நம் முன்னோர்கள் எல்லாம் பணம் வைத்தா வாழ்ந்தார்கள்? பணம், மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று. ஆனால், மகிழ்ச்சி அப்படியில்லை. அது நம் மனம் அல்லவா?

போதும் என்னும் மன நிறைவில் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு வாழ்பவர்களின் மகிழ்ச்சியில் ஒரு துளியைக்கூடக் கோடி ரூபாயை வைத்துக்கொண்டு போதாது என்னும் மனம் படைத்தவர்கள் வாழ்வதில்லை. பணத்தால் ஆடம்பரமாக வேண்டுமானால் வாழலாம். ஆனால், அமைதியாக வாழ முடியாது.

நடுவர்

அருமை! அருமை! நன்றாகவே தன் கருத்தை அழுத்தமாக எடுத்துரைத்தார் அணித்தலைவர். இருந்தும் 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பார்கள். பணம் இருந்தால் அல்லவோ பசியாற முடியும். வெறும் மனத்தால் முடியுமா? ஆனாலும், பசிக்கு உணவுதான் தேவையே அன்றிப் பணம் இல்லை. வெறும் பணத்தைத் தின்றா பசியாறிட முடியும்?

வாழ்வதற்குப் பணம் தேவைதான். ஆனால், பணமே வாழ்க்கை ஆகுமா? பணம் உள்ளவர் இல்லாதவர் என்னும் இருவர்தம் வாழ்க்கையிலும் இன்பமும் துன்பமும் மாறிமாறித்தானே வருகின்றன.

எதுவாக இருந்தாலும் மகிழ்ச்சியை நமக்குத் தருவது மனந்தான் எனத் தீர்ப்பளித்து இப்பட்டிமன்றத்தை நிறைவுசெய்கிறேன். நன்றி, வணக்கம்.

தமிழ்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

**கீழ்க்காணும் பாடலை வாய்விட்டுப் படிக்க.**

நூலைப்படி – சங்கத்தமிழ்
நூலைப்படி – முறைப்படி
நூலைப்படி

காலையில்படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படித் தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி

– பாரதிதாசன்

| எழுதுதல் திறன் | |
|---|---|
| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |

**கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.**

நேர்காணல், துப்பறிதல், நோன்பு, தோகை, நொச்சி, தையல், நிகழ்ச்சி, தேர்வு, நீச்சல், திரட்டு, நடைமுறை, தூக்கம், நெய்வேலி, தொலைபேசி, தலைப்பு, நூலாய்வு, தெற்கு, நாடு, தாமரை, தீஞ்சுவை, நைதல், நுங்கு.

| | | | | |
|---|---|---|---|---|
| த | | | | |
| | | | | |
| | | | | |
| ந | | | | |
| | | | | |
| | | | | |

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

**கொடுக்கப்பட்டுள்ள பத்தியில் அமைந்துள்ள இலக்கியவகைச் சொற்களைக் கண்டறிந்து வகைப்படுத்துக.**

ஞாயிற்றின் உதயத்தில் புதிய நாள் தொடங்கியது. துயில் எழுந்த கண்ணன், கேணிப் பக்கம் சென்றான். எயிறு துலக்கி, உணவுண்டு, பள்ளி செல்வதற்குத் தன் தாயை விளித்தான். இறைவனுக்குப் புஷ்பம் சூட்டிய தாய், தன் மகனை நோக்கினாள். பள்ளிக்குச் சென்று வா என்றாள்.

பண்டிகை வருவதனால், துணி வியாபாரம் செய்யும் தன் தந்தை, புதுத்துணி எடுத்துத் தருவார் என்றெண்ணியவாறு சந்தோஷமாகச் சென்றான். பள்ளிக்குச் செல்லும் வழியில், வித்தை செய்பவன் ஸர்ப்பத்தை வைத்துக்கொண்டு வேடிக்கை காட்டுவதனைப் பார்த்தான்.

| இயற்சொல் | திரிசொல் | திசைச்சொல் | வடசொல் |
|---|---|---|---|
| ஞாயிறு | | | |
| | | | |
| | | | |
| | | | |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

நாம் நாள்தோறும் பார்க்கின்ற, படிக்கின்ற செய்தித்தாள்கள் அன்றலர்ந்த மலர்களாகப் புத்தம்புதிய செய்திகளோடு கண்ணையும் கருத்தையும் கவரும்வண்ணம் வெளிவருகின்றன. உலகில் எங்கோ ஒருமூலையில் நடைபெறும் சிறிய நிகழ்வும் செய்தியாகிறது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றத்தின் விளைவாக உடனுக்குடன் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு வெளியாகும் செய்திகள், பல்வேறு படிநிலைகளைக் கடந்து செய்தித்தாள்களாகின்றன.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



| தொகுத்தல் | செயல்பாடு – 7 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தொடர்புபடுத்தித் தொகுத்து எழுதுக.

செய்தி உருவாகும் வரலாறு




| நிறுத்தக்குறிப் பயன்பாடு | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் பத்தியில், நிறுத்தக்குறிகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துக.

மரத்துக்குப் பின்னால் மறைந்திருந்த முல்லா இப்போது மெதுவாக வெளியில் வந்தார் ஐயா வாழ்க்கையில் ஒரு நிமிடம்கூட மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டீரே உங்கள் வருத்தத்தை நீக்குவதற்காகத்தான் நான் பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓடினேன் பறிபோய் விட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த செல்வம் திரும்பக் கிடைத்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது நீங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடுஇணையே இல்லை அல்லவா என்று முல்லா கேட்டார்

| சொற்களஞ்சியப்பெருக்கம் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் வண்ணமிட்ட சொற்களுடன் இல் அல்லது உள் என்னும் சொற்களை இணைத்து எழுதுக.

(எ.கா.) சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியம் ஒன்று.
சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

1. ஏறு தழுவுதல் வீரவிளையாட்டு ஒன்று.
2. பறவை மரம் கூடு கட்டியிருந்தது.
3. பேரறிஞர் அண்ணா சிறந்த மேடைப் பேச்சாளர் ஒருவர்.
4. தமிழ் நூல்கள் எளிய நடை எழுதுதல் வேண்டும்.
5. திருக்குறள் அற நூல்கள் ஒன்று.
6. பள்ளியில் நடைபெற்ற ஓவியப்போட்டி கலந்து கொண்டேன்.

தமிழ்

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் :10

1. கோடிட்ட இடத்தில் உரிய பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 X 1 = 5

1. குழவி என்பதன் பொருள் ________________ .
   அ) ஒருவகைத் தேனீ  ஆ) ஒருவகைக் குருவி  இ) குழந்தை
2. பிணி என்பதன் பொருள் ________________ .
   அ) நோய்  ஆ) வறுமை  இ) ஏழை
3. சலவர் இச்சொல்லின் எதிர்ச்சொல் ________________ .
   அ) நண்பர்  ஆ) நல்லவர்  இ) வஞ்சகர்
4. கழறும் என்பதன் பொருள் ________________ .
   அ) பேசும்  ஆ) குழறும்  இ) எழுதும்
5. குவை என்பதன் பொருள் ________________ .
   அ) குவளை  ஆ) குவியல்  இ) மலை

2. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும் 5 X 1 = 5

அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களுள் நான்கனை எழுதுக.
ஆ) யாருடன் சேராமல் இருந்தால் இனிமை தரும் ?
இ) குழந்தை எப்படி வாழ்தல் வேண்டும் ?
ஈ) யாருடைய அழகு வேண்டா எனக் கவிஞர் சச்சிதானந்தன் கூறுகிறார் ?
உ) கவிஞர் சச்சிதானந்தன் பிறந்த நாடு எது ?

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# வழக்கு

## இயல்பு வழக்கு, தகுதி வழக்கு

மாணவன் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். இன்றைய இலக்கண வகுப்பில் வழக்கு பற்றிப் பார்ப்போம்.

அருள்மொழி : ஐயா. வழக்கு என்பது நீதி மன்றத்தில் தொடுக்கும் வழக்குதானே ?

ஆசிரியர் : நீதிமன்றத்தில் தொடுக்கும் வழக்கு வேறு; இலக்கண வழக்கு என்பது வேறு. நம் முன்னோர் எந்தப்பொருளை எந்தச்சொல்லால் வழங்கி வந்தனரோ, அதனை அப்படியே நாமும் வழங்கி வருவதற்கு வழக்கு என்று பெயர். இஃது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

நன்னன் : இயல்பு வழக்கு என்றால் என்ன ? ஐயா .

ஆசிரியர் : ஒரு பொருளைச் சுட்டுவதற்கு, எந்தச் சொல் இயல்பாக வருகிறதோ, அந்தச் சொல்லாலேயே வழங்குவதை இயல்பு வழக்கு என்பர். இதனை இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூவகையாகக் கூறுவர்.

யாழினி : இலக்கணமுடையது என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : இலக்கணப்பிழை இல்லாமல் வழங்கி வருவதனை இலக்கணமுடையது என்பர். சான்றாக, யாழினி பாடம் படித்தாள் – இத்தொடர் இலக்கணப் பிழையின்றி அமைந்தது அல்லவா !

தீரன் : இலக்கணப்போலி என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : நகர்ப்புறம், கால்வாய், கொம்பு நுனி போன்ற இலக்கணமுடைய சொற்களைப் புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு என மாற்றி, நம் முன்னோர் இலக்கணமுடையதுபோல வழங்கி வருவதனை 'இலக்கணப்போலி' என்கிறோம்.

வண்டார்குழலி : மரூஉ என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : தஞ்சாவூர், கோயமுத்தூர் இவ்வூர்களை எவ்வாறு சுருக்கி அழைக்கிறோம் ?

வண்டார்குழலி : தஞ்சை, கோவை ஐயா.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். தஞ்சாவூர், கோயமுத்தூர் இவை தஞ்சை, கோவை எனச் சிதைந்து வந்துள்ளதால், இவற்றை மரூஉ என அழைக்கிறோம்.

முத்தரசு : தகுதி வழக்கு என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : தகுதியான சொற்களைப் பேசுவது தகுதி வழக்கு என்பர். இஃது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூவகைப்படும்.

பொன்மணி : இடக்கரடக்கல் என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : பலர் முன்னே கூறுவதற்கு இடர்ப்பாடாகத் தோன்றும் சொற்களை நீக்கித் தகுந்த சொற்களால், அப்பொருளைத் தெரிவிப்பது இடக்கரடக்கல் என்பர். சான்றாக, 'வாய் கழுவி வந்தேன்' என்னும் இத்தொடரை நீக்கி, 'வாய் பூசி வந்தேன்' எனக் கூறுவர்.

கண்மணி : 'மங்கலம்' என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : அமங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை வழங்குவது 'மங்கலம்' என்பர். சான்றாக, இறந்தாரை இறைவனடி சேர்ந்தார் எனக் கூறுவர்.

மலர்விழி : 'குழூஉக்குறி' என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும்வகையில், ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயரைக் குழூஉக்குறி என்பர்.

சான்றாகப் பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்பர்.

தமிழ்

பயிற்சி

1. தஞ்சைப் பகுதியெங்கும் காவிரியாறு கால்வாய் வழியாக ஓடிப் பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.

இத்தொடரில் காணும் இயல்பு வழக்குச் சொற்களைக் கீழுள்ளவாறு வகைப்படுத்துக.

அ) இலக்கணமுடையது

ஆ) இலக்கணப்போலி

இ) மரூஉ

2. வெள்ளாடு பிடித்துவரும் மாமாவைப் பார்த்து, யானை வருகிறது எனச் சிறுவர்கள் ஓடினர்.

இத்தொடரில் தகுதி வழக்குக்கு உரியவற்றை வட்டமிடுக.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. 'சிவிறி' என்பதை 'விசிறி' எனக் கூறுவது ____________ வழக்கு.
2. இறந்தாரை 'இறைவனடி சேர்ந்தார்' என்பது ____________ வழக்கு.
3. 'விளக்கைக் குளிர வை' என்பது ____________ வழக்கு.

2. பொருத்துக.

1. இலக்கணமுடையது – கோவை
2. இலக்கணப்போலி – நிலம்
3. மரூஉ – புறநகர்

3. பொருத்துக.

1. இடக்கரடக்கல் – பறி
2. மங்கலம் – கால் கழுவி வந்தான்.
3. குழூஉக் குறி – இறைவனடி சேர்ந்தார்.

ஆ) குறுவினாக்கள்

1. வழக்கு என்றால் என்ன ?
2. வழக்கு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. இலக்கணப்போலியைச் சான்றுடன் விளக்குக.
4. மரூஉ என்பது யாது ? சான்று தருக.
5. மங்கலம் என்றால் என்ன ? விளக்குக.

தமிழ்

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்புகள் குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

1. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி
2. இணையத்தின் இணையற்ற சாதனை

ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஏரி நிரம்பிக் கடைக்கால்வழி வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. ஏரிக்கரை அருகே நிலக்கிழார் ஒருவரும் புலவர் இருவரும் சென்றுகொண்டிருந்தனர். அந்த ஏரிப் பாய்ச்சல் பகுதியில் நிலக்கிழாரின் நிலம் இருந்தது. 'ஏரி கடைபோகிறது' என்றார் முதற்புலவர். அவர் கூறி முடிக்கும் முன்னே, ஏரியின் கரை நடுவே உடைந்துவிட்டது. 'ஏரி இடைபோகிறது' என்றார் மற்றொரு புலவர்.

ஏரி உடைந்துபோனதால், தம் வயல்கள் பாழாவதனைக் கண்ட நிலக்கிழார், 'கடைபோவதனையும் இடைபோவதனையும் தானே பார்த்தீர்கள்; முதல் போவதனைப் பார்க்கவில்லையா ?' என்றார். நிலக்கிழார் கூறியதன் பொருள் விளங்காமல் அவ்விருவரும், நிலக்கிழாரின் முகத்தைப் பார்த்தனர். ஆம், ஏரி உடைந்தமையால் என் 'முதல் (செல்வம்) போகிறது' என்று தம் வயல்களைக் காட்டினார் நிலக்கிழார்.

இ) எழுதுதல் திறன்

குறிப்புகளை விரித்து எழுதும் திறன்

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக்கொண்டு கதைப்பகுதியை விரித்து எழுதுதல்; கதைக்கேற்ற தலைப்புக் கொடுத்தல்.

(எ.கா.) வயதான தந்தை – நான்கு மகன்கள் – ஒற்றுமை இல்லை – தந்தை கவலைப்படுதல் – அனைவரையும் அழைத்தல் – குச்சிகளை ஒருங்கே கட்டச் செய்தல் – உடைக்கச் சொல்லுதல் – உடைக்க இயலாமற் போதல் – கட்டிலிருந்து தனித்தனியாகப் பிரித்தெடுக்கச் செய்து உடைக்கச் சொல்லுதல் – எளிதாக உடைத்தல் – ஒற்றுமையின் இன்றியமையாமையை வலியுறுத்துதல்.

### ஒற்றுமையே வலிமை

வயதான தந்தைக்கு மகன்கள் நால்வர் இருந்தனர். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக்கொண்டே இருந்தனர். அதனால், மனம் வருந்திய தந்தை, அவர்களை எப்படியாவது திருத்தவேண்டும் என எண்ணினார்.

ஒருநாள், அவர்கள் அனைவரையும் அழைத்தார். ஓரடி நீளமுள்ள குச்சிகள் பலவற்றைச் சேர்த்து அவர்களைக் கட்டச்செய்தார். பின்னர், ஒவ்வொருவரிடமும் அவற்றைக் கொடுத்து உடைக்கச் சொன்னார். ஆனால், குச்சிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் அவர்களால் உடைக்க இயலவில்லை. அக்கட்டிலிருந்து ஒரு குச்சியை மட்டும் வெளியே எடுக்கச்செய்து அவற்றை ஒவ்வொருவருக்கும் கொடுத்து உடைக்கச் சொன்னார். அவர்கள் எளிதாக அக்குச்சிகளை உடைத்துவிட்டனர். 'இச்செயலிலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது ?' என்று கேட்டார். 'குச்சிகள் தனித்தனியாக இருந்தால் எளிதில் உடைத்துவிடலாம்' என்று ஒருவன் கூறினான்.

'நீங்களும் ஒற்றுமையின்றி இவ்வாறு தனித்தனியாகச் சண்டையிட்டுக்கொண்டு இருந்தால், எதிரிகள் உங்களை விரைவாக அழித்துவிடுவர். எனவே, நீங்கள் நால்வரும் ஒற்றுமையுடன் செயல்பட்டால் எளிதில் வெற்றிபெறலாம்' என்று கூறினார். ஒற்றுமையின் பெருமையை அவர்களும் உணர்ந்துகொண்டு 'இனிச் சண்டையின்றிக் கூடி வாழ்வோம்' என்று கூறினர்.

தமிழ்

பயிற்சி

குறிப்புகளைக்கொண்டு கதைப்பகுதியினை விரித்து எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

மக்கள் சோம்பலாக இருத்தல் – மன்னன் கவலைப்படுதல் –அவர்களை மாற்ற நினைத்தல்– மக்கள் நாள்தோறும் செல்லும் வழியில் பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தல் – பார்த்தவர் யாரும் அப்புறப்படுத்தவில்லை – மன்னன் வருந்துதல் – காவலரைக்கொண்டு அப்புறப்படுத்துதல் – கல்லுக்கு அடியில் பெரும்புதையல் இருத்தல் – அந்தக் கல்லை நகர்த்துபவருக்கே அஃது உரிமை என அறிய வைத்தல் – தங்களில் யாராவது ஒருவர் அக்கல்லை நகர்த்தியிருந்தால், புதையல் கிடைத்திருக்கும் என மக்கள் நினைத்தல் – முயற்சியின்மையையும் சோம்பல்தன்மையையும் நினைத்து வருந்துதல் – திருத்திக் கொள்ளுதல் – மன்னன் மகிழ்தல்.

ஏ) சொற்போர் – பட்டிமன்றம் நடத்துக.

அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கத்துக்கா ? அழிவுக்கா ?

உ) கலந்துரையாடும் திறன்

கணினிப் பயன்பாடு – உன் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## மொழித்திறன் பயிற்சி

### மரபுச்சொற்கள்

யானைக்குட்டி, யானைக்கன்று

மேற்காணும் இருசொற்களில் மரபு பிறழ்ந்த சொல்லை உங்களால் கண்டறிய முடிகிறதா ? யானைக்குட்டி என்பது மரபு பிறழ்ந்த சொல். யானைக்கன்று என்பதே மொழிமரபுக்கு ஏற்ற சொல். முன்னோர் எச்சொல்லை எப்படி வழங்கினரோ அச்சொல்லை அப்படியே ஏற்று நாமும் வழங்குதல் மரபு. நாம் நாள்தோறும் பயன்படுத்தும் மரபுச்சொற்கள் சிலவற்றை அறிவோம்.

**விலங்குகளின் இளமைப்பெயர்கள்**

| | | | |
|---|---|---|---|
| அணிற்பிள்ளை | யானைக்கன்று | நாய்க்குட்டி | கழுதைக்குட்டி |
| கீரிப்பிள்ளை | மான்கன்று | பூனைக்குட்டி | பன்றிக்குட்டி |
| சிங்கக்குருளை | எருமைக்கன்று | ஆட்டுக்குட்டி | எலிக்குட்டி |
| புலிப்பறழ் | குதிரைக்குட்டி | குரங்குக்குட்டி | |

**விலங்குகளின் வாழிடங்கள்**

| | | |
|---|---|---|
| ஆட்டுப்பட்டி | கோழிப்பண்ணை | யானைக்கூடம் |
| குதிரைக்கொட்டில் | மாட்டுத்தொழுவம் | வாத்துப்பண்ணை |

**விலங்கு பறவை இனங்களின் ஒலிமரபு**

| | | |
|---|---|---|
| ஆந்தை அலறும் | குதிரை கனைக்கும் | நரி ஊளையிடும் |
| கழுதை கத்தும் | குயில் கூவும் | புலி உறுமும் |
| காக்கை கரையும் | கோழி கொக்கரிக்கும் | மயில் அகவும் |
| கிளி கொஞ்சும்/பேசும் | சிங்கம் முழங்கும் | யானை பிளிறும் |

**தாவர உறுப்புப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| ஈச்ச ஓலை | தாழை மடல் | பனையோலை |
| சோளத்தட்டை | தென்னையோலை | பலாஇலை |
| மாவிலை | மூங்கில் இலை | வாழைஇலை |
| வேப்பந்தழை | கமுகங்கூந்தல் | நெற்றாள் |

**காய்களின் இளநிலை**

| | | |
|---|---|---|
| அவரைப்பிஞ்சு | மாவடு | முருங்கைப்பிஞ்சு |
| தென்னங்குரும்பை | வாழைக்கச்சல் | வெள்ளரிப்பிஞ்சு |

**செடி கொடி மரங்களின் தொகுப்பிடம்**

| | | |
|---|---|---|
| ஆலங்காடு | சவுக்குத்தோப்பு | தென்னந்தோப்பு |
| கம்பங்கொல்லை | சோளக்கொல்லை | தேயிலைத்தோட்டம் |
| பனந்தோப்பு | பலாத்தோப்பு | பூந்தோட்டம் |

**பொருள்களின் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| ஆட்டுமந்தை | கற்குவியல் | சாவிக்கொத்து |
| திராட்சைக்குலை | வேலங்காடு | பசுநிரை |
| மாட்டுமந்தை | யானைக்கூட்டம் | வைக்கோற்போர் |

**பொருளுக்கேற்ற வினைமரபு**

| | | |
|---|---|---|
| சோறு உண் | நீர் குடி | பால் பருகு |
| பழம் தின் | பாட்டுப் பாடு | கவிதை இயற்று |
| கோலம் இடு | தயிர் கடை | விளக்கை ஏற்று |
| தீ மூட்டு | படம் வரை | கூரை வேய் |

**பயிற்சி :**

**1. பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

அ) குமரன் பழம் ________________ (உண்டான், தின்றான்)

ஆ) காலையில் சேவல் ________________ (கூவியது, கத்தியது)

இ) ஆட்டு ________________ (கூட்டம், மந்தை) வருகிறது.

ஈ) எங்கள் ஊரில் வாழைத் ________________ (தோட்டம், தோப்பு) உள்ளது.

உ) குயில் ________________ (கூவியது, அகவியது)

2. கீழுள்ள பெயர்களுக்கு உரிய இளமைப் பெயர்களை எழுதுக.

அ) கீரி ____________

ஆ) மான் ____________

இ) சிங்கம் ____________

ஈ) பூனை ____________

உ) எருமை ____________

3. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) மக்கள் | – | போர் |
| ஆ) வீரர் | – | கற்றை |
| இ) விறகு | – | கூட்டம் |
| ஈ) சுள்ளி | – | கட்டு |
| உ) வைக்கோல் | – | படை |

4. எண்ணுப்பெயர்களைத் தமிழெண்களுடன் பொருத்துக.

| எண்ணுப் பெயர் | – | எண் |
|---|---|---|
| 1. பன்னிரண்டு | – | ரு |
| 2. ஒன்பது | – | கரு |
| 3. ஐந்து | – | சுூ |
| 4. பதினைந்து | – | க௨ |
| 5. பதின்மூன்று | – | கஙு |

5. கட்டுரைப்பயிற்சி :

நுகர்வோர் பாதுகாப்பு

## வாழ்க்கைத்திறன்

### சிறப்பாக நட்புக்கொள்ளும் திறன்

கதிரவனும் தமிழழகனும் எட்டாம் வகுப்பில் படிக்கின்றனர். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் இருவரது நட்பைப் பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டினார்கள்.

கதிரவனுக்குக் கணக்குப் புரியவில்லையென்றால், தமிழழகன் பொறுமையாகச் சொல்லித் தருவான். தமிழழகனுக்கு இலக்கணம் புரியவில்லையென்றால், கதிரவன் விளக்குவான்.

பாடம் சொல்லித் தருவதில் மட்டுமின்றி, ஒருவர் உணவைக் கொண்டுவரவில்லையென்றால், மற்றொருவருடன் பகுத்து உண்பது, எழுதுகோல் கொடுத்து உதவுவது என எல்லாவற்றிலும் ஒருவருக் கொருவர் சிறப்பாக நட்புக் கொண்டிருந்தனர்.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருவரிடமும் இயல்பாகவே அமைந்திருந்தது. அதே வகுப்பில் படிக்கும் மதிவாணனோ யாருடனும் நட்புடன் பழகியதில்லை. அவனுடைய பொருள்களை யாருக்கும் கொடுக்கமாட்டான். தானே எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்கவேண்டும் என்று எண்ணுவான்.

பிறர் சொல்வதனைக் கேட்க அவனுக்குப் பிடிக்காது. தான் சொல்வது சரியோ தவறோ மற்றவர் தலையாட்ட வேண்டும் என்று நினைப்பான். மற்றவர்களுக்கு மதிப்பளிக்கமாட்டான்.

நீங்களே சொல்லுங்கள்.

மதிவாணன் இவ்வாறு நடந்துகொண்டால், அவனுக்கு எப்படி நண்பர்கள் கிடைப்பார்கள் ?

ஒருவரோடு ஒருவர் சிறப்பாக நட்புக்கொள்வது எப்படி ?

நீங்கள் கதிரவனைப் போன்றவரா ? மதிவாணனைப் போன்றவரா ?

கீழுள்ள வினாக்களுக்கு விடையளித்து, உங்களை நீங்களே மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்.

1. உங்கள் நண்பருக்குக் கடுமையான காய்ச்சல், ஒருவாரமாக அவர் பள்ளிக்குச் செல்லவில்லை. இந்த நிலையில், அந்த வாரத்தில் நடைபெற்ற பாடங்கள் பற்றி வீட்டிற்கு வந்து சொல்லிவிட்டுச் செல்லுமாறு நண்பர் உங்களை அழைக்கிறார். நீங்கள் என்ன சொல்வீர்கள் ?
   - அ) எனக்கு வேறு வேலை இருக்கிறது; வர இயலாது.
   - ஆ) வேறு யாரையாவது கேட்டுக்கொள்.
   - இ) அதனால் என்ன, இப்போதே வந்து சொல்கிறேன்.
2. நீங்கள் முழுமூச்சாக வரைபடம் வரைந்துகொண்டு இருக்கிறீர்கள். அங்கு வந்த உங்கள் நண்பர், உங்களிடம் அளவுகோல் வேண்டும் என்று கேட்கிறார். நீங்கள் என்ன சொல்வீர்கள் ?
   - அ) எனக்கு வேண்டும்; தர முடியாது.
   - ஆ) கொஞ்சம் பொறு; கோடு போட்டுவிட்டுத் தருகிறேன்.
   - இ) அளவுகோல்கூட இல்லாமல் ஏன் பள்ளிக்கு வருகிறாய் ?



## மதிப்புக்கல்வி

### தன்மதிப்பைப் பேணுதல்

நம் நாட்டின் புகழ்பெற்ற நாட்டுப்பாடல் வந்தே மாதரம். இப்பாடல் தோன்றியது எப்படி என்று தெரியுமா ? பக்கிம் சந்திரர் என்பவர் வங்காளத்தில் மாவட்டத் துணை ஆட்சியாளராக இருந்தார். ஒருமுறை இராமகிருட்டினரிடம் வாழ்த்துப்பெறச் சென்றார். இராமகிருட்டினர் அவரிடம், "உன்பெயர் என்ன ?'' என்று வினவினார். "என்பெயர் பக்கிம் சந்திரர்'' என்றார் அவர். அப்படியென்றால், "நீ வளைந்த சந்திரனா ? அதாவது தேய்பிறையா ? ஒருவேளை ஆங்கிலேயரிடம் வேலை செய்தே இப்படி வளைந்து போய்விட்டாயா ?'' என்று கேலியாகக் கேட்டார்.

"வங்காளமொழியில் பக்கிம் என்றால் வளைந்த என்பது பொருள்."

அப்போதுதான், தன்மதிப்பை இழந்து அடிமையாக வேலை செய்கின்றோம் என்ற உணர்வு பக்கிம் சந்திரருக்கு ஏற்பட்டது. உடனே, அந்த வேலையை விட்டுவிட்டார். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். அப்போது எழுதிய நூல்தான் ஆனந்தமடம். அந்த நூலில் இடம் பெற்ற புகழ்பெற்ற பாடல்தான் வந்தே மாதரம்.

எப்போதும் நாம், நம் மதிப்பைக் காத்துக்கொள்ளுதல் வேண்டும்; ஒருபோதும் விட்டுத்தரக்கூடாது. பலவற்றை விட்டுத் தரலாம்; சிலவற்றை விட்டுத்தரவே கூடாது.

1. நீ எவற்றை விட்டுத் தருவாய் ?
2. நீ எவற்றை விட்டுத் தரமாட்டாய் ?
3. விட்டுக்கொடுத்தவர்கள் கெட்டுப்போனதில்லை; கெட்டுப்போனவர்கள் விட்டுக்கொடுத்தது இல்லை. இக்கருத்தைக் குறித்துக் கருத்தாடல் செய்க.

தமிழ்

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

**கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.**

'தென்றல் அசைந்துவரும் தென்தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். அத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும்'.

**வினாக்கள்**

1. தென்தமிழ்நாட்டில் மலைவளம் படைத்த பழம்பதி எது ?
2. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள மரங்களின் பெயர்களைக் கூறுக.
3. தமிழ்ப் பாட்டிசைக்கும் உயிரினம் எது ?
4. அருவியினின்று சிதறும் நீர்த்திவலைகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது ?
5. திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்றின் பயன் யாது ?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

**கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்தைக் குழுவில் கலந்துரையாடி, ஐந்து மணித்துளி பேசுக.**



தண்ணீரைச் சேமிப்போம்;
தாவரங்களை வளர்ப்போம்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியில் மயங்கொலிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை உரிய ஒலிப்புடன் படித்துக் காட்டுக.**

குளிர்ந்த சோலையில் மயில்கள் விறலியர்போல் ஆடுகின்றன. தாமரை மலர்கள் வண்ண விளக்குகளாகவும் மேகங்களின் முழக்கம் முழவோசையாகவும் தண்ணிய நீரலை அரங்கை அலங்கரிக்கும் வண்ணத்திரைகளாகவும் வண்டுகளின் இன்னொலி மகரயாழின் இசையாகவும் அமைகின்றன. மாமன்னன் குவளைக்கண் விழித்துநோக்கி, மகிழ்வுடன் வீற்றிருந்தான் என மருதநிலைக் காட்சி, காண்போர்தம் இதய அரங்கில் காணுமாறு சிறந்த சொல்லோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

| எழுதுதல் திறன் | |
|---|---|
| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |

**கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.**

பாடம், மன்றம், பட்டம், மாந்தளிர், மௌனம், பிரிவு, மிதவை, பீலி, மீளாய்வு, புதுமை, முல்லை, பூவிழி, மூதுரை, பெருமை, மென்மை, பேழை,மேம்படு, பைந்தழை, மைவிழி, பொறுமை, மொட்டு, மோனை, போட்டி, பௌவம்

| | | | | |
|---|---|---|---|---|
| ப | | | | |
| | | | | |
| | | | | |
| ம | | | | |
| | | | | |
| | | | | |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.**

கணினியைப் பயன்படுத்திக் கற்கும் கல்வியே கணினிக் கல்வி. வீட்டிலிருந்தபடியே தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வானியல், வரலாறு, புவியியல், பொது அறிவு, நடனம், கைவேலைப்பாடு என எந்த ஒன்றையும் கற்றுக் கொள்ள இயலும். தொலைதூரக் கல்வியை இணையத்தின் உதவியால் கணினிவழியாகப் பலரும் கற்று வருகின்றனர்.

தமிழ்

வருங்காலக் கல்வி கணினிக்கல்வியாக அமையும். தட்டுங்கள் இணையத்தின் கதவை, உலகத்தின் சாளரம் திறக்கும்; தேடுங்கள் இணையத்தளத்தில், உலக அறிவெல்லாம் கிடைக்கும். இணையத்துக்கு இணையானது இணையமொன்றே. இணையத்தில் எல்லாம் இருக்கிறது.

| விழிப்புணர்வு பெறுதல் | செயல்பாடு – 6 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

நாம் அறிவியல் தொழில்நுட்பத்தை மிகுதியாகப் பயன்படுத்தி வருகின்றோம். உடனுக்குடன் செய்திகளைப் பெறவும், பிறருக்கு அனுப்பவும் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துகிறோம். சான்றாகத் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, கைப்பேசி, கணினி, இணையத்தளம் போன்றவற்றைக் கூறலாம். நமக்கு நன்மையைத் தரக்கூடிய ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவது சைபர் குற்றம் என அழைக்கப்படுகிறது. கைப்பேசி வாயிலாக, ஒருவரைப்பற்றித் தரக்குறைவாகச் சித்திரித்தல், அவருக்குத் தெரியாமல், அவரைப் புகைப்படம் எடுத்தல், அவருடைய ஒப்புதலின்றி புகைப்படத்தையும், முகவரியையும், கைப்பேசி எண்ணையும் இணையத்தளத்தில் வெளியிடுதல், அவரைப்பற்றித் தவறான செய்திகளை மற்றவர்களுக்குக் குறுஞ்செய்தியாக அனுப்புதல், சமுதாயத்தில் குழப்பத்தை விளைவிக்கும் எண்ணத்தில், இணையத்தளத்தில் மின்னஞ்சல் வாயிலாகவோ கைப்பேசியில் குறுஞ்செய்தி வாயிலாகவோ அனைவருக்கும் தவறான செய்திகளை அனுப்புதல் போன்ற செயல்களைச் சைபர் குற்றம் என அழைக்கின்றனர்.

ஒருமுறை, சிலருடைய கைப்பேசியில் ஒரு குறுஞ்செய்தி பரவியது. ‘‘கைகளில் மருதாணி வைத்துக் கொள்பவர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது’’, எனத் தவறான செய்தி பரவியது. அச்செய்தியில், எள்ளளவும் உண்மையில்லை. சமுதாயத்தில் சீர்குலைவு ஏற்படுத்துதலே, இச்செய்தியைப் பரப்பியவரின் நோக்கமாக இருந்துள்ளது. விளையாட்டாகச் செய்தியைப் பரப்புவதும் சைபர் குற்றமே. நாம் விழிப்புணர்வுடன் இருந்து இத்தகைய செய்திகளைப் புறக்கணித்தல் வேண்டும். குற்றம் செய்பவர்களிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும்.

வினாக்கள்

1. நாம் பயன்படுத்தும் ஊடகங்களின் பெயர்களைக் கூறுக.
2. ஊடகங்களின் பயன்களுள் இரண்டனைக் கூறுக.
3. சைபர் குற்றம் என்பது யாது ?
4. சைபர் குற்றங்களுள் இரண்டனைக் கூறுக.
5. ஊடகத்தின் வாயிலாகத் தவறான செய்தி பரவும்போது, நாம் செய்யவேண்டியது என்ன ?

| பொருத்துக. | செயல்பாடு – 7 |
|---|---|

பலபொருள் தரும் ஒருசொல்லைப் பொருத்துக.

| பலபொருள் | ஒருசொல் |
|---|---|
| உள்ளம், வீடு, இடம் | திங்கள் |
| மாதம், கிழமை, சந்திரன் | திரு |
| அழகு, நகை, வரிசை | அகம் |
| கதிரவன், வெளிச்சம், விளக்கு | அணி |
| மேன்மை, இலக்குமி, செல்வம், மரியாதை அடை | ஒளி |

| பாடல் பொருளுணர்தல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, வினாக்களுக்கு விடையளிக்க.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

– பாரதிதாசன், அழகின் சிரிப்பு

வினாக்கள்

1. பாடலில் குறிப்பிடப்படும் மரம் எது ?
2. குரங்கு விழுதென்று எதனைத் தொட்டது ?
3. பாடலில் இடம்பெற்றுள்ள உவமை எது ?
4. குரங்கு தன் வாலை என்னவென்று நினைத்தது ?
5. பிள்ளை என்னும் பொருள் தரும் சொற்கள் இரண்டனைக் கூறுக.

| தொகைச்சொற்கள் அறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் வண்ண எழுத்துகளில் தொகைச்சொல் விரித்து எழுதப்பட்டுள்ளது. அச்சொல்லுக்குரிய தொகைச்சொல்லை எழுதுக.

(எ.கா.) சேர, சோழ, பாண்டியர் அரசவையில் ஒன்றாக வீற்றிருந்தனர்.

1. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றைக் கற்றால், சிறந்த தமிழறிஞர் ஆகலாம்.
2. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளிலிருந்து நாம் செய்திகளைப் பெறுகிறோம்.
3. நாம் உண்ணும் உணவில், இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு ஆகியன இருத்தல் வேண்டும்.
4. சிலப்பதிகாரம், மணிமேகலை ஒன்றற்கொன்று தொடர்புடையவை.
5. மா, பலா, வாழை ஆகிய கனிகளை அனைவரும் விரும்பி உண்பர்.

| தொகைச்சொல்லின் விரி | தொகைச்சொல் |
|---|---|
| சேர, சோழ, பாண்டியர் | மூவேந்தர் |
| | |
| | |
| | |
| | |

| மொழியாக்கம் அறிதல் | செயல்பாடு – 10 |
|---|---|

அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள கணினிப்பயன்பாட்டுச் சொற்களை உரிய சொற்களுடன் இணைத்தெழுதுக.

(கணினித் திரை, வன்பொருள், விசைப்பலகை, மென்பொருள், இணையத்தளம், இருநிலை எண் மொழி, பல்லூடக விளையாட்டுகள், தேடுபொறிகள், மின்னஞ்சல், கருத்துப் பரிமாற்றம், எழுத்துரு, பதிவிறக்கம், மாற்றுவிசைக் குமிழி, உலகளாவிய வலைப்பின்னல், குறுந்தட்டு, செய்தித்தொகுப்பு)

| பாண்ட் | எழுத்துரு | ஈ மெயில் | |
|---|---|---|---|
| கீ போர்டு | | டேட்டா பேஸ் | |
| மல்டி மீடியா கேம்ஸ் | | பைனாரி லேங்குவேஜ் | |
| இண்டர்நெட் | | மானிட்டர் | |
| வேர்ல்ட் வொய்ட் வெப் | | சாப்ட்வேர் | |
| ஷிப்ட் கீ | | வெப் சர்ச் என்ஜின் | |
| ஹார்டுவேர் | | டவுன்லோட் | |
| பிளாப்பி டிஸ்க் | | சாட்டிங் | |

| படைப்பாற்றல் திறன் | செயல்பாடு – 11 |
|---|---|

'அழகு' என முடியும்படி எட்டுவரிப் பாடல் எழுதுக.

நாட்டுக்கு வளமை அழகு

வீட்டுக்குத் தூய்மை அழகு

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# தொகைநிலைத் தொடர்கள்



மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! நேற்றைய பாடங்களையெல்லாம் படித்தீர்களா ?

மாணவர் : படித்திருக்கிறோம், அம்மா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. நீங்கள் இன்று தொகைநிலைத் தொடர்கள் குறித்துக் கற்றுக்கொள்ளப் போகிறீர்கள். கயல்விழி! தொடர் என்றால் என்னவென்று சொல்.

கயல்விழி : சொற்கள் இரண்டுமுதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது – தொடர் எனப்படும், அம்மா.

ஆசிரியர் : தெளிவாகச் சொன்னாய்! கயல்விழியை நாம் அனைவரும் கைதட்டிப் பாராட்டுவோம். செங்குட்டுவா! நீ எடுத்துக்காட்டு ஒன்று சொல்.

செங்குட்டுவன் : கார்குழலி பாடம் படித்தாள்.

ஆசிரியர் : நன்று நன்று. கார்குழலி பாடம் படித்தாள். இத்தொடரில் உள்ள மூன்று சொற்களும் தொடர்ந்து வந்து பொருளைத் தருகின்றன. சொற்கள் தொடராகும்போது இரு சொற்களுக்கிடையே வேற்றுமை, வினை, உவமை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று மறைந்து வரும். இங்ஙனம் உருபுகள் மறைந்து வரும் தொடர்களைத் 'தொகைநிலைத் தொடர்கள்' என்பர்.

செல்வி : அம்மா, இன்னும் விளக்கமாகச் சொல்லுங்கள்.

ஆசிரியர் : 'கயல்விழி'. இச்சொல்லில் கயல், விழி என இரண்டு சொற்கள் உள்ளன. இவ்விரு சொற்களுக்கு இடையே போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. இதனை உவமைத்தொகை எனக்கூறுவர். தொகை நிலைத்தொடர் அறுவகைப்படும்.

செல்வி : அவை என்னென்னவென்று கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : அவை: 1. வேற்றுமைத்தொகை, 2. வினைத்தொகை, 3. பண்புத்தொகை, 4. உவமைத்தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித்தொகை என்பன.

பாரதி : அம்மா, வேற்றுமை என்றால் என்ன ?

ஆசிரியர் : கண்ணன் இராமன் பார்த்தான். இத்தொடரில் யார் யாரைப் பார்த்தான் ?

பாரதி : பார்த்தது யார் என்று புரியவில்லை, அம்மா.

ஆசிரியர் : கண்ணனை இராமன் பார்த்தான். இப்போது புரிகிறதா ?

பாரதி : நன்றாகப் புரிகிறது, அம்மா .

ஆசிரியர் : கண்ணனை இராமன் பார்த்தான் – என்னும் இத்தொடரில் ஐ என்னும் உருபு யார், யாரைப் பார்த்தான் எனப் பெயரை வேறுபடுத்திக் காட்டுவதனால், வேற்றுமை என்கிறோம். பெயரின் பொருளை வேறுபடுத்திக் காட்டும் உருபுக்கு வேற்றுமை உருபு என்பது பெயர். இவ்வேற்றுமைகள் எண்வகைப்படும். இவற்றுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. மற்ற வேற்றுமைகளுக்கு உருபுகள் உண்டு. அவை ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இரண்டாம் வேற்றுமை உருபுமுதல் ஏழாம் வேற்றுமை உருபுவரை உள்ளனவற்றுள் ஏதேனும் ஒன்று வேற்றுமை உருபாய் வரும். இருசொற்களுக்கிடையே இவ்வேற்றுமை உருபு மறைந்து வருவதனை வேற்றுமைத்தொகை என்கிறோம்.

1. பால் பருகினான் – இரண்டாம் வேற்றுமைத்தொகை
(பால் + ஐ + பருகினான்– இங்கு ஐ என்னும் உருபு மறைந்துள்ளது.)

2. தலை வணங்கினான் – மூன்றாம் வேற்றுமைத்தொகை
(தலை + ஆல் + வணங்கினான்)

3. வேலன் மகன் – நான்காம் வேற்றுமைத்தொகை
(வேலன்+ கு + மகன்)

4. ஊர் நீங்கினான் – ஐந்தாம் வேற்றுமைத்தொகை
(ஊர் + இன் + நீங்கினான்)

5. செங்குட்டுவன் சட்டை – ஆறாம் வேற்றுமைத்தொகை
(செங்குட்டுவன் + அது + சட்டை)

6. குகைப்புலி – ஏழாம் வேற்றுமைத்தொகை
(குகை + கண் + புலி)

மலர்க்கொடி : அம்மா, வினைத்தொகை என்றால் என்ன?

ஆசிரியர் : உண்கலம் இத்தொடரைப் படித்துப் பாருங்கள். இதனை உண்டகலம், உண்கின்ற கலம், உண்ணும் கலம் என முக்காலத்திற்கும் ஏற்பப் பொருள் கொள்ளலாம். ஆடுகொடி, பாய்புலி, அலைகடல் ஆகிய தொடர்கள் வினைத்தொகை பயின்று வந்த தொடர்கள். இவ்வாறு

காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம், வினைத்தொகை எனப்படும்.

காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை - நன்னூல், 364

முத்து : அம்மா, பண்புத்தொகை பற்றிக் கூறுங்கள்.

ஆசிரியர் : வெண்ணிலவு, சதுரக்கல், இன்சுவை இச்சொற்றொடர்களைப் படித்துப் பாருங்கள். வெண்மை, சதுரம், இனிமை ஆகிய பண்புப் பெயர்கள் நிலவு, கல், சுவை ஆகிய பெயர்ச்சொற்களோடு சேர்ந்து வரும்போது இரண்டிற்கும் இடையில் 'ஆகிய, ஆன' என்னும் பண்பு உருபுகளும் 'மை' விகுதியும் தொக்கி (மறைந்து) வந்துள்ளன. எனவே, இவை பண்புத்தொகை பயின்று வந்த தொடர்கள். (எ.கா) வெண்மை + நிலவு = வெண்ணிலவு.

இருபெயரொட்டுப் பண்புத்தொகைபற்றிக் காண்போம். எடுத்துக் காட்டாக, மல்லிகைப்பூ என்னும் சொல்லைப் பார்ப்போம். மல்லிகை என்பது சிறப்புப்பெயர். பூ என்பது பொதுப்பெயர். இரண்டுக்கும் இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இஃது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

மேகலை : உம்மைத்தொகை குறித்துக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : கூறுகிறேன். கபிலபரணர், உற்றார் உறவினர். இத்தொடர்கள் கபிலரும் பரணரும், உற்றாரும் உறவினரும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன. இடையிலும் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வந்து பொருள்தருவதனால், உம்மைத் தொகை எனப்பட்டது.

நந்திவர்மன் : அம்மா, அன்மொழித்தொகை பற்றிக் கூறுங்கள்.

ஆசிரியர் : கூறுகிறேன். 'கயல்விழி வந்தாள்'. இத்தொடரில் முதலில் உள்ள 'கயல்விழி' என்பது, 'கயல் போன்ற விழி' என்னும் பொருளைத் தரும் உவமைத்தொகை ஆகும். இதனை முன்னரே கற்றோம். 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நின்றதனால், 'கயல்போன்ற விழியை உடைய பெண் வந்தாள்' எனப் பொருள் தருகிறது.

இதில் 'உடைய', 'பெண்' என்னும் சொற்கள் தொடரில் இல்லாதவை. இவ்வாறு உவமைத்தொகையை அடுத்து அல்லாதமொழி தொக்கி வருவதனால் இத்தொடரை உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்கிறோம். இதனைப்போன்று வேற்றுமை, வினை, பண்பு, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி நின்று பொருள் தருவது அன்மொழித்தொகை ஆகும்.

பயிற்சி

மலர்விழி, தன்தோழி வெண்மதியைக் காணச் சென்றாள். அங்குத் தோழியின் அப்பா வெட்டுக்கத்தி காணவில்லையெனத் தேடிக் கொண்டிருந்தார். மோர் குடித்துக் கொண்டிருந்த பாரி இட்டலி வடை சாப்பிடத் தயாரானான்.

1. இப்பத்தியிலுள்ள தொகைநிலைத் தொடர்களை வட்டமிடுக.
2. வட்டமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்தி எழுதுக.

## மாதிரி வினா

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. வளர்பிறை என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வேற்றுமைத்தொகை
2. செம்மொழி என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை இ) வினைத்தொகை
3. கயல்விழி என்பது
   அ) வேற்றுமைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை
4. மா பலா வாழை என்பது
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை

**2. பொருத்துக.**

1. வினைத்தொகை – நாலிரண்டு
2. உவமைத்தொகை – செய்தொழில்
3. உம்மைத்தொகை – பவளவாய் பேசினாள்
4. அன்மொழித்தொகை – மதிமுகம்

**3. பின்வரும் சொற்கள் எவ்வகைத் தொகைநிலைத்தொடர்கள்?**

1. கருங்கண்
2. வெற்றிலை பாக்கு
3. புத்தகம் படித்தான்
4. வளர்புகழ்
5. முகமலர்
6. பொற்றொடி வந்தாள்

### ஆ) குறுவினாக்கள்

1. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
3. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
4. உம்மைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
5. உவமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
6. அன்மொழித்தொகையைச் சான்றுடன் விளக்குக.

தமிழ்

# தொகாநிலைத் தொடர்கள்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். நேற்றைய பாடப்பகுதிகளைப் படித்தீர்களா ? அவற்றுள் ஏதேனும் ஐயம் உண்டா ?

ஓவியா : படித்தோம் ஐயா. ஐயமேதும் இல்லை.

ஆசிரியர் : மகிழ்ச்சி. தொகைநிலைத் தொடர்களைத் தெளிவாகக் கற்று இருக்கிறீர்கள் என்பது உங்கள் பேச்சிலிருந்து தெரிகிறது. இன்று தொகாநிலைத் தொடர்கள் குறித்துப் பார்ப்போம்.

கவியரசன் : தொகாநிலைத்தொடர் என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : 'இளமுருகன் படிக்கிறான்' – இத்தொடரைப் படித்துப் பாருங்கள். 'இளமுருகன்' என்னும் எழுவாயும், 'படிக்கிறான்' என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று பொருளைத் தருகின்றன. இவ்வாறு ஒரு தொடரில் இருசொற்கள் அமைந்து, இரண்டிற்கும் இடையில் சொல்லோ உருபோ மறையாது பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.



காவியா : எவையெவை எல்லாம் தொகாநிலைத் தொடர்கள் ? ஐயா.

ஆசிரியர் :
1. கபிலன் வந்தான் – இச்சொற்றொடரில் 'கபிலன்'என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'வந்தான்' என்னும் பயனிலை வந்துள்ளதனால், இஃது எழுவாய்த்தொடர்.
2. கதிரவா வா! – இது விளித்தொடர்.
3. கண்டேன் சீதையை – வினைமுற்று முதலில்வந்து பெயரைத் தொடர்கிறது. அதனால், இது வினைமுற்றுத்தொடர்.
4. விழுந்த மரம் – 'விழுந்த' என்னும் எச்சவினை 'மரம்' என்னும் பெயர்ச்சொல்லோடு முடிவதனால், இது பெயரெச்சத்தொடர்.
5. வந்துபோனான் – 'வந்து' என்னும் எச்சவினை 'போனான்' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்துள்ளதனால், இது வினையெச்சத்தொடர்.
6. வீட்டைக் கட்டினான் – இத்தொடரில் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்துள்ளதனால், இது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.
7. மற்றொன்று – மற்று + ஒன்று. 'மற்று' என்னும் இடைச்சொல்லை

அடுத்து 'ஒன்று' என்னும் சொல் தொடர்ந்து வந்ததனால் இஃது இடைச்சொற்றொடர்.

8. மாமுனிவர் – இத்தொடரில் 'மா' என்பது உரிச்சொல். இதனைத் தொடர்ந்து, 'முனிவர்' என்னும் சொல் வந்துள்ளதனால், இஃது உரிச்சொற்றொடர்.

9. வாழ்க வாழ்க வாழ்க – ஒரே சொல் இங்குப் பலமுறை அடுக்கி வந்துள்ளதனால், இஃது அடுக்குத்தொடர்.

இவையெல்லாம் தொகாநிலைத் தொடர்கள், புரிகிறதா ?

தொகாநிலைத்தொடர்களைப் பட்டியலிடுக.

அருள்முருகன் : 1. எழுவாய்த்தொடர்
2. விளித்தொடர்
3. வினைமுற்றுத்தொடர்
4. பெயரெச்சத்தொடர்
5. வினையெச்சத்தொடர்
6. வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்
7. இடைச்சொற்றொடர்
8. உரிச்சொற்றொடர்
9. அடுக்குத்தொடர்

ஆசிரியர் : அருமை அருமை.

"முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுருபு இடையுரி அடுக்கிவை தொகாநிலை" – நன்னூல், 374

## இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். ஆண்டாளும் மங்கையும் பாதையில் நடந்து செல்கிறார்கள்; திடீரெனப் பாம்பைப் பார்த்துவிடுகிறார்கள். அவர்கள் எவ்வாறு அலறுவார்கள் ?

வளனரசு : ஐயோ. 'பாம்பு பாம்பு' என அலறுவார்கள்.

ஆசிரியர் : அங்கே சென்று பார்க்கிறார்கள். அங்கே இருந்தது பாம்பு இல்லை; வெறுங்கயிறுதான். அங்கே மறைந்திருந்த மற்ற மாணவிகள் கலகல வெனச் சிரிக்கிறார்கள்.

சேரன் : ஆண்டாளும் மங்கையும் கயிற்றைப் பார்த்துப் பயந்தது எங்களுக்கும் சிரிப்பை வரவழைத்தது.

ஆசிரியர் : சரி சரி. ஆண்டாளும் மங்கையும் எவ்வாறு அலறினார்கள்; தோழிகள் எவ்வாறு சிரித்தார்கள் ?

நற்சோனை : 'பாம்பு பாம்பு' என அலறினர். 'கலகல' வெனச் சிரித்தனர்.

ஆசிரியர் : முதல் தொடர் பாம்பு பாம்பு என்பது அடுக்குத்தொடர். இரண்டாம் தொடர் கலகல என்பது இரட்டைக்கிளவி.

செழியன் : இரண்டும் இருமுறைதானே வருகின்றன, ஐயா. இரண்டுக்கும் வேறுபாடு என்ன ?

ஆசிரியர் : நன்றாகக்கேட்டாய். 'பாம்புபாம்பு' என்பது அடுக்குத்தொடர். இதனைப் பிரித்தால் பொருள்தரும். இஃது இரண்டு, மூன்று, நான்கு முறையும்கூட அடுக்கிவரும். 'கலகல' என்பது இரட்டைக்கிளவி. இஃது இரட்டைச்சொல்லாகவே வரும்; பிரித்தால் பொருள் தராது. அடுக்குத்தொடர் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய பொருள் காரணமாக வரும். இரட்டைக்கிளவி அடைமொழியாய்க் குறிப்புப்பொருளில் வரும்.

மாணவர் : நன்றி, ஐயா.

பயிற்சி :

கண்ணன் வந்தான் என்பது எழுவாய்த் தொடர்.

இதுபோலப் பிற தொகாநிலைத் தொடர்கள் வரும்படி கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. விளித்தொடர் ______________ வா.
2. பெயரெச்சத்தொடர் ______________ கண்ணன்.
3. வினைமுற்றுத்தொடர் ______________ வந்தான்.
4. வினையெச்சத்தொடர் கண்ணன் ______________ வந்தான்.
5. வேற்றுமைத்தொடர் கண்ணன் ______________ கட்டினான்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக.

1. வினைமுற்றுத்தொடர் – உடைந்த நாற்காலி
2. விளித்தொடர் – வந்து நின்றான்.
3. பெயரெச்சத்தொடர் – கண்ணா வா !
4. வினையெச்சத்தொடர் – வந்தான் இராமன்.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மரக்கிளை ______________ என முரிந்தது.
2. தங்கம் ______________ என மின்னுகிறது.
3. வா வா வா என்பது ______________ ஆகும்.

தமிழ்

### 3. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மற்றுப்பிற என்னும் தொடரில் 'மற்று' என்பது ____________.

   அ) உரிச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல்

2. சாலப் பசித்தது என்பது ____________ தொடர்.

   அ) இடைச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்

3. கூடிப் பேசினர் என்னும் தொடர் ____________ ஆகும்.

   அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர் இ) வினையெச்சத்தொடர்

### ஆ) குறுவினாக்கள்

1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன ?
2. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? சான்று தருக.
3. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன் : உங்களுக்குத் தெரியுமா ?

குழுக்களாகப் பிரிந்து ஒருகுழு, நூலாசிரியர் பெயரைக் கூறுக; மற்றொரு குழு, அந்நூலாசிரியரின் நூற்பெயரைக் கூறுக.

(எ.கா.)

| குழு –1 | | குழு–2 |
|---|---|---|
| 1. இளங்கோவடிகள் | – | சிலப்பதிகாரம் |
| 2. திருத்தக்கதேவர் | – | சீவகசிந்தாமணி |
| 3. கம்பர் | – | கம்பராமாயணம் |
| 4. திருவள்ளுவர் | – | திருக்குறள் |

### ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

தமிழறிஞர் ஒருவர் உணவு உண்ண வந்தார். அவருடைய மனைவி, வாழையிலையிட்டுப் பற்பல உணவுப்பொருள்களை வைத்தாள். ஒவ்வொரு பொருளும் சுவைமிக்கதாக இருந்தது. எதனை உண்பது ? எதனை விடுவது ? எல்லாவற்றையும் எடுத்து உண்பதற்குப் பலகை இல்லையே! என்றார் அவர். உட்காருவதற்குப் பலகை இல்லையென்று கூறுகிறார் என்று எண்ணிய அவள் உடனே, ஒரு பலகையைக் கொண்டுவந்து இதில் உட்கார்ந்து உண்ணுங்கள் என்றாள். நான் உட்கார்ந்து உண்ணவா பலகை இல்லையென்றேன்; இவ்வளவு சுவையுள்ள பல்வகைப் பொருள்களையும் எடுத்துண்ண இருகைகள்தாமே உள்ளன. பல – கை இல்லையே என்றல்லவா சொன்னேன் என்றார். நல்விருந்தூட்டிய நங்கை, தன் கணவனின் சொல்விருந்தில் சொக்கிப்போனாள்.

### இ) எழுதுதல் திறன்

தொடங்கிய சிறுகதையை முடிக்கச் செய்தல்.

பயிற்சி : சிறுகதையைப்பற்றிய குறிப்புகளோ சிறுகதையின் தொடக்கமோ கொடுத்துச் சிறுகதையை முழுமையாக எழுதி முடித்தல். அதனை வகுப்பறையில் படித்துக்காட்டல்.

'கண்ணன் எட்டாம் வகுப்பில் படிக்கிறான். காலையில் ஐந்து மணிக்கே எழுந்துவிடுவான். அவனுடைய அம்மாவுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர், எட்டு மணியளவில் வீட்டிலிருந்து நடந்தே பள்ளிக்குச் செல்வான்.

ஒருநாள், அவன் பள்ளிக்குச் செல்ல நேரமாகிவிட்டது, அதனால் ஓட்டமும், நடையுமாய்ப் பள்ளிக்கு விரைந்து சென்றுகொண்டிருந்தான். அப்போது சாலையில் திடீரென்று... ... ...

(மாணவர்களே கதையின் தொடக்கத்தைப் படித்தீர்களா? இப்போது கதையை நீங்களே நிறைவு செய்யுங்கள்; முடிவு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடுங்கள். கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று கொடுங்கள்; குழுவிலோ வகுப்பறையிலோ படித்துக் காட்டுங்கள்.)

## மொழித்திறன் பயிற்சி

### 1. உரிய எழுத்துவழக்குச்சொற்களை அறிவோம்.

| பேச்சுவழக்கு | | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. கோர்த்து | – | கோத்து |
| 2. சுவற்றில் | – | சுவரில் |
| 3. நாட்கள் | – | நாள்கள் |
| 4. மனதில் | – | மனத்தில் |
| 5. பதட்டம் | – | பதற்றம் |
| 6. சிலவு | – | செலவு |
| 7. அருகாமையில் | – | அருகில் |

### 2. பிழை நீக்கி எழுதும் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்துப் பிழைகளைப் பட்டியலிடுக.

(எ.கா.) ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார். அந்த சுற்றுலாவில் அவர் தான் கண்டதை கூறவே, ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

மேலே உள்ள பத்தியைப் படித்தீர்களா?

அவற்றுள் எத்தனை பிழைகள் உள்ளனவெனப் பட்டியலிடுவோமா?

| பிழை | சரி | பிழை | சரி |
|---|---|---|---|
| ஓர் மாவட்டம் | ஒரு மாவட்டம் | அந்த சுற்றுலா | அந்தச்சுற்றுலா |
| ஒரு அமைச்சர் | ஓர் அமைச்சர் | கண்டதை கூறவே | கண்டதனைக் கூறவே |
| அவரது மகனோடு | அவருடைய மகனோடு | அவர்தான் | அவர்தாம் |
| மேற்க்கொண்டார் | மேற்கொண்டார் | | |

பயிற்சி

இன்றைய தினம் புதன்கிழமை, கண்ணன் நேற்று என்னிடம் வாங்கிச் சென்ற ஐநூறு ரூபாயைத் திருப்பித் தருவதாகச் சொன்னான். ஆனால், நாட்கள் கடந்தது. அவன் வரவில்லை. நான் ஏமாந்து போனேன்.

3. அரபு எண்களுக்கு ஏற்ற தமிழெண்களை எழுதுக.

1. 10 – ____________ 3. 19 – ____________

2. 20 – ____________ 4. 15 – ____________

4. கட்டுரைப்பயிற்சி : காகிதம் தன்வரலாறு கூறுதல்.

## பண்பு

பூங்குழலி எல்லாரிடமும் அன்பாகப் பழகுவாள். அவள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களிடம் தன்மையாகப் பேசுவாள். அதனால், அவளை எல்லாருக்கும் பிடிக்கும். அவள் எப்போதும் புன்முறுவலோடு வளைய வருவாள். வீட்டிற்கு வருபவர்களை, 'வாங்க வாங்க, உட்காருங்க; அம்மா வந்திடுவாங்க' என்று வரவேற்பாள். அவளைப் புன்னகைப் பூங்குழலி என்றுதான் எல்லாரும் அழைப்பார்கள். அவர்கள் அழைப்பது சரிதானே, நீங்களே சொல்லுங்கள்.

### கூடிப்பேசுவோம்

1. பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக் கொள்கிறாயா ?
2. உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால் எவ்வாறு வரவேற்பாய் ?
3. பூங்குழலியைப்போல நீ யாரையாவது பார்த்ததுண்டா ?
4. பூங்குழலியைப்போல நீயும் எல்லாரிடமும் பழகுகிறாயா ?

## வாழ்க்கைத்திறன்

### மனஅழுத்தத்தை எதிர்கொள்ளும் திறன்

நண்பர் சிலர் சாலையில் நடந்துகொண்டு இருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் திடீரென்று கால் இடறிப் பள்ளத்தில் விழுகின்றார். மற்றவர்கள் அவரைப் பார்த்துச் சிரிக்கின்றனர். கீழே விழுந்த அவர் அடிபட்டதனால் ஏற்பட்ட வலியைவிட, நண்பர்களின் ஏளனத்திற்கு ஆட்பட்டதனை எண்ணியே மனம் நொந்தார். நண்பர்கள் செயல் சரியானதா ? யாரேனும் தடுக்கிவிழுந்தால் அவர்களுக்கு நீ எவ்வாறு உதவுவாய் ?

## மதிப்புக்கல்வி

### உழைப்பின் மேன்மை

அமெரிக்காவில் பெரும்பணக்கார முதியவர் ஒருவர், அலுவலகப்பணியின் காரணமாக வானூர்தியில் பயணம் மேற்கொண்டார். அவர் அருகில், இளைஞர் ஒருவரும் பயணம் செய்தார். அவ்விளைஞர் முதியவரை நன்கு அறிவார். எனவே, அவரை நோக்கி, "ஐயா, உங்களுக்கோ வயதாகிவிட்டதே. இன்னும் ஏன் கடினமாக உழைத்துக்கொண்டிருக்கிறீர்கள், ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே'' என்று கேட்டார். அதனைக் கேட்ட அம்முதியவர், புன்னகைத்தவாறே கூறினார். "தம்பி, வானின் உச்சிக்கே நாம் வந்துவிட்டோமே, இனி இயங்க வேண்டுமா என்று, இந்த விமானம் நினைத்தால் என்ன ஆகும் ? என்று கூற, அந்த இளைஞர் தன்னை எண்ணி வெட்கப்பட்டார்.

உழைப்பிற்கு வயது ஒரு தடை இல்லை. உழைக்காமல், பிறரிடம் கையேந்தி நிற்பது மனிதத் தன்மைக்கு இழுக்கு. வாழ்வது ஒருமுறைதான், அதனையும் தன்மானத்தோடு வாழ்வதே சிறந்தது.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர். குறள், 620

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | பங்கேற்று நடித்தல் |
|---|---|

விடுதலைப் போராட்ட வீரராக நினைத்துக்கொண்டு நடித்துக்காட்டுக.



காந்தியடிகள்



புலித்தேவன்



தில்லையாடி வள்ளியம்மை



பாரதியார்



வேலு நாச்சியார்

| செயல்பாடு : 2 | புரிந்து விடையளித்தல் |
|---|---|

விளம்பரங்கள்/அறிவிப்புகளைப் புரிந்துகொண்டு விடையளிக்க.

சென்னைச் சர்வோதய சங்கம் காதி கிராமோத்யாக் பவன்
33, அரங்கநாதன் தெரு, தி. நகர்,
சென்னை–600 017. தொலைபேசி : 2434 7426



நவராத்திரிக்கொலு
பொம்மை விற்பனைக்
கண்காட்சி

* பட்டிமன்ற அரங்க அமைப்பு
* கொல்கத்தாப் பொம்மைகள்
* கோலாப்பூர்ப் பொம்மைகள்
* கொலுப் படிகள் விற்பனை

காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை
அனைவரும் வருக!
கைவினைப் பொருள்களை வாங்கி மகிழ்க!
அனுமதி இலவசம்

வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதனைப் பற்றியது ?
2. இவ்விளம்பரத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் யாவை ?
3. விற்பனை எங்கு நடைபெறுகிறது ?
4. விற்பனை செய்யப்படும் கால அளவைக் குறிப்பிடுக.
5. இவ்விளம்பரத்தை வெளியிடுவோர் யார் ?

## எழுதுதல்

| செயல்பாடு : 3 | வினாக்களுக்கு விடை எழுதுதல் |
|---|---|

பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிலை கண்டீர்.

வினாக்கள்

1. வீடுதோறும் என்ன தேவை ?
2. வீதிதோறும் எத்தனை பள்ளிகள் அமைத்தல் வேண்டும் ?
3. நாடுமுற்றிலும் உள்ளன எவை ?
4. கேடு தீர்ப்பவள் யார் ?
5. இப்பாடலுக்குத் தலைப்பு ஒன்றனைத் தருக.

| செயல்பாடு : 4 | சொல்வதனை எழுதுதல் |
|---|---|

சொல்வதனை எழுதுக.

ஓர் இனத்திற்கும் அதன் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் நாட்டிற்கும் அடிப்படையாக இருப்பது மொழியாகும். மொழிப்பற்று இல்லாதவருக்கு நாட்டுப்பற்று இராது. மொழியில் பற்றுக் கொள்ளாத இனம், தன் மொழியையும் இழந்து, நாட்டையும் இழந்து, பண்பாட்டையும் இழந்து, இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

தமிழ்

# ஆகுபெயர்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். இன்று அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களே, ஏதேனும் சிறப்பு உண்டா ?

மாணவர் : உண்டு, ஐயா. மட்டைப்பந்து (கிரிக்கெட்) விளையாட்டில் இந்தியா வெற்றி பெற்றதுதான் மகிழ்ச்சிக்குக் காரணம்.

ஆசிரியர் : எனக்கும் மகிழ்ச்சிதான். சரி, நம் இந்தியா எந்தக் கண்டத்தில் உள்ளது ?

மாணவர் : ஆசியாக் கண்டத்தில் உள்ளது, ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. இந்தியா மட்டைப்பந்து விளையாட்டில் வெற்றிபெற்றது. இந்தியா ஆசியாக் கண்டத்தில் உள்ளது. இந்த இரு தொடர்களையும் படித்துப் பாருங்கள். இரண்டிலும் வந்துள்ள சொல் எது ?

மாணவர் : இந்தியா என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : முதல் தொடரில் வந்துள்ள இந்தியா என்னும் சொல்லும், இரண்டாம் தொடரில் வந்துள்ள இந்தியா என்னும் சொல்லும் ஒரே பொருளைத் தருகிறதா எனச் சிந்தியுங்கள்.

மாணவர் : வெவ்வேறு பொருளைத் தருகிறது, ஐயா. முதல் தொடர் 'இந்தியா', மட்டைப்பந்து வீரர்களைக் குறிக்கிறது. இரண்டாம் தொடர் 'இந்தியா', இடத்தைக் குறிக்கிறது.

ஆசிரியர் : மிகச்சரியாகச் சொன்னீர்கள், மகிழ்ச்சி. நீங்கள் கூறியதுபோல், முதல் தொடரில் உள்ள 'இந்தியா' தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடர்புடைய வீரர்களைக் குறிக்கிறது. ஒன்றன் இயற்பெயர் தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வந்துள்ளது. இவ்வாறு வருவதற்கு ஆகுபெயர் என்பது பெயர். ஆகுபெயர் பலவகைப்படும். முதலில், முதல் ஆறுவகை ஆகுபெயர்கள் குறித்துப் பார்ப்போம்.

மாணவி : முதல் ஆறு ஆகுபெயர்கள் எவை, ஐயா ?

ஆசிரியர் : கூறுகிறேன், கண்மணி. உன் தலையில் உள்ள பூ, என்ன பூ ?

மாணவி : 'மல்லிகை' ஐயா.

ஆசிரியர் : ‘மல்லிகை’ என்பது ‘பூ’ இல்லை; அது கொடி. ‘மல்லிகை சூடினாள்’ எனச் சொன்னால், அங்கு மல்லிகை என்பது கொடியாகிய முதற்பொருளைக் குறிக்காமல் பூ என்னும் சினையைக் குறிக்கிறது. இவ்வாறு முதற்பொருள் சினைக்கு (உறுப்புக்கு) ஆகி வருவது, முதலாகு பெயர் எனப்படும். இதனைப் பொருளாகுபெயர் எனவும் கூறுவர். நேற்றுப் பேச்சுப்போட்டியில் முதல் பரிசு பெற்ற பள்ளி, எது ?

மாணவர் : பூண்டிப் பள்ளி, ஐயா.

ஆசிரியர் : பூண்டிப் பள்ளியா வந்து பேசியது ? பள்ளி எப்படிப் பேசும் ?

மாணவர் : பள்ளி பேசாது, ஐயா. பூண்டியிலுள்ள பள்ளியில் பயின்ற மாணவி பேசினாள், ஐயா.

ஆசிரியர் : பார்த்தீர்களா ? ‘பள்ளி’ என்னும் இடப்பெயர், அப்பள்ளியில் பயிலும் மாணவிக்கு ஆகி வந்தது. அதனால், இஃது இடவாகு பெயர்.

மாணவி : ஐயா, மலர்க்கொடி என்னை அடிக்க வருகிறாள்.

ஆசிரியர் : மலர்க்கொடி ! அவளை ஏன் அடிக்கிறாய் ?

மாணவி : அவள், என் தலையிலுள்ள பூவை எடுக்கிறாள், ஐயா.

ஆசிரியர் : உன் தலையில் வைத்திருக்கும் பூவின் பெயரென்ன ?

மாணவி : திசம்பர் பூ, ஐயா.

ஆசிரியர் : திசம்பர் என்பது என்ன ?

மாணவி : மாதத்தின் பெயர், ஐயா.

ஆசிரியர் : இந்த மாதத்திற்காகவா இவ்வளவு சிக்கல் செய்கிறீர்கள் ?

மாணவி : இல்லை , ஐயா. திசம்பர் பூவிற்காக.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். திசம்பர் என்னும் மாதப்பெயர், அம்மாதத்தில் பூக்கும் பூவிற்கு ஆகி வந்தது. அதனால், இது காலவாகுபெயர். அடுத்துச் சினையாகு பெயர் பற்றிப் பார்ப்போம்.

மாணவர் : சினையாகு பெயர் என்றால் என்ன ? ஐயா.

ஆசிரியர் : சினை என்றால் உறுப்பு. வெற்றிலை நட்டான். இத்தொடரில் உள்ள வெற்றிலை என்பது சினையாகிய இலையைக் குறிக்காமல், அதன் முதல் பொருளாகிய கொடிக்கு ஆகி வந்தது. அதனால், இது சினையாகு பெயர் ஆயிற்று.

மாணவர் : அடுத்து என்ன ஆகுபெயர், ஐயா.

ஆசிரியர் : பொங்கலுக்கு முன் வீட்டுச் சுவர்களுக்கு என்ன அடிப்போம் ?

மாணவர் : ‘வெள்ளை’ அடிப்போம், ஐயா.

தமிழ்

ஆசிரியர் : அழகாகச் சொன்னீர். வெள்ளை என்பது நிறப்பண்பு. ஆனால், அது நிறத்தைக் குறிக்காமல், சுண்ணாம்பைக் குறித்து வந்தது. அதனால், இது பண்பாகு பெயர். இதனைக் குணவாகுபெயர் எனவும் கூறுவர். தைப்பொங்கலுக்கு என்ன சாப்பிடுவீர் ?

மாணவர் : 'பொங்கல்' உண்போம், ஐயா.

ஆசிரியர் : இங்குப் பொங்கல் என்பது பொங்குதலாகிய தொழிற்பெயர். இத்தொழிற் பெயர் தொழிலைக் குறிக்காமல், அத்தொழிலால் ஆகும் உணவைக் குறித்தது. அதனால், இது தொழிலாகு பெயர். என்னென்ன ஆகுபெயர்களைப் படித்தோம்.

மாணவர் : 1. முதலாகு பெயர், 2. இடவாகு பெயர், 3. காலவாகு பெயர், 4. சினையாகு பெயர், 5. குணவாகு பெயர், 6. தொழிலாகு பெயர்.

ஆசிரியர் : நன்றி.

பயிற்சி : கீழுள்ள தொடர்களில் உரிய ஆகுபெயர்ச் சொற்களை நிரப்புக.

1. உடைந்த ஏரியைப் பார்க்க ____________ திரண்டு வந்தது. (மக்கள், ஊரே)
2. இவ்வாடைகளை ____________ ஒன்றாகக் கொடு. (மாணவர்களுக்கு, தலைக்கு)
3. தைப் பொங்கலுக்கு ____________ அடிப்பர். (சுண்ணாம்பு, வெள்ளை)
4. தேன்மொழி ____________ சூடி வந்தாள். (மல்லிகைப்பூ, திசம்பர்)

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   1. ஊர் உறங்கியது என்பது ____________ ஆகுபெயர்.
   2. நீலம் சூடினாள் ____________ ஆகுபெயர்.
2. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக.
   1. வறுவல் தின்றான் என்பது
      அ) முதலாகு பெயர் ஆ) இடவாகு பெயர் இ) தொழிலாகு பெயர்
   2. சித்திரை வந்தாள்
      அ) சினையாகு பெயர் ஆ) காலவாகு பெயர் இ) தொழிலாகு பெயர்

### ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் என்றால் என்ன ? சான்று தருக.
2. ஆகுபெயர்கள் எத்தனை வகைப்படும் ?
3. சினையாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.
4. தொழிலாகு பெயர் என்றால் என்ன ? சான்று தருக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

நாடகக்கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய நாடக நடிகர் ஒருவரைப் பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

புலவர் ஒருவர் பாடலொன்றனைப் பாடியிருந்தார். அப்பாடலுக்குப் பாசவலை என்று பெயரிட்டிருந்தார். அதனைப் பெரும்புலவர் ஒருவரிடம் காண்பித்து மதிப்புரை வழங்குமாறு வேண்டினார். அப்பாடலோ முழுவதும் பாடல் இலக்கணத்துக்குப் பொருந்தாமல், வழுக்களோடு சுவையின்றி இருந்தது. அதனால், அப்பெரும்புலவர் பாசவலை, பாசவலைதான் என்றார். தம் பாடலைப் பெரும்புலவர் பாராட்டிவிட்டார் எனக் கருதிய புலவர், மனநிறைவோடு விடைபெற்றுச் சென்றார். அப்பெரும்புலவரின் நண்பர்கள் அவரை நோக்கி, 'ஐயா, பாடல்கள் முழுவதும் தப்பும் தவறுமாக உள்ளனவே! அதனைப் பாராட்டினீர்களே! இது தகுமா ?' என்று கேட்டனர். நான் எங்கே பாராட்டினேன் ? பாசவலை, பா–சவலை என்றுதானே கூறினேன் என்றார் பெரும்புலவர். (பா–சவலை – சவலைப் பாடல்கள், முழுமை பெறாதவை)

### இ) எழுதுதல் திறன்

#### கவிதை இயற்றும் திறன் பெறுதல்

கவிதை இயற்றுவது ஓர் உயர்நிலைத் திறன். அதனைப் பயிற்சியின் வாயிலாகப் பெறுதல் எளிது. கவிதைகளை நன்கு படித்து அதில் அமைந்துள்ள நயம், கருத்து, சொல்திறம் முதலியவற்றை அறிதல் வேண்டும். தற்காலக் கவிஞர்களின் புதுக்கவிதைகளைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும்.

கவிதை எழுதும் திறனை வளர்த்துக்கொள்ள தொடக்கத்தில், இரண்டு அடி, நான்கடி அளவில் கவிதை எழுதிப் பழகுதல் வேண்டும்.

(எ.கா.) 1.

அன்பே நல்லோர் விருந்தாகும்
அடக்கம் ஆருயிர் மருந்தாகும்
பண்பே வாழ்வில் நம்உடைமை
பாடம் படிப்பது நம்கடமை.

2.

வயிற்றுச் சுருக்கம் போக்க
சட்டைச் சுருக்கம் போக்கினான்
சலவைத் தொழிலாளி.

#### நானே செய்வேன்

கீழ்க்காணும் கவிதை படிக்க, கவிதை வடிக்க.

விடிந்தது பொழுது நலமாக
விழித்தெழு மனிதா புதிதாக.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

**1. சொற்றொடர்களில் அமைந்துள்ள வழுக்களை அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | அரசன் வந்தது (திணைவழு) | – | அரசன் வந்தான் |
| | கபிலன் பேசினாள் (பால்வழு) | – | கபிலன் பேசினான் |
| | குயில்கள் கூவியது (எண்வழு) | – | குயில்கள் கூவின |
| | கமலா சிரித்தாய் (இடவழு) | – | கமலா சிரித்தாள் |
| | வளவன் நேற்று வந்திருக்கிறான் (காலவழு) | – | வளவன் நேற்று வந்தான் |
| | ஆந்தை கத்தியது (மரபுவழு) | – | ஆந்தை அலறியது |

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள வழுக்களை நீக்கி எழுதுக.

1. புலவர் வந்தார்கள்.
2. மயில் கூவ குயில் அகவியது.
3. தாமரை படம் வரைந்தான்.
4. யானைகள் வந்தது .
5. பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது.
6. வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது.
7. பசு குட்டி போட்டது.
8. மாட்டை இலாயத்தில் கட்டு.
9. வெற்றிலைத்தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.
10. யானை முழங்கும்.

**2. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | சிங்கம் கனைத்தது | – | எண் வழு |
| 2. | கண்ணன் படித்தாள் | – | காலவழு |
| 3. | இன்று வருவான் | – | திணைவழு |
| 4. | கபிலன் பேசியது | – | மரபுவழு |
| 5. | பறவைகள் பறந்தது | – | பால்வழு |

**3. தமிழெண்களைக் கூட்டுக**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கO+க | = | ________ | 4. | க+க | = | ________ |
| 2. | உ+கக | = | ________ | 5. | ரு+எ | = | ________ |
| 3. | கO+கO | = | ________ | 6. | ச+அ | = | ________ |

**4. கட்டுரைப்பயிற்சி**

நான் மருத்துவரானால்...

## பண்பு

“எட்டாம் வகுப்பில் படிக்கிறானே, அந்த முருகனைத் தெரியுமா ?” என்று யாரையாவது கேட்டால் தெரியாது என்றே சொல்வார்கள். ‘இல்லை முருகனை’த் தெரியுமா ? என்று கேட்டால், உடனே தெரியும் என்பார்கள். அஃதென்ன ‘இல்லை முருகன்’ ? முருகனிடம் எழுதுகோல் கொடு என்று கேட்டாலும் சரி, விளையாட்டுப் பொருளைக் கொடு என்று கேட்டாலும் சரி, வேறு எதனைக் கேட்டாலும், அவன் வாயிலிருந்து வரும் முதல் சொல் ‘இல்லை’ என்பதுதான். யாருக்கும் எந்தப் பொருளைக் கொடுப்பதற்கும்

அவனுக்கு மனம் வராது. எது கேட்டாலும் 'இல்லை' என்று சொல்வதனால், அவனுக்கு இல்லை முருகன் எனப் பெயர் வைத்தோம். நீங்கள் வேண்டுமானால் ஏதேனும் கேட்டுப் பாருங்களேன். என்ன சொல்கிறான் பாருங்கள்!

### கூடிப்பேசுவோம்.

1. முருகனைப்போல யாரையாவது பார்த்திருக்கிறீர்களா ?
2. உங்களிடம் யாராவது எதனையாவது கேட்டால் என்ன சொல்வீர்கள் ?

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

பொற்கொடி நன்றாக ஓவியம் வரைவாள். ஆனால், அவள் யாரிடமும் அதனை வெளிப்படுத்தியது இல்லை. அவளிடம் இருக்கும் கூச்ச உணர்வுதான் அதற்குக்காரணம். ஆண்டுவிழாவை முன்னிட்டுப் பள்ளியில் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. ஓவியப்போட்டியும் அவற்றில் ஒன்று. போட்டியில் கலந்துகொள்ள பலரும் ஆர்வத்துடன் பெயர் கொடுத்தனர். பொற்கொடி கலந்துகொள்ள விரும்பினாலும் சிறப்பாக வரைய முடியுமா எனத் தயங்கினாள். பொற்கொடியின் தயக்கத்திற்குக் காரணம், அவள் தன் திறமைகளைப்பற்றி அறியாததே. இந்நிலையில் பொற்கொடிக்கு நீங்கள் எவ்வாறு அறிவுரை கூறுவீர்கள் ?

உங்களிடமுள்ள திறமைகளை வாய்ப்புக்கிடைக்கும்போது, வெளிப்படுத்துதல் வேண்டும். நல்ல வாய்ப்புகளை என்றுமே நழுவவிடுதல் கூடாது. அதேபோல, அல்லல்தரும் வாய்ப்புகளை என்றும் அண்டவிடுதல் கூடாது.

## மதிப்புக்கல்வி

### நேர்மை

### காந்தியடிகளின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி

உயர்தரப்பள்ளியில் காந்தியடிகள் எழுதிய முதலாம் ஆண்டுத் தேர்வின்போது, நடந்த நிகழ்ச்சி ஒன்று உண்டு. அஃது இங்கே குறிப்பிடத்தக்கது.

"கல்வித்துறை ஆய்வாளர் ஸ்ரீகைல்சு அப்பள்ளி ஆய்வுக்காக வந்திருந்தார். எழுத்துக்கூட்டி எழுதும் பயிற்சிக்காக, அவர் எங்களுக்கு ஐந்துசொற்களைக்கூறி அவற்றை எழுதச்சொன்னார். அவற்றுள் ஒரு சொல் 'கெட்டில்' என்பது. அதனை நான் தவறாக எழுதிவிட்டேன். நான் தவறாக எழுதியதனை ஆசிரியர், எனக்குக் குறிப்பால் உணர்த்தினார். அதனை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. என்னைத் தவிர மற்ற எல்லாப்பிள்ளைகளும் அச்சொல்லைச் சரியாக எழுதியிருந்தனர். நான் ஒருவனே முட்டாளாக இருந்துவிட்டேன். இந்த முட்டாள்தனத்தை நான் உணரும்படி செய்வதற்கு ஆசிரியர் பலமுறை முயற்சி செய்தார். ஆனால் , அதனாலும் பயனில்லை. 'பார்த்து எழுதும்' பழக்கத்தை நான் என்றுமே கற்றுக்கொள்ளவில்லை."

காந்தியடிகள் தம்குழந்தைப் பருவத்திலேயே பிறரைப் பார்த்து எழுதக்கூடாது என்னும் கொள்கையில் உறுதியாக இருந்தார் என்பதனை இந்நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது. நேர்மையைக் கடைப்பிடித்து நாமும் செம்மையாக வாழ்வோம்.

புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர். – புறநானூறு

தமிழ்

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | நடித்தல் |
|---|---|

‘வான்மழை சேமிப்போம்’ என்னும் தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் ஒன்றனை எழுதி நடித்துக் காட்டுக.

| செயல்பாடு : 2 | கலந்துரையாடல் |
|---|---|

தெருக்கூத்து, மேடை நாடகம், திரைப்படம் மூன்றனுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் குழுவில் கலந்துரையாடுக.

## எழுதுதல்

| செயல்பாடு : 3 | தொகுத்தல் |
|---|---|

பள்ளி நூலகம் சென்று பன்னிருதிருமுறைகளின் பெயர்களையும் அவற்றை எழுதியவர்களின் பெயர்களையும் எழுதுக.

| செயல்பாடு : 4 | படைப்பாற்றல் |
|---|---|

‘அன்பு’ என்னும் சொல்லில் முடியும் பாடல் ஒன்றனை எழுதுக.

| செயல்பாடு : 6 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

கீழ்க்காணும் உரையாடலைப் படித்து வண்ணமிட்ட ஆகுபெயர்ச்சொற்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.

முகிலன் : தம்பி... கபிலா... நேற்று உன்னை விளையாட்டுத்திடலில் பார்க்க முடியவில்லையே... ஏன் ?

கபிலன் : ஆமாம் அண்ணா... நேற்று எங்கள் வீட்டைச் சுற்றித் தோட்டம் அமைத்தோம். அதனால், விளையாட வர இயலவில்லை.

முகிலன் : உங்கள் ஊரில் உள்ள அனைத்து வீடுகளிலும் தோட்டம் உண்டா ?

கபிலன் : எங்கள் ஊரில் தோட்டம் இல்லாத வீடுகளே இல்லை. இப்பொழுது எங்கள் ஊரே மாறிவிட்டது.

முகிலன் : சரி... உங்கள் தோட்டத்தில் என்ன விதைத்துள்ளீர்கள் ?

கபிலன் : கீரை விதைத்திருக்கிறோம்.

முகிலன் : நீ என்ன நட்டுள்ளாய் ?

கபிலன் : நான் ரோசா நட்டுள்ளேன்.

முகிலன் : நானும் உங்களைப் போன்று எங்கள் வீட்டில் தோட்டம் அமைக்கப்போகிறேன்.

கபிலன் : மகிழ்ச்சி, அண்ணா. இன்று நீங்கள் பட்டு அணிந்திருக்கிறீர்களே காரணம் என்ன ?

முகிலன் : இன்று எனக்குப் பிறந்த நாள் கபிலா.

கபிலன் : வாழ்த்துகள், அண்ணா.

## படித்தல்

| செயல்பாடு : 7 | விடையளித்தல் |
| --- | --- |

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.



பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணு தற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே

கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந்திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

வினாக்கள்

1. யாருக்குக் கல்வி வேண்டும் ?
2. பெண்களுக்குக் கல்வி ஏன் வேண்டும் ?
3. கல்வியில்லாத பெண்கள் எதற்கு ஒப்பாவர் ?
4. களர்நிலத்தில் எது விளையும் ?
5. பாடலுக்கேற்ற தலைப்பு இடுக.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

I. கீழ்க்காணும் வினாத்தொடரினைப் படித்து ஆம் / இல்லை என விடை எழுதுக. 5 x 1 = 5

1. திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையா ? (ஆம் / இல்லை)
2. சூசையப்பர் இயற்றிய நூல் தேம்பாவணியா ? (ஆம் / இல்லை)
3. சங்கரதாசு சுவாமிகள் தமிழ்நாடகத் தலைமையாசிரியரா ? (ஆம் / இல்லை)
4. மதங்கசூளாமணி நூலினை சுவாமி விபுலானந்தர் எழுதினரா ? (ஆம் / இல்லை)
5. வெற்றிலை நட்டான் என்பது சினையாகு பெயரா ? (ஆம் / இல்லை)

II. பொருந்தாதனவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. ஞானோபதேசம், திருமந்திரம், பரமார்த்த குரு கதை, தொன்னூல் விளக்கம்
2. பம்மல் சம்பந்தனார், ஔவை சண்முகனார், சங்கரதாசு சுவாமிகள், பரிதிமாற்கலைஞர்
3. செயிற்றியம், முறுவல், நன்னூல், சயந்தம்
4. பவளக்கொடி, இலவகுசா, மனோகரன், பிரகலாதன்
5. பொரியல், அவியல், சித்திரை, சுண்டல்

தமிழ்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# வேற்றுமை



மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம்.

கரும்பலகையில் எழுதிய தொடர்களைப் படித்துப் பாருங்கள்.

1. முருகன் வந்தான்.
2. முருகனைப் பார்த்தான்.
3. முருகனால் வரையப்பட்டது.

முதல் தொடரில் முருகன் என்னும் பெயர் எழுவாய்.

இரண்டாம் தொடரில் முருகன் என்னும் பெயர் செயப்படுபொருள்.

மூன்றாம் தொடரில் முருகன் என்னும் பெயர் செயப்படுபொருளாகவும் கருத்தாவாகவும் வேறுபடுகிறது.

இவ்வாறு பெயரை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். அவ்வேற்றுமை எண் வகைப்படும்.

மாணவர் : இதனை ஏழாம் வகுப்பிலேயே படித்தோம், ஐயா. ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன வேற்றுமை உருபுகள், ஐயா.

ஆசிரியர் : மறக்காமல் சொன்னீர்கள், மகிழ்ச்சி. இவ்வகுப்பில் சிறிது விரிவாகத் தெரிந்து கொள்வீர்கள். இப்போது ஒவ்வொரு வேற்றுமை உருபு பற்றியும், அஃது எவ்வெப்பொருளில் வரும் என்பது பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள்.

மாணவர் : விளக்குங்கள், ஐயா.

ஆசிரியர் : 'முகிலன் வந்தான்' என்பது ஒரு தொடர். இத்தொடரில் முகிலன் என்பது எழுவாய். இந்த எழுவாய், வந்தான் என்னும் பயனிலையை ஏற்று இயல்பாக வருகிறது. இந்த எழுவாய் வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றுள் ஒன்றனைப் பயனிலையாகக்கொண்டு முடியும். இவ்வாறு வருவது எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை எனப்படும். இதற்கு உருபு இல்லை.

(எ.கா.) 1. மாடு வந்தது – வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

2. வளவன் என் தம்பி – பெயர்ப்பயனிலையைக் கொண்டு முடிந்தது.

3. வளர்மதி யார் ? – வினாப்பெயர்ப் பயனிலையைக்கொண்டு முடிந்தது.

மாணவர் : இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ'தானே, ஐயா.

ஆசிரியர் : ஆம். சரியாகச் சொன்னாய். 'முருகேசன் செடியை நட்டான்' இத்தொடரில் முருகேசன் என்பது எழுவாய். 'செடி' என்பதும் பெயர்ச் சொல்லே. அஃது 'ஐ' என்னும் உருபை ஏற்றுச் செயப்படுபொருளை உணர்த்துகிறது. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை எனப்படும். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை எனவும் வழங்குவர். இதன் உருபு 'ஐ'.

அஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| வளவன் பள்ளியைக் கட்டினான் | – | ஆக்கல் |
| சோழன் பகைவரை அழித்தான் | – | அழித்தல் |
| தேன்மொழி கோவிலை அடைந்தாள் | – | அடைதல் |
| குழகன் சினத்தை விடுத்தான் | – | நீத்தல் |
| கயல்விழி குயிலைப் போன்றவள் | – | ஒத்தல் |
| கண்ணன் செல்வத்தை உடையவன் | – | உடைமை |

மாணவர் : மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன தாமே, ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். இவை தம்மையேற்ற பெயர்ப்பொருளைக் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளாக வேறுபடுத்தும். இவற்றுள் ஆல், ஆன் உருபுகள் கருவி, கருத்தா ஆகிய இருபொருள்களிலும் வரும். கருவி முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

(எ.கா.) நாரால் கயிறு திரித்தான்.

முதற் கருவி (காரியமாக மாறி அஃதாகவே இருப்பது).

கையால் கயிறு திரித்தான்.

துணைக்கருவி (காரியம் செயல்படும்வரை துணையாக இருப்பது.)

இதேபோல் கருத்தாவும் இயற்றுதல் கருத்தா, ஏவுதல் கருத்தா என இருவகைப்படும்.

(எ.கா.) 1. தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.

இயற்றுதல் கருத்தா. (தானே செய்வது.)

தமிழ்

2. கோவில் அரசனால் கட்டப்பட்டது. – ஏவுதல் கருத்தா.
(தான் செய்யாமல் பிறரைச் செய்ய வைப்பது.)

மாணவர் : ஐயா, உடனிகழ்ச்சி என்றால் என்ன ?

ஆசிரியர் : ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் உடனிகழ்வது உடனிகழ்ச்சிப் பொருள் எனப்படும்.

(எ.கா.) தாயொடு குழந்தை சென்றது.

நாயொடு குட்டியும் சென்றது.

கருவிப்பொருளில் கொண்டு என்னும் சொல்லும் உடனிகழ்ச்சிப் பொருளில் உடன் என்னும் சொல்லும் சொல்லுருபுகளாக வரும்.

(எ.கா.) நூல்கொண்டு தைத்தான்.

ஆறுமுகனுடன் வள்ளி சென்றாள்.

மாணவர் : நான்காம் வேற்றுமை உருபு ‘கு’ தானே, ஐயா.

ஆசிரியர் : வரிசையாகக் கேட்கிறாய், மகிழ்ச்சி. இது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும்.

(எ.கா.)

| | | | |
|---|---|---|---|
| 1. | புலவர்க்குப் பரிசு கொடுத்தார். | – | கொடை |
| 2. | நோய்க்குப் பகை மருந்து. | – | பகை |
| 3. | பாரிக்கு நண்பர் கபிலர். | – | நட்பு |
| 4. | வீட்டுக்கு ஒரு பிள்ளை. | – | தகுதி |
| 5. | வளையலுக்குப் பொன். | – | அதுவாதல் |
| 6. | கூலிக்கு வேலை. | – | பொருட்டு |
| 7. | கோவலனுக்கு மனைவி கண்ணகி. | – | முறை |
| 8. | திருத்தணிக்கு வடக்கே வேங்கடம். | – | எல்லை |

‘கு’வுக்குப் பதிலாகப் பொருட்டு, நிமித்தம் என்பன சொல்லுருபுகளாக வரும்.

(எ.கா.) கூலியின்பொருட்டு வேலை செய்தான்.

வேலையின் நிமித்தம்அயலூர் சென்றான்.

கு உடன் ஆக என்பதும் சேர்ந்து வரும்.

(எ.கா.) கூலிக்காக வேலை செய்தான்.

மாணவர் : ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் என்பனதாமே ,ஐயா.

தமிழ்

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். இவை தம்மை ஏற்ற பெயர்ப்பொருளை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப்பொருள்களாக வேறுபடுத்தும்.

(எ.கா.) 1. தலையின் இழிந்த மயிர் – நீங்கல்

2. பாலின் நிறம் கொக்கு – ஒப்பு

3. சென்னையின் மேற்கு வேலூர் – எல்லை

4. அறிவில்மிக்கவர் ஔவை – ஏது

இருந்து, நின்று, விட, காட்டிலும் என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் ஆகும்.

(எ.கா.) 1. வேலன் ஊரிலிருந்து வந்தான். – இருந்து

2. அரசன் தேரினின்று இறங்கினான். – நின்று

3. கயல்விழி என்னைவிடப் பெரியவள் – விட

4. தமிழைக்காட்டிலும் சுவையான மொழி உண்டா ?– காட்டிலும்

மாணவர் : ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ என்பவைதாமே, ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். அது, ஆது என்பன ஒருமைக்கும், அ என்பது பன்மைக்கும் வரும். இவ்வுருபுகள் கிழமைப் (உரிமை) பொருளில் வரும்.

(எ.கா.) 1. எனது வீடு.

2. எனாது நூல்.

3. தை, மாசி எனத் தமிழ் மாதங்கள் பன்னிரண்டு.

ஆறாம் வேற்றுமைக்கு உடைய என்பது சொல்லுருபாக வரும்.

(எ.கா.) 1. என்னுடைய வீடு.

2. நண்பனுடைய சட்டை.

மாணவர் : ஏழாம் வேற்றுமை உருபுகள் கண், கால், மேல், கீழே, இடம், இல் முதலியனதாமே, ஐயா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். இப்போது சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

(எ.கா.) 1. மணியில் ஒலி. – இல்

2. வீட்டின்கண் பூனை. – கண்

3. அவனுக்கு என்மேல் வெறுப்பு. – மேல்

4. பெட்டியில் பணம் உள்ளது. – இல்

குறிப்பு: ‘இல்’ என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்பு, ஏது, நீங்கல் ஆகிய பொருளில் வரும். ஏழாம் வேற்றுமை உருபு இல் இடப்பொருளில் வரும்.

தமிழ்

(எ.கா.) 1. மாலையில் மலர்கள்.

இல் ஏழாம் வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்தது.

2. மாலையிலிருந்து மலரைப் பிரித்தான்.

இல் ஐந்தாம் வேற்றுமை உருபு நீங்கல் பொருளில் வந்தது.

மாணவர் : தெளிவாகப் புரிந்தது, ஐயா. எட்டாம் வேற்றுமை, விளிவேற்றுமை தானே!

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கி அழைக்க இவ்வேற்றுமை பயன்படுகிறது. இதனை விளிவேற்றுமை என வழங்குவர். (எ.கா.) கண்ணா வா!, கிளியே பேசு!

பயிற்சி : உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக்கொண்டு முடிவது.

அ) நான்காம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை

இ) முதல் வேற்றுமை ஈ) ஆறாம் வேற்றுமை

2. பெயர்ச்சொல்லைக் கருத்தாவாக மாற்றுவது.

அ) முதல் வேற்றுமை ஆ) மூன்றாம் வேற்றுமை

இ) இரண்டாம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

3. கிழமைப்பொருளில் வருவது.

அ) மூன்றாம் வேற்றுமை ஆ) ஆறாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

4. இராமனுக்குத் தம்பி இலக்குவன். இதிலுள்ள வேற்றுமை உருபு பொருளில் வந்துள்ளது.

அ) கொடை ஆ) பகை

இ) நட்பு ஈ) முறை

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இரண்டாம் வேற்றுமை உருபு ______________ எனவும் அழைக்கப்பெறும்.
2. கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் ______________ உருபு வரும்.
3. ஐந்தாம் வேற்றுமையில் வரும் 'இல்'உருபு ______________ பொருளில் வரும்.
4. எட்டாம் வேற்றுமை ______________ பொருளில் வரும்.
5. வாலிக்குப் பகைவன் சுக்ரீவன் இத்தொடரில் உள்ள 'கு' உருபு ______________ என்னும் பொருளில் வந்துள்ளது.
6. முதல் வேற்றுமைக்கு ______________ இல்லை.

தமிழ்

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. காட்டை அழித்தான் | – | ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு |
| 2. புலியைப் போன்றவன் | – | பொருட்டு |
| 3. கூலியின்பொருட்டு வேலை | – | அழித்தல் |
| 4. என்னுடைய வீடு | – | ஒத்தல் |
| | – | எல்லை |

2.1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. முதல் வேற்றுமை | – | கிளையின்கண் காக்கை |
| 2. மூன்றாம் வேற்றுமை | – | கல்வியில் பெரியர் கம்பர் |
| 3. ஐந்தாம் வேற்றுமை | – | மரத்தால் செய்தது. |
| 4. ஏழாம் வேற்றுமை | – | அவன் யார் ? |
| | – | வீட்டைக் கட்டினான். |

ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுமையாவது யாது ? அதன் வகைகளைக் கூறுக.
2. இரண்டாம் வேற்றுமை உருபு எவ்வெப்பொருளில் வரும் ?
3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
4. கருத்தா எத்தனை வகைப்படும் ? சான்று தருக.
5. நான்காம் வேற்றுமை உருபு யாது ? அஃது எவ்வெப்பொருளில் வரும் ?
6. ஆறாம் வேற்றுமையில் ஒருமைக்கு வரும் உருபுகள் யாவை ? சான்று தருக.

இ) செயல் திட்டம்

1. நும் பாடப்பகுதியில் உள்ள வேற்றுமை உருபுகளுடன் கூடிய தொடர்களைத் தொகுக்க.
2. தொகுத்த வேற்றுமை உருபுகளை வகைப்படுத்துக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆக்கம் தரும் அறிவியல் வளர்ச்சி

ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

இராமானுசக் கவிராயர் என்பவர் இலக்கணப் புலவர்; நன்னூலுக்குக் காண்டிகையுரை கண்டவர். ஒருமுறை புலவர் பலர், அவருடன் இலக்கணம்பற்றி உரையாடிக்கொண்டிருந்தனர். புலவர் ஒருவர், கவிராயரிடம் குற்றிலுகரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறுங்கள் என்றார். கவிராயர் 'தெரியாது' என்றார். இவ்வளவு பெரிய இலக்கணப் புலவர் குற்றியலுகரம் தெரியாது என்கிறாரே என்று ஒருவரை ஒருவர்

தமிழ்

பார்த்துக்கொண்டனர். நிலைமையை உணர்ந்த கவிராயர் குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுதானே கேட்டீர்கள். நான் சொன்னது எடுத்துக்காட்டு இல்லையா ? தெரியாது என்னும் சொல்லில் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம்தானே என்றார். புலவர் அனைவரும், கவிராயரின் சொல்லாட்சியை எண்ணி வியந்தனர்.

### இ) எழுதுதல் திறன்

விளம்பரங்கள் / அறிவிப்புகள் பார்த்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க.

**வேலைவாய்ப்பு**

சென்னையில் அமைந்துள்ள புகழ்பெற்ற நிறுவனத்திற்கு

**வரவேற்பாளர்கள் தேவை**

கல்வித்தகுதி : முதுகலை நிருவாகவியல்

தமிழிலும் ஆங்கிலத்திலும்

தங்குதடையின்றிப் பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்.

நேர்காணல் : 15.09.2013 காலை 10.00 மணி

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**கலைவாணி கல்வியியல் நிறுவனம்,**

67, அம்மையப்பன் தெரு, சென்னை – 600 002.



#### வினாக்கள்

1. இந்த விளம்பரம் எதனைப்பற்றியது ?
2. வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனம் எங்கு அமைந்துள்ளது ?
3. விண்ணப்பிப்போர் பெற்றிருக்கவேண்டிய தகுதிகள் யாவை ?
4. நேர்காணல் எப்போது ?
5. விண்ணப்பிக்கும் பணியின் பெயர் என்ன ?

### ஈ) கலந்துரையாடுதல் திறன்

ஐந்து குழுக்களாகப் பிரிந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு துறையில் சாதனை படைத்த அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துக்கொண்டு வாருங்கள்; தொகுத்த கருத்துகளை வகுப்பில் கலந்துரையாடுங்கள் .

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | இலக்கியம் | – | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் |
| | மருத்துவம் | – | முத்துலட்சுமி அம்மையார் |
| | பொறியியல் | – | விசுவேசுவரய்யா |

## மொழித்திறன் பயிற்சி

### 1. மரபுத்தொடர்களை அமைத்து எழுதுதல்

(எ.கா.) 1. கண்ணனுக்கு வேலை கிடைக்கவில்லை, உணவுக்கே தாளம் போடுகின்றான்.

தாளம் போடுதல் – மரபுத்தொடராகும். இதன் பொருளாவது, துன்பப்படுதல்.

2. முருகனுக்குக் கயிறு திரிப்பதே வேலையாகிவிட்டது. ( இல்லாததனைச் சொல்லுதல்)

3. பாவேந்தர் பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்.

( தனிப்புகழோடு வாழ்ந்தார்)

4. தான் பணத்தைத் திருடவில்லையென்று கண்ணன் முதலைக்கண்ணீர் வடித்தான்.

(பொய்யாக அழுதல் / ஏமாற்றுதல் )

5. செய்தி தெரியுமா ? வேலனுக்கு ஆணை வந்துவிட்டது. (வேலை கிடைத்துவிட்டது.)

பயிற்சி : கீழ்க்காணும் மரபுத்தொடர்களை உரிய இடங்களில் பொருத்தி எழுதுக.

(புத்தகப்பூச்சி, வாழையடிவாழையாக, மலையேறிவிட்டது, பெருஞ்செலவாணி, சீட்டுக் கிழிந்துவிட்டது)

அ) அவன் குடும்பம் ________________ ஊருக்குக்குத் தொண்டாற்றி வருகிறது.

ஆ) அலுவலகத்தில் வேலை நேரத்தில் தூங்கியதனால் கந்தனுக்கு ________________.

இ) கதிரவனுக்கு உலகில் நடப்பது எதுவும் தெரியாது. அவன் ஒரு ________________.

ஈ) சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்வது இன்று ________________.

உ) முருகன் கையிலிருந்த பொருளை இழந்துவிட்டான். அவன் ________________.

### 2. தமிழெண்களுக்குரிய அரபு எண்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | உ + ச | = | 14 |
| 2. | அ + உ | = | 19 |
| 3. | ரு + கூ | = | 12 |
| 4. | கO+ உ | = | 10 |
| 5. | கஅ + க | = | 6 |

### 3. கட்டுரைப் பயிற்சி : எங்கும் கணினி எதிலும் கணினி

## பண்பு

பேருந்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. கால் வைப்பதற்கும் இடமில்லாமல் அனைவரும் அல்லல்பட்டுக்கொண்டு பயணம் செய்தனர்.

பேருந்துநிறுத்தத்தில் நின்றபோது, பெண்மணி ஒருத்தி, கையில் ஒரு குழந்தையும், இடுப்பில் ஒரு குழந்தையுமாய்ப் பேருந்தில் ஏறினாள். எப்படியோ உள்ளே நுழைந்த அவள் ஓரிடத்தில் நின்றுகொண்டாள்.

ஆனாலும் இடுப்பில் இருந்த குழந்தை கூட்ட நெரிசலில் சிக்கி வீறிட்டு அழத்தொடங்கியது.

அருகில் நின்றுகொண்டு இருந்தவர்கள், “ஏம்மா உட்கார்ந்திருக்கிறவங்க யார்கிட்டயாவது குழந்தையைக் கொடும்மா; இல்லாவிட்டால் யாரையாவது எழுந்திருக்கச் சொல்லும்மா'' என்று கூறினர்.

ஆனால், பேருந்தில் உட்கார்ந்திருந்தவர்கள் யாரும் எழுந்து இடம் தரவில்லை.

### கூடிப் பேசுவோம்

1. பேருந்தில் பயணம் செய்யும்போது இதுபோன்ற நிகழ்வுகளை நீங்கள் கண்டதுண்டா ?
2. பேருந்துப்பயணத்தில், உன் அருகில் முதியவரோ மாற்றுத்திறனாளியரோ நின்றிருந்தால் நீ எழுந்து இடம் கொடுப்பாயா ?

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத்திறன்

கண்ணன் சிறந்த கால்பந்து விளையாட்டு வீரன். கோடைவிடுமுறையில் கால்பந்து விளையாட்டுக்கான பயிற்சி வகுப்பில் சேர விரும்பினான்; பெற்றோரிடமும் ஒப்புதல் பெற்றுவிட்டான். எதிர்பாராதவிதமாக ஊரிலிருந்து வந்த அவனுடைய அத்தையும் மாமாவும் கோடைவிடுமுறையைத் தங்களோடுதான் கழிக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். கண்ணனுக்குக் கால்பந்து விளையாட்டுப்பயிற்சியை விடுவதற்கு மனமில்லை; பெரியவர்களின் பேச்சுக்கும் மதிப்புக் கொடுக்க விரும்புகிறான்.

இந்த நிலையில் கண்ணன் என்ன முடிவு எடுத்திருப்பான் ?

கண்ணன் விளையாட்டுக்கு முன்னுரிமை கொடுப்பானா ? பெரியவர்களை மதிப்பானா ?

நீங்களாக இருந்தால் என்ன செய்திருப்பீர்கள் ?



## மதிப்புக்கல்வி

### மாற்றுத்திறனாளிகளை மதித்தல்

முத்துசாமி என்பவர் மாற்றுத்திறனாளி. ஒருமுறை, நோயுற்ற தன் மனைவிக்கு மருந்து வாங்குவதற்காக ஊன்றுகோலைத் தட்டிக்கொண்டு கடைத்தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தார். மருந்து வாங்க வைத்திருந்த பணம், பையில் உள்ளதா என்று அறிவதற்காக, அதனைக் கையில் எடுத்தார்.

எதிரில் வந்துகொண்டிருந்த ஒருவர், எதிர்பாராமல் அவரை இடித்துவிட்டுச் சென்றார். அப்போது முத்துசாமியின் கையில் இருந்த பணம் தவறிச் சாலையில் விழுந்தது.

தடுமாறிய முத்துசாமி, கீழே உட்கார்ந்து கைகளால் தடவிக்கொண்டு பணத்தைத் தேடினார். இந்தக் காட்சியை அவரைநோக்கி வந்துகொண்டிருந்த பள்ளி மாணவர் இருவர் பார்த்தனர். அவர்களுள் ஒருவன் மகிழ்ச்சியோடு, “எனக்குத்தான் அந்தப்பணம்'' என்று கூறிக்கொண்டே எடுக்கச் சென்றான். மற்றொருவனோ, “வேண்டா, பாவம். பார்வையற்ற அவரை நாம் ஏமாற்றுதல் கூடாது. அவருக்கு அந்தப் பணம் கிடைக்க உதவி செய்வோம், வா'' என்று அழைத்தான்.

இரண்டு நண்பர்களுள் யார் செய்தது சரி ?

சமுதாயத்தில் மாற்றுத்திறனாளியரிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ளுதல் வேண்டும் ?

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | கலந்துரையாடல் |
| --- | --- |

அழிந்துவரும் விலங்கினங்கள் குறித்த செய்திகளைத் திரட்டிவந்து குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடுக.

## எழுதுதல்

| செயல்பாடு : 2 | குறிப்புகளை விரித்து எழுதுதல் |
| --- | --- |

பாரதிதாசனின் வாழ்க்கைக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அக்குறிப்புகளைக்கொண்டு, உரைப்பகுதியாக எழுதுக.

பிறப்பு : 29.04.1891
இடம் : புதுச்சேரி
இயற்பெயர் : சுப்புரத்தினம்
பெற்றோர் : கனகசபை – இலக்குமி

சிறப்பு : பாரதியாருடன் கொண்ட நெருங்கிய தொடர்பினால், பாரதிதாசன் எனத் தன்பெயரை அமைத்துக் கொண்டார்.



தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர். பாவேந்தர், புரட்சிக்கவி எனச் சிறப்புப் பெயர்களும் உண்டு.

இயற்றிய நூல்கள் : பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக் காப்பியம், தமிழியக்கம் முதலியன.
இறப்பு : 21. 04.1964

| செயல்பாடு : 3 | விடை எழுதுதல் |
| --- | --- |



கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

படத்தில் நீங்கள் காணும் பறவை மரகதப் புறாவாகும். தமிழ்நாட்டின் தேசியப் பறவையாக இது விளங்குகிறது. இப்பறவை மழைக்காடுகளிலும், அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கின்றது. இப்பறவையின் இறக்கைகள் மரகதப்பச்சை நிறத்தில் இருக்கும்.

மரகதப்புறா, பறப்பதனைவிட நிலத்தில் நடப்பதனையே மிகவும் விரும்புகிறது. இப்பறவை விதைகள், பழங்கள், பல்வேறுவகையான தாவரங்களை

விரும்பி உண்ணும். இப்பறவை மரங்களில் கூடுகட்டி, முட்டையிடுகிறது. இப்பறவையின் முட்டை மஞ்சள் கலந்த வெண்ணிறத்தில் காணப்படும். இப்பறவை எளிதாகப் பழகக்கூடிய வகையில் உள்ளது.

வினாக்கள்

1. தமிழ்நாட்டின் தேசியப் பறவை எது ?
2. மரகதப்புறா எங்கு வாழ்கிறது ?
3. மரகதப்புறா எதனை விரும்பி உண்கிறது ?
4. மரகதப்புறா முட்டையின் நிறம் யாது ?
5. நிரப்புக. மரகதப்புறா, பறப்பதனைவிட ________________ விரும்புகிறது.

## படைப்பாற்றல்

| செயல்பாடு : 4 | படம் வரைதல் |
|---|---|

பாடப்பகுதியில் அமைந்துள்ள செய்யுளுக்குப் படம் வரைக.

| செயல்பாடு : 5 | படைப்பாற்றல் |
|---|---|

காட்டுயிரிகள் பாடத்தில் இடம்பெறும் பாடப்பொருளுக்கேற்ப எளிய உணவுச் சங்கிலி ஒன்றனை வரைக.

 →  → 

(எ.கா.) தாவரம் மான் புலி

## தொகுத்தல்

| செயல்பாடு : 6 | செயல்திட்டம் |
|---|---|

பயன்தரும் தாவரங்கள், நன்மை செய்யும் விலங்குகள் பறவைகள் பற்றிய படங்களையும், செய்திகளையும் திரட்டித் தொகுப்பேடு தயாரிக்க.

# புணர்ச்சி : இயல்பு, விகாரம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். திருமணம் நடைபெறும் வீட்டிற்குச் சென்றிருக்கிறீர்களா ?

மாணவர் : சென்றிருக்கிறோம், ஐயா.

ஆசிரியர் : சரி சரி. நாம் செல்லுமிடங்களில் எல்லாம் நடைபெறும் நிகழ்வுகளை நன்றாக உற்றுநோக்குதல் வேண்டும்; உற்றுநோக்கித் தெரிந்து கொள்வதும் கல்விதான். நிகழ்வுகளையும் செயல்களையும்பற்றி ஏன், எப்படி, எவ்வாறு, எதனால் என நமக்குள்ளேயே வினாக்கள் எழுப்பிச் சிந்தித்தல் வேண்டும். விடைகிடைக்காதபோது பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். சரி. திருமண வீட்டின்முன் எந்த மரத்தைக் கட்டுவார்கள் ?

மாணவர் : வாழைமரம், ஐயா.

ஆசிரியர் : நன்கு உற்றுநோக்கியிருக்கிறாய். மகிழ்ச்சி. இறைவனுக்குத் தேங்காய், பூமாலை இவற்றுடன் எந்தப் பழத்தை வைப்பார்கள் ?

மாணவர் : வாழைப்பழம், ஐயா.

ஆசிரியர் : ஆம். வாழைமரம், வாழைப்பழம். இவ்விரு சொற்களையும் நோக்குங்கள். முதல் சொல்லில் வாழை + மரம் = வாழைமரம் என இருசொற்கள் இணைந்து எத்தகைய மாற்றமும் இல்லாமல் அப்படியே சேர்ந்துள்ளன. இரண்டாவது சொல்லில் வாழை + பழம் = வாழைப்பழம் என இருசொற்கள் இணையும்போது வல்லின மெய் (ப்) சேர்ந்து வந்துள்ளது. இவ்வாறு இருசொற்கள் இணைவதற்குப் புணர்ச்சி என்பது பெயர்.

மாணவர் : ஐயா, இந்த இரு தொடர்களிலும் நீங்கள் சொல்கிற புணர்ச்சி ஒன்றுபோல் இல்லையே !

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். முதல் தொடரில் இயல்புப்புணர்ச்சியும் இரண்டாவது தொடரில் விகாரப்புணர்ச்சியும் இடம்பெற்றுள்ளன. நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எவ்விதமாற்றமும் ஏற்படவில்லையென்றால், அஃது இயல்புப்புணர்ச்சியாகும். நீங்களே எடுத்துக்காட்டைக் கூறுங்கள்.

மாணவர் : பொன் + வளையல் = பொன்வளையல்; மலர் + மாலை = மலர்மாலை; பனை + மரம் = பனைமரம்.

ஆசிரியர் : தெளிவாகச் சொன்னாய். இணையும் இருசொற்களில் முதல்சொல் நிலைமொழி எனப்படும். நிலைமொழியின் இறுதி, புள்ளிஎழுத்தாக (மெய்யாக) இருந்தால் மெய்யீறு எனச் சொல்லுதல் வேண்டும். உயிர்மெய்யாக இருந்தால், உயிரீறு எனச் சொல்லுதல் வேண்டும்.

பொன் + வளையல் – நிலைமொழியில் ன் மெய்யீறு.

பனை + மரம் – நிலைமொழி இறுதி எழுத்தாகிய னை ( ன்+ ஐ ) உயிரீறு.

குறிப்பு : 1. ஓர் எழுத்துச் சொல்லில் மட்டும் உயிர் ஈறு வெளிப்படையாகத் தெரியும். ( தீ + பிடித்தது = தீப் பிடித்தது )

2. ஓர் எழுத்துச் சொல்லாக உயிர்மெய் எழுத்து வரும்போது (ப் + ஊ) எனப் பிரித்து உயிர் ஈற்றைக் காணுதல் வேண்டும். பூ (ப் + ஊ) + பூத்தது = பூப்பூத்தது.

மாணவர் : புரிகிறது, ஐயா. வருமொழியை எவ்வாறு அழைக்கலாம் ?

ஆசிரியர் : நல்ல கேள்வி. வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தால், மெய் முதல் எனச் சொல்லுதல் வேண்டும். உயிராக இருந்தால் உயிர்முதல் எனச் சொல்லுதல் வேண்டும்.

(எ.கா.) பொன் + வளையல் = பொன் வளையல் (வ் + அ) இங்கு 'வ்' மெய்முதல். கண் + அழகு = கண்ணழகு (இங்கு அ உயிர்முதல்) நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் நன்றாகத் தெரிந்து கொண்டால்தான் புணர்ச்சியைப் புரிந்துகொள்ளுதல் இயலும்.

தமிழ்

மாணவர் : நன்றாகப் புரிந்தது, ஐயா.

ஆசிரியர் : நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றங்கள் ஏற்படுமானால், அதனை விகாரப்புணர்ச்சி என்பர்.

(எ.கா.) 1. பலா + சுளை = பலாச்சுளை – மெய் தோன்றியது.

2. படம் + காட்சி = படக்காட்சி – நிலைமொழி ஈறுகெட்டு மெய் தோன்றியது. ( ம் மறைந்து க் தோன்றியது)

3. பொன் + சிலை = பொற்சிலை – நிலைமொழி ஈறு திரிந்தது. (ன்–ற் ஆனது)

இவ்வாறு விகாரப்புணர்ச்சி தோன்றல், கெடுதல், திரிதல் என மூவகைப்படும்.

விகாரப்புணர்ச்சிக்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறுங்கள்.

மாணவர் : மா + பழம் = மாம்பழம், வடக்கு + திசை = வடதிசை, மணம் + கோலம் = மணக்கோலம், அல் + திணை = அஃறிணை.

ஆசிரியர் : அருமை அருமை. புணர்ச்சியின் வகைகளைக் கரும்பலகையில் அட்டவணைப்படுத்தலாம்.

புணர்ச்சி

| இயல்புப்புணர்ச்சி | விகாரப்புணர்ச்சி |
|---|---|
| வாழை + மரம் = வாழைமரம் | 1. தோன்றல் : திரு + குறள் = திருக்குறள் (க்) |
| | 2. கெடுதல் : மரம் + வேர் = மரவேர் (ம்) |
| | 3. திரிதல் : பல் + பொடி = பற்பொடி (ற்) |

பயிற்சி

விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. வாழை + ________ = வாழைப்பழம்
2. வட்டம் + பலகை = ________
3. பசுமை + ________ = பைங்கூழ்
4. பனை + மரம் = ________

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக.

1. இயல்புப்புணர்ச்சி – பாடம் + வேளை
2. தோன்றல் – பொன் + குடம்
3. திரிதல் – வாழை + குலை
4. கெடுதல் – தமிழ் + மண்

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்கு ________ என்பது பெயர்.
2. அல் + திணை என்பது ________ எனப் புணரும்.
3. தோன்றல், திரிதல், கெடுதல் என்பன ________ புணர்ச்சி ஆகும்.

3. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. வாழை + தோட்டம் என்பது ________ புணர்ச்சி.
   அ) இயல்புப்புணர்ச்சி ஆ) விகாரப்புணர்ச்சி இ) திசைப்பெயர்ப்புணர்ச்சி
2. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது ________ .
   அ) இயல்புப்புணர்ச்சி ஆ) விகாரப்புணர்ச்சி இ) பண்புப்பெயர்ப்புணர்ச்சி
3. விகாரப்புணர்ச்சி ________ வகைப்படும்.
   அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன்று

ஆ) குறுவினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன ? சான்று தருக.
2. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும் ? திரிதல் விகாரம் சான்று தருக.
3. பாடம் + புத்தகம். இதனைச் சேர்த்தெழுதி, எவ்வகைப் புணர்ச்சி என்பதனைக் குறிப்பிடுக.

தமிழ்

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

நான் திரைப்படக் கவிஞனானால்...

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து நயம் அறிக.

எட்டயபுரத்து அரசவையில் இருந்த காந்திமதிநாதன் என்பவருக்குப் பாரதியார்மீது வெறுப்பு ஏற்பட்டது. பாடல் புனைவதில் வல்லவரான பாரதியைப் பாடலாலேயே சிறுமைப்படுத்த வேண்டும் என்று நினைத்தார். எனவே, பாரதி சின்னப் பயல் என்னும் ஈற்றடியைக் கொடுத்துப் பாரதியாரிடம் பாடல் ஒன்றனைப் பாடச்சொன்னார். காந்திமதிநாதனின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட பாரதியார், பாடலைப் பாடி முடித்தார். அவர், அப்பாடலைக் கீழுள்ளவாறு அமைத்திருந்தார்.

காந்திமதிநாதனைப்பார் அதி சின்னப்பயல்

### இ) எழுதுதல் திறன்

படங்கள் வாயிலாகக் கருத்துகளை வெளிப்படுத்தும் திறன்.

(எ.கா.) காந்தியடிகளும் பாரதியாரும் நேருக்கு நேராகச் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள் ? உரையாடல் வடிவத்தில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதுக.



காந்தியடிகள் : வாருங்கள், பாரதியாரே ! நலமாக இருக்கிறீர்களா ?

பாரதியார் : விடுதலை, விடுதலை, விடுதலை.

காந்தியடிகள் : என்ன, ஐயா ! உங்கள் நலத்தைக் கேட்டால் விடுதலை என்று கூறுகிறீர்களே ? யாருக்கு விடுதலை வேண்டும் ?

பாரதியார் : மகாத்மா அவர்களே, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய இந்நாட்டைக்காண ஆவலோடு ஓடி வந்தேன். என்னே வியப்பு! நான் முதலில் நுழைந்தது ஒரு கல்லூரி வகுப்பினுள்; ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காணென்று பாடினேனே, அதனை என் கண்களால் அங்குக் கண்டேன். ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் அங்குக் கல்வியறிவு பெறுகின்றனர். நாட்டுக்கும் விடுதலை, பெண்ணுக்கும் விடுதலை. இப்போது புரிந்ததா நான் ஏன் விடுதலையைப்பற்றிக் கூறினேன் என்று ? ஐயா, நீங்கள் எங்குச் சென்றீர் ? யாரைக் கண்டீர் ?

தமிழ்

காந்தியடிகள் : ஒரு பள்ளிக்குச் சென்றேன். அங்கு மாணாக்கர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். அதனைக் கண்டு மிகவும் வியப்படைந்தேன்.

பாரதியார் : அப்படியென்ன அங்குக் கண்டீர் ?

காந்தியடிகள் : அவரவர் தாய்மொழியில் கல்வி கற்க வேண்டுமென்பதே என் விருப்பம். அப்பள்ளியில் தாய்மொழிவழிக்கல்வி நடைபெற்றுக்கொண்டிருந்தது. என் விருப்பம் நிறைவேறியதனைக் கண்டு மிகவும் மகிழ்வடைந்தேன்.

பாரதியார் : நம் இருவரின் எண்ணங்களும் நிறைவேறியதனைக் கண்டு எனக்கும் மகிழ்ச்சியாக உள்ளது.

நன்றி, ஐயா. மீண்டும் சந்திப்போம்.

காந்தியடிகள் : நன்றி, நானும் சென்று வருகிறேன்.

## படைப்பாற்றல்



இவை சந்தித்தால் என்ன பேசிக் கொள்ளும் ?

## மொழித்திறன் பயிற்சி

1. வல்லினம் மிகும் இடங்கள் சிலவற்றை அறிவோம்

அ , இ என்னும் சுட்டெழுத்துகளின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அ + கனி = அக்கனி, இ + புத்தகம் = இப்புத்தகம்

எ என்னும் வினா எழுத்தின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) எ + பொருள் = எப்பொருள்

அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபுகளின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அந்த + பையன் = அந்தப் பையன், இந்த + பள்ளி = இந்தப் பள்ளி

அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அப்படி + கேள் = அப்படிக்கேள், இப்படி + செய் = இப்படிச்செய்

தமிழ்

எப்படி + படித்தான் = எப்படிப் படித்தான்

அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) அவ்வகைப் பேச்சு

இனி, தனி, மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) இனிப் பேசுவான்.

இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) படத்தைப் பார்த்தான், அவனுக்குக் கொடு.

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்

(எ.கா.) தயிர்க்குடம்

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) பட்டுச்சேலை

நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) கூலித்தொழில்

ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) விழிப்புனல்

ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) நீர்ப்பாம்பு

ஏழாம் வேற்றுமைத்தொகையின்பின் வல்லொற்று மிகும்.

(எ.கா.) குடிப்பிறந்தார்

தமிழ்

பயிற்சி

அ) தேவையான இடங்களில் வல்லின மெய்யிட்டு எழுதுக.

1. வெள்ளி கிண்ணம் விலையதிகம்.
2. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி.
3. தைதிங்கள் நன்னாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
4. பால்பருக தந்தான்.
5. உறுதியாக செய்வேன் என்று வாக்கு கொடுத்தான்.
6. அந்த பையனா இப்படி சொன்னான் ?
7. இந்த செயலை எப்படி செய்தாய் ?

ஆ) வல்லினமெய் சேர்த்தெழுதுக.

1. தனி + பையன் = ____________ 2. இனி + பேசு = ____________

3. நீர் + குடம் = ____________ 4. பாம்பு + தோல் = ____________

2. தமிழெண்களின் கூடுதல் காண்க.

1. க + அ = ____

4. உ + கஉ = ____

2. க + ரு = ____

5. க + க = ____

3. ௲ + அ = ____

3. கட்டுரைப் பயிற்சி : உழைப்பே உயர்வு

தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

அப்பா : 'வீக் எண்ட்ல பீச்சுக்கு வந்தாலே இதுதான் பிராப்ளம், பார்த்தாயா? காரைக்கூடப் பார்க்செய்ய முடியல.

மகன் : டாடி, அங்கே பாருங்க, அங்க ஒரு ப்ளேஸ் இருக்கு.

அப்பா : அப்பாடா! ஒரு வழியா பார்க் செய்தாச்சி. மீனா, பாபு, உங்களோட திங்க்ஸ் எல்லாம் எடுத்துக்குங்க. மம்மி கிட்ட கொடுத்துட்டு நீங்க ப்ளே பண்ணலாம். ஓகே தானே.

மகன் : டாடி, ஐஸ்கிரீம் வருது பாருங்க. எனக்கு வாங்கித்தாங்க.

அப்பா : நோ, நோ உனக்கு ஏற்கெனவே பீவர் ஆக இருக்கு. ஐஸ்கிரீம் சாப்பிட்டால் நாளைக்கு ஸ்கூலுக்குப் போக முடியாது.

மேற்கண்ட உரையாடலில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் அமைத்து எழுதுக.

தமிழ்

## வாழ்க்கைத்திறன்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

கயல்விழி நன்றாகப் படிப்பாள். ஆனால், தேர்வு எழுதும் நேரத்தில் மட்டும், அவள் படித்தவற்றை மறந்துவிடுவாள். இதனால், அவளால் அதிக மதிப்பெண் பெற முடியவில்லை. பெற்றோரும் ஆசிரியரும் அவள் நன்றாகப் படிக்கக்கூடியவள் என்பதனை அறிவார்கள். முதல்மதிப்பெண் பெற, அவள் மேலும் முயற்சி செய்யவேண்டும் என்று எண்ணுகின்றனர். ஆனால், படித்தவற்றைத் தேர்வு நேரத்தில் மறந்துவிடுவது அவளுக்கு மட்டும்தான் தெரியும்.

கயல்விழிக்கு ஏற்பட்ட சிக்கல் என்ன ?

இச்சிக்கலுக்கு எவ்வாறு தீர்வு காண்பாள் ?

நினைவாற்றலை வளர்த்துக்கொள்வது எப்படி ?

## மதிப்புக்கல்வி

### நகைச்சுவையுணர்வு

காந்தியடிகளும், நேருவும் ஒருமுறை நடைப்பயணம் மேற்கொண்டிருந்தனர். அப்போது வழியில் மூன்றடி அகலமுள்ள கால்வாய் ஒன்று குறுக்கிட்டது. அதனைக் கண்ட நேரு, சிறிது பின்னோக்கிச் சென்று கால்வாயைத் தாண்டினார். ஆனால், காந்தியடிகள் கால்வாயிலிருந்த கற்களின்மீது கால் வைத்துத் தாண்டிச்சென்றார். அப்போது நேரு காந்தியடிகளிடம், "இந்தக் கால்வாயை ஒரேமுறையில் உங்களால் தாண்ட முடியாதா ?" என்று கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள் "நான் நினைத்திருந்தால் தாண்டியிருப்பேன். ஆனால், மூன்றடி தூரம் முன்னோக்கிச் செல்வதற்கு ஆறடித் தொலைவு பின்னோக்கிச் செல்ல வேண்டுமா ? போர்முனையில் பின்வாங்கக் கூடாதல்லவா ? " என்று கூறி நகைத்தார்.

காந்தியடிகள் நகைச்சுவை உணர்வுமிக்கவர் என்பதனை இந்நிகழ்வு எடுத்துரைக்கிறது.

தமிழ்

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியை ஆசிரியர் படிக்க, மாணவர்கள் உற்றுக்கேட்டு, வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

வ. சுப. மா., எனச் சுருக்கமாக அழைக்கப்படும் வயிரவன்கோவில் சுப்பிரமணியனார் மகனார் மாணிக்கம் என்பார் பல்லாண்டுகளாகத் தமிழுக்கு நிலைத்த தொண்டாற்றியவர். அவர்தம் இளமைக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. வ. சுப. மா., தம் பதினெட்டாம் வயதில், பர்மாவின் ( இன்றைய மியான்மர் ) தலைநகரான இரங்கூனில் ஓர் அங்காடியில் வேலை செய்தார். ஒருநாள், அங்காடியின் உரிமையாளர் தம்மைத் தேடி ஒருவர் வருவார் எனவும், அவர் வரும்போது தாம் இல்லை எனக் கூறும்படியும் வ. சுப. மாணிக்கத்துக்குக் கட்டளையிட்டார். ஆனால், அவருக்கு மறுமொழியாக, 'அங்காடியின் உரிமையாளர் வெளியில் சென்றிருந்தால் இல்லை என்பேன்; அவர் இருக்கும்போது கேட்டால் எவ்வாறு இல்லை எனச் சொல்வது ? நான் அப்படியெல்லாம் பொய் கூறமாட்டேன்' என உரிமையாளரிடம் வ. சுப. மாணிக்கம் உறுதியாகக் கூறினார். இதனால், சினம் கொண்ட உரிமையாளர் அன்றே அவரை வேலையிலிருந்து நீக்கி, இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார். இந்நிகழ்வே, பிற்காலத்தில் வ. சுப. மாணிக்கத்தைப் 'பொய் சொல்லா மாணிக்கம்' எனப் பெருமையோடு அழைக்கக் காரணமாக அமைந்தது.

வினாக்கள்

1. உரைப்பத்தியில் கூறப்பெறும் தமிழறிஞர் யார் ?
2. வ. சுப. மா., தம்முடைய பதினெட்டாம் வயதில் எங்கு வேலை செய்தார் ?
3. அங்காடி உரிமையாளரிடம் வ. சுப. மா., கூறிய மறுமொழி யாது ?
4. வ. சுப. மா., வின் வாழ்வில் நடந்த நிகழ்வு அவரை எங்ஙனம் பெருமைப்படுத்தியது ?
5. இவ்வுரைப்பத்தியால் நீ அறிந்துகொள்வது என்ன ?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

இருவர் உரையாடல்

கீழ்க்காணும் உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் உணர்ச்சி வெளிப்படுமாறு பேசுக.

அதியமான் : அன்னையே! நின்னையே தொழுதேன்! தங்கள் வரவு நல்வரவாகுக! இருக்கையில் உட்காருங்கள்.

ஔவையார் : மகிழ்ச்சி! மகிழ்ச்சி! நிலவுலகம் போற்றும் நீடுபுகழ் அதியா, நின் கொற்றம் வாழ்க! நின் புகழ் ஓங்குக!

அதியமான் : தங்கள் புகழுரைக்குச் சிரம் தாழ்த்திப் பணிகின்றேன். அன்னையே! அரிதினும் அரிதான ஒரு பொருளை உங்களுக்கு அளித்து அழியாப்புகழ் பெற விரும்புகின்றேன்.

ஔவையார் : அரிதினும் அரிதான பொருளா ? அஃதென்ன ? அதனை அறிய நான் மிகவும் ஆவலாக உள்ளேன்.

அதியமான் : ஔவையே, இதோ அந்த அரிய பொருள்; எடுத்து உண்ணுங்கள்.

ஔவையார் : என்ன இது ? நெல்லிக்கனியா ?

| | | |
|---|---|---|
| அதியமான் | : | ஆம். ஔவையே, இந்நெல்லிக்கனியை எளிதாக எண்ணிவிடாதீர்கள்; சுவைத்துப் பாருங்கள். |
| ஔவையார் | : | (வாயிலிட்டுச் சுவைக்கின்றார்.) ஆ ! என்ன சுவை, என்ன சுவை ! இதனைத்தான் அமிழ்தம் என்றார்களோ ? இக்கனியின் இனிய சுவை என்றும் என் நினைவில் நிலைத்திருக்கும். இவ்வளவு சுவையான கனியை நீ உண்ணாமல் எனக்களித்த காரணம் என்ன ? |
| அதியமான் | : | சொல்கிறேன், ஔவையே. இந்நெல்லிக்கனியை உண்டவர் நெடுங்காலம் நீடுழி வாழ்ந்திருப்பர். |
| ஔவையார் | : | அப்படியென்றால், நீயல்லவா இக்கனியை உண்டிருத்தல் வேண்டும் ? மக்கள் குறிப்பறிந்து நிறைவேற்றுகின்ற நீயல்லவோ நெடுங்காலம் வாழ்தல் வேண்டும் ? நரை மூதாட்டியாகிய எனக்களித்ததேன் ? |
| அதியமான் | : | அன்னையே ! அரசாட்சி செய்கின்ற என்னைவிட அமுதத்தமிழில் அழகிய பாடல்களை எந்நாளும் இயற்றும் நீங்கள்தான் இக்கனியை உண்பதற்குத் தகுதியானவர். அதனால், நீங்கள் வாழும் நாள்வரை தமிழும் வாழ்ந்திருக்கும் அல்லவா ! |
| ஔவையார் | : | அதியா, உன் செயல்கண்டு யான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்மீது நீ கொண்டுள்ள பற்று என்னைப் பெருமை கொள்ளச் செய்கின்றது. தரணிமீதில் தமிழ் உள்ளவரை நின் பெயரும் நிலைத்திருக்கும். ஓங்குக நின் தாய்மொழிப்பற்று ! |
| அதியமான் | : | மிக்க மகிழ்ச்சி ! மீண்டும் ஒருமுறை தங்களைப் பணிந்து வணங்குகின்றேன். |

தமிழ்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருள் விளங்கக் குரலேற்ற இறக்கத்துடனும் உணர்ச்சி வெளிப்படுமாறும் படித்துக்காட்டுக.

மறக்குடி மங்கையொருத்தி, பகைவரை வென்று, ‘வெற்றி வீரனாக வருக’ என வாழ்த்தித் தன் மகனைப் போருக்கு அனுப்பியிருந்தாள். ஆனால் நடந்ததென்ன ? ஒரு வீரன் வந்து, ‘அம்மா ! உன் மகன் போரில் புறங்காட்டி ஓடி விட்டான்’ என்றான்.

அதனைக் கேட்ட முதியவள் கொதித்தெழுந்தாள். ‘மகனே ! உன்னைப்பற்றி இப்படியொரு இழிவான சொல்லைக் கேட்கவா நான் வாழ்ந்திருந்தேன் ? இதற்காகவா நான் உன்னைப் பெற்றுப் பெருமையாக வளர்த்தேன் ? நான் ஊட்டிய வீரவுணர்ச்சி யெல்லாம் எங்கே போய் ஒளிந்தன ? அந்தோ ! வழிவழியாக வந்த நம் மறக்குடிக்கு மாசுண்டாக்கிவிட்டாயே ! இனி, நான் என் செய்வேன் ? எவ்வாறு பிறர் முகத்தில் விழிப்பேன் ? அட பதரே ! நீ எங்கிருந்து வந்து எனக்கு மகனாகப் பிறந்தாய் ? உன் உயிரென்ன அவ்வளவு பெரிதா ? அட, போருக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடும் கோழையே ! நீயும் ஒரு தமிழனா ?’ என்று கடுஞ்சினம் கொண்டு புலம்பியவாறே போர்க்களம் நோக்கி ஓடினாள். அங்கு இறந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். ஆனால், அவள் அங்குக் கண்டதென்ன ? தன் மகன், நெஞ்சில் அம்பு பாய்ந்து இறந்து கிடந்ததனைக் கண்டாள். கண்டதும் அவனைப் பெற்றபோது உவந்ததனைவிடப் பெரிதும் உவந்தாள்.

## எழுதுதல் திறன்

| சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைத்தல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் பண்புகளைத் தொடரின் முதலிலோ இடையிலோ இறுதியிலோ பயன்படுத்தித் தொடர்களை நிறைவு செய்க.

(அன்பு, அடக்கம், இனிமை, ஈகை, உண்மை, உதவு, எளிமை, கனிவு, துணிவு, தூய்மை, பணிவு, பொறுமை)

அன்பே ஆருயிர் மருந்தாகும்.

அடக்கம் வாழ்வின் உயர்வாகும்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

| வகைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் பண்புகளை அட்டவணைப்படுத்துக.

இரக்கம், எளிமை, கடுமை, தன்னலம், அழுக்காறு, ஒப்புரவு, அடக்கம், நடுவுநிலைமை, பொய் பேசாமை, எதிர்த்துப் பேசுதல்

| நற்பண்பு | தீய பண்பு |
|---|---|
| இரக்கம் | கடுமை |
| | |
| | |
| | |
| | |

தமிழ்

| குறிப்பெடுத்தல் | செயல்பாடு – 6 |
|---|---|

விடுபட்ட கட்டங்களில் காந்தியடிகளின் பிற பண்புகளை எழுதி நிரப்புக.

| | | |
|---|---|---|
| | எளிமை | |
| |  | பொறுமை |
| | | |
| | | |

| படைப்பாற்றல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்துகளை ஐந்து வரிகளில் எழுதுக.



| சொல்லுருவாக்குதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) நகைச்சுவை – நகை, சுவை, நவை, கை, கை வை, வைகை, நச்சு, வை.

1. மிருதங்கம் – ______
2. விழுதுகள் – ______
3. காவியம் – ______
4. மருத்துவத்துறை – ______
5. கருத்தரங்கம் – ______

தமிழ்

| பொருளறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் ஒருசொல் மீண்டும் மீண்டும் வருவதனைக் காண்க. ஒவ்வொரு தொடரிலும் அச்சொல் தரும் பொருளை அறிந்து எழுதுக.

1. ஒன்று பட்டால் உண்டு வாழ்வே – ஒற்றுமை
2. ஒன்றே குலம் ஒருவனே தேவன் –
3. தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் –
4. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே –
5. எல்லாரும் ஒன்றெனும் காலம் வந்ததே –
6. பாருக்குள்ளே தெய்வம் ஒன்று –

| முறைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் குறட்பாக்களை உரியவாறு முறைப்படுத்தி எழுதுக.

1. எண்பதத்தால் எய்தல் யார்மாட்டும் எளிதென்ப
   பண்புடைமை என்னும் வழக்கு.
2. அன்புடைமை குடிப்பிறத்தல் ஆன்ற இவ்விரண்டும்
   வழக்கு என்னும் பண்புடைமை.
3. நகையுள்ளும் பாடறிவார் மாட்டு பண்புள
   பகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி.
4. பண்புடையார் உலகம் பட்டுண்டு அதுவின்றேல்
   மாய்வது மண்புக்கு மன்.
5. அரம்போலும் மக்கட்பண்பு இல்லா தவர்
   கூர்மையரேனும் மரம்போல்வர்.

| பொருள் மாற்றம் அறிந்து எழுதுதல் | செயல்பாடு – 11 |
|---|---|

கீழ்க்காணும் சொற்றொடர்களில் வல்லினம் இட்டும் இடாமலும் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மாற்றத்தை எழுதுக.

(எ.கா.) நாடி துடித்தது – கையில் உள்ள நாடியானது துடித்தது.
நாடித் துடித்தது – தேடித் துடித்தது.
தந்த பெட்டி – ______
தந்தப்பெட்டி – ______
மருந்து கடை – ______
மருந்துக்கடை – ______

| | | |
|---|---|---|
| வேலை கொடுத்தான் | – | ______________________ |
| வேலைக்கொடுத்தான் | – | ______________________ |
| தேரைக் கண்டான் | – | ______________________ |
| தேரை கண்டான் | – | ______________________ |

| வகைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 12 |
|---|---|

கீழ்க்காணும் சொற்றொடர்களை இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என வகைப்படுத்துக.

வாழைப்பூ, வீட்டுச்சிறை, விண்மீன், மேற்பரப்பு, தொலைநோக்கி, சிறுகோள், கண்பார்வை, மாலைப்பொழுது, நீலவானம், மயிற்பொறி, வளர்பிறை, பாடநூல், அருட்பா, கலந்தீமை, மக்கட்பண்பு

| இயல்புப்புணர்ச்சி | விகாரப்புணர்ச்சி | | |
|---|---|---|---|
| | தோன்றல் | திரிதல் | கெடுதல் |
| | | | |

தமிழ்

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. ஒரிரு சொற்களில் விடையளிக்கவும். 6 X 1 = 6

அ. அறிவியல் கல்வியில் மிகத் தொன்மையானது எது ?

ஆ. ஐம்பூதங்களைக் குறிப்பிடுக.

இ. ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ எனக் கூறியவர் யார் ?

ஈ. வானவெளியில் மிகப்பெரிய விண்மீன் எது ?

உ. ஞாயிற்றின் பல பெயர்களுள் ஐந்தனை எழுதுக.

ஊ. மதி என்னும் சொல்லுக்கு இரு பொருள் தருக.

2. பொருத்துக. 4 X 1 = 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டு + சோறு | = | கட்டுச்சோறு | – | இயல்பு விகாரம் |
| 2. | கண் + மலர் | = | கண்மலர் | – | கெடுதல் விகாரம் |
| 3. | வளம் + நூல் | = | வளநூல் | – | திரிதல் விகாரம் |
| 4. | முள் + செடி | = | முட்செடி | – | தோன்றல் விகாரம் |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# புணர்ச்சி : உயிரீறு, உடம்படுமெய், மெய்யீறு

## உயிரீற்றுப் புணர்ச்சி

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! புணர்ச்சி குறித்து முன்வகுப்பில் கற்றீர்கள். ஏதும் விளக்கம் வேண்டுமா ?

மாணவர் : புணர்ச்சி குறித்துத் தெளிவாகத் தெரிந்துகொண்டோம், ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. அவ்வகுப்பில் நிலைமொழி குறித்தும் வருமொழி குறித்தும் கூறினேன். பல, பலா, கனி, தீ இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். இச்சொற்களில் கடைசி எழுத்து உயிர்மெய் எனினும், உயிர் ஈறாகக் கொள்ளுதல் வேண்டும்.

மாணவர் : ஆமாம், ஐயா. 'பல' இச்சொல்லில் (ல் + அ = ல) 'அ' உயிர் ஈறுதானே, ஐயா.

ஆசிரியர் : தெளிவாகச் சொன்னாய். உயிர் ஈற்றுச் சொல்முன் வல்லின எழுத்துகள் வந்தால், அதன் மெய்யெழுத்து மிகும்.

(எ.கா.) 1. பலா + சுளை = பலாச்சுளை

2. பனி + போர் = பனிப்போர்

3. தினை + துணை = தினைத்துணை

மாணவர் : நன்றி, ஐயா.

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே — நன்னூல், 165

## உடம்படுமெய்

(உயிர்முன் உயிர்)

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். முன் வகுப்பில் நிலைமொழி ஈறு, வருமொழிமுதல்பற்றிக் கற்றோம்! நிலைமொழி ஈறு உயிராகவும், வருமொழிமுதல் உயிராகவும் இருந்தால், எவ்வாறு புணரும் என்பதனை இன்று பார்ப்போம். உயிர்ஈற்றுச் சொற்கள் சில கூறுங்கள்.

மாணவர் : பலா, மணி, அண்ணி, பூ, பனை, வீடு, பசு, அழகு, பிள்ளை, பள்ளி.

தமிழ்

ஆசிரியர் : போதும். இப்பொழுது உயிர்முதல் சொற்களைக் கூறுங்கள்.

மாணவர் : அணில், ஏணி, ஏற்றம், ஐவர், ஔவை, இரும்பு, ஈயம், உண்டு, உயிர், ஊர்வலம், ஒடு.

ஆசிரியர் : போதும். மகிழ்ச்சி. 'மணி + அடி'. இங்கு மணி என்பது நிலைமொழி. இதன் ஈறு (ண் + இ) உயிர். அடி என்பது வருமொழி. அதன் முதல் எழுத்து அ – உயிர். இவ்விரண்டும் ஒன்றாகச் சேரும்போது மணி + அடி = மணி +ய் + அடி= மணியடி என இணையும்போது, இடையில் 'ய்' என்னும் மெய் தோன்றி, மணியடி என்னும் சொல்லாகிறது. பூவழகு என்னும் சொல்லை எவ்வாறு பிரிக்கலாம் ?

மாணவர் : பூ + அழகு. 'பூவழகு' என வரும், ஐயா.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். ஆனால், பூவழகு என்னும் சொல், பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு. இடையில் இங்கு 'வ்' என்னும் மெய் எழுத்துத் தோன்றுகிறது. சேவடி என்பது எவ்வாறு பிரியும் ?

மாணவர் : சே + வ் + அடி... 'சேவடி' என வரும், ஐயா. இங்கே 'வ்' என்னும் மெய் வந்துள்ளது, ஐயா.

ஆசிரியர் : நன்று நன்று. சே + அடி = சே + வ் + அடி = சேவடி; மேலும், சே + ய் + அடி = சேயடி எனவும் வரும்.

மாணவர் : ஐயா, இன்னும் சில எடுத்துக்காட்டுகள் கூறுங்களேன்.

ஆசிரியர் : கூறுகிறேன்.

1. கிளி + அலகு = கிளி + ய் + அலகு = கிளியலகு
2. தீ + எரிகிறது = தீ + ய் + எரிகிறது = தீயெரிகிறது.
3. பனை + ஓலை = பனை + ய் + ஓலை = பனையோலை

இ, ஈ, ஐ ஆகியனமுன் உயிர்வரின் ய் தோன்றும்.

அடுத்து,

1. குண + அழகி = குண + வ் + அழகி = குணவழகி
2. பலா + இலை = பலா + வ் + இலை = பலாவிலை
3. திரு + ஆரூர் = திரு + வ் + ஆரூர் = திருவாரூர்
4. பூ + அழகி = பூ + வ் + அழகி = பூவழகி
5. கோ + இல் = கோ + வ் + இல் = கோவில்

அ, ஆ, உ, ஊ, ஓ முன் வ் தோன்றும்.

அடுத்து, தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

அவனே + அரசன் = அவனே + ய் + அரசன் = அவனேயரசன்

ஏ முன் உயிர்வரின் வ், ய் இரண்டும் வரும்.

மாணவர் : ய், வ் வருவதற்குப் புணர்ச்சியில் ஏதேனும் பெயர் உண்டா ? ஐயா.

ஆசிரியர் : உண்டு. நிலைமொழி ஈற்று உயிரும், வருமொழிமுதல் உயிரும் இணையும்போது வ் அல்லது ய் இடையில் தோன்றும். இதற்கு உடம்படுமெய் என்பது பெயர்.

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் – நன்னூல்,162

## மெய்யீற்றுப் புணர்ச்சி

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம்.உட்காருங்கள்.முன்வகுப்பில்புணர்ச்சி,நிலைமொழி,வருமொழி ஆகிய சொற்கள் ஒன்றனோடு ஒன்று சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்துக் கற்றீர்கள்.

மாணவர் : ஆம், ஐயா. அவை நன்றாக நினைவில் இருக்கின்றன.

ஆசிரியர் : மகிழ்ச்சி. மேலும் சில புணர்ச்சிமுறைகளைப் பார்ப்போம். 'நூல் + ஆடை' என்பதனில், நூல் என்பது நிலைமொழி. ஆடை என்பது வருமொழி. நூல் என்னும் நிலைமொழியின் ஈறு என்ன ?

மாணவர் : மெய் எழுத்து உள்ளது. அதனால் மெய்யீறு, ஐயா.

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி. மெய்யீற்று நிலைமொழிமுன், உயிர்முதல் வருமொழிச் சொற்கள் வந்தால், எவ்வாறு புணரும் என்பதனைப் பாருங்கள்.

மாணவர் : அணில், ஆடை, இலை ... என வரும் சொற்கள்தாமே உயிர்முதல் மொழிகள், ஐயா.

ஆசிரியர் : அவையேதாம். பால் + ஆடை என்பதனில், பால் மெய்யீற்று நிலைமொழி முன் ஆடை உயிர்முதல் வருமொழி சேரும்போது, மெய் (ல்) உயிரோடு (ஆ) சேர்ந்து பாலாடை என்றாகிறது. ஏனெனில்,மெய் தனித்து இயங்காது; உயிருடன் சேர்ந்துதான் இயங்கும். இதுவே இயல்பு.

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – நன்னூல், 204

(உடல் – மெய்) இங்கு உடல் என்பது மெய்யெழுத்தைக் குறித்தது. இதுபோல் சிலவற்றைக் கூறுங்கள்.

மாணவர் : மலர் + அடி = மலரடி; கனல் + எரி = கனலெரி; கடல் + ஓரம் = கடலோரம்.

ஆசிரியர் : மகிழ்ச்சி. நன்றாகச் சொன்னாய். கண், கல், பொன், மண் என்பனவும் மெய்யீற்று நிலைமொழிகளே. முன்பு சொன்ன மெய்யீறுகள் நெடிலடுத்தும், இரண்டு முதலாகப் பல எழுத்துகள் சார்ந்தும் வந்தவை. இவை....

மாணவர் : குறிலடுத்து வந்த மெய்யீறுகள், ஐயா.

ஆசிரியர் : நல்லது. இவற்றின்முன் உயிர்முதல் வருமொழி வந்தால் கண் + அழகு = கண் + ண் + அழகு = கண்ணழகு என்னுமாறு இணையும்.

மாணவர் : ஐயா, மற்றொரு மெய்யும் சேர்ந்தல்லவா வருகிறது.

ஆசிரியர் : ஆம். நன்றாக உற்றுநோக்குகிறாய்.

தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும் – நன்னூல், 205

நான் கூறியதுபோலவே, வேறு எடுத்துக்காட்டுகள் தரமுடியுமா ?

மாணவர் : கல் + அணை = கல்லணை; கண் + ஆடி = கண்ணாடி; பல் + அழகு = பல்லழகு; விண் + அரசு = விண்ணரசு

ஆசிரியர் : மகிழ்ச்சி.

பயிற்சி :

கீழுள்ளவற்றுள் விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. பனி + ________ = பனித்துளி
2. பூ + ________ = பூவழகு
3. மா + இலை = ________
4. மண் + அகல் = ________

தமிழ்

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. பொருத்துக.

1. இடை + அழகு – மெய்முன் மெய்
2. மண் + அகல் – உயிர்முன் மெய்
3. கிளி + மூக்கு – மெய்முன் உயிர்
4. மரம் + கிளை – உயிர்முன்உயிர்

2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. பாடும் பாடல் – இத்தொடரில் பாடல் என்பது ________________.

அ) நிலைமொழி ஆ) வருமொழி இ) பொதுமொழி

2. பலவாண்டு – இச்சொல் பிரியும் முறை ________________

அ) பல் + ஆண்டு ஆ) பல + வாண்டு இ) பல + ஆண்டு

3. பனை + ஓலை – இரண்டிற்கும் இடையில் ________________ தோன்றும்.

அ) வ் ஆ) ய் இ) எதுவுமில்லை

## ஆ) குறுவினாக்கள்

1. உயிரெழுத்தினை முதலாக உடைய சொற்கள் நான்கு கூறுக.
2. உயிர்ஈற்றுச் சொற்கள் நான்கு கூறுக.
3. மெய்யீற்றுச் சொற்கள் நான்கு கூறுக.
4. உடம்படுமெய் என்றால் என்ன ? சான்று தருக.

## இ) தொடர்பணி

1. நும் பாடப்பகுதியிலுள்ள ஐந்து உயிரீற்றுச் சொற்களை எடுத்தெழுதுக.
2. நும் பாடப்பகுதியிலுள்ள ஐந்து மெய்யீற்றுச் சொற்களை எழுதுக.

# வகுப்பறைத்திறன்கள்

## அ) பேசுதல் திறன்

கீழ்க்காணும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

மலைவளமும் மழைவளமும்

## ஆ) படித்தல் திறன்

கீழுள்ள பகுதியைப் படித்து நயம் உணர்க.

ஒருநாள் ஊற்றுமலையரசர் மருதப்பரும் கவிஞர் அண்ணாமலையாரும் உலாச் சென்றனர். மருதப்பர் முன்னே சென்றார்; பின்னால், அண்ணாமலையார் தொடர்ந்தார். சிறிது தொலைவு சென்றபின் மருதப்பர் திரும்பிப் பார்த்தார். அண்ணாமலையார் மிகவும் பின்தங்கி இருந்தார். உடன் வந்தவர் ஏன் பின்தங்கிவிட்டார் என்று எண்ணினார் மருதப்பர்.

அண்ணாமலையார் தம் அருகில் வரும்வரை காத்திருந்தார். அவர் வந்ததும் ஏன் இவ்வளவு பின்தங்கிவிட்டீர்கள் என வினவினார். முட்டாளுடன் வந்ததனால், பின்தங்க நேர்ந்தது என்றார் அண்ணாமலையார். மருதப்பர் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தார். இவர் நம்முடன்தானே வந்தார். நம்மையா முட்டாள் என்கிறார் எனத் திகைத்து நின்றார்.

மன்னரின் திகைப்பைக் கண்டு நகைத்த அண்ணாமலையார், வழியில் முள்ளொன்று என் காலில் தைத்துவிட்டது. அந்த முள் தாளுடன் (முள் குத்திய காலுடன்) வந்ததனால் பின்தங்க நேர்ந்தது என்று விளக்கம் தந்தார்.

அண்ணாமலையாரின் சொல்வன்மை கண்ட அரசர் அவரைப் பெரிதும் பாராட்டினார்.

## இ) எழுதுதல் திறன்

முறைமாறி அமைந்த சொற்றொடர்களை முறைப்படுத்திப் பத்தியமைத்தல்.

(எ.கா.) 1. இளையவன் மெழுகுவத்தியை வாங்கி வந்து ஏற்றி வைத்து, அறையெங்கும் ஒளிவீசச் செய்தான்.

2. வயதான தந்தைக்கு இரு மகன்கள் இருந்தார்கள்.

3. ஒருநாள் இருவரையும் அழைத்துச் சிறிது பணம் கொடுத்தார். இந்தப் பணத்தைக் கொண்டு அவரவர் அறையை நிரப்புங்கள் என்றார் தந்தை.

தமிழ்

4. அவர்களிருவரில் பொறுப்பானவரைத் தேர்ந்தெடுத்துத் தன் உழைப்பின் பயனாய் விளைந்த செல்வத்தைக் கொடுக்க தந்தை விரும்பினார்.
5. மூத்தவன் வைக்கோல் போரை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான்.
6. இளையவன்தான் பொறுப்பானவன் என்று தந்தை உணர்ந்தார்.
7. அறையெங்கும் ஒளிவீசச் செய்தவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

### முறைப்படுத்தப்பட்ட பத்தி

வயதான தந்தைக்கு இருமகன்கள் இருந்தார்கள். அவர்களிருவரில் பொறுப்பானவனைத் தேர்ந்தெடுத்துத் தன் உழைப்பின் பயனாய் விளைந்த செல்வத்தைக் கொடுக்க தந்தை விரும்பினார். ஒருநாள் இருவரையும் அழைத்துச் சிறிது பணம் கொடுத்தார். இதனைக்கொண்டு அவரவர் அறையை நிரப்புங்கள் என்றார் தந்தை.

மூத்தவன் வைக்கோல் போரை வாங்கி வந்து அறை முழுவதும் நிரப்பினான். இளையவன் மெழுகுவத்தியை வாங்கி வந்து ஏற்றி வைத்து அறையெங்கும் ஒளிவீசச் செய்தான். இளையவன்தான் பொறுப்பானவன் என்று தந்தை உணர்ந்தார். அறையெங்கும் ஒளிவீசச் செய்தவனிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்தார்.

### பயிற்சி

கீழுள்ள முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குபடுத்திப் பத்தியாக்குக.

1. சித்தார்த்தர் புறாவை எடுத்து அன்புடன் தடவிக் கொடுத்தார். அதன் காலுக்கு மருந்திட்டார்.
2. அப்போது புறா ஒன்று வானில் மகிழ்ச்சியாகப் பறந்து விளையாடிக் கொண்டு இருப்பதனைக்கண்டார்.
3. சித்தார்த்தர் தாமே புறாவைக் காப்பாற்றியதாகவும், எனவே தமக்கே உரிமை என்றும் கூறினார்.
4. அப்போது அங்கு வந்த தேவதத்தன், புறாவைத் தான் அம்பு எய்து வீழ்த்தியதாகவும், புறாவைத் தன்னிடம் தருமாறும் வேண்டினான்.
5. மன்னர் சித்தார்த்தர், ஒருநாள் மாலைப்பொழுதில் தமது அரண்மனைப் பூந்தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்.
6. திடீரென்று எங்கிருந்தோ விரைந்து வந்த ஓர் அம்பு புறாவின் காலில் பாய்ந்தது. அம்பினால் காயம்பட்ட புறா, சித்தார்த்தரின் காலடியில் விழுந்தது.

## மொழித்திறன் பயிற்சி

### 1. வல்லினம் மிகா இடம் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கதை + சொன்னான் | = | கதை சொன்னான் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) |
| 2. | அழகனோடு + சென்றான் | = | அழகனோடு சென்றான் ( மூன்றாம் வேற்றுமை விரி) |
| 3. | வீட்டிலிருந்து + பார்த்தான் | = | வீட்டிலிருந்து பார்த்தான் ( ஐந்தாம் வேற்றுமை விரி) |
| 4. | எனது + புத்தகம் | = | எனது புத்தகம் ( ஆறாம் வேற்றுமை விரி) |
| 5. | சுடு + சோறு | = | சுடுசோறு (வினைத்தொகை) |
| 6. | கல்வி + கேள்வி | = | கல்விகேள்வி (உம்மைத்தொகை) |

தமிழ்

7. படித்த + பாடம் = படித்த பாடம் (பெயரெச்சம்)

8. கோழி + கொக்கரித்தது = கோழி கொக்கரித்தது (எழுவாய்த்தொடர்)

9. வாழ்க + செந்தமிழ் = வாழ்க செந்தமிழ் (வியங்கோள் வினைமுற்று)

10. அது, இது, எது என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. (எ.கா.) அது + தான் = அதுதான்
அன்று, இன்று, என்று என்னும் சொற்களுக்குப்பின் மிகாது. (எ.கா.) அன்று கொடுத்தேன்.

11. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.
(எ.கா.) எத்தனை + பொருள் = எத்தனை பொருள்

12. ‘படி’ என முடியும் வினையெச்சம், உகரவீற்று வினையெச்சம், எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகாது. (எ.கா.) வரும்படி கூறினாள் (‘படி’ என்னும் சொல்)

பயிற்சி : வல்லினமெய் இட்டும் நீக்கியும் எழுதுக.

1. சித்திரை திங்களில் வந்து பார்க்கும்படிக் கூறினார்.
2. வ. உ. சிதம்பரனார்ச் செய்ந்நன்றி மறவா செம்மல் ஆவார்.
3. இராமன் மாயமானை தேடி சென்றான்.
4. சொற்களை பகாபதம், பகுப்பதம் என இருவகைபடுத்துவர்.
5. சிரிக்க தெரியாதவர்களுக்கு பகல் பொழுதும் இருள் ஆகும்.

2. அரபு எண்ணுடன் பொருந்தாத தமிழெண்ணை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | க | – | 1 |
| 2. | உ | – | 2 |
| 3. | கஉ | – | 17 |
| 4. | ரு | – | 5 |
| 5. | உO | – | 10 |

3. கட்டுரைப்பயிற்சி : சுற்றுச்சூழல் பாதுகாப்பு

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

பொது இடத்தில் ......

ஒருவர் : இந்த பார்மைக் கொஞ்சம் பில் பண்ணிக் கொடுங்க.
மற்றொருவர் : என்ன பார்ம் அது ? எதுக்கு அப்ளைப் பண்றீங்க ? ஓ ரேசன் கார்டுக்கா ?
ஒருவர் : நானே பில்லப் பண்ணிடுவேன். ஆனால், கொஞ்சம் டீடெய்ல்ஸ் புரியவில்லை.
மற்றொருவர் : நான் ஹெல்ப் பண்றேன். கேக்கிற கொஸ்டின்ஸ்க்கு ஆன்சர் பண்ணுங்க, அதுபோதும்.
ஒருவர் : சரி, கேளுங்க.
மற்றொருவர் : உங்க நேம் சொல்லுங்க.
ஒருவர் : என் பெயர் சீனிவாசன்.
மற்றொருவர் : எங்க ஒர்க் பண்றீங்க ?

தமிழ்

ஒருவர் : பிரிண்டிங் பிரஸ்ல ஆபிஸ் அசிஸ்டெண்ட்டாக இருக்கேன்.

மற்றொருவர் : உங்க வீட்டு அட்ரஸ் சொல்லுங்க.

ஒருவர் : நம்பர் சிக்ஸ், அண்ணா ஸ்டீரிட், டிரிப்ளிகேன், சென்னை.

மற்றொருவர் : இந்தாங்க.

மேற்கண்ட உரையாடலைப் பிறமொழிச் சொற்களும் பேச்சுவழக்குச் சொற்களும் கலவாமல் மீண்டும் எழுதுக.

## வாழ்க்கைத்திறன்

### மன எழுச்சிகளை எதிர்கொள்ளும்திறன்

மாறனுக்கு எந்த ஒரு பொருளும் அதனதன் இடத்தில் ஒழுங்காக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால், அவனுக்குச் சினம் வந்துவிடும். விடுமுறையில் அவனுடைய அத்தையின் மகன், மாறன் வீட்டிற்கு வருகிறான். அவன் விளையாட்டுப் பொருள்களையெல்லாம் அங்குமிங்கும் இறைப்பது மாறனுக்குப் பிடிக்கவில்லை. அத்தை மகன் மிகவும் சிறியவனாக இருப்பதனால், அடிப்பதற்கும் தயங்குகிறான். இந்த நிலையில் மாறன் தன்னுடைய சினத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவான் ?

நீங்கள் மாறனாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### படைப்புத்திறன்

மைக்கேல் ஏஞ்சலோ என்பவர் மிகச்சிறந்த சிற்பி. ஒருநாள் கடைத்தெரு வழியாக அவர் நடந்து சென்றார். அப்போது ஒரு கடையில் சலவைக்கல் ஒன்று யாராலும் பயன்படுத்தப்படாத நிலையில் மிகவும் அழுக்கடைந்து இருந்தது. அக்கடைக்குள் சென்ற மைக்கேல், கடைக்காரரிடம் “ ஐயா, இந்தச் சலவைக்கல்லை எனக்குத் தர முடியுமா ?” என்று பணிவுடன் கேட்டார். அதற்குக் கடைக்காரர் “ஓ! நீங்கள் தாராளமாக எடுத்துச் செல்லுங்கள், எனக்கு ஒன்றும் தடையில்லை” என்றார். மைக்கேல் ஏஞ்சலோ மிகவும் மகிழ்வுடன் அதனைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றார். சிலநாள் கழித்து, அந்தக்கடைக்காரரைத் தன்னுடைய வீட்டிற்கு வருமாறு அழைத்தார். வீட்டிற்கு வந்த கடைக்காரர் வரவேற்பறையில் இருந்த அழகான சிலையைப் பார்த்து வியந்தார்.

“இந்தச் சிலையை எங்கே வாங்கினீர்கள் ? நன்றாக இருக்கிறதே!” என்று கேட்டார்.

அதற்கு மைக்கேல் சிரித்துக்கொண்டே, “ஐயா! மறந்துவிட்டீர்களா ? உங்கள் கடையில் பயன்படாமல் இருந்த சலவைக்கல்லில் செய்த சிலைதான் இது” என்றார்.

படைப்புத்திறன் இருந்தால் கல்லிலும் கலைவண்ணம் காணலாம்.

தமிழ்

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியை ஆசிரியர் படிக்க, மாணவர்கள் உற்றுக்கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்கவும்.

சுவாமி வேதாசலத்தின் மகள் நீலாம்பிகை அம்மையார் ஆவார். அவர், தம் தந்தையாரையே நல்லாசிரியராகப் பெறும் பேறு பெற்றார். தம் தந்தையாரிடம் தமிழும் இசையும் பயின்றார். அவர்தம் முயற்சியால் பதின்மூன்றாம் வயதிலேயே மேடையேறிச் சொற்பொழிவாற்றினார்.

ஒரு நாள் மாலையில், சோலையில் நீலாம்பிகையுடன் உலாவிக் கொண்டிருந்தார் வேதாசலம். அப்போது இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பாப் பாடலை அடிகள் பாடினார்.

‘பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும் . . . .’ என்னும் அப்பாடலை உள்ளமுருக, உயிருருக ஓதி முடித்தார். பின்னர், மகளிடம், ‘நீலா! இப்பாடலில் உள்ள ‘தேகம்’ என்னும் வடசொல்லுக்கு மாறாக, ‘யாக்கை’ என்னும் தமிழ்ச்சொல் ஆளப்பட்டிருந்தால் இப்பாடலின் சொல்லோசை மேலும் இனிமையாக இருக்குமன்றோ? பிறமொழிச் சொற்கள் தமிழில் கலப்பதனால்தான் தமிழின் இனிமை குறைகிறது’ என்றார் வேதாசலம்.

அது கேட்ட மகள் தந்தையாரிடம், ‘அப்படியானால் நாம் இனிப் பிறமொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும்’ என்றார். மகளின் அன்பும் அறிவும் கலந்த வேண்டுகோளை ஏற்று, சுவாமி வேதாசலம் என்னும் தம் வடமொழிப் பெயரைத் தனித்தமிழில் மறைமலையடிகள் என்று மாற்றி வைத்துக்கொண்டார்.



### வினாக்கள்

1. உரைப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழறிஞர் யார்?
2. சுவாமி வேதாசலம் என்னும் பெயர் எங்ஙனம் மறைமலையடிகள் ஆயிற்று?
3. ‘தேகம்’ எனவும் ‘யாக்கை’ எனவும் குறிப்பிடப்படும் சொல்லின் பொருள் யாது?
4. திருவருட்பாப் பாடலை இயற்றியவர் யார்?
5. உன் நண்பனின் பெயர் வடசொல்லில் அமைந்திருந்தால், அதனை எவ்வாறு தனித்தமிழில் கூறுவாய்?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

உரையாடலை நிறைவு செய்க.

(போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் கன்னனைக் காண கண்ணன் அந்தணர் வடிவில் வருகின்றான். அவ்விருவருக்கும் நடைபெறும் உரையாடலின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு உரையாடலை அமைத்து வகுப்பில் பேசுக.)

கண்ணன் : வரையாது வாரி வழங்கும் வள்ளலே! உம்மை இந்தக் கோலத்திலா யான் காணுதல் வேண்டும்? என் உள்ளம் பதறுகின்றதே!

கன்னன் : ஐயா, வாருங்கள். உங்களுக்கு உதவ இயலாத நிலையில் உள்ளதனைக் கண்டு நான் மிகவும் வருந்துகின்றேன்.

கண்ணன் : இவ்விடத்தில் என்னிடம் கொடுக்க உம்மிடம் ஒன்றுமில்லை என்று யானும் அறிவேன். அதனால், . . . . . . . . . . . .

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து இன்புறுக.

தமிழின் இனிமைச்சிறப்பு

கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டுவரச் சொல்லியிருந்தேன். அவன் அன்று வராமல் மறுநாள்வந்து வெறுங்கையுடன் நின்றதால் அவனைச் சினந்தேன். அவன் பேசினான்.

‘நான் நேற்றே மலைக்கு நடந்தேன்; பல இடங்களில் அலைந்தேன்; இறுதியில் பெரும் பாறைத்தேன் கண்டு சிறிது மலைத்தேன்; ஒரு கொடியைப் பிடித்தேன்; ஏறிச்சென்று கலைத்தேன்; பானையில் பிழிந்தேன்; நன்றாக வடித்தேன்; அதனைக்கண்டு மகிழ்ந்தேன்; அத்தேனில் சிறிது குடித்தேன்; களித்தேன்; களைத்தேன்; அயர்ந்தேன்; மறந்தேன்; இன்று காலை எழுந்தேன்; நினைத்தேன்; தேனை அடைத்தேன்; எடுத்தேன்; விரைந்து நடந்தேன்; வந்தேன்; சேர்ந்தேன்; இப்பொழுதுதான் உங்கள் வீட்டில் கொடுத்தேன்’.

நானும் இதனைக் கேட்டு மகிழ்ந்தேன்; அவனுக்கு உரியதனையும் தந்தேன்; அடடா! எப்படித் தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே? ‘இதனைப் பார்த்தேன்; குடித்தேன் எனக் கூறாமல் படித்தேன் எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லிலும் ஒவ்வொரு படி ‘தேன்’ என இனிக்கும்’. என்னே, தமிழின் இனிமை!

கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழின் சிறப்பு

## எழுதுதல் திறன்

| சொல்லுருவாக்குதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் விடைக் குறிப்புகளைக்கொண்டு, கட்டங்களில் மேலும் கீழும், குறுக்கும் நெடுக்கும், இடமும் வலமும் இடம்பெற்றுள்ள சொற்களைக் கண்டறிந்து வட்டமிடுக. வட்டமிட்ட சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தா | ள் | உ | லை | மா | ச |
| யா | கா | ள் | று | ஆ | ந் |
| ன் | த் | ள | த | ம | த |
| ல் | அ | ம் | பு | க | ன |
| டு | ம | பெ | ய | ர் | ம் |
| ஏ | தி | சி | ய் | மூா | து |

தமிழ்

பாதம் என்னும் வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல் ________________ .

மனம், நெஞ்சு, ________________ என்றாலும் ஒரே பொருள்.

திருமாலுக்கு அணிவிக்கும் மாலை ________________ .

உடலில் ________________ பூசினால் மணம் வீசும்; குளிர்ச்சி தரும்.

வில், ____________ இவ்விரண்டனையும் தனித்தனியாகப் பயன்படுத்துதல் இயலாது.

நாமம் என்பதன் தமிழ்ச்சொல் ________________ .

________________ யினால் சதியை வெல்லலாம் என்பர்.

நான் என்னும் சொல்லின் திரிபு ________________ .

நதி என்பதன் தமிழ்ச்சொல் ________________ .

அலங்கல் என்பதன் பொருள்________________ .

| தமிழெண்களை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் வினாக்களுக்கான விடைகளைத் தமிழெண்களில் எழுதி, அவற்றைக் கட்டங்களில் நிரப்புக.

1. ஆய கலைகள் ____சாச____ என்பர்.
2. ஆலும் வேலும் பல்லுக்குறுதி; ____________ இரண்டும் சொல்லுக்குறுதி.
3. கீழ்க்கணக்கு நூல்கள் ____________ .
4. தமிழில் ____________ மாதங்கள் உள்ளன.
5. சுவை ____________ வகைப்படும்.
6. தமிழிலக்கணம் ____________ வகைப்படும்.
7. செல்வங்கள் ____________ என்பர்.
8. பசி வந்திடப் ____________ பறந்து போம்.
9. சிற்றிலக்கியங்கள் ____________ வகை என்பர்.
10. நீ பயிலும் வகுப்பு ____________ .

| | | | | |
|---|---|---|---|---|
| 1 சா | ச | | 2 | |
| 3 | | | 4 | |
| 5 | | 6 | | |
| 7 | | 8 | | |
| 9 | | | 10 | |

| வகைப்படுத்தி எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியிலிருந்து உயிரீறு, மெய்யீறு அமைந்த சொற்களை எடுத்தெழுதுக.



தமிழ்நாட்டில் ஏட்டுத்தமிழுக்கும் வீட்டுத்தமிழுக்கும் வேற்றுமையுண்டு. அதர் என்பது ஒரு பழைய தமிழ்ச்சொல். வழி என்பது அச்சொல்லின் பொருள். காற்று வருவதற்காக வீட்டில் அமைக்கும் ஜன்னலுக்குக் காலதர் என்று பண்டைத்தமிழர் பெயரிட்டனர். ஜன்னல் என்பது தமிழ்ச்சொல்லன்று; போர்ச்சுக்கீசியப் பதம். போர்ச்சுக்கீசியர் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன் நம் வீட்டுச் சன்னலுக்கு ஒரு பெயர் இருந்திருத்தல் வேண்டும் அன்றோ ? அப்பெயர்தான் காலதர். கால் என்றால் காற்று; அதர் என்றால் வழி. காலதர் என்றால் காற்று வரும் வழி. இக்காலத்தில் பேச்சுவழக்கில் இல்லாத அதர் என்னும் சொல்லைத் திருக்குறள் முதலிய பல பழைய உரைநூல்களில் காணலாம்.

ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழ் விருந்து.

| உயிரீற்றுச் சொற்கள் | மெய்யீற்றுச் சொற்கள் |
|---|---|
| வேற்றுமையுண்டு (ட்+உ) | தமிழ்நாட்டில் |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக்கேட்டு எழுதுக.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்; தமிழ், தமிழர் நலம் காப்பதனையே உயிர்மூச்சாகக்கொண்டவர். உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர்.

தமிழ்

| மயங்கொலிச் சொற்களை அறிதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் கோடிட்ட இடத்தில் உரிய மயங்கொலிச் சொற்களைக்கொண்டு நிரப்புக.

1. ‘இன்று ________ ப்பொழிவு மிகுதியாக உள்ளதனால், இரவுப் ________ செய்வது கடினம்’ எனக் கண்ணன் கூறினான். ( பணி, பனி )
2. வேல்விழி கோடை விடுமுறையைக் ________ப்புடன் ________க்க விரும்பினாள். ( கலி, கழி, களி )
3. ________ சுழன்று வீசியதனால் ________ தவறிய வளவன் கல்லில் மோதிக் கீழே விழுந்து ________யால் துடித்தான். ( வலி, வளி, வழி )
4. யாரோ தன்னை------க்கும் குரல் கேட்ட முருகன், கண் ________த்துப் பார்த்தான். ( விழி, விளி )
5. ________யில் நீர் நிரம்பியதனைக் காண விரும்பிய எழிலன் அருகில் இருந்த மரத்தின்மீது ________னான். ( ஏரி, ஏறி )
6. பரந்துபட்ட ________யின்மீது ________ பறந்து சென்றது. ( பரவை, பறவை )
7. ________ பொய்த்ததனால் மனம் வருந்திய மக்கள் இடம் ________ ச்சென்றனர். ( மாரி, மாறி )
8. ________யின் ஒரு பகுதியில் மட்டுமே ________ பெய்தது. ( மழை, மலை )
9. ஆடையில் ________ இருப்பதனைக்கண்ட முகிலன், அதனை நீக்குவதற்காக அருகில் இருந்த ஆற்றங் ________க்குச் சென்றான். ( கரை, கறை )
10. வயலில் ________ந்த சோளக்கதிர்களை ________க்கு விற்க வளவன் முடிவெடுத்தான். ( விலை, விளை )

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 X 1 = 5

அ. வான் பெற்ற நதி ________.

ஆ. துழாய் அலங்கல் என்பதன் பொருள் ________ .

இ. காசுக்குப் பாடுபவன் ________ அல்லன்.

ஈ. தாழ்ச்சி என்பதன் எதிர்ச்சொல் ________ .

உ. அடிமையலன் – இச்சொல்லைப் பிரிக்கும் முறை ________ .

ஓரிரு சொற்களில் விடையளிக்கவும். 5 X 1 = 5

அ. ‘மன்னிப்பு’ – இச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் யாது ?

ஆ. பகலுணவு, இராவுணவு குறித்துப் பாவாணர் யாது கூறுகின்றார் ?

இ. பாவாணர் எழுதிய நூல்களுள் இரண்டனைக் குறிப்பிடுக.

ஈ. தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் யார் ?

உ. தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் யார் ?

# யாப்பு, அணி

## யாப்பிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். அன்பு, தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

மாணவர் : ஐவகைப்படும், ஐயா. அவை: எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பன.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய், மகிழ்ச்சி. இன்று உங்களுக்கு யாப்பிலக் கணத்தைப் பற்றிக் கற்றுத்தருகிறேன்.

மாணவர் : ஐயா, யாப்பிலக்கணம் என்றால் என்ன?

ஆசிரியர் : யாப்பு என்றால் கட்டுதல் என்பது பொருள். யாக்கை – யாத்தல் = யாப்பு. எலும்பு, தசை, நரம்பு முதலியவற்றால் உடல் கட்டப்பட்டு இருப்பதுபோலச் செய்யுளுக்கு உரிய உறுப்புகளைக்கொண்டு பாடலை உருவாக்குதலே யாப்பு எனப்படும்.

மாணவர் : ஐயா, செய்யுள் உறுப்புகள் யாவை?

ஆசிரியர் : எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் யாப்பின் உறுப்புகளாகும்.

மாணவர் : அவற்றைக் குறித்துச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஓரெழுத்து தனித்தோ இணைந்தோ ஒலிப்பது அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

அசைகள் பல சேர்ந்து அமைவது, சீர் எனப்படும்.

சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்த அமைவது தளை எனப்படும்.

இரண்டு அல்லது பல சீர்கள் சேர்ந்து அமைவது அடி எனப்படும்.

அடிகள் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து அடுக்கிப் பாடுவது, பா எனப்படும். இவ்வண்ணம், செய்யுள் இலக்கணத்தைக் கூறுவது யாப்பிலக்கணம் எனப்படும்.

மாணவர் : செய்யுள் என்றாலும் பாட்டு என்றாலும் ஒன்றுதானே, ஐயா.

ஆசிரியர் : ஆம். கவிதை என்றும் தூக்கு என்றும்கூடச் சொல்லலாம்.

மாணவர் : பாவின் வகைகளைக் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகியன பாவின் வகைகள். ஓசைநயத்தை வேறுபடுத்தி அறிவதற்காக நால்வகைப் பாக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர் : வெண்பாவுக்கு ஒரு பாட்டுச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறளும் வெண்பாதான். ஆனால், இரண்டடிகள் மட்டும் வருவதனால், குறள் வெண்பா என அழைப்பர்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

இது குறள் வெண்பா.

கண்இமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் – எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

இது நேரிசை வெண்பா.

மாணவர் : ஆசிரியப்பாவுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தாருங்கள், ஐயா.

ஆசிரியர் : நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

மாணவர் : கலிப்பாவுக்கு ஒரு பாடல் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே.

மாணவர் : வஞ்சிப்பாவுக்கும் பாடல் ஒன்று சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : வளையாடு மலர்ச்சுனை நீரினிடை
வளையாடுகை மங்கைய ரன்னமென
விளையாடுவ ரோடுவர் கூடுவர்பின்
விளையாடுவர் பைங்கிளி மேவுறவே!

## அணியிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். இன்று நீங்கள் அணியிலக்கணம்பற்றிக் கற்கப் போகிறீர்கள்.

மாணவர் : அணி என்றால் என்ன, ஐயா ?

தமிழ்

ஆசிரியர் : அணி என்றால் அழகு என்பது பொருள். புலவர்கள், பொருளழகும் சொல்லழகும் தோன்றக் கவிதைகளை இயற்றிக் கற்போரை மனங்குளிரச் செய்வார்கள். இதனை விளக்கும் இலக்கணமே அணியிலக்கணம் .

மாணவர் : அணியிலக்கணத்திற்கென நூல்கள் உண்டா ?

ஆசிரியர் : உண்டே. தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன அணியிலக்கணம் குறித்த தமிழ் நூல்கள். அணிகள் பல. உவமையணி குறித்து இன்று கற்போம்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

ஊர் நடுவே உள்ள குளம் நிரம்பினாற்போன்றதே உலக உயிர்களை யெல்லாம் விரும்பி உதவிசெய்யும் பேரறிவு உடையானிடம் சேர்ந்த செல்வம்.

இப்பாடலில், ஊருணி நீர்நிறைதல் என்பது உவமை. உலகவாம் பேரறிவாளன் திரு என்பது உவமேயம். அற்று என்பது உவம உருபு.

இவ்வாறு உவமை, உவமேயம் இவ்விரண்டனையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படுமாறு வரப்பாடுவது உவமையணி ஆகும்.

மாணவர் : எடுத்துக்காட்டு உவமையணி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : சொல்கிறேன்.

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

ஒருவனது உடல் தூய்மை நீரில் குளிப்பதனால் புலப்படும். உண்மையைப் பேசுவதனால், உள்ளத்தின் தூய்மை புலப்படும்.

இப்பாடலில், உடம்பின் தூய்மை நீரால் அமையும் என்பது உவமை.

உள்ளத்தின் தூய்மை உண்மை பேசுவதனால் உண்டாகும் என்பது உவமேயம். இவ்விரண்டனையும் இணைக்கும் உவம உருபு இல்லை. இப்பாடலில் உவமை, உவமேயம் இரண்டும் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டு இடையில் உவம உருபு மறையுமாறு அமைக்கப் பட்டுள்ளது. எனவே, இப்பாடல் எடுத்துக்காட்டு உவமை அணி.

மாணவர் : உருவகஅணி பற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேன்.

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

தமிழ்

இப்பாடலில் இன்சொல் – விளைநிலம்; ஈதல் – விதை, வன்சொல் – களை; வாய்மை – உரம் (எரு); அன்பு – நீர்; அறம் – கதிர் என உருவகிக்கப் பெற்றுள்ளதனால், இப்பாடல் உருவக அணியாகும்.

இவ்வாறு உவமானம் வேறு, உவமேயம் வேறு எனத் தோன்றாத வகையில், உவமானத்தின் இயல்புகளை உவமேயத்தின்மேல் ஏற்றிக் கூறுவது உருவக அணி யாகும்.

மதிமுகம் – மதிபோன்ற முகம் – உவமை

முகமதி – முகம் ஆகிய மதி – உருவகம்

பயிற்சி :

1. யாப்பு என்றால் ____________ என்பது பொருள்.

அ) அடித்தல் ஆ) சிதைத்தல் இ) கட்டுதல்

2. காற்று அல்லது நீர் என்னும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.

## மாதிரி வினாக்கள்

தமிழ்

அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

1. அசை ____________ வகைப்படும்.

அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு

2. செய்யுள் இயற்றும் இலக்கணத்துக்கு ____________ எனப் பெயர்.

அ) அணியிலக்கணம் ஆ) பொருள் இலக்கணம் இ) யாப்பிலக்கணம்

3. உவமானத்தின் தன்மையை உவமேயத்தின்மேல் ஏற்றிக்கூறுவது ____________ அணி.

அ) உவமையணி ஆ) உருவக அணி இ) இயல்பு நவிற்சி அணி

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அசைகள் பல சேர்ந்து அமைவது ____________ எனப்படும்.

2. உவம உருபு வெளிப்பட வருவது ____________ அணி.

3. மதிமுகம் – உருவகமாக மாறும்போது ____________ எனவரும்.

ஆ) குறுவினாக்கள்

1. செய்யுள் உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?

2. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

3. அணி என்றால் என்ன ?

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

நகைச்சுவையாகப் பேசுவது ஒருகலை. பிறர் மனம் புண்படாதவகையில் நகைச்சுவை அமைதல் வேண்டும். நீங்கள் கேட்டும் பார்த்தும் கண்டும் சுவைத்த ஏதாவது ஒரு நிகழ்வினை நகைச்சுவை கலந்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பத்தியைப் படித்து நயம் உணர்க. உணர்ந்ததனை மற்றவருக்கு எடுத்துச் சொல்லுக.

ஒருமுறை மன்னரும், புலவரும் ஆற்றுநீர் காலில்படும்படி நடந்து சென்றனர். அப்போது புலவர் ஆற்றுநீரை அள்ளிக் குடித்தார். அதனைப் பார்த்த மன்னர், "புலவரே! என் காலில் விழுந்த நீரைத்தானே குடித்தீர்" என்றார். உடனே புலவர், "நீரே என்காலில் விழுந்தால் நான் என்ன செய்வது ?" என்று நயம்படக் கூறினார்.

### இ) எழுதுதல் திறன்

#### உரையாடலை நிறைவு செய்யும் திறன்

( எ.கா.)

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை ?

மாணவர் : உடல்நலம் இல்லாததனால் நேற்றுப் பள்ளிக்கு வரவில்லை, ஐயா.

ஆசிரியர் : மருத்துவரைப் பார்த்தாயா ? என்ன கூறினார் ?

மாணவர் : மலேரியாக் காய்ச்சலாக இருக்கலாம் என்று மருத்துவர் கூறினார், ஐயா.

பயிற்சி : வேலைவேண்டி நேர்காணலுக்குச் சென்ற முருகனுக்கும் நிறுவன மேலாளருக்கும் இடையே நடைபெறும் உரையாடல். கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்றொடர்களால் நிரப்புக.

முருகன் : வணக்கம் ஐயா.

மேலாளர் : வணக்கம். உட்காருங்கள்.

முருகன் : ______________________

மேலாளர் : உங்களுடைய சான்றிதழ்களைக் கொடுங்கள். இதற்குமுன் எங்கு வேலை பார்த்தீர்கள் ?

முருகன் : ______________________

மேலாளர் : அப்படியா, நல்லது. பெங்களூரிலேயே புகழ்பெற்ற நிறுவனமாயிற்றே. ஆனால், அங்கு வேலையை விட்டுவிட்டுச் சென்னையில் ஏன் பணிபுரிய வந்தீர்கள் ?

முருகன் : பெற்றோரின் உடல்நலனைக் கவனிக்கும்பொருட்டு, அவர்கள் இருக்கும் இடத்திற்கு இடமாறுதலும் பணிமாறுதலும் பெற்று வந்தேன்.

மேலாளர் : ______________________

தமிழ்

முருகன் : என் கடமையைத்தான் நான் செய்தேன்.

மேலாளர் : உங்களைப்போன்ற பொறுப்பானவர்களைத்தான் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் நாளைமுதல் இங்குப் பணிபுரிய வரலாம். உங்களுடைய பணியமர்வு ஆணையைச் சிறிதுநேரம் காத்திருந்து பெற்றுச் செல்லுங்கள்.

முருகன் : ______________________________

## மொழித்திறன் பயிற்சி

### 1. நிறுத்தக்குறிகள்

நாம் பேசும்போது கருத்துகளுக்கேற்ப, நிறுத்திப் பேசுகிறோம். எழுதும்போது, நிறுத்துமிடங்களைக் காட்ட நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துகிறோம். இவற்றைக் குறிக்காவிடில், சொற்றொடரின் பொருளைப் புரிந்துகொள்வதில் குழப்பம் ஏற்படும்.

முன் வகுப்பில் நிறுத்தக்குறிகளைப்பற்றியும் அவற்றை எங்குப் பயன்படுத்த வேண்டும் என்பதனைப் பற்றியும் அறிந்திருக்கிறீர்கள். அவற்றை நினைவுகூர்ந்து, கீழ்க்காணும் பயிற்சிகளைச் செய்க.

பயிற்சி

அ) கீழ்க்காணும் உரைநடைப்பகுதிகளுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.

1. எல்லை காத்தனர் தொல்லை தவிர்த்தனர் ஆனால் அவர் வாழ்வில் துன்பத்திற்கோர் எல்லையில்லை தொல்லைக்கோர் அளவில்லை
2. ஒரு கவிதையென்றால் கற்பனை உணர்ச்சி கருத்து வடிவம் ஆகிய நான்கும் இருக்க வேண்டும் என அறிஞர் கூறுவர்
3. திருக்குறள் ஒரு வாழ்வு நூல் அது தமிழகத்தின் செல்வம் அதன் திரண்ட கருத்தெல்லாம் ஒன்றே ஒன்று அது மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் மக்கட்பண்போடு வாழ்தல் வேண்டும்
4. சேரநாடு வேழமுடைத்து பாண்டிநாடு முத்துடைத்து சோழநாடு சோறுடைத்து தொண்டைநாடு சான்றோருடைத்து என்பது ஔவையின் வாக்கு
5. சிலப்பதிகாரம் தமிழில் முதன்முதலில் தோன்றிய காப்பியமாகும் இதனைக் குடிமக்கள் காப்பியம் என அறிஞர் போற்றுவர்

ஆ) கீழ்க்காணும் தொடர்களில் உரிய நிறுத்தக்குறிகளை இடுக.

1. நான் தண்டமிழைக் கற்று என் வாழ்வில் உயர்ந்தேன் என்று தமிழாசிரியர் கூறினார்
2. அண்ணா சிந்தி சீர்தூக்கு செயல்படு என்று கூறினார்
3. தமிழ் இலக்கணம் ஐவகைப்படும் அவையாவன எழுத்து சொல் பொருள் யாப்பு அணி
4. அடடே ஏனப்பா அழுகிறாய் என்னவேண்டும் உனக்கு
5. அனுமனைப் பார்த்து இராவணன் வாலி நலமா என்று கேட்டான்

**2.** நினைவு கூர்க.

கட்டங்களில் தமிழெண்களை எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | 11 | | 16 | |
| 2 | | 7 | | 12 | | 17 | |
| 3 | | 8 | | 13 | | 18 | |
| 4 | | 9 | | 14 | | 19 | |
| 5 | | 10 | | 15 | | 20 | |

**3.** கட்டுரைப்பயிற்சி

தீ விபத்தும் தடுக்கும் முறைகளும்

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

கவிதாவும், மாலாவும் தோழிகள். ஒருநாள் பகலுணவு வேளையின்போது மாலா வகுப்புக்கு வருகிறாள்.

கவிதா : "மாலா, வா வா. என்னப்பா ஹாப்டே லீவா ? ஏன் காலையில் கிளாசுக்கு வரவில்லை. லேட்டாக எழுந்தாயா ?"

மாலா : "நோ, கவிதா, ஸ்கூலுக்குக் கிளம்பும்போது எங்க மம்மி போஸ்ட்ஆபிசுக்குப் போகச் சொல்லிட்டாங்க. ஊரிலிருக்கின்ற எங்க ஆன்டிக்கு இமிடியட்டா மணியாடர் அனுப்பனும்னு சொன்னாங்க. அதனால்தான் மார்னிங் வரமுடியல. சரி, தமிழ் டீச்சர் டெஸ்ட் வைத்தார்களா ?

கவிதா : வைத்தார்கள். ஆனால், என்னால் எல்லாக் கொஸ்டினுக்கும் ஆன்ஸர் எழுதமுடியல. அதற்குள் பெல் அடித்து விட்டது.

மாலா : அப்படியா ? டோன்ட் வொரி, டீச்சர் மறுபடியும் டெஸ்ட் வைப்பார்கள் அப்போது நன்றாக எழுதலாம்.

இருவரும் பேசிய உரையாடலைப் படித்தீர்களா ?

தமிழும், ஆங்கிலமும் கலந்து பேச வேண்டுமா ?

மேற்கண்ட உரையாடலைப் பிறமொழிச் சொற்கள் கலவாமல் மீண்டும் எழுதுக.

தமிழ்

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் பழகும் திறன்

அழகனுக்கு அவனுடைய தந்தை புதிய மிதிவண்டி ஒன்றனை வாங்கிக் கொடுத்தார். அழகன் தந்தையின் அறிவுரைப்படி அதனை மிகவும் விழிப்புடன் பாதுகாத்தான். ஒருநாள், அழகனின் நண்பன் சோழன் மிதிவண்டியை ஓட்டிப் பார்ப்பதற்காக அவனிடம் கேட்டான். அழகனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. மிதிவண்டி பழுதாகிவிடுமோ என்று அஞ்சினான். அதேநேரம் மிதிவண்டியைக் கொடுக்காவிட்டால், நண்பன் விலகிச் சென்றுவிடுவானோ என்றும் அச்சம் கொண்டான்.

இந்நிலையில் அழகன் எத்தகைய முடிவு எடுத்திருப்பான் ?

## மதிப்புக்கல்வி

### நன்றியுணர்வு

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த மாவீரன் நெப்போலியன் இராணுவக் கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தார். அங்கு வயதான பெண்மணி ஒருத்தி பழம் விற்றுக்கொண்டிருந்தார். அவரிடம் நெப்போலியன் எப்போதும் பழம் வாங்குவார். பணம் இல்லையென்றாலும் கடனுக்கு வாங்கி அதனை இரண்டு மூன்றுநாளில் திருப்பிச் செலுத்திவிடுவார். ஒருமுறை அவர் கடனுக்கு வாங்கிய நேரம், இராணுவக் கல்லூரியை விட்டுச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கடனைத் திருப்பிச் செலுத்தாமலேயே அவர் சென்றுவிட்டார். இராணுவத்தில் உயர்ந்த பதவியில் சேர்ந்தார். மீண்டும் அதே ஊருக்குத் திரும்பி வந்தார். அப்போது, தான் கடன் சொல்லிவிட்டுச் சென்றுவிட்ட அந்த வயதான பெண்மணியைக் காணச் சென்றார். அப்பெண்மணி வழக்கம்போல, அதே இடத்தில் பழம் விற்றுக்கொண்டிருந்தார். அங்குச் சென்ற நெப்போலியன் அவரிடம் பழம் வாங்கினார். வாங்கியதற்கு அதிகமாகவே பணத்தைக் கொடுத்தார். பணத்தை வாங்கிய அந்தப் பெண்மணி திகைத்தார். “என்ன பாட்டி, என்னை அடையாளம் தெரியவில்லையா ? நான்தான் உங்களிடம் வழக்கமாகப் பழம் வாங்கிய நெப்போலியன். அன்று உங்களிடம் வாங்கிய பழத்திற்குப் பணம் கொடுக்கவில்லை அல்லவா ? இப்போது சேர்த்து வாங்கிக் கொள்ளுங்கள்” என்றார்.

நெப்போலியனின் நன்றியுணர்வைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

நீங்களும் நெப்போலியனைப்போன்று நன்றியோடு இருந்து வாழ்ந்து காட்டுங்கள்.

தமிழ்

# வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழ்க்காணும் பத்தியை ஆசிரியர் படிக்க மாணவர்கள் உற்றுக்கேட்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

கட்டுரை எழுதத் தொடங்கும்முன் அதனைப்பற்றிய கருத்துகள் பல எழுதுபவரின் எண்ணத்தில் தோன்றுதல் வேண்டும். பொருளுக்கேற்பக் கூறுதல், வரிசைப்படுத்துதல், சுருக்கமாகக் கூறுதல் முதலிய சிறந்த இயல்புகளைக் கேட்டல் திறன் வாயிலாக ஒருவர் கற்றுக் கொள்ளலாம். கற்றல் கேட்டல் ஆகிய இவ்விரண்டனை மட்டும் பெற்றிருக்கும் ஒருவர், ஓர் அகரமுதலிக்கு இணையானவர் ஆவார். ஏனெனில், அகரமுதலி ஒருவர் அறிந்துகொள்ள விரும்பும் விவரங்களை மட்டும் தருமேயன்றி, அவற்றைத் தொடர்புபடுத்திக் கூறாது. ஒருவர் தாம் அறிந்து கொண்டதனைப்பற்றி நன்கு சிந்தித்து ஆராய்தல் வேண்டும். சிந்தனையின் விளைவே சிறந்த அறிவாகும். கருத்துகளை ஆராய்ந்து தொடர்புபடுத்துதலே தெளிந்த அறிவாகும். ஒருவர் புத்தகப்பூச்சியாக மட்டும் இருந்துவிடாமல், இயற்கையில் உள்ளனவற்றையும் காணுதல் வேண்டும். ஏனெனில், பட்டறிவுக்கல்வி அனைவருக்கும் இன்றியமையாததாகும். 'மற்றவர்கள் கூறுவதனைவிட நான் என்ன காண்கின்றேன் ?' என்னும் வினா ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எழுதல் வேண்டும். நாள்தோறும் நம்வாழ்வில் காண்பனவற்றை எழுதியும், வருணித்தும், விவரித்தும்வரின் நமது சிந்திக்கும் திறனும் கட்டுரை எழுதும் வன்மையும் பெருகும் என்பது திண்ணம்.

வினாக்கள்

1. உரைப்பத்தியின் மையக் கருத்து யாது ?
2. அகரமுதலிக்கு இணையானவர் யார் ?
3. புத்தகப்பூச்சி என யாரை அழைக்கிறோம் ?
4. பட்டறிவுக்கல்வி ஏன் தேவை ?
5. சிந்தனையின் விளைவாகத் தோன்றுவது எது ?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் பேசுக.

(சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் கோச்செங்கணானுக்கும் நடைபெற்ற போரில், சேரமான் கணைக்கால் இரும்பொறை தோல்வியுறுகின்றான். அவனைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்துகின்றான் கோச்செங்கணான். சிறையில் வாடிய இரும்பொறைக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.)

இரும்பொறை : ஆ ! தண்ணீர், தண்ணீர். என் நா உலர்ந்துவிட்டது. யாரங்கே ? குடிக்க நீர் கொணருங்கள். நான் அழைப்பது உங்கள் செவிகளில் விழவில்லையா ?

சிறைக்காவலர் – 1 : ஆகா ! நன்றாகக் கேட்கிறது.(செவியில் விழாததுபோல்) யாரோ ஒருவன் தண்ணீர், தண்ணீர் என்று அலறுகின்றான்.

சிறைக்காவலர் – 2 : ஐயோ பாவம் ! தண்ணீர் கேட்டுத் தவிப்பவன் சேர மன்னன் இரும்பொறை போலிருக்கிறதே !

தமிழ்

தமிழ்

சிறைக்காவலர் – 1 : ஆமாம். நம் அரசனிடம் போரிட்டுத் தோல்வியுற்ற இரும்பொறைதான்.

சிறைக்காவலர் – 2 : நம் அரசனிடம் போரிட்டுத் தோற்ற பின்பும், அவனது ஆணவம் குறையவில்லையே! குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமாம். தண்ணீர் வேண்டுபவன் தாழ்மையுடன் அல்லவா கேட்டல் வேண்டும்?

சிறைக்காவலர் – 1 : உடனடியாக நீர் தராவிட்டால் இறந்தா போய்விடுவான்? இன்னும் சிறிது நேரம்தான் புலம்பட்டுமே!

இரும்பொறை : சிறைக் காவலர்களே! என்னையும் குற்றவாளி என நினைத்துக் கொண்டீரோ! நான் சேரநாட்டு அரசன் கேட்கிறேன். என் நீர்வேட்கையைத் தீருங்கள்.

(சிறிதுநேரம் கழித்து)

சிறைக்காவலர் – 1 : தண்ணீர், தண்ணீர் என்று அலறியது நீதானா? இதோ, தண்ணீர். பெற்றுக்கொள்.

(தண்ணீருக்காகச் சேரன் கை நீட்டும்பொழுது வேண்டுமென்றே காவலர்கள் கொடுப்பதுபோல் கொடுத்து ஏமாற்றுதல். குவளையில் சிறிதளவு மட்டுமே தண்ணீர் இருத்தல். அதனைச் சேரன் பெறுதல். ஆனால், அத்தண்ணீரை அருந்தாமல் ஓர் ஓரமாக வைத்தல்.)

இரும்பொறை : 'சிறைக் காவலர்களே! போர்க்களத்தில் வாளினால் வீழ்ந்துபட்டவர்களுக்கே தேவருலகம் கிட்டும். இறந்து பிறக்கும் குழந்தையும் உருவின்றிப் பிறக்கும் குழந்தையும் வாள் வடுவினைப்பெறும் வாய்ப்புப் பெறா. எனினும், அவற்றையும் தேவருலகம் அனுப்ப புல்மீது கிடத்தி, 'வெற்றி வீரர் சென்ற வழியே இவையும் செல்க' என வாழ்த்தி, வாளால் வெட்டிப் புதைப்பர். இத்தகைய பண்புநலம் வாய்க்கப்பெற்ற அரச மரபிலே தோன்றிய என்னை, நீவிர் மதியாது போயினீர். நீர்வேட்கையைப் பொறுத்துக் கொள்ளாமல் யான் உங்களைக் கெஞ்சிக் கேட்டும், காலந்தாழ்த்தித் தண்ணீர் தந்தீர். தன்னை மதியாதார் தந்த நீரைப் பருகும் இழிநிலையுடைய கீழ்மகனாக இவ்வுலகத்தில் பிறந்திலன்'. (என்று கூறியவாறே சேரமான் கணைக்கால் இரும்பொறை கவி பாடிக் கலங்கி மயங்கி விழுந்தான்.)

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் பாடலை ஓசைநயத்துடன் பாடிக்காட்டுக.

| | |
|---|---|
| பள்ளிக்குச் செல்கின்ற தம்பி – நன்கு<br>பாடங்கள் பயின்றிடு நம்பி!<br>துள்ளிநீ குதித்தாடு தம்பி – இன்பம்<br>துய்க்கின்ற நீஅன்றோ தும்பி!<br><br>அமிழ்தான பாடல்கள் பாடு – புது<br>அறிவூட்டும் நூல்களை நாடு!<br>தமிழ்தந்த கலையாவும் தேடு – பகை<br>தனைக்கண்டால் நீயங்குச் சாடு! | ஏழைக்கு நீஅன்பு காட்டு – உனை<br>எதிர்த்தாரை நீபொங்கி ஓட்டு!<br>கோழைக்கு வீரத்தை ஊட்டு – உயர்<br>கொள்கைக்காய் நீவாழ்ந்து காட்டு!<br><br>ஒளிமிக்க எதிர்காலம் கண்டு – நீ<br>உயர்வாய் அந்நம்பிக்கை உண்டு !<br>களிஇன்ப நல்வாழ்வு கொண்டு – கன்னித்<br>தமிழுக்கு ஆற்றுக தொண்டு!<br><br>கோ. அ. அப்துல் லத்தீப், என் தமிழ் |

# எழுதுதல் திறன்

| சொற்பொருளறிதல் | செயல்பாடு – 4 |
|---|---|

| ஒரு பொருள் | பல சொற்கள் |
|---|---|
| சோறு | அடிசில், அமலை, அயினி, உண்டி, உணா, ஊண், கூழ், சொன்றி, துற்றி, பதம், பாத்து, பாளிதம், புகா, புழுக்கல், புற்கை, பொம்மல், மடை, மிசை, மிதவை, மூரல், வல்சி |

இவை, ஒரு பொருள் குறித்த பல சொற்கள் என வழங்கப்படுகின்றன. இத்தகைய ஒரு பொருள் குறித்த பல சொற்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவதனைச் சொல்லாட்சி என்பர்.

(எ.கா.) சோறு என்னும் பொருளில் இடம்பெற்றுள்ள பாடல் அடிகள்

உண்டி – அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட . . . . ( நாலடியார், 1 )

கூழ் – கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர் . . . . (புறநானூறு, 70)

புழுக்கல் – உப்பிலிப் புழுக்கல் . . . . ( சீவகசிந்தாமணி, 2984)

பொம்மல் – இறடிப்பொம்மல் பெறுகுவீர் . . . . (மலைபடுகடாம், 169)

மூரல் – பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர் . . . . (பெரும்பாணாற்றுப்படை, 168)

வல்சி – வளைகதிர் வல்சிகொண் டளைமல்க . . . (புறநானூறு, 190)

பயிற்சி

ஒரு பொருள் உணர்த்தும் பல சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்துக.

| வ.எண் | ஒரு பொருள் | பல சொற்கள் |
|---|---|---|
| 1. | மிகுதி | கூறு, விளம்பு, மொழி, இயம்பு, உரை |
| 2. | பேசு | ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன் |
| 3. | சூரியன் | சால, தவ, நனி, கூர், கழி |
| 4. | குழந்தை | புவி, தரணி, நானிலம், பார், வையம் |
| 5. | உலகம் | பிள்ளை, குழவி, மகவு, சேய் |

| விடுகதைகளுக்கான விடை காணல் | செயல்பாடு – 5 |
|---|---|

நாட்டுப்புறப் பாடல்களில் வழங்கும் விடுகதைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளைக் கண்டறிந்து எழுதுக.

1. பூட்டில்லாப் பெட்டி, பெட்டிக்குள் வைரம், வைரத்து ஒளியாலே வையகமே தெரியுது – அஃதென்ன ?
2. எட்டாத தூரத்திலே எவரும் இல்லாக் காட்டினிலே
   எழிலான பெண்ணொருத்தி இரவெல்லாம் சிரிக்கின்றாள் – அவள் யார் ?
3. தன்னைத்தான் பலி கொடுப்பான் மற்றவருக்கு ஒளி கொடுப்பான் – அவன் யார் ?

| |
|---|
| 4. உப்பை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார் ? |
| 5. அக்காள் வீட்டுக்குத் தங்கை போகலாம்; தங்கை வீட்டுக்கு அக்காள் போக முடியாது. அவையென்ன ? |

விடைகள் வளரறி செயல்பாடுகளின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

## சொல்லுருவாக்குதல் — செயல்பாடு – 6

கீழ்க்காணும் எழுத்துகளை முதல் எழுத்தாக அமைத்துப் பெயர், ஊர்/இடம், பொருள், பறவை, விலங்கு, பூ, தொழில், கருவி ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்புக.

| எழுத்து | பெயர் | ஊர்/இடம் | பொருள் | பறவை | விலங்கு | பூ | தொழில் | கருவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ஆதவன் | ஆடுதுறை | ஆடை | ஆந்தை | ஆமை | ஆவாரம்பூ | ஆசிரியர் | ஆணி |
| வா | | | | | | | | |
| கா | | | | | | | | |
| செ | | | | | | | | |
| தி | | | | | | | | |
| பொ | | | | | | | | |

தமிழ்

## பழமொழிகளின் பொருளறிதல் — செயல்பாடு – 7

பொருத்துக.

| பழமொழி | பொருள் |
|---|---|
| தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை. | அறிவுரை |
| ஆடிப்பட்டம் தேடி விதை. | நம்பிக்கை |
| மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே. | உறவுமுறை |
| தை பிறந்தால் வழி பிறக்கும். | நகைச்சுவை |
| பசியாமல் இருக்க வரந்தருவேன், கொஞ்சம் பழையது இருந்தால் போடு. | உழவு |

## கோடிட்ட இடத்தைப் பொருளறிந்து நிரப்புதல் — செயல்பாடு – 8

பொருள் மயக்கம் தரும் சொற்கள் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருளறிந்து கீழ்க்காணும் தொடர்களை நிரப்புக.

1. உன் வீட்டில் ____________ அறைகள் உள்ளன ? ( எத்தனை, எத்துணை )

2. தாயைக் கண்டதும் குழந்தைக்குத்தான் ____________ மகிழ்ச்சி. ( எத்தனை, எத்துணை )

3. ____________க்கின்ற நாய் கடிக்காது. ( குரை, குலை )

4. தென்னைமரத்தில் தேங்காய்கள் ____________யாகத் தொங்குகின்றன. ( குரை குரை, குலை குலை )

5. நாள்தோறும் விடியற்காலையில் எழுவது என் ____________. ( வழக்கம், பழக்கம் )

6. விளையாட்டு வீரர் சச்சின் இடக்கை ____________ உடையவர். ( வழக்கம், பழக்கம் )

7. இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் ____________ கலந்து கொள்ளுதல் வேண்டும். ( தவறாமல், தவிராமல் )

8. பூம்புகார்ப் ____________ ஒரு காலத்தில் சிறந்த கடற்கரை நகரமாக விளங்கியது. ( பட்டினம், பட்டணம் )

செயல்பாடு ஐந்துக்கான விடைகள்

1. கண் 2. நிலவு 3. மெழுகுவத்தி 4. கடல் 5. உழக்கு, படி.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

அ. இலக்கியச் சுவைகளில் மிகவும் நுட்பமான சுவை ____________.

ஆ. நகைச்சுவையுணர்வு இல்லாதவருக்குப் பகலும் ____________ ஆகத் தோன்றும்.

இ. கம்பராமாயண வானரத்தலைவன் ____________.

ஈ. கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் ____________.

உ. மருமக்கள் வழி மான்மியம் ஒரு ____________ களஞ்சியம்.

**2. கீழ்க்காணும் குறட்பாவில் பயின்றுவரும் அணியைத் தேர்ந்தெடுக்கவும்.** 2 X 1 = 2

அ. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
(உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி)

ஆ. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.
(உவமையணி, எடுத்துக்காட்டு உவமையணி)

**3. கீழ்க்காணும் உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள நகைச்சுவையை விளக்குக.** 3 X 1 = 3

தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள், பேசுவதற்காக ஓர் ஊருக்குச் சென்றார். தொடர்வண்டியில் சென்று காலையில் அவ்வூரில் இறங்கினார். அவரைப் பேசுவதற்கு அழைத்தவர்கள் மாலையிட்டு அவரை வரவேற்றார்கள். அதனைக் கண்ட கி. வா. ஜகந்நாதன், 'ஏதேது ? காலையிலே மாலை வந்துவிட்டதே!' என்றார் .

தமிழ்

# எழுத்து

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது மொழி. ஒருவர், தம் கருத்தை வெளிப்படுத்தவும், அதனைக் கேட்போர் புரிந்துகொள்ளவும் கருவியாக அமைவதும் மொழியே.

அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவும் துணைசெய்வது இலக்கணம் ஆகும்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் எனத் தமிழிலக்கணம் ஐவகைப்படும்.

## எழுத்துகளின் வகை

முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்துகள் இருவகைப்படும்.

## முதலெழுத்துகள்

அ முதல் ஔ வரை உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகளாகும். இவை சார்பெழுத்துகள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதனால் முதலெழுத்துகள் எனப்பட்டன.

## சார்பெழுத்துகள்

முதலெழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும். இவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை குறித்துக் காண்போம்.

## அளபெடை

ஆசிரியர் : இனிய குழந்தைகளே! வணக்கம்.

செந்தில்வடிவு! தெருவில் சிலர் பொருள்களைக் கூவி விற்றுக்கொண்டே செல்கிறார்கள். அவர்கள் என்னென்ன பொருள்களை விற்கிறார்கள் எனச் சொல்.

செந்தில்வடிவு : பூ, பழம், கீரை, மோர் என இப்படிப் பலபொருள்களை விற்கிறார்கள், ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி, நீ அவற்றையெல்லாம் கவனித்திருக்கிறாய்! சரி. பூ, பழம் இவற்றை அவர்கள் எவ்வாறு கூவி விற்கிறார்கள்? வெற்றி! நீ சொல்.

வெற்றி : பூவோஒ பூவு, பழமோஒ பழம், கீரையோஒ கீரை, மோரோஒ மோரு.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய்! பூ, பழம் இப்படிச் சொல்லி விற்றால் வாங்குகிறவர்கள் காதுகளில் சரியாக விழாது. நீட்டிச் சொல்லும்போதுதான் அவர்கள் என்ன விற்கிறார்கள் என்பது தெளிவாகப் புரியும், இல்லையா ?

மாணவர் : ஆமாங்க, ஐயா.

ஆசிரியர் : இதேபோலத்தான் புலவர்களும் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய அளபெடையைப் பயன் படுத்துகிறார்கள்.

வெற்றி : இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா!

ஆசிரியர் : சொல்கிறேன். செய்யுளில் ஓசை குறையும்போது, ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதனை அளபெடை என்கிறோம்.

அளபு = மாத்திரை. எடை = எடுத்தல் என்பது பொருள்.

எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்.

செந்தில்வடிவு : அளபெடை எத்தனை வகைப்படும், ஐயா ?

ஆசிரியர் : இருவகைப்படும். முதலாவது உயிரளபெடை, இரண்டாவது ஒற்றளபெடை.

வெற்றி : உயிரளபெடை என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது, உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் குறியீடாக அதன்பக்கத்தில் வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனஎழுத்தாக வரும். இவ்வுயிரளபெடை மூவகைப்படும்.

வெற்றி : என்னென்ன வகைகள், ஐயா ?

ஆசிரியர் : செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடையைச் செய்யுளிசை அளபெடை என்பர். ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை இன்னிசை அளபெடை என்பர். இவ்விரண்டும் அல்லாமல் பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை, சொல்லிசை அளபெடையாகும்.

செந்தில்வடிவு : சான்றுகளோடு விளக்கிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறையும் இடத்தில், அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், உரிய மாத்திரையிலிருந்து மிக்கு ஒலிக்கும். இதனையே

தமிழ்

தமிழ்

செய்யுளிசை அளபெடை எனக் கூறுவர்.

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. – குறள், 809

இக்குறளைப் படித்துப் பாருங்கள். கெடா என்பது கெடாஅ என இறுதியிலும், விடார் என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்து வந்துள்ளது. எனவே, இது செய்யுளிசை அளபெடை ஆகும். இதற்கு இசைநிறை அளபெடை என்னும் வேறுபெயரும் உண்டு.

### இன்னிசை அளபெடை

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. – குறள், 15

கெடுப்பதும், எடுப்பதும் என ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக து என்னும் குறில் தூ என நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

### சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.– குறள், 544

இக்குறட்பாவில் தழீஇ என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது.

தழீ – தழுவுதல் என்னும் தொழிற்பெயர்ச் சொல், தழீஇ (தழுவி) என வினையெச்சச் சொல்லாகப் பொருள் தருவதற்கு அளபெடுத்ததனால் இது சொல்லிசை அளபெடை ஆயிற்று.

கண்ணன் : ஒற்றளபெடை என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.

எங்ங்கி றைவனுள னென்பாய்.

வெஃஃகுவார்க் கில்லை வீடு.

இத்தொடர்களில் உள்ள ங் மற்றும் ஃ ஆகிய எழுத்துகள் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யும், ஃ ஒன்றும் ஆகப் பதினோர் எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை என்பது பெயர்.

| நினைவிற் கொள்க. |
|---|

1. செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை) – செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசைகொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) உழாஅர், படாஅர்.
2. இன்னிசை அளபெடை – இனிய இசைக்காகக் குறில் நெடிலாக அளபெடுத்து, மூவசைச் சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.
3. சொல்லிசை அளபெடை – பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும். இ என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ.கா.) நசைஇ, நிறீஇ.
4. ஒற்றளபெடை – வல்லினத்து க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும், இடையினத்தில் ர், ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப் பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.

| எழுத்துவகை | | மாத்திரை |
|---|---|---|
| உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் | – | ஒன்று |
| உயிர்நெடில், உயிர்மெய்நெடில் | – | இரண்டு |
| மெய், ஆய்தம் | – | அரை |
| உயிரளபெடை | – | மூன்று |
| ஒற்றளபெடை | – | ஒன்று |

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

1. பெறாஅ, கொடுப்பதூஉம், தழீஇ, அண்ணன்.
2. வாழ்ழ்க்கை, சங்ங்கு, நெஞ்ஞ்சு, கண்ண்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் – இத்தொடரில் ____________ அளபெடை இடம்பெற்றுள்ளது.

   அ) இன்னிசை ஆ) செய்யுளிசை இ) சொல்லிசை

2. உடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு – இக்குறட்பாத் தொடரில் ____________ அளபெடை வந்துள்ளது.

   அ) சொல்லிசை ஆ) இசைநிறை இ) இன்னிசை

3. கீழ்க்காண்பனவற்றுள் சொல்லிசை அளபெடை ____________.

   அ) எச்சம் பெறாஅ விடின் ஆ) வரனசைஇ இன்னும் உள்ளேன்.
   இ) உண்பதூஉம்

2. பொருத்துக.

தமிழ்

ஒற்றளபெடை – குடிதழீஇ
செய்யுளிசை அளபெடை – அரங்ங்கம்
இன்னிசை அளபெடை – உழாஅர்
சொல்லிசை அளபெடை – உடுப்பதூஉம்

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அளபெடை என்னும் சொல்லுக்கு ________ என்பது பொருள்.
2. அளபெடை ______ வகைப்படும்.
3. செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் _______ ஆகி அளபெடுப்பது _______ அளபெடை.

ஆ) குறுவினாக்கள்

1. உயிரளபெடையைச் சான்று தந்து விளக்குக.
2. உயிரளபெடையின் வகைகள் யாவை?
3. ஒற்றளபெடை என்றால் என்ன?
4. இன்னிசையளபெடையைச் சான்றுடன் விளக்குக.

செயல்திட்டம்

திருக்குறளின் அறத்துப்பாலில் அளபெடை இடம்பெற்றுள்ள குறட்பாக்களைத் தொகுக்க. அவற்றை அளபெடைகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.

## எழுத்துகளின் பிறப்பு

எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள்.

மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலிஎழுத்து. – நன்னூல், 58

உயிருள்ள உடம்பினுள்ளே எழுகின்ற காற்று மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகியவற்றைப் பொருந்தி உதடு, நாக்கு, பல், மேல்வாய் ( அண்ணம் ) ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

### இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும், உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் கூறுவர்.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் முதலெழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி என்பன. அவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவே.

எழுத்துகளின் பிறப்பை நன்னூலார் கூறியதனைப்போலவே மொழியியல் அறிஞர் ஒலி


எழுத்துகளின் பிறப்பு
(ஒலி உறுப்புகள்)
இடப்பிறப்பு
(காற்றறைகள்)
மார்பு
கழுத்து
தலை
மூக்கு
முயற்சிப்பிறப்பு
(ஒலிப்பு முனைகள்)
இதழ்
நா
பல்
அண்ணம்

## ஒலிப்புப் பயிற்சி


ள, ண
ற
ர
ல, ந, ன
இயல்பான நாக்கு
ழ

நூலுள் அடக்குவர்.

ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை ஒலிப்புமுனைகள் எனவும் கூறுவர்.

## முதலெழுத்துகளின் இடப்பிறப்பு

- ❖ பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், இடையின எழுத்துகள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.
- ❖ மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன.
- ❖ வல்லின எழுத்துகள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.

ஆவி இடைமை இடமிடறு ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை. – நன்னூல், 75

(ஆவி – உயிரெழுத்து; இடைமை – இடையினம்; மிடறு – கழுத்து; மென்மை – மெல்லினம்; உரம் – மார்பு.)

## முதலெழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

அ) உயிர் – பன்னிரண்டு

- ❖ அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

அவற்றுள்,
முயற்சியுள் அஆ அங்காப் புடைய. – நன்னூல், 76

(அங்காப்பு – வாயைத் திறத்தல்)

- ❖ இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்தும் வாயைத் திறப்பதனோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதனால் தோன்றுகின்றன.

இஈ எஏ ஐஅங் காப்போ(டு)
அண்பல் முதல்நா விளிம்புற வருமே. – நன்னூல், 77

- ❖ உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்தும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே. – நன்னூல், 78

ஆ) மெய் – பதினெட்டு

- ❖ க், ங் – இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
- ❖ ச், ஞ் – இவ்விரு மெய்களும் இடைநா (நடு நா), நடு அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.
- ❖ ட், ண் – இவை நாவினது நுனி, அண்ணத்தின் நுனியைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

கஙவும் சஞவும் டணவும் முதலிடை

நுனிநா அண்ணம் உறமுறை வருமே. – நன்னூல், 79

- ( நா – நாக்கு; அண்ணம் – மேல்வாய்ப் பகுதி; க, ங, ச, ஞ, ட, ண என்னும் உயிர்மெய்கள் – க், ங், ச், ஞ், ட், ண் என்னும் மெய்களைக் குறிக்கும். பின்வரும் நூற்பாக்களில் உள்ளவற்றையும் இவ்வாறே கொள்க. )
- த், ந் – மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.

அண்பல் அடிநா முடியுறத் தநவரும். – நன்னூல், 80

- ப், ம் – மேல் உதடும் கீழ்உதடும் பொருந்த இவை தோன்றும்.

மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும். – நன்னூல், 81

- ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகிறது.
- அடிநா அடியணம் உறயத் தோன்றும். – நன்னூல், 82
- ர், ழ் – இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.
- அண்ணம் நுனிநா வருட ரழவரும். – நன்னூல், 83
- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும். – நன்னூல், 84

- வ் – இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. – நன்னூல், 85

- ற், ன் – இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும். – நன்னூல், 86

### சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக்கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும். பிற சார்பெழுத்துகள் யாவும், தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. – நன்னூல், 87

**பயிற்சி:** உதடுகள் ஒட்டா எழுத்துகள் கொண்ட சொற்களை வட்டமிடுக.

கம்பம், நான்கு, வேம்பு, தாவரம், உலக்கை, பார்வை

தமிழ்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. முதல் எழுத்துகளின் எண்ணிக்கை ____________ ஆகும்.
   அ) 12 ஆ) 18 இ) 30
2. கழுத்தினின்று பிறப்பது ____________.
   அ) வல்லினம் ஆ) மெல்லினம் இ) இடையினம்
3. வல்லின எழுத்துகளின் இடப்பிறப்பு ____________.
   அ) மார்பு ஆ) கழுத்து இ) மூக்கு
4. உதடுகள் இரண்டும் பொருந்துவதனால் பிறக்கும் எழுத்துகள் ____________.
   அ) ப், ம் ஆ) ய், ர் இ) க், ங்

### ஆ) குறுவினாக்கள்

1. முதலெழுத்துகள் என்பன யாவை ?
2. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன ?
4. முதலெழுத்துகள் பிறக்கும் இடங்களை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

(அடிப்படைத்திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத்திறன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல் முதலியனவும் மொழித்திறன் பயிற்சிகளில் பாடப்பகுதியைச் சார்ந்த, சாராத மொழிப்பயன்பாட்டுக் கூறுகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.)

### எழுதுதல் திறன்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. (மாதிரி)

மருத்துவத்தைப் பொறியியலைத் தமிழில் கற்று
    மக்கள்நலம் காப்பாற்ற விரும்பு கின்ற
கருத்துடைய மாணவர்கள் தோன்ற வேண்டும்
    கடும்உழைப்பால் தமிழர்புகழ் ஓங்க வேண்டும்
வருங்காலத் தமிழரெலாம் அறிவால் இந்த
    வையத்தை வியப்படையச் செய்ய வேண்டும்
இருண்டிருக்கும் நிலைமாறத் தமிழில் கற்போம்
    என்றென்றும் தலைநிமிர்ந்து வாழ்வோம்! வெல்வோம்!

வினாக்கள்

1. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.
2. தமிழர் புகழ் எதனால் ஓங்க வேண்டும்?
3. எத்தகைய மாணவர்கள் தோன்றுதல் வேண்டும்?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களைப் பட்டியலிடுக.
5. இப்பாடலிலுள்ள வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.
6. இப்பாடலில் இரண்டாம் வேற்றுமையுருபு இடம்பெற்றுள்ளது. அதனைக் கண்டறிந்து எழுதுக.

விடைகள்

1. தாய்மொழிவழிக் கல்வி.
2. தமிழர் புகழ், அவர்தம் கடும் உழைப்பால் ஓங்குதல் வேண்டும்.
3. மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற்கல்விகளைத் தாய்மொழியான தமிழில் கற்று மக்கள்நலம் காக்க விரும்பும் மாணவர்கள் தோன்றல் வேண்டும்.
4. மருத்துவம், பொறியியல், தமிழ், மக்கள், மாணவர்கள், தமிழர், வையம் – பெயர்ச்சொற்கள்.
5. காப்பாற்ற, தோன்ற, ஓங்க, செய்ய, வியப்படைய, நிமிர்ந்து – வினையெச்சங்கள்.
6. இரண்டாம் வேற்றுமை உருபு ஐ. மருத்துவத்தை, பொறியியலை, வையத்தை.

பயிற்சி

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பாரதியார் உலககவி! அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒரூருக் கொருநாட்டுக் குரிய தான
ஒட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

– பாரதிதாசன்

வினாக்கள்

1. பாரதியார் எத்தகையவர் எனப் பாரதிதாசன் கூறுகிறார்?
2. பாரதியார் எத்தகைய நினைப்புடையவர் அல்லர்?
3. மக்களிடையே நிலவும் பாகுபாடு குறித்துப் பாரதியார் கூறுவன யாவை?
4. பாடலில் இடம்பெற்றுள்ள பெயரெச்சங்களை எடுத்தெழுதுக.
5. பாடலுக்கேற்ற பொருத்தமான தலைப்பைத் தருக.

தமிழ்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



## மொழித்திறன் பயிற்சி

மயங்கொலிச் சொற்கள் – வேறுபாடு அறிந்து பொருள் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (எ.கா.) ர, ற | அரை | – பாதி | அறை | – கட்டடப் பகுதி | | |
| | உரை | – | உறை | – | | |
| | கரை | – | கறை | – | | |
| | கூரிய | – | கூறிய | – | | |
| | கூரை | – | கூறை | – | | |
| | பரவை | – | பறவை | – | | |
| | இரங்கு | – | இறங்கு | – | | |
| | எரிதல் | – | எறிதல் | – | | |
| | இரை | – | இறை | – | | |
| ண, ன | மணம் | – | மனம் | – | | |
| | பணி | – | பனி | – | | |
| | ஆணி | – | ஆனி | – | | |
| ல, ழ, ள | அலை | – | அழை | – | அளை | – |
| | இலை | – | இழை | – | இளை | – |
| | உலை | – | உழை | – | உளை | – |
| | கலை | – | கழை | – | களை | – |
| | அலகு | – | அழகு | – | அளகு | – |
| | வால் | – | வாழ் | – | வாள் | – |
| | தால் | – | தாழ் | – | தாள் | – |
| | ஆல் | – | ஆழ் | – | ஆள் | – |

தமிழெண்களை அறிந்து கொள்வோம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 11 | கக | 21 | உக | 31 | ஙக | 41 | சக |
| 2 | உ | 12 | கஉ | 22 | உஉ | 32 | ஙஉ | 42 | சஉ |
| 3 | ங | 13 | கங | 23 | உங | 33 | ஙங | 43 | சங |
| 4 | ச | 14 | கச | 24 | உச | 34 | ஙச | 44 | சச |
| 5 | ரு | 15 | கரு | 25 | உரு | 35 | ஙரு | 45 | சரு |
| 6 | சா | 16 | கசா | 26 | உசா | 36 | ஙசா | 46 | சசா |
| 7 | எ | 17 | கஎ | 27 | உஎ | 37 | ஙஎ | 47 | சஎ |
| 8 | அ | 18 | கஅ | 28 | உஅ | 38 | ஙஅ | 48 | சஅ |
| 9 | கூ | 19 | ககூ | 29 | உகூ | 39 | ஙகூ | 49 | சகூ |
| 10 | கO | 20 | உO | 30 | ஙO | 40 | சO | 50 | ருO |

பயிற்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | க | 11 | | 21 | | 31 | | 41 | |
| 2 | | 12 | | 22 | | 32 | | 42 | |
| 3 | | 13 | | 23 | | 33 | | 43 | |
| 4 | | 14 | | 24 | | 34 | | 44 | |
| 5 | | 15 | | 25 | | 35 | | 45 | |
| 6 | | 16 | | 26 | | 36 | | 46 | |
| 7 | | 17 | | 27 | | 37 | | 47 | |
| 8 | | 18 | | 28 | | 38 | | 48 | |
| 9 | | 19 | | 29 | | 39 | | 49 | |
| 10 | | 20 | | 30 | | 40 | | 50 | |

விடுபட்ட இடத்தில் தமிழெண்களை எழுதுக.

1. க, ______, ______, ______, ரு, ______, ______, அ, ______, ______.
2. கக, கஉ, ______, ______, ______, கரு, ______, ______, ______, உO.

கட்டுரைப் பயிற்சி

நான் விரும்பும் நூல் (திருக்குறள்)

குறிப்புச்சட்டகம்

முன்னுரை – பொருளுரை ( நூலின் அமைப்பு, நூல் கூறும் கருத்துகள், பயன்கள், நான் இந்நூலை விரும்புவதற்கான காரணம்) – நிறைவுரை.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

இனியன், தன் வீட்டு வாயிலில் விளையாடிக்கொண்டிருந்தான். அவ்வழியே ஓய்வுபெற்ற அரசு அலுவலரும் தமிழ்ப் பற்றாளருமான தமிழவேள் வருகிறார். இனியனிடம், ‘தம்பி, அப்பா இருக்கிறாரா ?’ என வினவியபடியே வீட்டிற்குள் நுழைந்தார்.

அவரை வரவேற்ற இனியனின் தந்தை நம்பி, “வாங்க, வாங்க. இனியா..., சேர் எடுத்து வா, ஃபேன் சுவிட்சைப் போடு என்றார்.

தன் மனைவியை நோக்கி, கமலா... பிரிஜ்ஜிலிருந்து ஐஸ்வாட்டர் எடு” எனப் பரபரப்பாகக் கூறினார். நாற்காலியில் உட்கார்ந்தார், தமிழவேள்.

ஐயா டீ, கூல் ட்ரிங்ஸ் என்ன குடிக்கிறீர்கள் ? எனக் கேட்டார்.

தமிழவேள் பொறுமையுடன், “நம்பி! நல்ல தமிழ்ச்சொற்களை விடுத்து, ஏன் பிறமொழிச்சொற்களை வலிந்து பேசுகிறீர்கள் ?”.

தமிழ்

சேர் என்பதனை நாற்காலி எனவும், ஃபேனை மின்விசிறி எனவும் கூறலாமல்லவா ?'' என்றார். நம்பி, வெட்கத்துடன் தலைகுனிந்தார்.

### தமிழ்ச்சொல்லறிவோம் !

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுவிட்ச் | – | சொடுக்கி | பிரிஜ் | – | குளிரூட்டும்பெட்டி |
| ஐஸ்வாட்டர் | – | குளிர்நீர் | டீ | – | தேநீர் |
| கூல் ட்ரிங்ஸ் | – | குளிர்சாறுகள் | வாஷிங்மெஷின் | – | வெளுக்கை இயந்திரம் |
| கிரைண்டர் | – | மின்அரைவை | டெலிபோன் | – | தொலைபேசி |

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

பள்ளியில் முதல் பாடவேளை முடிந்து அடுத்த பாடவேளை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பள்ளியை ஆய்வுசெய்யும்பொருட்டுப் பள்ளித்துணை ஆய்வாளர் முன்னறிவிப்பின்றிப் பள்ளிக்கு வருகை புரிந்தார். தலைமையாசிரியரையும் அழைத்துக்கொண்டு முதலில் ஒரு வகுப்புக்குள் நுழைந்தார். ஆசிரியரும் மாணவர்களும் அவருக்கு வணக்கம் கூறினார்கள். ஆய்வாளர், ஆசிரியர் நடத்திக்கொண்டிருந்த பாடத்திலிருந்து மாணவர்களிடம் வினாக்களைக் கேட்டார்.

மாணவர்கள் விடை தெரியாததனால் அமைதியாக இருந்தார்கள். மூன்றாம் வரிசையில் இருந்த சுடரொளி எழுந்து விடைகூறத் தொடங்கினாள். தான் கேட்ட அனைத்து வினாக்களுக்கும் உரிய விடையைக் கூறிய சுடரொளியைப் பாராட்டிய ஆய்வாளர், அடுத்த வகுப்புக்குச் சென்றார். சுடரொளி விடை கூறியதனைக் கேட்ட அனைவரும் வியந்தனர். காரணம், வகுப்பிலேயே அவள்தான் பேசாமடந்தை. "வகுப்பில் நான் எதனைக் கேட்டாலும் பேசாமல் இருப்பாய். புதியவரான ஆய்வாளரிடம் தயக்கமின்றி உன்னால் எவ்வாறு பேசமுடிந்தது ?'' என ஆசிரியர் கேட்டார்.

"எனக்கு விடைதெரிந்தாலும் தவறாக இருக்குமோ என்னும் ஐயத்தினால் விடைகூறத் தயங்குவேன். இன்று யாருமே விடைகூறாததனால், ஆய்வாளர் நம் பள்ளியைப்பற்றித் தவறாக எண்ணிவிடுவாரே என்பதனால், துணிந்து கூறிவிட்டேன்'' என்றாள், சுடரொளி.

"நானும் இந்நாள்வரை உனக்கு விடைதெரியாததனால்தான் பேசாமல் இருக்கிறாய்'' என நினைத்தேன். உன்னையே நீயும் அறிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறாய். உன்னால் முடியும் என அறிந்து செயல்படு'' என ஆசிரியர் ஊக்கப்படுத்தினார்.

1. உங்களுக்கு இதுபோன்ற நிகழ்வு எப்பொழுதாவது நிகழ்ந்திருக்கிறதா ?
2. உங்களிடமுள்ள திறனும் திறனின்மையும் என்னென்ன ?

உன்னையே நீ அறிவாய் – சாக்ரடீஸ்

## மதிப்புக்கல்வி

### கடமை

நீதிபதி பம்மல் சம்பந்தனாரின் துணைவியார் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதனால், அவர் நீதிமன்றத்திற்கு அன்று வரமாட்டார் என்று பலரும் நினைத்தனர்.

ஆனால் பம்மல் சம்பந்தனார், தமது துணைவிக்குச் செய்யவேண்டிய அனைத்துக் காரியங்களையும் செய்துவிட்டுச் சரியாக 11.00 மணிக்கு நீதிமன்றம் வந்தார். அவரைப் பார்த்ததும், அனைவரும் வியப்படைந்தனர்.

"இன்றுகூடவா நீங்கள் வரவேண்டும்?'' என்று மற்றொரு நீதிபதி கேட்டார்.

அதற்கு, "என் வருத்தம் என்னோடுதான் இருத்தல் வேண்டும். இன்று பார்க்கவேண்டிய வழக்கைத் தள்ளிவைத்துவிட்டு மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தரக் கூடாது,'' என்று கூறினார்.

இழப்பிலும் கடமை உணர்வுடன் வாழ்ந்தார், பம்மல் சம்பந்தனார்.

### மொழியாக்கம் செய்க.

Air pollution is high in the urban and industrial centers. It threatens the life of the people and animals. The gases from industrial centers go higher than oxygen in the air and make it polluted. Pollution affects plants, animals and human beings. It causes diseases like asthma and cancer. Children are easily affected.

### இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Bend the tree while it is young.
   ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
2. As is the mother, so is her daughter.
   தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போலச் சேலை.
3. A friend in need is a friend indeed.
   உயிர்காப்பான் தோழன்.
4. A man of courage never wants weapons.
   வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
5. Blood is thicker than water.
   தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.

தமிழ்

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

அறிஞர் அண்ணாவின் சிறுவயதில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. ஒருநாள் இவரின் பெற்றோர் வெளியில் சென்றிருக்க, வீட்டில் பாட்டி மட்டுமே இருந்தார். அப்போது அவர், தம் நண்பர் சிலரை அழைத்துக்கொண்டு, வீட்டின் பின்புறம் சென்றார். அங்கு அனைவரும் சேர்ந்து 'அரிச்சந்திரா' நாடகம் நடத்தத் திட்டமிட்டனர்.

அறிஞர் அண்ணா, அரிச்சந்திரன் வேடம் புனைந்து நடிக்கத் தொடங்கினார். வீட்டின் பின்புறத்திலிருந்து ஏதோ பேரொலியைக் கேட்ட அவர்தம் பாட்டி, என்னவென்று அறிய அங்கு விரைந்து சென்றார். அவரைக் கண்டதும் அண்ணாவின் நண்பர் சிட்டாகப் பறந்துவிட்டனர்; அதனால், நாடகம் இடையிலேயே நின்றது. அண்ணா மட்டும் பாட்டியிடம் தனியாக மாட்டிக் கொண்டார்.

அவர் அண்ணாவிடம், 'இங்கு என்ன நடந்தது ? கூச்சல் ஏன் ஏற்பட்டது ?' என வினவினார். 'ஒன்றுமில்லை' எனக் கூறி, பாட்டியிடமிருந்து அண்ணா தப்பித்துக் கொண்டிருக்கலாம்.

நண்பர் யாரும் அவருடன் இல்லாததனால் அண்ணா கூறுவதனைப் பாட்டியும் நம்பியிருக்கலாம்; ஆனால், 'அரிச்சந்திரன் வேடம் போட்டவராயிற்றே, பாட்டியிடம் எப்படிப் பொய் கூறுவார் ?' அதனால், அண்ணா உண்மையைக் கூறிவிட்டார். 'படிக்கிற பையனுக்கு நாடகம் என்னடா வேண்டியிருக்கு ?' எனக் கூறி, அண்ணாவின் முதுகில் அடித்தார், பாட்டி.

அன்று நாடகம் போட்டதற்காக அடி வாங்கிய அறிஞர் அண்ணாதான் பிற்காலத்தில் ஆசிரியர் கல்கி அவர்களால் 'தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா' எனப் பாராட்டப்பட்டார். ( அயர்லாந்து நாட்டைச் சார்ந்த ஜார்ஜ் பெர்னாட்ஷா புகழ்பெற்ற எழுத்தாளரும் சிறந்த நாடக ஆசிரியரும் ஆவார். )

### வினாக்கள்

1. அறிஞர் அண்ணா, தம் நண்பருடன் வீட்டின் பின்புறம் ஏன் சென்றார் ?
2. நாடகத்தில் அறிஞர் அண்ணா புனைந்த வேடம் என்ன ?
3. நாடகம் இடையில் நிற்கக் காரணம் யாது ?
4. அறிஞர் அண்ணா, பாட்டியிடம் உண்மையை மறைக்காதது, ஏன் ?
5. இவ்வுரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன்பொருள்குறித்து ஐந்து மணித்துளி பேசுக.

## நிலமகளே வெல்வாள்!

நமக்கென்றே இருப்பவளை வாழ்நாள் எல்லாம்
நலிவுறுத்தி வருகின்றோம்; தலை யிடத்துச்
சுமக்கவென மரம்வைத்தோம்; மனைகள் கட்டத்
தூண்வைத்தோம்; கல்வைத்தோம்; காலும் வைத்தோம்;
எமக்கென்ன என்றவள்மேல் உமிழு கின்றோம்;
இரும்பெடுத்தே அவளுடலை அகழு கின்றோம்;
சுமக்கின்றாள்; பொறுக்கின்றாள்; பொறுமை சாலி!
தொழிலாளி போலிருக்கும் திறமை சாலி!

கடல்சுமந்தாள்; மலைசுமந்தாள்; கான்சு மந்தாள்;
கால்நடைகள் பலசுமந்தாள்; மாந்தர் என்ற
உடல்சுமந்தாள்; வயல்சுமந்தாள்; நதிசு மந்தாள்;
ஊர்சுமந்தாள்; நகர்சுமந்தாள்; செடிசு மந்தாள்;
குடல்சுமந்து பெற்றெடுத்த அன்னை இல்லாக்
குலப்பிள்ளை போலாகி நின்றாள்; அந்தோ!
மிடல்சுமந்த அவள்உறுத்துச் சினந்து நின்றால்
மேலாளர் வாழ்வெங்கே? அவளே வெல்வாள்!

– முடியரசன், மனிதனைத் தேடுகின்றேன்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் நிகழ்வை வாய்க்குள் படிக்க.

வறுமையில் வாடிய புலவரொருவர், திருவேங்கடநாதர் என்னும் வள்ளலைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தேடிச் சென்றார். வள்ளல், புலவரை வரவேற்று மகிழ்ந்தார். அவர், புலவரிடம் வினாக்கள் சிலவற்றைக் கேட்டார். வள்ளல் கேட்ட எந்த வினாவுக்கும் விடையளிக்காத புலவர், இறுதியாகத் திருவேங்கடநாதா எனக் கூறினார். புலவர் அவ்வாறு கூறியவுடன், வள்ளல் மிகவும் மகிழ்ந்து புலவருக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கினார். வள்ளல் கேட்ட வினாக்கள்தான் என்ன? அவர் பொன்னும் பொருளும் வாரி வழங்கியது, ஏன்?

| | |
|---|---|
| புலவரே, உம்மிடம் இல்லாதது என்ன? | திரு (செல்வம்) |
| உங்கள் உள்ளம் எப்படி உள்ளது? | வேம் (வேகின்றது) |
| உணவுக்கு என்ன செய்கிறீர்கள்? | கடம் (கடன்பட்டுத்தான்) |
| சுவையற்றது எது? | நா (என் நாக்கு) |
| கொடு என்பதன் வேறு சொல் என்ன? | தா |

தமிழ்

தமிழ்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

கைவேலை, சக்கரம், கெஞ்சினான், குங்குமம், காட்சிக்கூடம், கம்பராமாயணம், சேவடி, சித்திரைத்திங்கள், சொல்லேருழவர், செந்தமிழ்

க – ________ , ________ , ________ , ________ , ________

ச – ________ , ________ , ________ , ________ , ________

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி. திராவிடம் என்னும் சொல் திராவிட நாடு என்னும் பொருளைத் தருவது. திராவிட மொழிகள், திராவிட இனம், திராவிட நாகரிகம் முதலிய சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்துள்ளது எனக் கால்டுவெல், தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவரே திராவிடம் என்னும் சொல்லைப் பயன்பாட்டுக்குக்கொண்டு வந்தார்.

| குறிப்புகளைக்கொண்டு உரைப்பத்தியமைத்தல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு, உரைப்பத்தியமைத்து எழுதுக. பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.



கம்பர்

பிறப்பு – நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறை – தேரழுந்தூர் – பணி – குலோத்துங்கச் சோழனின் அவைப் புலவர் – சிறப்பு – கவிச்சக்ரவர்த்தி, கல்வியில் பெரியவர் கம்பர் – இயற்றிய நூல்கள் – ஏர் எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், கம்பராமாயணம் – ஆதரித்தவர் – திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் – காலம் – கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________

| பாடலில் இடம்பெற்றுள்ள நயங்களை எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் குறட்பாக்களில் இடம்பெற்றுள்ள நயங்களை அட்டவணைப்படுத்துக.

| வ. எண் | குறள் | மோனை | எதுகை | அணி |
|---|---|---|---|---|
| 1. | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை. | | அகழ்வாரைத் இகழ்வார்ப் | உவமையணி |
| 2. | இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை. | | | |
| 3. | ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. | | | |
| 4. | திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து) அறனல்ல செய்யாமை நன்று. | | | |
| 5. | மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல். | | | |

| எழுதுதல் | செயல்பாடு – 8 |
|---|---|

உரையாடலில் உள்ள கணினிப் பயன்பாட்டுச் சொற்களைக் கண்டறிந்து அவற்றுக்கான தமிழ்ச்சொற்களை எழுதுக.

அன்பு : வா கதிர். . . ஏதோ உதவி வேண்டும் என்றாயே ?

கதிர் : ஆமாம், அன்பு. உன் கம்பியூட்டரில் ‘இண்டர்நெட்’ வசதி உள்ளதா ?

அன்பு : ஓ. . . இருக்கிறதே. ஏன், உன் ‘கம்பியூட்டர்’ என்ன ஆனது ?

கதிர் : என்னுடைய ‘மௌஸ்’ கீழே விழுந்து உடைந்துவிட்டது; அதனால், எனக்குத் தேவையான புதுக்கவிதைகளை விரைவாக ‘டவுன்லோட்’ செய்ய முடியவில்லை.

அன்பு : புதுக்கவிதைகளா ? நான் அவற்றை என் ‘பைலில்’ வைத்துள்ளேன், பார்க்கிறாயா ?

கதிர் : அப்படியா, காட்டு.

அன்பு : இந்தக் கவிதைகள் போதுமா, இன்னும் வேண்டுமா ?

கதிர் : இப்போதைக்கு இவை போதும். ‘காபி’ பண்ணித் தருகிறாயா ?

அன்பு : ‘சிடி’யிலா ?

கதிர் : இல்லை, அன்பு. ‘பென் டிரைவி’ல்.

அன்பு : சரி, கொடு.

கதிர் : மிக்க நன்றி, அன்பு.

தமிழ்

| வ. எண் | கணினிப் பயன்பாட்டுச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் | வ. எண் | கணினிப் பயன்பாட்டுச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | கம்பியூட்டர் | கணினி | 5. | | |
| 2. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 4. | | | 8. | | |

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் பாடலடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைகளைக் கண்டறிந்து வகைப்படுத்தி எழுதுக.

1. ‘இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்கு’
2. ‘எஃஃகு கிலங்கிய கையரா யின்னுயிர்’
3. ‘உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்’
4. ‘அழாஅல் தோழி அழுங்குவர் செலவே’
5. ‘உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்’

| உயிரளபெடை | | | ஒற்றளபெடை | |
|---|---|---|---|---|
| செய்யுளிசை | இன்னிசை | சொல்லிசை | ஒற்று அளபெடுத்தல் | ஆய்தம் அளபெடுத்தல் |
| | விழைவதூஉம் | | | |

| விடுகதைக்கு விடைகாணல் | செயல்பாடு – 10 |
|---|---|

விடுகதைகளுக்கான விடையை எழுதுக.

1. ஆற்றைக் கடக்கும்; அக்கரைக்குப் போகாது;
   தண்ணீரைக் கலக்காது; தானும் நனையாது. அஃது என்ன ?

   ______________________

2. ஆயிரம்பேர் அணிவகுப்பர்;
   ஆனாலும் தூசி கிளம்பாது. அவர் யாவர் ?

   ______________________

3. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டுவீடு;
ஓட்டுவீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை;
வெள்ளை மாளிகை உள்ளே குளம். அஃது என்ன?

______________________

4. முன்னும் பின்னும் போவான்; ஆனால், ஒற்றைக் காலில் நிற்பான் அவன் யார்?

______________________

| படைப்பாற்றல் | செயல்பாடு – 11 |
|---|---|

சிறுகதையொன்றின் தொடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, உங்கள் கற்பனைக்கேற்பக் கதையைத் தொடர்ந்து எழுதுக. கதைக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்த கயல்விழி, தன் தந்தையைப் பார்த்ததும் ஆவலுடன் பேசத் தொடங்கினாள்.

'அப்பா, எங்கள் பள்ளியில் இன்று நடைபெற்ற பேச்சுப்போட்டியில் ........

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுக்க. 2 × 1 = 2

அ. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர் ______________ .

1. இளம்பூரணர் 2. நச்சர்
3. பேராசிரியர் 4. ந. மு. வேங்கடசாமி

ஆ. தென்திராவிட மொழிகளுள் ஒன்று ______________ .

1. தெலுங்கு 2. மால்தோ
3. தமிழ் 4. உருது

2. கோடிட்ட இடத்தை நிரப்புக. 3 × 1 = 3

அ. மிகப் பழைமையான தமிழ் இலக்கண நூல் __________ .

ஆ. குலோத்துங்கச் சோழனின் அவைப்புலவர் __________ .

இ. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை __________ .

3. பாடலடிகளில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக. 5 × 1 = 5

உலகம் யாவையும் தாமுல வாக்கலும்
நிலைபெ ருத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரன் நாங்களே.

# சொல்

## (பகாப்பதம், பகுபதம்)

ஓர் எழுத்தானது தனித்தேனும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது சொல் எனப்படும்.

பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள். பதம் என்பது பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

### பகாப்பதம்

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நாலுவகைப்படும்.

1. பெயர்ப் பகாப்பதம் – மரம், நாய், நீர்
2. வினைப் பகாப்பதம் – உண், காண், எடு
3. இடைப் பகாப்பதம் – தில், மன், பிற
4. உரிப் பகாப்பதம் – சால, நனி, கடி, உறு

( இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும். )

### பகுபதம்

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும். (பகுபதம் – பிரிக்கவியலும் பதம்).

பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

பெயர்ப்பகுபதம் : பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம்.

(எ.கா.) 1. பொன்னன் = பொன் + ன் + அன் ( ன் – இரட்டித்தது )
பொன் என்னும் பொருட்பெயர் அடியாகப் பிறந்தது.

2. ஊரன் = ஊர் + அன்
ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப் பிறந்தது.

3. ஆதிரையான் = ஆதிரை + ய் +ஆன் ( ய் – உடம்படுமெய் )
ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது.

4. கண்ணன் = கண் + ண் + அன் ( ண் – இரட்டித்தது )
கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது.

5. கரியன் = கருமை + அன்

கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது.

6. நடிகன் = நடி + க் +அன் ( க் – பெயர் இடைநிலை )

நடித்தல் என்னும் தொழிற்பெயர் அடியாகப் பிறந்தது.

வினைப்பகுபதம் : பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று, வினைப்பகுபதம் எனப்படும்.

செய்தான் = செய் + த் + ஆன்

செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும், த் என்னும் இடைநிலை இறந்தகாலத்தையும், ஆன் என்னும் விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

## பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

1. பகுதி : பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் பகுதி என்பர். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும்.

| | | |
|---|---|---|
| படித்தான் | – | படி என்பது பகுதி |
| ஓடினான் | – | ஓடு என்பது பகுதி |
| வந்தான் | – | வா என்பது பகுதி |

2. விகுதி : பகுபதத்தில் இறுதியில் நிற்பது விகுதி எனப்படும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நடந்தான் | – | ஆன் | – | ஆண்பால் விகுதி |
| நடந்தாள் | – | ஆள் | – | பெண்பால் விகுதி |
| நடந்தனர் | – | அர் | – | பலர்பால் விகுதி |
| நடந்தது | – | து | – | ஒன்றன்பால் விகுதி |
| நடந்தன | – | அ | – | பலவின்பால் விகுதி |

3. இடைநிலை : பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும். இடைநிலை காலம் காட்டுவதனால் காலங்காட்டும் இடைநிலை எனவும் கூறுவர்.

### அ) நிகழ்கால இடைநிலைகள்

கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்கால இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்கிறான் | – | கிறு | = | உண் + கிறு + ஆன் |
| உண்கின்றான் | – | கின்று | = | உண் + கின்று + ஆன் |
| உண்ணாநின்றான் | – | ஆநின்று | = | உண் + ஆநின்று + ஆன் |

தமிழ்

ஆ) இறந்தகால இடைநிலைகள்

த், ட், ற், இன் என்பன இறந்தகால இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பார்த்தான் | – | த் | = | பார் + த் + த் + ஆன் |
| உண்டான் | – | ட் | = | உண் + ட் + ஆன் |
| வென்றான் | – | ற் | = | வெல் (ன்) + ற் + ஆன் |
| பாடினான் | – | இன் | = | பாடு + இன் + ஆன் |

இ) எதிர்கால இடைநிலைகள்

ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்பான் | – | ப் | = | உண் + ப் + ஆன் |
| வருவான் | – | வ் | = | வா (வரு) + வ் + ஆன் |

ஈ) எதிர்மறை இடைநிலைகள்

இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்டிலன் | – | இல் | = | உண் + ட் + இல் + அன் |
| காணலன் | – | அல் | = | காண் + அல் + அன் |
| பாரான் | – | ஆ | = | பார் + ஆ + ஆன் |

4. சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி.

இது, சிலவிடங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் வரும்.

| | | |
|---|---|---|
| பார்க்கிறான் | = | பார் + க் + கிறு + ஆன் |
| படித்தான் | = | படி + த் + த் + ஆன் |

5. சாரியை

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது சாரியை எனப்படும். இஃது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

உண்டனன் = உண் + ட் + அன் + அன்

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம் முதலியன சாரியைகள்.

6. விகாரம்

பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.

வந்தான் என்னும் சொல்லில் உள்ள வா என்னும் பகுதி வ எனக் குறைந்து விகாரம் ஆயிற்று.

பயிற்சி

1. பின்வரும் சொற்களின் பகுதியை எடுத்தெழுதுக.

அ) கண்டான் ஆ) கேட்டான் இ) வந்தான் ஈ) எழுதினான்

2. தொடர்பில்லாத சொல்லை வட்டமிடுக.

அ) பார்த்தான், சொன்னான், பெற்றான், நடப்பான்.

ஆ) பாடுகிறாள், நடித்தார், நடிக்கின்றார், சிரிக்கின்றாள்.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. கண்ணன் என்பது ____________ பகுபதம் ஆகும்.

அ) பொருட்பெயர் ஆ) பண்புப்பெயர் இ) சினைப்பெயர்

2. இடைச்சொற்கள் ____________ பதம் ஆகும்.

அ) பகு ஆ) பகா இ) விளி

3. மதுரையான் ____________ பெயர்ப்பகுபதம் ஆகும்.

அ) பொருள் ஆ) சினை இ) இடம்

4. பகுபதத்தில் குறைந்தளவு இருக்கவேண்டிய உறுப்புகள் ____________ .

அ) பகுதி, சந்தி ஆ) இடைநிலை, சாரியை இ) பகுதி, விகுதி

5. ஏவல் வினையாக அமைவது ____________ ஆகும்.

அ) பெயர்ப்பகுபதம் ஆ) வினைப்பகுபதம் இ) எதுவுமில்லை

6. ‘இல்’ என்னும் எதிர்மறை இடைநிலை அமைந்துள்ள வினைச்சொல்____________

அ) கேளான் ஆ) வாரான் இ) கண்டிலன்

7. செய்தான் – இச்சொல்லில் அமைந்துள்ள இடைநிலை____________ .

அ) இன் ஆ) த் இ) ட்

2. பொருத்துக.

அ) பொருட்பெயர்ப் பகுபதம் – சென்னையான்

இடப்பெயர்ப் பகுபதம் – மூக்கன்

காலப்பெயர்ப் பகுபதம் – பொன்னன்

சினைப்பெயர்ப் பகுபதம் – சித்திரையான்

தமிழ்

தமிழ்

# ஆகுபெயர்

## எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்

இந்தியா மிகப்பெரிய நாடு.

மட்டைப்பந்தில் இந்தியா வென்றது.

இவ்விரு தொடர்களிலும் அமைந்துள்ள இந்தியா என்னும் சொல்லை உற்றுநோக்குங்கள். முதல் தொடரில் உள்ள இந்தியா இடத்தைக் குறிக்கின்றது. இரண்டாம் தொடரில் உள்ள இந்தியா, இந்திய வீரர்களைக் குறிக்கின்றது. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

### ஆகுபெயர் வகைகள்

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவற்றுள் பொருளாகுபெயர் முதலான ஆறு ஆகுபெயரை எட்டாம் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள். பிற ஆகுபெயர்களை இங்குக் கற்கவிருக்கிறீர்கள். அளவைக் குறிக்கும் பெயர்களை அளவைப் பெயர்கள் என்பர். எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என அளவைப்பெயர்கள் நால்வகைப்படும்.

1. எண்ணல் அளவை ஆகுபெயர் : ஒன்று பெற்றால் ஒளி மயம்.

இத்தொடரில் ஒன்று என்னும் எண்ணுப்பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்குப் பெயராகி வந்தது. இஃது எண்ணல் அளவை ஆகுபெயர்.

2. எடுத்தல் அளவை ஆகுபெயர் : ஐந்து கிலோ என்ன விலை ?

இத்தொடரில் கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர், அவ்வளவைக் குறிக்காமல், அவ்வளவுடைய பொருளுக்கு ( அரிசி, பருப்பு.... ) ஆகிவந்தது. எனவே, இஃது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

3. முகத்தல் அளவை ஆகுபெயர் : நாலுலிட்டர் தேவை.

இத்தொடரில் லிட்டர் என்னும் முகத்தல் அளவைப்பெயர், அவ்வளவைக் குறிக்கவில்லை. அவ்வளவுடைய நெய், எண்ணெய், பால் முதலியவற்றுள் ஒன்றுக்கு ஆகிவந்தது. எனவே, இது முகத்தல் அளவை ஆகுபெயர்.

4. நீட்டல் அளவை ஆகுபெயர் : மூன்று மீட்டர் கொடு.

இத்தொடரில், மூன்று மீட்டர் என்பது, அவ்வளவுடைய அளவுகோலைக் குறிக்காது, அதனால் நீட்டி அளக்கப்பெறும் துணிக்கு ஆகி வந்தது. எனவே, இது நீட்டல் அளவை ஆகுபெயர்.

குறிப்பு : “ஒன்றுகொடு, நாலுகிலோ தா, இரண்டு லிட்டர் தேவை, ஐந்து முழம் வேண்டும்”

என்பனபோல வரும் அளவுத்தொடர்கள் ஆகுபெயராம். 'ஒரு மாம்பழம் கொடு, இரண்டு கிலோ நெய் வேண்டும்' என்பன ஆகுபெயராகா.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. – நன்னூல், 290

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களிலுள்ள ஆகுபெயர்களை வட்டமிடுக.

அ) இரண்டு மீட்டர் போதுமா ?

ஆ) ஐந்து லிட்டர் என்ன விலை ?

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

'நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி' – இத்தொடர் ____________ ஆகும்.

அ) முகத்தலளவை ஆகுபெயர் இ) நீட்டலளவை ஆகுபெயர்

ஆ) எண்ணலளவை ஆகுபெயர்

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

'மூன்று மீட்டர் தா' என்பது ____________ ஆகுபெயராகும்.

**3. பொருத்துக.**

1. முகத்தல் அளவை ஆகுபெயர் – தலைக்கு ஒரு பழம் கொடு.
2. எடுத்தல் அளவை ஆகுபெயர் – இரண்டு லிட்டர் தா.
3. எண்ணல் அளவை ஆகுபெயர் – ஆறு முழம் கொடு.
4. நீட்டல் அளவை ஆகுபெயர் – பத்துக் கிலோ கொடு.

### ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.
2. அளவைப் பெயர்கள் யாவை ?
3. நீட்டலளவை ஆகுபெயருக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
4. முகத்தல் அளவை ஆகுபெயர் என்றால் என்ன ?

தமிழ்

# பொருள்கோள்

## ஆற்றுநீர்ப்பொருள்கோள், மொழிமாற்றுப்பொருள்கோள், நிரல்நிறைப்பொருள்கோள்

ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையைப் பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர்.

பொருள்கோள் எண்வகைப்படும்.

1. ஆற்றுநீர்ப்பொருள்கோள்
2. மொழிமாற்றுப்பொருள்கோள்
3. நிரல்நிறைப்பொருள்கோள்
4. விற்பூட்டுப்பொருள்கோள்
5. தாப்பிசைப்பொருள்கோள்
6. அளைமறிபாப்புப்பொருள்கோள்
7. கொண்டுகூட்டுப்பொருள்கோள்
8. அடிமறிமாற்றுப்பொருள்கோள்

### 1. ஆற்றுநீர்ப்பொருள்கோள்

இடையறாது செல்லும் ஆற்றுநீரைப்போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள்கொள்வது ஆற்றுநீர்ப்பொருள்கோளாகும்.

(எ.கா.) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். – குறள், 6

பொறிவாயில் ஐந்தவித்தான் – மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகக்கொண்ட ஐவகை ஆசைகளையும்விட்ட இறைவனது; பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் – மெய்யான ஒழுக்க நெறியில் நின்றவர்; நீடு வாழ்வார் – வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வர். இக்குறட்பாவில் பொறிவாயில் எனத் தொடங்கி, நீடுவாழ்வார் என்பது வரையிலுள்ள சொற்கள் முன்பின்னாக மாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக அமைந்து பொருள்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. ஆதலின் இப்பாடல், ஆற்றுநீர்ப்பொருள்கோள் ஆயிற்று.

### 2. மொழிமாற்றுப்பொருள்கோள்

ஓரடியுள் உள்ள சொற்களை, அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப்பொருள்கோள் என வழங்கப்படும்.

(எ.கா.) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் தெளிவு இருக்காது. இதனைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு (முயல்) நீத்து என அந்தந்த அடியிலுள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

### 3. நிரல்நிறைப்பொருள்கோள்

செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது நிரல்நிறைப்பொருள்கோள் ஆகும்.

(எ.கா.) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவில் அன்புக்குப் பண்பும், அறத்துக்குப் பயனும் நிரல்நிறையாக வந்து அமைந்துள்ளதனால், இப்பாடல் நிரல்நிறைப்பொருள்கோள் ஆயிற்று.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பொருள்கோள் ____________ வகைப்படும்.
2. பாடலின் சொற்கள் முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது ____________ .
3. ‘சுரையாழ அம்மி மிதப்ப’ என்னும் செய்யுள் அடியில் ____________ பயின்று வந்துள்ளது.

### ஆ) குறுவினாக்கள்

1. பொருள்கோள் என்றால் என்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?
2. ஆற்றுநீர்ப்பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
3. மொழிமாற்றுப்பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
4. நிரல்நிறைப்பொருள்கோளுக்குச் சான்று தருக.

## வகுப்பறைத்திறன்கள்

### படைப்பாற்றல்

இயற்கை – இத்தலைப்பில் பாடல் ஒன்று எழுதுக.

____________________

____________________

____________________

____________________

### பேசுதல் திறன்

எனக்குப் பிடித்த கவிஞர் – என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.

தமிழ்

## நயம் பாராட்டுதல்

பாடலைப் படித்து அதன் நயம் பாராட்டுக.

இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்
கருதிக் காய்வனோ என்றயிர்த்து இருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாத் தம்பெயர் வியம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

### பொருள் நயம்

இருளுக்குப் பகைவன் கதிரவன். அவன் தம்மையும் இருளென எண்ணிக் காய்ந்துவிடுவானோ எனக் காகங்கள் ஐயமுற்றுச் சிறகுகளைப் படபடவெனத் தம் மார்பில் படுமாறு அடித்துக்கொண்டு கா கா எனக் கரைந்தபடி திசையெங்கும் பறந்தோடின. (வாயசம் – காகம்; இரவி – சூரியன்; சிறை – இறக்கை)

### அணி நயம்

காலைவேளையில் காகங்கள் இரைதேடப் பறந்துசெல்வது இயல்பான நிகழ்வு. கதிரவன் இருளுக்குப் பகைவன்; ஆதலால், தாமும் கரிய நிறத்துடன் இருப்பதனால் இருள் என எண்ணித் தம்மையும் காய்ந்துவிடுவானோ என ஐயமுற்றுப் பறந்தன எனக் கவிஞர், தம் கற்பனையை அதன்மேல் ஏற்றிக் கூறுகிறார். மேலும், காகங்கள் சிறகடிக்கும் இயல்பான செயலையும் மார்பில் அடித்துக்கொள்வதாகக் கூறுவதும் கவிஞரின் கற்பனையே. இவ்வாறு, இப்பாடலில் தற்குறிப்பேற்ற அணி சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

### தொடை நயம் : மோனைத்தொடை

இருட்பகை இரவி இருளென
கருதிக் காய்வனோ, கையான்... கலங்கி

இவ்வடிகளில் சீர்களின் முதல் எழுத்து ஒன்றிச் சீர்மோனைத்தொடை அமைந்துள்ளது. அடிஎதுகைத்தொடை: இருட்–கருதி என இரண்டாமெழுத்து ஒன்றி அடிஎதுகையாகவும் பதறி–சிதறி எனச் சீரெதுகையாகவும் எதுகைத்தொடை அமைந்துள்ளது.

பயிற்சி : பாடலைப் படித்து அதன் நயம் பாராட்டுக.

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும்–சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.

– காளமேகப் புலவர்

## மொழித்திறன் பயிற்சி

### அ) வேர்ச்சொற்களை வினைமுற்றாக்குக.

1. நான் நாளை சந்தைக்குப் ____ ( போ )
2. மாணவர்கள் பள்ளியில் கல்வி ____ ( கல் )
3. யானை சினங்கொண்டு ____ ( பிளிறு )
4. தேசிங்குராசா பாராசாரிக் குதிரையை ____ ( அடக்கு )
5. இந்தியஅணி நேற்றைய கால்பந்துப்போட்டியில் வெற்றி ____ ( பெறு )

### ஆ) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைச் சொற்றொடருக்கேற்ப மாற்றுக.

1. அவர் ____________ வந்தும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை. ( விரைவு )
2. மாணவர்களுக்குப் பரிசளிக்குமாறு ____________ க்கேட்டுக்கொள்கிறேன். (தலைவர்)
3. குழந்தைகள் ____________ மரியாதை தருதல் வேண்டும். ( பெற்றோர் )
4. அடுப்பு நன்றாக ____________ விறகு காய்ந்திருத்தல் வேண்டும். ( எரி )
5. எதிலும் ____________ க்கடைப்பிடித்தல் வேண்டும். ( எளிமை )

### இ) பெயரெச்சத்தை வினைமுற்றாக மாற்றி எழுதுக.

(எ.கா.) வனப்பு மிக்க சோலை. சோலை வனப்பு மிக்கது.

1. துள்ளி ஓடிய புள்ளிமான். ____________________
2. மிகவும் இனித்த பழம். ____________________
3. பாடம் படித்த வைகறைச்செல்வி. ____________________
4. நீதி தவறாத மன்னன். ____________________
5. நேற்றுப் பெய்த மழை. ____________________

### ஈ) வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுக.

(எ.கா.) நேற்று மதியழகன் வந்தான். நேற்று வந்த மதியழகன்.

1. எழிலன் படம் வரைந்தான். ____________________
2. அப்பா சினம் கொண்டார். ____________________
3. எழில் பாம்பைக் கண்டாள். ____________________
4. குதிரை விரைவாக ஓடியது. ____________________
5. குரங்குகள் தாவிக் குதித்தன. ____________________

### உ) மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.

1. கிழக்கு திசைக்குப் பெயர் உதிக்கின்ற ஞாயிறு. ____________________
2. பிறப்பிடம் துன்பத்துக்கும் சோம்பலே தீமைக்கும். ____________________
3. பொன்செய்யும் மருந்து மனமே என்ற போதும். ____________________

தமிழ்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

தமிழ்

## தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | ௫௧ | 61 | ௬௧ | 71 | ௭௧ | 81 | ௮௧ | 91 | ௯௧ |
| 52 | ௫௨ | 62 | ௬௨ | 72 | ௭௨ | 82 | ௮௨ | 92 | ௯௨ |
| 53 | ௫௩ | 63 | ௬௩ | 73 | ௭௩ | 83 | ௮௩ | 93 | ௯௩ |
| 54 | ௫௪ | 64 | ௬௪ | 74 | ௭௪ | 84 | ௮௪ | 94 | ௯௪ |
| 55 | ௫௫ | 65 | ௬௫ | 75 | ௭௫ | 85 | ௮௫ | 95 | ௯௫ |
| 56 | ௫௬ | 66 | ௬௬ | 76 | ௭௬ | 86 | ௮௬ | 96 | ௯௬ |
| 57 | ௫௭ | 67 | ௬௭ | 77 | ௭௭ | 87 | ௮௭ | 97 | ௯௭ |
| 58 | ௫௮ | 68 | ௬௮ | 78 | ௭௮ | 88 | ௮௮ | 98 | ௯௮ |
| 59 | ௫௯ | 69 | ௬௯ | 79 | ௭௯ | 89 | ௮௯ | 99 | ௯௯ |
| 60 | ௬௦ | 70 | ௭௦ | 80 | ௮௦ | 90 | ௯௦ | 100 | ௧௦௦ |

## பயிற்சி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | | 61 | | 71 | | 81 | | 91 | |
| 52 | | 62 | | 72 | | 82 | | 92 | |
| 53 | | 63 | | 73 | | 83 | | 93 | |
| 54 | | 64 | | 74 | | 84 | | 94 | |
| 55 | | 65 | | 75 | | 85 | | 95 | |
| 56 | | 66 | | 76 | | 86 | | 96 | |
| 57 | | 67 | | 77 | | 87 | | 97 | |
| 58 | | 68 | | 78 | | 88 | | 98 | |
| 59 | | 69 | | 79 | | 89 | | 99 | |
| 60 | | 70 | | 80 | | 90 | | 100 | |

## விடுபட்ட தமிழெண்களை நிரப்புக.

1. ௫௧, _____, ௫௩, _____, ௫௫, _____, ௫௭, _____, _____, _____.
2. ௯௧, ௯௨, _____, _____, _____, ௯௬, _____, _____, ௯௯, _____.

கட்டுரைப் பயிற்சி: காலத்தை வெல்லும் கணினி

கடிதம் எழுதுதல் பயிற்சி : மாதிரிக் கடிதம்

தெரு மின்விளக்குப் பழுது நீக்கவேண்டி மின்வாரியச் செயற்பொறியாளருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

அனுப்புநர்

இராச. தமிழ்ச்செல்வன்,
செயலர்,
கபிலர் நகர் மக்கள் மன்றம்,
கபிலர் நகர்,
மதுரை – 625 002.

பெறுநர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
மதுரை – 625 002.

மதிப்புக்குரியீர்,

பொருள் : கபிலர் நகர்ப் பகுதியில் மின்விளக்குப் பழுது நீக்க வேண்டுதல் – சார்பாக.

----*----

கபிலர் நகர்ப் பகுதியில் கடந்த இரு மாதங்களாகத் தெருவிளக்குகள் எரியவில்லை. இரவு நேரத்தில் இப்பகுதி இருள்சூழ்ந்து காணப்படுகிறது. அதனைப் பயன்படுத்திச் சமூகத்துக்கு எதிரான குற்றங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. அதனால், இப்பகுதி மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே, தெரு மின்விளக்குகளைப் பழுதுநீக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, தங்கள் உண்மையுள்ள,

14. 04. 2013. இராச. தமிழ்ச்செல்வன்

ஊர்மக்கள் கையொப்பம்

1.

2.

3.

உறைமேல் முகவரி:

பெறுநர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
மதுரை 625 002.

தமிழ்

குறிப்பு : ( கடிதம் எழுதும்போது எழுதுவோர் முகவரி, நாள், இடம், விளித்தல் முறை, கடிதப்பொருள் (அ) செய்தி, கையொப்பம், பெறுநர் முகவரி இவற்றைத் தவிராமல் எழுதுதல் வேண்டும்.)

பயிற்சி

1. குடிநீர்வசதி வேண்டிக் குடிநீர்வாரியச் செயற்பொறியாளருக்கு
2. சாலைவசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு
3. நூலகம் அமைத்துத்தர மாவட்ட ஆட்சியருக்கு
4. சுற்றுச்சூழலைக் கெடுக்கும் தொழிற்சாலை வேண்டாவென மாவட்ட ஆட்சியருக்கு

## பண்பு

### பெற்றோரை மதித்தலும் உதவுதலும்

முகிலனும்எழிலனும்படித்துக்கொண்டிருந்தனர். தாயார்குழலிசமைத்துக்கொண்டிருந்தார். அப்போது அழைப்புமணி ஒலித்தது.

“முகிலா! யார் வந்திருக்கிறார், பார்”, என்றார் குழலி. “போம்மா, நான் படித்துக் கொண்டிருக்கிறேன்; என்னால் முடியாது” எனக் கூறிவிட்டுப் படிப்பதனைத் தொடர்ந்தான். இஃது அவனுக்குப் புதிதன்று.

அம்மாவோ அப்பாவோ எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் அவனுடைய உடனடி பதில் என்னால் முடியாது என்பதுதான். அதற்காக ஏதோ ஒரு காரணம் சொல்லி, அவ்வேலையைத் தட்டிக்கழிப்பான்; ஏதாவது சொன்னால் எதிர்த்துப் பேசுவான்.

ஆனால், எழிலன் பெற்றோர்க்குத் தேவையான உதவிகள் செய்வான். முகிலனின் இயல்பை அறிந்த எழிலன் எழுந்துசென்று கதவைத் திறந்தான். அலுவலகத்திலிருந்து, அப்பா வந்திருந்தார். “அம்மா! அப்பா வந்துவிட்டார்” என உரக்கக் கூறிவிட்டு அறைக்குள் சென்றான்.

1. முகிலனின் பழக்கம் முறையானதுதானா? காரணம் கூறுக.
2. பெற்றோரை எதிர்த்துப் பேசும் பழக்கம் உள்ளவன் முகிலன் – இவனைப்பற்றி நும் கருத்தை எழுதுக.
3. நீ, உன் பெற்றோரிடம் எவ்விதம் நடந்துகொள்கிறாய்?
4. உன் பெற்றோருக்கு நீ செய்யும் உதவிகள் எவை?
5. எழிலன் படித்துக்கொண்டிருப்பதனை விட்டுவிட்டுக் கதவைத் திறந்தது முறைதானா?

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுத்தல் திறன்

ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் வெற்றிச்செல்வன் விளையாட்டிலும் சிறந்து விளங்கினான். அவனுக்குத் தேர்வு நெருங்கிக்கொண்டிருக்கிறது.

ஒருநாள் உடற்கல்வி ஆசிரியர் அவனை அழைத்து, "மகிழ்ச்சியான செய்தி வெற்றிச்செல்வா! அடுத்தவாரம் பள்ளி மாணவர்களுக்கு இடையே புதுதில்லியில் தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது.

தமிழகத்தின் சார்பாக நம் பள்ளியிலிருந்து நீ தேர்வுசெய்யப்பட்டிருக்கிறாய். அதற்கு நீ புதுதில்லிக்குச் செல்லவேண்டும். உன் பெற்றோரிடம் கூறிவிடு" என்றார்.

அவன் பெற்றோர், "அதெல்லாம் ஒன்றும் வேண்டா; படிப்பதுதான் முக்கியம். ஏதோ பள்ளியில் விளையாடுகிறாய், போனால் போகட்டும் என்றிருந்தால், தில்லிக்குப் போகிறானாம். அவ்வளவு தொலைவு உன்னைத் தனியாக அனுப்பமுடியாது. எங்களாலும் துணைக்கு வரவியலாது எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

ஆசிரியர் இவ்வாய்ப்புக் கிடைத்தற்கரியது என்கிறார்.

பெற்றோர் வேண்டவே வேண்டா என்கின்றனர்.

வெற்றிச்செல்வனின் எதிர்காலம் சிறக்க, நீங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடி நல்லதொரு முடிவெடுங்கள்.

## மதிப்புக்கல்வி

### காலந்தவிராமை

அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த வாஷிங்டன் எப்போதும் காலம் கருதிச் செயல்படுவார்.

நேரத்தை வீணாக்குவது அவருக்குப் பிடிக்காது.

எந்த ஒரு விழாவாக இருந்தாலும், குறித்த நேரத்துக்கு முன்பே சென்று விடுவார்.

வழக்கம்போல ஒருநாள் நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஆனால், அவருடைய தனிச்செயலாளர் இன்னும் வரவில்லை.

சில நிமிடங்களுக்குப் பிறகு பரபரப்புடன் வந்த செயலாளர், "ஐயா என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய கடிகாரம் மெதுவாக ஓடுவதனால், வருவதற்குச் சிறிது நேரமாகி விட்டது" என்றார்.

வாஷிங்டன் தம்செயலாளரைப் பார்த்து, "ஒன்று உங்கள் கடிகாரத்தை மாற்றிவிடுங்கள் அல்லது நான் உங்களை மாற்ற வேண்டியிருக்கும்," என்றார்.

தமிழ்

தமிழ்

## மொழியாக்கம் செய்க.

Asoka was one of the best kings in the world's history. He hated war. His reign was a reign of peace. He became a Buddhist and sent out missionaries all over India. His aim was to get 'Darma' into the hearts of all his people.

## இணையான தமிழ்ப்பழமொழியை அறிக.

1. Crying child will get milk.
   அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. Make hay while the sun shines.
   காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
3. The childhood shows the man.
   விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
4. All is well that ends well.
   முதற்கோணல் முற்றிலும் கோணல்.
5. A Good marksman may miss.
   ஆனைக்கும் அடி சறுக்கும்.

### அறிந்துகொள்க.

**முதலான, முதலிய, ஆகிய – இச்சொற்களின் பயன்பாடு**

ஒரு தொகுப்பில் உள்ளவற்றைச் சுட்டும்போது முதன்மையானதனை மட்டும் சுட்டி, அதனோடு தொடர்புடைய பிறவற்றைச் சுட்டாதபோது 'முதலான' (அது தொடங்கி) என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அனைத்தையும் சுட்டாது, அதனோடு தொடர்புடைய சிலவற்றையோ பலவற்றையோ மட்டும் சுட்டும்போது 'முதலிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு தொகுப்பில் உள்ளவற்றில் அதனோடு தொடர்புடைய அனைத்தையும் முழுமையாகச் சுட்டும்போது 'ஆகிய' என்னும் சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(எ.கா.)

1. நாம் ஒழுக்கத்தில் சிறந்து விளங்க திருக்குறள் முதலான அறநூல்களைக் கற்றல் வேண்டும்.
2. நாம் பண்பாட்டில் சிறந்து விளங்க நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய எட்டுத்தொகை நூல்களைக் கற்றல் வேண்டும்.
3. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழைப் போற்றி வளர்த்தல் வேண்டும்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

கீழுள்ள உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

பதினான்கு வயது சிறுவன், ஏரிக்கரையில் உள்ள வேப்பமரத்தின் நிழலில் உட்கார்ந்து, நீரில் மீன்குஞ்சு துள்ளிக்குதித்து நீந்திச் செல்வதனையும், அது நீருக்குள் தலைகீழாகச் சென்று மறைவதனையும் காண்கிறான். இக்காட்சியைக் கண்டு உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைச் சிறுவன் கவிதையாக எழுதுகிறான்.

"ஓடிப்போ ஓடிப்போ கெண்டைச் குஞ்சே – கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
தூண்டில் காரன் வரும் நேரமாச்சு – ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே".

இதுவே அச்சிறுவனின் முதற்கவிதை. அச்சிறுவன்தான் இன்றைய தலைமுறையின் 'மக்கள் கவிஞர்' எனப் போற்றப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் ஆவார்.

பாவேந்தர் பாரதிதாசனிடம் முறையாகப் பாடம் கேட்ட இவர், பாடல் இயற்றும் ஆற்றலைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டார். 1954ஆம் ஆண்டில் 'படித்த பெண்' என்னும் திரைப்படத்துக்கு முதன்முறையாகப் பாடல் எழுதினார்.

இவர் பாடிய,

"தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது"

என்னும் பாடல் வரிகளைக் கேட்ட தோழர் ஜீவானந்தம், 'நீ மீண்டும் தோன்றிய பாரதியடா' எனக் கல்யாணசுந்தரத்தைப் பாராட்டினார்.

வினாக்கள் :

1. கல்யாணசுந்தரம் எந்த வயதில் தன் முதற்கவிதையை இயற்றினார்?
2. கல்யாணசுந்தரத்துக்கு வழங்கப்படும் அடைமொழி என்ன?
3. கல்யாணசுந்தரம் யாரிடம் பாடம் கேட்டார்?
4. கல்யாணசுந்தரத்தைத் தோழர் ஜீவானந்தம் எவ்வாறு பாராட்டினார்?
5. கல்யாணசுந்தரத்தின் சொந்த ஊர் எது?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
| --- | --- |

கவிஞர் கண்ணதாசனுடன் நேர்காணல் நிகழ்த்துவது போன்ற உரையாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனை வகுப்பில் பேசுக.

**மாணவர்:** ஐயா. . . வணக்கம். தங்களை நேரில் கண்டு உரையாடுவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

**கண்ணதாசன்:** வணக்கம், தம்பி. எனக்கும் உங்களைப் போன்ற மாணவர்களுடன் பேசுவது என்றால் மகிழ்ச்சிதான். அப்படிப் பேசும்போது எனக்கும் என் பள்ளிக்காலம் நினைவுக்கு வந்துவிடுகிறது.

தமிழ்

தமிழ்

மாணவர்: அப்படியா!. . . தங்கள் பள்ளி வாழ்க்கையைப்பற்றிக் கூறுங்கள்.

கண்ணதாசன்: எங்கள் ஊரின் ஒரு சந்திலே ஏட்டுப்பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. நாலுவயதில் அப்பள்ளியில்தான் என் தொடக்கக்கல்வி தொடங்கியது. அடுத்து, ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றில் படித்தேன். அங்குப் பள்ளிக் கட்டணம் மூன்று ரூபாய். அந்தப்பணத்தைக் கட்டமுடியாமல் பலமுறை வெளியேஅனுப்பப்பட்டேன்; இருப்பினும், ஏழாம்வகுப்புவரை அப்பள்ளியில் படித்தேன்.

மாணவர்: பிறகு. . .

கண்ணதாசன்: பிறகு, அமராவதிப் புதூர் குருகுலத்தில் உள்ள ஓர் உண்டி உறைவிடப்பள்ளியில், ஏழாம் வகுப்புவரை படித்த என்னை, ஐந்தாம் வகுப்பில்தான் சேர்த்துக் கொண்டார்கள். அப்பள்ளியில் என் படிப்புத் தொடர்ந்தது.

மாணவர்: ஐயா!. . . தங்களுக்குப் பாடல் எழுதும் ஆர்வம் எப்போது தோன்றியது என்பதுபற்றிக் கூறுங்கள்.

கண்ணதாசன்: எழுதுவதற்கு முன்னால், வானொலி கேட்பதிலும் நூல்களைப் படிப்பதிலும்தான் எனக்கு ஆர்வம் மிகுதி. வானொலியில் பாடல்களைக் கேட்டுக்கேட்டே, அவற்றைப் பாடவும் நான் கற்றுக்கொண்டேன்; இராகங்களையும் தெரிந்துகொண்டேன்.

மாணவர்: தங்களுக்கு நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிகுதி எனக் கூறினீர்களே, அதனைப்பற்றி.....

கண்ணதாசன்: ஆமாம், தம்பி! பத்துப் பன்னிரண்டு வயதில் நாவல் படிப்பதில் எனக்குக் கொள்ளை ஆசை. சரத்பாபுவின் கதைகளையும் பங்கிம்பாபுவின் கதைகளையும் விரும்பிப் படிப்பேன்.

மாணவர்: எந்த வயதில் பாடல் எழுதினீர்கள்?

கண்ணதாசன்: பன்னிரண்டு வயதிலேயே எனக்குள் எழுதும் ஆற்றல் இருப்பதனை உணர்ந்தேன்.

மாணவர்: தாங்கள் அந்த வயதில் எழுதிய பாடலும் எழுதிய இடமும் நினைவில் உள்ளதா?

கண்ணதாசன்: எங்கள் ஊர் ஊருணிக்கரையில் உட்கார்ந்துதான் பாடல் எழுதுவேன்.

“வீணா கானம் விடியுமுன் கேட்டது
கர்ணா மிர்தம் காதுக்கு இனிமை
தூக்கம் கலைந்தது துள்ளி எழுந்தேன்
படுக்கையில் இருந்தே பருகினேன் அமுதம்”
இந்த நாலுவரிதான் நினைவில் உள்ளது, தம்பி.

மாணவர்: தமிழ்க்கவிதை உலகில் மாபெரும் மன்னர் நீங்கள்! தங்களைப்போல் எங்களுக்கும் பாடல் எழுத ஆவல். வழிகாட்டுவீர்களா?

கண்ணதாசன்: தம்பி. . . இன்று நம்மிடையே நூல்களைப் படிக்கும் பழக்கம் குறைந்துகொண்டே வருகிறது. நேரத்தை வீணாக்காமல் உங்களால் முடிந்தவரை நல்ல நல்ல நூல்களைப் படியுங்கள். வெற்றி பெறுவதற்கான முதற்படி அதுதான்; அடுத்து, உங்களைச் சுற்றி நிகழ்வதனையும் உற்றுநோக்குங்கள்; பிறர் படும்

துன்பமும் துயரமும் உங்களுக்குநேர்ந்ததாக உணருங்கள்; எழுதுங்கள். உங்கள் பெயர் தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறும்.

மாணவர்: எனக்கென நேரம் ஒதுக்கி மனம் திறந்து பேசினீர்கள். மிக்க நன்றி, ஐயா!

கண்ணதாசன்: மிக்க மகிழ்ச்சி.

| படித்தல் திறன் – வாய்விட்டுப் படித்தல் | செயல்பாடு – 3 |
|---|---|

இவ்வுலகம் இனியது; இதிலுள்ள வான் இனிமையுடைத்து;
காற்றும் இனிது. தீ இனிது. நிலம் இனிது.

ஞாயிறு நன்று. திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

கடல் இனிது. மலை இனிது. காடு நன்று. ஆறுகள் இனியன.
உலோகமும் மரமும் செடியும் கொடியும் மலரும் காயும் கனியும் இனியன.

மனிதர் மிகவும் இனியர். ஆண் நன்று. பெண் இனிது. குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று. உயிர் நன்று.

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன. உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம். உணர்வே அமுதம். உணர்வு தெய்வம்.

மனம் தெய்வம். சித்தம் தெய்வம். உயிர் தெய்வம்.
காடு, மலை, அருவி, ஆறு, கடல், நிலம், நீர், காற்று, தீ, வான், ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் – எல்லாம் தெய்வங்கள்.

– பாரதியார், வசனகவிதை

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

தெப்பம், பைந்தமிழ், திருவிழா, புதுமனை, தையல், பொதுவுடைமை, போராட்டம், தூய்மை, பாராட்டு, துணிவு.

த – ________ , ________ , ________ , ________ , ________

ப – ________ , ________ , ________ , ________ , ________

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

உலகுக்கு உயிர்ப்பாற்றலை வழங்கும் ஞாயிறு ஒருபோதும் மறைவதில்லை. அதனைப் போன்றே இலக்கிய வளம்கொழிக்கும் மொழிகளிலும், உயிர்த்துடிப்புள்ள கவிஞர்கள் இடையறாது தோன்றுகிறார்கள். அவர்கள், அம்மொழிகளின் விழிகளுக்கு ஒளியூட்டி வருகிறார்கள். அவர்கள் வாழும் காலச் சூழலுக்கேற்பத் தத்தம் கவிதைகளைப் படைத்துக் காலத்தைவென்று நிலைத்து நிற்கின்றார்கள்.

தமிழ்

| தேர்ந்தெடுத்து எழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

பாடலுக்குரிய தலைப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

( வருத்தம், எழுத்துகள், கடிகாரம், மாசு )

| | |
|---|---|
| அ. பலருக்கு ஓய்வு நேரம்<br>காட்டுகிறது<br>தான் ஓய்வெடுக்காமல். | இ. கழிவு தின்னும்<br>மீன்கள் செத்து மிதந்தன<br>கடலில் கழிவுநீர். |
| ஆ. காகிதத் தொட்டிலில்<br>தூங்கும் குழந்தைகள். | ஈ. பூ. . . . . .<br>மலர மலர வாடிப் போனது<br>பூக்காரி முகம். |

| மொழித்திறன் பயிற்சி | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் கோடிட்ட இடங்களில் உரிய கூட்டப்பெயர்களை எழுதி நிரப்புக.

(எ.கா.) மரங்கள் அடர்ந்த **சோலையில்** மயில் அகவ குயில் கூவியது.

பள்ளி விடுமுறையில் தன் அத்தை வீட்டுக்கு வந்த எழிலி, வயல்வெளியைச் சுற்றிப் பார்க்கச் சென்றாள். அங்கு ஆட்டு ____________ கண்டாள். வயலின் ஒருபுறத்தில் நெல் ____________ காணப்பட்டது. அதனைப் பார்த்துக்கொண்டே சென்ற எழிலி அருகில் இருந்த, தென்னந் ____________ க்குள் நுழைந்தாள். மரத்தில் தேங்காய் ____________ யாகத் தொங்குவதனைக் கண்டாள். வானில் பறவைக் ____________ பறந்து செல்வதனைக் கண்ட எழிலி மிகவும் மகிழ்ந்தாள். அங்கு மரநிழலில் உட்கார்ந்திருந்த ஒரு சிறுமி மலர்களையெல்லாம் கோத்து ____________ யாக்குவதனைக் கண்டாள்.

(தோப்பு, கூட்டம், மாலை, மந்தை, குவியல், குலைகுலை)

| கண்டறிதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கட்டங்களில் மறைந்துள்ள இக்காலக்கவிஞர்களின் பெயர்களை வட்டமிடுக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பா | அ | ப் | து | ல் | ர | கு | மா | ன் |
| ர | னி | ஞா | ப் | லா | கு | ன் | இ | பு |
| தி | ர | பா | க | பா | டா | கா | ம் | மு |
| தா | ர | சு | ப் | ண் | ரி | மீ | ரா | டி |
| ச | ம | ணி | கொ | ம் | ண | ஆ | ஜா | ய |
| ன் | ட் | கை | மு | மே | த் | தா | ரா | ர |
| டு | ங் | து | த் | மு | ர | வை | ச | ச |
| க | லி | வா | த | மி | ழ | ன் | ப | ன் |

| பிழை நீக்கி எழுதுதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் தொடரில் வண்ண எழுத்துகளிலுள்ள சொற்கள் பிழையாக உள்ளன. அதனைத் திருத்தி எழுதுக.

(எ.கா.) அனைவரும் சிறப்பு வகுப்புக்குத் தவறாமல் வருகை புரிதல் வேண்டும்.

திருத்தம் : அனைவரும் சிறப்பு வகுப்புக்குத் தவிராமல் வருகை புரிதல் வேண்டும்.

1. மு. வரதராசனார் தாய்மொழிமீது மிகுந்த அக்கரை கொண்டவர்.
2. களைப்புத் தீர இங்குச் சிறிது நேரம் இளைப்பாரிச் செல்வோமா ?
3. இந்த வினாவுக்கு உரிய விடையை நினைவுகூற முடியுமா ?
4. கல்விக்கு எள்ளை இல்லை.
5. குமணவள்ளல், புலவர் பெருஞ்சித்திரனாரின் வறியநிலையைக் கண்டு மனம் இறங்கினார்.

| அறிந்து கொள்வோம் | செயல்பாடு – 10 |
|---|---|

நாலு வேதம் ஆம் நவைஇல் ஆர்கலி
வேலி அன்னவன் மலையின்மேல் உளான்
சூலிதன் அருள் துறையின் முற்றினான்
வாலி என்று உளான் வரம்பில் ஆற்றலான்.

– கம்பர், கம்பராமாயணம்.

மேற்கண்ட பாடலில் இடம்பெற்றுள்ள நாலு வேதம் என்னும் சொல்லில் உள்ள நாலு என்பது நான்கு என்னும் எண்ணுப்பெயரின் விகாரமாகும். இவைமட்டுமன்றி நாலுமுகத்தான், நாலு திசை, நாலு புரவி, நாலு வாசல், நாலு கலை, நாலு நாள், நாலுபேரை, நாலு தெரு, நாலு வகுப்பு எனத் திருமூலர், இளங்கோவடிகள், கம்பர், ஔவையார், பட்டினத்தார், பாரதியார், பாரதிதாசன் முதலியோர் பாடல்களில் நாலு என்னும் சொல்லே எடுத்தாளப்பட்டுள்ளதனைக் காணலாம். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதிய கால்டுவெல், நான்கு என்பதன் அடிப்படையே நாலு எனக் குறித்துள்ளார்.

பயிற்சி

அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் நாலு என்னும் சொல் அடைமொழியாக வரும்படி எழுதுக.

(எ.கா.) கடைக்குச் சென்ற வளர்மதி, நாலுகிலோ அரிசி வேண்டுமெனக் கேட்டாள்.

1. திருமங்கையாழ்வார் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என ________ கவியிலும் சிறந்து விளங்கினார்.
2. நான்கு மறை என்பதனைக் கம்பர் ________ வேதம் எனக் குறிப்பிடுகின்றார்.
3. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என ________ திசை உள்ளன.
4. வேலைக்குச் செல்வதற்கு விரும்பாத மகனைப் பார்த்து, அவன் தாய் ________ காசு உழைத்துப் பெற்றால்தான் அனைவரும் உன்னை மதிப்பர் எனக் கூறினாள்.
5. யானை ________ கால் விலங்குகளுள் ஒன்று.

தமிழ்

ஆ) பாடநூலுள் நாலு என்னும் சொல் எங்கெங்கு இடம்பெற்றுள்ளது எனக் கண்டறிந்து எழுதுக.

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

அ) பொருந்தாத இணையைக் கண்டறிக. 1 × 1 = 1

1. சிறுபஞ்சமூலம் – காரியாசான்
2. ஞானரதம் – பாரதியார்
3. எழுத்து – சி. சு. செல்லப்பா
4. குயில்பாட்டு – கண்ணதாசன்

ஆ) பொருத்துக. 5 × 1 = 5

1. "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே" – கவிமணி
2. "சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்" – நாமக்கல் கவிஞர்
3. "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்" – பாரதியார்
4. "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" – பாரதிதாசன்
5. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்" – கண்ணதாசன்

இ) தொடர்களில் உள்ள ஆகுபெயர்களின் வகைகளைக் கண்டறிக. 4 × 1 = 4

1. ஐந்துக்கும் பத்துக்கும் வேலை செய்ய ஆள் இல்லை.
2. உண்பது நாழி; உடுப்பவை இரண்டு.
3. எட்டு முழம் வாங்கி வா.
4. கிலோ என்ன விலை ?

# யாப்பு : செய்யுள் உறுப்புகள் (எழுத்து, அசை, சீர்)

## செய்யுள் உறுப்புகள்

யாப்பு – யாக்கப்படுவது – கட்டப்படுவது. யாப்பு என்பது செய்யுள்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்.

### 1. எழுத்து

செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துகள் முதன்மையாகக் கருதப்படும். குறிலில், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் அடங்கும். நெடிலில் உயிர்நெடிலும், உயிர்மெய் நெடிலும் அடங்கும். மெய் ‘ஒற்று’ எனவும் சொல்லப்படும், செய்யுளில் ஆய்தம் மெய்யாகக் கருதப்படும்.

நாணல் – இச்சொல்லில், நா – நெடில், ண – குறில், ல் – ஒற்றெழுத்து.

### 2. அசை

எழுத்தானது தனியாகவோ பல சேர்ந்தோ ஓசையுடன் அசைந்து (பிரிந்து) நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

நேரசை : குறில் தனித்தும் குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

(எ.கா.) குறில் தனித்து வரல் – க
குறில் ஒற்றுடன் வரல் – கல்
நெடில் தனித்து வரல் – கா
நெடில் ஒற்றுடன் வரல் – கால்

நிரையசை: குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும்; குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது நிரையசை.

(எ.கா.) குறில் இணைந்து வரல் – பட
குறில் இணைந்து ஒற்றுடன் வரல் – படம்
குறில் நெடில் இணைந்து வரல் – படா
குறில்நெடில் இணைந்து ஒற்றுடன் வரல் – படாம்

### 3. சீர்

அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி, அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும் அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப்படும்.

ஓரசைச்சீர் : வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை ஓரசைச்சீர் என்பர். அவை நாள் ( நேர் ), மலர் ( நிரை ), காசு ( நேர்பு ), பிறப்பு ( நிரைபு ) என நால்வகை வாய்பாடுகளுள் ஒன்றனைப் பெறும்.

(எ.கா.) 1. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

என் – நேர் (நாள்)

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

படும் – நிரை (மலர்)

3. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

நாடு – நேர்பு (காசு)

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

உலகு – நிரைபு (பிறப்பு)

ஈரசைச்சீர் : நான்கு

ஈரசை சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

| சீர் | | வாய்பாடு | |
|---|---|---|---|
| நேர் நேர் | = | தேமா | மாச்சீர் – 2 ( தேமா, புளிமா என |
| நிரை நேர் | = | புளிமா | மாவில் முடிவதனால் மாச்சீர். ) |
| நிரை நிரை | = | கருவிளம் | விளச்சீர் – 2 ( கருவிளம், |
| நேர் நிரை | = | கூவிளம் | கூவிளம் என விளத்தில் |
| | | | முடிவதனால் விளச்சீர் ) |

( ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவுக்கு உரியவை. )

இவை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

மூவசைச்சீர் : எட்டு

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச் சீர் எட்டு ஆகும்.

தமிழ்

காய்ச்சீர்கள் – நான்கு

| | | |
|---|---|---|
| நேர் நேர் நேர் | – | தேமாங்காய் |
| நிரை நேர் நேர் | – | புளிமாங்காய் |
| நிரை நிரை நேர் | – | கருவிளங்காய் |
| நேர் நிரை நேர் | – | கூவிளங்காய் |

காய்ச்சீர்கள் – நான்கு

இவை வெண்பாவுக்கு உரியதனால், வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

கனிச்சீர்கள் – நான்கு

| | | |
|---|---|---|
| நேர் நேர் நிரை | – | தேமாங்கனி |
| நிரை நேர் நிரை | – | புளிமாங்கனி |
| நிரை நிரை நிரை | – | கருவிளங்கனி |
| நேர் நிரை நிரை | – | கூவிளங்கனி |

கனிச்சீர்கள் – நான்கு

இவை வஞ்சிப்பாவுக்கு உரியதனால், வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

நாலசைச்சீர் : பதினாறு

மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.

பயிற்சி

1. பின்வரும் பெயர்களை அசை பிரித்துக் காட்டுக.

அ) தில்லை ஆ) வளவன் இ) இளங்கோ ஈ) தொல்காப்பியர்

2. விடுபட்ட இடங்களை நிரப்புக.

| | | |
|---|---|---|
| 1. அன்/ புநாண் | ஒப்/புர/வு | கண்/ணோட்/டம் |
| நேர் ______ | நேர்______நேர் | நேர் நேர் நேர் |
| கூவிளம் | ______ | ______ |
| 2. ஆற்/றுவார் | ஆற்/றல் | பணி/தல் |
| நேர் நிரை | ______ | நிரை நேர் |
| ______ | தேமா | ______ |

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மெய்யும் ஆய்தமும் யாப்பில் ______ எனக் குறிக்கப்படும்.

அ) சுட்டெழுத்து ஆ) வினா எழுத்து இ) ஒற்றெழுத்து

2. காய்ச்சீர் ______ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு

3. ஆசிரியப்பாவுக்கு உரிய சீர்கள் ______ ஆகும்.

அ) காய்ச்சீர் ஆ) மாச்சீர் இ) கனிச்சீர்

4. வெண்பாவில் ‘உயர்வு’ என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்பாடு ______.

அ) நாள் ஆ) மலர் இ) பிறப்பு

## ஆ) குறுவினாக்கள்

1. யாப்புக்குரிய எழுத்துகள் எவையெனக் கணக்கிடப்படுகின்றன?
2. அசை என்றால் என்ன? அவை யாவை?
3. ஈரசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகள் யாவை?
4. காய்ச்சீர் வாய்பாடுகள் யாவை?

## அறிந்துகொள்வோம்.

வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் மட்டுமே வரும்.

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.

வேற்றுத் தளைகள் வாரா.

ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

(எ.கா.) அலகிடல்: கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | கட/னென்/ப | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | நல்/லவை | நேர் நிரை | கூவிளம் |
| 3 | எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| 4 | கட/னறிந்/து | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 5 | சான்/றாண்/மை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6 | மேற்/கொள் | நேர் நேர் | தேமா |
| 7 | பவர்க்/கு | நிரை நேர் | (நிரைபு) பிறப்பு |

இக்குறட்பாவில் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

பயிற்சி : கீழ்க்காணும் குறட்பாவுக்கு அலகிட்டு வாய்பாடு எழுதுக.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

தமிழ்

தமிழ்

# அணி

## இல்பொருள் உவமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி

"அவள் நடந்து வந்தாள்."

"அவள் அன்னம்போல நடந்து வந்தாள்."

இவ்விரு தொடரைப் படித்துப் பாருங்கள். முதல் தொடர் இயல்பாக உள்ளது. அடுத்த தொடர் படிப்பதற்கு இனிமை தருகிறது.

பெண்ணொருத்தி, தன் இயல்பான அழகை ஆடை, அணிகலன்கள் அணிந்து, ஒப்பனைசெய்து கொள்வதுபோலப் புலவர், தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப்புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர்.

இத்தகைய பாடல்களில் காணப்படும் அழகே அணி எனப்படும். இதனால், சொல்லப் புகும் கருத்து எளிதில் புரியும்; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இனிமை சேர்க்கும்.

அணிகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

### 1. இல்பொருள் உவமையணி

உலகில் இல்லாத பொருளை ஒன்றனுக்கு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி எனப்படும்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. – குறள், 78

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். உள்ளத்தில் அன்பில்லாத ஒருவர் குடும்ப வாழ்க்கை நடத்துவது என்பது, பாலை நிலத்தில், பட்டமரம் தளிர்விட்டு வளர்வது போன்றது. திருவள்ளுவர், இக்குறட்பாவில் அன்பில்லாதவன் வாழ்க்கை, பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்விட்டு வளர்வதற்கு ஒப்பானது என இல்லாத பொருளை உவமித்துக் கூறுகிறார்.

புலவன், உலகில் இயல்பாக இல்லாத பொருளை இவ்வாறு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

### 2. வேற்றுப்பொருள் வைப்பணி

புலவர், தாம் கருதிய பொருளை நிலைநாட்ட, உலகம் அறிந்த வேறொரு பொருளைச் சான்றுகாட்டிக் கூறும்போது, பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை வேற்றுப்பொருள் வைப்பணி என்பர்.

உரைமுடிவு காணான் இளையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இப்பாடலில், கரிகாலன் இளமையில் நரைமுடித்து வந்து, வழக்கில் நீதி வழங்கினான் என்பது சிறப்புச் செய்தி. வழிவழியாக நீதி தவிராமல் ஆட்சி புரிந்துவரும் சோழர் குலத்தில்

தோன்றியமையால், இயல்பாகவே கரிகாலனும் சிறந்த நீதி வழங்கினான் என்பது பொதுப் பொருள். எனவே, சிறப்புப் பொருளால் பொதுப் பொருள் விளக்கப்பட்டுள்ளதனால் இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உலகில் இல்லாத பொருளை உவமித்துக் கூறுவது ______________.
2. கருதிய பொருளை நிலைநாட்ட சிறப்புப் பொருளைப் பொதுப்பொருளாலும் பொதுப்பொருளைச் சிறப்புப் பொருளாலும் கூறி விளக்குவது ___________.

### ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுப்பொருள் வைப்பணியைச் சான்றுடன் விளக்குக.
2. இல்பொருள் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன் : படம் பார்த்துப் பாடல் எழுதுக.



______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________

### குழுக் கலந்துரையாடல்

பாரதியார் – பாரதிதாசன் – கண்ணதாசன் கவிதைகளில் சமூக மாற்றம் குறித்துக் கலந்துரையாடுக.

தமிழ்

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

### தொகைச்சொற்களை விரித்தெழுதுதல்.

(எ.கா.) ஐந்திணை என்னும் சொல் குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை ஆகியவற்றைக் குறிக்கும்.

1. முக்கனி – மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி.
2. நாற்படை – தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.
3. ஐந்திலக்கணம் – எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம்.
4. அறுசுவை – இனிப்புச்சுவை, கசப்புச்சுவை, புளிப்புச்சுவை, உவர்ப்புச்சுவை, கார்ப்புச்சுவை, துவர்ப்புச்சுவை.

### பயிற்சி : தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

இருதிணை ________ , ________.

முப்பால் ________ , ________, ________.

நாற்றிசை ________ , ________, ________ , ________.

ஐம்பால் ________ , ________, ________ , ________ , ________.

### எண்ணுப் பெயர்களைத் தமிழெண்களுடன் பொருத்துக.

| எண்ணுப் பெயர் | | தமிழெண் |
|---|---|---|
| எண்பத்திரண்டு | – | உரு |
| தொண்ணூற்றொன்பது | – | ௩௦ |
| இருபத்தைந்து | – | கூகூ |
| பதினைந்து | – | அஉ |
| முப்பது | – | கரு |

### செயல்திட்டம்

1. இப்பாடப்பகுதியிலுள்ள பெயர்ச்சொற்களைத் தொகுக்க.
2. தொகுத்த பெயர்ச்சொற்களிலுள்ள தொழிற்பெயர்களை வட்டமிடுக.

### கட்டுரைப் பயிற்சி

மாற்றுத்திறனாளர் மறுவாழ்வு.

<table>
<tr><td colspan="6">கையெழுத்து இதழ் தயாரித்தல்<br>( மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பக் குழுக்களாகப் பிரித்துக் கையெழுத்து இதழ் உருவாக்கச் செய்தல் )</td></tr>
<tr><td colspan="6">விடுதலைத் திருநாள் சிறப்பிதழ்</td></tr>
<tr><td colspan="6">அனைவருக்குமான விடுதலை! உலகத்தை உயர்த்தும் நன்றாய்!</td></tr>
<tr><td colspan="2">சிறப்புச் செய்தி<br>விடுதலை நாள்</td><td colspan="2">கவிதை<br>போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்.</td><td colspan="2">நேர்காணல்<br>விடுதலைக்கு உழைத்தோர்</td></tr>
<tr><td colspan="2">நாடகம்<br>விடுதலைப்போர்</td><td colspan="2">துணுக்குகள்<br>விழிப்புணர்வு ஊட்டும் நகைச்சுவைத் துணுக்குகள்</td><td colspan="2">கட்டுரை<br>விடுதலைத் திருநாள் போட்டியில் வெற்றிபெற்ற கட்டுரை</td></tr>
<tr><td colspan="3">சிறுகதை (ஒருபக்க அளவு)<br>சிறுவர் கல்வி</td><td colspan="3">உரையாடல்<br>காந்தி இன்று இருந்தால்...<br>இருவர்/மூவர் உரையாடல்</td></tr>
<tr><td colspan="6">இத்திங்களுக்கான தமிழ் மன்ற நிகழ்ச்சிகள்</td></tr>
</table>

தமிழ்

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

தொடர்வண்டியில் பயணம் செய்யும்போது பார்வையற்றோர் பாட்டுப்பாடிச் செல்வதனைக் கேட்டிருப்பீர்கள். முன்னே செல்பவரைப் பின்பற்றி மற்றையோர் தொடர்வதனையும் கண்டிருப்பீர்கள். வழியறிந்த மாற்றுத்திறனாளி வழியறியா மற்றொரு மாற்றுத்திறனாளிக்கு உதவும்போது, பார்வையுள்ளோர் யாராவது அவர்களுக்கு உதவியதனைப் பார்த்திருக்கிறீர்களா ? இயலாதோருக்கும் இல்லாதோருக்கும் மனிதநேயத்தோடு உதவுவோர் சிறந்த மனிதராவர்.

1. மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வெவ் வகையில் உதவலாம் ?
2. நீங்கள் பழகிய இடத்தில் கண்ணைக் கட்டிக்கொண்டு ஒரு பொருளை எடுக்க முயற்சி செய்க.
3. உங்கள் பட்டறிவை நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## மதிப்புக்கல்வி

### உயிர் இரக்கம்

ஸ்டீன்மெட்ஸ் என்னும் புகழ்பெற்ற அறிவியல் அறிஞரின் வீட்டுக்கு, அவருடைய நண்பர் சென்றிருந்தார். அன்றைக்குக் கடும்குளிர் நிலவியது. அறிவியல் அறிஞர், தம் உடலை நன்றாகக் கம்பளியால் போர்த்தியிருந்தார். எனினும், குளிர் தாங்காமல் நடுங்கிக்கொண்டே ஏதோ ஒரு சோதனையில் முழுமூச்சாய் ஈடுபட்டிருந்தார். அருகிலேயே கணப்புப்புரை (சூட்டடுப்பு) இருந்தும், அவர் அதனை எரிய விடவில்லை.

நண்பர் அவரிடம், "ஏன் கணப்பை எரியவிடாமல் இப்படிக் குளிரில் நடுங்குகிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு, அந்த அறிவியல் அறிஞர் எழுந்து சென்று, அருகில் இருந்த கணப்பைச் சுட்டிக் காட்டினார். அங்குச் சுண்டெலியொன்று தன்னுடைய குட்டிகளுடன் இருந்தது.

"இந்தக் கடுமையான குளிரில் நாமே நடுங்கும்போது பாவம் இவை என்ன செய்யும்? அதனால்தான், அவற்றை விரட்ட எனக்கு மனம் வரவில்லை." என்றார்.

இந்தச் சூழலில் நீயாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? நினைத்துப் பார்.

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்.

— வள்ளலார்

### மொழியாக்கம் செய்க.

Mother Teresa, born in Yugoslavia became a nun at the age of 18. She came to India and started her career as a teacher. She established the "Home for dying and destitute" in Kolkata. "Service to the uncared is the service to God" is the principle of Mother Teresa. The highest honour of 'Nobel Prize' for peace was awarded for her selfless work.

### இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. In a fiddler's house all are dancers.

   கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்.

2. No man can flay a stone.

   கல்லிலே நார் உரிக்க முடியுமா ?

3. Difficulties give way to diligence.

   கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

4. Command your man and do it yourself.

   வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன்.

5. Charity is a double blessing.

   தருமம் தலை காக்கும்.

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழுள்ள உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

செய்யுள், உரைநடை, பேச்சு ஆகியன இயல்தமிழ் ஆகும். இசையோடு பாடுவதற்கென்றே எழுதப்பட்ட தமிழ்ப்பாடல்கள் இசைத்தமிழ் எனப்படும். இசையை இசைத்தமிழ் என்று மயங்குகின்றனர் சிலர்.

இசை வேறு; இசைத்தமிழ் வேறு.

இசைக் கலைஞர்கள் குழல், யாழ் போன்ற கருவிகளில் வாசிப்பது இசை. ஓதுவார் பாடும் தேவாரப்பாடல் இசைத்தமிழ். நாட்டியம் ஆடும்போது பாடுவதற்கென்றே இயற்றப்பட்ட பாடல்களே நாடகத்தமிழ் எனப்படும்.

நாடகம் என்பது இக்காலத்து நாடகம், திரைப்படங்களில் பேசப்படும் உரையாடல் என்று சிலர் கருதுகின்றார்கள். நாடகத்தமிழ்ப் பாடல்கள் நாட்டியத்துக்குரிய மெய்ப்பாடுகளுக்கு இடம்தரும் வகையில் அமைந்திருக்கும்.

வினாக்கள்

1. தமிழின் முப்பிரிவுகள் யாவை?
2. இயல்தமிழ் என எதனைக் கூறுகிறோம்?
3. இசை என்பது எது?
4. நாடகத்தமிழ் எத்தன்மையது?
5. தேவாரப்பாடல்கள் எவ்வகைத் தமிழைச் சாரும்?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

உரையாடலை முழுமையாக எழுதி வகுப்பில் பேசுக.

இறைவனுக்கும் நக்கீரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்

இடம்: புலவர்கள் நிறைந்த பாண்டியன் அவை

இறைவன்: என் பாடலில் குற்றம் கூறியவர் யார்?

நக்கீரன்: ஏன், நான்தான்!

இறைவன்: என் பாடலில் என்ன குற்றம் கண்டீர்? சொல்லிலா, பொருளிலா?

நக்கீரன்: ______________________________

இறைவன்: ______________________________

தமிழ்

தமிழ்

| படித்தல் திறன் – வாய்விட்டுப் படித்தல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் பொருளுணர்ந்து படிக்க.

இளமை நலம் போற்றுதல் என்பது பொதுவாக மாந்தர்க்கு இயல்பான குணம். சிலருக்கு வயதைக் கேட்டாலே சினம் பிறக்கும். உடலில் தலையில் வயதாகிவிட்டதற்கு உரிய அடையாளங்கள் தென்பட்டாலும் வயதாகிவிட்டது என்று யாராவது கூறினாலும் அவர்களுக்குப் பொல்லாத கோபம் வருகிறது. இதனால், என்ன புரிகிறது! இளமையைப் போற்ற அனைவரும் விரும்புகின்றனர் என்பதே! ஆனால், இளமை என்பது உடலில் மட்டும் இருந்தால் போதாது. சிலர் ஆண்டில் இளையோராக இருக்கின்றனர். ஆனால், உணர்விலும் ஊக்கத்திலும் படுகிழமாகிச் செயலற்று ஏங்கித்திரிகின்றனர். இஃதெப்படி இளமையாகும்?

உடலில் இளமை; உணர்வில் இளமை; ஊக்கத்தில் இளமை காட்டவேண்டும். இளமையைப் போற்றுதல் வாழ்க்கைக்குச் சிறப்பைத் தரும். அதனாலன்றோ, இளமையையும் அழகையும் போற்றும்வகையில் நம் ஆன்றோர்கள் உடற்பயிற்சி முறைகளைக் கண்டார்கள். உடலுக்குப் போதிய பயிற்சி கொடுத்து எஃகுபோல் ஆக்கி இளமை நலம் பேணுக! துன்பங்களை வாழ்க்கையைக் கடக்கும் படிகளாக நினைத்து, எய்த்துக்களைத்துப் போகாமல், வெற்றியில் நம்பிக்கை வைத்து, உணர்வில் இளமை காத்து, வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்க! இன்றைய தோல்வி நாளைய வெற்றிக்கு அடிக்கல் என்னும் நம்பிக்கையுடன், இளமை நலமிக்க ஊக்கத்துடன் வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக்கொள்க.

– குன்றக்குடி அடிகளார், ஆலயங்கள் சமுதாய மையங்கள்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

நிகழ்த்துக்கலை, மீமிசை, வையம், முந்நீர், மனத்துயர், நோக்கம், வீடுபேறு, நற்செயல், மேடுபள்ளம், வாழ்க்கை, நூற்பயன், மொழிபெயர்ப்பு, வேப்பிலை, நெற்றிக்கண், வெகுளாமை

ந – ______ , ______ , ______ , ______ , ______ .

ம – ______ , ______ , ______ , ______ , ______ .

வ – ______ , ______ , ______ , ______ , ______ .

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

தமிழ்நாட்டு வாணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந்தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே வருவாய் மிகுதி. அயல்நாட்டு வாணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வாணிகத்தைவிட, நீர் வழியாகச் செய்யும் வாணிகம் பெரும் பொருளைத் தரும். எனவே, அந்நாளில் கடல் வாணிகம் மிகவும் சிறந்திருந்தது.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

| குறுக்கெழுத்துச்சொல் விளையாட்டு | செயல்பாடு – 6 |
|---|---|

விடைக் குறிப்புகளைக்கொண்டு, கட்டங்களை நிரப்புக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 4 | 6 |
| | 2 | | | | | | |
| 5 | | 3 | | | | | |
| | 7 | | 8 | | 9 | | |
| | | | | | | | |
| | | | | | | | |

இடமிருந்து வலம்

1. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ எனக் கூறிய தமிழ் மூதாட்டி ___________ .
2. பழந்தமிழரின் கடற்பயணத்தைத் தொல்காப்பியம் ___________ வழக்கம் எனக் குறிப்பிடுகின்றது.
3. சேர மன்னர்க்குரிய துறைமுகம் ___________ .

மேலிருந்து கீழ்

4. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனக் கூறியவர் கணியன் ___________ .
5. கடலில் செல்லும் பெரிய கலம் ___________ எனப்பட்டது.
6. வெனிசு நாட்டைச் சேர்ந்த பயணி ___________ .
7. பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய துறைமுகம் ___________ .
8. சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுள் ஒன்று ___________ .
9. பௌவம் என்பதும் ___________ என்பதும் ஒரு பொருள் தரும் சொற்கள்.

தமிழ்

| அலகிடுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

தமிழ்த்திங்களின் பெயர்களை எழுதி அலகிட்டு வாய்பாடு எழுதுக.

| வ.எண் | தமிழ்த் திங்களின் பெயர்கள் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| க | சித்திரை | நேர் நிரை | கூவிளம் |
| உ | | | |
| ங | | | |
| ச | | | |
| ரு | | | |
| சா | | | |
| எ | | | |
| அ | | | |
| கூ | | | |
| கO | | | |
| கக | | | |
| கஉ | | | |

| வழூஉச் சொற்களைத் திருத்துதல் | செயல்பாடு – 8 |
|---|---|

சொற்குவியலில் உள்ள திருந்திய சொற்களைப் பயன்படுத்தி உவமைத் தொடர்களில் உள்ள வழூஉச் சொற்களைத் திருத்துக.

( போர்த்திய, விழிக்கிறது, காற்றில், எண்ணெய், வெயில், பெய்த )

| | | |
|---|---|---|
| 1. | ஆடிக் காத்தில் உதிரும் சருகுபோல | |
| 2. | ஆந்தை முழிக்கிறதுபோல | |
| 3. | உரிய காலத்தில் பெஞ்ச மழைபோல | |
| 4. | எள்ளுக்குள் எண்ணைபோல | |
| 5. | பசுத்தோல் போத்திய புலிபோல | |
| 6. | வெய்யிலில் பட்ட புழுப்போல | |

| இடைச்சொல் அறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

தொடரில் உள்ள வண்ண எழுத்துச் சொற்களுடன் 'ஆவது' என்னும் இடைச்சொல்லைச் சேர்த்துப் புதிய தொடரை உருவாக்குக.

| | | |
|---|---|---|
| 1 | திருக்குறளைப் படி. | திருக்குறளையாவது படி. |
| 2 | உயிரைக் கொடுத்து நாட்டைக் காப்போம். | |
| 3 | நீ அல்லது உன் தம்பி போட்டியில் கலந்து கொள்ளுதல் வேண்டும். | |
| 4 | தமிழன்பன் சொல்வது 'மொழி நமது கண்கள்'. | |
| 5 | பாரதியின் தொழில் நாட்டுக்கு உழைத்தல். | |
| 6 | யாழினிக்குப் பேச்சுப்போட்டியில் இரண்டாம் இடம் கிடைத்தது. | |

| சொல்லுருவாக்கம் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களிலிருந்து பல சொற்களை உருவாக்குக.

முத்துக்குளித்தல் – முத்து, குளி, குளித்தல், முதல், துளி, குத்து, தத்து, குத்தல், முதுகு, தளி, முக்கு

பல்கலைக்கழகம் –

கலங்கரைவிளக்கம் –

குதிரையேற்றம் –

கவியரங்கம் –

| விடுகதைக்கான விடை காணல் | செயல்பாடு – 11 |
|---|---|

விடுகதைகளுக்கான விடையை எழுதுக.

1. வானத்துக்கும் பூமிக்கும் ஆயிரம் கம்பிகள். அஃது என்ன? ____________
2. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காய் நீதி கூறுகிறார். அவர் யார்? ____________
3. செடியில் விளையாத பஞ்சு; தறியில் நூற்காத நூல்; கையில் தொடாத துணி. அஃது என்ன? ____________
4. இரவும் பகலும் ஓய்வில்லை; அவன் படுத்தால் எழுப்ப ஆளில்லை. அவன் யார்? ____________
5. உருவம் இல்லாத மனிதன் உலகமெல்லாம் சுற்றுகிறான். அவன் யார்? ____________

தமிழ்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

தமிழ்

| நிகழ்ச்சிநிரல் எழுதுதல் | செயல்பாடு – 12 |
|---|---|

உன் பள்ளியில் நடைபெறவுள்ள விடுதலைத்திருநாள் நிகழ்ச்சிக்கான நிகழ்ச்சிநிரல் எழுதுக.

### விடுதலைத் திருநாள் விழா

இடம் : ____________

நாள் : ____________

காலம் : ____________

### நிகழ்ச்சிநிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து : ____________

கொடியேற்றம் : ____________

கொடிப்பாடல் : ____________

வரவேற்புரை : ____________

தலைமையுரை : ____________

சிறப்புரை : ____________

கலை நிகழ்ச்சிகள் : ____________

பரிசு வழங்கல் : ____________

நன்றியுரை : ____________

நாட்டுப்பண் : ____________

| வாழ்க்கைத்திறன் | செயல்பாடு – 13 |
|---|---|

### என்னால் முடியாதது யாரால் முடியும்?





வாழ்வில் வெற்றிபெறத் துடிப்பவர் தோல்வியைப் பொருட்படுத்தமாட்டார்.

உன்னால் முடியாது என எவரும் இவரிடம் கூறிவிடமுடியாது.

என்னால் மற்றவர்களைப்போல் செயல்படமுடியும் என மெய்ப்பித்துக்காட்டினார், இருப்பத்தேழு வயதேயான ஜெசிக்கா காக்ஸ். இவர் செய்த அருஞ்செயல் என்ன?

பிறவியிலேயே இரு கையும் இல்லாத இவர், தன்னிரு காலால் வானூர்தியை ஓட்டிய முதல் பெண்மணி என்னும் பெருமைக்குரியவர்.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிச்சல் ஆகியன இவரைச் சிறப்பாகச் செயலாற்றத் தூண்டின. ஆம், மனமிருந்தால் வழியுண்டு. இவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடுக.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. அடிக்கோடிட்ட சொல்லுக்கு ஏற்புடைய பொருளை எழுதுக.** 4 × 1 = 4

அ. உள்நாட்டு வாணிகத்தைவிட அயல்நாட்டு வாணிகத்திலேயே <u>வருவாய்</u> மிகுதி.

1. செலவு 2. ஏற்றுமதி 3. இறக்குமதி 4. வரவு

ஆ. திரைகடலோடியும் <u>திரவியம்</u> தேடு.

1. செல்வம் 2. வாசனைப்பொருள் 3. கப்பல் 4. வாணிகம்

இ. யாதும் ஊரே யாவரும் <u>கேளிர்</u> என்பது கணியன் பூங்குன்றனாரின் வாக்கு.

1. நண்பர் 2. உறவினர் 3. கேள் 4. பகைவர்

ஈ. பழந்தமிழரின் கடமைகளுள் ஒன்று <u>பொருளீட்டுதல்.</u>

1. பொருள் பெறுதல் 3. பொருள் பெருக்குதல்

2. பொருள் கொடுத்தல் 4. பொருள் அழித்தல்

**3. ஓரிரு வரிகளில் விடையளிக்க.** 6 × 1 = 6

அ. பொருள்வயிற் பிரிவு எத்தனை வகைப்படும். அவை யாவை?

ஆ. கடலைக் குறிக்கும் பல்வேறு சொற்களுள் ஐந்தனை எழுதுக.

இ. பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு அறிஞர் யார்?

ஈ. சீனத்திலிருந்து தமிழகத்துக்கு இறக்குமதியான பொருள்கள் யாவை?

உ. சோழ நாட்டின் துறைமுகம் எது?

ஊ. பாண்டிய நாட்டின் வளம்பெருக்கிய துறைமுகம் எது?

தமிழ்

# சொல்

## பெயர்ச்சொல்

### தொழிற்பெயர்

மாதவி ஆடல்கண்டு கோவலன் மகிழ்ந்தான்.

இத்தொடரில் உள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், தொழிற்பெயர்களை அறிவோம்.

மாதவி, கோவலன் – இவை பெயர்ச்சொற்கள்

கண்டு, மகிழ்ந்தான் – இவை வினைச்சொற்கள்

ஆடல் – என்பது தொழிற் பெயர்.

அறுவகைப் பெயர்ச்சொற்களுள் தொழிற்பெயரும் ஒன்று என்பதனை முன்வகுப்பிலேயே கற்றிருக்கிறீர்கள். ஆடல் – என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிப்பதனால், அது தொழிற்பெயர் எனப்பட்டது.

ஆடு + அல் = ஆடல். அல் – என்பது தொழிற் பெயர் விகுதி. இவ்வாறு தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள்: தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல் என்பன.

வினைப்பகுதியோடு மேற்குறித்த விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) பெறுதல் | = பெறு + தல் | கோடல் | = கோடு + அல் |
| ஆட்டம் | = ஆடு + அம் | கொலை | = கொல் + ஐ |
| வாழ்க்கை | = வாழ் + கை | பறவை | = பற + வை |
| போக்கு | = போ + கு | புளிப்பு | = புளி + பு |
| வரவு | = வர + உ | மறதி | = மற + தி |
| உணர்ச்சி | = உணர் + சி | புலவி | = புல + வி |
| செய்யுள் | = செய் + உள் | சாக்காடு | = சா + காடு |
| கோட்பாடு | = கோள் + பாடு | தோற்றரவு | = தோற்று + அரவு |
| கேளானை | = கேள் + ஆனை | நடவாமை | = நட+ ஆ + மை |
| பாய்த்து | = பாய் + து. | தாழால் | = தாழ் + ஆல் |

### தொழிற்பெயர் வகைகள்

தொழிற்பெயர் இருவகைப்படும்.

1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

#### 1. முதனிலைத் தொழிற்பெயர்

தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப் பெயர்.

தமிழ்

(எ.கா.) கபிலனுக்கு அடி விழுந்தது.

இத்தொடரில் அடி, என்பது விகுதிபெறாமல், பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது.

### 2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

(எ.கா.) அறிவறிந்த மக்கட் பேறு.

அவனுக்கு என்ன கேடு?

இங்குப் 'பெறு', கெடு என்னும் முதனிலைகள் 'பேறு', 'கேடு' எனத் திரிந்து 'பெறுதல்', 'கெடுதல்' என்னும் பொருளை உணர்த்துகின்றன.

### வினையாலணையும் பெயர்

முருகன் பரிசு பெற்றான்.

பரிசு பெற்றானைப் பாராட்டினர்.

இவ்விரு தொடரிலும், பெற்றான் என்னும் வினைச்சொல் வந்துள்ளது.

முதல் தொடரிலுள்ள பெற்றான் என்பது, முருகன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்துள்ளது.

இரண்டாவது தொடரில் உள்ள 'பெற்றானை' என்பது முருகனைக் குறிக்கும் பெயராக வந்துள்ளது.

இவ்வாறு வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினைசெய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும். இது வினைக்குரிய காலம் காட்டும்; பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும்.

பெற்றானை – இறந்தகாலம்

பெறுகின்றானை – நிகழ்காலம்

பெறுவானை – எதிர்காலம்

பெற்றான் + ஐ என, இரண்டாம் வேற்றுமை உருபான ஐ ஏற்று வந்துள்ளமை காண்க.

### தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலுக்குப் பெயராய் வரும். | தொழில் செய்பவருக்குப் பெயராய் வரும். |
| படர்க்கை இடத்தில் வரும். | மூவிடங்களிலும் வரும். |
| காலங்காட்டாது. | முக்காலத்தையும் காட்டும். |

தமிழ்

தமிழ்

## பண்புப் பெயர்

பண்பை உணர்த்தும் பெயர் பண்புப் பெயர். அறுவகைப் பெயருள் ஒன்றான பண்புப் பெயர் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

1. செம்மை, வெண்மை, கருமை – நிறப்பண்பு
2. வட்டம், சதுரம், கூம்பு, செவ்வகம் – வடிவப்பண்பு
3. ஒன்று, அரை, கிலோமீட்டர் – அளவுப்பண்பு
4. காரம், புளிப்பு, இனிப்பு – சுவைப்பண்பு

### பண்புப் பெயர் விகுதிகள்

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், அர், பம், து என்பன பண்புப்பெயர் விகுதிகள்.

(எ.கா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நன்மை | = | நல் + மை | நன்றி | = | நல் + றி |
| தொல்லை | = | தொல் + ஐ | நன்று | = | நல் + று |
| மாட்சி | = | மாண் + சி | நலம் | = | நல் + அம் |
| மாண்பு | = | மாண் + பு | நன்னர் | = | நல் + அர் |
| மழவு | = | மழ + உ | திட்பம் | = | திண் + பம் |
| நன்கு | = | நல் + கு | தீது | = | தீமை + து |

### பயிற்சி

1. பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

அ) பெறு, சுடு, நடு, கெடு, வீடு.

ஆ) செம்மை, வட்டம், ஒன்று, கருமை, வெம்மை.

இ) ஆடல், அண்ணன், தேடல், போக்கு, பாய்தல்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தொழிற்பெயரின் பகுதி திரிந்து வரும் பெயர் ________.

அ) விகுதிபெற்ற தொழிற்பெயர் இ) முதனிலைதிரிந்ததொழிற்பெயர்

ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

2. காட்சி என்னும் தொழிற்பெயர் ________ எனப் பிரியும்.

அ) கா + சி இ) காட் + சி

ஆ) காண் + சி

3. மாட்சி என்பது ________ ஆகும்.

அ) தொழிற்பெயர் இ) பண்புப் பெயர்

ஆ) வினையாலணையும்பெயர்

4. ‘வந்தான்’ என்னும் வினைமுற்று ________ என வினையாலணையும் பெயராய் வரும்.

அ) வருவான் ஆ) வாரான் இ) வந்தவன்

## 2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| தொழிற் பெயர் | – | நன்றி |
| முதனிலை திரிந்த தொழிற்பெயர் | – | அகழ்வார் |
| பண்புப் பெயர் | – | சூடு |
| வினையாலணையும் பெயர் | – | வருதல் |

## 3. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. பகுதி மட்டும் தொழிலைக் குறிப்பது ________________ .

அ) முதனிலை திரிந்த தொழிற்பெயர் இ) முதனிலைத் தொழிற்பெயர்

ஆ) பண்புப் பெயர்

2. வரவு என்னும் தொழிற்பெயரின் விகுதி ________________ .

அ) வு ஆ) உ இ) எதுவுமில்லை

3. வட்டம் என்பது ________________ பெயர் ஆகும்.

அ) அளவுப்பண்பு ஆ) சுவைப்பண்பு இ) வடிவப்பண்பு

## ஆ) சிறுவினாக்கள்

1. தொழிற்பெயர் என்பது யாது? எடுத்துக்காட்டுத் தருக.
2. தொழிற்பெயர் விகுதிகளில் நான்கனை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
3. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
4. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

தமிழ்

தமிழ்

# வழாநிலை, வழு, வழுவமைதி

## அ) வழாநிலை

இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

செல்வன் படித்தான். இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப்பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே, இது வழாநிலை எனப்படும். வழாநிலை அறுவகைப்படும்.

1. திணை வழாநிலை : செல்வி பாடினாள், மாடு வந்தது.
2. பால் வழாநிலை : கண்ணன் வந்தான், நாய் ஓடியது.
3. இட வழாநிலை : நான் வந்தேன், நீ வருவாய்.
4. கால வழாநிலை : நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்.
5. வினா வழாநிலை : தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?
6. விடை வழாநிலை : தமிழ்நாட்டின் தலைநகரம் எது? என்னும் வினாவுக்குச் சென்னை என விடையளித்தல்.

## ஆ) வழு

இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். வழு திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினா வழு, விடைவழு, மரபுவழு என ஏழுவகைப்படும்.

### 1. திணைவழு

என் மாமா வந்தது.

மாமா என்னும் உயர்திணைப் பெயர், வந்தது என்னும் அஃறிணை வினைகொண்டு முடிந்தது. அதனால், இது திணைவழு.

### 2. பால்வழு

கண்ணகி வந்தான்.

கண்ணகி என்னும் பெண்பாற் பெயர், வந்தான் என்னும் ஆண்பால் வினைகொண்டு முடிந்துள்ளது. அதனால், இது பால்வழு.

### 3. இடவழு

நாங்கள் வந்தார்கள்.

நாங்கள் என்பது தன்மையிடத்துப் பன்மைப் பெயர். அப்பெயர், வந்தார்கள் என்னும் படர்க்கையிடத்துப் பலர்பாலொடு முடிந்துள்ளது. எனவே, இத்தொடர் இடவழு.

### 4. கால வழு

கரிகாலன் நாளை வந்தான்.

இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலப் பெயரொடு வந்தான் என இறந்தகால வினை மயங்கி வந்துள்ளது. அதனால், இது காலவழு.

5. வினாவழு

முட்டையிட்டது சேவலா பெட்டையா?

சேவல் எனப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதனால் வினாவழு.

6. விடைவழு

நாளை பள்ளி திறக்கப்படுமா? என்னும் வினாவுக்கு, என் அத்தைக்கு உடல்நலமில்லை எனக் கூறுவது விடைவழு ஆகும்.

7. மரபு வழு

நாய் கத்தும். இத்தொடர் மரபு வழு. ஏனெனில், நாய் குரைக்கும் என்பதே முறையான ஒலிமரபு.

இ) வழுவமைதி

இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

உவகை ( மகிழ்ச்சி ), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணைவழுவும் பால்வழுவும் காலவழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

சான்று

1. சிற்றூர்களில் சிலர், தாங்கள் வளர்க்கும் விலங்குகளுக்குப் பெயரிட்டு அழைக்கும் பழக்கம் உண்டு. வருகின்ற பசுவைப் பார்த்து, ‘என் இலட்சுமி வந்துவிட்டாள்’ எனக் கூறுவதனைக் கேட்டிருப்பீர்கள்.

   இவ்வாறு கூறுவது, திணைவழுவாயினும் மகிழ்ச்சியின் காரணமாகத் திணைவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

2. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் – இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லையென்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை.

   ஏனெனில், அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| வழு | – | பிழை, தவறு, குற்றம் |
| வழாநிலை | – | பிழையின்மை, தவறின்மை |
| வழுவமைதி | – | பிழை – ஆனால், பிழையாகக் கொள்ளாமை. |

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

அ) கண்ணன், கயல்விழி, மாணவர்கள், காகம்.

ஆ) மாடு கத்தும், யானை பிளிறும், குயில் கொஞ்சும், மயில் அகவும்.

இ) கூவும், கனைக்கும், கரையும், அகவும், அலறும்.

ஈ) குழந்தை, குட்டி, மனிதன், பார்ப்பு.

தமிழ்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. வழு ________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) ஏழு இ) ஒன்பது

2. என் மாமா வந்தது என்பது ________.

அ) திணை வழு ஆ) பால் வழு இ) கால வழு

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது________
2. பசுவைப் பார்த்து, ‘என் இலட்சுமி வந்தாள்’ என்பது ________ வழுவமைதி ஆகும்.

**3. பிழையைத் திருத்தி எழுதுக.**

1. தம்பி நேற்று வந்தாள். ________.
2. எருது வண்டியை இழுத்தன. ________.
3. மாணவர் தேர்வு எழுதினான். ________.
4. அவன் மாணவன் அல்ல. ________.
5. உடைகள் கிழிந்துவிட்டது. ________.
6. எங்களூரில் புலவர் ஒருவர் வாழ்ந்தனர். ________.

## வகுப்பறைத்திறன்கள்

### குழுக் கலந்துரையாடல்

ஓரமாய் வருவேன்
ஒழுங்காய்ப் போவேன்
ஊர்திகள் வந்தால்
ஒதுங்கியே செல்வேன்
இடப்பக்கம் நடப்பேன்
இருபக்கம் பார்ப்பேன்
சடக்கென்று நிற்பேன்
சாலையைக் கடப்பேன்!

1. இப்பாடல் கூறும் கருத்து என்ன ?
2. நீங்கள் சாலைவிதிகளைப் பின்பற்றுகிறீர்களா ?

சாலைவிதிகளைப் பின்பற்றுவதனால் ஏற்படும் நன்மைகளையும், பின்பற்றாவிடில் ஏற்படும் விளைவுகளையும் குழுவில் கலந்துரையாடுக.

பேசுதல் திறன் : ஐந்து மணித்துளி பேசுக.

1. நான் விரும்பும் அறிவியல் அறிஞர்
2. நான் ஆசிரியரானால்....

## எழுதுதல் திறன்

அ) பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்து எழுதுக.

(எ.கா.) நான் விரைவாகச் சென்றதனால் உரிய நேரத்தில் அங்கு இருக்க முடிந்தது.

நான் விரைவாகச் சென்றேன். அதனால், உரிய நேரத்தில் அங்கு இருக்க முடிந்தது.

பயிற்சி

1. எனக்குத் தூக்கம் வந்துவிட்டதனால் அந்த நாடகத்தை முழுவதும் பார்க்க முடியவில்லை.
2. மணி நேற்று வந்து என்னிடம் புத்தகம் வாங்கிச்சென்றான்.
3. உண்மையை உணர்ந்த முத்து பணத்தை மாறனிடம் கொடுத்தார்.
4. நான் நாளை ஊருக்குப்போகும்போது கண்ணனைச் சந்திப்பேன்.
5. பாம்பு ஓடியதனை நான் பார்த்தேன்.

ஆ) ஒரே சொற்றொடராக்குக.

(எ.கா.) நான் மும்பை சென்றேன். அவனும் மும்பை சென்றான்.

நானும் அவனும் மும்பை சென்றோம்.

பயிற்சி

1. நீ வீட்டுக்குப் போ. புத்தகம் எடுத்து வா.
2. இனியன் பாட்டுப் பாடுவார். அப்போது கண்களை மூடிக் கொள்வார்.
3. யானை வந்தது. அதனைப் பார்த்துக் குழந்தை சிரித்தது.
4. சேரன் போரில் தோற்றான்; அதனால், சிறையில் அடைக்கப்பட்டான்.

## மையக்கருத்தறிதல் திறன்

பின்வரும் பத்தியினைப் படித்துணர்ந்து மையக்கருத்தினை ஒரே வரியில் எழுதுக.

வேற்றுமைகளைப் பயன்படுத்திக்கொண்டு குறுகிய வாழ்க்கைக்காக எப்போதும் அமைதியைக் குலைப்பதும், மக்களை ஏய்ப்பதும் போலிகளின் செயல். உண்மையாளர்களுக்குள் கருத்துவேற்றுமை இருப்பினும் போராட்டம் நேராது. மாறாக, ஒற்றுமையும் நாட்டுநலத்திற்கேற்பத் தம் வேற்றுமைகளைப் பயன்படுத்தும் பண்பாடும் இருக்கும்.

மையக்கருத்து : வேற்றுமை வளர்த்துத் தன்னலம் காண்போர் போலிகள்; வேற்றுமை களைந்து ஒற்றுமை காண்போர் உண்மையாளர்கள்.

தமிழ்

பயிற்சி : மையக்கருத்து எழுதுக.

வேற்றுமைகளை அழிவுக்குப் பயன்படுத்தாமல் அவற்றையும் நன்மைக்குப் பயன்படுத்தி முன்னேறுதல் வேண்டும். அவரவர் செயல்களுக்கேற்ப நன்மை தீமைகள் ஏற்படுவதனை அவரவரே அறியுமாறு விட்டுவிடுதல் வேண்டும். அதனை விடுத்துத் தீமைகளை ஒழிப்போம் என வரிந்து கட்டுதலினால் பயன் ஏதும் நேராது. அதனால், மேலும் கலகமே விளையும். தீமைகளை ஒழிக்க பொதுஒழுங்கை அதாவது, சட்டத்தை எல்லா அரசுகளும் வலியுறுத்துகின்றன. அதற்கு அச்சட்டங்களும் பெரிதும் துணைபுரிகின்றன.

மையக்கருத்து ________________________________________ .

## மொழித்திறன் பயிற்சி

### வல்லினம் மிகும் இடங்களும் வல்லினம் மிகா இடங்களும்

இருசொற்களைச் சேர்த்து எழுதும்போது இடையில் சில இடங்களில் வல்லின மெய் எழுத்துகள் ( க், ச், த், ப் ) மிக்கு வரும். மெய்யெழுத்து மிக்கு வரவேண்டிய இடத்தில் மிகாமலும் மிகாத இடத்தில் மிக்கும் வந்தால் பொருள் மாறுபடும். ஆகவே, வல்லினம் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் தெளிவாக அறிதல் வேண்டும்.

### வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்.

   அ + பையன் = அப்பையன்

   இ + செடி = இச்செடி

   எ + பணி = எப்பணி

2. அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; அப்படி, இப்படி, எப்படி என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

   அந்த + கோவில் = அந்தக்கோவில்

   அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

   எங்கு + போனான் = எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

   நூலை + படி = நூலைப்படி

   பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

   அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக்கொடுத்தான்

   பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்.

தமிழ்

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம்

மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி

விழி + புனல் = விழிப்புனல்.

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு

பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண்

தாமரை + கை = தாமரைக்கை.

9. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ + சுடர் = தீச்சுடர்

பூ + கூடை = பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா + புகழ் = அழியாப்புகழ்

ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

11. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + தொகை = எட்டுத்தொகை

12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி

நாடு + பற்று = நாட்டுப்பற்று

13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பொது + தேர்வு = பொதுத்தேர்வு

திரு + குறள் = திருக்குறள்

14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான் = சாலப்பேசினான்.

தவ + சிறிது = தவச்சிறிது.

15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக் கூறினான்.

இனி + காண்போம் = இனிக் காண்போம்.

## வல்லினம் மிகா இடங்கள்

1. அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது.

அவை + பறந்தன = அவை பறந்தன.

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் = அவனா சென்றான்.

அவனோ + பேசினான் = அவனோ பேசினான்.

அவனே + சிரித்தான் = அவனே சிரித்தான்.

3. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர் பூத்தது

வண்டு + பறந்தது = வண்டு பறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு = சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர்

இரவுபகல்

தமிழ்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்.

கடல் + கடந்தார் = கடல் கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழிய பல்லாண்டு

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

சல + சல = சலசல

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் = கற்ற சிறுவன்

சிறிய + பெண் = சிறிய பெண்

தமிழ்

பயிற்சி

தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. அந்த பையனை நன்றாக படிக்க செய்தல் வேண்டும்.
2. வந்த பையன் சொன்னச் செய்திகளை பொறுமையாக கேட்டல் வேண்டும்.
3. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டுப் பலரும் வியந்தனர்.
4. கபிலப்பரணர் தமிழ்ப்புலவர்கள்.
5. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர் நன்மை தீமைகளை அறிவார்.
6. அந்த சாலை மிக செம்மையாக காணப்படுகிறது.
7. ஒவ்வொருவரும் படித்ததனை கவனமாக குறிப்பேட்டில் எழுதி வைத்தல் வேண்டும்.
8. புத்தக படிப்புத்தேவை. அத்தோடு பட்டறிவைச் சேர்த்து கொள்ளல் வேண்டும்.
9. பார்த்து பார்த்து கேட்டுகேட்டு மகிழ்ந்தேன்.

தமிழ்

பொருத்துக.

௯+௪ - க௪

௮+௨ - க௯

௫+௯ - ௨௨

௨0+௨ - க௩

க௮+௧ - க0

கட்டுரைப் பயிற்சி

நான் முதலமைச்சரானால்......

## பண்பு

### தீ நட்பை விலக்குதல்

நண்பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு காலந்தாழ்த்தி வகுப்பிற்கு வருவதனை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் குலோத்துங்கன். அதற்காக, ஆசிரியரிடம் பலமுறை தண்டனையும் பெற்றான். ஆனாலும், தன் வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இன்றும் அதே கதைதான்.

விரைந்து வகுப்பில் நுழைந்து, வழக்கமாக மாறன் அருகில் உட்காரும் குமரன் வராததனால், அவ்விடத்தில் உட்கார்ந்தான். குலோத்துங்கனிடம் இருந்து வெண்சுருட்டின் வாடை வருவதனையறிந்து கொண்டான் மாறன். ஆசிரியர் வந்துவிட்டதனால், அவனிடம் அப்போது ஏதும் பேசவில்லை.

மாலையில் வீட்டுக்குச் செல்லும்போது புகைபிடித்தல் தவறு எனவும், அதன் விளைவுகளையும் கூறி, அப்பழக்கத்தை விட்டுவிடுமாறும் கூறினான்.

“எல்லாம் எனக்குத் தெரியும். உன்வேலையைப் பார்த்துக்கிட்டுப் போடா, பெரிய மேதை வந்துட்டான் அறிவுரை சொல்ல”, என அலட்சியமாகக் கூறிச் சினங்கொண்டான்.

இனி, அவனுடன் பழகுவதனை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும் எனத் தன் மனத்திற்குள் முடிவெடுத்துக் கொண்டான், மாறன்.

1. மாறன் கூறிய அறிவுரை யாது? அதனைக் குலோத்துங்கன் ஏற்றானா?
2. மாறன் குலோத்துங்கனுடன் பழகக்கூடாது என முடிவெடுத்தது சரியா, தவறா?
3. குலோத்துங்கன் உங்கள் நண்பனாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

## வாழ்க்கைத்திறன்

### மறுத்தல் திறன்

“ஏண்டா, இன்னிக்கிப் பள்ளிக்கூடம் சீக்கிரமா விட்டுட்டாங்க ?” என்று செழியனிடம் கேட்டான், கதிர்வேலன்.

“நம் பள்ளியில் நாளை மருத்துவமுகாம் நடக்க இருக்கிறதாம். அதற்கு ஏதோ ஏற்பாடு செய்யணுமாம்; அதனால சீக்கிரமா விட்டுட்டாங்க. நாமெல்லாம் சேந்துபோயி கிணத்துல குளிச்சிட்டு அப்பறமா வீட்டுக்குப் போலாம், வாடா” என அழைத்தான் செழியன்.

கதிர்வேலனுக்கோ நீச்சல் தெரியாது. அதனால் குளிக்கச் செல்வதா, வேண்டாமா ? பெற்றோருக்குத் தெரியாமல் இதுவரை எதனையும் அவன் செய்ததில்லை. நண்பனின் அழைப்பை மறுத்தால், நட்புக்கெடும். நண்பனுக்கு உடன்பட்டால் பெற்றோர் கடிந்துகொள்வர். நீச்சல் தெரியாமல் கிணற்றில் குளிக்கச் சென்று ஏதாவது நடந்துவிட்டால் என்னவாவது ? நண்பனின் அழைப்பை மனம் நோகாமல் மறுப்பது எவ்வாறு எனக் கதிர்வேலன் சிந்திக்கத் தொடங்கினான்.

கதிர்வேலன் நிலையில் நீங்களிருந்தால் உங்கள் நண்பரின் அழைப்பை மனம் நோகாமல் எவ்வாறு மறுப்பீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### பொறுமை

துறவி ஒருவர் தெருவழியே நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது திடீரென்று நாலுபேர் ஓடிவந்து அவரைத் தாக்கிவிட்டு ஓடிவிட்டனர்.

அருகிலிருந்த மற்றவர்கள் அவரிடம், அவர்கள் உங்களைத் தாக்கியபோது, நீங்கள் ஏன் தடுக்கவில்லை எனக் கேட்டனர்.

அதற்கு அவர், நான் தடுக்காமல் இருந்ததற்குக் காரணம் உண்டு. ஒன்று, என்னை அடித்ததன் மூலமாக அவர்களின் சினம் தணிந்திருக்கும்; மற்றொன்று, என்னை அடிக்காவிட்டால் வேறு யாரையாவது அடித்திருப்பார்கள். எனவேதான், அவர்கள் சினம் தீரும்வரை என்னைத் தாக்கும்போது தடுக்காமல் இருந்தேன் என்றார், அத்துறவி.

அவர்தாம் மகாவீரர்.

## மொழியாக்கம் செய்க.

There is nothing in the world as valuable as time. The man who fails to utilize his time carefully will ever remain poor. The man who uses every minute of his time wisely will gain many advantages.

தமிழ்

Every night before going to bed, think over the day's happenings. If you have, make a resolve to be careful in future. Set apart sometime everyday for prayer.

**இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.**

1. Take away the fuel, the boiling will cease.

   எரிவதனைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்.

2. Practice makes perfect.

   சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

3. The law-maker should not be a law-breaker.

   வேலியே பயிரை மேய்ந்தாற்போல.

4. Misfortune never comes single.

   பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்.

5. Look no gift horse in the mouth.

   தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா ?

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

பாடலைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

ஓதலினும் மிகச்சிறந்தது ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம்நல் லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே
ஆதலினால் மாணவர்நல் லொழுக்கம் தன்னை
ஆருயிர்போல் கருதியதைக் காக்க வேண்டும்.

வினாக்கள்

1. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை நயங்களைக் கூறுக.
2. மேதினி – இச்சொல்லின் பொருள் யாது?
3. ஆருயிர் – இலக்கணக்குறிப்பு யாது ?
4. பாடலில் ‘படித்தல்’ என்னும் பொருள் தரும் சொல் எது?
5. பாடலுக்கு ஏற்ற தலைப்பைக் கூறுக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

தமிழ் இலக்கிய மன்ற விழாவின் நிகழ்ச்சிநிரலைப் பார்த்து, விழாவுக்கு வருகை தந்துள்ளோர்க்கு வரவேற்புரை நிகழ்த்துக.

தமிழ் இலக்கிய மன்ற விழா

இடம்: அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, சோளிங்கர், வேலூர் மாவட்டம்.
நாள்: 30. 09. 2013 காலம்: பிற்பகல் 2.00 மணி

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : மாணவியர் |
| வரவேற்புரை | : மாணவியர் தலைவி |
| முன்னிலை | : பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் |
| தலைமை | : தலைமையாசிரியர் |
| சிறப்பு விருந்தினர் | : முதன்மைக் கல்வி அலுவலர் |
| சிறப்புரை | : ‘படைப்புகள்’ என்னும் தலைப்பில் புலவர் கெ. சம்பத்து |
| நிகழ்ச்சித் தொகுப்பாளர் | : மாணவியர் தலைவி |
| இலக்கிய நிகழ்வுகள் | : பேச்சு, பாடல், கதைகூறல், கட்டுரை படித்தல் |
| சான்றிதழ் வழங்கல் | : திரு. பி. பிச்சாண்டி, தமிழாசிரியர் |
| நன்றியுரை | : திரு. சி. பார்த்திபன், முதுகலைத் தமிழாசிரியர் |
| நாட்டுப்பண் | : மாணவியர் |

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துக் குழுவில் கலந்துரையாடுக.

கல்வி, கல்வி, கல்வி – இஃது ஒன்றே இப்போது நமக்குத் தேவை. ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பயணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக்கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். இப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களின் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டுக்கு காரணம் என்ன? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை.

எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைச் சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வி. சமுதாயத்திலுள்ள ஆண் பெண் அனைவருக்கும் உண்மைக் கல்வியை அளிப்பதே நமது கடமை. அந்தக் கல்விமூலமாக அவர்கள் தங்களுக்கு நல்லது எது, கெட்டது எது என்பதனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்; கெட்டதனை விட்டுவிடுவார்கள்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்த நாட்டுமக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொருத்தே அமைகிறது. நாம் மீண்டும் உயர்வடைய வேண்டுமானால், பொதுமக்கள் எல்லாருக்கும் கல்வியைப் பரப்பியாக வேண்டும். பொதுமக்களுக்குக் கல்வியைத் தந்து அவர்களை உயர்த்திவிடுங்கள். இஃது ஒன்றே ஒன்றுதான் நமது சிறப்பைப் பெறுவதற்குரிய ஒரு வழியாகும்.

– விவேகானந்தர், வீர இளைஞருக்கு

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்திலுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

இராமகிருட்டின பரமஅம்சர் அறிவொளியாக விளங்கியவர். அவரின் மறைவுக்குப் பின்னர்த் தூயஅன்னை சாரதா தேவியார் தமது திருமடத்தில் இருந்துகொண்டு, தன்னை நாடி வருபவர்களுக்கு நெறிகாட்டித் தவப்பெருஞ்சுடராய் விளங்கினார். அம்மையாருடைய திருமுகத்தில் கருணைத்தேன் துளிர்க்கும். அவருடைய கைபட்டால் தீவினை தீயும். துன்பங்கள் மாயும். தன்னைத் தேடிவரும் அன்பர்களுக்குத் தாய்போல் அன்பு காட்டினார்.

________, ________, ________, ________, ________, ________ .

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

திருக்குறள் கூறும் உயரிய பண்புகளுள் ஒன்று சான்றாண்மை. அதனை உடையவரே சான்றோர். சான்றாண்மை என்னும் சொல் தமிழ்மொழி ஒன்றுக்கே உரியது. சான்றாண்மைத்தன்மை, தமிழ் மக்களின் கலை.

சான்றாண்மைப் பண்பு, தமிழகத்தின் தனிப்பட்ட உடைமை. சான்றாண்மை என்னும் சொல்லைக்கூடப் பிறமொழிகளில் மொழிபெயர்க்க இயலாது. மொழிபெயர்த்துக் கூறினாலும் அச்சொல்லில் தமிழ்கூறும் பொருள் இராது.

தமிழ்

| குறிப்புகளை விரித்தெழுதுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

**கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி உன் நண்பனுக்குக் கடிதம் வரைக.**

நண்பனின் ஊரில் குடிநீர்ப் பற்றாக்குறை – மழைநீர் சேமிப்பு – குளம், ஊருணி, ஏரி முதலியன நிலத்தடிநீர் உயர்வதற்கு மூலமாய் இருத்தல் – நீர்நிலைகளைத் தூர் வாரி, கரையமைத்து, மரம் நடுதல் – நீர்நிலைகளுக்குரிய நீர்வரத்து வழிகளைத் தூர் வாருதல் – இச்செயல்களில் நாட்டுநலப்பணித் திட்டப் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துதல்

அன்புள்ள நண்பனுக்கு,

நான் நலம். உன் நலம் அறிய ஆவலாய் உள்ளேன். உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். உங்கள் ஊரில் குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்கள் . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

| பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

**கடிதத்தில் உள்ள அடிக்கோடிட்ட பிறமொழிச் சொற்களையும் அவற்றுக்கான தமிழ்ச்சொற்களையும் எடுத்து எழுதுக.**

திருக்குற்றாலம்

10.11.1953

அன்புள்ள கல்கி அவர்களுக்கு,

'நாடகக்காரி' என்னும் நூலை வாசிக்கும் போதெல்லாம் உங்கள் ஆரோக்கியத்தைப்பற்றியும் பாராகிராப் முடிவில் சிந்திக்க நேரும். எவ்வளவு அழகாய் எளிதாய் இயல்பாய் இழுத்துச் செல்கிறது தமிழ் என்று வியந்துகொண்டே போனேன். கதை எத்தனையோ சிக்கல்களுக்குள்ளே எல்லாம் மடங்கியும் துள்ளியும் போனாலும் தெளிவில் குறைவில்லை. அதிசயம், ஆனந்தம் எல்லாம் மனசை எளிதில் பற்றிக்கொள்ளுகின்றன. தமிழுக்கு ஓர் இலக்கியம் கிடைத்தது, மிக்க சந்தோஷம்.

அன்புடன்,

டி. கே. சிதம்பரநாதன்

( மகிழ்ச்சி, பேருவகை, வியப்பு, பத்தி, உடல்நலம், படிக்கும்)

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| வாசிக்கும் | படிக்கும் |
| | |
| | |
| | |
| | |

தமிழ்

| அறிதல் திறன் | செயல்பாடு – 8 |
|---|---|

அட்டவணையை நிரப்புக.

| வ. எண் | வழு | வழுநிலை வகை | வழாநிலை | வழாநிலை வகை |
|---|---|---|---|---|
| 1 | யாழினி பாட்டுப் பாடினான் | பால் வழு | யாழினி பாட்டுப் பாடினாள் | பால் வழாநிலை |
| 2 | வீட்டுக்கு அக்கா வந்தது | திணைவழு | | திணைவழாநிலை |
| 3 | நாங்கள் வந்தோம் | | | இடவழாநிலை |
| 4 | கபிலன் நாளை வந்தான் | | கபிலன் நாளை வருவான் | |
| 5 | கன்றை ஈன்றது பசுவா ?காளையா ? | | கன்றை ஈன்றது பசுவா ? | |
| 6 | ‘தமிழ்த்தென்றல்’ யார் ? என்னும் வினாவுக்குப் பாரதியார் என விடையளித்தல். | விடைவழு | | |
| 7 | மயில் கத்தும் | மரபு வழு | | மரபு வழாநிலை |

| சொல் விளையாட்டு | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள தமிழ் எண்களைத் தொடர்ந்து சென்றால் ஔவையாரின் பொன்மொழிகள் கிடைக்கும்.அவற்றைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் ௭௩ | இ ௭௪ | ட் ௭௫ | டு ௭௬ | ண் ௭௭ | ஒ ௭௮ | ப் ௭௯ | பு ௮௦ | ர ௮௧ | வு ௮௨ |
| ய ௭௨ | ஊ ௪௩ | க் ௪௪ | க ௪௫ | ம ௪௬ | து ௪௭ | கை ௪௮ | வி ௪௯ | டே ௫௦ | ஒ ௮௩ |
| ஐ ௭௧ | ல் ௪௨ | து ௨௧ | க ௨௨ | ர ௨௩ | வே ௨௪ | ல் ௨௫ | ஈ ௨௬ | ல் ௫௧ | ழு ௮௪ |
| சி ௭௦ | பே ௪௧ | வ ௨௦ | ரு ௭ | ம் ௮ | பு ௯ | ஆ ௧௦ | வ ௨௭ | எ ௫௨ | கு ௮௫ |
| ச் ௬௯ | ம் ௪௦ | ல் ௧௯ | வி ௬ | அ ௧ | ற ௨ | று ௧௧ | து ௨௮ | ண் ௫௩ | ஒ ௮௬ |
| ழ் ௬௮ | ள ௩௯ | ய ௧௮ | ய ௫ | செ ௪ | ஞ் ௩ | வ ௧௨ | வி ௨௯ | ணெ ௫௪ | து ௮௭ |
| க ௬௭ | வி ௩௮ | இ ௧௭ | ம் ௧௬ | ன ௧௫ | சி ௧௪ | து ௧௩ | ல ௩௦ | ழு ௫௫ | வ ௮௮ |
| இ ௬௬ | து ௩௭ | ய ௩௬ | டை ௩௫ | உ ௩௪ | ல் ௩௩ | கே ௩௨ | க் ௩௧ | த் ௫௬ | து ௮௯ |
| து ௬௫ | ப ௬௪ | ற் ௬௩ | ஏ ௬௨ | ல் ௬௧ | ழே ௬௦ | க ௫௯ | இ ௫௮ | து ௫௭ | ஒ ௯௦ |
| ல் ௧௦௦ | சே ௯௯ | பே ௯௮ | ம் ௯௭ | ய ௯௬ | வி ௯௫ | ஔ ௯௪ | ல் ௯௩ | யே ௯௨ | ழி ௯௧ |

1. ____________ 6. ____________
2. ____________ 7. ____________
3. ____________ 8. ____________
4. ____________ 9. ____________
5. ____________ 10. ____________

| படைப்பாற்றல் | செயல்பாடு – 10 |
|---|---|

அழகு என்னும் சொல், இருசொல்லுக்கிடையில் அமையும்படி பாடலொன்று எழுதுக.

(எ.கா.) வயலுக்கு அழகு செழுமை
வாளுக்கு அழகு கூர்மை
நிலத்துக்கு அழகு பொறுமை
நீருக்கு அழகு தண்மை

____________________

____________________

____________________

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15மணித்துளி மதிப்பெண் : 10

**1. ஓரிரு வரிகளில் விடையளிக்க.** 5 × 1 = 5

1. காமராசர் எங்கு, எப்போது பிறந்தார்?
2. காமராசர் பயன்படுத்திய நூலகம் எது?
3. காமராசருக்கு நடுவணரசு வழங்கிய விருது யாது?
4. காமராசரின் கல்விப்பணியைப் பாராட்டித் தமிழக அரசு செய்த சிறப்பு என்ன?
5. கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் நாள் எது?

**2. பொருத்துக.** 5 × 1 = 5

அ) காமராசர் பிறந்த ஆண்டு – 1954
ஆ) காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்ற ஆண்டு – 1903
இ) காமராசர் சட்டமன்ற உறுப்பினரான ஆண்டு – 1975
ஈ) காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவரான ஆண்டு – 1937
உ) காமராசர் மறைந்த ஆண்டு – 1963

தமிழ்

# ஆகுபெயர்

## சொல்லாகுபெயர், தானியாகுபெயர்

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவற்றுள், பொருளாகுபெயர் முதலான ஆறு ஆகுபெயர்களை எட்டாம் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள். பிற ஆகுபெயர்களுள் நால்வகை அளவை ஆகுபெயர்களை முதற்பருவத்தில் கற்றுக்கொண்ட நீங்கள், இரண்டாம் பருவத்தில் சொல்லாகுபெயரையும் தானியாகுபெயரையும் கற்கவிருக்கிறீர்கள். ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல், தன்னொடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

1. சொல்லாகுபெயர் : வள்ளுவர்சொல் வாழ்க்கைக்கு இனிது. இத்தொடரில் வள்ளுவர்சொல் என்பது, சொல்லைக் குறிக்காது பொருளுக்குப் பெயராகி வந்ததனால், இது சொல்லாகு பெயர்.

2. தானியாகுபெயர் : பாலை இறக்கு. பாலின் பெயர், பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஓர் இடத்தில் உள்ள ஒரு பொருளின் பெயர் (தானி), அது சார்ந்திருக்கும் இடத்திற்குப் (தானத்திற்கு) பெயராகி வருவது தானியாகுபெயர்.

1. இடம், பொருளுக்கு ஆகி வருவது இடவாகுபெயர்.
2. பொருள், இடத்திற்கு ஆகி வருவது தானியாகுபெயர்.

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தயிரை இறக்கு. இத்தொடர் ____________ ஆகுபெயர் ஆகும்.
   அ) இடவாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) சொல்லாகுபெயர்
2. பெரியோர் சொல் கேள். இத்தொடர் ____________ ஆகுபெயர் ஆகும்.
   அ) சொல்லாகுபெயர் ஆ) பொருளாகுபெயர் இ) இடவாகுபெயர்
3. கழல் பணிந்தான். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ____________ ஆகும்.
   அ) சொல்லாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) இடவாகுபெயர்
4. நூற்கு உரை செய்தான். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ____________ ஆகும்.
   அ) சொல்லாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) இடவாகுபெயர்

ஆ) குறுவினாக்கள்

1. ஆகுபெயர் எத்தனை வகைப்படும் ?
2. சொல்லாகுபெயர் என்றால் என்ன ? சான்று தருக.
3. தானியாகுபெயர் என்றால் என்ன ?

தமிழ்

# பொருள்கோள்

பொருள்கோள் எண்வகைப்படும். அவற்றுள், முதல் மூன்று பொருள்கோளையும் முதற் பருவத்திலேயே கற்றிருக்கிறீர்கள். இந்தப் பருவத்தில் விற்பூட்டுப் பொருள்கோளையும் தாப்பிசைப் பொருள்கோளையும் அறிந்துகொள்ளலாம்.

ஒரு செய்யுளிலுள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்ச்சிக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறை பொருள்கோள் என்பதனை நினைவு கூர்வோம்.

### 1. விற்பூட்டுப் பொருள்கோள்

வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள். இதனைப் பூட்டுவிற் பொருள்கோள் எனவும் கூறுவர்.

(எ.கா.) நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. – குறள், 336

இக்குறளில், உலகு என்னும் இறுதிச்சொல் முதல்சொல்லான நெருநல் என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்வதனால் இது விற்பூட்டுப் பொருள்கோள்.

### 2. தாப்பிசைப் பொருள்கோள்

ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது தாப்பிசைப் பொருள்கோள்.

தாம்பு + இசை = தாப்பிசை – ஊஞ்சல் கயிறு அசைதல்போல.(தாம்பு = ஊஞ்சல்கயிறு)

(எ.கா.) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. – குறள், 310

இப்பாடலில் 'சினத்தை' என்னும் நடுநின்ற சொல்லைச், சினத்தை உடையவர் (இறந்தார்) இறந்தார் அனையர் எனவும், சினத்தைத் துறந்தார் (துறந்தார்) ஞானியர் துணை எனவும் அமைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருந்துவது ______________ பொருள்கோளாகும்.
2. செய்யுளின் இடையில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொல்லுடன் பொருந்திப் பொருளைத் தருவது ______________ பொருள்கோளாகும்.

தமிழ்

### ஆ) குறுவினாக்கள்

1. விற்பூட்டுப் பொருள்கோள் எவ்வாறு வரும்? சான்று தருக.
2. தாப்பிசைப் பொருள்கோள் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
3. ‘உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
   அண்ணாத்தல் செய்யா தளறு’.
   – இக்குறட்பாவில் பயின்றுவரும் பொருள்கோளை விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### எழுதுதல் திறன்

### அ) உவமை, உருவக மாற்றம்

உவமை என்பது, ஒரு பொருளை அல்லது நிகழ்வை மற்றொரு பொருளோடு அல்லது நிகழ்வோடு ஒப்புமைப்படுத்துவது. உவமை, உவமிக்கும் பொருளைவிட உயர்ந்தது. உவமைத்தொடரில் உவமை முன்னும், பொருள் பின்னுமாக வரும்.

(எ.கா.) மதி போன்ற முகம்: மதி – உவமை; முகம் – (உவமேயம்) பொருள்

கவிஞர், தாம் கருதிய பொருளையும் ஒப்புமைப் பொருளையும் (உவமையையும்) வெவ்வேறு எனக் கூறாமல், இரண்டும் ஒன்றெனக் கூறுவது உருவகம். உருவகத்தொடரில் பொருள் முன்னும், உவமை பின்னுமாக வரும்.

(எ.கா.) முகமதி: முகம் – பொருள்; மதி – உவமை. இங்கு இரண்டும் ஒன்றெனக் கூறப்பெற்றது.

### உவமை உருவக மாற்றம்

| உவமை | உருவகம் |
|---|---|
| தாமரைமுகம் | முகத்தாமரை |
| தேன்மொழி | மொழித்தேன் |
| பவளவாய் | வாய்ப்பவளம் |
| முத்துப்பல் | பல்முத்து |

### பயிற்சி

1. உவமைகளை உருவகங்களாக மாற்றுக.

   கனிஇதழ், மலரடி, காந்தள்விரல், கயல்விழி, மதிமுகம்.

   ______________________________

2. உருவகங்களை உவமைகளாக மாற்றுக.

   தமிழமுது, கண்மலர், முகத்தாமரை

   ______________________________

தமிழ்

தமிழ்

### ஆ) அடிச்சொல்லிலிருந்து சொற்களை உருவாக்குதல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா | – | அடிச்சொல் | படி | – | அடிச்சொல் |
| வந்தான் | – | வினைமுற்று | படித்தான் | – | வினைமுற்று |
| வந்த | – | பெயரெச்சம் | படித்த | – | பெயரெச்சம் |
| வந்து | – | வினையெச்சம் | படித்து | – | வினையெச்சம் |
| வருதல் | – | தொழிற்பெயர் | படித்தல் | – | தொழிற்பெயர் |

பயிற்சி

நட, பாடு, செய், பார், ஓடு, செல்.

| அடிச்சொல் | வினைமுற்று | வினையெச்சம் | பெயரெச்சம் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|
| நட | நடந்தான் | நடந்து | நடந்த | நடத்தல் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

படைப்பாற்றல் திறன்

பாடலைக் காட்சிப்படுத்தல் : திருக்குறள் பாடலுக்குக் காட்சி

1. “கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.”

2. “சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.”

## மொழித்திறன் பயிற்சி

### பிழை நீக்கி எழுதுதல்

ஒருவர் பேசும்போதும் எழுதும்போதும் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும். பேச்சில் அல்லது எழுத்தில் பிழையிருப்பின் பொருள் மயக்கம் ஏற்படும். எனவே, சொற்களிலும் தொடர்களிலும் பிழைவராமல் காத்தல் வேண்டும்.

திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியன பிழையாக வாராமல் தொடரை எழுதுதல் வேண்டும்.

எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) பொன்னன் தொடரோட்டத்தில் கலந்துகொண்டான்.

எழுவாய் அஃறிணையாக இருந்தால் பயனிலையும் அஃறிணையாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) பசு புல் மேய்ந்தது.

எழுவாய், ஐம்பால்களுள் எந்தப் பாலில் உள்ளதோ அதற்கேற்பப் பயனிலையைப் பெறல் வேண்டும்.

(எ.கா.) அழகன் பாடினான்.
வள்ளி ஆடினாள்.
புலவர்கள் பாடல்களை இயற்றினார்கள்.
யானை பிளிறியது.
மான்கள் ஓடின.

எழுவாய் – கள் விகுதி பெற்றால் பயனிலையும் கள் விகுதி பெறுதல் வேண்டும். எழுவாய் – அர் விகுதி பெற்றால் பயனிலையும் – அர் விகுதி பெறுதல் வேண்டும்.

(எ.கா.) மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள்.
மூவர் தேவாரத்தைப் பாடினர்.

எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.

எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலையும் பன்மையாக இருத்தல் வேண்டும்.

(எ.கா.) என் புத்தகம் இதுவன்று.
என் புத்தகங்கள் இவையல்ல.

தொடரில் காலவழு ஏற்படாமல் காத்தல் வேண்டும்.

(எ.கா.) தலைவர் நாளை மதுரையில் பேசுவார்.
நேற்று மழை பொழிந்தது.

தமிழ்

## பிழையான சொற்களைத் திருத்துதல் (வழூஉச் சொற்களைத் திருத்துதல்)

பேச்சுவழக்குச் சொற்களை அப்படியே எழுத்தில் கொண்டுவருவது தவறு. அவ்வாறு எழுதுவதனை வழூஉச் சொற்கள் எனக் கூறுவர். அவற்றுக்குரிய எழுத்துவழக்குச் சொற்களை எழுதுவதே முறை.

பயிற்சி : வழூஉச் சொற்களைத் திருத்துக.

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| அடமழை | | சுடுதண்ணி | |
| அரிவாமணை | | எண்ணை | |
| அவரக்காய் | | ஒட்டறை | |
| தவக்களை | | கவுறு | |
| சிலவு | | பச்சதண்ணி | |
| தாவாரம் | | நஞ்சை | |

தமிழ்

பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

தமிழ்மொழியில் எழுதும்போது தமிழ்ச்சொற்களையே பயன்படுத்துதல் வேண்டும். நடைமுறையில் உள்ள பிறமொழிச்சொற்களையும் அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களையும் அறிந்தால் பிறமொழிக் கலப்பின்றி எழுதலாம்.

தமிழ்ச்சொல் அறிவோம்.

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் | பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|---|
| அங்கத்தினர் | | கும்பாபிஷேகம் | |
| அர்த்தம் | | சாவி | |
| அலங்காரம் | | சரித்திரம் | |
| ஆரம்பம் | | சபதம் | |
| விஞ்ஞானம் | | சாதம் | |
| தீபம் | | பௌத்திரி | |

உரிய தமிழெண்ணைத் தேர்ந்தெழுதுக.

1. பன்னிரண்டு என்பதன் தமிழெண்

அ) கஉ ஆ) சஉ இ) உஉ

2. ஏழு என்பதன் தமிழெண்

அ) அ ஆ) ரு இ) எ

3. பதினொன்று என்பதன் தமிழெண்

அ) கக ஆ) க0 இ) கச

4. இருபத்தெட்டு என்பதன் தமிழெண்

அ) கஅ ஆ) உஅ இ) கஎ

5. இருபது என்பதன் தமிழெண்

அ) க0 ஆ) உ0 இ) ச0

கட்டுரைப் பயிற்சி : பேரிடர் மேலாண்மை (ஆழிப்பேரலை)

கடிதப் பயிற்சி : களவுபோன பொருளைக் கண்டுபிடித்துத் தரக்கோரி, காவல்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

## பண்பு

### சமுதாயப் பணிகளில் பங்கேற்றல்

**நங்கை** : அப்பா! நான் பள்ளியிலிருந்து வரும்வழியில் அரசுக் கல்லூரியில் குருதிக்கொடை முகாம் நடந்துகொண்டிருப்பதனைப் பார்த்தேன். எதற்காகக் குருதிக்கொடை தரவேண்டும்? அக்குருதியை என்ன செய்வார்கள், அப்பா! அதனைப்பற்றி விரிவாகக் கூறுங்களேன்.

**குமரன்** : குருதிக்கொடை பலரது உயிரைக் காக்கும்.

**நங்கை** : கொடையாக அளித்த குருதியை என்ன செய்வார்கள், அப்பா?

**குமரன்** : குருதி வங்கிகளில் சேமித்துப் பாதுகாப்பாக வைப்பார்கள். விபத்தில் சிக்கிக் குருதி இழந்தோருக்கும், அறுவை சிகிச்சையின்போதும் பொருத்தமான குருதிப் பிரிவைப் பயன்படுத்திக் கொள்வர்.

**நங்கை** : நானும் குருதியைத் தரலாமா, அப்பா?

**குமரன்** : இல்லை நங்கை. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவரும் ஐம்பது வயதுக்குட் பட்டவருமாகிய ஆண், பெண் இருபாலாரும் குருதி தரலாம். ஆனால், அவரது எடை நாற்பத்தைந்து கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும். மஞ்சட்காமாலை, குடற்காய்ச்சல், பால்வினை நோய் இவற்றால் தாக்கப்பட்டவரும், கருவுற்ற பெண்களும் குருதி தருதல் கூடாது. உடல்நலத்துடன் இருப்பவர் மட்டுமே குருதி தரலாம்.

**நங்கை** : குருதிக்கொடை தந்தால் அவரது குருதி குறைந்துவிடாதா?

**குமரன்** : ஒருவரது உடலில் இருந்து இருநூற்றறைம்பதுமுதல் முந்நூறு மில்லிலிட்டர் வரை மட்டுமே குருதியை எடுத்துக்கொள்வர். அக்குருதி இருபத்தொரு நாளுக்குள் உடலில் மீண்டும் சுரந்துவிடும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை குருதிக்கொடை தரலாம். அதனால், குருதி கொடுப்பவருக்கு எந்தத் தீங்கும் நேராது. புரிந்ததா நங்கை?

**நங்கை** : நன்றாகப் புரிந்தது, அப்பா! நானும் பதினெட்டு அகவைக்குப் பிறகு குருதியைக் கொடுத்துப் பலரின் உயிரைக் காப்பேன்.

1. குருதிக்கொடையினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. யாரெல்லாம் குருதி தரலாம்?
3. யாரெல்லாம் குருதி தருதல் கூடாது?
4. எவ்வளவு குருதியைக் கொடையாகத் தரலாம்?
5. குருதிக்கொடையைப் போன்று வேறு என்னென்ன கொடைகள் உள்ளன?

தமிழ்

## வாழ்க்கைத்திறன்

### சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறன்

பேருந்தில் பயணம் செய்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் தோள்மீது யாரோ கைவைப்பதாக உணர்கிறீர்கள். திரும்பிப் பார்த்தால் உங்களுக்கு அறிமுகமானவரே. அப்போது உங்கள் செயல்பாடு எப்படி இருக்கும்?

அ) அவர் தொடுவது எனக்குப் பிடிக்கும். அதனால் ஒன்றும் பேசாதிருப்பேன்.

ஆ) அவரை வாய்க்கு வந்தபடி திட்டுவேன்.

இ) அவரிடமிருந்து விலகிச் சென்றுவிடுவேன்.

இதுபோன்ற நிகழ்வு உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டதுண்டா?

பொது இடங்களிலோ நீங்கள் தனியாக இருக்கும்போதோ யாரேனும் இவ்வாறு நடந்து கொண்டால், அவரது எண்ணத்தைச் சில குறிப்புகளால் அறிந்துகொண்டு, அவரிடமிருந்து விலகிச் செல்லுதல் வேண்டும். தனியாக இருக்கும் சூழ்நிலையைத் தவிர்ப்பதே நல்லது.

## மதிப்புக்கல்வி

### எளிமை

மதுரைக்குத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் ஒருவர். குறித்த நேரத்திற்கு முன்பே தொடர்வண்டி வந்துவிட்டதனால், அவரை வரவேற்க ஒருவரும் அங்கு இல்லை. அவர் யாருக்காகவும் காத்திராமல், தான் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்குச் சென்று அறையின் திறவுகோலைக் கேட்டார். ஆனால் அங்கிருந்தவர்களோ, ‘இந்த அறை தொடர்வண்டித்துறை அமைச்சர் ஒருவருக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது, உங்களுக்குத் தரமுடியாது’ என்று மறுத்தார்கள்.

“ஐயா, அந்த அமைச்சரே நான்தான்” என்று அவர் கூறிய பிறகும்கூட அவர்கள், அதனை நம்ப மறுத்து, அவரை உள்ளே விடவில்லை. அவரின் எளிமையான தோற்றமே அதற்குக் காரணமாக இருந்தது. அதற்குள் அமைச்சர் மதுரைக்கு வந்துவிட்டார் என்னும் தகவலை அறிந்துகொண்டவர்கள், அவரைப் பார்ப்பதற்காக அந்த இடத்திற்கு வந்தார்கள்; அவரை அறைக்கு உள்ளேவிட இசையாதவர்களைக் கடிந்துகொண்டார்கள்.

அவர் யார் தெரியுமா? அவர்தாம் லால்பகதூர் சாஸ்திரி.

அவர், மிகப்பெரிய பதவியில் இருந்தும் எளிமையாக வாழ்ந்துகாட்டினார்.

1. எளிமையாக இருப்பது உங்களுக்குப் பிடிக்குமா?
2. பகட்டாக உடை, அணிகலன்கள் பிறர் அணிந்து செல்வதனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
3. எளிமையாக இருப்பதனைப்பற்றி உனது கருத்து என்ன ?

## மொழியாக்கம் செய்க.

Your parents love you very much. They give you all that they have. It is to make you healthy, strong and happy. But some of you have no idea how tired they are sometimes. You think that everything is alright with them, for they do not complain. It is your daily duty to make life easy and pleasant for them. This will give you great joy and satisfaction.

## இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. One doth the act, another hath the blow.

   பழி ஒரிடம், பாவம் ஒரிடம்.

2. Every fox must at last pay his skin to the flayer.

   பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான்.

3. Money makes many things.

   பணம் பத்தும் செய்யும்.

4. The day has eyes, the night has ears.

   பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே.

5. What comes from the cradle goes to the grave.

   தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்.

தமிழ்

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.**

“ஏதேது, மாணவருக்குப் பாடம் கற்பிக்கும் செயலிலேயே மூழ்கிவிட்டீரோ? இருநாளாக என்னுடன் உரையாடவும் வரவில்லை, வாட்டமுடன் காணப்படுகிறீர்களே, என்ன காரணம்?” எனக் கேட்டார், அந்தத் தலைமையாசிரியர். “ஐயா, தமிழ் கற்கும் மாணவருக்கு முறையான தமிழ்ப்பாட நூல்கள் இல்லையே என்றுதான் வருந்துகின்றேன். எனவே, மாணவர் படிப்பதற்கேற்ற வகையில் பாடநூலை நானே எழுதிட விழைகின்றேன். அதனால்தான், ஆசிரியப்பணியை விடுவதா பாடநூல் எழுதுவதா என இருநாளாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்” என்றார், தமிழாசிரியர்.

“நீங்கள் பாடநூல் எழுதப் போகிறீர்களா, எத்துணை மகிழ்ச்சியான செய்தி! ஆசிரியப் பணியை விட்டுவிடாமலும் பாடநூல் எழுதும் பணியை மேற்கொள்ளவும் உயர்அலுவலரிடம் ஒப்புதல்பெற்றுத் தருகிறேன். நீங்கள் மனம் வருந்தா வேண்டா. பாடநூல் எழுதுவதற்கான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள்” என அன்புடன் கட்டளையிட்டார், தலைமையாசிரியர்.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காகப் பாடநூல் எழுதிய அந்தத் தமிழாசிரியர், படிப்படியாக உயர்ந்து கல்லூரி மாணவர்களுக்கான நூல்களையும் எழுதினார். அவர்தான், பாடநூல் ஆசிரியர் பைந்தமிழ் ஆசான் எனப் போற்றப்படும் கா. நமச்சிவாயனார். 1876ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டம் (வேலூர் மாவட்டம்), காவேரிப்பாக்கத்தில் பிறந்த அவர், 1937ஆம் ஆண்டு மறைந்தார்.

### வினாக்கள்

1. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள பெயர்ச்சொற்களைக் கூறுக.
2. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள வினைமுற்றுகளைக் கூறுக.
3. பைந்தமிழ் – இலக்கணக்குறிப்பு யாது?
4. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச்சொல் எது?
5. எத்துணை மகிழ்ச்சியான செய்தி! – இச்சொற்றொடரில் எத்துணை என்பதன் பொருள் யாது?

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, ‘நான் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியரானால்’ என்னும் தலைப்பில் உரையாற்றுக.**

- தமிழ்மொழியின் இனிமை – சிறப்பு – பிறமொழியாளர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பு
- தமிழிலக்கியங்கள் – உலகமொழிகளில் மொழிபெயர்ப்பு.
- உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் – ஒருங்கிணைக்க உலகளாவிய ஊடக அமைப்பு.

- கடல் கடந்து வாழும் தமிழர்களின் பிள்ளைகள் – தமிழ்மொழியைப் பேச படிக்க உதவி.
- தாயகத் தமிழர்களின் புத்தம் புதிய இலக்கியச் செல்வங்கள் – அயலகத் தமிழர்களுக்கு விருந்து.
- பழந்தமிழரின் உயர்ந்த பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் – அயல்நாடுவாழ் தமிழர்கள் பின்பற்ற வழிகாட்டுதல்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

நாளிதழ் விளம்பரங்களைப் புரிந்துகொள்ளுதல் (மாதிரி)

கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

செந்தமிழ்ப் பயிற்றாய்வுக்கூடம்

தமிழில் பேசுவதற்குத் தயக்கமா?

தமிழில் எழுத முடியவில்லையே என மனவருத்தமா?

கவலையை விடுங்கள்! எங்களிடம் வாருங்கள்!

செந்தமிழில் இனிய எளிய பயிற்சி

காலை 10.00மணிமுதல் மாலை 5.00மணிவரை

சிறப்புத்தன்மைகள்

- ❒ தலைசிறந்த மொழிவல்லுநர்கள்
- ❒ கற்பித்தலில் தனித்தன்மை
- ❒ குறைந்த கட்டணம்

உடனே சேருங்கள்!

உங்களுக்கு ஏற்புடைய நேரத்தில் பயிற்சிபெறுங்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி (மாதிரி) எண். 45, வள்ளலார் நகர்,<br>வடலூர்,<br>கடலூர் மாவட்டம்.

வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதனைப்பற்றியது?
2. எந்த மொழியைக் கற்றுக்கொள்ளப் பயிற்சி அளிக்கப்படுகிறது?
3. எப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது?
4. பயிற்சியின் சிறப்புத்தன்மைகள் யாவை?
5. இப்பயிற்சி யாருக்குப் பயன் தரும்?

தமிழ்

தமிழ்

| எழுதுதல் | |
|---|---|
| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 4 |

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்திலுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

ஒழுக்கம் உயர்வு தரும் என்னும் பொன்மொழிக்கு இலக்கணமாய் ஒழுக்கத்தால் உயர்ந்த உத்தமர்கள் வரலாற்றில் எத்தனையோ பேர் உள்ளார்கள். ஒழுக்கத்தின் ஒன்றான வாய்மையால் அண்ணல் காந்தியடிகள் உயர்வடைந்தார். ஒழுக்கமுடையார் வாய்ச்சொல், வழுக்குகின்ற நிலத்தில் ஊன்றுகோல் போன்று உதவும்.

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

மாலையில் விண்ணிலே எழுந்த முழுமதி எங்கும் வெண்ணிலா விரித்தது. பொய்கையிலமைந்த பூங்குமுதம் முகை நெகிழ்ந்து, தேன் துளித்து மலர்ந்தது. மலையத்தெழுந்த இளங்காற்று மெல்லெனத் தவழ்ந்து நறுமணம் கமழ்ந்தது. இத்தகைய அழகு வாய்ந்த மாலைப்பொழுதில், தென்மலைச் சாரலில் மகிழ்ந்து விளையாடிய முருகனென்னும் குமரன், விண்ணிலே ஊர்ந்த வெண்மதியின் அழகினைக்கண்டு அளவிலா இன்பமுற்றான்.

| நிறுத்தக்குறிப் பயன்பாடு | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் ஏற்புடைய நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துக.

சான்றோர்களின் வாழ்வைக் கற்றல் இனிது கேட்டல் அதனினும் இனிது அவர் வாழ்வை மனமாரப் போற்றல் எளிது வாயால் புகழல் அதனினும் எளிது ஆனால் அவர் வாழ்வை அடியொற்றி வைத்து வாழ்வாங்கு வாழ்வதோ அரிது மிக அரிது அரிதாயினும் அத்துறையில் வாழ்வுத்துறையில் வெற்றி காணல் அன்றோ சிறப்பு அச்சிறப்பினை எய்துதற்குரிய செந்நெறி யாது அதனை விளக்குவதே பூங்குன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பாட்டு

| மரபு வழுக்களைத் திருத்தி எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

உரைப்பத்தியில் உள்ள மரபு வழுக்களைத் திருத்தி எழுதுக.

வீட்டுத் தோப்பில் உள்ள வாழை மரத்தின் ஓலைகளில் அணில் கன்றுகள் இரண்டு துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அவ்வேளையில் வாழைமரத்தின் கீழுள்ள புல்லைத் தின்பதற்காக ஆடுகள் கூட்டம் கூட்டமாக ஓடி வந்தன. ஆடுகள் வரும் ஓசையைக் கேட்ட அணில்கள் அஞ்சி அருகில் உள்ள தென்னை நாற்றின் மீது தாவின.

| வ. எண் | மரபு வழு | திருத்தம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

| வினா உருவாக்குதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து ஓரிரு வரியில் விடையளிக்கும் வகையில் வினாக்களை உருவாக்குக.

'பாடு' எனக் கூறியவுடன் பாடுபவர், 'ஆசுகவி'. செவிக்கினிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர், 'மதுரகவி'. சொல்லணி அமைத்துச் சுவை வளம் செழிக்கப் பாடுபவர், 'சித்திரகவி'. தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர், 'வித்தாரக்கவி'. இந்த நால்வகைக் கவிகளையும் பாடவல்ல பாவலனைப் பாவலரேறு எனத் தமிழறிந்தோர் போற்றுவர். தமிழ் மன்னர் பாராட்டுவர்.

வினாக்கள்

1. 'ஆசுகவி' என்பவர் யார்?
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________

| மரபுத்தொடர்களின் பொருள் அறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் உரையாடலில் உள்ள மரபுத்தொடர்கள் உணர்த்தும் பொருளை எழுதுக.

பாரதி: வைகறை . . . தேர்வுக்குரிய பாடங்களையெல்லாம் கரைத்துக் குடித்திருப்பாய் என நினைக்கிறேன்.

வைகறை: என்னை ஆழம் பார்க்கிறாயா? நீ மட்டும் என்ன, அனைத்து வினாக்களுக்கும் விடைகளை விரல் நுனியில் அல்லவா வைத்திருக்கிறாய்?

பாரதி: நன்றாகப் படித்தால்தானே வருங்காலத்தில் சொந்தக் காலில் நிற்க முடியும்.

| படைப்பாற்றல் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் தொடரில் உள்ள சொற்களுடன் ஆ, ஏ, ஓ ஆகியவற்றைச் சேர்த்தும் தொடரில் உள்ள சொற்களை முறைமாற்றியும் புதிய தொடர்களை உருவாக்குக.

'அவன் தான் மனிதன்'

1. அவன் மனிதன் தானா?
2. மனிதன் அவன்தான்.
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________

தமிழ்

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15மணித்துளி மதிப்பெண் : 10

**அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

1. மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக்கொண்ட நூல் ______________ .
2. விசும்பு என்னும் சொல்லின் பொருள்______________ .
3. களிறு என்பது ______________ யானையைக் குறிக்கும்.
4. பரணிக்கோர் சயங்கொண்டார் எனக் கூறியவர் ______________ .
5. கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கச் சோழனிடம் தோற்ற கலிங்க மன்ன ______________ .

**ஆ) கீழ்க்காணும் பாடலிலுள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.** 5 × 1 = 5

காடிதனைக் கடத்தும் எனக் கறுமுகிளும்
வென் மதியும் கடக்க அப்பாழ்
ஒடி இழைத்து உடல் வியர்த்த வியர்வண்றோ
உகு புணலும் பணியும் அம்மா!

தமிழ்

# யாப்பு : செய்யுள் உறுப்பு (தளை)

செய்யுள் உறுப்புகளுள் எழுத்து, அசை, சீர் ஆகியவற்றை முதற்பருவத்தில் கற்றுக் கொண்ட நீங்கள் இந்தப் பருவத்தில் தளை என்பதனைப்பற்றிக் கற்கவிருக்கிறீர்கள்.

## தளை

நின்றசீரின் ஈற்றசையும் வரும்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும். ( தளை – கட்டுதல் )

ஒன்றி வருதலாவது : நேர் முன் நேரும், நிரை முன் நிரையும் வருதல்

ஒன்றாமல் வருதலாவது : நேர் முன் நிரையும், நிரை முன் நேரும் வருதல்.

(எ.கா.) கண்/ணா மன்/னா

நேர் நேர் நேர் நேர் – நேர் அசைகள் ஒன்றி வந்தன.

உயர் /வற உயர்/நலம்

நிரை நிரை நிரை நிரை – நிரை அசைகள் ஒன்றி வந்தன.

அக/ர முத/ல

நிரை நேர் நிரை நேர் – ஒன்றாமல் வந்தன.

மலர்/மிசை ஏ/கினான்

நிரை நிரை நேர் நிரை – ஒன்றாமல் வந்தன.

தளை எழு வகைப்படும். அவை:

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

### 1. நேரொன்றாசிரியத்தளை

மாமுன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை.

(எ.கா.) பா / ரி பா / ரி

நேர் நேர் நேர் நேர் மாமுன் நேர்

தேமா தேமா

### 2. நிரையொன்றாசிரியத்தளை

விளம்முன் நிரை வருவது நிரையொன்றாசிரியத்தளை.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | பலர் / புகழ் | கபி / லர் | |
| | நிரை நிரை | நிரை நேர் | விளமுன் நிரை |
| | கருவிளம் | புளிமா | |

### 3. இயற்சீர் வெண்டளை

மாமுன் நிரையும், விள முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | அக/ர | முத/ல | |
| | நிரைநேர் | நிரைநேர் | மாமுன் நிரை |
| | புளிமா | புளிமா | |
| | நில/வரை | நீள்/புகழ் | |
| | நிரை நிரை | நேர் நிரை | விளமுன் நேர் |
| | கருவிளம் | கூவிளம் | |

### 4. வெண்சீர் வெண்டளை

காய்முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | யா/தா/னும் | நா/டா/மால் | |
| | நேர் நேர் நேர் | நேர் நேர் நேர் | காய்முன் நேர் |
| | தேமாங்காய் | தேமாங்காய் | |

வெண்பாவுக்கு உரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமே. வெண்பாவில் இவ்விரு தளைகள் தவிரப் பிற தளைகள் வாரா.

### 5. கலித்தளை

காய்முன் நிரை வருவது கலித்தளை.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | தா/மரைப்/பூ | குளத்/தினி/லே.... | |
| | நேர் நிரை நேர் | நிரை நிரை நேர் | காய்முன் நிரை |
| | கூவிளங்காய் | கருவிளங்காய் | |

### 6. ஒன்றிய வஞ்சித்தளை

கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித்தளை.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | செந்/தா/மரைக் | குளத்/தினி/லே... | |
| | நேர் நேர் நிரை | நிரை நிரை நேர் | கனிமுன் நிரை |
| | தேமாங்கனி | கருவிளங்கனி | |

தமிழ்

தமிழ்

### 7. ஒன்றாத வஞ்சித்தளை

கனிமுன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளை.

(எ.கா.) வா/னில்/வளர் திங்/களன்/ன ...

| | | |
|---|---|---|
| நேர் நேர் நிரை | நேர் நிரை நேர் | கனிமுன் நேர் |
| தேமாங்கனி | கூவிளங்காய் | |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தளை ---------வகைப்படும்.
2. மாமுன் நேர் வருவது ------------ தளை ஆகும்.
3. விளம்முன் நிரை வருவது --------- தளை ஆகும்.
4. காய்முன் நேர் வருவது ----------------தளை ஆகும்.
5. கனிமுன் நேர் வருவது----------------தளை ஆகும்.

### ஆ) குறுவினாக்கள்

1. தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. வெண்பாவுக்குரிய தளைகள் யாவை?
3. இயற்சீர் வெண்டளை எவ்வாறு அமையும்? சான்று தருக.
4. கலித்தளை எவ்வாறு அமையும்? சான்று தருக.
5. ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை வருவதனைச் சான்றுடன் விளக்குக.

# அணி

## வேற்றுமையணி

செய்யுளில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிய பின்னர், அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. – குறள்,129

தீயினால் சுடுவதும், நாவினால் தீயசொற்களைக்கொண்டு சுடுவதும் என்பது ஒற்றுமை, தீயினால் சுட்டது ஆறும்; நாவினால் சொன்னது ஆறாது என்பது வேற்றுமையாகும். எனவே, இப்பாடலில் வேற்றுமையணி இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

செய்யுளில் இருபொருளுக்கிடையேயுள்ள ஒற்றுமையைக்கூறிப் பின்னர், அவற்றை வேறுபடுத்திக்காட்டுவது ______________ அணியாகும்.

### ஆ) குறுவினா

வேற்றுமையணி என்றால் என்ன ? சான்று தந்து விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### கலந்துரையாடல் திறன்

பல்வேறு மருத்துவமுறைகள் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

### படைப்பாற்றல் திறன்

கீழ்க்காணும் பாடலை நிறைவு செய்க.

பாட்டுக்கு அழகு பொருள்
பகலுக்கு அழகு வெளிச்சம்
வீதிக்கு அழகு ________
நீதிக்கு அழகு ________
வீட்டுக்கு அழகு ________
காட்டுக்கு அழகு ________

தமிழ்

தமிழ்

பின்வரும் பாடலில் மாறியுள்ள வரிகளைப் பொருளுக்கேற்ப வரிசைப்படுத்துக.

| வரிசை மாறியுள்ள பாடல் | பொருளுக்கேற்ப வரிசைப்படுத்திய பாடல் |
|---|---|
| 1. சின்ன வாளி எடுத்தான் | ________ |
| சின்னத் தம்பி கண்ணன் | ________ |
| புதிய மகிழ்வு கொண்டான் | ________ |
| செடிக்கு நீரும் விடுத்தான் | ________ |
| பூவின் அழகைக் கண்டான் | ________ |
| செடியை நோக்கிச் சென்றான் | ________ |
| 2. வீட்டில் இருக்கக் கூடாதா | ________ |
| அங்கும் இங்கும் ஓடுகிறோம் | ________ |
| தினமும் பந்து ஆடுகிறோம் | ________ |
| வெப்பம் மிகுந்து போனதால் | ________ |
| தெப்பக் குளத்தில் நீரில்லை | ________ |
| வெயிலே நீயும் சிலநாள் | ________ |

பின்வரும் சொற்களைத் தனித்தனியே பயன்படுத்திச் சொற்றொடரைப் பெரிதாக்குக.

குதிரை ஓடும். ( விலங்கு, மிகவும், விரைவாக )

குதிரை ஓடும்.

குதிரை விரைவாக ஓடும்.

குதிரை மிகவும் விரைவாக ஓடும்.

குதிரை மிகவும் விரைவாக ஓடும் விலங்கு.

பயிற்சி : குறிப்புச்சொற்களைத் தனித்தனியே பயன்படுத்திச் சொற்றொடரைப் பெரிதாக்குக.

நான் சென்றேன்.

(காலை, நேற்று, மதுரைக்கு, மீண்டும், சென்னையிலிருந்து, விமானத்தில்)

________

________

________

________

தமிழெண்களைக் கூட்டுக.

கO + கரு =

உ௬ + ருO =

எஉ + உஅ =

கூO + எ =

கO + சச =

கட்டுரைப் பயிற்சி : மூலிகை மருத்துவம்

கடிதப் பயிற்சி : பாராட்டு மடல் ( ஒய்வு பெற்ற ஆசிரியருக்கு ).

| கையெழுத்து இதழ் : உடல்நலச் சிறப்பிதழ் | | |
|---|---|---|
| உடல்நலம் போற்றுவோம்! உளநலம் உயர்த்துவோம்! | | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்! |
| உணவும் சத்தும் | துணுக்குகள் | ஓவியம் |
| உணவுப்பொருள்கள் | பாட்டி மருத்துவம் | முதலுதவி தீ விபத்துக்கால உதவி / நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றுதல் |
| கவிதை | சிறுகதை | நாடகம் |
| குடிநீர் | வரும் முன் காப்போம்! | எய்ட்ஸ் விழிப்புணர்வு |
| கட்டுரை | பழமொழிகள் | மூலிகைகள் |
| உலக நல அமைப்பு | உடல் நலம் | வீட்டில் வளர்க்க வேண்டிய மூலிகைகள் |
| இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள் | | |

தமிழ்

## பொருள் வைப்புமுறை அறிக

குழந்தை அரும்புவுக்கு அகவை மூன்று; அவள் விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாட்டுப் பொருள்கள் இருந்த அலமாரியில் பந்தை எடுக்கச் சென்றாள். அருகிலிருந்த மாத்திரை அவள் கண்ணில்பட்டது. ஏதோ தின்பண்டம் என நினைத்து அதனை எடுத்துத் தின்றுவிட்டாள்; சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தாள். குழந்தையின் கைக்கெட்டுமாறு மாத்திரைகளை வைக்கலாமா ? வேறென்னென்ன பொருள்களைக் குழந்தையின் கைக்கு எட்டுமாறு வைத்தல் கூடாது ?

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

பாடி மகிழ்க.

### பாட்டி மருந்து

வீட்டுக்குள்ளே எல்லாம் இருக்கு
வீதியில் மருந்து கண்டது கிடக்கு!
பாட்டியைக் கேட்டால் தருவாள் நமக்கு
பக்குவ மாக அம்மியில் அரைத்து!
சுக்கு மிளகு சீரகம் இஞ்சி
சுத்தமான திப்பிலி சேர்த்து
கைக்குள் வைத்துக் கசக்கிக் கொடுப்பாள்
கண்போல் நம்மைக் காத்தும் கிடப்பாள்!

## வாழ்க்கைத்திறன்

### மனவெழுச்சிகளை எதிர்கொள்ளுதல்

அல்லிக்கு வைத்த பொருள் வைத்த இடத்தில் இருத்தல் வேண்டும். வீட்டுக்கு வருவோர் யாராவது சமையலறையிலோ வரவேற்பறையிலோ இருக்கும் பொருள்களை எடுத்தால், எடுத்த இடத்தில் வைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் சினங்கொண்டு கத்துவாள்.

சிறு வயதிலிருந்தே அவள் அப்படித்தான் என்பது அவள் வீட்டாருக்குத் தெரியும். ஆனால், அவள் வீட்டுக்கு வந்த அண்ணனின் மகள் வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் கலைத்துவிட்டதனைக் கண்டு பொங்கி எழுந்தாள்; சினத்தில் குழந்தையை அடித்துவிட்டாள். குழந்தையின் அழுகையைக் கேட்ட அனைவரும் அல்லியின்மீது குறைபட்டுக்கொண்டனர். அவளால், அவளின் இயல்பை மாற்றிக்கொள்ள இயலவில்லை.

1. அல்லி, தன் மன எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் குழந்தையை அடிக்கலாமா ?
2. சினங்கொண்டு உங்களை யாராவது அடித்ததுண்டா ? அப்போது உங்கள் மனநிலை எவ்வாறிருந்தது ?
3. உங்களுக்குச் சினம் வந்து நீங்கள் யாரையாவது அடித்தபிறகு ஏன் அடித்தோம் எனச் சிந்தித்தது உண்டா ?

## மதிப்புக்கல்வி

### சிக்கனம்

அமெரிக்காவின் புகழ்பெற்ற பணக்காரர்களுள் ஒருவர் அவர். ஒருசமயம் அவரிடம் நன்கொடை பெறுவதற்காகக் கல்லூரி மாணவர்கள் சென்றார்கள். மிகச்சிறிய விளக்கின் ஒளியில் படித்துக் கொண்டிருந்த அவர், விளக்கை அணைத்துவிட்டு அவர்களிடம் பேசத் தொடங்கினார். இவர் என்ன இப்படி ஒரு கஞ்சனாக இருக்கிறாரே! இவர் எங்கே நமக்கு நன்கொடை தரப்போகிறார் என்று மாணவர்கள் நினைத்தார்கள்.

அவர், அவர்கள் வியப்படையும் அளவுக்குக் கல்லூரியில் வகுப்பறை கட்டுவதற்காக மூன்று இலட்ச ரூபாய் கொடுத்து உதவினார். அவரைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்த மாணவர்கள், “ஐயா, எங்களுடன் பேசும்போது நீங்கள் விளக்கை அணைக்கக் காரணம் என்ன ?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், படிப்பதற்குத்தான்

விளக்குத் தேவை. உங்களுடன் பேசுவதற்குத் தேவையில்லை. சில காசுகள்தானே என்று அற்பமாக நினைத்தல் கூடாது. சிறு துளிதான் பெருவெள்ளம் ஆகிறது. சிக்கனமாக நான் இருப்பதனைப் பார்த்துவிட்டு, அதனை நீங்கள் கஞ்சத்தனம் என்று நினைத்தல் கூடாது. நான் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதனால்தான், இந்தத் தொகையை உங்களுக்கு நன்கொடையாகத் தரமுடிந்தது; சிக்கனம் என்பது வேறு, கஞ்சத்தனம் என்பது வேறு என்றார்.

1. நீ எவ்வளவு சேமித்து வைத்துள்ளாய்?
2. நீ சேமித்து வைக்காமைக்குக் காரணம் என்ன?
3. சேமிப்பதற்கான வழிமுறைகள் யாவை?

## மொழியாக்கம் செய்க.

The people of India speak several languages and have different customs. They eat different food and dress in different ways. But all of them love India because, they are the children of Mother India. Their love for the country makes them a nation. They are the proud sons and daughters of the great mother.

______________________________

______________________________

______________________________

______________________________

தமிழ்

## இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. The wise and the fool have their follows.
   இனம் இனத்தோடு சேரும்.
2. He who has an art has everywhere a part.
   கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. Being on the sea, sail being on the land, settled.
   காலத்திற்கேற்ற கோலம் கொள்.
4. No rains no grains.
   மாரியல்லது காரியம் இல்லை.
5. Bad words find bad acceptance.
   நுணலும் தன் வாயாற் கெடும்.

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

மூன்று வயது குழந்தையொன்றை அம்மை நோய் தாக்கியது. நோயின் தாக்கத்தால் அக்குழந்தை கண்ணொளி இழந்தது. குழந்தையின் நிலை கண்ட பெற்றோர் கலங்கினர்; கண்ணீர் பெருக்கினர். குழந்தையின் எதிர்காலத்தை எண்ணி விம்மி விம்மி அழுதனர். ஆண்டுகள் உருண்டோடின.

குழந்தைக்கு ஐந்து வயதாயிற்று. தொடக்கக் கல்வி கற்பிக்க எண்ணினார் குழந்தையின் தந்தை முத்தையா. குழந்தையைத் தன் மடியில் குப்புறப் படுக்கவைத்து, அதன் முதுகில் தமிழ் எழுத்துகளை எழுதிக் கற்பித்தார்.

தமிழின் வரிவடிவங்கள் குழந்தையின் மனத்துள் வரிவடிவங்களாகப் பதிந்தன. தந்தையின் மடியே குழந்தையின் தொடக்கப் பள்ளி ஆனது.

மடியில் கிடத்திக் கல்வி கற்பித்த தந்தை, குழந்தைக்கு எட்டு வயதானபோது தமிழ் இலக்கிய இலக்கணம் கற்பிக்க மாரிமுத்துக்கவிராயரிடம் சேர்ப்பித்தார்.

இலக்கண இலக்கியங்களைக் கவிராயர் குரலில் கேட்டுக் கற்று உள்ளத்திலும் உணர்விலும் தமிழை நிறைத்துக் கொண்ட அக்குழந்தை, வியக்கத்தக்க கவியாற்றலும் தமிழாற்றலும் பெற்றது.

பெற்றதன் விளைவாகத் தம் பதினேழாம் வயதிலேயே பழனிப் பதிகம், குமரகுரு பதிகம், சிவகிரிப் பதிகம், திருச்செந்தில் பதிகம் என நற்றமிழ் இலக்கியங்களைப் படைத்துத் தமிழ் அன்னைக்கு அணிசேர்த்தது.

பழனி என்னும் இயற்பெயர் கொண்ட அக்குழந்தையைத்தான், தமிழுலகம் மாம்பழக்கவிச் சிங்க நாவலர் எனப் பாராட்டிப் போற்றியது.

வினாக்கள்

1. மாம்பழக்கவிச் சிங்க நாவலரின் இயற்பெயர் என்ன?
2. மாம்பழக்கவிச் சிங்க நாவலருக்குத் தொடக்கக் கல்வி கற்பித்தவர் யார்?
3. மாம்பழக்கவிச் சிங்க நாவலருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தவர் யார்?
4. இலக்கியங்களைப் படைத்தபோது மாம்பழக்கவிச் சிங்க நாவலரின் வயது என்ன?
5. மாம்பழக்கவிச் சிங்க நாவலர் இயற்றிய நூல்களுள் இரண்டனைக் கூறுக.

தமிழ்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

| பேசுதல் திறன் – கலந்துரையாடல் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் படங்கள் உணர்த்தும் தொடர்வண்டிப் போக்குவரத்து விதிமீறல்களால் ஏற்படும் விளைவுகளைக் குறித்துக் குழுவில் கலந்துரையாடுக.



தொடர்வண்டிப் போக்குவரத்து விதிமீறல்கள்

- நிலையத்துக்குத் தொடர்வண்டி வரும்போது நடைமேடையில் உள்ள மஞ்சள் கோட்டுக்குள் நிற்றல்
- தொடர்வண்டியில் ஏறுவதற்கு நடைமேடையைப் பயன்படுத்தாமை
- இருப்புப் பாதையில் நடந்து செல்லுதல்
- தொடர்வண்டிப் பெட்டியின் நுழைவாயிலில் அமர்ந்து பயணம் செய்தல்
- தொடர்வண்டி வருகையில் ஆளில்லாக் கடவுப் பாதையைக் கடந்து செல்லுதல்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

நல்ல பாம்பு கடித்தால் உடனே வாழைமரம் இருக்குமிடத்துக்கு அரிவாளுடன் ஓடுங்கள். அடியில் ஒரு வெட்டு, நுனியில் ஒரு வெட்டுப் போட்டுத் துண்டத்தை எடுத்துவாருங்கள்.

பட்டையாக உரித்து மண் சட்டியில் அல்லது பீங்கான் கோப்பைகளில் சாறு பிழியுங்கள். காற்படி சாற்றைக் கடிபட்டவனுக்குக் கொடுங்கள்.

நல்ல பாம்புவின் நஞ்சு ஒன்றும் பண்ணாது. ஆள் கட்டாயம் பிழைத்துக் கொள்வான்.

உங்களுக்குச் செய்தி வர நேரமாகிவிட்டாலும், வாழைமரம் கொண்டுவர நேரம் ஆகிவிட்டாலும், கடி பட்டவன் பல் கிட்டிவிடும்.

தமிழ்

வாழைப்பட்டைச் சாற்றை இவன் குடிக்கமுடியாது. ஆகவே, பற்றுக் குறடால் பல்லை விலக்கி மருந்தை விடச்செய்யாதீர்கள். இதனைவிட அறியாமை வேறில்லை. பல்லை விலக்கினாலும் தொண்டையை விலக்கமுடியாது.

பாம்பு கடிபட்டவன் பற்கள் கிட்டியிருந்தால், சில வாழைப்பட்டைகளை முதலில் உரித்து, கீழே சரியாக விரித்து, அதன்மேல் அவனைப் படுக்கவைத்து விடுங்கள்; பிறகு சாறு பிழியுங்கள். சாறு பிழியவும் அவன் வாய் திறக்கவும் நேரம் சரியாக இருக்கும். பிறகு சாற்றைக் குடிப்பான்; எழுந்து நடப்பான்.

கி. ஆ. பெ. விசுவநாதம், தமிழ் மருந்துகள்

1. பாம்பு கடிக்குப் பயன்படும் மரம் எது ?
2. பாம்பு கடிக்குக் கொடுக்கப்படும் சாறு எது ?
3. பல் கிட்டுதல் என்றால் என்ன ?
4. பாம்பு கடிபட்டவனுக்குப் பற்கள் கிட்டிவிட்டால், மருந்து உட்கொள்ள முடியுமா ? முடியாதெனில், காரணம் கூறுக.
5. பாம்பு கடிபட்டவனுக்குப் பற்கள் கிட்டியிருந்தால், எவ்வாறு மருந்து கொடுத்தல் வேண்டும் ?

## எழுதுதல் திறன்

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 4 |
|---|---|

நீராரும் கடலுடுத்த நிலமடந்தை எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை நாம் நன்கறிவோம். ஆனால், அப்பாடலுக்குரிய பொருளை முழுமையாக அறிந்தவர் சிலரே. மனோன்மணியம் என்னும் நாடக நூலில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் பெ. சுந்தரனார். பாடலில், கடலால் சூழப்பட்ட உலகம் தாயாகவும், பரதகண்டம் அத்தாயின் திருமுகமாகவும், தக்காணமாகிய தென்னிந்தியா அத்திருமுகத்தில் அழகுற அமைந்துள்ள நெற்றியாகவும், தமிழ்த்திருநாடு அந்நெற்றியில் விளங்கும் பொட்டாகவும், தமிழ்மொழி அப்பொட்டிலிருந்து எழும் புதுமணமாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை நாம் ஒவ்வொரு நாளும் பாடும்போது பொருளுணர்ந்து பாடுவோம்.

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்திலுள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

இயற்கையின் எழில்மிக்க காட்சி, சங்கப் புலவர் கபிலரின் பாடலில் அழகு மிக்கதொரு நாட்டிய அரங்கமாகத் திகழ்கின்றது. மூங்கில் துளைகளில் காற்றுப் புகுந்து எழுப்பும் ஓசை குழலோசையாகவும், முழங்கி இரைக்கும் அருவி ஒலி முழவோசையாகவும், மான்களின் சத்தம் பெருவங்கியமாகவும், வண்டுகளின் முரற்சி யாழோசையாகவும் அமைந்து இனியதொரு குழுவிசையாகவும் விளங்குகின்றது. மயில் விறல்பட ஆடும் விறலியாகவும், மந்திகள் காண்போர்களாகவும் அமைந்துவிடுகின்றன.

| நாளிதழ் விளம்பரங்களைப் புரிந்துகொள்ளுதல் | செயல்பாடு – 6 |
|---|---|

## குற்றாலம் சுற்றுலா

வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டுத் திங்கள் கிழமை காலை 6.00 மணிக்குச் சென்னை வந்தடையும்.

### சுற்றுலாவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| தனியறை வசதியுடன் (தனி ஒருவருக்கு) | ரூ.3200/– |
| இருவர் தங்கும் அறை வசதியுடன் (தனி ஒருவருக்கு) | ரூ. 2950/– |
| சிறுவருக்கான கட்டணம் (4 வயதுமுதல் 10 வயதுவரை) | ரூ. 2700/– |

| | | |
|---|---|---|
| வெள்ளிக்கிழமை | காலை 04.30 | சென்னை – புறப்பாடு – இரவுப்பயணம் |
| சனிக்கிழமை | காலை 10.00 | தென்காசி – குற்றாலம் – இரவு தங்குதல் |
| ஞாயிற்றுக்கிழமை | காலை 06.00 | குற்றாலம் – தென்காசி, திருவில்லிபுத்தூர், மதுரை – இரவுப்பயணம் |
| திங்கள் கிழமை | காலை 06.00 | சென்னை வந்தடைதல் |

மேலும் விவரங்களுக்கு

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

2, வாலாசா சாலை, சென்னை – 600 002.

தொலைபேசி – 91–44–25383333

தொலைநகல் – 91–44–25361385

விளம்பரத்தைப் புரிந்து வினாக்களுக்கு விடையளிக்க.

வினாக்கள்

1. விளம்பரம் எதனைப் பற்றிக் கூறுகிறது?
2. சுற்றுலாவுக்கான நாள்கள் எத்தனை?
3. பயணம் எங்கிருந்து, எத்தனை மணிக்குத் தொடங்குகிறது?
4. நீ உன் தந்தையுடன் சுற்றுலாவுக்குச் செல்ல செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?
5. விளம்பரம் செய்துள்ள கழகம் எது?

| விண்ணப்பம் நிரப்புதல் | செயல்பாடு – 7 |
|---|---|

நூலகத்தில் உறுப்பினராவதற்கான படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிவத்தினை உரிய முறையில் நிரப்புக.

கன்னிமாரா (மாநில மையம்) பொது நூலகம், சென்னை – 8
உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

| | | |
|---|---|---|
| 1 | பெயர் :<br>(பெரிய எழுத்துகளில்) | |
| 2 | பிறந்த தேதி | |
| 3 | தந்தை பெயர் | |
| 4 | முகவரி<br>( முகவரிக்கான சான்றுடன்) | |
| 5 | பணிபுரிபவர் / மாணவர்<br>(முழு முகவரியுடன்) | |
| 6 | நிலையான முகவரி<br>தொலைபேசி/அலைபேசி | |

கன்னிமாரா (மாநில – மையம்) பொது நூலகத்தில் நூல்கள் இரவல் பெறும் உறுப்பினராகச் சேர விண்ணப்பிக்கும் நான், அந்நூலகத்தின் விதிமுறைகளின்படி நடந்து கொள்வேன். அதற்கான முன்பணம் ரூபாய் நூறு / இருநூறு/ முந்நூறு ரொக்கமாகச் செலுத்துகிறேன்.

கையொப்பம்

உத்திரவாதமளிப்பவர்
(முகவரி மற்றும் முத்திரையுடன்)

| | | |
|---|---|---|
| 7 | இமெயில் முகவரி | |
| 8 | தந்தை/கணவர்<br>பெயர், தொழில், முகவரி<br>தொலைபேசி/ செல்பேசி | |
| 9 | இரண்டு உறவினர்களின்<br>பெயர், தொழில், முகவரி<br>தொலைபேசி/ செல்பேசி | 1. |
| | | 2. |

தமிழ்

**10.** சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்

1. குடும்ப அட்டை
2. ஓட்டுநர் உரிமம்
3. பாஸ்போர்ட்
4. தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

| பழமொழிகளை அறிதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் சொற்றொடர்களைப் பொருளறிந்து நிரப்புக.

( பறந்துபோம், உலகு, உயிர் கொடுத்தோரே, கேடு, நூறு வயது, விரும்பேல், நஞ்சு )

1. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் __________ .
2. மீதூண் __________ .
3. உண்டி கொடுத்தோர் __________ .
4. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் __________ .
5. பசி வந்திடப் பத்தும் __________ .
6. நொறுங்கத் தின்றால் __________ .
7. உண்டி முதற்றே __________ .

| குறுக்கெழுத்துச்சொல் விளையாட்டு | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு, உணவாகும் மருந்துகளைக் கண்டறிக. கண்டறிந்தவற்றைக் கட்டங்களில் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | 3 |
| | 4 | | | | | 6 | |
| | | | | | | | |
| | | 7 | | | | | |
| | | | | | 5 | | |
| 8 | | | | | | | |
| | | | | | | 9 | |
| 10 | | | | | | | |

தமிழ்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



இடமிருந்து வலம்

2. வயிற்றுச் சூட்டைத் தணிக்கும் ________________ .

4. தொண்டைக்கட்டைத் தொலைக்கும் ________________ .

7. உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் செய்யும் ________________ .

8. மணமூட்டி உணவு விருப்பைத் தரும் ________________ .

10. வளியை வெளியேற்றும் ________________ .

வலமிருந்து இடம்

9. கண்குளிர்ச்சியையும் அறிவுத்தெளிவையும் உண்டாக்கும் ____________ .

மேலிருந்து கீழ்

1. நெஞ்சிலுள்ள சளியை நீக்கும் ________________ .

3. பித்தத்தைப் போக்கும் ________________ .

6. நீர்க்கோவையை நீக்கும் ________________ .

கீழிருந்து மேல்

1. குருதியைத் தூய்மைப்படுத்தும் ________________ .

| படைப்பாற்றல் – சொல் உருவாக்கம் | செயல்பாடு – 10 |
|---|---|

படத்தில் உள்ள எழுத்துகளைச் சேர்த்து மயங்கொலிச் சொற்களை உருவாக்குக.



## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15மணித்துளி மதிப்பெண் : 10

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

அ) தளை என்னும் சொல்லுக்கு ______________ எனப் பொருள்.

ஆ) தளை ______________ வகைப்படும்.

இ) காய்முன் நேர் வருவது ______________ தளை.

ஈ) வெண்பாவுக்குரிய தளைகள் ______________ , ______________ .

உ) கனி முன் நேர் வருவது ______________ தளை.

**2. அட்டவணையில் உள்ள சொற்களை அசை பிரித்து வாய்பாடு எழுதித் தளையைக் கண்டறிக.** 5 × 1 = 5

| வ. எண். | சொற்கள் | அசை | வாய்பாடு | தளை |
|---|---|---|---|---|
| 1 | வை/கை ஆ/று | நேர்/நேர் நேர்/நேர் | மா முன் நேர் | நேரொன்றாசிரியத் தளை |
| 2 | காவிரிக் கரை | | | |
| 3 | கங்கைக் கரை | | | |
| 4 | நர்மதை ஆறு | | | |
| 5 | தென்பெண்ணை ஆறு | | | |

தமிழ்

# பெயர்ச்சொல் : மூவிடப் பெயர்கள்



## வேற்றுமை உருபேற்கும்போது திரியும் பெயர்கள்

வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இவற்றைக் குறித்து முன்வகுப்பில் தெளிவாகப் படித்திருப்பீர்கள். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களை ஏற்றுவரும்போது எவ்வாறு திரியும் என்பது குறித்துக் காணலாம்.

### தன்மைப் பெயர்கள்

நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்.

நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.

1. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது என் எனத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| யான் | ஐ | – | என்னை |
| | ஆல் | – | என்னால் |
| | கு | – | எனக்கு |
| | இன் | – | என்னின் |
| | அது | – | எனது |
| | கண் | – | என்கண் |

2. யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது எம் எனத் திரியும்.

   எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எங்கண் என வரும்.

3. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் நம் எனக் குறுகும்.

   நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நங்கண் எனக் குறுகி வரும்.

4. யாங்கள், நாங்கள் என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது எங்கள் எனத் திரியும். எங்களை, எங்களால், எங்களுக்கு, எங்களின், எங்களது எனத் திரிந்து வரும்.

### முன்னிலைப் பெயர்கள்

நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயர். நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

1. நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நின் எனவும், உன் எனவும் மாறும்.

| | | | |
|---|---|---|---|
| | ஐ | – | நின்னை, உன்னை |
| | ஆல் | – | நின்னால், உன்னால் |
| நீ | கு | – | நினக்கு, உனக்கு |
| | இன் | – | நின்னின், உன்னின் |
| | அது | – | நினது, உனது |
| | கண் | – | நின்கண், உன்கண் |

2. நீர் என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நும், உம் எனத் திரியும்.

நும்மை, நும்மால், நுமக்கு, நும்மின், நுமது, நும்கண்;

உம்மை, உம்மால், உமக்கு, உம்மின், உமது, உம்கண்.

3. நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நுங்கள், உங்கள் என மாறுபடும்.

நுங்களை, நுங்களால், நுங்களுக்கு, நுங்களின், நுங்களது;

உங்களை, உங்களால், உங்களுக்கு, உங்களின், உங்களது.

### படர்க்கைப் பெயர்கள்

தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது கீழ்க்காணுமாறு திரியும்.

1. தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது தன் என மாறும்.

| | | | |
|---|---|---|---|
| | ஐ | – | தன்னை |
| | ஆல் | – | தன்னால் |
| தான் | கு | – | தனக்கு |
| | இன் | – | தன்னின் |
| | அது | – | தனது |
| | கண் | – | தன்கண் |

2. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் தம் எனத் திரிந்து வேற்றுமை உருபேற்கும்.

தமிழ்

தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தங்கண்.

3. தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர் தங்கள் எனத் திரியும்.

தங்களை, தங்களால், தங்களுக்கு, தங்களின், தங்களது, தங்கண்.

தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என்எம் நின்னும் ஆம்பிற
குவ்வின் அவ்வரும், நான்கு ஆறு இரட்டல் – நன்னூல், 247

பயிற்சி

நீ என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அடையும் மாற்றத்தை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நீ + ஐ | = | நின்னை | நீ + ஆல் | = | ______ |
| நீ + ______ | = | ______ | நீ + ______ | = | ______ |
| நீ + ______ | = | ______ | நீ + ______ | = | ______ |

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது ______ எனத் திரியும்.

அ) உன் ஆ) என் இ) நின்

2. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது______ எனத் திரியும்.

அ) எம் ஆ) உம் இ) தம்

3. நீர், நீவிர், நீயிர், நீங்கள் ஆகியன ______பெயர்கள்.

அ) முன்னிலை ஒருமை ஆ) முன்னிலைப் பன்மை இ) தன்மைப் பன்மை

2. பொருத்துக.

1. தன்மை ஒருமை – தாங்கள்
2. தன்மைப் பன்மை – தான்
3. முன்னிலை ஒருமை – யான்
4. படர்க்கை ஒருமை – நாம்
5. படர்க்கைப் பன்மை – நீ

தமிழ்

3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாங்கள் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் 'ஐ' என்னும் வேற்றுமை உருபு ஏற்கும்போது ________ எனத் திரியும்.
2. நான், யான் என்பவை ________ பெயர்கள்.
3. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது ________ எனக் குறுகும்.

ஆ) குறுவினாக்கள்

1. வேற்றுமை உருபுகள் யாவை?
2. மூவிடப் பெயர்கள் யாவை?
3. தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எவ்வாறு திரியும்?
4. நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது எவ்வாறு திரியும்?
5. தாங்கள் என்னும் படர்க்கைப் பெயருடன் வேற்றுமை உருபுகள் சேரும்போது எவ்வாறு திரியும்?

## புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேருவது புணர்ச்சி ஆகும்.

வாழை + மரம் = வாழைமரம்.

வாழைமரம் – இதில் 'வாழை', 'மரம்' என்னும் இருசொற்கள் இணைந்து ஒரு சொல்லாவதனை அறிவீர்கள். வாழை என்னும் சொல் நிலைமொழி. அதன் ஈற்றெழுத்து (ழ்+ஐ=ழை) 'ஐ'. அதனை அடுத்து வரும் (ம் + அ = ம) மரம் என்னும்சொல் வருமொழி. அச்சொல்லின் முதல் ம் என்பது. இதில் இருசொற்களும் இயல்பாகப் புணர்கின்றன. அதனால், இதனை இயல்புப் புணர்ச்சி என்பர்.

வாழை + பழம் = வாழைப்பழம்.

வாழை, பழம் ஆகிய சொற்கள் இரண்டும் இணையும்போது, ப் – என்னும் மெய் தோன்றுகின்றது. இதனை விகாரப் புணர்ச்சி என்பர். இவ்விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.கா.) | தமிழ் + பாடம் | = தமிழ்ப் பாடம் | – | தோன்றல் புணர்ச்சி | (ப் –தோன்றுதல்) |
| | கல் + சிலை | = கற்சிலை | – | திரிதல் புணர்ச்சி | ( ல், ற் – ஆதல் ) |
| | மரம் + வேர் | = மரவேர் | – | கெடுதல் புணர்ச்சி | ( ம் – கெடுதல் ) |

தமிழ்

தமிழ்

### அ) குற்றியலுகரப் புணர்ச்சி

கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறும் நெடிலடுத்தும் இரண்டு முதலிய பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது, தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்பர். குற்றியலுகரம் பற்றியும் அதன் வகைகள் பற்றியும்முன் வகுப்புகளில் படித்திருக்கிறீர்கள். இங்குக் குற்றியலுகரப் புணர்ச்சி குறித்துக் காண்போம்.

1. நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யைவிட்டு நீங்கும்.

(எ.கா.) பந்து + ஆட்டம் = பந்த் + உ + ஆட்டம் – உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் என்னும் விதிப்படி உ நீங்கியது. உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி, பந்த் + ஆட்டம் = பந்தாட்டம் என நிலைமொழி இறுதிமெய், வருமொழியின் முதல் எழுத்தாகிய உயிரோடு இணைந்து புணர்ந்தது.

குறிப்பு : நிலைமொழி ஈற்று முற்றுகரமும், வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருப்பின், குற்றியலுகரப் புணர்ச்சியைப்போலப் புணரும்.

(எ.கா.) உயர்வு (வ் + உ) + அடைந்தார் = உயர்வடைந்தார்

2. நிலைமொழியின் ஈறு குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதல் எழுத்து, ய கரமாக இருந்து புணரும்போது, உகரம் இகரமாகத் திரியும். இதனைக் குற்றியலிகரப் புணர்ச்சி என்பர்.

(எ.கா.) குரங்கு + யாது = குரங் ( க் + உ ) + யாது
= குரங்க் + இ + யாது
= குரங்கியாது.

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற்றொ ரோவழி – நன்னூல், 164

( உக்குறள் – குறுகிய உகரம்; இய்யாம் – இகரமாகும். )

3. டகரம் ( ட் ), ஊர்ந்துவரும் நெடில்தொடர்க் குற்றியலுகரம், றகரம் ( ற் ) ஊர்ந்து வரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வருமொழியோடு இணையும்போது, அவை ஊர்ந்துவரும் ஒற்று இரட்டித்துப் புணரும்.

(எ.கா.) காடு + கோழி = காட் (ட்+உ) + கோழி = காட்டுக்கோழி
ஆறு + பாலம் = ஆற் (ற்+உ) + பாலம் = ஆற்றுப்பாலம்
கிணறு + தவளை = கிணற் (ற்+உ) + தவளை = கிணற்றுத்தவளை

நெடிலோ டுயிர்த் தொடர்க்குற் றுகரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. – நன்னூல், 183

4. வல்லினத்தொடர்க் குற்றியலுகரம் தவிர, ஏனைய குற்றியலுகரங்களின்முன் வரும் வல்லினம், அல்வழிப் புணர்ச்சியில் மிகாது.

(எ.கா.) நாகு + கடிது = நாகு கடிது
எஃகு + சிறிது = எஃகு சிறிது
வரகு + தீது = வரகு தீது
குரங்கு + பெரிது = குரங்கு பெரிது
தெள்கு + சிறிது = தெள்கு சிறிது

வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி – நன்னூல், 181

5. வேற்றுமைப் புணர்ச்சியில், இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகாது.

(எ.கா.) தெள்கு + கால் = தெள்குகால் (தெள்கு – பேன்)
எஃகு + சிறுமை = எஃகுசிறுமை
நாகு + தலை = நாகுதலை

இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை – நன்னூல், 182

6. மெல்லினத்தொடர்க் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லினத்தொடராய் முடியும்.

(எ.கா.) செம்பு + குடம் = செப்புக்குடம்
சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கரும்பு + வில் = கருப்புவில்
சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்

மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே. – நன்னூல், 184.

பயிற்சி : விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. பொன் + வளையல் = ______________
2. வட்டம் + ______ = வட்டப்பலகை
3. குளம் + கரை = ______________
4. குருத்து + ______ = குருத்தோலை
5. உலகு + உயிர்கள் = ______________
6. இரும்பு + ______ = இருப்பாணி

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வாழை + மரம் = வாழைமரம் என்பது ______________

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) விகாரப் புணர்ச்சி இ) உடம்படுமெய்

2. மரம் + வேர் = மரவேர். இது ______________

அ) தோன்றல் விகாரம் ஆ) திரிதல் விகாரம் இ) கெடுதல் விகாரம்

3. கன்று + ஆ என்பது ______________ எனப் புணரும்.

அ) கற்றா ஆ) கன்றா இ) கறா

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| இயல்புப் புணர்ச்சி | – | கற்கோட்டை |
| தோன்றல் விகாரம் | – | மரவேல் |
| கெடுதல் விகாரம் | – | வாழைப்பழம் |
| திரிதல் விகாரம் | – | பொன்வளையல் |

### ஆ) குறுவினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?
2. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன ? அஃது எத்தனை வகைப்படும் ?
3. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் – சான்றுதந்து விளக்குக.
4. டகர, றகரக் குற்றியலுகரப் புணர்ச்சிக்குச் சான்று தருக.
5. குற்றியலுகரப் புணர்ச்சியில் வல்லினம் மிகா இடங்கள் இரண்டனுக்குச் சான்று தருக.
6. மென்தொடர்க் குற்றியலுகரம் வன்தொடராய் முடிவதற்குச் சான்று காட்டுக.

## வகுப்பறைத்திறன்கள்

### புரிதல் திறன்

**1. பின்வரும் பத்தியிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

ஒருவேலை இன்று மாளை மலை பெய்யலாம். அப்படியானால், நான் கேட்டதய் நீ வாங்கி வற முடியாது. எனவே, அறுச்சுவை விருந்து இன்ரு நடைபெறுமா, நடைபெறாதா என உருதியாகச் சொல்ல முடியாது.

2. பின்வரும் சொற்றொடர்களை வரிசைப்படுத்திக் கதையாக எழுதுக.

1. வழியில் முயல் ஒன்று தூங்குவதனைப் பார்த்தது.
2. உடனே பெரிய மானை முதலில் பிடிக்க நினைத்தது.
3. முயல் அங்குஇல்லை.
4. எனவே உணவு தேடி அலைந்தது.
5. சிங்கம் ஏமாற்றமடைந்தது.
6. திரும்ப வந்து முயலைப் பார்த்தது.
7. சிங்கம் ஒன்று காட்டில் வாழ்ந்து வந்தது.
8. அதனைத் தின்ன நினைத்தது.
9. ஒருநாள் அதற்கு மிகவும் பசித்தது.
10. அதன் பின்னால் ஓடியது.
11. அப்பொழுது ஒருமான் ஓடுவதனைக் கண்டது.
12. மானைப்பிடிக்க முடியவில்லை.

இக்கதையிலிருந்து நீயறிவது என்ன ?
இக்கதை எந்தப் பழமொழியை நினைவூட்டுகிறது ?

## மொழித்திறன் பயிற்சி

### செயல்திட்டம்

### அ) சொற்களை வகைப்படுத்துதல்

பெயர், வினை, இடை, உரிச்சொற்களைக் கண்டறிந்து வகைப்படுத்தல் வேண்டும்.

மார்கழி, நடந்தான், உம், சால, பாடினான், மயிலம், உறு, என்று, கடி, கொல், அம்ம

| | | |
|---|---|---|
| பெயர்ச்சொற்கள் | – | மார்கழி, மயிலம் |
| வினைச்சொற்கள் | – | நடந்தான், பாடினான் |
| இடைச்சொற்கள் | – | உம், என்று, கொல், அம்ம |
| உரிச்சொற்கள் | – | சால, உறு, கடி |

தமிழ்

பயிற்சி : வகைப்படுத்துக.

தாமரை, கால், தவ, எழுதினான், ஆனால், வென்றான், மற்று, சால, பாரி, நடந்தான், எனவே, நனி.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல் |
|---|---|---|---|
| ____________ | ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ | ____________ |

## ஆ) ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

ஒரு பொருளுக்குப் பல்வேறு சொற்கள் காணப்பெறுதல் மொழியின் வளத்தைக் காட்டும். சொற்கள் பயன்படுத்தும் இடத்திற்கேற்பப் பொருள் தரும். ஒரு பொருள் குறித்த பல சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை சொற்பொருளின் விரிவை மேலும் எடுத்துக் காட்டும். நாம் பயன்படுத்துகையில் மொழிவளம் பெருகும். அவற்றுள் சில:

(எ.கா.) அழகு – பொலிவு, எழில், வனப்பு

இரக்கம் – அருள், பரிவு, கருணை

கிளி – தத்தை, சுகம், கிள்ளை

மலை – வெற்பு, சிலம்பு, பொருப்பு

கதிரவன் – ஆதவன், பகலவன், ஞாயிறு

கீழ்க்காணும் ஒருபொருள் குறித்த பலசொற்களை எழுதுக.

வயல் – ____________, ____________, ____________.

கடல் – ____________, ____________, ____________.

நெருப்பு – ____________, ____________, ____________.

## இ) தமிழெண்களுக்கு ஏற்ற அரபு எண்களைப் பொருத்துக.

சO – 89

கக – 37

௯எ – 40

அக௯ – 25

உ௫ – 11

தமிழ்

ஈ) கட்டுரைப் பயிற்சி

விண்வெளியில் இந்தியச் சாதனைகள்

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

குசேலபுரி சமஸ்தானத்துக்கு உழவுதான் பிரதானத்தொழில். குபேரபூபதி பட்டத்திற்கு வந்ததும் சமஸ்தானத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என எண்ணினார். முக்கியஸ்தர்களுடன் ஆலோசித்து, விஞ்ஞான வசதிகளைப் பயன்படுத்தித் தொழிற்புரட்சி செய்தார். சினிமா தியேட்டர்கள், ஓட்டல்கள், டிபார்ட்மெண்டல் ஸ்டோர்கள் பெருகின. பிளசர் கார்கள், பஸ்கள் ரயில்கள், ஏரோப்பிளேன்கள் எங்கும் நிரம்பின. இதற்கெல்லாம் தேவையான பணத்தைத் தன் கஜானாவிலிருந்து வாரிவாரிக் கொடுத்தார். ஆனால், விவசாயத்தொழிலை அடியோடு மறந்துபோனார். அதன் விளைவு, நாட்டில் உணவுப்பஞ்சம் தலைவிரித்தாடியது. விவசாய இலாகாவைப் பெருக்கவேண்டும், உத்தியோகஸ்தர்களை அப்பாயிண்ட் செய்யுங்கள் என ஆலோசனை கூறினார் ஒருவர்.

### தமிழ்ச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சமஸ்தானம் | – | அரசு | பிரதானம் | – | முதன்மை |
| முக்கியஸ்தர் | – | முதன்மையானவர் | விஞ்ஞானம் | – | அறிவியல் |
| சினிமா தியேட்டர் | – | திரையரங்கம் | பஸ் | – | பேருந்து |
| பிளசர் கார் | – | மகிழுந்து | ரயில் | – | தொடர்வண்டி |
| ஏரோப்பிளேன் | – | வானூர்தி | கஜானா | – | கருவூலம் |
| இலாகா | – | துறை | உத்தியோகஸ்தர் | – | அலுவலர் |
| அப்பாயிண்ட் | – | பணிஅமர்த்தல் | டிபார்ட்மெண்டல் ஸ்டோர் | – | பலபொருள் அங்காடி |

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் பழகுந்திறன்

பள்ளியில் ஆண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும்பொருட்டு, மாணவர்களுக்குப் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. விழாவைச் சிறப்பாக நடத்த பொறுப்பான மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களுள் பாரதியும் வளவனும் ஒரே வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பாரதி, அதே பள்ளியில் படித்து வருபவன்; வளவனோ, நடுநிலைப் பள்ளியிலிருந்து இப்பள்ளியில் சேர்ந்தவன். அதனால், வளவனுக்கு ஆண்டுவிழாவைப்பற்றி அவ்வளவாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு நடைபெற்ற ஆண்டுவிழாவில் பாரதி சிறப்பாகச் செயல்பட்டிருந்தான். அதனால், விழா நிகழ்வுகள்பற்றிப் பாரதி, வளவனுக்கு எடுத்துரைத்தான்.

தமிழ்

இருவரும் ஆண்டுவிழாவுக்குத் தேவையானவை குறித்துக் கலந்துரையாடித் திட்டமிட்டனர். அந்தக் கலந்துரையாடலில் வளவனின் எண்ணங்களுக்கும் மதிப்பளித்துப் பாரதி ஏற்றுக்கொண்டான். இருவரும் நண்பர்களுடன் செயல்பட்டு ஆண்டுவிழாவைச் சிறப்பாக நடத்தினர்.

உங்கள் பள்ளியில் புதிதாகச் சேர்ந்த மாணவர்களுடன் நீங்கள் எவ்வாறு பழகுகிறீர்கள் ?

உங்கள் வகுப்பில் எல்லா மாணவர்களுடனும் நன்கு பழகுவது யார் ? அந்த மாணவனின் பெயரை எழுதுக.

## மதிப்புக்கல்வி

### உழைப்பின் அருமை

இரஷ்ய நாட்டில் புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவ்வப்போது உழவுத்தொழிலையும் செய்து வந்தார். ஒருமுறை தொடர்வண்டி நிலையத்தில் அவர் நின்றிருந்தபோது, அங்கிருந்த பெண்மணிஒருவர்அவரைக் கையைத்தட்டி அழைத்தார். அவரின் தோற்றம் ஒரு கூலிக்காரர்போல் இருந்ததோ என்னவோ ?

“ஐயா, தொடர்வண்டி புறப்படும் நேரமாகிவிட்டது. என் கணவர் அருகிலுள்ள சிற்றுண்டி விடுதியில் உள்ளார். அவரை, இங்கு அழைத்து வாருங்கள். நீங்கள் செய்கின்ற இந்த உதவிக்குக் கூலி பெற்றுக் கொள்ளுங்கள்” எனக் கூறிய அப்பெண்மணி, அவருடைய கணவரின் தோற்ற அடையாளங்களைக் குறிப்பிட்டார்.

அவரும் ஒப்புக்கொண்டு அப்பெண்மணியின் கணவரை உடனடியாக அழைத்து வந்தார். அவர் செய்த வேலைக்கான கூலியாகச் சிறுதொகையைப் பெற்றுக்கொண்டார்.

சிறிதுநேரங்கழித்த பின்னர்தான் அப்பெண்மணிக்கு, அவர்தாம் இரஷ்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் என்பது தெரிந்தது.

தான்செய்த தவற்றை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டார் அப்பெண்மணி. ஆனால் டால்ஸ்டாயோ, “அதனால் என்ன, நீங்கள் சொன்ன வேலையை நான் கூலிக்குத்தான் செய்தேன். அதனால், செய்த வேலைக்காகப் பெற்றுக்கொண்ட கூலியைத் திருப்பித் தரமாட்டேன்” என்றார். புகழ் பெற்றவராயினும் உழைப்பின் அருமையை அவர் அறிந்திருந்தார்.

உழைத்து உண்ணும் உணவே சுவைக்கும். உழைக்காமல் உண்பது பிறர் உழைப்பைச் சுரண்டுவதற்கு ஒப்பாகும். எந்த வயதினராக (இயலாதோர் தவிர) இருப்பினும், உழைத்தே உண்ணுதல் வேண்டும். அப்பொழுதுதான் அந்த வீடும் நாடும் முன்னேறும்.

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில். – குறள்: 1065

தமிழ்

**மொழியாக்கம் செய்க.**

It is bad to talk ill of someone behind his back. Don't think you will not be found. Usually such remarks find their way to the person with your name attached. Experienced people know this and never indulge in back-biting. You should understand your limitations when you argue with someone about a point.

**இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.**

1. One flower makes no garland.

    தனிமரம் தோப்பாகாது.

2. Little wealth little care.

    மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை.

3. Look before you leap.

    ஆழம் அறியாமல் காலை விடாதே.

4. Something is better than nothing.

    ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சருக்கரை.

5. Though he endeavours all he can.

    புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

உரிமை என்பது பிறர் கொடுப்பதுமன்று; மற்றொருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்து கிடப்பது. உரிமையாவது, உயிர்கட்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு பெரும் இயற்கைக்கொடை. உரிமை எல்லார்க்கும் பொதுவானது. வானத்தில் மேகம் தவழ்வது போலவும், கடலில் அலை எழுவது போலவும், பறவை அழகிய சிறகை வீசிப் பறப்பது போலவும் பெண் தனது உள்ளத்தெழும் விருப்பவழி நடக்கும் உரிமையுடையவளாதல் வேண்டும். அவ்வுரிமையைச் சிறைப்படுத்துதல் பெரும்பாவம். பெண், அடிமை வாழ்வு நடத்த நேரிடின் அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளையும் அடிமையுணர்வுடன் பிறக்கும். பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர் புரிவதன்று. ஆணுடன் வாழ்ந்து அன்பை வளர்ப்பது பெண்ணின் உரிமைக்கடன்.

திரு.வி.க., பெண்ணுரிமை

**வினாக்கள்**

1. உரிமை என்பது எத்தன்மைத்து ?
2. பெண்ணுரிமையை விளக்க ஆசிரியர் கையாளும் உவமைகள் யாவை ?
3. பெரும்பாவம் என ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார் ?
4. பெண்ணுக்குரிய கடமை யாது ?
5. உரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

கீழ்க்காணும் திருப்பூர்க் குமரன், தில்லையாடி வள்ளியம்மையுடன் நடத்தும் கற்பனை உரையாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் பேசுக.

திருப்பூர்க் குமரன் : வணக்கம், அம்மையே! தங்களைச் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

தில்லையாடி வள்ளியம்மை : வணக்கம், குமரா! தேசியக்கொடி காத்த பெருமைக்குரியவர் நீரன்றோ! உம்மைச் சந்திப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான்.

திருப்பூர்க் குமரன் : இந்தியாவில் பிறந்து வாழ்ந்த தங்கள் பெற்றோர் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினது ஏன் என அறிந்து கொள்ளலாமா ?

தில்லையாடி வள்ளியம்மை : நெசவுத் தொழில் செய்து வந்த என் தந்தைக்குப் போதுமான வருவாய் கிடைக்காததனால், தென் ஆப்பிரிக்காவுக்குக் குடி பெயர்ந்ததாக என் தாய் கூறியிருக்கிறார்.

திருப்பூர்க் குமரன் : தென் ஆப்பிரிக்காவில் பிறந்த நீங்கள், காந்தியடிகளை எவ்வாறு சந்தித்தீர்கள் ?

தில்லையாடி வள்ளியம்மை : வழக்குரைஞராகக் காந்தியடிகள் அங்குப் பணியாற்றி வந்தார். அப்போது, அந்நாட்டு உச்ச நீதிமன்றம் திருமணம் குறித்த ஒரு தீர்ப்பினை இந்தியர்களுக்கு எதிராக வெளியிட்டது. அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள், தங்களின் உரிமையைக்காக்க அறப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள் அந்தப்போராட்டத்துக்குக் காந்தியடிகள் தலைமையேற்று நடத்தினார். அவர் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. பெண்கள் திரண்டு, பேரணியாகக் களமிறங்க என் தாயுடன் நானும் கலந்து கொண்டேன்.

திருப்பூர்க் குமரன் : அம்மையே, மிகவும் சிறு வயதிலேயே தாங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு, செயற்கரிய வரலாறு படைத்து வீட்டீர்களே!

தில்லையாடி வள்ளியம்மை : ஆம். போராட்டத்தில் ஈடுபடும்போது எனக்குப் பதினைந்து வயதுதான்.

திருப்பூர்க் குமரன் : அம்மையே, உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் எங்களைப் போன்ற இளைஞர்களுக்குச் சிறந்த வழிகாட்டுதலாக அமைந்தது எனில் அது மிகையன்று. தங்களைச் சந்தித்தது நான் பெற்ற பெரும்பேறு என உவந்து விடைபெறுகின்றேன். நன்றி அம்மா.

தில்லையாடி வள்ளியம்மை : தேசியக்கொடிக்காக உங்களுடைய இன்னுயிரை இழந்தீர்களே! அந்தச்செயல் அனைவரும் போற்றுதற்கு உரியதன்றோ! மிகுந்த மகிழ்ச்சி, சென்று வாருங்கள்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் பாடலை வாய்விட்டுப் படிக்க.

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!
கண்டறிவாய்! எழுந்திரு நீ! இளந்தமிழா,
கண்விழிப்பாய்! இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை
அனைத்தையும்நீ படைப்பாய்! இந்நாள்
தொண்டுசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெ ழுந்தே!

தமிழ்

தமிழ்

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி!
அயராதே! எழுந்திருநீ! இளந்தமிழா,
அறஞ்செய்வாய்! நாமடைந்த
துயரத்தைப் பழிதன்னை வாழ்வினிலோர்
தாழ்மையினைத் துடைப்பாய் இந்நாள்
செயல்செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் சீறி வந்தே,

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை
உனக்குவரும் தீமை அன்றோ!
பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா,
வரிப்புலியே பிற்றை நாளுக்
கணிசெய்யும் இலக்கியம் செய்! அறத்தைச்செய்!
விடுதலைகொள் அழகு நாட்டில்!
பணிசெய்வாய்! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் பழநாட் டானே,

எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த
சிங்கமே! இன்றே, இன்னே
புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய்
புத்துணர்வைக் கொணர்வாய் இங்கே
அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் அழகு காப்பாய்
இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும்
முதற்பணியாம் எழுக நன்றே!

பாரதிதாசன், தமிழியக்கம்

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 4 |
|---|---|

மொழி என்பது, கருத்தைப் பிறர்க்கு உணர்ச்சியோடு விளக்கக்கூடிய ஆற்றல் உடையதாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மொழி அழகு பெறுகின்றது.

பழந்தமிழ் இலக்கண நூலாகிய 'தொல்காப்பியத்தில்' இந்நிலை 'சுவை' எனப்படும்; இசைத் தமிழில் 'குரல்' எனப்படும்; நாடகத்தமிழில் 'விறல்' எனப்படும்.

இவ்வுணர்ச்சியோடு கூடிய கருத்தைச் சொல் வாயிலாக வெளியில் இயக்குவது இயற்றமிழ்; இசை வாயிலாக விளக்குவது இசைத்தமிழ்; நடிப்பு வாயிலாக விளக்குவது நாடகத்தமிழ்.

தமிழுக்கு மூன்று தன்மைகளும் பொருந்தியிருப்பதனாலேயே அதன் நுட்பம் அறிந்த தமிழர் 'முத்தமிழ்' என அழைக்கலாயினர்.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



| நாளிதழ் விளம்பரங்களைப் புரிந்துகொள்ளுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் விளம்பரத்தைப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.




வினாக்கள்

1. மேற்கண்ட விளம்பரம் எதனைப் பற்றியது ?
2. யாருடைய கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்படுகிறது ?
3. விழா எங்கு நடைபெறுகின்றது ?
4. கவிதை நூலை வெளியிடுபவர் யார் ?
5. உனக்கு யாருடைய கவிதைத் தொகுப்பு நூல் பிடிக்கும் ?

தமிழ்

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்தில் அமைந்த சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுக.

ஆடற்கலை என்பது முத்தமிழில் நாடகக்கலையில் அடங்கும். நடனம், நாட்டியம் என்பதும் ஆடற்கலையைக் குறிப்பனவே. இக்கலை பழங்காலத்தில் 'கூத்துக்கலை' எனப்பட்டது. கட்புலனாம் இன்பத்தைத் தரவல்லது ஆடற்கலை. உடற்சோர்வையும், உள்ளத்துயரையும் போக்கும் வடிகால்கள் ஆடல்பாடல்கள். மக்கள் மனம் நிறைவுற்றபோதெல்லாம் ஆடிக் களித்தனர். ஆடல் நிகழ்வதற்கு அரங்குகள் இருந்தன. மரநிழல்களிலும், கோவில் முற்றத்திலும் ஆடினர். மாடம், மாளிகை, மண்டபங்களில் எல்லாம் மகளிர் சிலம்பார்ப்ப ஆடினர். கைவழிக் கண்களும், கண்வழி மனமும் செல்ல ஆடுதலே ஆடலின் நுட்பமாகும். ஆடற்கலையில் வல்லவராகக் கூத்தரும், விறலியரும் திகழ்ந்தனர்.

| வரைபடத்தைப் புரிந்துகொள்ளும் திறன் | செயல்பாடு – 7 |
|---|---|

நீங்கள் அண்ணாசாலை பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். ஊருக்குப் புதிதாக வந்த ஒருவர், எழில் மருத்துவமனைக்குச் செல்ல உங்களை வழி கேட்கிறார். கீழ்க்காணும் வரைபடத்தைக்கொண்டு, நீங்கள் புதியவருக்கு வழிகாட்டுவதனை ஐந்து வரிக்குமிகாமல் தொடராக எழுதுக.



| சொல்விளையாட்டு | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் கட்டங்களில் மறைந்துள்ள வரலாறு படைத்த பெண்மணிகளின் பெயர்களைக் கண்டுபிடிக்க.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வே | லு | நா | ச் | சி | யா | ர் | டி | ச | டீ | ப | டி |
| இ | சொ | தி | ட் | ள | மூ | த் | து | ரோ | ன் | ணு | மி |
| ரா | ந | சா | னி | யா | மி | ர் | சா | ஜி | இ | கூ | சு |
| ணி | ரா | சி | ன் | ஜா | த | ம | தி | னி | ந் | லு | ட் |
| ம | ன | ரி | பி | டி | உ | ஷா | சா | தே | தி | க | ல |
| ங் | ள் | லு | டு | கொ | ளி | லு | ரே | வி | ரா | ஸ் | பு |
| க | ல் | ப | னா | சா | வ் | லா | தெ | ண | கா | து | ப் |
| ம் | ற் | யு | ங | ய் | ம | ஆ | னை | ஷ் | ந் | ரி | சு |
| மா | றோ | லீ | ட் | னா | ஏ | ஈ | ன் | ளு | தி | பா | எஸ் |
| ள் | மா | ம் | அ | லை | ச | ஞ் | அ | மு | ரு | கா | எம் |
| மு | த் | து | ல | ட் | சு | மி | ம் | னு | ஐ | ந் | ட |
| மை | ம் | ய | ளி | ள் | வ | டி | யா | லை | ல் | தி | இ |

| செயல்திட்டம் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனைகளின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.


ஜான்சிராணி


அஞ்சலையம்மாள்


அம்புஜத்தம்மாள்


வேலுநாச்சியார்


கஸ்தூரிபா காந்தி


வை. மு. கோதைநாயகி

| தொகைச்சொற்களை விரித்தெழுதுதல் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் தொடரில் வண்ண எழுத்தில் அமைந்துள்ள தொகைச்சொற்களை விரித்தெழுதுக.

| | |
|---|---|
| நானிலம் போற்றும் முத்தமிழே!<br>நால்வர் பாடிய நற்றமிழே!<br>மூவேந்தர் ஆண்ட திருநாட்டில்<br>முச்சங்கம்அமைத்து வளர்த்தனரே!<br>எட்டுத்தொகையும் எழுந்ததுவே!<br>எண்டிசையும் புகழ் பரவியதே!<br>ஐம்பெருங்காப்பியம்படைத்தளித்தே<br>ஐந்திணை மக்களும் மகிழ்ந்தனரே! | |

| படைப்பாற்றல் | செயல்பாடு – 11 |
|---|---|

கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, எட்டடிப் பாடலொன்றனை எழுதுக.



## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15 மணித்துளி　　　　உயர் மதிப்பெண் : 10

**1. கீழ்க்காணும் அட்டவணையை நிரப்புக.**　　　　5× 1 = 5

| வ.எண் | சொல் | புணர்ச்சியின் வகை |
|---|---|---|
| 1. | இணையம் + தளம் = இணையத்தளம் | கெடுதல் புணர்ச்சி |
| 2. | திரு + குறள் = திருக்குறள் | |
| 3. | கடல் + கரை = கடற்கரை | |
| 4. | நாடு + பண் = நாட்டுப்பண் | |
| 5. | ஆறு + மணல் = ஆற்றுமணல் | |
| 6. | செம்பு + பட்டயம் = செப்புப்பட்டயம் | |

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**　　　　5× 1 = 5

1. வேற்றுமை ____________ வகைப்படும்.
2. ஏழாம் வேற்றுமைக்குரிய உருபு ____________ .
3. முன்னிலை ஒருமைப் பெயர் ____________ ஆகும்.
4. நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் ____________ எனக் குறுகும்.
5. தாம் என்னும் படர்க்கைப் பன்மைப் பெயர் ____________ எனத் திரிந்து வேற்றுமையுருபு ஏற்கும்.

தமிழ்

# ஆகுபெயர்

## கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர்

ஒரு பொருளின் பெயர், தனக்குரிய பொருளைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும். பதினாறு வகையான ஆகுபெயர்களுள் இறுதியாக உள்ள நால்வகை ஆகுபெயர்களை இந்தப் பருவத்தில் அறிந்து கொள்வோம்.

### 1. கருவியாகு பெயர்

யாழ் கேட்டு மகிழ்ந்தாள்.

இத்தொடரில், யாழ் என்னும் கருவி இசைக்கு ஆகி வந்ததனால் கருவியாகு பெயர்.

கருவியாகு பெயர் : கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகிவரும். (எ.கா.) வீணை கேட்டு மெய்ம்மறந்தேன்.

### 2. காரியவாகு பெயர்

நான் சமையல் கற்றேன்.

இங்குச் சமையல் என்னும் காரியத்தின் பெயர் அதன் காரணத்திற்குப் (கருவிக்கு) பெயராகி வருவது காரியவாகு பெயர்.

காரியவாகு பெயர் : காரியப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகிவருவது. (எ.கா.) நன்னூல் கற்றேன்.

### 3. கருத்தாவாகு பெயர்

திருவள்ளுவரைப் படித்துப்பார்.

இத்தொடரில் திருவள்ளுவர் என்பது, அவரால் இயற்றப் பெற்ற நூலுக்கு ஆகிவந்ததனால், கருத்தாவாகு பெயராயிற்று.

### 4. உவமையாகு பெயர்

ஒருவரைப் பார்த்து, நாரதர் வருகிறார் எனல்.

இத்தொடரில் நாரதர் என்னும் பெயர் அவரைக் குறிக்காமல், அவரைப்போன்ற (கலகமூட்டுபவர்) வேறொருவர்க்கு ஆகிவந்தது. அதனால், இஃது உவமையாகு பெயராயிற்று.

பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்

ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.

– நன்னூல், 290

பயிற்சி : கீழ்க்காணும் தொடர்களிலுள்ள ஆகுபெயர்களின் வகைகளைக் கண்டறிக.

அ) கம்பரைப் படித்தேன்.

ஆ) காளை வந்தான்.

இ) திருக்குறள் கற்கிறேன்.

ஈ) வானொலி கேட்டு மகிழ்ந்தேன்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினா

கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. கருவிப் பொருளைக் குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்துக்கு ஆகிவருவது ________ ஆகுபெயராகும்.
2. நான் சமையல் கற்றேன். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் ________ ஆகும்.

ஆ) குறுவினாக்கள்

1. கருவியாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.
2. நன்னூல் கற்றேன். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயரை விளக்குக.
3. கருத்தாவாகு பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
4. வேல்விழி பார்த்தாள். இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயரை விளக்குக.

## பொருள்கோள்

### அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள்

ஒரு செய்யுளிலுள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொள்ளும் முறையைப் பொருள்கோள் என்பதனை நினைவு கூர்வோம்.

எண்வகைப் பொருள்கோள்களுள், முதல் ஐந்து பொருள்கோளையும் அறிந்துகொண்ட நீங்கள், இந்தப் பருவத்தில் இறுதியாக உள்ள மூன்று பொருள்கோளையும் அறிந்துகொள்ளலாம்.

1. அளைமறிபாப்புப் பொருள்கோள்

பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக்

தமிழ்

கூட்டிப் பொருள் கொள்வது அளைமறிபாப்புப் பொருள்கோள். (அளை – புற்று, பாப்பு – பாம்பு.)

(எ.கா.)
தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே.

இப்பாடலில் ‘வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே’ என்னும் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும்.

## 2. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

(எ.கா.)
கட்டிக் கரும்பு கசக்கும் மிகக்கனிந்த
எட்டிக் கனியினிக்கும் என்னூரில் – பட்டியுள
காளை படிபால் கறக்குமே நல்லபசு
வேளை தவிரா துழும்.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் விளங்காது. இதில் உள்ள சொற்களைக் கட்டிக் கரும்பு இனிக்கும்; மிகக்கனிந்த எட்டிக்கனி கசக்கும்; பட்டியிலிருக்கும் காளை மாடு நேரந்தவிராது உழும். நல்ல பசு படி பால் கறக்கும் எனப் பொருள் கொள்வதற்கு ஏற்ப அடிதோறும் மாறிக்கிடக்கின்ற சொற்களைப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு : மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது.

## 3. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

தமிழ்

(எ.கா.) மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே.

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள்கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அளை என்பதன் பொருள் ________ .
2. பாடலின் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்வது ________ பொருள்கோள் ஆகும்.
3. செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கேற்பக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்வது ________ பொருள்கோளாகும்.
4. செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது ________ பொருள்கோளாகும்.

### ஆ) குறுவினாக்கள்

1. பொருள்கோள் என்பது யாது ?
2. கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்குச் சான்று தந்து விளக்குக.
3. மொழிமாற்றுப் பொருள்கோளுக்கும் கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்கும் உள்ள வேறுபாடு யாது ?
4. அளைமறிபாப்புப் பொருள்கோள் என்பது யாது ? சான்று தருக.
5. அடிமறிமாற்றுப் பொருள்கோள் எவ்வாறு வரும் ? சான்று தந்து விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

படைப்பாற்றல்

வானொலி உரைச்சித்திரம் அமைத்தல்

உன் ஊர்த்திருவிழா குறித்து வானொலி உரைச்சித்திரம் அமைக்க.

அறிக்கை எழுதுதல் : உங்கள் பள்ளியில் நடைபெற்ற குடியரசுநாள் கொண்டாட்ட நிகழ்வுகளை அறிக்கையாக எழுதுக.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

அ) உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக.

1. கொண்டல் ( வேகம், தாகம், மேகம் ) ______________ .
2. ஆகுலம் (வருத்தம், சோர்வு, தளர்வு ) ______________ .
3. தாமம் ( அணி, ஆடை, மாலை ) ______________ .
4. புரிசை ( அகழி, வாயில், மதில் ) ______________ .
5. மல்லல் ( குளம், களம், வளம் ) ______________ .

ஆ) கையெழுத்து இதழ் ஒன்றனை உருவாக்குக.

| கையெழுத்து இதழ் (மாதிரி வடிவம்) | | |
|---|---|---|
| சிறுசேமிப்புச் சிறப்பிதழ் | | |
| பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை | | |
| துணுக்குகள் | ஓவியம் | உரையாடல் |
| சிறுசேமிப்புக் குறித்த துணுக்குகள் | சேமிப்பை விளக்கும் படங்கள் | சேமிக்கும் வழிகள் |
| கவிதை | சிறுகதை | நாடகம் |
| சிறுதுளி பெருவெள்ளம் | வரவு எட்டணா செலவு பத்தணா | சேமிப்பில்லா நாடு கூரையில்லா வீடு |
| கட்டுரை | பழமொழிகள் | பாடல் |
| சிறுசேமிப்பும் அதன் பயன்களும் | சிக்கனம் வீட்டைக் காக்கும் சேமிப்பு நாட்டைக் காக்கும் | சேமிப்பு |
| இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள் | | |

இ) கதையை நீ விரும்புமாறு முடிக்க.

கதிரவன் மறைந்து காரிருள் மெல்லமெல்ல வானைக் கவ்வத் தொடங்கியது. அவ்வேளையில் ஊருக்கு நடுவே ஒருவீட்டின்முன் மக்கள் கூட்டமாகத் திரண்டிருந்தனர். அவ்வீட்டுத் திண்ணையில் பாடகர் ஒருவர் பாடிக்கொண்டிருந்தார். கூடியிருந்தோர் தங்களை மறந்து இசையைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்போது, அவ்வழியே சிறுவன் ஒருவன் வந்தான். அவனும் கூட்டத்தில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். சிறிதுநேரம் கடந்ததும், அச்சிறுவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். அவனிடம் பெரியவர் ஒருவர், "ஏனப்பா அழுகிறாய்?" என்று கேட்டார். அழுகையை நிறுத்தாமலேயே அவன் சொல்லத் தொடங்கினான். "ஐயா, எங்கள் வீட்டில் ஆடு வளர்க்கிறோம். ஒருநாள்..........

ஈ) பொருந்தாத தமிழெண்களை வட்டமிடுக

| | | |
|---|---|---|
| கக | – | 11 |
| உஉ | – | 12 |
| கஉ | – | 17 |
| ரு | – | 5 |
| ௲O | – | 10 |

உ) கட்டுரைப் பயிற்சி : தமிழர் திருநாள்.

ஊ) கடிதப் பயிற்சி : நண்பனை ஊர்த்திருவிழாவிற்கு வருமாறு கடிதம் எழுதுதல்.

## வாழ்க்கைத்திறன்

### சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன்

எட்டாம் வகுப்பு முடித்ததும் மணிமேகலைக்குத் திருமணம் செய்துவைக்க, அவள் பெற்றோர் எண்ணினர். இதனை அறிந்த அவள், திருமணம் ஆகும்வரையாவது படிக்கிறேன் எனப் பெற்றோரிடம் கேட்டுக்கொண்டாள். அவள் தற்பொழுது ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள்.

பெற்றோர் திருமணம் செய்துவைத்துவிடுவார்களோ என்னும் கவலை அவளை வாட்டிக் கொண்டிருந்தது. வகுப்பாசிரியரிடம் தன் நிலையைக் கூறி, இதற்கு ஒரு தீர்வு வேண்டினாள். திருமண வயது, பெண்கல்வியின் தேவை ஆகியவற்றை அவளின் பெற்றோரிடம் எடுத்துக்கூறித் திருமணத்தைத் தள்ளிப்போடவும் மேற்கொண்டு படிக்க வைக்கவும் உதவுவதாக வகுப்பாசிரியர் ஆறுதல் கூறி அவளை அனுப்பிவைத்தார். கூறியவாறே அவளின் பெற்றோரைச் சந்தித்து மணிமேகலையை மேற்கொண்டு படிக்கவைக்க ஒப்புக்கொள்ளச் செய்தார். மணிமேகலை தனக்கேற்பட்ட சிக்கலை உரியமுறையில் வகுப்பாசிரியரிடம் கூறியதனால், அவளுக்கொரு தீர்வு கிடைத்தது.

வாழ்க்கையில் சிக்கல் ஏற்படுவது இயற்கை. ஆனால், அதற்காகத் துவண்டுவிடாமல், நம்பிக்கைக்கு உரியவரிடத்தில் தன் சிக்கலை எடுத்துக்கூறி வழிகாண்பதே சிறந்தது; அப்படியில்லாமல், மனத்திற்குள்ளேயே வைத்துக்கொண்டு கவலைப்படுவதனால் யாதொரு பயனும் இல்லை.

## மதிப்புக்கல்வி

### தன்னம்பிக்கை

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர் அவர். படிப்பில் நாட்டம் இல்லாததனால், கையிலிருந்த சிறிதளவு பணத்துடன் சென்னைக்குச் சென்றார்.

பணம்தான் கையில் குறைவாக இருந்ததே தவிர, அவரிடம் இரண்டு மூலதனங்கள் இருந்தன. ஒன்று தன்னம்பிக்கை; மற்றொன்று, எந்த வேலையாக இருந்தாலும் அதில் உயர்வுதாழ்வு பார்க்காமல் வேலை செய்யும் இயல்பு.

தமிழ்

மிதிவண்டிக் கடை ஒன்றில் மிகக் குறைந்த வருமானத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அலுவலகத்தைக் கூட்டிப் பெருக்குபவர் அன்று வரவில்லையென்றால், அந்த வேலையையும் அவரே செய்வார். மற்றத் தொழிலாளர்கள் கேலி செய்தபோதும், அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை.

உழைப்பின் காரணமாக, இராயல் மிதிவண்டி நிறுவனம் என்று தனியாக ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார். படிப்படியாக முன்னேறி ஈசன் பொறியியல் நிறுவனம் தொடங்கி, இன்று ஈசன் குழும நிறுவனங்களில் எழுநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உழைத்து வருகின்றார்கள். தன்னம்பிக்கை கொண்டு உழைப்பால் உயர்ந்தவர்தாம் தொழிலதிபர் ஈசுவரன்.

**மொழியாக்கம் செய்க.**

There is a beauty in nature. The pathless woods give us pleasure. We sit under the green trees. We enjoy the beauty of multi-coloured flowers. The songs of the birds fill the air with sweet music. Squirrels keep running about. They leap from tree to tree. How brisk they are! The forest is alive with different kinds of animals.

**இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.**

1. Anger is sworn enemy.
   கோபம் குலத்தைக் கெடுக்கும்.

2. Break my head and bring a plaster.
   பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதுபோல.

3. There is danger in men's smiles.
   தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்.

4. Like hand and glove.
   நகமும் சதையும் போல.

5.. Wealth is best known by want.
   நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

தமிழ்

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.

ஒழுக்கமே ஒருவற்குப் பெருமையும் சிறுமையும் தருவதாகும். ஒழுக்கம் இல்லாதவன் உயர்குடிப் பிறப்பினனாயினும் அச்சிறப்பினை இழப்பான். இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் என்றே வள்ளுவரும் குறிப்பார்.

வேதியன், கற்ற வேதத்தை மறந்தாலும் பின்னும் ஓதி அவ்வறிவைப் பெற்றுக்கொள்ளலாம். அவன் குலவொழுக்கம் குன்றுவானாயின் எல்லா நலங்களும் இழந்தொழிவான். ஆதலின், ஒழுக்கம் உடைமையே உயர்குடிப் பிறப்பாகும். அதுவே எல்லார்க்கும் சிறப்பினைத் தருவது. உயிரினும் மேலாக ஓம்பத்தக்கது என்பர்.

அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து தெளிந்தாலும் இருமைக்கும் துணையாவது ஒழுக்கமேயாகும். இந்த உண்மைகளை அறிந்த சான்றோர் என்றும் ஒழுக்கத்தில் தவற மாட்டார்கள். தவறுவாராயின் அடையத் தகாத பெரும்பழி வந்து சாரப் பெறுவர். அன்னார் மறந்தும் தீய சொற்களை வாயால் கூறார்.

### வினாக்கள்

1. உரைப்பத்தியின் மையக்கருத்து யாது ?
2. உரைப்பத்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள எதிர்ச்சொற்களைக் கூறுக.
3. இருமைக்கும் துணையாவது ஒழுக்கமே – இத்தொடரில் இருமை என்பதன் பொருள் யாது ?
4. உரைப்பத்திக்கு ஏற்புடைய திருக்குறள் கூறுக.
5. ஒழுக்கமுடைமை – இச்சொற்றொடர் போன்று உடைமை என முடியக்கூடிய மூன்று சொற்களைக் கூறுக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துக் குழுவில் கலந்துரையாடுக.

தமிழ் அறிஞர்களே! தமிழ்நாடெங்கும் தமிழ்ச்சங்கங்கள் நிறுவுங்கள்; தமிழ்ப்பாடம் சொல்லுங்கள்; கலைச்செல்வத்தை வாரி வழங்குங்கள்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானால் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாடு புத்துயிர் பெற்றுவிடும்.

அக்காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லாரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக் கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர்.

‘எந்த மொழியும் நமது சொந்த மொழிக்கு இணையாகாது’ என்று தமிழ்நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர்; ‘தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்’ என்று

முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர்! அதனை எய்தியே தீர்வோம்! பணி செய்ய வாரீர்!

– ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழின்பம்

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
| --- | --- |

கீழ்க்காணும் உரைப்பத்தியை வாய்விட்டுப் படிக்க.

அமிழ்தம் என்பது அழகிய இனிய தமிழ்ச்சொல். அச்சொல்லின் இனிமைக்கு அதன்கண் உள்ள சிறப்பு ழகரமே சான்று. இயற்கை நலம் கெழுமிய இன்பத் தமிழ்மொழியே இனிமை வளம் கொழிப்பது. தமிழ் என்னும் சொல்லுக்கே இனிமை என்னும் பொருளுண்டு. கற்பதற்கும் கேட்பதற்கும் களித்து உரையாடுவதற்கும் எளிமையும் இனிமையும் வாய்ந்தது இம்மொழி. அமிழ்தம்போன்று ஆருயிர் தழைக்கச் செய்யும் ஆற்றல் உடையது.

இந்நாள் உலகில் வழங்கும் மொழிகள் மூவாயிரம். அவற்றுள் பழைமையும் இலக்கிய வளமும் பொருந்திய மொழி நந்தம் செந்தமிழ் மொழி. முன்னைப் பழமொழிக்கும் முன்னைப் பழமொழியாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய் இனிமையே உருவாய் இலங்குகின்றது.

எழுத்து, சொல், பொருள் அமைதிகளால் உயர்வுற்றது. பல்வேறு சொல்வளத்தால் தனித்தியங்கும் ஆற்றல் உடையது. குறைவறத் திருந்திய செம்மைகொண்டது. ஆதலின் உயர்தனிச் செம்மொழி எனப் போற்றும் ஆற்றல் உடையது.

உயர்தனிச் செம்மொழியாகிய நந்தம் செந்தமிழில் இனிய பொருள்களைக் குறிக்கும் சொற்களெல்லாம் தனிச் சிறப்புடையன. குழல், யாழ், எழில், பழம், மழை, எழிலி, அழகு, மழலை, தழை, உழை, முழவு, உழவு, அமிழ்து முதலாய சொற்களை நோக்குங்கள். எல்லாச் சொற்களும் வாயால் சொல்லவே நல்லின்பம் விளைவிப்பனவாக உள்ளன. தமிழுக்கே உரிய சிறப்பு ழகரம் அச்சொற்கள் அனைத்தினும் ஒலிப்பதனைக் காணலாம்.

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 4 |
| --- | --- |

மாணவன் கற்பனவற்றைக் கசடறக் கற்றல் வேண்டும்.

ஐயம் திரிபுகளாகிய குற்றங்கள் அகலக் கற்கும் கல்வியே பயனுடையதாகும். ஆதலின், 'கற்க கசடறக் கற்பவை' என்பார். தெளிவுறக் கற்ற கல்வியே உளத்திற்குத் தீஞ்சுவை பயக்கும்.

உலகில் எண்ணிறந்த நூல்கள் உள்ளன. பரந்த கடலைப் போன்று விரிந்து நிறைந்துள்ளன. அத்தனையும் கற்றறிதல் எத்தகையார்க்கும் ஏலாத செயலே. ஆதலின் வள்ளுவர், கற்பவை என்னும் சொல்லால் நூல்களைப் பாகுபாடு செய்கிறார். கற்றற்குரிய நூல்களையே கற்றல் வேண்டும் என்பதனை வற்புறுத்துகின்றார்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்களை உணர்த்தும் நூல்களையே ஓதியுணர்தல் வேண்டும்.

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்தில் அமைந்த சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுக.

இன்று தமிழர் திருநாளாம் பொங்கல் விழா; தைத்திங்கள் நாள் விழா; தமிழினத்தின் தனி விழா; பண்பாட்டுத் திருவிழா. இந்த மகிழ்ச்சி வெள்ளத்துக்குக் காரணம் இதுதானா!

ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது! அனைவர் முகத்திலும் மகிழ்ச்சிப் பொங்கல் பூத்துக் குலுங்குகின்றது. உலகின் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள்தான் பொங்கல்.

மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்ற அன்புப்பெருக்கம், நன்றிகாட்டல், பொதுமை நாட்டம், இயற்கை போற்றல், சிற்றுயிர் காத்தல், புதுமை வேட்டல், இன்பம் கூட்டல் முதலிய உணர்வுகள் ஒட்டுமொத்தமாகப் பொங்கிப் பெருகிடும் பொன்விழாவே பொங்கல் நன்னாள்!

வளமையின் அடையாளமே அறுவடைக்காலம்! நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழுது, பண்படுத்தி, ஆடிப்பட்டம் தேடி விதைப்பவர்கள் சிற்றூர்வாழ் பெருமக்கள்! அவர்களின் உழைப்பின் பயனே இப்பொங்கல் திருநாள்.

| இணைப்புச்சொல் பயன்பாடு | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் இருதொடரை 'ஆயினும்' என்னும் இணைப்புச்சொல் சேர்த்து ஒரே தொடராக்குக.

(எ.கா.) நேற்றிரவு பெருமழை பெய்தது; பள்ளியில் மாணவர் வருகை மிகுதியாய் இருந்தது.

நேற்றிரவு பெருமழை பெய்தது ஆயினும் பள்ளியில் மாணவர் வருகை மிகுதியாய் இருந்தது.

1. கண்ணனுக்கு உடல்நலமில்லை; தேர்வெழுதச் சென்றான்.
2. தமிழரசனுக்குக் காலில் காயம் ஏற்பட்டது; ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டான்.
3. அறிவழகனார் தள்ளாத வயதுடையவர்; தாமே தம் வேலைகளைப் பார்த்துக்கொண்டார்.
4. சேரன் வறுமையில் வாடினான்; உயர்கல்வி பெறுவதில் உறுதியாய் இருந்தான்.
5. வளவன் சோர்வாக இருந்தான்; நீந்தி அக்கரைச் சேர்ந்தான்.

| அட்டவணைப்படுத்துதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் அமைந்துள்ள ஆகுபெயர்களைக் கண்டறிந்து, அவற்றை வகைப்படுத்துக.

பொன்மாலைப் பொழுது. வீட்டுக்குள் நுழைந்த சுடர்விழி, இனிய குழல் கேட்டு மெய்ம்மறந்து நின்றாள். 'சுடர், ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்?' எனத் தந்தையின் குரல் கேட்டு தன்னிலைக்கு வந்தாள் சுடர்விழி. 'அப்பா, அண்ணன் நன்கு குழலூதுகின்றான் அல்லவா!' என வியப்புடன் கூறினாள். 'ஆம், உன் அண்ணனை நல்ல இசைப்பள்ளியில் சேர்த்துவிடலாம் சுடர்விழி' என்றார், அவளின் தந்தை.

தமிழ்

அவரருகில், தம்பி நூலொன்றனைப் படித்துக் கொண்டிருந்தான். 'செல்வா, என்ன படிக்கிறாய் ?' எனக் கேட்டாள் சுடர்விழி. 'அக்கா, நான் திருவள்ளுவரைப் படிக்கிறேன்' என்றான், செல்வம். அவனருகில் இருந்த வேல்விழி, 'அக்கா, நானும் கம்பரைப் படிக்கிறேன்' என்றாள். அவர்களிருவரும் கூறியதனைக் கேட்ட சுடர்விழி, 'நானும் இன்று நன்னூல் கற்கப்போகின்றேன்' என்றாள். அப்போது, வாயிற்கதவு தட்டப்பட்டு, 'நான் உள்ளே வரலாமா ?' எனத் தந்தையின் நண்பருடைய குரலைக் கேட்ட செல்வம், 'அப்பா, பேச்சாளர் வந்துவிட்டார்' எனக் கூறிக்கொண்டே கதவைத் திறக்கச் சென்றான்.

| வ. எண் | சொற்றொடர் | ஆகுபெயரின் வகை |
|---|---|---|
| 1. | குழல் கேட்டு மெய்ம்மறந்து நின்றாள் | கருவியாகுபெயர் |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

| சொல்லுருவாக்கம் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களில் இடைஎழுத்தை நீக்கி, இடையில் இரண்டு அல்லது மூன்று எழுத்தைச் சேர்த்துப் புதியசொற்களை உருவாக்குக.

(எ.கா.) அறம் – அமுதம், அப்பம், அன்னம், அரங்கம், அறிமுகம், அழுத்தம்

கலம் – _____, _____, _____, _____, _____, _____.

தரம் – _____, _____, _____, _____, _____, _____.

பணம் – _____, _____, _____, _____, _____, _____.

மரம் – _____, _____, _____, _____, _____, _____.

| தொடர் அமைத்தல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் சொற்களைப் பெயராகவும் வினையாகவும் கொண்டு தொடர் அமைக்க.

(எ.கா.) படி – ஒவ்வொரு வீட்டு மாடிக்கும் படி உண்டு. (பெயர்)

– தேர்வுக்குரிய பாடங்களைப் படி. (வினை)

மறை

__________

__________

அணி

__________

__________

தமிழ்

காய்

நாடு

கலை

| படைப்பாற்றல் திறன் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துணர்ந்து, நாலடிப் பாடல் ஒன்று எழுதுக.

கிழக்கு வெளுத்துக் கீழ்வானம் சிவந்து, கதிரவன் தோன்றும் காட்சி, கண்கொள்ளாக் காட்சி. சில்லென்ற காற்று மேனியைக் குளிரூட்டும்; கொட்டும் அருவி ஓசை; கூவும் குயிலோசை; பல்வகைப் பறவைகளின் சிறகு ஓசை செவிகளில் இனிமை சேர்க்கும். ஆடும் மயிலின் நடனம் கண்களுக்கு விருந்து படைக்கும்.

( இக்காட்சியினை ஓவியர் கண்டால் வரைந்துவிடுவார்; சிற்பி கண்டால் செதுக்கிவிடுவார்; கவிஞராகிய நீங்கள் பாடல் எழுதத் தொடங்கிவிட்டீர்களே! )

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15 மணித்துளி உயர் மதிப்பெண் : 10

1. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடையளிக்க. 5× 1 = 5

   1. இரட்சணிய யாத்திரிக நூலின் ஆசிரியர் யார்?
   2. இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் யாது?
   3. யூதர்கள், இயேசுநாதரை எவ்வாறு துன்புறுத்தினார்கள்?
   4. யூதர்கள், தம்மைத் துன்புறுத்தியபோது இயேசுநாதர் இறைவனிடம் வேண்டியது யாது?
   5. இறைவனின் உண்மையான அடியவர் யார்?

2. கீழ்க்காணும் வினாவுக்கு ஐந்துவரிக்கு மிகாமல் விடையளிக்க. 1× 5 = 5

   உலக இரட்சகர் இயேசுநாதர் – இக்கூற்றை நிறுவுக.

இலக்கணம்

# யாப்பு : செய்யுள் உறுப்புகள்

(அடி, தொடை)

## அடி

சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும். குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என அடி ஐவகைப்படும்.

1. குறளடி : அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது குறளடி எனப்படும்.

(எ.கா.) முக்தி வேண்டுமேல்
பக்தி வேண்டுமால்
சத்தி யம்இது
புத்தி நெஞ்சமே.

2. சிந்தடி : அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.

(எ.கா.) பழுதி லாத பயிர்த்தொழில்
பழுதி லாது பயிற்றவே
பழுதி லாது பலதொழில்
பழுதி லாது பயிற்றினர்.

3. அளவடி : அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

(எ.கா.) தாய்மொழி தாயினும் தகவிற் போற்றுவன்
ஆய்மொழி யாளர்தம் அன்புக்கு ஏற்றவன்
காய்மொழி யாவதுங் கடிந்து மாற்றுவன்
வாய்மொழி தப்பிடா வகையில் ஆற்றுவன்

4. நெடிலடி : அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.

(எ.கா.) ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீள்நிலத்தில்
பாடும் புலவர் புகழ்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே!

5. கழிநெடிலடி : அடிதோறும் ஆறு அல்லது அதற்குமேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதனைக் கழிநெடிலடி எனக் கூறுவர்.

(எ.கா.) வாழ்வினில் செம்மை வேண்டும்
வாய்மையே பேசல் வேண்டும்
பாழ்ச்செயல் விலக்கல் வேண்டும்
பண்பினைக் காத்தல் வேண்டும்

தமிழ்

தாழ்வினை அகற்ற வேண்டும்
தருக்கினை விடுதல் வேண்டும்
சூழ்நிலை உணர்தல் வேண்டும்
சோம்பலைப் போக்க வேண்டும்

இப்பாடல் அடிதோறும் ஆறுசீர்கள் பெற்றுள்ளதனால், இதனைக் கழிநெடிலடி என்பர். பாடலிலுள்ள சீர்களை எண்ணி, இதனை அறுசீர்க்கழிநெடிலடி என்பர். இதுபோல் ஏழுசீர்கள் இருந்தால் எழுசீர்க்கழிநெடிலடி என்றும், எட்டுச் சீர்கள் இருந்தால் எண்சீர்க்கழிநெடிலடி என்றும் கூறுவர்.

தொடை

மலர்களைத் தொடுப்பதுபோலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது தொடை எனப்படும். (தொடை – தொடுக்கப்படுவது; தொடை – மாலை). பாவின் ஓசையின்பத்திற்கும் சிறப்பிற்கும் இத்தொடை வேண்டுவதாகும். தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.

தொடை எண்வகைப்படும். அவை : 1. மோனைத்தொடை, 2. எதுகைத்தொடை, 3. முரண்தொடை, 4. இயைபுத்தொடை, 5. அளபெடைத்தொடை, 6. இரட்டைத்தொடை, 7. அந்தாதித் தொடை, 8. செந்தொடை.

அவற்றுள் முதல் ஐந்து தொடைக்கான விளக்கங்களைக் காண்போம்.

1. மோனைத்தொடை : செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. – குறள், 467

இக்குறட்பாவில் முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதனால், இது மோனைத்தொடை.

2. எதுகைத் தொடை : அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத்தொடை எனப்படும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. – குறள், 1

இக்குறட்பாவில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் க என்னும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது. எனவே, இஃது அடியெதுகைத்தொடை எனப்படும்.

3. முரண் தொடை : அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். – குறள், 628

இப்பாடலில் முதலடியில் இன்பம் என்றும், இரண்டாம்அடியில் துன்பம் என்றும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. எனவே, இஃது அடிமுரண்தொடை எனப்படும்.

தமிழ்

4. இயைபுத்தொடை : அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத்தொடை எனப்படும்.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டத் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்.

இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வந்துள்ளதனால் அடிஇயைபுத் தொடை ஆயிற்று.

5. அளபெடைத் தொடை : அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. – குறள், 15

இப்பாடலில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால், அடியளபெடைத் தொடை எனப்படும்.

தொடை விகற்பங்கள்

நான்குசீர்களையுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைக்கொண்டு தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். இவ்வேழும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய ஐந்தும் பொருந்தத் தொடை விகற்பம் முப்பத்தைந்து வகைப்படும்.

மோனை

1. இணைமோனை (1, 2)

நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. – குறள், 99

2.பொழிப்பு மோனை (1, 3)

ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. – குறள், 22

3. ஒரூஉ மோனை (1, 4)

ஓர் அடியுள் முதற் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ஒரூஉ மோனை எனப்படும்.

தமிழ்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். – குறள், 28

### 4. கூழைமோனை (1, 2, 3)

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது கூழைமோனை எனப்படும்.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். – குறள், 19

### 5. மேற்கதுவாய் மோனை (1, 3, 4)

ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின்று டற்றும் பசி. – குறள், 13

### 6. கீழ்க்கதுவாய்மோனை (1, 2, 4)

ஓரடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதல்எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. – குறள், 5

### 7. முற்றுமோனை (1, 2, 3, 4)

ஓர் அடியின் நாலு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றுமோனை எனப்படும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – குறள், 391

குறிப்பு: நாலு சீர்களில் மோனைக்குரிய விகற்பங்கள் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழிற்கும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது போலவே எதுகையும் வரும்.

## எதுகைத்தொடை

### 1. இணை எதுகை (1, 2)

முதலிரு சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைஎதுகை எனப்படும்.

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். – குறள், 225

தமிழ்

### 2. பொழிப்பு எதுகை (1, 3)

ஓர் அடியுள் முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. – குறள், 245

### 3. ஒரூஉ எதுகை (1, 4)

ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ எதுகை எனப்படும்.

அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. – குறள், 247

### 4. கூழை எதுகை (1, 2, 3)

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. – குறள், 350

### 5. மேற்கதுவாய் எதுகை (1, 3, 4)

ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. – குறள், 659

### 6. கீழ்க்கதுவாய் எதுகை (1, 2, 4)

ஓர் அடியுள் முதல், இரண்டு, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். – குறள், 629

### 7. முற்றெதுகை (1, 2, 3, 4)

ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றெதுகை எனப்படும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. – குறள், 12

| தொடை விகற்பம் | சீர்கள் | | | |
|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 |
| இணை | ★ | ★ | | |
| பொழிப்பு | ★ | | ★ | |
| ஒரூஉ | ★ | | | ★ |
| கூழை | ★ | ★ | ★ | |
| மேற்கதுவாய் | ★ | | ★ | ★ |
| கீழ்க்கதுவாய் | ★ | ★ | | ★ |
| முற்று | ★ | ★ | ★ | ★ |

மேற்கண்ட அட்டவணைக்கேற்ப இயைபு, முரண், அளபெடையைப் பொருத்திக் காண்க.

பயிற்சி

1. சிந்தடி வருமாறு ( அடிதோறும் மூன்றுசீர்கள் ) ஆறு அடியளவில் ஒரு பாடலை எழுதுக.
2. பின்வரும் அடிகளில் காணும் தொடை வகைகளை எடுத்தெழுதுக.

அ) இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்

ஆ) சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்

தமிழ்

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தொடை ____________ வகைப்படும்.

அ) ஆறு  ஆ) ஏழு  இ) எட்டு

2. முதல், மூன்று, நாலாம் சீர்களில் மோனை ஒத்து வருவது.

அ) முரண்  ஆ) மேற்கதுவாய்  இ) கீழ்க்கதுவாய்

3. அளவடிக்கு ____________ என்னும் வேறுபெயருண்டு.

அ) குறளடி  ஆ) சிந்தடி  இ) நேரடி

4. இணையெதுகை என்பது ______,______ சீர்களில் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

அ) 1, 2  ஆ) 1, 3  இ) 1, 4

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| கூழை | – | 1,3,4 சீர்களில் வரும். |
| மேற்கதுவாய் | – | 1,2,3,4 சீர்களில் வரும். |
| கீழ்க்கதுவாய் | – | 1,2,3 சீர்களில் வரும் |
| முற்று | – | 1,2,4 சீர்களில் வரும். |

ஆ) குறுவினாக்கள்

1. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. சிந்தடி என்றால் என்ன ? சான்று தருக.
3. அளவடி என்றால் என்ன? சான்று தருக.
4. நெடிலடியை விளக்குக.
5. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. தொடைவிகற்பம் என்றால் என்ன?

## அணி

தமிழ்

"அவள் நடந்து வந்தாள்."

"அவள் அன்னம்போல் நடந்து வந்தாள்."

இவ்விரு தொடர்களைப் படித்துப் பாருங்கள். முதல் தொடர் இயல்பாக உள்ளது. அடுத்த தொடர் படிப்பதற்கு இனிமை தருகிறது.

பெண்ணொருத்தி, தன் இயல்பான அழகை ஆடை, அணிகலன்கள் அணிந்து, ஒப்பனைசெய்து கொள்வதுபோலப் புலவர், தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப்புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர்.

இத்தகைய செய்யுள்களில் காணப்படும் அழகே அணி எனப்படும். இதனால், சொல்லப் புகும் கருத்து எளிதில் விளங்கும்; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இனிமை சேர்க்கும்.

அணிகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

### 1. ஏகதேச உருவக அணி

கவிஞர், தாம் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்திக் கூறும்போது ஒன்றனை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் விடுவது, ஏகதேச உருவக அணி எனப்படும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். – குறள், 10

இக்குறட்பாவில் பிறவியைக் கடலாக உருவகப்படுத்திவிட்டு, அதனைக் கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப்படுத்தாமையால், இஃது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

### 2. நிரல்நிறை அணி

சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல்நிறை அணி யாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். "இல்வாழ்க்கையின் பண்பு எனப்படுவது அன்பு காட்டுவது. இல்வாழ்க்கையின் பயன் எனப்படுவது அறம்செய்தல் என்பதாகும்" என்பது இக்குறட்பாவின் கருத்து.

இக்குறட்பாவில் அன்பும் அறனும் முதலடியில் அமைந்துள்ளன. அடுத்த அடியில், அச் சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி பண்பு, பயன் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, இது நிரல்நிறை அணி.

தமிழ்

### பயிற்சி

பின்வரும் பாடல்கள் எவ்வகை அணிகள் எனக் கண்டறிந்து எழுதுக.

அ) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்.

ஆ) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பல பொருள்களுள் ஒன்றனை உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றனை உருவகப்படுத்தாமல் இருப்பது ________ அணியாகும்.
2. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, நேரே பொருள் கொள்வது ________ அணியாகும்.

### ஆ) குறுவினாக்கள்

1. ஏகதேச உருவக அணி என்றால் என்ன ? சான்று தருக.
2. நிரல்நிறை அணி எவ்வாறு வரும் ? சான்று தந்து விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன் : ( மாதிரி நேர்காணல் )

செய்தியாளர் : வணக்கம் ஐயா, நேர்காணலைத் தொடங்குமுன் இராசராசன் விருதுபெற்ற தங்களுக்கு எங்கள் இதழின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுத்தாளர் : வணக்கம், தங்கள் வாழ்த்துக்கு நன்றி.

செய்தியாளர் : தாங்கள் எழுத்துப்பணியை எப்போது தொடங்கினீர்கள் ?

எழுத்தாளர் : கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தபோதே எழுதத் தொடங்கி விட்டேன்.

செய்தியாளர் : முதலில் வரலாற்றுப் புதினங்களைத்தான் எழுதினீர்களா?

எழுத்தாளர் : இல்லை. முதலில் சமூகக்கதைகள், இலக்கியக்கதைகள், வரலாற்றுச் சிறுகதைகள் ஆகியவற்றை எழுதினேன். நாளாக நாளாக வரலாற்றுக்கதைகள்மீது ஈடுபாடு அதிகமானதனால், அதிலேயே முழுக்கவனம் செலுத்தி எழுதி வருகிறேன்.

செய்தியாளர் : இதுவரை எத்தனை வரலாற்றுப் புதினங்கள் எழுதியிருக்கிறீர்கள்?

எழுத்தாளர் : இதுவரை அறுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளேன். மேலும், இந்த ஆண்டில் இருநூல்களை வெளியிட இருக்கிறேன்.

செய்தியாளர் : மெத்த மகிழ்ச்சி, ஐயா. நீங்கள் மேன்மேலும் பல நூல்களை எழுதவும், பல விருதுகளைப் பெறவும் வாழ்த்துகள்.

எழுத்தாளர் : மிக்க நன்றி.

பயிற்சி : நேர்காணலை நிறைவு செய்க.

மாணவர் : வணக்கம் , ஐயா. தங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

கவிஞர் : வணக்கம், ______________________________

மாணவர் : தாங்கள் முதல் கவிதையை எழுதிய சூழலைக் குறித்துச் சொல்லுங்கள்.

கவிஞர் : எங்கள் கல்லூரியில் கலை இலக்கிய விழாவிற்காகக் கவிதைப் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போது ______________________________

மாணவர் : அக்கவிதைக்குப் பரிசு கிடைத்ததா ?

கவிஞர் : ஆம். ______________________________

மாணவர் : உங்கள் கவிதைகளுக்கான கருப்பொருளை எவ்விதம் தேர்ந்தெடுக்கிறீர்கள் ?

கவிஞர் : பெரும்பாலும் சமுதாயச் சிக்கல்களையே எனது கவிதைகளின் பாடுபொருள்களாகக் கொண்டு எழுதி வருகிறேன்.

மாணவர் : தாங்கள் இதுவரை எவ்வளவு கவிதைகள் எழுதியிருக்கிறீர்கள்?

கவிஞர் : நான் இதுவரை ______________________

மாணவர் : நீங்கள் என்போன்ற மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை என்ன, ஐயா?

கவிஞர் : ______________________

மாணவர் : இதுவரை உங்கள் கருத்துகளை எங்களோடு பகிர்ந்து கொண்டமைக்கு மிக்க நன்றி, ஐயா.

கவிஞர் : நன்றி, உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துகள்.

**கதைக்குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுதல்.**

**பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை எழுதுக.**

ஆடு மேய்க்கும் சிறுவன் – ஆடுகளை மேய்த்தல் – அரசர் அங்கு வருதல் – அரசருக்கு நீர் வேட்கை – சிறுவன் குளம் இருக்குமிடத்தைக் கூறுதல் – அரசன் சிறுவனை நீர்கொண்டு வருமாறு கூறுதல் – அரசர் என அறியாமை – சிறுவன் போகமுடியாது எனவும், அதற்கான காரணத்தையும் கூறுதல் – அரசர் ஆடுகளைத் தான் பார்த்துக்கொள்வதாகக் கூறுதல் – சிறுவன் மறுத்தல் –அரசரின் பரிவாரங்கள் வருதல் – சிறுவன் மனத்துணிவு – அரசன் சிறுவனைத் தன்னிடமே வேலைக்கு வைத்துக்கொள்ளுதல்.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

**அ) ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றுக.**

(எ.கா.) யானையின் கண் சிறியது.

யானையின் கண்கள் சிறியன.

பயிற்சி

1. காட்டு மரம் உயரமானது. ______________
2. மயில் அழகானது. ______________
3. பழம் பழுத்தது. ______________
4. நான் படித்தேன். ______________

**ஆ) பன்மையை ஒருமையாக மாற்றுக.**

(எ.கா.) பசுவும் கன்றும் மேய்ந்தன.

பசுவுடன் கன்று மேய்ந்தது.

பயிற்சி

1. மரத்தில் காயும் கனியும் இருந்தன. ______________
2. சிறுவனும் சிறுமியும் வந்தனர். ______________
3. அண்ணனும் தம்பியும் பரிசு பெற்றனர். ______________
4. பாலும் தேனும் இனித்தன. ______________
5. யானைப்படையும் குதிரைப்படையும் சென்றன. ______________

இ) நினைவு கூர்க.

விடுபட்ட தமிழெண்களை எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | ருக | 61 | | 71 | | 81 | | 91 | |
| 52 | | 62 | | 72 | | 82 | | 92 | |
| 53 | | 63 | | 73 | | 83 | அங | 93 | கூங |
| 54 | | 64 | | 74 | | 84 | அச | 94 | |
| 55 | | 65 | சாரு | 75 | | 85 | | 95 | |
| 56 | ருசா | 66 | | 76 | | 86 | | 96 | |
| 57 | | 67 | | 77 | | 87 | | 97 | |
| 58 | | 68 | | 78 | எஅ | 88 | | 98 | |
| 59 | | 69 | | 79 | | 89 | | 99 | |
| 60 | | 70 | | 80 | | 90 | | 100 | |

ஈ) கட்டுரைப் பயிற்சி : சுற்றுச்சூழல் பாதுகாப்பு

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத்திறன்

அறிவழகன் எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண் பெறுபவன். இதுவரை எளிதாக இருந்த கணக்குப் பாடம் ஒன்பதாம் வகுப்பிற்கு வந்த பிறகு கடினமானதாகிவிட்டது.

காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் மற்றப் பாடங்களைப்போல் உயர் மதிப்பெண்களைப் பெற, அவனால் இயலவில்லை. ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள அவனுக்குத்

தமிழ்

தயக்கமாக இருந்தது. அதற்குக் காரணம், கணக்கு ஆசிரியர்மீது அவனுக்கிருந்த அச்சம்தான். இருப்பினும், கணக்குப் பாடத்தில் உயர் மதிப்பெண் பெறவேண்டும் என்னும் உந்துதல், அவன் மனத்தில் இருந்துகொண்டே இருந்தது.

பெற்றோர், கணக்குப் பாடத்தில் மதிப்பெண் ஏன் குறைந்தது எனக் கேட்டனர்; வகுப்பாசிரியரும் கணக்குப் பாடத்தில் மேலும் கவனம் செலுத்துமாறு அறிவுரை கூறினார். கணக்குப் பாடத்தில் நல்ல மதிப்பெண்கள் பெறச் சிந்தித்தவண்ணம் இருந்தான்.

1. இத்தகைய சூழல் உங்களுக்கு எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா ?
2. அறிவழகன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## பண்பு

### சுற்றுச்சூழல் பாதுகாத்தல்

எல்லாவற்றிலும் தூய்மையை விரும்புபவன் அழகன். அவன், தன் தூய்மையைப் பேணுதலுடன், சுற்றுப்புறத் தூய்மையைப் பற்றியும் சிந்திப்பவன்; தேவையற்ற தாள்களோ பொருள்களோ கண்ணில்பட்டால், அவற்றை எடுத்துக் குப்பைத்தொட்டியில் போடுவான்.

வீட்டிலும் பள்ளியிலும் அவன் அவ்வாறே நடந்துகொள்வான். மேலும், அவன் நண்பர்களையும் தூய்மையைப் பேணுமாறு வலியுறுத்துவான். அவர்களுள் சிலர் இவனைக் கண்டாலே, “சுத்தக்காரன் வரான்டா” என ஏளனமாகப் பேசுவதும் உண்டு.

அவன், அதனைப்பற்றிக் கவலைப்படாமல் சுற்றுச்சூழல் இயக்கங்களிலும் பங்கேற்றுத் தனது பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தான். தன் வீட்டின் பின்புறம் மரக்கன்றுகளை நட்டுப் பாதுகாத்து வந்தான்.

1. தன் தூய்மையைப் பேணும் வழிமுறைகள் யாவை?
2. சுற்றுச்சூழல் இயக்கங்கள்பற்றி நீவிர் அறிந்தன யாவை?
3. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நீவிர் என்னென்ன செய்கிறீர்கள்?
4. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க என்னென்ன செய்யலாம்?

## மதிப்புக்கல்வி

### தீண்டாமை

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வழக்குரைஞராகச் சில ஆண்டு பணியாற்றினார். ஒருநாள், தொடர்வண்டியில் முதல்வகுப்பில் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது, அதே பெட்டியில் அவருடன் பயணம் செய்த வெள்ளையர் ஒருவர், அவரைக் கீழே இறங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்.

அதற்குக் காந்தியடிகள், தன்னிடம் முதல் வகுப்புப் பயணச்சீட்டு இருப்பதாகவும், இதில்தான் பயணம் செய்வேன் என்று கூறி இறங்க மறுத்தார். ஆனால், அந்த

வெள்ளையர் தொடர்வண்டிப் பாதுகாவலரை அழைத்துக் கறுப்புநிறம் கொண்ட இந்தியர், வெள்ளையருடன் பயணம் செய்யக்கூடாது என்று கூறிக் காந்தியடிகளைக் கீழே இறக்கிவிட்டார். நிறத்தைக் காரணம் காட்டித் தம்மைத் தீண்டத்தகாதவர் என்று கூறி ஒதுக்கும் தீண்டாமைச் செயலை எண்ணிக் காந்தியடிகள் வருந்தினார்.

வெள்ளையர், காந்தியடிகளிடம் நடந்துகொண்டது முறைதானா ?

## மொழியாக்கம் செய்க.

Bamboo is one of the world's fastest growing plants. It can grow as much as 3 feet in a day. One type of bamboo grows to a height of 120 feet. Its stem is tough and hallow. Bamboo is actually a kind of grass. But unlike other grasses, most bamboos grow very tall. We use bamboo to make fishing poles and furniture. Tender bamboo shoots are eaten as vegetables.

## இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. A wolf in sheep's clothing.

   பசுத்தோல் போர்த்திய புலி.

2. Union is strength.

   ஒற்றுமையே வலிமை.

3. No smoke without fire.

   நெருப்பில்லாமல் புகையாது.

4. Might is right.

   வல்லான் வகுத்ததே வாய்க்கால்.

5. Many things fall between the cup and the lip.

   கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடையளிக்க.**

பண்டைய தமிழக மக்களின் வானியல் பார்வையைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வானிலுள்ள கோள்கள், அவற்றின் இயக்கம், அதனால் ஏற்படும் பருவ கால மாற்றங்கள் ஆகியவற்றைக் கணித்துக் கூறக்கூடிய தெளிவு அன்றைய தமிழரிடம் மிகுந்திருந்தது. வானியலைப் பற்றிக் கணித்துக் கூறுபவர்களை அறிவன், கணியன், நாழிகைக் கணக்கர் என அழைத்தனர்.

சூரிய குடும்பத்தில் சூரியனே முதன்மையாகப் போற்றப்படுகிறது. சூரியனைச் சுற்றிக் கோள்கள் சூழ்ந்துள்ளன எனவும், சூரியனின் வெப்பத்தாலேயே புவியில் பருவ கால மாற்றங்கள் தோன்றுகின்றன எனவும் சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

பண்டைத் தமிழர் சூரியன் முதலான ஒன்பது கோள்களைக் கோள்மீன் எனவும், அசுவினி முதலான இருபத்தேழு விண்மீன்களை நாள்மீன் எனவும் பகுத்துக் கூறியதுடன் ஒவ்வொரு கோளுக்கும் காரணப் பெயரிட்டு அழைத்தனர். செந்நிறமுடைய கோளைச் செவ்வாய் என்றனர். புதிதாக அறிந்ததனால் புதன் என்றனர். இக்கோளுக்கு 'அறிவன்' எனவும் பெயருண்டு. வியா என்றால் பெரிய எனப் பொருள்படும். எனவே, வானில் பெரிய கோளாக வலம் வருவதனை வியாழன் என அழைத்தனர். வெண்மை நிறமுடைய கோள் வெள்ளி எனப்பட்டது. இவையனைத்தும் சங்கப்புலவர்களின் வானியல் அறிவையும் சிந்தனையையும் புலப்படுத்துவதாக உள்ளன.

**வினாக்கள்**

1. வானியலைப் பற்றிக் கணித்துக் கூறுபவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?
2. சூரிய குடும்பத்தில் முதன்மையான கோள் எது?
3. கோள்மீன், நாள்மீன் என்பன யாவை?
4. புதன் கோளுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
5. வியாழன் கோளுக்குரிய பெயர்க் காரணம் கூறுக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

**கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துக் குழுவில் கலந்துரையாடுக.**

தமிழ்நாட்டில் நகர அமைப்பு, சிற்றூர் அமைப்பு முறை வளர்ந்த ஒன்று! நடுவூரில் திருக்கோவில் உயர்ந்து விளங்கும்! திருக்கோவிலைச் சுற்றி நான்குபுறமும் மக்கள் சூழ்ந்து வாழ்வர், நான்கு திசைகளிலிருந்தும் மக்கள் திருக்கோவிலுக்குள் வந்து குழும, நான்கு திசைகளிலும் பெரிய வாயில்கள்! ஊர் முழுதும் ஒலித்து அழைக்கும் மணிகள். இஃதோர் அற்புதமான அமைப்பு!

மாலை நேரத்தில் ஊர்மக்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினருடன் அணி பெற ஆலயத்திற்கு வருதலும், வணங்கி மகிழ்தலும் சிறந்த காட்சி! இறைவழிபாடு முடிந்தவுடன்

இங்குமங்குமாகத் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஒருவர் மற்றவரை நலம் விசாரித்தும், கலந்தும் களித்துப் பேசுதலும் மகட்கோடல் முதலிய நிகழ்வுகள் பற்றிப் பேசுதலும் இன்றைக்கும் நடைபெறும் நிகழ்ச்சி.

திருக்கோவிலில் ஒருமனப்பாட்டுடன் மக்கள் கூடுவர்; களித்தும் கலந்தும் பேசுவர். அதனால், திருக்கோவில் வளாகத்துக்குள் அன்பு செறிந்த, அருள்நலம் கனிந்த மனித உறவு வளர்கிறது; மனிதநேயம் வளர்கிறது. சில சமயங்களில் அங்கேயே ஒரு கூட்டம் கூடுகிறது. கிராமத்தின் பொது நிகழ்வுகள் கலந்து பேசப்படுகின்றன. இதனால், சமுதாயம் ஒழுங்கமைவு பெறுகிறது. ஓர் அருமையான கூட்டு வாழ்க்கை கால் கொள்கிறது.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியை வாய்க்குட் படிக்க.

மனிதன் இயற்கையோடு ஒட்டி உறவாடி வாழ்தல் வேண்டும். செயற்கையை மிகுத்து இயற்கையையும், இயற்கைச் சூழ்நிலையையும் கேடுறச் செய்தால் மனித இனம் வாழ்தல் அரிது என்பது அறிவியல் அறிஞர்களின் கருத்தாகும். இக்கருத்தினைச் சிறிதேனும் உணராத மனித இனம் இன்று தன்னுடைய அழிவுப்பாதையினை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இயற்கைச் சூழ்நிலை என்று சுட்டப்படுகின்றபோது, இங்கு மிகவும் இன்றியமையாத காடுகளின் சுற்றுச்சூழல் சிந்திக்கப்படல் வேண்டும்.

விலங்கினங்கள் வாழ்வதற்கும் காடுகளே வாழிடமாகவும் அமைந்து விலங்கினங்கள் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு உறையுள்ளாகவும், உணவும் நல்குகின்றன. எனவே காடுகளின் அழிவு, அங்கு வாழ்கின்ற விலங்குகளுக்கும் குடிமக்களாகிய நமக்கும் அழிவு என்பதாகும். "காடு இருக்கும் வரைதான் மனித வாழ்வு" என்னும் பழமொழி இங்குச் சிந்திக்கத்தக்கது.

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 4 |
|---|---|

உயிர்க்கோளம் தன்னகத்தே பல இயற்கைக்காட்சிகளைக் கொண்டுள்ளது. பரந்த வான்வெளியும், உயர்ந்த மலைமுகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறும், கவின்மிகு சோலையும், கனிதரும் மரங்களும், கண்ணைக் கவரும் வண்ண மலர்களும், கருத்தைக் கவரும் வியத்தகு உயிரினங்களும் அதன் நிலைக்களன்கள் ஆகும்.

| அகர வரிசைப்படுத்துதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்துகளில் அமைந்த சொற்களை அகர வரிசைப்படுத்துக.

வெளித்தோற்றம் கொண்டு ஒருவரை அளவிடுதல் தவறானது. அவரின் உள்ளப் பண்பைக் கொண்டே அளவிடுதல் நலம். பலாப்பழம் முள்ளு முள்ளாகத் தோற்றமளிக்கும்; ஆனால், உள்ளுக்குள் சுவைமிகுந்த சுளைகள் காணப்படும். வீணை கோணலாக இருப்பினும் இனிய இசை வெளிப்படும். எட்டிப்பழம் மேலே பளபளவென இருந்தாலும் தொட்டாலே கசக்கும்.

நாவற்பழம் கருமை. ஆனால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபளவென இருக்கும்; ஆனால், கொடிய நஞ்சைக் கக்கும். ஆகவே, உருவு கண்டு எள்ளாமை வேண்டும்.

– கிருபானந்த வாரியார்

| சொற்பொருளறிதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில், கோடிட்ட இடத்தில் உரிய சொற்களைக்கொண்டு நிரப்புக.

( ஆக, தவிர, தகுந்த, கொண்டு, பதிலாக, வழியாக, விடவும், காட்டிலும், போல், தோறும் )

1. எனக்குப் ____________ இந்த வேலையைச் செய்தது யார்?
2. அவர் உங்களை ____________ வயதில் பெரியவர்.
3. உன் கையெழுத்து, வளர்மதியின் கையெழுத்தைப் ____________ உள்ளது.
4. உ. வே. சாமிநாதர், பழஞ்சுவடிகளைத் தேடி ஊர் ____________ அலைந்தார்.
5. இளஞ்செழியன், ஓவியம் வரைவதில் கதிரவனைக் ____________ சிறந்தவன்.
6. புலியைக் கண்டதும் அதனை வாள் ____________ வீழ்த்தினான்.
7. சாலை பழுதடைந்துள்ளதனால், யாரும் இந்த ____________ ச்செல்ல வேண்டா.
8. ஆளுக்குத் ____________ பேச்சு வேண்டும்.
9. நாளை நடைபெறவிருக்கும் கருத்தரங்கக் கூட்டத்தில் உனக் ____________ காத்திருப்பேன்.
10. உன்னைத் ____________ இவ்வூரில் ஒருவரையும் அறியேன்.

| பொருளறிந்து நிரப்புதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் ஏற்புடைய சொற்களைக்கொண்டு நிரப்புக.

( மட்டும், மட்டுமே, மட்டுமல்லாமல், மட்டுமன்றி, மட்டுமின்றி, மட்டில்லாத )

1. பொதுத்தேர்வில், மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்ற தன் மகனைப் பார்த்து அவன் தாய் ____________ மகிழ்ச்சியடைந்தாள்.
2. நடைபெற்ற தேர்வில் நான் ஒருவன் ____________ தேர்ச்சி பெற்றேன்.
3. கலைக்கல்வியானது, மாணவரிடையே படைப்பாற்றலை வளர்ப்பதனோடு ____________ நினைவாற்றலையும் வளர்க்கிறது.
4. அறிஞர் அண்ணா, தமிழில் ____________ ஆங்கிலத்திலும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.
5. நீ ____________ உதவவில்லையென்றால், இந்தப் பணியை என்னால் எளிதாக முடித்திருக்க இயலாது.
6. பள்ளி ஆண்டுவிழாவுக்கு நீ ____________ உன் பெற்றோரும் வரலாம்.

தமிழ்

| சொல் விளையாட்டு | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் பொதுமொழிகளை மூவகையாகப் பிரித்துப் பொருள் தருக. (குறிப்பு: மூன்றுக்கு மேற்பட்டும் அமையலாம்.)

(எ.கா.) வருந்தாமரை = வரும் + தாமரை ( வரும் தாமரை மலர்)
வருந்தாமரை = வருந்தா + மரை ( துன்புறாத மான்)
வருந்தாமரை = வருந்து + ஆ + மரை ( துன்புறும் பசுவும் மானும்)
வருந்தாமரை = வரும் + தாம் + மரை ( வரும் தாவும் மான்)
வருந்தாமரை = வரும் + தாமர் + ஐ ( வருகின்ற மாலை அணிந்தவரை)

1. செம்பொன்பதின்கலம் = ______________________
______________________
______________________

2. எட்டுவரை = ______________________
______________________
______________________

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் பயிற்சியில் ஓரினத்தைச் சார்ந்த சொற்களுள் ஒரு சொல் மட்டும் வேறானது. அச்சொல்லைக் கண்டறிக.

1. மாணிக்கம், முத்து, பவளம், சங்கு, கிளிஞ்சல்
2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், இல்லம்
3. நிலம், காற்று, வானம், மலை, நெருப்பு
4. அருவி, சோலை, ஆறு, கடல், ஏரி
5. நிற்பன, ஊர்வன, பரவின, பறப்பன, நடப்பன

| பிறமொழிச்சொற்களை இனங்காணல் | செயல்பாடு – 10 |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களில் தமிழ்ச்சொற்களுடன் பிறமொழிச்சொற்களும் விரவியுள்ளன. அவற்றைக் கண்டறிந்து, அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. அகிலம் போற்றும் வகையில் நம் இந்தியா வளர்ச்சி அடைந்து வருகின்றது.
( ______________ )

2. பார்வை நேரம் முடிந்ததனால், மாவட்ட ஆட்சியரைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது.
( ______________ )

தமிழ்

3. பண்டைக்காலத் தமிழர் வில், வேல், வாள் முதலிய ஆயுதங்களை ஏந்திப் போர் புரிந்தனர்
( ______________ )

4. சான்றோர் கூறும் உபதேசங்கள் நம் வாழ்க்கைக்கு ஏற்றமளிப்பவை.
( ______________ )

5. மாறனுக்கு அரசு வேலை கிடைத்ததனால் கம்பீரத்துடன் ஊரை வலம் வந்தான்.
( ______________ )

6. நாம் எழுதுவதற்குக் காகிதங்களைப் பயன்படுத்துகிறோம். ( ______________ )

7. ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்பது ஔவை மொழி. ( ______________ )

8. செய்தித்தாளுக்குச் செய்திகளைத் திரட்டித் தருவதில் நிருபரின் பங்கு இன்றியமையாதது
( ______________ )

9. ‘நீதிக்குத் தலை வணங்கு’ என்பது ஆன்றோர் வாக்கு. ( ______________ )

10. ஒரு வருடத்துக்குப் பன்னிரண்டு மாதம் உள்ளன. ( ______________ )

| இடைச்சொல்லின் பொருள் அறிதல் | செயல்பாடு – 11 |
|---|---|

தமிழ்

கீழ்க்காணும் தொடர்களில் ‘உம்’ என்னும் இடைச்சொல் எத்தகைய பொருளில் வந்துள்ளது என எழுதுக.

குறிப்பு : ‘உம்’ என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் ஆகிய பொருள்கள் குறித்து வரும்.

(எ.கா.) நான் மறப்பினும் நீ மறவாதே.

பொருள் : எதிர்மறை ( நான் மறக்கமாட்டேன் என்னும் எதிர்மறைப் பொருள்.)

| வ. எண் | தொடர் | பொருள் |
|---|---|---|
| 1. | கரையில் இருப்பது கயிறாகவும் இருக்கலாம் | |
| 2. | கால்நடையும் தீண்டாத செடி | |
| 3. | கவினும் எழிலும் முகிலும் தேர்வு எழுத வந்தனர். | |
| 4. | உன் கையிலுள்ள நூல் திருக்குறளுமன்று திருவாசகமுமன்று | |
| 5. | சேரனுக்கு இருவிழியும் சிவந்தன. | |

| | | |
|---|---|---|
| 6. | பூப் பூத்துக் காயும் காய்த்தது. | |
| 7. | கருத்தரங்கக் கூட்டத்துக்குச் சிறப்பு விருந்தினரும் வந்துவிட்டார். | |

| தமிழெண் பயன்பாடு | செயல்பாடு – 12 |
|---|---|

| 1/16 | 1/8 | 1/4 | 1/2 | 3/4 | 100 | 1000 |
|---|---|---|---|---|---|---|
| ய | ளு | வ | இ | ஸ | ௱ | ௲ |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ | ய |

மேற்கண்ட அட்டவணையைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் விடுகதைகளுக்கான விடைகளைத் தமிழெண்களில் காண்க.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | முதலில் எட்டு<br>இடையில் ஐந்து<br>இறுதியில் 'மை'<br>அதனால் வரும் மேன்மை.<br>அஃதென்ன ?<br>விடை : அருமை | 3. | எட்டை முதலில் வைத்து<br>ஒன்றை இடையில் வைத்து<br>இறுதியில் 'ம்'மைச் சேர்த்தால்,<br>புறத்தின் எதிர்ச்சொல் வரும்.<br>அஃதென்ன ?<br>விடை: |
| 1. | முதலில் ஒன்று<br>இடையில் பத்து<br>இறுதியில் 'ல்' சேர்த்தால்,<br>அழகிய கண்ணுக்கு உவமையாகும்.<br>அஃதென்ன ?<br>விடை: | 4. | முதலில் ஏழு<br>இறுதியில் ஐந்து<br>இரண்டும் சேர்ந்தால்<br>வேளாண்மைக்கு உதவும்.<br>அஃதென்ன ?<br>விடை: |
| 2. | அரை முதலில் நிற்க<br>ஐந்து இடையில் வர<br>நூற்றின் மேல் புள்ளி வைத்து<br>இறுதியாக்க, ஒளிக்கு அஞ்சுவது<br>வரும். அஃதென்ன ?<br>விடை: | 5. | முதலில் இரண்டு<br>இடையில் ஐந்து<br>இறுதியில் காலுடன் 'ம்' சேர்த்தால்<br>வடிவத்தினைக் குறிக்கும் சொல்<br>வரும். அஃதென்ன ?<br>விடை: |

தமிழ்

| ஊடகப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு | செயல்பாடு – 13 |
|---|---|

விண்ணரசி ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறாள். விடுமுறை நாளில் தன் அம்மாவின் செல்பேசியை எடுத்து எண்களை அழுத்தி விளையாடுவது, அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஒருநாள், வழக்கம்போல் தன் அம்மாவின் செல்பேசியை எடுத்த விண்ணரசி, ஏதோவொரு பத்து எண்ணை அழுத்தினாள். செல்பேசியின் எதிர்முனையிலிருந்து ஓர் ஆணின் குரல் கேட்டது. விண்ணரசி அச்சமடைந்து, செல்பேசியின் அழைப்பை உடனடியாக நிறுத்திவிட்டாள். அம்மாவிடம் இதனைப்பற்றிக் கூறாமல், செல்பேசியைக் கொடுத்துவிட்டாள்.

மறுநாள் மீண்டும் அதே நேரத்தில் செல்பேசியை வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது, செல்பேசியிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. அந்த எண் யாரிடமிருந்து வருகிறது என்பதனை அறிய ஆவல்கொண்ட விண்ணரசி, உடனடியாக அந்த எண்ணுக்குத் தொடர்பு கொண்டாள். எதிர்முனையில் பேசியவர், விண்ணரசியிடம் பெயர், இருப்பிடம், அம்மாவின் பெயர், அலுவலக முகவரி, அவருடைய வங்கிக் கணக்கு எண், மின்னஞ்சல் முகவரி முதலிய விவரங்களைக் கேட்கத் தொடங்கினார்.

முதலில் கூறுவதற்கு மறுத்த விண்ணரசி, அச்சம் நீங்கி, விவரங்களைக் கூறத் தொடங்கினாள். அப்போது அங்கு வந்த விண்ணரசியின் அம்மா, அவளிடம் நீ யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய்? எனக் கேட்டார். விவரங்களைக் கேட்ட அவளின் அம்மா, செல்பேசியின் இணைப்பைத் துண்டித்தாள். அவளிடம், முன்பின் தெரியாத ஒருவரிடம் உன்னைப் பற்றியோ, உன்னைப் பற்றிய விவரங்களையோ எக்காரணத்தைக் கொண்டும் கூறக் கூடாது எனக் கூறினார். ஏனென்றால், அவ்விவரங்களைக் கொண்டு ஒருவருடைய மின்னஞ்சலுக்கான கடவுச்சொல், வங்கிக் கணக்கெண்ணுக்கான கடவுச்சொல்லைக் கண்டறிந்து நம்சார்ந்த விவரங்களையும், வங்கியிலுள்ள பணத்தையும் எடுத்துக் கொள்ளுவார்கள். பெரும்பாலானோர் மின்னஞ்சல், வங்கிக்கணக்குக்கு அம்மா, அப்பா, மனைவி, பிள்ளைகள், நண்பர், ஊர், அஞ்சல் குறியீட்டுஎண் முதலியவற்றைக் கடவுச்சொல்லாக வைத்துள்ளனர். ஏமாற்றுவோர் இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஆகவே, செல்பேசியைப் பயனறிந்து பயன்படுத்துவதோடு எச்சரிக்கையாகவும் இருத்தல் வேண்டும்.

### வினாக்கள்

1. முன்பின் தெரியாத ஒருவரிடம் விண்ணரசி, செல்பேசியில் பேசியது முறையா?
2. நம்மை அறிந்திராத ஒருவரிடம் நம்மைப் பற்றிய விவரங்களைச் செல்பேசியில் ஏன் தெரிவித்தல் கூடாது?
3. செல்பேசியைப் பயன்படுத்தும்போது மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு முறைகள் யாவை?
4. பெற்றோரின் இசைவின்றி, அவர்தம் செல்பேசியைப் பயன்படுத்தலாமா?
5. உங்கள் செல்பேசியை மற்றவருக்குக் கொடுப்பீர்களா? இல்லையெனில் ஏன் எனக் காரணம் கூறுக.

| படைப்பாற்றல் | செயல்பாடு – 14 |
|---|---|

கீழ்க்காணும் படம் உணர்த்தும் கருத்தை எழுதுக.



தமிழ்

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

காலம் : 15 மணித்துளி — உயர் மதிப்பெண் : 10

1. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 × 1 = 5
   1. உயிர்கள் முதன்முதலில் தோன்றிய இடம் ________ .
   2. உயிரினம் வாழ்வதற்குத் தகுதி இல்லாத கோள்களுள் ஒன்று ________.
   3. காற்றுமண்டலத்தை ________ கோளம் எனக் கூறுவர்.
   4. ஓசோன் ________ படலம் என அழைக்கப்படுகிறது.
   5. மண்ணரிப்பு ஏற்படாமல் ________ பாதுகாக்கின்றன.
2. கீழ்க்காணும் வினாவுக்கு ஐந்துவரிக்கு மிகாமல் விடையளிக்க. 1 × 5 = 5

   புவிவெப்பமயமாதலினால் ஏற்படும் தீங்குகள் யாவை ? அவற்றை எவ்வாறு தடுக்கலாம் ?

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# எழுத்து

( சார்பெழுத்துகள் : ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள் )

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளை முதலெழுத்துகள் எனவும், அவற்றைச் சார்ந்து வரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் எனவும் முன் வகுப்புகளில் கற்றறிந்தோம். இனி ஐகார, ஔகார, ஆய்த, மகரக் குறுக்கங்கள் பற்றிக் காண்போம்.

## 1. ஐகாரக்குறுக்கம்

'ஐ' என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பாருங்கள். அது, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும். ஆனால், இவ்வெழுத்தைச் (ஐ) சொல்லின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வருமாறு எழுதி ஒலித்துப் பாருங்கள். அஃது, ஒலி குறைந்து ஒலிப்பதனை உணர்வீர்.

ஐம்பது – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது

தலைவன் – சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

கடலை – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

இவ்வாறு சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

## 2. ஔகாரக்குறுக்கம்

'ஔ' என்னும் நெடில் எழுத்தும், 'ஐ' என்னும் நெட்டெழுத்தைப்போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால், சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

(எ–டு) ஔவை, வௌவால் – ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.

சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும், ஔவும் முதலற் றாகும் – நன்னூல், 95

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



### 3. மகரக்குறுக்கம்

'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது, 'ம்' என்னும் மெய்யெழுத்து, செய்யுளில் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து, கால் மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

(எ–டு) போலும் – போல்ம் – போன்ம்

மருளும் – மருள்ம் – மருண்ம்

அ) செய்யுளில் இடம்பெறும் போலும், மருளும் ஆகிய மகர ஈற்றுச் சொற்கள், ஈற்றயல் உகரங் கெட்டு, போல்ம், மருள்ம் என்றாகிப் பின் போன்ம், மருண்ம் எனத் திரியும். இவ்வாறு திரியும் னகர, ணகரங்களின் முன்னுள்ள மகரம், தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஆ) மகர ஈற்றுச்சொல் முன் வகர (வ்) முதல்மொழி வந்து சேரும்போது, நிலைமொழி மகரம் குறைந்து ஒலிக்கும்.

(எ–டு) வரும் + வண்டி = வரும் வண்டி. 'ம்' தன் அரை மாத்திரையிலிருந்து குறைந்து, கால் மாத்திரையாக ஒலிக்கும். (வரும் – இது மகர ஈற்று நிலைமொழி. வண்டி இது 'வ்' என்னும் வகர முதல் மொழி.)

இவ்விரண்டு இடங்களிலும் குறைந்து ஒலிக்கும் மகரமே மகரக்குறுக்கம் எனப்படும்.

### 4. ஆய்தக்குறுக்கம்

ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம். ('ஃ' என்னும் எழுத்து குறைந்து ஒலிப்பது.) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவாக ஒலிக்கும். அதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும். பிறகு, வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கேற்ப றகரமாக (ற்) வும், டகரமாகவும் (ட்) மாறிப் புணரும்.

(எ–டு) கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) வளையல் – இச்சொல்லில் ஐகாரம் ________ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

ஆ) ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ________ ஆகும்.
1. திண்ணை 2. வளையல் 3. ஐந்து

இ) பல் + தீது என்பது ________ எனப் புணரும்.
1. பல்தீது 2. பஃறீது 3. பலதீது

ஈ) குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், ________ ஆய்தக்குறுக்கம் என நால்வகைப்படும்.

2. பொருத்துக

1. ஐகாரக்குறுக்கம் – முஃடீது
2. ஔகாரக்குறுக்கம் – தலைவன்
3. ஆய்தக்குறுக்கம் – போன்ம்
4. மகரக்குறுக்கம் – வௌவால்

ஆ) சிறுவினாக்கள்

1. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. ஔகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. மகரம் எவ்வெவ்விடங்களில் குறுகும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. ஆய்தக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## மொழித்திறன் பயிற்சி

### சொற்றொடர் வகைகள்

1. செய்தித்தொடர்

அ) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார்.

ஆ) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

இவ்விரு தொடர்களும் செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு, ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது செய்தித்தொடர் எனப்படும்.

2. வினாத்தொடர்

அ) எழில், என்ன சாப்பிட்டாய்?

ஆ) அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

இ) எங்கே செல்கிறாய்?

இவ்வாறு வினாப்பொருளைத் தரும் தொடர், வினாத்தொடர் எனப்படும். என்ன? ஏன்? எங்கே? எப்படி? முதலிய வினாச்சொற்கள் வினாத்தொடரில் அமையும்.

3. உணர்ச்சித்தொடர்

நீங்கள் சென்னைக்கு அருகிலுள்ள பூண்டி ஏரியைப் பார்த்ததுண்டா? அதனைப் பார்த்ததும் உங்களுக்குத் தோன்றியது என்ன?

'அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி!'

கண்ணகியும் கயல்விழியும் பாதையில் நடந்துகொண்டே பேசிச் செல்கின்றனர். கயல்விழியின் காலில் முள் ஆழமாகக் குத்திவிட்டது. உடனே, அவள் எவ்வாறு அலறியிருப்பாள்?

"ஐயோ, முள் குத்திவிட்டதே!"

இவ்வாறு நாம் பேசும் செய்திகள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தொடர்களாக அமைந்தால், அவற்றை உணர்ச்சித் தொடர்கள் என்கிறோம்.

மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது, உணர்ச்சித் தொடர்.

என்னே என்னும் சொல்லை வியப்புக் குறித்தும், அந்தோ என்னும் சொல்லைத் துன்பம் குறித்தும் சொற்றொடர்களில் அமைத்துக் காட்டலாம்.

(எ–டு) என்னே, இமயமலையின் உயரம்!

அந்தோ, நாய் வண்டியில் அடிபட்டுவிட்டதே!

### 4. கட்டளைத்தொடர்

நீ பள்ளிக்குப் புறப்படும்போது, உன்னிடம் அம்மா கூறுவது என்ன?

பார்த்துப் போ, கவனமாகப் படி என்றுதானே.

இவ்வாறு, ஒரு செயல் அல்லது சில செயல்களைப் பின்பற்றும்படி ஆணையிட்டுக் கூறுவது, கட்டளைத்தொடர்.

### 5. தனிநிலைத்தொடர்

1. அழகன் பாடம் எழுதுகிறான்.
2. மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள்.

இத்தொடர்களில் முதல் தொடரில் அழகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள்.

இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.

### 6. தொடர்நிலைத்தொடர்

கார்மேகம் கடுமையாக உழைத்தார்; அதனால், வாழ்வில் உயர்ந்தார்.

நேற்று மழை பெய்தது; அதனால், ஏரி குளங்கள் நிரம்பின.

இவ்வாறு, ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது தொடர்நிலைத்தொடர். தொடர்நிலைத்தொடர்கள் அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.

### 7. கலவைத்தொடர்

1. நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை.
2. முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.

இவ்வாறு, ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.

8. செய்வினைத்தொடர்

"குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்." இத்தொடரில்,

| | | |
|---|---|---|
| குடியரசுத் தலைவர் | – | எழுவாய் |
| உலகத் தமிழ் மாநாடு | – | செயப்படுபொருள் |
| தொடங்கிவைத்தார் | – | பயனிலை |

இவ்வாறாக எழுவாய், செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர் எனப்படும். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.

(எ–டு) மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.

9. செயப்பாட்டு வினைத்தொடர் (செயப்படுபொருள் வினைச்சொல்லைக்கொண்டு முடிவது)

உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப்பெற்றது.

இத்தொடரில் சொற்கள் செயப்படுபொருள், எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் அமைந்துள்ளன. எழுவாயோடு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் உள்ளது. இவ்வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.

10. தன்வினைத்தொடர் (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது)

பாத்திமா திருக்குறள் கற்றாள்.

இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

11. பிறவினைத்தொடர் (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது)

பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்.

இது பிறவினைத்தொடர். பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத்தொடராகும்.

12. நேர்கூற்றுத்தொடர் (ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது)

ஆசிரியர், "மாணவர்களே, நாளை ஒழுக்கமுடைமையில் குறள்கள் ஐந்தனைப் படித்து வருக", என்றார். இவ்வாறு ஆசிரியர், மாணவர்களிடம் கூறிய இத்தொடர் நேர்கூற்றுத் தொடராகும்.

இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும்; தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும்; இங்கு, இப்போது, இவை எனச் சுட்டுப்பெயர்கள் வரும்; நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்.

(எ–டு) தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள்.

### 13. அயற்கூற்றுத்தொடர்

ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது, அயற்கூற்றுத்தொடர். பொன்னியிடம் தேன்மொழி, தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.

அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா; இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும்; சுட்டுப்பெயர்கள் அது, அவை, அங்கே என மாறும்; காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும்; என்று, ஆக என்னும் இணைப்புச்சொற்களும் இடம்பெறும்.

### 14. உடன்பாட்டுத்தொடர்

செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத் தொடர்.

கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.

### 15. எதிர்மறைத்தொடர்

கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்.

இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது எதிர்மறைத்தொடர்.

### 16. பொருள்மாறா எதிர்மறைத்தொடர்

கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்.

கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்னும் தொடர் உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை என்பது இதற்கான எதிர்மறைத்தொடர்.

மேலே உள்ள உடன்பாட்டுத்தொடரை பொருள்மாறா எதிர்மறைத்தொடராக மாற்ற வேண்டுமானால், அதனை இரண்டு எதிர்மறைகளைக்கொண்ட தொடராகக், கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என மாற்றுதல்வேண்டும். இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது பொருள்மாறா எதிர்மறைத்தொடர் எனப்படுகிறது.

இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அஃது உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை ________ செய்யப் ________ என வரும்.

ஆ) அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்ததால் ________ தொடர் ஆகும்.

இ) அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளை ________ என வரும்.

ஆ) தொடரை மாற்றி அமைக்க.

1. திருக்குறளை அனைவரும் அறிவர். – வினாத்தொடராக அமைக்க.
2. இமயமலை மிகவும் உயரமானது. – உணர்ச்சித்தொடராக மாற்றுக.
3. கிளி கல்லால் அடிபட்டது – உணர்ச்சித்தொடராக மாற்றுக.
4. வாரியார், "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்" என்றார். – அயற்கூற்றாக மாற்றுக.
5. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. – கலவைத்தொடராக மாற்றுக.

இ) சந்திப்பிழையற்ற தொடர் எது?

1. கயிறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
2. கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
3. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

ஈ) ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?

1. அவன் கவிஞன் அல்ல.
2. அவன் கவிஞன் அன்று.
3. அவன் கவிஞன் அல்லன்.

உ) பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?

1. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.
2. அவர்களிருவர்க்கும் இடையே உரையாடல் நடந்தது.
3. அவர்களிருவர்க்கும் இடையே கான்வர்சேசன் நடந்தது.

ஊ) வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

1. வலதுபக்கம் சுவறில் எழுதாதே.
2. வலப்பக்கச் சுவரில் எழுதாதே.
3. வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே.

எ) தொடர்கள் எவ்வகையானவை?

1. பிசிராந்தையார், நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். (உணர்ச்சி, வினா, செய்தி).
2. குழந்தையை அடித்தது யார்? (உணர்ச்சி, வினா, கட்டளை).
3. நம்நாட்டுக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. (தன்வினை, செய்வினை, செயப்பாட்டுவினை)
4. வயலில் ஆடுகள் மேய்ந்தில. (உடன்பாடு, எதிர்மறை, தன்வினை)
5. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார். (எதிர்மறை, பொருள்மாறா எதிர்மறை, பிறவினை)

athiyamanteam.com Video Course &  Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்த தமிழறிஞர் மறைமலையடிகளாரைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்க.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தூன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

– வள்ளலார்

### இ) எழுதுதல் திறன்

திருக்குறளின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

### ஈ) கட்டுரைப் பயிற்சி

தமிழ்மொழியின் சிறப்புகள்

### உ) கடிதம் எழுதுதல்

பள்ளி இலக்கிய மன்றத் தொடக்கவிழாவிற்கு வரவிருக்கின்ற இலக்கியச் சொற்பொழிவாளரை வரவேற்க வரவேற்பு மடல்.

## தமிழெண்களை அறிவோம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | 1 | ௧௧ | 11 | ௨௧ | 21 | ௩௧ | 31 | ௪௧ | 41 |
| ௨ | 2 | ௧௨ | 12 | ௨௨ | 22 | ௩௨ | 32 | ௪௨ | 42 |
| ௩ | 3 | ௧௩ | 13 | ௨௩ | 23 | ௩௩ | 33 | ௪௩ | 43 |
| ௪ | 4 | ௧௪ | 14 | ௨௪ | 24 | ௩௪ | 34 | ௪௪ | 44 |
| ௫ | 5 | ௧௫ | 15 | ௨௫ | 25 | ௩௫ | 35 | ௪௫ | 45 |
| ௬ | 6 | ௧௬ | 16 | ௨௬ | 26 | ௩௬ | 36 | ௪௬ | 46 |
| ௭ | 7 | ௧௭ | 17 | ௨௭ | 27 | ௩௭ | 37 | ௪௭ | 47 |
| ௮ | 8 | ௧௮ | 18 | ௨௮ | 28 | ௩௮ | 38 | ௪௮ | 48 |
| ௯ | 9 | ௧௯ | 19 | ௨௯ | 29 | ௩௯ | 39 | ௪௯ | 49 |
| ௧௦ | 10 | ௨௦ | 20 | ௩௦ | 30 | ௪௦ | 40 | ௫௦ | 50 |

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

“யாழினி! நீ ஏன் பெயர் கொடுக்கவில்லை?” என ஆசிரியர் கேட்ட வினாவுக்கு, விடை என்ன கூறுவது என்று தெரியாமல் நின்றாள். ‘நாளை ஒருநாள்தான் இருக்கிறது, எண்ணி முடிவு சொல்’, என்று கூறியவாறே ஆசிரியர் வகுப்பிலிருந்து வெளியே சென்றார்.

“யாழினி, உன்மீது நாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம். உன் அழகான கையெழுத்தும், செறிவான கருத்தும் கட்டுரைப் போட்டியில் உனக்குப் பரிசு பெற்றுத் தருமல்லவா? ஆனால், நீயோ போட்டியில் கலந்துகொள்ள மறுக்கிறாய். என்ன காரணம்?” என்று அவளுடைய தோழியர் வினவினர்.

“எனக்குப் போட்டிகளில் கலந்துகொள்வது என்றாலே மிகவும் அச்சமாக உள்ளது. நீங்கள் நினைப்பதுபோல் என்னால் சிறப்பாகச் செய்ய முடியுமா? என்று தெரியவில்லை. என் கட்டுரைக்குப் பரிசு கிடைக்கவில்லையென்றால் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது” என்று யாழினி அவர்களுக்குப் பதிலளித்தாள்.

நீங்கள் யாழினியாக இருந்தால் என்ன செய்வீர்கள்? சிந்தனை செய்க.

## மதிப்புக்கல்வி

### மனிதநேயம்

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபது மணி நேரம் வரை கடுமையாக உழைப்பார். சில நாள் வீடு திரும்ப அவருக்கு நள்ளிரவுக்குமேல் ஆகிவிடும்.

ஒருநாள் அவர், நள்ளிரவுக்குமேல் வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் வீடு திரும்பினார். –நெடுங்காலமாக அவரிடம் வேலை பார்த்துவரும் காவலர், அன்று களைப்பு மிகுதியால் உறங்கிக்கொண்டிருந்தார்.

அவருடன் வந்த மற்றவர்கள், அக் காவலரை எழுப்பச் சென்றார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தி, பாவம், வயதானவர்; அவரை எழுப்பாதீர்கள்; அவர் தூங்கட்டும் என்று கூறியவாறே தாமே அறையின் திறவுகோலை எடுத்துச்சென்று அறையைத் திறந்தார்.

அவரோடு வந்த வெளிநாட்டு நண்பர் தமது கட்டுரை ஒன்றில், அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டாய் இந்நிகழ்வைக் குறிப்பிடுகிறார்.

அவர்தாம் இந்தியாவின் முதன்மையமைச்சராக இருந்த நேரு.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

பூங்காவில்...

"டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே . பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி ? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்."

"சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்குதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே."

தந்தைக்கும் மகளுக்கும் நடந்த உரையாடலைப் படித்தீர்களா ?

இப்படிப் பேசினால் தமிழுக்கும் பெருமையில்லை; ஆங்கிலத்திற்கும் சிறப்பில்லை. தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம். மேற்காணும் உரையாடலில் பயன்படுத்தியுள்ள ஆங்கிலச் சொற்களை நீக்கி. அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பேசிப் பழகுக.

## மொழியாக்கம்

அ) தமிழாக்கம் செய்க.

Maps serve better than the printed pages for giving many kinds of information. In fact, people made and used maps before they learned how to read and write. Explorers have found maps that had been made by their ancestors. Sometimes these maps were carved on stones.

ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

1. Health is wealth.
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
2. Too much of anything is good for nothing.
   அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
3. No pain no gain.
   உழைப்பின்றி ஊதியமில்லை.
4. Haste makes waste.
   பதறாத காரியம் சிதறாது.
5. Knowledge is power.
   அறிவே ஆற்றல்.

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருகவேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

– தந்தை பெரியார்.

# சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள்தரும் பல சொற்கள்.

பதம் – பகுபதம் ( பகுக்கவியலும் பதம் ); பகாப்பதம் ( பகுக்கவியலாப் பதம் )

மொழி – தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

கிளவி – இரட்டைக்கிளவி ( இரட்டைச்சொல் )

(எ–டு) 1. பூ, கை, தா, வா – இவை ஓரெழுத்துச் சொற்கள்.

2. மண், மரந்தர், நடந்தனர் – இவை இரண்டு முதலாகப் பல எழுத்துகள் தொடர்ந்த சொற்கள்.

## மூவகை மொழிகள்

மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

### 1. தனிமொழி

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது, தனிமொழி.

(எ–டு) வா, கண், செய்தான்.

### 2. தொடர்மொழி

இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சொற்கள் தொடர்ந்துவந்து பொருளை உணர்த்துவது தொடர்மொழி.

(எ–டு) 1. படம் பார்த்தான்.

2. பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருக்கின்றன.

### 3. பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்துநின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, பொதுமொழி.

(எ–டு) அந்தமான்

'அந்தமான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த + மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் ( விலங்கு ) என வேறுபொருளையும் தருகின்றது.

இதேபோல், பலகை, வைகை, தாமரை, வேங்கை முதலியன தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் வருவதை அறிக.

> ஒருமொழி ஒருபொருள னவாம் தொடர்மொழி
> பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. – நன்னூல், 260

### வினைச்சொல்

இராமன் வந்தான். கண்ணன் நடந்தான்.

இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள். அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களைக் குறிப்பதால், இவை வினைச்சொற்கள். இவையே பயனிலைகளாகவும் ( முடிக்கும் சொற்களாகவும் ) உள்ளன. இவ்வாறு, எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

### வினைமுற்று

அருளரசு வந்தான். வளவன் நடந்தான்.

இத்தொடர்களில் வந்தான், நடந்தான் என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு, தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.

'வந்தான், நடந்தான்' என்னும் வினைமுற்றுகள் 'ஆன்' என்னும் விகுதி பெற்றுள்ளதால், உயர்திணையையும், ஆண்பாலையும், ஒருமை என்ற எண்ணையும், படர்க்கை இடத்தையும், உணர்த்துகின்றன. 'த்' என்ற இடைநிலை வந்துள்ளதால் ( நட + த் ( ந் ) + த் + ஆன்); (வா (வ) + த் (ந்) + த் + ஆன்) இஃது இறந்த காலத்தையும் உணர்த்துகிறது.

வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்; முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும்; திணை, பால், எண், இடங்களைக் காட்டும். இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

(எ–டு) உழுதான்

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | உழவன் |
| கருவி | – | கலப்பை |
| நிலம் | – | வயல் |
| செயல் | – | உழுதல் |
| காலம் | – | இறந்தகாலம் |
| செய்பொருள் | – | நெல் |

> செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
> செய்பொருள் ஆறும் தருவது வினையே. – நன்னூல், 320

### குறிப்பு வினைமுற்று

பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக்கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் பொன்னன் | – | பொன்னை உடையவன் | – | பொருள் |
| அவன் விழுப்புரத்தான் | – | விழுப்புரத்தில் வாழ்பவன் | – | இடம் |
| அவன் சித்திரையான் | – | சித்திரையில் பிறந்தவன் | – | காலம் |
| அவன் கண்ணன் | – | கண்களை உடையவன் | – | சினை |
| அவன் நல்லன் | – | நல்ல இயல்புகளை உடையவன் | – | குணம் |
| அவன் உழவன் | – | உழுதலைச் செய்பவன் | – | தொழில் |

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே. – நன்னூல், 321

அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த 'பொன்னன்' என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

### எச்சம்

கயல்விழி படித்தாள். கோதை சென்றாள்.

இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள்.

இவ்வினைமுற்றுகள் சில இடங்களில் 'ஆள்' என்னும் விகுதி குறைந்து படித்த, சென்ற எனவும், படித்து, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றுப்பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள்; ஆதலால், எச்சம் எனப்படும்; அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

### பெயரெச்சம்

படித்த கயல்விழி. சென்ற கோதை.

படித்த, சென்ற என்னும் முற்றுப்பெறாத எச்சவினைகள் கயல்விழி, கோதை எனப் பெயரைக்கொண்டு முடிந்ததால் அவை பெயரெச்சங்கள் எனப்படும். அஃதாவது, ஓர் எச்சவினை ( வந்த, நடந்த ) பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும். இப்பெயரெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகாலப் பெயரெச்சம் – படித்த கயல்விழி, சென்ற கோதை
2. நிகழ்காலப் பெயரெச்சம் – படிக்கின்ற கயல்விழி, செல்கின்ற கோதை
3. எதிர்காலப் பெயரெச்சம் – படிக்கும் கயல்விழி, செல்லும் கோதை

இது தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

### தெரிநிலைப் பெயரெச்சம்

வந்த பையனைப் பார்த்துக் கண்ணன் நின்றான்.

இத்தொடரில் வந்த என்பது பையன் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால், பெயரெச்சம் எனப்படும். செய்த, செய்கின்ற, செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்பாடுகள். இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும். இவை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

(எ–டு) உண்ட இளங்கோவன்.

| | | |
|---|---|---|
| செய்பவன் | – | இளங்கோவன் |
| கருவி | – | கலம் |
| நிலம் | – | வீடு |
| செயல் | – | உண்ணுதல் |
| காலம் | – | இறந்த காலம் |
| செய்பொருள் | – | சோறு |

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறே பொருத்திக் காணலாம்.

| | | |
|---|---|---|
| உடன்பாடு | – | எதிர்மறை |
| (எ–டு) உண்ட இளங்கோவன் | – | உண்ணாத இளங்கோவன் |

### குறிப்புப் பெயரெச்சம்

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

(எ–டு) நல்ல பையன்

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தைக் ( இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன் ) குறிப்பால் உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| உடன்பாடு | – | எதிர்மறை |
| (எ–டு) நல்ல மாணவன் | – | தீய மாணவன் |

### வினையெச்சம்

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

(எ–டு) படித்து வந்தான், பாடக் கேட்டான், ஓடிச் சென்றான், போய்ப் பார்த்தான்.

அஃதாவது, ஓர் எச்சவினை, வினையைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகால வினையெச்சம் – படித்து வந்தான், ஓடிச் சென்றான்.
2. நிகழ்கால வினையெச்சம் – படித்து வருகின்றான், ஓடிச் செல்கின்றான்.
3. எதிர்கால வினையெச்சம் – படித்து வருவான், ஓடிச் செல்வான்.

இவ்வினையெச்சமும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சத்தில் எச்சங்கள் மட்டுமே செய்த, செய்கின்ற, செய்யும் எனக் காலத்துக்கேற்ப மாறும்; பெயர்கள் மாறா. வினையெச்சத்தில் எச்சங்கள் மாறா. மேலே காட்டியதுபோல அவை முக்கால வினைமுற்றுகளையும் பெற்றுவரும்.

### தெரிநிலை வினையெச்சம்

படித்துத் தேறினான் படிக்கச் செல்கின்றான்

இத்தொடர்களில் படித்து, படிக்க என்னும் சொற்கள் எச்ச வினையாய் நின்று காலத்தைக் காட்டித் தேறினான், செல்கின்றான் ஆகிய வினைமுற்றுகளைக் கொண்டு பொருள் முடிவு பெறுகின்றன. இவ்வாறு காலத்தையும், செயலையும் உணர்த்தி வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை, தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

### குறிப்பு வினையெச்சம்

மெல்லப் பேசினான். கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்.

இவ்விரு தொடர்களிலும் உள்ள மெல்ல, இன்றி என்னும் எச்ச வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை உணர்த்தி நின்று, வினைமுற்றைக்கொண்டு முடிந்துள்ளன. ஆகையால், இவை குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

### முற்றெச்சம்

மைதிலி வந்தனள் பாடினள். முருகன் படித்தனன் தேறினன்.

இத்தொடர்களில், வந்தனள், படித்தனன் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்னும் வினையெச்சப் பொருள்களில் நின்று, வேறு வினைமுற்றுகளைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப்பொருளில் வந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.

## மொழித்திறன் பயிற்சி

### தொகைச்சொல்

கனிகளுள் எவற்றை முக்கனி எனக் குறிப்பிடுகிறோம் ?

மா, பலா, வாழை.

முக்கனி என்பது தொகைச்சொல் எனப்படும். தொகை என்னும் சொல்லுக்குத் தொகுத்தல் என்பது பொருள். சில தொகைச்சொற்களை விரித்துக் காண்போம்.

இருவினை – நல்வினை, தீவினை; தன்வினை, பிறவினை

இருதிணை – உயர்திணை, அஃறிணை; அகத்திணை, புறத்திணை.

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | – | இயல், இசை, நாடகம் |
| முப்பால் | – | அறம், பொருள், இன்பம். |
| மூவிடம் | – | தன்மை, முன்னிலை, படர்க்கை. |
| மூவேந்தர் | – | சேரர், சோழர், பாண்டியர். |
| நாற்றிசை | – | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு. |
| நானிலம் | – | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். |
| ஐந்திணை | – | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. |
| ஐம்பால் | – | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால். |
| ஐம்புலன் | – | தொடுஉணர்வு, உண்ணல், உயிர்த்தல், காணல், கேட்டல். |
| ஐம்பொறி | – | மெய், வாய், மூக்கு, கண், செவி. |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ________.

ஆ) தொழிலைக் குறிக்கும் சொல் ________ .

இ) வினைமுற்று ________, ________ என இருவகைப்படும்.

ஈ) ஓர் எச்ச வினை ________ கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

**2. தொகைச்சொற்களை விரித்தெழுதுக.**

1. இருவினை 2. முத்தமிழ் 3. மூவேந்தர் 4. நானிலம் 5. ஐந்திணை

### ஆ) குறுவினாக்கள்

1. சொல் என்றால் என்ன ?
2. மொழியின் வகைகள் யாவை ?
3. வினைச்சொல் என்றால் என்ன ?
4. வினைமுற்றைக்கொண்டு எவ்வெவற்றை அறியலாம் ?
5. பெயரெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
6. வினையெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
7. முற்றெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.

### இ) சிறுவினாக்கள்

1. பொதுமொழி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
2. தெரிநிலை வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
3. குறிப்பு வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
4. தெரிநிலைப் பெயரெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
5. குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
6. குறிப்பு வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

செயல்திட்டம் : பாடநூலிலுள்ள தொகைச்சொற்களை எடுத்தெழுதி விரித்துக்காண்க.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'பெண்கல்வி' என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

அறிஞர் அண்ணாவின் அடுக்குமொழி நடையைப் படித்துச் சுவைக்க.

மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கின்றேன்.

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக்கோட்டமாய்த் திகழ்ந்தது இம்மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன். பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகிடுகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டு உலவுவது மேகம்; அறிகிறோம். தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ! ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளிலுள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு – புள்ளிக் கலாப மயில் – கார்மேகம்.

இவ்வுரைப்பகுதியிலுள்ள அடுக்குமொழித்தொடர்களை எடுத்தெழுதுக.

### இ) எழுதுதல் திறன்

கீழுள்ள சொற்றொடர்களை முறைப்படுத்திப் பத்தியமைப்பில் எழுதுக.

1. களைப்பு மிகுதியால் தள்ளாடித் தள்ளாடி நடந்த அவர், சோர்வு மேலிடச் சுற்றும் முற்றும் பார்த்தார்.
2. முரசு மட்டும் வைக்கக்கூடிய அக்கட்டிலில், யாரோ ஒருவர் படுத்திருப்பதைக் கண்டதும் உறையிலிருந்த வாளை எடுத்து அவரை வெட்டுவதற்குச் சென்றான் சேரமான்.
3. புலவரின் உறக்கம் கலையாதவாறு மெதுவாக அவருக்குக் கவரி வீசிக்கொண்டு நின்றான் சேரமான்.

4. மோசிகீரனார் என்னும் புலவர் ஒருசமயம் சேரமான் இரும்பொறையைக் காண நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்தார்.

5. சிறிது நேரத்தில் சேரமானும் வீரர்களும் அக்கட்டிலை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

6. முரசுக்கட்டிலுக்கு மிக நெருக்கமாகச் சென்றதும், திகைப்படைந்த சேரமான், ஓங்கிய வாளைக் கீழே தாழ்த்தினான். வீரர்களிடம் மயில் தோகையால் செய்யப்பட்ட கவரியைக்கொண்டு வருமாறு பணித்தான்.

7. அருகில் ஓர் அழகிய கட்டில் இருப்பதைப் பார்த்தார். களைப்பின் காரணமாகக் கால்களை நீட்டிப் படுத்துவிட்டார்.

ஈ) கட்டுரை

சிக்கனமும் சிறுசேமிப்பும்

உ) கடிதம்

குடிநீர்வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம்.

## தமிழெண்களை அறிவோம்

51 முதல் 100 வரை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 51 ருக | 61 | 71 | 81 | 91 |
| 52 | 62 | 72 | 82 | 92 |
| 53 | 63 | 73 | 83 | 93 |
| 54 | 64 | 74 | 84 | 94 |
| 55 | 65 | 75 | 85 | 95 |
| 56 | 66 | 76 | 86 | 96 |
| 57 | 67 | 77 | 87 | 97 |
| 58 | 68 | 78 | 88 | 98 |
| 59 | 69 | 79 | 89 | 99 |
| 60 | 70 | 80 | 90 | 100 |

## வாழ்க்கைத்திறன்

மறுத்தல் திறன்

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளிநேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

பெற்றோர் மாறனைப்பற்றி நினைப்பது சரியா ?

நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக்கொள்ளவேண்டும் ?

இயல் 2

உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் புகைபிடித்தல் முதலான செயல்களில் ஈடுபட உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்கிறார்கள். அப்போது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் ?

அ) நண்பருடனான நட்பு நீடிக்கவேண்டும். எனவே, அவர்களின் பேச்சுக்கு உடன்படுவேன்.

ஆ) நீங்கள் செய்வது தவறு, இதனை அனைவரிடமும் வெளிப்படுத்தி விடுவேன் என்று கூறுவேன்.

இ) எனக்கு இதுபோன்ற செயல்களில் விருப்பம் கிடையாது என்று மென்மையாக மறுத்து விடுவேன்.

## மதிப்புக்கல்வி

### இரக்கம்

ஒருநாள், கொல்கத்தாவில் கனமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது, சாலையோரத்தில் கொட்டும் மழையில் மூதாட்டி ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அந்நிகழ்வைக் கண்ட பெண்மணி, அம்மூதாட்டியைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். கவனிப்பாரற்றுச் சாலையில் திரிபவர்களையும் முதியோர்களையும் அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதில் அப்பெண்மணி நாட்டம் கொண்டார். அனாதையாக இறப்பவர்களைப் புதைக்கும் பணியினையும் அப்பெண்மணி மேற்கொண்டார். அப்பணியினை மேற்கொள்ளும் இடத்தின் அருகில் கோவில் ஒன்று இருந்தது. அக்கோவிலைப் பராமரிப்பவர்களுக்கு அப்பெண்மணியின் செயல் பிடிக்காததால் அவரை, அங்கிருந்து வெளியேற்ற முடிவு செய்தனர். இதுகுறித்து அவரிடம் பேசுவதற்கு, அவர் இருப்பிடத்தை நோக்கி ஆவேசத்துடன் வந்தோர், அப்பெண்மணி செய்து கொண்டிருந்த செயலைக் கண்டு திகைத்து நின்றனர் . அப்பொழுது அப்பெண்மணி, தொழுநோயால் பாதிப்படைந்த ஒருவரின் புண்களைக் கழுவி மருந்து போட்டுக்கொண்டிருந்தார்.

தொட்டால் ஒட்டிக்கொள்ளும் என்று பயந்து அனைவரும் வெறுக்கக்கூடிய ஒரு நோயாளியை அவர் கவனித்துக் கொண்ட முறை, அவரை எதிர்த்துப் போராட வந்தவர்களை நாணமடையச் செய்தது. அவர்கள், அப்பெண்மணியை இருகரம் கூப்பி வணங்கினார்கள். தன்னலம் கருதாது பிறர்க்கு உதவுவதையே சிறந்த தொண்டாகக் கருதி வாழ்ந்த அப்பெண்மணிதான் அன்னை தெரேசா.

## மொழியாக்கம்

அ) தமிழாக்கம் செய்க.

Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Charity begins at home. | தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும். |
| 2. Covet all lose all. | பேராசை பெருநட்டம். |
| 3. Diamonds cut diamonds. | முள்ளை முள்ளால் எடு. |
| 4. East or west, home is the best. | எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது. |
| 5. Empty vessels make the greatest sound. | குறை குடம் கூத்தாடும். |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181





# பொது

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவதால், இது பொது என அழைக்கப்படுகிறது.

## 1. வெளிப்படை, குறிப்பு

1. உலகிலேயே பண்பாட்டில் தமிழ்நாடுதான் தலைசிறந்து விளங்குகின்றது.
2. பூப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது.

இவ்விரு தொடர்களையும் படித்துப் பாருங்கள். இரு தொடர்களிலும் தமிழ்நாடு என்னும் சொல் வந்துள்ளதைக் கவனியுங்கள்.

முதல் தொடரில் வந்துள்ள தமிழ்நாடு என்னும் சொல் வெளிப்படையாக இடத்தைக் குறித்து வந்துள்ளது.

இரண்டாம் தொடரில், தமிழ்நாடு என்பது ஆகுபெயராய் நின்று குறிப்பால் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களைக் குறிக்கிறது.

இவ்வாறு, வெளிப்படையாகத் தன்பொருளை உணர்த்தும் சொல் வெளிப்படை எனவும், ஒரு தொடர் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது குறிப்பு எனவும் கூறுவர்.

## 2. குறிப்புச்சொற்கள்

ஒன்றொழி பொதுச்சொல், விகாரச்சொல், தகுதிவழக்குச்சொல், ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்புச் சொல், முதற்குறிப்புச் சொல், தொகைக்குறிப்புச் சொல் போன்றவை குறிப்பால் பொருள் தரும் சொற்களாம்.

### ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டிலும் பொதுவான சொற்கள் உண்டு. ஒரு சொல், தொடரில் முன்னும் பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும், குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி, மற்றொருபாலைச் சுட்டும். அதற்கு, ஒன்றொழி பொதுச்சொல் என்பது பெயர்.

உயர்திணையில்,

(எ–டு) 1. வீட்டின்முன் ஐவர் கோலமிட்டனர்.

2. நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்.

முதல் தொடரில் வந்துள்ள ஐவர் என்னும் பொதுச்சொல் கோலமிட்டனர் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கிப் பெண்பாலை உணர்த்தி நின்றது. இரண்டாம் தொடரிலுள்ள

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

ஐவர் என்னும் பொதுச் சொல், போர்க்களம் என்னும் சொல்லின் குறிப்பால் பெண்பாலை விடுத்து, ஆண்பாலை மட்டும் உணர்த்தி நின்றது.

அஃறிணையில்,

(எ–டு) 1. இம்மாடு வயலில் உழுகிறது. 2. இம்மாடு பால் கறக்கிறது.

முதல் தொடரில் வந்துள்ள 'மாடு' என்னும் பொதுச் சொல் உழுகிறது என்னும் வினைக்குறிப்பால் காளைமாட்டையும், இரண்டாவது தொடரில் வரும் 'மாடு' என்னும் பொதுச்சொல் கறக்கிறது என்னும் வினைக்குறிப்பால், பசுமாட்டையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு, ஒரு பொதுச்சொல் முன்பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்றொழி பொதுச்சொல் எனப்படும்.

ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை. – நன்னூல், 269

### 3. இனங்குறித்தல்

கதிர்வேல் வெற்றிலை தின்றான்.

இத்தொடர், கதிர்வேல் வெற்றிலை மட்டுமா தின்றான். வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு முதலானவற்றையும் சேர்த்துத் தின்றான் எனப் பொருள்படுகிறது.

இவ்வாறு ஒருசொல், தன்பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்.

ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே. – நன்னூல், 359

### 4. அடுக்குத்தொடர்

அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்குமுறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

(எ–டு)
1. அன்றே அன்றே – அசைநிலை
2. போ போ – விரைவு
3. எறி எறி – சினம்
4. வருக வருக – மகிழ்ச்சி
5. தீ தீ தீ – அச்சம்
6. நொந்தேன் நொந்தேன் – துன்பம்
7. கோடி கோடி கோடி கோடியே – இசை நிறை

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்று நான் கெல்லை முறை அடுக்கும். – நன்னூல், 395

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



### 5. இரட்டைக்கிளவி

இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்தே வரும்; பிரித்தால் பொருள் தராது; இதனை இரட்டைக்கிளவி என்பர். (கிளவி – சொல்) இரட்டைக் கிளவி – இரண்டு சொல்.

(எ–டு) 1. பாவை, படபடவெனப் பேசினாள்.

2. கலா, கலகலவெனச் சிரித்தாள்.

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா – நன்னூல், 396

**அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. சொற்கள் தனித்தனியே நிற்கும். | 1. சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும். |
| 2. பிரித்தால் பொருள் தரும். | 2. பிரித்தால் பொருள் தராது. |
| 3. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும். | 3. இரட்டித்தே வரும். |
| 4. விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி | 4. இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும். |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) இளவழகன் வந்தான். இது ____________ தொடர்.
1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை.

ஆ) 'மாடு' என்னும் சொல் ____________ ஆகும்.
1. உயர்திணைப் பொதுப் பெயர் 2. அஃறிணைப் பொதுப் பெயர்
3. விரவுப்பெயர்

இ) மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ____________ குறிக்கும்.
1. பசு 2. காளை 3. கன்று

2. பொருத்துக.

1. வெளிப்படைச் சொற்கள் – சோறு உண்டான்.
2. குறிப்புச் சொல் – கல், மண்.
3. இனங்குறித்தல் – மாடு பால் கறந்தது.

### ஆ) குறுவினாக்கள்

1. வெளிப்படை என்றால் என்ன? சான்று தருக.
2. குறிப்பு என்பதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'தீண்டாமை மனித நேயமற்ற செயல்' என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

பத்தியைப் படித்து அதன் பொருள் நயம் உணர்க.

மாவீரன் அலெக்சாண்டரைப் பார்க்க வந்த அயல்நாட்டு விருந்தினர் ஒருவர், "பேரரசே! உங்கள் நகரிலுள்ள தோட்டங்களில் அருஞ்செயலாற்றிய வீரர்களின் சிலைகளை வைத்திருக்கிறீர்கள். தங்களின் சிலையை மட்டும் ஏன் வைக்கவில்லை?" என்று கேட்டார்.

அதற்கு அலெக்சாண்டர், "என்னுடைய உருவச் சிலையை நான் இங்கு வைத்தால் எதிர்காலத்தில் என் பெயர் மறைந்துவிடும். இது யாருடைய சிலை என்று என் சிலையைப் பார்த்துக் கேட்பார்கள். அதைவிட என் சிலை வைக்கப்படாதிருந்தால், "இவ்வளவு சிலைகள் இருக்கும்போது அலெக்சாண்டரின் சிலை மட்டும் ஏன் இல்லை? என்று கேட்கட்டும், அதைத்தான் நான் விரும்புகிறேன்," என்றார்.

இதுபோன்ற பொருள் நயமிக்க சொற்களைச் சிறுகுழுவில் கலந்துரையாடி மகிழ்க.

### இ) எழுதுதல் திறன்

சிறுகதையை முடிக்கும் திறன்

கதை, கவிதை, கட்டுரை, கடிதம் முதலானவை, எழுதுதல் திறனில் உயர்நிலைத் திறன்களாகும். மொழிப்பாடம் கற்ற ஒவ்வொருவரிடமும் இத்திறன்கள் அமைந்திருந்தல் வேண்டும். இப்பகுதியில் சிறுகதை ஒன்றின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டு, முழுமைபெற்ற ஒரு சிறுகதையை உருவாக்குதல் வேண்டும். சிறுகதையின் முடிவு உங்கள் எண்ணத்திற்கேற்ப எப்படி வேண்டுமானாலும் அமையலாம். சிறுகதைக்கேற்ற பொருத்தமான தலைப்பு ஒன்றையும் தருக.

பயிற்சி : கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையின் தொடக்கத்தைக்கொண்டு கதையை முழுமையாக எழுதுக. கதைக்குத் தலைப்பு ஒன்று தருக.

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தங்கள் கூடுகளைவிட்டுப் பறக்கத் தொடங்கின. அந்தக் காலைவேளையில் வானில் திடீரென்று ஓர் ஒளி தோன்றியது. அப்போது ..............

### ஈ) கட்டுரை : சாலைவிதிகள்

### உ) கடிதம் : பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

### ஊ) விவாதித்தல் திறன்

'தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொதுமக்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது' என்பது குறித்து வகுப்பில் பேசுக.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## மொழித்திறன் பயிற்சி

அ) உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

(எ–டு) நான் மழையில் நனைவது பிடிக்கும்.

எனக்கு ( நான் + கு = எனக்கு ) மழையில் நனைவது பிடிக்கும்.

1. அண்ணன், தம்பி வீடு சென்றார்.
2. மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க.
3. நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
4. வேல்விழி திருக்குறள் படித்தாள்.

ஆ) இளமைப்பெயர்களைப் பொருத்துக.

1. ஆடு – கன்று
2. மான் – பிள்ளை
3. கீரி – குட்டி
4. சிங்கம் – குஞ்சு
5. கோழி – குருளை

இ) நிறுத்தக்குறி இடுக.

சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்

ஈ) பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
4. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
5. நான் இந்தக் காலேஜின் ஒல்ட் ஸ்டுடண்ட்.

## தமிழெண்களை அறிவோம்

பயிற்சி : 101 முதல் 150வரை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 101 | கoக | 111 | 121 | 131 | 141 |
| 102 | | 112 | 122 | 132 | 142 |
| 103 | | 113 | 123 | 133 | 143 |
| 104 | | 114 | 124 | 134 | 144 |
| 105 | | 115 | 125 | 135 | 145 |
| 106 | | 116 | 126 | 136 | 146 |
| 107 | | 117 | 127 | 137 | 147 |
| 108 | | 118 | 128 | 138 | 148 |
| 109 | | 119 | 129 | 139 | 149 |
| 110 | | 120 | 130 | 140 | 150 |

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

அன்பரசி, பள்ளிக்குச் செல்லும் வழியில் அந்தக் காட்சியை நாள்தோறும் காணத் தவறுவதில்லை. கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் உட்கார்ந்திருப்பார்.

அவருடைய கைகள் இரண்டும், கூடைமுடைதலில் விரைவாகச் சுழன்றுகொண்டிருக்கும். எப்படி இவரால் இவ்வளவு விரைவாகச் செயல்படமுடிகிறது என்று அன்பரசி வியப்படைவாள்.

ஒருநாள், தன் இரு கண்களையும் கட்டிக்கொண்ட அன்பரசி, வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின்மீது மோதிக்கொண்டாள். அப்போதுதான், அவர்கள் எத்தகைய துன்பத்தை அடைகிறார்கள் என்று எண்ணிப்பார்த்து மனம் வருந்தினாள்.

மாற்றுத் திறனாளரிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் ?

அன்பரசியைப்போன்று நீங்களும் சிறிதுநேரம் கண்ணைக்கட்டிக்கொண்டு, உங்கள் வீட்டினுள்ளே ஏதாவது ஒருபொருளைத் தேடி எடுங்கள்.

இப்பொழுது மாற்றுத்திறனாளரின் நிலையை எண்ணிச் சிந்தனை செய்யுங்கள்.

## படிவங்களை நிரப்புதல்

அஞ்சலகம், வங்கி, கல்வி நிறுவன விண்ணப்பங்கள் மற்றும் பேருந்து, தொடர்வண்டி ஆகியவற்றில் இருக்கை / படுக்கை முன்பதிவு செய்தல் முதலியவற்றில் படிவங்களை நிரப்புதல் தவிர்க்க இயலா. அவற்றை நிரப்ப நாம் அறிந்து கொள்ளுவது அவசியம்.

### வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புதல் :


தேதி / Date ____

____ Depositing Branch
Common Pay in Slip for Depositing, Loans, IB Credit Card, Taxes etc.
Type of account (Pl ✓) SB / CA / OD / OCC / RD / Term Dep / Loans / Taxes / Credit Card / Others
____ Specify
A/c No. / Credit Card No. [ ]
Account Name Mr./Ms./Messrs ____
ரூபாய் Rs. in words ____
____ only
by Cash/Cheque) | ரூ. Rs. | பைசா Ps.
Cashier/SWO — அதிகாரி / Officer
PLEASE GIVE DETAILS OF CASH / CHEQUES DEPOSITED OVERLEAF
Service Tax Registration No. AAAC11607GST005 PAN No. AAAC11607G

தேதி / Date ____
Common Pay In Slip for Deposits, Loans, IB Credit Card, Taxes etc.
Please use separate slips for Cash / Cheques on IB / Cheques on Other Banks Local / Other Banks Outstation
Deposited at ____ Branch
SB/CA/OD/OCC/RD/Term Dep/Loans/Taxes/Credit Card/Others ____
A/c No. / Credit Card No. [ ]
A/c Maintained with ____ Branch
For the credit of Mr./Ms./Messrs ____
Rs. in words ____
____ only by Cash / Cheque | ரூ. Rs. | பைசா Ps.
AFFIX BANK SEAL HERE
For Cash deposits of Rs. 10 Lakhs & above please furnish details of transaction including source of cash overleaf for RBI reporting
Signature of Remitter
Name ____
Address ____
Phone No. ____
PAN of Remitter ____
* (Mandatory of Rs. 50000 and above)
Journal No. ____
Cashier/SWO — Officer
Output No. ____
Service Tax Registration No. AAAC11607GST005
PAN No. AAAC11607G

## மதிப்புக்கல்வி

### ஈகை

தமிழ்த்திரைப்பட உலகின் வழிகாட்டியாகவும் பாதுகாவலராகவும் திகழ்ந்தவர் ஏ.வி. மெய்யப்பர். அவர் இயற்கையெய்தியதும், அவர் வழக்கமாகப் பயன்படுத்திய பொருள்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பாக எடுத்து வைத்தனர். அத்தகைய பொருள்களில் இன்றியமையாத ஒன்று ஒலிப்பதிவு நாடாக் கருவி.

அவர், தமக்கு விருப்பமான பாடல்களை அதில் கேட்பது வழக்கமாம். அவருடைய துணைவியார், அவ்வொலிப்பதிவுக் கருவியைத் தேடியபோது, அதனைக் காணவில்லை; எல்லாரையும் கேட்டுப் பார்த்தார்; வீட்டில் தேடாத இடமில்லை. ஆனாலும் கிடைக்கவில்லை.

சில நாளுக்குப் பிறகு, அலுவலகத்திலிருந்த ஒருவரைக் கேட்டபோது, அவர் கூறிய பதில் அவ்வம்மையாரைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

ஏ.வி.எம். அவர்கள், இயற்கை யெய்துவதற்கு நான்கு நாளுக்குமுன் செய்தித்தாளில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தார். யாராவது ஓர் ஒலிப்பதிவுக்கருவியை நன்கொடையாகக் கொடுத்து உதவினால், அதில் பாடங்களைப் போட்டுப் படித்துத் தேர்வு எழுத உதவியாக இருக்கும் என்று விழிமாற்றுத்திறனாளிப் பெண்ணொருத்தி விளம்பரப்படுத்தியிருந்தாள்.

அதனைப் படித்த ஏ.வி.எம். தம் ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து, அதனை எப்படி இயக்குவது எனத் தாமே ஒலிப்பதிவுநாடாவில் பேசிப் பதிவு செய்தார். அதனை, அந்தப் பெண்ணுக்கு உடனே அனுப்பிவைத்தார்.

தம் வாழ்நாள் இறுதிவரை ஏ.வி.எம். அவர்கள் கருணை உள்ளத்தோடு இருந்துள்ளார் என்பதை இதன்வாயிலாக அறியமுடிகிறது.

நம் வாழ்நாளில் இயன்றவரை இயலாதோருக்கு, இல்லாதோர்க்கு, மாற்றுத் திறனாளியர்க்கு உதவுவதே சிறந்த உதவி.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Money makes many things | பணம் பத்தும் செய்யும். |
| 2. Eagles don't catch flies. | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. |
| 3. Old is gold. | காலம் பொன் போன்றது. |
| 4. Prevention is better than cure. | வருமுன் காப்பதே சிறந்தது. |
| 5. Slow and steady wins the race. | முயற்சி திருவினையாக்கும். |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# வினா, விடைவகைகள், ஒருபொருட் பன்மொழி

## வினா வகை

என்ன ? எப்படி ? எங்கு ? ஏன் ? என வினாமேல் வினாவைக் கேட்டு விடையறிய விரும்புகின்றவனே சிறந்த அறிவாளியாக ஆகமுடியும் என்று சாக்கரடீசும், தந்தை பெரியாரும் கூறுவர். வினா அறுவகைப்படும். அவை: அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பன.

### 1. அறிவினா

தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும்பொருட்டு வினவப்படும் வினா அறிவினா.

(எ–டு) திருக்குறளை இயற்றியவர் யார் ? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.

### 2. அறியாவினா

தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது; அறியாவினா.

(எ–டு) எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை ? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

### 3. ஐயவினா

தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒருபொருள் குறித்து, ஐயத்தினைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படும் வினா, ஐயவினா.

(எ–டு) அங்கே கிடப்பது பாம்போ ? கயிறோ ?

### 4. கொளல்வினா

தான் ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும்பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா, கொளல்வினா.

(எ–டு) பருப்பு உள்ளதா ? என வணிகரிடம் வினவும் வினா.

### 5. கொடைவினா

தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக, அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரிடம் வினவுவது, கொடைவினா.

(எ–டு) மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ ?

### 6. ஏவல்வினா

ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா, ஏவல் வினா.

(எ–டு) மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா ?

முருகா சாப்பிட்டாயா ?

( இவை படி, சாப்பிடு என்று ஏவல் பொருளைத் தருகின்றன )

அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை,
ஏவல் தரும் வினா, ஆறும் இழுக்கார். – நன்னூல், 385.

## விடை வகை

வினாவிற்கு ஏற்ப விடையளிப்பதுதான் மொழிநடையின் சிறப்பு.

'தேர்வு, நாளை நடைபெறுமா?' எனக் கேட்ட ஒருவனிடம், 'என் தங்கை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள்' எனக் கூறுவது தவறு. வினாவும் விடையும் பிழையின்றி அமைதலே முறை.

இறை, செப்பு, பதில் என்பன விடையின் வேறுபெயர்கள். விடை எண்வகைப்படும். அவை: சுட்டு, மறை, நேர், ஏவல், வினாஎதிர்வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பன.

### 1. சுட்டுவிடை

"சென்னைக்கு வழி யாது?" என்று வினவினால்,

'இது' என்பதுபோலச் சுட்டிக் கூறும் விடை, சுட்டுவிடை.

### 2. மறைவிடை (எதிர்மறுத்துக் கூறல் விடை)

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்யேன் என்பதுபோல எதிர்மறுத்துக் கூறும் விடை, எதிர்மறைவிடை.

### 3. நேர்விடை (உடன்பட்டுக் கூறுதல்)

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்வேன் என்று உடன்பட்டுக் கூறும் விடை, நேர்விடை.

### 4. ஏவல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'நீயே செய்' என்று ஏவிக்கூறுவது ஏவல்விடை.

### 5. வினாஎதிர்வினாதல்விடை

"இதுசெய்வாயா?"என்றுவினவியபோது,'செய்யாமலிருப்பேனோ?'என்று வினாவையே விடையாகக் கூறுவது, வினாஎதிர்வினாதல்விடை.

### 6. உற்றதுரைத்தல்விடை

"இது செய்வாயா?" என்று வினவியபோது, 'உடம்பு நொந்தது' என்று தனக்கு உற்றதனை விடையாகக் கூறுவது, உற்றதுரைத்தல்விடை.

### 7. உறுவதுகூறல்விடை

"செய்வாயா?" என்னும் வினாவிற்குக் 'கை வலிக்கும்' எனத் தனக்கு வரப்போவதனை விடையாகக் கூறுவது, உறுவதுகூறல்விடை.

### 8. இனமொழிவிடை

"ஆடுவாயா?" என்று வினவியபோது, 'பாடுவேன்' என ஆடுவதற்கு இனமான பாடுவதனை விடையாகக் கூறுவது, இனமொழிவிடை.

சுட்டு, மறை, நேர் ஆகிய மூன்றும் வெளிப்படை. ஏவல், வினா எதிர்வினாதல், உற்றதுஉரைத்தல், உறுவதுகூறல், இனமொழி ஆகிய ஐந்தும் வினாக்களுக்கு உரிய விடையைக் குறிப்பால் உணர்த்துவன.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

### ஒருபொருட்பன்மொழி

1. திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.

2. அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகின்றன.

இவ்விரு தொடர்களிலும் ஒருபொருள் குறித்துத் தொடர்ந்துவரும் இருசொற்கள் உள்ளன. அவை உயர்ந்தோங்கிய, குழிந்தாழ்ந்து என்பவை. உயர்ந்து, ஓங்கி ஆகிய இரு சொற்களும், உயர்ந்த என்னும் ஒரே பொருளிலும், குழிந்து, ஆழ்ந்து என்பவை குழிந்து என்னும் ஒரே பொருளிலும் வருகின்றன.

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, ஒருபொருட் பன்மொழியாகும்.

(எ–டு) 1. நடுமையம்.

2. மீமிசை ஞாயிறு.

என்னும் தொடர்களில் நடுப்பகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் என்னும் இருசொற்களும், மேற்பகுதி என்னும் பொருளைத் தரும் மீ, மிசை என்னும் இருசொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்தியுள்ளன.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

#### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே ________ என்பர்.

ஆ) ஒருபொருட் பன்மொழிக்குச் சான்று ________.

இ) இது செய்வாா' என்னும் வினாவிற்கு 'வயிறு வலிக்கும்' எனக் கூறுவது ________ விடை.

ஈ) ஆடத்தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது ________ விடை.

உ) நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது ________ வினா.

#### 2. பொருத்துக.

1. அறிவினா – வருவாயா ? எனில் 'வாரேன்' என்பது.
2. ஏவல் விடை – உண்டாயா ? எனில், 'வயிறு வலிக்கும்' என்பது.
3. மறைவிடை – இதனைச் செய்வாயா ? எனில், 'நீயே செய்' என்பது.
4. உறுவது கூறல் – "இதன் பொருள் யாது ?" என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது.

### ஆ) குறுவினாக்கள்

1. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. பாம்போ ? கயிறோ ? – எவ்வகை வினா ?.
3. விடை எத்தனை வகைப்படும் ? அவையாவை ?
4. சுட்டுவிடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக
5. உடன்பட்டுக் கூறும் விடையின் பெயரென்ன ?

## மொழித்திறன்பயிற்சி

### உவமைகளைச் சொற்றொடரில் அமைத்தல்

(எ–டு) 1. என் இளமைக்காலத்துச் செயல்கள், பசுமரத்தாணிபோல நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.

2. அறிஞர் அண்ணாவின் புகழ், குன்றின்மேலிட்ட விளக்குப்போலப் பாரெங்கும் ஒளிவீசுகின்றது.

இவ்வாறே பின்வரும் உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

1. அனலிடைப்பட்ட புழுவைப்போல
2. கடலில் கரைத்த பெருங்காயம்போல
3. இலவுகாத்த கிளிபோல
4. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல
5. அடியற்ற மரம்போல
6. மடைதிறந்த வெள்ளம்போல
7. கல்மேல் எழுத்துப்போல
8. அத்தி பூத்தாற்போல
9. மழை காணாப் பயிர்போல
10. மலரும் மணமும்போல
11. வேலியே பயிரை மேய்ந்ததுபோல
12. கீரியும் பாம்பும்போல

13 உள்ளங்கை நெல்லிக்கனிபோல

14 கிணற்றுத் தவளைபோல

15. நிலவும் வானும்போல



## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

அண்ணாவின் அடுக்குமொழி நடை குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம்.

பசி என்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம்.

பசி என்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம்.

பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம்.

பசுற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற்போக வெட்கந் தடுக்கின்றது, வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்? என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங்கண்ட ஊமையைப்போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம்.

நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வர்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச்சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம்.

(இப்பகுதியில் இடம்பெற்றுள்ள வடசொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களைக் கண்டறிந்து மீண்டும் படித்துப் பார்க்க.)

**செயல் திட்டம் :** அண்ணாவின் கடிதம் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. இதேபோன்று நேரு இந்திராவுக்கு எழுதிய கடிதம், மு.வ.வின் தம்பிக்கு, தங்கைக்கு, நண்பருக்கு என எழுதிய கடிதங்கள் முதலிய நூல்களை நும் பள்ளி நூலகத்திலிருந்து திரட்டுக. அவற்றில் அமைந்துள்ள கருத்துகளைப் படித்துக் குறிப்புகள் திரட்டுக.

## இ) எழுதுதல் திறன்

### உரைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுதல்

கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியை நன்கு படித்து, அதன் மையக்கருத்தினை மனத்தில் அமைத்துக் கொள்ளுதல்வேண்டும். உரைப்பகுதியில், பயின்று வந்துள்ள சொற்களை, சொற்றொடர்களை மீண்டும் பயன்படுத்தாமல் சொந்தநடையில் எழுதுதல் வேண்டும். அடைமொழிகள், பழமொழிகள், உவமைகள், அடுக்குத்தொடர்கள் வந்திருப்பின், அவற்றில் தேவையற்றதை நீக்கிவிட்டு எழுதுதல் வேண்டும். முதலில் திருந்தாப் படிவம் எனத் தலைப்பிட்டுச் சுருக்கி எழுதிய பின்னர், அதில் மாற்றங்கள் செய்து திருந்திய படிவம் எழுதவேண்டும். திருந்திய படிவத்திற்குத் தலைப்பு ஒன்று தருதல்வேண்டும். சுருக்கப்பட்ட பகுதி மூன்றில் ஒரு பங்காக இருத்தல் வேண்டும்.

### சுருக்கி எழுதவேண்டிய பத்தி

சிக்கனமாய் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா? செலவுகளைக் குறைத்தல் வேண்டும். அப்படியானால் நல்ல உணவு, சிறந்த ஆடை மற்றும் தேவையான பொருள்கள் முதலியவற்றுக்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா? அற்றன்று. நோய் வந்துவிட்டால் அதைத் தீர்ப்பதற்கு மருத்துவச் செலவு செய்யாமலிருப்பதா? அதுவும் அன்று, தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான இன்றியமையாத செலவுகளைச் செய்யத்தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும். எறும்பு மழைக்காலத்தில் தனக்கு வேண்டிய உணவைக் கோடைக் காலத்திலேயே தேடி வைத்துக்கொள்கிறது அன்றோ? அதுபோல நாமும், உழைக்கவும் ஊதியம்

மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சேர்த்துவைக்க முயலுதல் வேண்டும். எதிர்காலப் பாதுகாப்பு மிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல், சிறுகச் சிறுகச் சேமித்தாலே பெரும்பொருள் சேமித்துவிடலாம். சிக்கனமாக வாழ்வோம், சிறப்புடன் வாழ்வோம்.

திருந்தாப் படிவம்

சிக்கனமாய் வாழ்வதற்குச் செலவுகளைக் குறைத்தல் வேண்டும். நல்ல உணவு, அழகிய ஆடைகள், தேவைப்படும் பொருள்கள், மருத்துவச் செலவு போன்றவற்றுக்கும் தனக்கும் குடும்பத்திற்கும் இன்றியமையாச் செலவுகளைச் செய்து எஞ்சிய வருவாயில் சேமிக்கும் பழக்கம் கொள்ளுதல் வேண்டும். மழைக்கால உணவைக் கோடைக்காலத்திலேயே சேமித்து வைக்கும் எறும்புபோல, நாமும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சிக்கனமாக வாழ்ந்து சேமிக்கும் பழக்கம் கொண்டால் பெரும்பொருள் சேர்க்கலாம். சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு.

திருந்திய படிவம்

சிறுதுளி பெருவெள்ளம்

உணவு, உடை, மருத்துவம் போன்றவற்றிற்கும் தனக்கும் குடும்பத்திற்கும் இன்றியமையாச் செலவுகளைச் செய்து, பின் எஞ்சியுள்ள பொருளைச் சேமித்து வைத்தல் வேண்டும். மழைக் காலத்திற்குத் தேவையான உணவைக் கோடையில் சேமிக்கும் எறும்புபோல, நாமும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே உழைத்துப் பொருள் தேடி எதிர்கால நல்வாழ்வுக்குச் சேமித்தல் வேண்டும். சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு.

பயிற்சி : கீழுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் திரண்ட கருத்தினைச் சுருக்கி வரைக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

மொழியென்பது சமூகத்தால்தான் வளர்ச்சி பெறும். மொழி இன்றேல் சமூகமாக இயங்க முடியாது. எனவே, ஒன்றுபட்ட பொதுவாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கு மொழியே சிறந்த கருவியாக அமைகின்றது. பொதுமக்கள் தாய்மொழியையே சிறந்த கருவியாகக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக, நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்கு நமது தாய்மொழியையே கையாளுகின்றோம். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், குலங்கள், நிலைகள், தொழில்கள் ஆகியவற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவினரும் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதனைக் காணும்போது தாய்மொழியின் பேராற்றலை என்னவென்று கூறுவது ?

ஈ) கட்டுரை

நான் பேச்சாளரானால்....

உ) கடிதம்

பேருந்து வசதிவேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்க்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## தமிழெண்களை அறிவோம்

1. 151 முதல் 200 வரை எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 151 | ௧௫௧ | 161 | ௧௬௧ | 171 | ௧௭௧ | 181 | ௧௮௧ | 191 | ௧௯௧ |
| 152 | | 162 | | 172 | | 182 | | 192 | |
| 153 | | 163 | | 173 | | 183 | | 193 | |
| 154 | | 164 | | 174 | | 184 | | 194 | |
| 155 | | 165 | | 175 | | 185 | | 195 | |
| 156 | | 166 | | 176 | | 186 | | 196 | |
| 157 | | 167 | | 177 | | 187 | | 197 | |
| 158 | | 168 | | 178 | | 188 | | 198 | |
| 159 | | 169 | | 179 | | 189 | | 199 | |
| 160 | | 170 | | 180 | | 190 | | 200 | ௨௦௦ |

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

பேருந்து நிலையத்தில் ....

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே ?

வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனாலதான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சுதா?

பஸ் டென் தர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

மேற்கண்ட உரையாடலைக் கலப்பின்றித் தமிழில் எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுக்கும் திறன்

பதினோராம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகின்றன. தேவி, அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால், அவள் பெற்றோர், அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

"நான் சொன்னால் சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியதுதான்" என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார்.

"அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்" என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள், தேவி.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?

உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?

## மதிப்புக்கல்வி

### சூழ்நிலைக்கேற்ற அறிவுக்கூர்மை

நாட்டுடைமையாக்கப்பட்ட அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் படமும் திருக்குறளும் இடம்பெறச் செய்தார் முதலமைச்சர் ஒருவர். ஒருமுறை எதிர்க்கட்சியினர், அவரிடம் இதுகுறித்துக் கேள்வி எழுப்பினர். பேருந்தில்...

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

என்று குறிக்கப்பட்டுள்ள குறள் யாருக்கு? ஓட்டுநருக்கா? நடத்துநருக்கா? பயணிகளுக்கா? என்று கேள்வி எழுப்பினர்.

ஓட்டுநருக்கும் நடத்துநருக்கும் என்று கூறினால் தொழிலாளர்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டும்; பயணிகளுக்கு என்றால் பொதுமக்களின் சினத்திற்கு ஆளாக நேரிடும். ஆனால், அந்த முதலமைச்சர் கூறிய நுணுக்கமான பதில் அனைவரையும் அதிர வைத்தது. மேற்கொண்டு அவரிடம் எந்தக் கேள்வியையும் எதிர்க்கட்சியினரால் எழுப்ப முடியவில்லை. அவர் கூறிய பதில் என்ன தெரியுமா?

நாக்கு உள்ளவர்கள் அனைவருக்காகவும் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்பதே அது. பொருத்தமாகவும் தெளிவாகவும் விரைவாகவும் விடை கூறும் ஆற்றல் அவரிடம் இயல்பாக அமைந்திருந்தது. அவர்தாம் பேரறிஞர் அண்ணா. தகுந்த நேரத்தில் நாமும் நம் அறிவைப் பயன்படுத்திப் பொருத்தமாக உரையாடத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

## மொழியாக்கம்

அ) தமிழாக்கம் செய்க.

Letter writing is an art. This can be perfected through constant practice. We write letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation; because, they involve personal and direct communications between two people. So, every educated person should know how to write a clear and readable letter.

ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | | |
|---|---|---|
| 1. | First deserve, then desire. | முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? |
| 2. | Little strokes fell great oaks. | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். |
| 3. | Tit for tat. | யானைக்கும் பானைக்கும் சரி. |
| 4. | Work is worship. | செய்யும் தொழிலே தெய்வம். |
| 5. | Time is Gold. | காலம் பொன் போன்றது. |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# உவம உருபுகள்

தமிழ்ச்செல்வி குயில்போலப் பாடினாள்.

இத்தொடர் குரலினிமையை உணர்த்துகிறது. குரலினிமைக்குக் குயிலின் குரல் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஒருபொருளைச் சிறப்பித்துக்கூற, அதனைவிடச் சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவதே உவமித்துக் கூறுதல் எனப்படும். இவ்வாறு, உவமித்துக் கூறுவதனால் புரியாதன எளிதில் புரியும்; கேட்டார்க்கு இன்பம் பயக்கும். சிறப்பிக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும். அதற்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் உவமை எனப்படும். இதனை உவமானம் எனவும் கூறுவர். உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் வரும் உருபு, உவம உருபு எனப்படும்.

தமிழ் தேன்போல இனிமையானது.

இத்தொடரில் போல என்பது உவம உருபு. உவம உருபுகள் பல. அவற்றையும், அவை தொடரில் அமைந்து வருவதனையும் காண்போம்.

| உவம உருபு | | தொடர் |
|---|---|---|
| 1. போல | – | கிளிபோலப் பேசினாள். |
| 2. புரைய | – | வேய்புரை தோள். |
| 3. ஒப்ப | – | தாயொப்பப் பேசும் மகள். |
| 4. உறழ | – | முழவு உறழ் தடக்கை. |
| 5. அன்ன | – | மலரன்ன சேவடி. |

மேற்கண்டவை போன்ற உவம உருபுகள் பல உள்ளன.

போல புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

– நன்னூல், 367

### விரியுவமை

உவமை, உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) ஆகிய இரண்டனையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை. இஃது, உவமைத் தொடர் எனப்படும்.

(எ–டு) தேன்போன்ற மொழி.

இத்தொடரில் தேன் – உவமை; மொழி – உவமேயம்; போன்ற – உவம உருபு. உவம உருபு, இத்தொடரில் வெளிப்பட வந்துள்ளதனால் இது, விரியுவமை எனப்படும். இஃது, உவமைத் தொடராகும்.

### தொகையுவமை

தேன்மொழி

இதில் உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இதனைத் தொகையுவமை என்பர். இதனை, உவமத்தொகை எனவும் கூறுவர்.

## உவமை உருவக மாற்றம்

பவளவாய் ( பவளம் போன்ற வாய் ) – இத்தொடரில் வாய் பவளத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

பவளம் – உவமை, வாய் – உவமேயம் (உவமையை ஏற்கும் பொருள்)

இவ்வாறு, ஒருபொருளை அதனைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும்.

வாய்ப்பவளம். இத்தொடரில் வாயே பவளம் எனப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. உவமைத்தொகையில் முதல் பகுதி ( பவளம் ) உவமானமாகவும் அதன் அடுத்த பகுதி உவமேயமாகவும் ( வாய் ) அமையும். உருவகத்தில், உவமேயம் முதல் பகுதி; உவமை அடுத்த பகுதியாக இருக்கும். இவ்வாறு உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது, இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப்படுத்திக் காட்டுவதே உருவகம்.

| உவமை | – | உருவகம் |
|---|---|---|
| அமுதமொழி | – | மொழியமுது |
| கயற்கண் | – | கண்கயல் |
| தேன்தமிழ் | – | தமிழ்த்தேன் |
| பூவிரல் | – | விரல்பூ |
| மதிமுகம் | – | முகமதி |
| மலரடி | – | அடிமலர் |
| முத்துப்பல் | – | பல்முத்து |
| விற்புருவம் | – | புருவவில் |
| மலர்ப்பாதம் | – | பாதமலர் |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. மான் ____________ மருளும் பார்வை. (உரிய உவம உருபை இணைத்து எழுதுக.)
2. தொகை உவமைகளை விரியுவமைகளாக மாற்றுக.

   அ) மதிமுகம் ஆ) பவளவாய்

3. விரியுவமைகளைத் தொகையுவமைகளாக மாற்றுக.

அ) கயல்போன்ற விழி ஆ) கிளிபோன்ற மொழி.

4. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

அ) மலர்ப்பாதம் ( உருவகமாக )

ஆ) விழிக்கயல் ( உவமையாக )

இ) கனிவாய் ( உருவகமாக )

ஈ) பல்முத்து ( உவமையாக )

5. உனக்குத் தெரிந்த இரண்டு உவமஉருபுகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### மரபுத்தொடர்

நம் முன்னோர் தொன்றுதொட்டு எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு எனப்படும். மரபுச் சொற்றொடர்க்கு நேரடிப்பொருள் கொள்ளாது, அதன் உட்பொருளை அறிந்து தொடர்களில் அமைத்துப் பழகுதல்வேண்டும்.

(எ–டு) அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று சொன்ன காலம் மலையேறிவிட்டது.

சில மரபுத்தொடர்களுக்கான பொருளறிவோம் :

| | தொடர் | | பொருள் |
|---|---|---|---|
| 1. | ஆயிரங் காலத்துப் பயிர் | – | நீண்ட காலத்திற்குரியது |
| 2. | எடுப்பார் கைப்பிள்ளை | – | தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர் |
| 3. | ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது | – | பட்டறிவில்லாத படிப்பறிவு |
| 4. | அவலை நினைத்து உரலை இடித்தல் | – | எண்ணமும் செயலும் ஒத்துவராமை |
| 5. | முதலைக்கண்ணீர் | – | பொய்யழுகை |
| 6. | அவசரக்குடுக்கை | – | எண்ணித் துணியாதார் |
| 7. | ஆகாயத்தாமரை | – | இல்லாத ஒன்று |
| 8. | கம்பி நீட்டல் | – | சொல்லிக்கொள்ளாமல் செல்லல் |
| 9. | தாளம்போடுதல் | – | எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளல் |
| 10. | கானல்நீர் | – | இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இராதது |
| 11. | பஞ்சாய்ப் பறத்தல் | – | அலைந்து திரிதல் |
| 12. | குட்டிச்சுவர் | – | பயனின்றி இருத்தல் |
| 13. | கொட்டியளத்தல் | – | மிகுதியாகப் பேசுதல் |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

பயிற்சி :

அ) ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
2. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
3. இன்று பேருந்துகள் ஓடாது.
4. ஓர்அணில் மரத்தில் ஏறின.
5. நான் வாங்கிய நூல் இது அல்ல.

ஆ) தொடருக்கு ஏற்ற வினா அமைக்க.

1. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
2. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி. இராமச்சந்திரன் கருதினார்.

இ) மரபுத்தொடருக்கேற்ற பொருளைத் தேர்ந்தெழுதுக.

1. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.

   அ) வாழை பயிரிடுதல் ஆ) பரம்பரை பரம்பரையாக இ) பயிர்த்தொழில்

2. எம். ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.

   அ) தனிப்புகழோடு விளங்குதல் ஆ) கொடி கட்டுதல் இ) கனவு காணுதல்

ஈ) மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. சீட்டுக் கிழிந்துவிட்டது 2. முதலைக் கண்ணீர் 3. கயிறு திரித்தல்

உ) சொற்களுக்கு இருபொருள் தருக.

1. ஆறு ____________, ____________.
2. திங்கள் ____________, ____________.
3. மாலை ____________, ____________.
4. நகை ____________, ____________.
5. மெய் ____________, ____________.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

கருத்துப்பட உருவாக்கத்தில் முன்னோடியாக விளங்கிய வால்ட் டிஸ்னியின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

1. மறைமலையடிகளாரின் தனித்தமிழ் நடையைப் படித்தறிக.

ஒரு குன்றின் உச்சியில் உள்ள கற்பிளவில் உண்டான ஒரு சுனையில் பளிங்குபோல் தெளிவான நீர் நிரம்பியிருந்தது. இச்சுனையில் ஒரு புதுமை காணப்பட்டது; ஒரு நாள் மாலைக்காலம் தொடங்கி மறுநாள் விடியற்காலம் வரையில் இதில் ஓயாமல் நீர் ஊறிச் சுரந்து நிரம்பித் தளும்பிக் கீழே வழிந்து ஓடும்; காலையில் ஏழு மணிக்கு மேற்பட்டால் நீர் சுரப்பதில்லை.

இதனைப் பார்த்து வியந்து கொண்டு அதனின்றும் இறங்கிச் சிறிய கூழாங்கற்கள் சிதறிக் கிடக்கும் அம்மலையடிவாரத்திலுள்ள சுற்றுவழிப் பக்கமாய்ச் சிறிது வழி நடந்துபோனாற் காட்டுமரங்கள் தொகுப்புத் தொகுப்பாயிருக்கும், ஓரிடத்திற் கான்யாறு ஒன்று ஓடி வருகின்றது. அவ்வியாற்றில் நான் ஒரு நாள் தலைமுழுகச் சென்றபோது, வானுலகத்தினின்றும் வழுவி வீழ்ந்த மின்னல் கொடிபோல் நாலைந்து மகளிர் நீரில் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பார்ப்பதற்கு நாணித் தலை கவிழ்ந்துகொண்டு நான் அப்புறம் மறைவாய்ப் போய்விட்டேன்.

போய், கரையிற் கொடி பிணைந்து அடர்ந்திருக்கும் ஒருமரங் கோணி நீரளவுஞ் சென்று மேற்கவிந்து இருந்தமையால் நிழல் உள்ளதொரு துறையில் இறங்கித் தன்னந்தனியனாய்த் தலை முழுகினேன்; அங்ஙனம் நிழல் செறிந்திருக்கும் அவ்விடத்தில் நீரோட்டம் மிகக் குளிர்ந்திருந்தது; கரிய வரால் மீன்கள் என் பக்கத்தே மேய்ந்துகொண்டு துள்ளிப் பாய்ந்தன; கரையை அடுத்து வளர்ந்திருக்கும் மணற் புதர் அண்டையில் இரு மீன்கள் துள்ளித் துள்ளிப் பாய்ந்தன.

அப்போது நான், அரவஞ்செய்தால் அவையோடிப் போகுமென்றெண்ணி, நீரில் மெதுவாக அமுங்கி அமுங்கி எழுந்து அவற்றை வியந்து நோக்கினேன்.

இவ்வுரைப்பகுதியை வாய்விட்டுப் படிக்க. பொருளுணர்வுக்கேற்பக் குரலேற்றத் தாழ்வுடன் மீண்டும் ஒருமுறை படித்தின்புறுக.

### இ) எழுதுதல் திறன்

குறிப்புகளை விரித்து எழுதுதல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி, ஒரு பக்க அளவில் விரித்து எழுதுக. அவ்வுரைப்பகுதிக்குத் தலைப்பு ஒன்று தருக.

நீரின்றி இயங்காது உலகம் – நீர் நிலைகள் அடிப்படை – நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் – நீரைச் சேமிக்கும் வழிகள் – மழைநீரைச் சேமித்தல் – நிலத்தடிநீரைச் சேமித்தல் வழிமுறைகள் – மரம் வளர்ப்போம் – மழை பெறுவோம்.

### ஈ) கட்டுரை:

நான் விரும்பும் தலைவர்.

### உ) கடிதம்

நீ கண்டுகளித்த இடம் குறித்து நண்பனுக்கு.

## தமிழெண்களை அறிவோம்

1. பொருத்துக.

| | அரபு எண்கள் | – | தமிழெண்கள் |
|---|---|---|---|
| 1. | 100 | – | க௫௦ |
| 2. | 120 | – | க௭௦ |
| 3. | 150 | – | உ௦௦ |
| 4. | 170 | – | கஉ௦ |
| 5. | 200 | – | க௦௦ |

## பண்பு

### பெரியோரைப் பேணல்

குமரனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு. அவனை ஏன் உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தவேண்டும்? காரணம் இருக்கிறது, சொல்கிறேன். குமரன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். விடுமுறையில் அவன் வீட்டில் இருந்தபோது, ஒருநாள், அவனுடைய அம்மா ஏதோ பொருள் வாங்கக் கடைக்குப் போகச் சொன்னார். அவனோ, என்னால் முடியாது, நீங்களே கடைக்குப் போங்க என்றான். சிறிது நேரம் கழித்து அவன் தந்தை, குமரா, மிதிவண்டிக்குக் காற்றடித்து வை என்றார். அப்பா எனக்குத் தூக்கம் வருகிறது; நான் தூங்கப் போகிறேன் என்றான் குமரன்.

மாலையில் அவன் அம்மா குமரா, உன் அத்தை ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்களைப் பேருந்துநிலையத்திலிருந்து அழைத்துக்கொண்டுவாப்பா என்றார். அப்போதாவது அவர்கள் சொல்வதனைக் கேட்டானா? அதுதான் இல்லை. போங்கம்மா, எனக்கு நிறைய வேலை இருக்கிறது, அண்ணனைப் போகச் சொல்லுங்கள் என்றான். இப்போது புரிந்ததா? நான் ஏன் குமரனைப்பற்றித் தெரிந்து கொள்ளக் கூறினேன் என்று?

பெற்றோர் சொல்வதனைக் கேட்டல் வேண்டும்; பெரியோரை மதித்தல் வேண்டும். அவர் சொற்படி நடத்தல் வேண்டும். நீங்கள் எப்படி?

## வாழ்க்கைத்திறன்

### மனவெழுச்சிகளை எதிர்கொள்ளும் திறன்

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால், கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால், தன்னைக் கண்டிப்பார்கள்; திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

இந்நிலையில் கதிரவன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?

கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

1. நண்பர்களுடன் செல்வதில் தவறில்லை என்று நினைப்பேன்.
2. எனக்கு உடல்நலமில்லை என்று கூறி மென்மையாக மறுத்துவிடுவேன்.
3. நண்பர்களுடன் பழகுவதனை நிறுத்திவிடுவேன்.

## மதிப்புக்கல்வி

### அறிவுநுட்பம்

இந்திய அரசியலுடன் நெருங்கிய தொடர்புகொண்ட மிகப்பெருந்தலைவர் ஒருவர், தம் நண்பர்களுடன் தொடர்வண்டியில் ஒருநாள் பயணம் செய்து கொண்டிருந்தார். நண்பர்களுள் ஒருவர் ஓய்வுபெற்ற ஆசிரியர். மாணவர்கள், தங்கள் நினைவாக அவருக்குக் கைக்கடிகாரம் ஒன்றனைப் பரிசளித்திருந்தார்கள். தொடர்வண்டிப் பயணத்தின்போது, எதிர்பாராதவிதமாக அந்தக் கைக்கடிகாரம் தவறி வெளியே விழுந்துவிட்டது. நண்பர், கடிகாரம் தவறி விழுந்துவிட்டதனை அத்தலைவரிடம் வருத்தத்துடன் கூறினார். அதனைக் கேட்ட தலைவர், பதிலேதும் கூறாமல் வேடிக்கை பார்த்தபடி வந்தார். அடுத்த நிலையத்தில் வண்டி நின்றதும், நிலைய அலுவலரிடம் சென்று, கைக்கடிகாரம் ஒன்று பயணத்தின்போது வெளியே விழுந்துவிட்டது. அதைக் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு உண்டென அறிவிப்புக் கொடுங்கள் என்று கூறி, நண்பரின் வீட்டுமுகவரியையும் அந்தத் தலைவர் கொடுத்தார். மூன்று நாளுக்குப் பின், நண்பரிடம் கைக்கடிகாரம் வந்துசேர்ந்துவிட்டது.

நண்பர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். கைக்கடிகாரம் கீழே விழுந்தபோது, மற்றவர் எல்லாரும் அது குறித்துப் பேசிக்கொண்டிருக்க, அந்தத் தலைவர் மட்டும் கவலைப்படாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்ததாகத்தான் மற்றவர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர், கடிகாரம் எங்கு விழுந்தது என்று நண்பர் கூறினாரோ அந்த இடத்திலிருந்து எத்தனை தந்திக் கம்பங்கள் அடுத்த தொடர்வண்டி நிலையம்வரை உள்ளன என்று எண்ணிக்கொண்டு வந்தார். அதனால்தான், நிலைய அலுவலரிடம் கூறும்போது கடிகாரம் விழுந்த இடத்தினைச் சரியாகவும் தெளிவாகவும் கூற முடிந்தது. விழுந்த பொருளும் உடனடியாகக் கிடைத்தது. அவரின் அறிவுநுட்பம்தான் இதற்குக் காரணம். அவர் யார் தெரியுமா? இந்திய அரசியலில் சாணக்கியர் என்று போற்றப்பட்ட மூதறிஞர் இராசகோபாலாச்சாரியாரே அவர்.

## மொழியாக்கம்

அ) தமிழாக்கம் செய்க.

The Television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The Television is also used for commercial advertisements.

ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. Birds of the same feather flock together. | இனம் இனத்தோடு சேரும். |
| 2. Every cock will crow upon his own dunghill. | வீட்டில் எலி வெளியில் புலி. |
| 3. Failure is the stepping stone to success. | தோல்வியே வெற்றிக்கு அடிப்படை. |
| 4. Art is long and life is short. | கல்வி கரையில, கற்பவர் நாள் சில. |
| 5. Look before you leap. | ஆழம் அறியாமல் காலைவிடாதே. |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# புணர்ச்சி

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது புணர்ச்சி எனப்படும். இவ்வாறு இருசொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி, இயல்பாகச் சேர்வது இயல்புப்புணர்ச்சி.

(எ–டு) பொன் + வளையல் = பொன்வளையல்.

இருசொற்கள் சேரும்போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விகாரப்புணர்ச்சி என்பர்.

(எ–டு)
1. வாழை + பழம் = வாழைப்பழம் – தோன்றல்
2. மரம் + வேர் = மரவேர் – கெடுதல்
3. பொன் + குடம் = பொற்குடம் – திரிதல்

இவை குறித்த விளக்கங்களை முன்வகுப்பில் பெற்றீர்கள். இப்போது திசைப்பெயர்ப் புணர்ச்சி, பண்புப்பெயர்ப் புணர்ச்சி, மகர ஈற்றுப் புணர்ச்சி ஆகியன குறித்துக் காண்போம்.

## அ) திசைப்பெயர்ப் புணர்ச்சி

முதன்மைத் திசைகள் நான்கு. அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன. திசைப்பெயர்களோடு திசைப்பெயரும், பிறபெயரும் சேர்வது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

1. வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
   வடக்கு + மேற்கு = வடமேற்கு

வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு நீங்கிப் புணர்ந்தது.

2. தெற்கு + மேற்கு = தென்மேற்கு
   தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு என்னும் திசைப்பெயரோடு மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் சேரும்போது, நிலைமொழியின் இறுதியிலுள்ள கு நீங்கும்; பிறகு றகர மெய் னகரமாகிப் புணரும்.

## ஆ) திசைப்பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி

1. வடக்கு + மலை = வடமலை.

இதில் நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு ஆகியன இரண்டும் நீங்கிப் புணர்ந்தது.

2. தெற்கு + திசை = தென்திசை.

இதில் நிலைமொழியின் இறுதியாகிய கு நீங்கியது; அதன் அயல் எழுத்தான ற் – ன் ஆக மாறிப் புணர்ந்தது.

3. கிழக்கு + நாடு = கீழ்நாடு.

இங்கு நிலைமொழியின் இறுதியாகிய க்கு நீங்கி, ழ என்னும் உயிர்மெய்யில் ( ழ் + அ ) அகரம் நீங்கி, கி என்னும் முதல் எழுத்து கீ என நீண்டு, கீழ் + நாடு – கீழ்நாடு எனப் புணர்ந்தது.

4. மேற்கு + நாடு = மேல்நாடு, மேனாடு.

நிலைமொழியில் கு நீங்கியது. அதன் அயலெழுத்தான ற் – ல் ஆக மாறி மேல் + நாடு = மேல்நாடு எனவும், ற் – ன் ஆக மாறி மேல் + நாடு = மேனாடு எனவும் இருவகையில் புணர்ந்தன.

திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற. – நன்னூல், 186

## இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி

நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் பண்புப் பெயர்களாம். செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, இளமை, புதுமை போல்வனவும் இவற்றுக்குரிய எதிர்ச்சொற்களும் இவைபோன்ற பிறவும் மையீற்றுப் பண்புப்பெயர்கள் எனப்படும்.

1. கருவிழி = கருமை + விழி – கரு + விழி = கருவிழி

ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து மை நீங்கிப் புணர்ந்தது.

2. பெரியன் = பெருமை + அன் – பெரு + அன்; பெரி + அன்;
பெரி + ய் + அன் = பெரியன்.

ஈறு போதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து, மை நீங்கிப் பின் பெரு என்பதன் இறுதி உகரம் இடைஉகரம் இஆதல் எனும் விதிப்படி பெரி யாகிப் பின் யகர உடம்படுமெய் பெற்றுப் பெரி + ய் + அன் என்பது 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, ய் + அ = ய என்றாகிப் பெரியன் எனப் புணர்ந்தது.

3. பாசிலை = பசுமை + இலை – பசு + இலை; பாசு + இலை;
பாச் + இலை = பாசிலை.

நிலைமொழி ஈறுகெட்டு ஆதி நீடல் என்னும் விதிப்படி, பாசு + இலை என்றாகியது. 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி, பாச் + இலை என்றாகிப் பின், 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி பாசிலை எனப் புணர்ந்தது.

4. பைங்கூழ் = பசுமை + கூழ் – பசு + கூழ், பைசு + கூழ், பை + கூழ்; பைங் + கூழ் = பைங்கூழ்

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை நீங்கியது. (பசு + கூழ்) 'அடிஅகரம்' ஐ ஆதல் எனும் விதிப்படி ப – பை ஆனது. 'இனையவும்' என்னும் விதிப்படி உயிர்மெய் (சு) கெட்டது. 'இனமிகல்' என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான க் எழுத்துக்கு இனமான ங் மிகுந்து பைங்கூழ் எனப் புணர்ந்தது.

5. சிற்றோடை = சிறுமை + ஓடை – சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற்+ ஓடை = சிற்றோடை

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை கெட்டது. 'தன்னொற்று இரட்டல்' என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது. பின் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது. பின்னர் 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.

6. சேதாம்பல் = செம்மை + ஆம்பல் – செம் + ஆம்பல்; சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல்

'ஈறுபோதல்' விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் 'ஆதி நீடல்' விதிப்படி – சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் 'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.

7. கருங்குயில் = கருமை + குயில் – கரு + குயில் = கருங்குயில்.

ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது. 'இனமிகல்' என்னும் விதிப்படி வருமொழி ககரத்திற்கு ( கு ) இனமான மெல்லெழுத்து ங் மிகுந்து, கருங்குயில் எனப் புணர்ந்தது.

ஈறு போதல், இடையுகரம் இய்யாதல்,
ஆதி நீடல், அடியகரம் ஐயாதல்,
தன்னொற் றிரட்டல், முன்னின்ற மெய்திரிதல்,
இனமிகல், இனையவும் பண்பிற் கியல்பே. – நன்னூல், 136

ஈ) மகரஈற்றுப் புணர்ச்சி

1. மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு சேரும்பொழுது, இறுதி மகரம் (ம்) கெட்டு, உயிரீறுபோல நின்று, உயிர்முதல் மொழியோடு உடம்படுமெய் பெற்றுப் புணரும்.

(எ–டு) மரம் + அடி; மர + அடி; மர + வ் + அடி = மரவடி.

2. நிலைமொழியின் மகர ஈறுகெட்டு வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து மிக்குப் புணரும்.

(எ–டு) வட்டம் + கல் = வட்டக்கல் எனப் புணரும்.

3. நிலைமொழியின் மகரஈறு வருமொழி முதலிலுள்ள வல்லினத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்து புணரும்.

(எ–டு) நிலம் + கடந்தான் = நிலங்கடந்தான்.

மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாய்த் திரிபவும் ஆகும். – நன்னூல், 219

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது ________

1. நிலைமொழி ஈறு நீங்கும். 2. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்.

3. வருமொழி முதல் கெடும்.

ஆ) மேற்கு + நாடு என்பது ________ எனச் சேரும்.

1. மேற்கு நாடு 2. மேநாடு 3. மேனாடு.

இ) கருமை + குழி என்பது ________ எனும் விதிகளின்படி புணரும்.

1. ஆதிநீடல், இனமிகல் 2. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்

3. ஈறுபோதல், இனமிகல்

2. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | அடி அகரம் ஐ ஆதல் | – | வெற்றிலை |
| 2. | ஆதிநீடல் | – | கரும்பலகை |
| 3. | இனமிகல் | – | பைங்கூழ் |
| 4. | தன்னொற்றிரட்டல் | – | மூதூர் |

### ஆ) குறுவினாக்கள்

1. வடக்கு என்னும் திசைப்பெயருடன் பிற திசைகள் சேரின் எவ்வாறு புணரும்?
2. தெற்கு என்னும் திசைப்பெயருடன் பிற பெயர்கள் சேரின் எவ்வாறு புணரும்?
3. மையீற்றுப் பண்புப்பெயர்கள் நான்கனை எழுதுக.
4. செம்மை + மொழி எவ்வாறு புணரும்?
5. வெற்றிலை – புணர்ச்சிவிதி கூறுக.

6. மரவேர் – சொல்லைப் பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.
7. மகர ஈற்றுப் புணர்ச்சிக்குச் சான்று தருக.

இ) பாடப்பகுதியில் உள்ள பண்புச்சொற்களைக் கண்டறிந்து, அவற்றுள் மையீற்றுப் பண்புச் சொற்களை அடிக்கோடிட்டுக் காட்டுக.

## மொழித்திறன் பயிற்சி

### வல்லினம் மிகும், மிகா இடங்கள்

நிலைமொழிச் சொற்களுக்குப் பின், வருமொழிச் சொற்கள் வந்து புணரும்போது க், ச், த், ப், ஆகிய வல்லொற்றுகளின் வருக்க எழுத்துகள் வந்தால், அவ்வல்லொற்றுகள் சில இடங்களில் மிகுந்தும், சில இடங்களில் மிகாமலும் வரும். இவற்றையே வலிமிகுமிடங்கள், வலிமிகா இடங்கள் என்பர் (வலி – வல்லினம்).

### அ) வல்லினம் மிகுமிடங்கள்

1. நிலைமொழி உயிரீற்றுச் சொல்லின்பின் வல்லினம் (க்,ச்,த்,ப்) மிகும்.

கறி + குழம்பு = கறிக்குழம்பு

பலா + சுளை = பலாச்சுளை

வழி + தடம் = வழித்தடம்

பாட்டு + போட்டி = பாட்டுப்போட்டி

2. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும், எ என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்.

அ + கடை = அக்கடை

இ + சட்டை = இச்சட்டை

உ + பக்கம் = உப்பக்கம் (செய்யுள் வழக்கு)

எ + பாடம் = எப்பாடம்

3. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக் கோவில்

இந்த + சட்டி = இந்தச் சட்டி

எந்த + தோட்டம் = எந்தத் தோட்டம்

4. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

அப்படி + கூறினான் = அப்படிக் கூறினான்.

இப்படி + தாவினான் = இப்படித் தாவினான்.

எப்படி + சொன்னான் = எப்படிச் சொன்னான்.

5. இரண்டாம் வேற்றுமை (ஐ) விரியின்பின் வரும் வல்லினம் மிகும்.

பாரியை + கண்டான் = பாரியைக் கண்டான்.

பொருளை + சேர்த்தான் = பொருளைச் சேர்த்தான்.

அவனை + தடுத்தான் = அவனைத் தடுத்தான்.

நிலவை + பார்த்தான் = நிலவைப் பார்த்தான்.

6. நான்காம் வேற்றுமை (கு) விரியில் வரும் வல்லினம் மிகும்.

எனக்கு + கொடு = எனக்குக் கொடு.

குழந்தைக்கு + சோறு = குழந்தைக்குச் சோறு.

அவளுக்கு + தா = அவளுக்குத் தா.

பாப்பாவுக்கு + பாட்டு = பாப்பாவுக்குப் பாட்டு

7. ஓரெழுத்து ஒருமொழியில் வரும் க், ச், த், ப் மிகும்.

ஈ + கால் = ஈக் கால்

தீ + சட்டி = தீச் சட்டி

கை + தடி = கைத் தடி

தை + பொங்கல் = தைப் பொங்கல்

8. வன்றொடர்க் குற்றியலுகரத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

கொக்கு + கால் = கொக்குக் கால்

9. இகர ஈற்றுச் 'செய்து' என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

ஓடி + போனான் = ஓடிப்போனான்.

10. அகரஈற்றுச் 'செய' என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.

பாட + கேட்டேன் = பாடக் கேட்டேன்.

தேட + சென்றாள் = தேடச் சென்றாள்.

பாட + தெரியுமா ? = பாடத் தெரியுமா ?

ஓட + பார்த்தான் = ஓடப் பார்த்தான்.

11. சால, தவ என்னும் உரிச்சொற்கள்பின் வரும் வல்லினம் மிகும்.

சால + பசித்தது = சாலப் பசித்தது.

தவ + சிறிது = தவச் சிறிது.

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வல்லினம் மிகும்.

காணா + கண்கள் = காணாக் கண்கள்

கேளா + செவி = கேளாச் செவி

ஓடா + தேர் = ஓடாத் தேர்

நாறா + பூ = நாறாப் பூ

## ஆ) வல்லினம் மிகா இடங்கள்

1. வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

விடு + கணை = விடுகணை

விரி + சுடர் = விரிசுடர்

தோய் + தயிர் = தோய்தயிர்

பாய் + புலி = பாய்புலி

2. உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

காய் + கனி = காய்கனி

தாய் + தந்தை = தாய்தந்தை

முத்து + பவளம் = முத்துபவளம்

3. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

கதை + சொன்னார் = கதை சொன்னார்.

கடல் + தாவினான் = கடல் தாவினான்.

புகழ் + பெற்றார் = புகழ் பெற்றார்.

4. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.

கற்க + கசடற = கற்க கசடற

வளர்க + சிந்தனை = வளர்க சிந்தனை

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

காண்க + படம் = காண்க படம்

5. விளித்தொடரை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

முருகா + கேள் = முருகா கேள்.

கண்ணா + சொல் = கண்ணா சொல்.

கிளியே + தா = கிளியே தா.

அண்ணா + போ = அண்ணா போ.

6. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது.

கடகட, தடதட, சடசட, படபட

7. அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள், எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

அவை + பறவைகள் = அவை பறவைகள்

இவை + சட்டைகள் = இவை சட்டைகள்

அவை + தடங்கள் = அவை தடங்கள்

எவை + படங்கள் = எவை படங்கள்

8. அது, எது எனும் சுட்டுச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

அது + கூடை = அது கூடை

இது + சட்டி = இது சட்டி

அது + தோணி = அது தோணி

இது + பாடம் = இது பாடம்

9. பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர் ( படித்து என்பதுபோல் வன்றொடர்க் குற்றியலுகரச்சொல் அல்லாதவை ) ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

வந்த + கயல்விழி = வந்த கயல்விழி

தைத்த + சட்டை = தைத்த சட்டை

வந்து + தந்தான் = வந்து தந்தான்

செய்து + பார்த்தான் = செய்து பார்த்தான்

10. எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது.

கண்ணகி + பார்த்தாள் = கண்ணகி பார்த்தாள்

தங்கை + கேட்டாள் = தங்கை கேட்டாள்

பூவிழி + தந்தாள் = பூவிழி தந்தாள்

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றனைக் குறித்துப் பிறமொழிச் சொற்கள் கலவாமல் ஐந்து மணித்துளிகள் பேசுக.

1. தமிழின் தொன்மை 2. தண்டமிழ்ச் சான்றோர் திரு.வி.கலியாணசுந்தரனார்

### ஆ) படித்தல் திறன்

திரு.வி.கலியாணசுந்தரனாரின் வினா–விடை நடையைப் படித்தறிக.

தமிழில் அக்கலை இல்லையே; இக்கலை இல்லையே; சிறப்பாக விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை இல்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா எல்லாக் கலைகளும் பிறந்தன என்பதனை அந்த அன்பர்கள் நினைப்பார்களாக. வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர் தம் மொழியில் பல கலைகளைப் பெயர்த்தெழுதியுள்ளனர். இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகள் எல்லாவற்றையும் ஆங்கிலேயர் மட்டுமா கண்டனர்? இல்லை இல்லை. சில பிரெஞ்சுக்காரர்களால் காணப்பட்டன; சில ஜெர்மானியரால் காணப்பட்டன; மற்றுஞ்சில வெவ்வேறு நாட்டினரால் காணப்பட்டன. அவ்வம் மொழிகளுக்கே சிறப்பாக விளங்கும் நூல்களும் உண்டு. அவற்றை மொழி பெயர்ப்பதனால் பயன் விளையாது. அவை யாவை? அவையே காவியங்கள் என்பன. காவியங்கள் போக, மற்றக் கலைகளெல்லாம் உலகிலுள்ள அனைவருக்கும் பொது உடைமை.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

### இ) எழுதுதல் திறன்

**குறிப்புகளைக் கொண்டு விளம்பரம் எழுதுதல்**

நாம் நாள்தோறும் செய்தித்தாளில் வரும் விளம்பரங்களைப் பார்க்கிறோம்; படிக்கிறோம். நாமே செய்தித்தாளுக்கு விளம்பரம் கொடுக்கவேண்டிய ஒரு நிலை ஏற்படின் எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

(எ–டு) சென்னை – சர்வோதய சங்கம் காதி கிராமமுத்யோக் பவன் – கொலு பொம்மைக்கண்காட்சி – கொல்கத்தாப் பொம்மைகள், கோலாப்பூர்ப் பொம்மைகள் விற்பனை – காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை– இடம்– 33, அரங்கநாதன் தெரு, தியாகராயர் நகர், சென்னை–17, போன்: 2434 7426. அனுமதி இலவசம்!

### ஈ) கட்டுரை

தேசிய ஒருமைப்பாடு.

### உ) கடிதம்

சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்கு (அ) மாற்றுச்சான்றிதழ் கோரித் தலைமை ஆசிரியருக்கு.

## வாழ்க்கைத்திறன்

### சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன்

மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும்போது, தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன்மீது சினம் கொள்கிறார். ஏனெனில், அவன் மிகச் சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன், தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரியவைப்பது என்று தடுமாறுகிறான்.

மதியழகன் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?

## படிவங்கள் நிரப்புதல்

### வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம் நிரப்புதல்

நாள்.................. பேரேடு பதித்தவர்

சேமிப்பு வங்கிக் கணக்கு எண்............ இந்த ஆணைப்படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்படவேண்டும்.

சேமிப்புக் கணக்கு

..............................20

.................................. வங்கி ................................ எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு

ரூபாய் ..................................................................................... வழங்குக.

ரூ.

இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்புவரை பணம் கொடுக்கப்படும்

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## மதிப்புக்கல்வி

### தன்னம்பிக்கை

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார் ? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், கெலன் கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத்திறனாளியரே.

தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள்; வெற்றியும் கண்டார்கள். வின்சென்ட் வான்கோக் என்பவர் கேட்புத்திறனற்ற மாற்றுத் திறனாளி. அவர் நன்றாக ஓவியம் வரைவார். ஆனால், அவரை உதவியாளராகச் சேர்த்துக்கொள்ள மற்ற ஓவியர் மறுத்துவிட்டனர். அதற்காக, அவர் மனம் வருந்தவில்லை. தாமே தூரிகை எடுத்து வரையத் தொடங்கினார். வாழ்வில் ஏற்றம்பெற்று மிகச் சிறந்த ஓவியர் என்ற பெயரும் பெற்றுவிட்டார்.

ஓவியர் பிக்காசோவின் ஓவியம் பெரும்புகழ் பெற்றதுபோல் இவருடைய ஓவியங்களும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இவருடைய ஓவியங்கள் ஏலம் விடப்பட்டுக் கோடிக்கணக்கான வருவாயை ஈட்டித் தந்துள்ளன.

நம்பிக்கைதான் வாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக்கூட மாற்றிச் சாதனை படைக்கலாம் என்பதற்கு இவர்கள் வாழ்க்கை மிகச் சிறந்த சான்று.

உங்களின் எதிர்காலக் குறிக்கோள் என்ன ?

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, everyman has to eat enough food to live.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1.Man proposes; God disposes. | நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும். |
| 2.Strike the rod while it is hot. | காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். |
| 3.Familiarity breeds contempt. | பழகப் பழகப் பாலும் புளிக்கும். |
| 4.The mills of god grind slow but sure. | அரசன் அன்றுகொல்வான், தெய்வம் நின்று கொல்லும் |
| 5.The face is the index of the mind. | அகத்தின் அழகு முகத்தில் தெரியும். |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# பொருள் இலக்கணம்

## அகப்பொருள்

பொருள் என்பது ஒழுக்கமுறை. அறவழியில் பொருளீட்டிப் பல்லாரோடு பகுத்துண்டு வாழும் வாழ்வியல் நெறிமுறைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போற்றிக் காத்தவர், தமிழர். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தவர் தமிழரே!

பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்.

### அகப்பொருள்

அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என அகத்திணைகள் எழுவகைப்படும்.

அவற்றுள் முதலைந்தும் அன்பின் ஐந்திணை என்று வழங்கப்படும்.

அகப்பொருளுக்குரிய பொருள்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

### முதற்பொருள்

அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

நிலம் ஐவகைப்படும்.

### ஐவகை நிலங்கள்

1. குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்
2. முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்
3. மருதம் – வயலும் வயல்சார்ந்த இடமும்
4. நெய்தல் – கடலும் கடல்சார்ந்த இடமும்
5. பாலை – மணலும் மணல்சார்ந்த இடமும்.

பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்.

### பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | கார்காலம் | – | ஆவணி, புரட்டாசி |
| 2. | குளிர்காலம் | – | ஐப்பசி, கார்த்திகை |
| 3. | முன்பனிக்காலம் | – | மார்கழி, தை |
| 4. | பின்பனிக்காலம் | – | மாசி, பங்குனி |
| 5. | இளவேனிற்காலம் | – | சித்திரை, வைகாசி |
| 6. | முதுவேனிற்காலம் | – | ஆனி, ஆடி. |

### சிறுபொழுது (ஒருநாளின் ஆறு கூறுகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | காலை | – | காலை 6 மணிமுதல் 10 மணிவரை |
| 2. | நண்பகல் | – | காலை 10 மணிமுதல் 2 மணிவரை |
| 3. | எற்பாடு | – | பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை |
| 4. | மாலை | – | மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை |
| 5. | யாமம் | – | இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை |
| 6. | வைகறை | – | இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை. |

( எற்பாடு – எல் + பாடு. எல் – ஞாயிறு, பாடு – மறையும் நேரம்.)

### திணையும் பொழுதும்

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

### கருப்பொருள்

அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலியன பொருள்கள் கருப்பொருள் எனப்படும்.

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) அகம், புறம் ஆகிய இரண்டும் ____________ இலக்கணம் ஆகும்.

ஆ) குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் ____________ எனப்படும்.

இ) நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி ____________ பகுதியாகும்.

ஈ) யாமம் என்பது இரவு 10 மணிமுதல் ____________ வரை ஆகும்.

உ) மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும் ____________ பெரும்பொழுதுகளும் வரும்.

ஊ) திருமால் ____________ நிலத்திற்குரிய தெய்வம்.

எ) மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் ____________ திணைக்குரிய பறைகள்.

ஏ) நெய்தல் திணைக்குரிய தொழில் ____________ ஆகும்.

**2. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) பொருளிலக்கணம் ____________ வகைப்படும்.

1. இரண்டு 2. மூன்று 3. ஐந்து

ஆ) அகத்திணைகள் ____________ வகைப்படும்.

1. மூன்று 2. ஐந்து 3. ஏழு

இ) மார்கழி, தை ஆகிய இரண்டும் ____________ காலத்திற்குரியன.

1. முன்பனி 2. பின்பனி 3. இளவேனில்

ஈ) மருதநிலத்திற்குரிய தெய்வம் ____________

1. முருகன் 2. திருமால் 3. இந்திரன்

உ) பாலை நிலத்திற்குரிய பறவைகள் ____________

1. கிளி, மயில் 2. நாரை, அன்னம் 3. புறா, பருந்து.

**3. பொருத்துக.**

1. குறிஞ்சி – முயல், மான்
2. முல்லை – புலி, கரடி
3. மருதம் – முதலை, சுறா
4. நெய்தல் – எருமை, நீர்நாய்

### ஆ) குறு வினாக்கள்

1. பொருளாவது யாது?
2. முதற்பொருள் என்பது யாது?
3. கருப்பொருள் என்பது யாது?
4. வயலும் வயல்சார்ந்த இடமும் எத்திணைக்குரியது?

இயல் 7

5. ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருதிங்களும் எக்காலத்திற்குரியன ?

6. வைகறைக்குரிய காலஅளவு யாது ?

7. முருகன் எந்நிலத்திற்குரிய தெய்வம் ?

8. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

## மொழித்திறன்பயிற்சி

### பழமொழிகள்

தொடரில்மரபுத்தொடர்கள்,உவமைத்தொடர்களை அமைத்து எழுதுதல்போலவே, பழமொழிகளையும் அமைத்து எழுதுவர். இதனால், சொல்லப்புகும் கருத்து எளிதில் விளங்கும்.

(எ–டு) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி, சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பதற்கேற்பத் தன் பெற்றோரும் ஆசிரியர்களும் கொடுத்த ஊக்கத்தால் நன்கு படித்து முதல் மதிப்பெண் பெறமுடிந்தது என்றாள்.

கீழ்க்காணும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. விளையும் பயிர் முளையிலே தெரியும்.
3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
4. சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
7. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

'நான் ஓர் அறிவியல் அறிஞரானால்......' எனும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) எழுதுதல் திறன்

தன்விவரக்குறிப்பு எழுதுதல்: பத்தாம் வகுப்பு முடித்ததும் சிலர் பதினோராம் வகுப்பு அல்லது தொழிற்கல்வி முதலான படிப்புகளில் சேர விரும்புவர். வேறு சிலர், குடும்பச்சூழல் காரணமாகப் படித்துக்கொண்டும் ஏதேனும் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டும் இருப்பர். குறித்த சில வேலைகளுக்குப் பத்தாம் வகுப்புத் தேர்ச்சி தேவைப்படுவதனால், வேலைவாய்ப்பிற்கான விண்ணப்பங்களை நிரப்பத் தன்விவரக்குறிப்பு எழுதத் தெரிந்திருத்தல் வேண்டும்.

பயிற்சி : அலுவலக உதவியாளராகப் பணிபுரிய பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி வாய்ந்தவர்கள் தன் விவரக்குறிப்பைக் கீழ்க்காணும் முகவரிக்குப் பத்து நாளுக்குள் அனுப்புக.

கலைவாணி கல்வி நிலையம், தல்லாகுளம், மதுரை மாவட்டம் – 625 002.

தன்விவரக் குறிப்பு

| | |
|---|---|
| பெயர் | – |
| பிறந்த நாள் மற்றும் வயது | – |
| பாலினம் | – |
| தந்தையின் பெயர் | – |
| முகவரி | – |
| பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | – |
| தாய்மொழி | – |
| பயின்ற மொழிகள் | – |
| தட்டச்சு | – |
| கணினி | – |

இ) கட்டுரை: அன்றாட வாழ்வில் அறிவியல்.

ஈ) கடிதம்: சாலை/ மின்விளக்கு வசதிவேண்டி நகராட்சி ஆணையருக்கு.

## வாழ்க்கைத்திறன்கள்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவான். ஆனால், அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்யவேண்டு மென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்புச் சொல்லித்தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

1. பாண்டியன், தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான்?
2. நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

அ) தந்தைக்குப் பயந்து அங்கேயே படிப்பேன்.

ஆ) நீங்கள் செய்வது பிடிக்கவில்லை என்று நேரடியாகவே அவரிடம் கூறிவிட்டு, நடந்தவற்றை வீட்டிலும் சொல்லிவிடுவேன்.

## மதிப்புக்கல்வி

### பகைவரையும் மன்னிக்கும் மாண்பு

விருதுநகரில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில், தந்தை பெரியார் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, கூட்டத்திலிருந்து ஒருவர் கத்தியுடன் பெரியார்மீது பாய்ந்தார். பெரியார் சிறிதும் பதற்றமின்றி, அவர் கையை எட்டிப்பிடித்தார். அவரை நோக்கிப் பாய்ந்த தொண்டர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். தன்னைத் தாக்குவதற்காகக் கத்தியோடு பாய்ந்த அவரை, மேடையில் தன் அருகிலேயே உட்கார வைத்துக்கொண்டு, தொடர்ந்து உரையாற்றினார்.

கூட்டம் முடிந்தபிறகு, அவரை ஒன்றும் செய்யாமல் பாதுகாப்பாக அவருடைய வீட்டில் கொண்டுபோய் விடும்படி கட்டளையிட்டார். காரணம், அவரைத் தனியாகவிட்டால் தன்மீது பற்றுக்கொண்ட தோழர்கள்

யாராவது, அவரைத் தாக்கித் துன்புறுத்துவார்கள் என்று பெரியார் நினைத்தார்.

தன்மேல் கொல்லப் பாய்ந்தவரைக்கூட மன்னித்து விட்டுவிடும்படி அனுப்பியதனால், பெரியார் பெரியார்தாம் என்று மெய்ப்பித்தார்.

பெரியாரின் வாழ்வில் நடந்த இந்நிகழ்ச்சி பகைவரிடமும் அன்பு செலுத்தவேண்டும் என்னும் உயரிய பண்பினை உணர்த்துகிறது.

குற்றம்புரிந்தோரையும் சிறையிலுள்ளோரையும் கேட்டுப்பாருங்கள். நொடிநேர உணர்ச்சிக்கு வயப்பட்டதனால், எத்துணைப் பெரிய குற்றத்தைப் புரிந்தார்கள் என்பதும், அதனால், அவர்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் சொல்லிமாளாது.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்

வீட்டில். . . . . .

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப்போட்டு விட்டு, "மம்மி வாட்டர்" என்று குரல் கொடுத்தான்.

"பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்துகொண்டு வா, சூடாக உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன்; போய் யூனிபார்ம் மாற்றிக்கொண்டு வா" என்றாள், அவன் தாய்.

"போம்மா" என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் போட்டான்.

"ஸ்கூல்விட்டு வந்தவுடனே எதற்கு டிவி? ஹோம் ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம்" என்றாள், அவன் தாய்.

மேற்கண்ட பகுதியைப் பிறமொழிக் கலப்பின்றித் தமிழ்ப்படுத்துக.

## மொழியாக்கம்

This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrials concerns and government departments, lot of information processing is required. The computer is the superfast information processing unit.

### ஆ) இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.

| | |
|---|---|
| 1. All that glitter is not gold. | மின்னுவதெல்லாம் பொன்னல்ல. |
| 2. Art is long but life is short. | கல்வி கரையில, கற்பவர் நாள் சில. |
| 3. Barking dog seldom bite. | குரைக்கின்ற நாய் கடிக்காது. |
| 4. Even a pin is good for something. | சிறுதுரும்பும் பல் குத்த உதவும். |
| 5. Take time by the forelock. | காலத்தே கடமையைச் செய். |

athiyamanteam.com Video Course &  Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# புறப்பொருள்

புறப்பொருள் எனப்படுவது, வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவது. அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் உலகியல் ஆகும். புறம்பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள் வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்.

1. **வெட்சித்திணை** : பகைநாட்டின்மீது போர் தொடங்குமுன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச்செய்வது வெட்சித்திணை. அவ்வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள்.

2. **கரந்தைத் திணை** : வெட்சி வீரர்களால் கவர்ந்துசெல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் கரந்தைப் பூவைச் சூடிச்சென்று மீட்பது, கரந்தைத்திணை.

3. **வஞ்சித்திணை** : மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது, வஞ்சித்திணை.

4. **காஞ்சித்திணை** : தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை.

5. **நொச்சித்திணை** : பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது நொச்சித்திணை.

6. **உழிஞைத்திணை** : உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.

7. **தும்பைத் திணை** : பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது தும்பைத் திணை. இவ்வீரர்கள் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவர்.

8. **வாகைத்திணை** : வெற்றிபெற்ற மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வது, வாகைத்திணை.

9. **பாடாண்திணை** : பாடுதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை. (பாடு + ஆண் + திணை = பாடாண்திணை)

10. **பொதுவியல் திணை** : வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை.

**11. கைக்கிளைத்திணை :** கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும்.

**12. பெருந்திணை :** பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.

வெட்சி நிரைகவர்தல், மீட்டல் கரந்தையாம்,
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் - உட்கா(து)
எதிரூன்றல் காஞ்சி, எயில்காத்தல் நொச்சி,
அதுவளைத்த லாகும் உழிஞை, -அதிரப்
பொருவது தும்பையாம், போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம். - புறப்பொருள் வெண்பாமாலை

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

அ) புறத்திணைகள் ________ வகைப்படும்.

1. ஐந்து 2. ஏழு 3. பன்னிரண்டு

ஆ) நிரைகவர்தல் என்பது ________.

1. கரந்தை 2. வெட்சி 3. உழிஞை

இ) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ________

1. வஞ்சித்திணை 2. காஞ்சித்திணை 3. வாகைத்திணை

ஈ) பாடாண்திணை என்பது ________ கூறுவது.

1. ஆண்மகனின் ஒழுகலாறுகள் 3. பெண்மகளின் ஒழுகலாறுகள்
2. போரின் தன்மைகள்.

உ) ஒருதலைக் காமம் என்பது ________ .

1. அன்பின் ஐந்திணை 2. கைக்கிளை 3. பெருந்திணை.

ஊ) தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது ______ ஆகும்.

1. நொச்சி 2. தும்பை 3. காஞ்சி

### ஆ) குறுவினாக்கள்

1. புறத்திணை என்பது யாது?
2. புறத்திணைகள் நான்கனை எழுதுக.
3. மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை?
4. வாகைத்திணை என்பது யாது?
5. பொருந்தாக் காமம் பற்றிய திணை யாது?

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## மொழித்திறன் பயிற்சி

### நிறுத்தக்குறிகள்

இன்றுமுதல், தோசைக்குத் துவையல் இல்லை.

இன்று, முதல்தோசைக்குத் துவையல் இல்லை.

இத்தொடர்களைப் பொருள்விளங்குமாறு படித்துப் பார்க்க.

இருதொடர்களுக்கும் வேறுபாடு அறியமுடிகிறதல்லவா ?

முதல் தொடர் இன்றுதொடங்கித் தோசைக்குத் துவையல் இல்லை எனவும், அடுத்ததொடர் முதல் தோசைக்கு மட்டும் துவையல் இல்லை எனவும் வெவ்வேறு பொருள் தருகிறதன்றோ? இரண்டு தொடரும் ஒன்றே ஆயினும், இருவேறு பொருள்கள் தரக் காரணம் நிறுத்தக் குறியீடு தானே! அக்குறியீடுகள் குறித்து இங்குக் காண்போம்.

### காற்புள்ளி ( , )

பொருள்களை எண்ணும் நிலை, விளி, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்குமுன், ஆதலால், ஆகவே முதலிய சொற்களின்பின், முகவரியில் இறுதிவரி தவிர்த்த பிற இடங்களில் காற்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள்.

2. மகனே, நான் சொல்வதைக் கேள்.

### அரைப்புள்ளி ( ; )

ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம்; மூவேந்தரையும் பாடும் காப்பியம்.

2. இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை.

### முக்காற் புள்ளி ( : )

ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. முப்பால் என்பன வருமாறு: அறம், பொருள், இன்பம்.

2. மத்தேயு, 8 : 6

3. பெயர் : மணிமேகலை

### முற்றுப்புள்ளி ( . )

சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற் குறுக்கம், பெயர்த் தலைப்பெழுத்து முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும்.

(எ–டு) 1. உருவு கண்டு எள்ளாமை வேண்டும்.

2. மைதிலி, த/பெ. எ. முத்துகிருட்டினன், கறுப்பனார்கோவில் அருகில், பெரியகொல்லப்பட்டி, மல்லசமுத்திரம் – 637 503, நாமக்கல் மாவட்டம். (மாதிரி முகவரி)

3. 20.10.2003.

4. தொல். சொல். 25.

5. எ. நாகம்மாள்.

### வினாக்குறி (? )

ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும்.

(எ–டு) 1. அங்கே படிப்பவர் யார்?

2. நீ வருவாயா?

### உணர்ச்சிக்குறி ( ! )

வியப்பு, அவலம், வாழ்த்து, வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின்பின் (!) இக்குறி இடுதல் வேண்டும்.

(எ–டு) என்னே, இதன் பெருமை!

பாம்பு பாம்பு!

வருக வருக!

வாழ்க வாழ்க!

( !!, !!! இவ்வாறு ஒன்றுக்குமேற்பட்ட குறிகளை இடுதல் கூடாது. )

### ஒற்றை மேற்கோள்குறி (' ')

இக்குறி, தற்சுட்டின்கண்ணும் ( ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல்), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி வரும்.

1. 'ஏ' என்று சொன்னான்.
2. 'செய்யும்' என்பது பெயரெச்ச வாய்பாடுகளுள் ஒன்று.
3. 'இணரெரி தோய்வன்ன' இன்னா செய்பவர்.
4. கம்பர், 'கம்பராமாயணம்' என்னும் காவியம் படைத்தார்.

### இரட்டை மேற்கோள்குறி ( " " )

நேர்கூற்றுத் தொடர்களிலும் மேற்கோள் தொடர்களிலும் இரட்டைமேற்கோள் குறி இடப்படும்.

(எ–டு) 1. இராமன், "நாளை வருகிறேன்" என்றான்.

2. "ஒழுக்கமுடைமை குடிமை" என்றார் திருவள்ளுவர்.

### விண்ணப்பம் வரைதல்

குடிநீர், சாலை, தெருவிளக்கு, நூலகம், மருத்துவமனை, பேருந்து முதலியன நாம் வாழும் பகுதிக்கு வேண்டிய வசதிகளாம். இவற்றைப் பெறவேண்டிப் பகுதிவாழ் மக்களின் சார்பாக உயர் அலுவலர்களுக்கும் உள்ளாட்சித்துறை அலுவலர்களுக்கும் விண்ணப்பம் வரைதலே கூட்டு விண்ணப்பம் எனப்படும்.

கூட்டுவிண்ணப்பம் நடைமுறைக்குரிய விண்ணப்பம்; ஆதலின், அதற்குரிய வடிவத்தில் அமைந்திருத்தல்வேண்டும். விடுநர், பெறுநர், விளித்தல், பொருள், உள்ளடக்கப்பகுதி, முடித்தல், கையொப்பம் ஆகியவை விண்ணப்பத்தில் அமைந்திருத்தல்வேண்டும்.

### கடிதம்

பண்டைக் காலத்தில் புறா, கிளி, நாய் முதலியவற்றின் மூலமாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. இதனைத் தூது' என்பர். பாடல்கள் மூலமாகக் கடிதம் எழுதியதும் உண்டு. இதனைச் சீட்டுக்கவி' என்பர். பாரதியார் எழுதிய சீட்டுக்கவி இதற்குச் சான்றாகும்.

தற்போது தொலைபேசி, செல்பேசி முதலான தகவல் தொடர்புச் சாதனங்களால் கடிதம் எழுதும் முறை குறைந்து வருகிறது. உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தவும், கண்டுமகிழ்ந்த காட்சிகளை நேரில் கண்டதுபோல் தெரிவிக்கவும், அறிவுரை கூறும் பகுதியாகவும் கடிதங்கள் பல வகையில் அமையும்.

அறிஞர் அண்ணா முதலானோர் எழுதிய கடிதங்கள், மு.வ. அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு என எழுதிய கடிதங்கள், நேரு தம்மகள் இந்திராபிரியதர்சினிக்கு எழுதிய கடிதங்கள் இன்றைக்கும் படித்துப் போற்றத்தக்கவை.

### கட்டுரைப் பயிற்சி

தலைப்புக்கேற்ற கருத்துகளைத் தொகுத்தல்.

கருத்துச் சிதையாமல் பத்திப் பத்தியாக அமைத்து எழுதுதல்.

மேற்கோள், உவமைத்தொடர், பழமொழி முதலானவற்றைத் தகுந்த இடத்தில் கையாளுதல், பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுதல், இலக்கணப்பிழை, சந்திப்பிழை, மயங்கொலிப்பிழை ஏற்படாதவாறு எழுதப் பழகுதல், குறித்த எல்லை கடவாமல் எழுதுதல் முதலிய நெறிமுறைகளைப் பின்பற்றிக் கட்டுரை எழுதப் பழகுதல்வேண்டும்.

### கட்டுரை வகைகள்

செய்தி விளக்கக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, தன் வரலாற்றுக் கட்டுரை, பயணக் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரை முதலியன கட்டுரையின் வகைகள் ஆகும்.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## நூலக வசதி வேண்டி விண்ணப்பித்தல் (மாதிரி)

விடுநர்

ஊர்ப் பொதுமக்கள்,
கன்னேரிமந்தணை, தங்காடு ஓரநள்ளி,
நீலகிரி மாவட்டம் – 643 003.

பெறுநர்

இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : நூலகம் அமைத்துத் தர வேண்டுதல் சார்பு.

எங்கள் ஊர் கன்னேரிமந்தணை. இவ்வூரில் மூவாயிரம் பேர் வாழ்கிறோம். ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் உள்ளோம். அன்றாடம் செய்திகளை அறிந்துகொள்ளவும், பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கவும், நூலகம் ஒன்றை எங்கள் ஊரில் அமைத்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கன்னேரிமந்தணை,
17. 01. 2011

தங்கள் உண்மையுள்ள,
கன்னேரிமந்தணை
ஊர்ப் பொதுமக்கள்.

உறைமேல் முகவரி

பெறுநர்

இயக்குநர்,
பொது நூலகத்துறை,
சென்னை – 600 002.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## கண்டு களித்த இடம் குறித்து, நண்பனுக்குக் கடிதம்

15, குங்குமப்பூத் தெரு,
திருவள்ளூர்,
21.06.2011.

அன்புள்ள எழில்,

நலம், நலமறிய ஆவல். உன் வீட்டில் அம்மா, அப்பா, தங்கை ஆகியோர் நலமறிய ஆவல். நாங்கள் 20.05.2011 அன்று கூடியம் மலைக்குகையைக் காணச் சென்றோம்.

கூடியம் என்பது திருவள்ளூர்க்கு மேற்கே முப்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிற்றூர். காலை ஆறு மணிக்கே திருவள்ளூரைவிட்டுப் புறப்பட்டோம். சீத்தஞ்சேரி என்னும் ஊரைக் கடந்து எங்கள் மகிழுந்து புறப்பட்டது. வழிநெடுகிலும் சிற்சில பகுதிகளில் பசுமைநிறக் குறுங்காடுகள்; தைலமரத் தோப்புகள், மாங்கனிகள் தாழத்தொங்குகின்ற மாந்தோப்புகள் ஆகியனவற்றைக் கண்டு மகிழ்ந்தோம். கூடியம் ஊரை நெருங்கினோம். அப்பொழுது மணி காலை 8.30 ஆயிற்று. நாங்கள் சிற்றுண்டி உண்டோம். பிறகு, அங்கிருந்து குறுங்காட்டுவழியாக நடந்தோம். ஒரு கிலோமீட்டர் நடந்ததும் எம் கண்முன்னே குகையிருக்கும் மலை தென்பட்டது. சிறிது தொலைவு நடந்தோம். அடேயப்பா... எவ்வளவு பெரிய மலை! முட்டையைப் பாதி உடைத்தாற்போல மலையைக் குடைந்து வைத்துள்ளான் ஆதிகால மனிதன். உள்ளே சுமார் ஈராயிரம் பேர் தங்கும் அளவிற்கு மலை குடையப்பட்டுள்ளது.

குளிர்ந்த காற்று, சுற்றிலும் பசுமை மாறாக் காட்டுச் சூழல், ஆரவாரமில்லாத அமைதி நிறைந்த சூழல் கண்டோம்; களித்தோம்; அனைவரும் மெய்ம்மறந்து உட்கார்ந்தோம்! வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே, உலகின் முதல் மாந்தரினம் வாழ்ந்த பகுதி இதுவெனத் தொல்லியலார் கூறுகின்றனர். அங்கு வாழ்ந்த மனிதன் கற்களைக் கூராக்கிக்கொண்டு, அவற்றையே தற்காப்புக் கருவியாகக் கொண்டு வாழ்ந்துள்ளான். அக்குகையைச் சுற்றித் தேனடைகள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றுக்கு ஊறு செய்தால், உருப்படியாக ஊர்போய்ச் சேர முடியாது.

அக்குகைக்குள் மனத்தச்சம்மன் என்னும் தெய்வச்சிலை உள்ளது. அவ்வம்மனை வழிபடுவதால் தங்கள் வேண்டுதல் நிறைவேறுவதாக அப்பகுதியினர் நம்புகின்றனர். சிவராத்திரி அன்று, அப்பகுதிவாழ் மக்கள் அக்குகைக்குச் சென்று, அன்றிரவு முழுவதும் அங்கேயே தங்கிவிட்டுத் திரும்புவதாகக் கூறுகின்றனர். குகைக்காட்சிகளை எல்லாம் கண்ட நாங்கள், மனநிறைவோடு மாலை வீடு வந்து சேர்ந்தோம். கூடியம் குகையையும் வழியிடைக் காட்சிகளையும் கோடைவிடுமுறையில் கண்டுகளிக்க எம்மில்லம் வருமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மறவாமல் மடல் எழுதுக.

இன்னணம்,
மோ. அன்பரசு.

உறைமேல் முகவரி

க. எழில்,
த/பெ. வ.கண்ணன்,
27, வ.உ.சி. தெரு,
அடையாறு,
சென்னை – 600 020.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

# நான் விரும்பும் கவிஞர்

## பாரதியார்

### முன்னுரை

நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றனையும் இழந்த செம்மல்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள், கவிஞர்கள், எனப் பலர் இருக்கிறார்கள். அவர்களுள் நான் விரும்பிப் போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் கவிதைகள் மூலம் தேசியத்தை வளர்த்துத் தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினார்.

### பிறப்பும் இளமையும்

சின்னசாமி இலக்குமி அம்மையார் ஆகியோர்க்கு 11.12.1882இல் பாரதியார் பிறந்தார். பிறந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டையபுரம். அவர் இளமையிலேயே ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். அவர், சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர், மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; சென்னையில் இதழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

### விடுதலை வேட்கை

பாரதியார் வாழ்ந்த காலம், பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த காலம். நாடு விரைவில் விடுதலை அடையவேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். தம் பாட்டுத்திறத்தால், தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி விடுதலைக் கனலை மூட்டினார். சாதிசமயப் பாகுபாடின்றி அனைவரையும் விடுதலை வேள்வியில் ஈடுபடச் செய்தார்.

"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி" என வீர முழக்கமிட்டார்.

"பாருக்குள்ளே நல்ல நாடு"
"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்" – என்றெல்லாம் பாடி, மக்களுக்கு நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

### தேசியக் கவிஞர் பாரதியார்

இந்தியத் திருநாட்டின் இணையற்ற கவிஞராகப் பாரதியார் விளங்கினார். இதனால் அவர், அனைவராலும் 'தேசியக் கவிஞர்' எனப் பாராட்டப் பெற்றார். 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டினார்.

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்."

என்னும் பாடலின்மூலமாக, "முப்பதுகோடி மக்களும் இந்தியரே, அவர்கள் பேசும் மொழி பலவாய் இருப்பினும் சிந்தனை ஒன்றே!" என்ற உயரிய தேசிய உணர்வை ஊட்டியவர் பாரதி.

### முன்னறி புலவர் பாரதி

விடுதலை அடைதற்கு முன்பாகவே, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தாம் வாழும் காலத்திலேயே பாடி மகிழ்ந்த முன்னறி புலவர் பாரதியாவார்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே,
ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட் டோமென்று" எனவும்,
"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்" எனவும்,
"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" எனவும்,

பாடினார் பாரதியார்.

சமுதாயத் தொண்டு

சாதிவேரை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பியவர் பாரதி. அதனால்தான், 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' எனக் குழந்தை மனத்தில் ஆழப்பதித்தார் பாரதி.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்பதன்மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் பாரதி.

"தனியொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

"வாழிய செந்தமிழ்; வாழ்கநற் றமிழர்"

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாடிய பாடல்களே, பாரதியாரின் சமுதாயத் தொண்டுள்ளத்திற்கும், மொழிப்பற்றுக்கும் தக்க சான்றுகளாம்.

முடிவுரை

'பாரதநாடு பார்க்கெலாம் திலகம்' எனப் பாடிய பைந்தமிழ்ப் பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகு அடைந்தார். அவர் வழி நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக!

## வரவேற்பு மடல்

கூனிப்பாளையம்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
இலக்கியமன்ற ஆண்டு விழாவிற்கு
வருகைதந்த
தொல்காப்பியச் செம்மல் உயர்திரு புலவர் தமிழன்பன் அவர்களுக்கு
அன்புடன் வாசித்தளித்த வரவேற்பு மடல்.

தமிழன்னை ஈன்ற தவப்புதல்வரே!

வருக வருக எனத் தங்களை வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம். தமிழின் பெருமையையும் சங்கத்தமிழன் வாழ்வியல் கோட்பாடுகளையும் தாங்கள் கூறக் கேட்கும்பேறு, இன்று யாம் பெற்றோம்.

நயம்பட உரைக்கும் நாவலரே!

'இலக்கணப்' பாடப்பகுதியை, எளிதாக யாவரும் புரிந்துகொள்ளும்வகையில் சுவைபட உரைக்கும் திறங்கண்டு வியந்தோம். திங்கள்தோறும் தாங்கள் நடத்திவரும் தொல்காப்பியத் தொடர்வகுப்பும், நன்னூல் வகுப்பும், திருக்குறள் வகுப்பும் கேட்போர்க்கு நல்விருந்தாக அமைவதை உணர்ந்து மகிழ்கிறோம்.

வறுமையிலும் செழுமையாய் வாழும் பெருந்தகையே!

வள்ளுவத்தை வையகமெல்லாம் வாழ்வியலாக்கப் புறப்பட்ட தெள்ளுதமிழ்ச் சான்றோன் நீ! நடத்துபவனல்லன் நீ! நடந்து காட்டும் நற்றமிழறிஞன் நீ! வருகை புரியும் தங்களை வருக வருக என அன்புடன் வரவேற்கின்றோம்.

கூனிப்பாளையம்,                                                         இன்னணம்,

28.06.2011                                                         இலக்கிய மன்றத்தார்.

பயிற்சி :

வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

## வகுப்பறைத் திறன்கள்

அ) பேசுதல்திறன்

காந்தியடிகளின் வாழ்வில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளுள் ஒன்றனைக் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) படித்தல்திறன்

ரா. பி. சேதுப்பிள்ளையின் செந்தமிழ் நடையைப் படித்தறிக.

மலையிலே மழை பொழிந்து வெள்ளம் பொங்கி எழுகின்றது; அருவியாய் விழுகின்றது; ஆறாகப் பாய்கின்றது. ஆற்றுநீர், கால்களிலும் ஏரிகளிலும் நிறைந்து பயிர்பச்சைகளையும், செடிகளையும் வளர்க்கின்றது. இளங்குழந்தையைப் பாலூட்டி வளர்க்கும் தாய்போல் பசும் பயிர்களை நீரூட்டி வளர்ப்பது நதியாகும். ஆதலால், நதியைத் தாயாகவும், நிலத்தைக் குழந்தையாகவும் புலவர்கள் புனைந்துரைப்பாராயினர். சோழநாட்டை ஊட்டி வளர்ப்பது காவிரியாறு. அந்நதியின் பெருமையாலேயே சோழவள நாடு சோறுடைத்து என்று கவிகள் புகழ்வாராயினர். செழுஞ்சோலைகளின் இடையே அழகுற நடந்து செல்லும் காவிரியாற்றைச் சிலப்பதிகாரம் இசைப்பாட்டால் வாழ்த்துகின்றது. பாண்டிநாட்டின் சிறந்த நதியாகிய வையையைப் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி என்றும் பொய்யாக் குலக்கொடி என்றும் இளங்கோவடிகள் புகழ்ந்துரைத்தார். ஆற்றுப் பெருக்கற்ற காலத்தும் ஊற்றுப்பெருக்கால் உலகூட்டும் வையையின் கருணை வாழ்த்துதற்குரியதன்றோ?

## இ) எழுதுதல்திறன்

### கவிதை எழுதும் திறன்பெறுதல்

எழுதுதல் திறனில், கவிதை எழுதுதல் ஓர் உயர்நிலைத் திறனாகும். இக்காலக் கவிஞர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைத் தொகுப்புகளைப் பள்ளி நூலகத்திலிருந்து திரட்டலாம். அக்கவிதைகளில் அமைந்துள்ள பொருள்நயம், சொல் நயம், சந்த நயம் முதலியவற்றைப் படித்துச் சுவைக்கலாம். உங்களில் பலர் கவிதை எழுதக்கூடிய திறன் படைத்தவர்களாய் இருப்பீர்கள். சிலர் கவிதை எழுத ஆர்வத்துடன் இருப்பீர்கள். உங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்த கவிதை எழுதப் பழகுங்கள். எளிய சொற்களைக்கொண்டு எழுதத் தொடங்குங்கள். நான்கு வரிகளில் கூட, அக்கவிதை அமையலாம்.

(எ–டு) **பள்ளி**

பள்ளி என்னும் கூடம் – நம்
பண்பை உயர்த்தும் அன்றாடம்
சிலையாய் நம்மைச் செதுக்கும் – நல்ல
கலையாய் நம்மைப் புதுக்கும்
வினா கேட்கும் ஞானம் – அங்கு
விடையைக் கொடுக்கத் தோணும்
வேற்றுமை அகற்றும் பந்தம் – நம்
ஒற்றுமை ஒன்றே சொந்தம்.

### கவிதை எழுதுக.

அ) மழை ஆ) முயற்சி இ) கடல் ஈ) குழந்தை உ) நட்பு

## வாழ்க்கைத்திறன்

### மன அழுத்தங்களை எதிர்கொள்ளும் திறன்

இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் எல்லாரும் அவளுக்கென்ன கவலை ?

அவள் அம்மா ஓர் ஆசிரியர்; அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்துவிடுவார். எனவே, அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை என்று கூறுவர். அதனைக் கேட்கும்போது, இலக்கியாவிற்கு அம்மாவை நினைத்தால் மிகவும் பெருமையாக இருக்கும்.

பள்ளியில் ஆண்டுத்தேர்வுக்குப் படிப்பதற்காக ஒருவாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம்போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள்.

அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்து விட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணி யாற்றும் ஆசிரியர் கூறினார்.

அம்மாவுக்கு எதிர்பாராமல் ஏற்பட்ட நிலையைக் கேட்டு, இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள். இலக்கியா தனக்கேற்பட்ட மன அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வாள் ?

இலக்கியாவாக, நீங்கள் ஒரு நிமிடம் கற்பனை செய்யுங்கள்.

## மதிப்புக்கல்வி

### எளிமை

மகாத்மா காந்தியின் நினைவாக, காந்தி என்னும் பெயரில் திரைப்படம் எடுக்கப்பட்டபோது நடந்த நிகழ்ச்சி. காந்தியாக நடிக்க பென் கிங்ஸ்லி என்னும் நடிகர் தேர்வு செய்யப்பட்டார். அவர் தங்குவதற்காகப் புதுதில்லியில் ஆடம்பரமான நட்சத்திர விடுதி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பென்கிங்ஸ்லி அவ்விடுதிக்கு வந்தார். அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பதனைக் கண்டார்.

அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார் என மற்றவர் எதிர்பார்த்திருக்க, பென் கிங்ஸ்லியோ அந்த அறையில் இருக்கும் அனைத்துப் பொருள்களையும் அகற்றச் சொல்லித், தமக்கு ஒரு பாயும் தலையணையும் மட்டும் போதும் என்றார். அதனைக் கேட்டு அங்கிருந்தவர்கள் வியப்படைந்தார்கள்.

இந்த வசதி போதவில்லையா? என்று கேட்டனர்.

அதற்கு அவர், “காந்தி மிகவும் எளிமையாக வாழ்ந்தார். நான், அவருடைய பாத்திரம் ஏற்று நடிக்கிறேன். இந்தப்படம் எடுக்கும் வரையிலாவது, நானும் அவரைப்போன்று எளிமையாக இருக்க விரும்புகின்றேன். அதனை, நான் மிகவும் பெருமையாகக் கருதுகின்றேன்” என்றார்.

காந்தியடிகளின் எளிய வாழ்க்கை, மற்றவர்களுடைய வாழ்வில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

எளிமை என்றும் துணைவரும்; பகட்டு, ஆணவத்தைத் தூண்டும்; பொறாமைகொள்ளச் செய்யும்; ஏளனத்திற்கு ஆளாக்கும்; என்றும் துன்பம் தரும்; துணை நிற்காது.

முடிவு உங்கள் கையில்....

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Gandhiji loved and respected truth more than anything else. He fought his whole life to uphold the value of truth. From his experiment with truth, he came to know that there could not be a God other than truth. He taught us that our thought, word and deed should on truth. He preached what he practised.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | | |
|---|---|---|
| 1. | A friend in need is a friend indeed. | உயிர் கொடுப்பான் தோழன். |
| 2. | Self help is the best help. | தன் கையே தனக்கு உதவி. |
| 3. | Efforts never fail. | முயற்சி திருவினையாக்கும். |
| 4. | Live and let live. | வாழு, வாழவிடு. |
| 5. | Think everybody alike. | உன்னைப்போல் பிறரையும் நேசி. |

# பா வகைகள்

வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் 'பா' நால்வகைப்படும்.

## வெண்பாவின் பொது இலக்கணம்

1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
2. இயற்சீர், (மாச்சீர், விளச்சீர்) வெண்சீர், (காய்ச்சீர்) வரும். பிற சீர்கள் வாரா.
3. இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும், பிறதளைகள் வாரா.
4. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றுகொண்டு முடியும்.
5. செப்பலோசை பெற்று வரும்.
6. இரண்டடி முதல், பன்னிரண்டு அடிவரை வரும்.

## வெண்பாவின் வகைகள்

வெண்பாவின் வகைகள் ஆறு. அவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்பன.

**1. குறள் வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டதாய், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது குறள்வெண்பா (குறள்– இரண்டடி).

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இக்குறட்பா ஒரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா. (க என்னும் எழுத்து எதுகையாக இரண்டு அடிகளில் ஒன்றி வந்துள்ளது)

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

இக்குறட்பா இரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா.

**2. நேரிசை வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, நான்கு அடிகளைக் கொண்டதாயும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும், முதல் இரண்டடி

ஒரு விகற்பமாயும், கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும், நான்கடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது நேரிசை வெண்பா எனப்படும்.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை.

இப்பாடலின் நான்கடியிலும், இரண்டாமடியின் இறுதிச் சீரிலும் ஒரே எதுகை பெற்று ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

உன்னுள் கலைவைத்தாய் ஊக்க மலைவைத்தாய்
கன்னல் மொழியுன்னுள் கள்வைத்தாய் – மின்வைத்தாய்
மண்ணில் புதுமை மலர்க்குள் மணம்வைத்தாய்
தண்ணீர்த் தமிழேநீ தாய்.

இஃது, இரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா

**3. இன்னிசை வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுத் தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும். இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத்தான் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டு விகற்பத்தானும் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

தாய்தமக்கே ஒப்பில்லை தாரணியில் எப்பொருளும்
சேய்நம்மைச் சீராட்டி செந்நீரைப் பாலாக்கி
வாய்வழியாய்த் தாரூட்டி வாழ்விக்குந் தெய்வமொன்று
தாய்போலும் உண்டாமோ தான்.

இப்பாடலில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் இல்லை. நான்கடிகளும் ஒரு விகற்பத்தான் வந்துள்ளன. ( இரண்டாம் எழுத்து ய் எதுகையாகி ஒன்றி வந்துள்ளது)

தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும் – தெற்றெனப்
பல்பொருள் ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

இப்பாடலில் இரண்டாம் அடியில் தனிச்சொல் வந்துள்ளது. ஆனால், நான்கடியிலும் மூன்று விகற்பங்கள் வந்துள்ளதால், இஃது இன்னிசை வெண்பாவாயிற்று.

**4. பஃறொடை வெண்பா :** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது பஃறொடை வெண்பா.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

முக்கனியே! முப்பாலே! மூவாத முத்தமிழே!
சொக்கனது மாநகரைச் சூழ்ந்த பெரும்பேறே!
இத்தரைச் சூரியனே! எங்கள் உயிரமுதே!
சித்திரைத் தண்ணிலவே! தேயா மொழிவெற்பே!
செம்மொழி மாக்குடும்பம் சீராட்டும் செம்மொழியே!
எம்மொழிக்கும் மூத்தவளே! என்றும் இருப்பவளே!
பண்புணர்த்தும் ஆசானே! பார்போற்றும் தேனூற்றே!
கண்ணே!நீ ஞாலக் கனி!

இப்பாடல் ஈற்றடி மூன்று சீராயும், ஏனைய அடிகள் நான்கு சீராயும் வந்த பஃறொடைவெண்பா.

5. நேரிசைச் சிந்தியல் வெண்பா : வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நேரிசை வெண்பாவைப் போல இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் மூன்றடிகளாய் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செல்வ னுரைப்ப – சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு.

மூன்றடிகள் உடையதாய் ஒரு விகற்பமாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

6. இன்னிசைச் சிந்தியல் வெண்பா : வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று மூன்றடி கொண்டதாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார்முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து

இஃது, இரண்டாம் அடியில் தனிச்சொல் இன்றி, ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

அலகிட்டு வாய்பாடும் தளையும் கூறுதல்

ஒரு சீரைப் பிரித்து அசை பார்ப்பதே அலகிடுதல்.

அலகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிகள்

1. மெய்யெழுத்தின் பக்கத்தில் / இக்குறியிடுக.

2. நெடில் பக்கத்தில் / இக்குறியிடுக.

3. இரு குறில் அடுத்து / இக்குறியிடுக.

4. ஒற்று அல்லது ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் நேர் எனக் கொள்க.

இரண்டு எழுத்தாய் இருப்பின் நிரை எனக் கொள்க.

இவ்விதியைப் பின்பற்றிக் குறட்பாக்களைப் பிரித்துக் காண்போம்.

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | இல்/லா/ரை | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2 | எல்/லா/ரும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 3 | எள்/ளுவர் | நேர் நிரை | கூவிளம் |
| 4 | செல்/வரை | நேர் நிரை | கூவிளம் |
| 5 | எல்/லா/ருஞ் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6 | செய்/வர் | நேர் நேர் | தேமா |
| 7 | சிறப்/பு | நிரைநேர் – நிரைபு | பிறப்பு |

## ஆசிரியப்பாவின் பொதுஇலக்கணம்

1. அளவடிகளைப் (நான்கு சீர்) பெற்று வரும்.
2. இயற்சீர் ( மாச்சீர், விளச்சீர் ) பயின்று வரும். பிற சீரும் வரும். ஆனால், வஞ்சியுரிச்சீர்கள் வாரா.
3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும். பிற தளைகள் கலந்தும் வரும்.
4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்றும் வரும்.
5. அகவலோசை பெற்று வரும்.
6. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

## ஆசிரியப்பாவின் வகைகள்

ஆசிரியப்பாவுக்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு. அவ்வாசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

### 1. நேரிசை ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும்வருவது நேரிசை ஆசிரியப்பா.

பாரி பாரி என்று பலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே.

இப்பாடலில் ஈற்றயலடி மூச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வந்துள்ளன.

### 2. இணைக்குறள் ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தோடு முதலடியும் கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் இருசீர் ( குறளடி ) அடிகளாயும் முச்சீர் ( சிந்தடி ) அடிகளாயும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா.

நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இப்பாடலில் முதலடியும் ஈற்றடியும் அளவடியாகவும், இடையடிகள் குறளடியாகவும், சிந்தடியாகவும் வந்துள்ளன.

### 3. நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளும் நாற்சீர் ( அளவடி ) அடிகளாய் வருவது, நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே.

இப்பாடலில் எல்லா அடிகளும் நாற்சீர்கள் கொண்ட அளவடிகளாக வந்துள்ளன.

### 4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே.

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருகின்றது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1) உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

அ) ‘உலகு’ என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு ________ ஆகும்.

1. நாள் 2. காசு 3. பிறப்பு

ஆ) ‘நல்லவை’ இச்சொல்லை அலகிட்டால் ________ எனப் பிரியும்.

1. நேர்நேர் 2. நிரைநேர் 3. நேர்நிரை

இ) நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி________வரும்.

1. நாற்சீராய் 2. முச்சீராய் 3. ஐஞ்சீராய்

ஈ) ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ________ முடிவது சிறப்பு.

1. ஆகாரத்தில் 2. ஏகாரத்தில் 3. ஓகாரத்தில்

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

அ) நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று ________ விகற்பத்தானும் ________விகற்பத்தானும் வரும்.

ஆ) இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வருவது ________ ஆகும்.

இ) வெண்பாவின் ஓசை ________ஆகும்.

ஈ) ஆசிரியப்பாவின் வேறு பெயர் ________ஆகும்.

உ) ஆசிரியப்பாவின் ஓசை ________ ஆகும்.

**3. விடுபட்ட இடங்களை நிரப்புக.**

| வ.எண். | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | கட / னென் / பு | ________ | புளிமாங்காய் |
| 2. | நல் / லவை | நேர் நிரை | ________ |
| 3. | எல் / லாம் | நேர் நேர் | ________ |
| 4. | கட / னறிந் / து | ________ | கருவிளங்காய் |

### ஆ) குறுவினாக்கள்

1. நால்வகைப் பாக்கள் யாவை?
2. வெண்பாவின் வகைகள் யாவை?
3. குறள்வெண்பாவின் இலக்கணம் யாது?
4. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?
5. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?
6. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?
7. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
8. அடிமறிமண்டில ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

இ) நம் செய்யுட்பகுதியில் நேரிசை வெண்பா, ஆசிரியப்பாக்களை இனங்கண்டு எடுத்து எழுதிப் படிக்க.

## மொழித்திறன் பயிற்சி

### மரபுச்சொற்கள்

பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் அவை ஒலிக்கும் முறைகளையும் இவ்வாறு கூற வேண்டுமென, முன்னோர் கூறிய மரபினைத் தொன்றுதொட்டுப் பின்பற்றி வருகின்றனர். "நாய் கத்தியது" எனக் கூறுகிறோம். அவ்வாறு கூறுதல் கூடாது. "நாய் குரைத்தது" என்பதே உரிய மரபுத்தொடர். இவ்வாறு வரும் சில மரபுகள் குறித்து இங்குக் காண்போம்.

### ஒலிமரபு

| | |
|---|---|
| ஆடு கத்தும் | ஆந்தை அலறும் |
| எருது எக்காளமிடும் | காகம் கரையும் |
| குதிரை கனைக்கும் | கிளி பேசும் |
| குரங்கு அலப்பும் | குயில் கூவும் |
| சிங்கம் முழங்கும் | கூகை குழறும் |
| நரி ஊளையிடும் | கோழி கொக்கரிக்கும் |
| புலி உறுமும் | சேவல் கூவும் |
| பூனை சீறும் | புறா குனுகும் |
| யானை பிளிறும் | மயில் அகவும் |
| எலி கீச்சிடும் | வண்டு முரலும் |

### வினை மரபு

| | |
|---|---|
| அம்பு எய்தார். | சோறு உண்டான். |
| ஆடை நெய்தார். | தண்ணீர் குடித்தான். |
| உமி கருக்கினாள். | பால் பருகினாள். |
| ஓவியம் புனைந்தான். | பூப் பறித்தாள். |
| கூடை முடைந்தார். | மரம் வெட்டினான். |
| சுவர் எழுப்பினான். | மாத்திரை விழுங்கினான். |
| செய்யுள் இயற்றினான். | முறுக்குத் தின்றான். |

### பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுதல்

நம் செந்தமிழ் செழுந்தமிழாய்த் திகழவேண்டுமெனில், பிறமொழிச் சொற்கலப்பின்றி எழுதிப் பழகுதல் வேண்டும். பிறமொழிச் சொற்களைக் களைந்து, அவற்றுக்கேற்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி நல்ல நடையில், இனிய தமிழில் எழுதியும் பேசியும் பழகுவோம். இங்குப் பிறமொழிச்சொற்கள் சிலவற்றையும் அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களையும் அறிவோம்.

| எண் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் | எண் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|---|---|
| 1 | அங்கத்தினர் | உறுப்பினர் | 16 | உபயோகம் | பயன் |
| 2 | அதிகாரி | அலுவலர் | 17 | கிராமம் | சிற்றூர் |
| 3 | அதிபர் | தலைவர் | 18 | குமாரன் | மகன் |
| 4 | அந்நியர் | அயலார் | 19 | சாவி | திறவுகோல் |
| 5 | அபிஷேகம் | நீராட்டு | 20 | நஷ்டம் | இழப்பு |
| 6 | அபூர்வம் | புதுமை | 21 | நாஷ்டா | சிற்றுண்டி |
| 7 | அலங்காரம் | ஒப்பனை | 22 | பாக்கி | நிலுவை |
| 8 | அனுமதி | இசைவு | 23 | கஜானா | கருவூலம் |
| 9 | ஆபத்து | இடர் | 24 | விஞ்ஞானம் | அறிவியல் |
| 10 | ஆராதனை | வழிபாடு | 25 | ஜனங்கள் | மக்கள் |
| 11 | ஆசீர்வாதம் | வாழ்த்து | 26 | நிபுணர் | வல்லுநர் |
| 12 | இலஞ்சம் | கையூட்டு | 27 | ஆஸ்பிடல் | மருத்துவமனை |
| 13 | இலாபம் | வருவாய் | 28 | டீ ஸ்டால் | தேநீர்க் கடை |
| 14 | உத்தரவு | ஆணை | 29 | பஸ் ஸ்டாண்ட் | பேருந்து நிலையம் |
| 15 | உத்தியோகம் | பணி | 30 | போஸ்ட் ஆபீஸ் | அஞ்சலகம் |

பயிற்சி :

அ) பொருத்துக.

1. மயில் – கரையும்
2. கூகை – கத்தும்
3. யானை – குழறும்
4. காகம் – அகவும்
5. ஆடு – பிளிறும்

ஆ) உரிய வினைமுற்றுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் ________ (கட்டப்பட்டது, எழுப்பப்பட்டது)
2. பாரதியார் செய்யுளை________ (பாடினார், இயற்றினார்)
3. வேடன் ________ அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த, செலுத்திய)
4. மாறன் ஓவியத்தை ________ (வரைந்தான், புனைந்தான்)
5. அந்தச் சிற்பம் ஒரே கல்லில் ________ (வடிக்கப்பட்டது, செதுக்கப்பட்டது)

இ) பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.
2. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
3. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
4. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்.
5. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

பெரியார் – அயோத்திதாசப் பண்டிதர் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) படித்தல் திறன்

மு. வரதராசனாரின் எளிய நடையைப் படித்துணர்க.

(கீழுள்ள உரைப்பகுதியில் சிறுசிறு தொடர்கள் அமைந்துள்ளன. பொருள் காண வேண்டிய அருஞ்சொற்கள் இல்லை. மேல்காற்று என்பதுபோலச் சொற்கள் பிரித்து எழுதப்பட்டுள்ளன.)

என்றோ ஒருநாள் ஒருவரின் மூளை புல்லாங்குழலைக் கண்டுபிடித்து உலகத்துக்கு உதவியது. கண்டுபிடித்தவர் யார் என்பதை உலகம் மறந்துவிட்டது. எப்படிக் கண்டு பிடித்தார்

என்பதை மட்டும் ஒருவாறு எண்ணிப் பார்க்க முடிகிறது. அவர், ஒரு நாள் ஒரு மலையில் ஒரு மூங்கில் புதரை அடுத்து உட்கார்ந்திருந்து, பொழுது போக்கியிருக்கலாம். அது கோடைக்காலம்; மேற்கேயிருந்து காற்று வேகமாக வீசியது. அந்த மூங்கில் புதரிலிருந்து மெல்லிய ஓசை இனிமையாகக் கேட்டது. அவர், அந்தப் புதரை உற்று நோக்கிப் பார்த்தார்; ஓசை எப்படிப் பிறந்தது என்பது தெரியாமல் விழித்தார்; புதரை நெருங்கிச் சென்றார்; அந்த இனிய ஓசை பிறந்த இடத்தை அறிய முயன்றார்; மறுபடியும் மேல்காற்று வீசியது; இப்போது அந்த இசையின் பிறப்பிடத்தைக் கண்டுவிட்டார்; பெரிய மூங்கிலில் சில சிறுசிறு துளைகளைக் கண்டார். வண்டு துளைத்துத் துளைத்து அந்தத் துளைகள் ஏற்பட்டு இருந்தன.

அந்தத் துளைகளின் வழியாகக் காற்று உள்ளே சென்றபோது, அந்த இசை பிறந்தது என்பதை அறிந்தார்; உடனே, அந்த மூங்கிலை வெட்டினார்; அந்தப் பகுதியைத் துண்டு படுத்தினார்; வாயால் ஊதிப்பார்த்தார்; ஏறக்குறைய அந்த இசை கேட்டது; மகிழ்ச்சி கொண்டார்; துள்ளினார்; ஓடிப்போய்த் தன் கூட்டத்துக்குச் சொன்னார்; அதுபோன்ற மூங்கிலை எடுத்துத் துளைகள் செய்தால், இனிய ஓசைகள் பிறக்குமா என்று பார்த்தார்; முயற்சியில் வெற்றி பெற்றார்; அவரால், புல்லாங்குழல் உலகத்தில் பரவிவிட்டது.

## இ) எழுதுதல் திறன்

### பா நயம் பாராட்டல்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

**திரண்ட கருத்து :** இப்பாடல், இராமலிங்க அடிகளின் திருவருட்பா ஆறாம் திருமுறையில் ‘சுத்த சன்மார்க்க வேண்டுகோள்’ என்னும் தலைப்பில் உள்ளது.

அப்பா, நான் வேண்டுகின்றவற்றைக் கேட்டு, எனக்கு அருள்புரிவாயாக; பெறுதற்கரிய உயிர்கள் அனைத்துக்கும் அன்புகாட்டுதல் வேண்டும்; என் அருமையான தந்தையாகிய உன் அருளாகிய புகழை எங்கெங்கும் எடுத்துச் சொல்லவேண்டும்; நாங்கள், சொல்லுதற்கியலாத உயர்ந்த இடத்தில் இருக்கின்ற, உயிர் இரக்கப் பெருவழி விளங்கி மேம்பட, உன் அறிவொளியைக் கொண்டுசெல்ல வேண்டும்; நான் செய்யும் பிழைகளை எல்லாம் பொறுத்துக் கொள்ளல்வேண்டும்; என் அருமைத் தலைவனாகிய உன்னைப் பிரியாமல், நான் இருக்கவும் அருள் செய்தல் வேண்டும்.

**பொருள் நயம் :** இறைவனிடம் வேண்டுவனவற்றை இங்குப் பட்டியலிடுகிறார் வள்ளலார். உயிர்களிடத்தில் அன்பு, இறைவன் புகழைப் பிறர்க்கு எடுத்துரைத்தல், உயிர் இரக்கத்தினால் கிட்டும் அருள் ஒளியைப் பரப்புதல், பிழைகளைப் பொறுத்துக்கொள்ளுதல், பிரியாதிருத்தல் ஆகிய இவை எல்லார்க்கும் கிடைத்தால் அருளாளர்களாக விளங்கலாம் என்பதனை வள்ளல் பெருமான் எடுத்தருள்கின்றார்.

### அணிநயம்

இப்பாடலில், இயல்புநவிற்சி அணி இடம்பெற்றுள்ளது. அருள், அன்பு, புகழ் என்பவை இயற்கை விளக்கம். அவை காட்டலாகாப் பொருள் என்பார் தொல்காப்பியர். அவற்றை விளங்கிக் கொள்ளுதல் உயர்வுதரும்.

### குறிப்பு நயம்

அருள்புரிதல் இறைவன் செயல். அன்பு செய்தல், புகழை இயம்பிடுதல், அருட்சோதி செலுத்துதல், பிரியாதிருத்தல் ஆகியன உயிர்களுக்கான செயல்கள். இவற்றை இப்பாடலில் உணர்த்துகிறார் வள்ளலார். இவ்வாறு அருளைப் பெறுதல்வேண்டும் என்பதே குறிப்பு.

### எதுகை, மோனை நயம்

பாடலில் அடிதோறும் இரண்டாவது எழுத்து ஒன்றிவருவது எதுகை.
அப்பா, எப்பாரும், செப்பாத, தப்பேது.
பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை.
ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் வருவது கூழைமோனை.
எப்பாரும் எப்பதமும் எங்கணும் – கூழைமோனை.

### இயைபு நயம்

இப்பாடலில் வேண்டும் வேண்டும் என்னும் இயைபுச் சொற்கள் வந்து ஓசையின்பம் பயக்கின்றன.

**பயிற்சி :** கீழுள்ள பாடலைப் படித்துணர்ந்து, அதன் மையக் கருத்தினை எழுதுக. அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக.

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

– பாரதிதாசன்

ஈ) கட்டுரை

மாணவரும் சமுதாயத் தொண்டும்.

உ) கடிதம்

ஓய்வுபெறும் தமிழாசிரியரைப் பாராட்டுதல்.

## தமிழெண்களை அறிவோம்

1. தொடர்களில் உள்ள கோடிட்ட இடங்களை உரிய தமிழெண்களால் நிரப்புக.

அ) உன் வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை ______

ஆ) உன் இல்லத்தின் எண் ______

இ) ஓட்டுரிமைக்காக வரையறுக்கப்பட்டுள்ள வயது ______

ஈ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் நீ பெற விரும்பும் மதிப்பெண் ______

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத் திறன்

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டுக்கு வருகிறார். தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதனைக் கேட்காமல், அவளிடம் பேசிக்கொண்டே இருக்கிறார்.

அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?

நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

1. அருகில் வசிக்கும் தோழி அல்லது உறவினரிடம் செல்பேசி வழியாகத் தொடர்புகொண்டு உடனே வீட்டிற்கு வரச் சொல்வேன்.
2. தந்தையின் நண்பரிடம் நேரம்போவது தெரியாமல் நானும் பேசிக் கொண்டிருப்பேன்.
3. அப்பா வருவதற்கு நேரமாகும்; அவர் வந்தபிறகு செல்பேசியில் தொடர்புகொண்டு விட்டு வாருங்கள் என்பேன்.

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



## தொடர்வண்டி இருக்கை முன்பதிவுப் படிவம் நிரப்புதல்:

சி. எ./CM-257/T. 1106ன்/T

### தெற்கு ரயில்வே

### முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

நீங்கள் மருத்துவராயிருந்தால் தயவு செய்து பெட்டியில் (✓) செய்யவும் (நீங்கள் அவசரத்திற்கு உதவ விரும்பினால்) ☐

மூத்த குடிமக்கள் சலுகை தேவைப்பட்டால் " தேவை/இல்லை " என்று அதற்குரிய பெட்டியில் எழுதவும். இச்சலுகை பெற விரும்பினால், வயது அத்தாட்சி-சான்றிதழ் ஒன்றை பயணத்தின்போது எடுத்துச் செல்ல வேண்டும். (தவறினால் இரயில்வே விதிகளின்படி உரிய அபராதம் விதிக்கப்படும்) ☐

உங்கள் பயணம் உயர்வகுப்புக்கு மேம்படுத்தப்படலாமா ? தேவை/இல்லை என்று எழுதவும் (உங்கள் விருப்பத்தை குறிப்பிடத் தவறினால் முழுக் கட்டண பயணிகளுக்கு இச்சலுகை தன்னிச்சையாக வழங்கப்படும்). ☐

வண்டி எண்/பெயர்.............................................பயண தேதி..............................

வகுப்பு.......................படுக்கை/உட்காரும் எண்ணிக்கை......................................

புறப்படும் இடம்...........................................சேரும் இடம்..............................

ஏறும் இடம்...........................................

| வ. எண். | பெயர் (15 எழுத்துக்களுக்கு மிகாமல்) | பால் ஆ/பெண் | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | கீழ் படுக்கை/ நடு படுக்கை/ மேல் படுக்கை |
| 2. | | | | | |
| 3. | | | | | சைவம்/ அசைவம் (இராஜதானி/ சதாப்தி விரைவு வண்டி) |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் விபரம் (பயணச்சீட்டு வழங்கப்பட மாட்டாது)

| வ. எண். | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |

### தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்

வண்டி எண்/பெயர்.............................................பயண தேதி..............................

வகுப்பு..................புறப்படும் இடம்..................................சேரும் இடம்..............................

விண்ணப்பதாரர் பெயர்..............................................................................

விலாசம்..............................................................................

..............................................................................

தொலைபேசி எண்.................................

கையொப்பம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

விண்ணப்ப படிவ எண்.....................................பயணச்சீட்டு எண்..............................

இருக்கை எண்.....................................வசூலிக்கப்பட்ட தொகை ரூ..............................

ரயில்வே அலுவலர் கையொப்பம்.....................................

குறிப்பு – (1) ஒரு படிவத்தில் அதிகபட்சம் 6 பயணிகள் பெயர்கள் மட்டும் எழுதவும்.
(2) ஒருவர் ஒரு விண்ணப்பபடிவம் மட்டும் கொடுக்க வேண்டும்.
(3) கவுண்ட்டரை விட்டு போகும்போது பயணச்சீட்டு மற்றும் மீதி தொகையை சரிபார்க்கவும்
(4) முறையாக நிரப்பபடாத விண்ணப்பபடிவம் ஏற்க இயலாது.
(5) விரும்பும் இருக்கை இருக்கும் இடவசதியைப் பொறுத்து அமையும்.
(6) ஒரே பயணச்சீட்டில் பதிவு செய்த பயணிகள் அனைவருக்கும் வகுப்புமேம்பாட்டின்போது இருக்கைகள் அருகருகே கிடைக்கலாம் கிடைக்காமலும் போகலாம்

## மதிப்புக் கல்வி

### முயன்றால் எதுவும் முடியும்

சிலி நாட்டில் ஒரு சுரங்கம். அது பூமிக்கடியில் ஈராயிரம் அடி ஆழம் உடையது. தாமிரமும் தங்கமும் எடுப்பதற்காக வெட்டப்பட்ட சுரங்கம் அது.

அங்கு ஒருநாள் பெரிய விபத்து நேர்ந்தது. கீழே சுரங்கத்தில் வேலை செய்த முப்பத்துமூன்று தொழிலாளர்கள் மேலே வர இயலாதவாறு சுரங்கம் இடிந்து மண் மூடியது.

அறுபத்தொன்பது நாள் போராட்டம். சிலி நாட்டு அரசின் அனைத்துத் துறைகளும் அவர்களை வெளிக்கொணரப் பெரிதும் முயன்றன.

உள்ளே சிக்கிக்கொண்டவர்கள் சூரியனைக் காணாது நாளும் அல்லல்பட்டாலும் மனந்தளராது இருந்தனர். பூமியின் மேலிருந்து துளைபோட்டு அதன் வழியே உணவும் மருந்தும் அவர்களுக்கு அனுப்பப்பட்டன. உள்ளேயிருந்தவர்கள் மனம் தளராது முறையாக அவற்றைப் பங்கிட்டு உண்டு, வெளியே வரக் காத்திருந்தனர். அவர்களை மீட்கப் பெருந்துளை போட்டு அதன் வழியே மீட்புக் குழாயை மீட்புப் படையினர் அனுப்பினர். சுரங்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் துணிவுடன் – பயப்படாது – விரைவு காட்டாது – ஒருவர்பின் ஒருவராக வெளியே வந்தனர். சிலி நாட்டு அதிபரே காத்திருந்து அவர்களை வரவேற்றார்.

சிலிநாட்டுச் சுரங்கப் பணியாளர்கள் மீட்கப்பட்ட அருஞ்செயல், மண்ணில் மகத்தான மனித சாதனையாகும்.

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

### ஆ) இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.

| | | |
|---|---|---|
| 1. | Manners make the man. | ஒழுக்கம் உயர்வு தரும். |
| 2. | All is well that ends well. | நல்ல தொடக்கம் நல்ல முடிவைத் தரும். |
| 3. | Misfortunes never come single. | பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும். |
| 4. | Do well what you have to do. | செய்வன திருந்தச் செய். |
| 5. | Every tide has its ebb. | ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு. |

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181



# அணி

அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள். இயல்பான அழகை ஆடை, அணிகலன்களால் மேலும் அழகுபடுத்திக் கொள்வதுபோல, ஒரு பாடலைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபெறச் செய்தலே அணி எனப்படும். செய்யுளில் அமையும் அணி கற்பவர்க்கு இன்பம் பயக்கும். அதில் சொல்லப் புகுந்த கருத்தும் தெளிவாகப் புலப்படும்.

## 1. தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மீது, கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது, தற்குறிப்பேற்ற அணி. ( தன் + குறிப்பு + ஏற்றம் + அணி )

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் – வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்.

விடியற்காலையில் கோழிகள் கூவுதல் இயல்பான நிகழ்ச்சி. ஆனால் கவிஞர், காட்டில் நள்ளிரவில் கணவனைப் பிரிந்து வருத்தமுற்ற தமயந்தியின் துயரைப் போக்க, இருளை நீக்குவதற்குத் தேரேறி விரைந்து வருமாறு ஞாயிற்றைக் கோழிக் கூட்டங்கள் கூவி அழைப்பதாகத் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். எனவே, இது தற்குறிப்பேற்ற அணி.

## 2. வஞ்சப்புகழ்ச்சி அணி

புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

இப்பாடலில், தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவதுபோலக் கூறித், தீயவர்கள் தம் மனம்போன போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது.

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் – சொல்வீரால்

மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்.

இப்பாடலில், திருப்பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சினைச் சிவபெருமான் உண்டு தேவர்களைக் காத்தார் என்பது புராணக் கதை. இதனைக் காளமேகப் புலவர் சிறிது மாற்றி, ஒருவன் கல்லால் அடித்ததற்காகவும், இன்னொருவன் காலால் உதைத்ததற்காகவும், வேறொருவன் வில்லால் அடித்ததற்காகவும் வெட்கமடைந்து உயிர்வாழ விரும்பாமல் நஞ்சை உண்டார் எனப் பழிப்பதுபோல் சிவபெருமானைப் புகழ்ந்துள்ளார். எனவே, இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

### 3. இரட்டுறமொழிதல் அணி

ஒருசொல் இருபொருள்பட அமைந்து வருதல் இரட்டுறமொழிதல் எனப்படும். இதனைச் சிலேடை எனவும் வழங்குவர். இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

#### அ) செம்மொழிச்சிலேடை

ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் – ஓடிமண்டை
பற்றின் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

இப்பாடலில் பாம்பு, எள் ஆகிய இரண்டிற்கும் சிலேடை கூறப்பட்டுள்ளது. ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும் எனும் முதலடி, படமெடுத்து ஆடியபின் குடத்துள் சென்றடையும், படமெடுத்தாடும்போது, இரைச்சலிடும் எனப் பாம்பிற்கும்,

செக்காடியபின் எடுத்த எண்ணெயைக் குடத்தில் ஊற்றுவர்; செக்காடும்போது இரைச்சல் உண்டாகும் என எள்ளிற்கும் சிலேடையாக வந்துள்ளது.

இப்பாடலில் சொற்கள் பிரிவில்லாமல் இருபொருள்கள் தந்தன. எனவே, இது செம்மொழிச்சிலேடை ஆயிற்று.

#### ஆ) பிரிமொழிச்சிலேடை

ஒருசொல் தனித்து நின்று ஒருபொருளையும், அதுவே பிரிந்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப் பாடுவது, பிரிமொழிச்சிலேடை ஆகும்.

(எ–டு) செய்யுள் கிடைமறிக்கும் சேர்பலகை யிட்டுமுட்டும்
ஐயமற மேற்றா ளடர்க்குமே – துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடும் கதவுநிக ராம்.

பொருள்: செய் – வயல், வீடு; பலகை – பல கைகள், பலகை; தாள் – முயற்சி, தாழ்ப்பாள் துய்ய – தங்க, அழகான.

இப்பாடலில், ஆடும்கதவும் ஒன்றற்கொன்று சமம்; எங்ஙனமெனில்,

| | | | |
|---|---|---|---|
| 1. ஆடு: | செய்யுள் கிடைமறிக்கும் | – | வயலில் கிடையாக மறிக்கப்படும். |
| | சேர் பல கை யிட்டுமுட்டும் | – | பொருந்திய பல கைகளைக் கொம்பினால் முட்டும். |
| | ஐயமற மேல் தாள் அடர்க்கும் | – | ஐயமின்றி முயற்சியோடு போராடும். |
| | துய்ய நிலை தேடும் | – | தங்குதற்குத் தூய்மையான இடம் தேடும். |
| 2. கதவு: | செய் உட்கிடை மறிக்கும் | – | வீட்டின் உள்ளிடத்தைத் தடுத்து மூடி இருக்கும். |
| | சேர் பலகை இட்டுமுட்டும் | – | பலகைகளைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும். |
| | ஐயமற மேற்றாள் அடர்க்கும் | – | திண்ணமாகமூடப்படுவதோடன்றித் தாழ்ப்பாளிட்டும் இருக்கும். |
| | துய்யநிலை தேடும் | – | அழகானவேலைப்பாடு(நிலை) உடையதாய்இருக்கும். |

எனவே, இது பிரிமொழிச் சிலேடை.

## 4. பின்வருநிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ, பொருளோ, சொல்லும் பொருளோ மீண்டும் மீண்டும் வந்து அழகு சேர்க்கும். அவை, சொல் பின்வருநிலையணி, பொருள் பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி என மூவகைப்படும்.

### அ) சொல்பின்வரு நிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல்பின்வருநிலை அணி.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

இக்குறள்பாவில் துப்பு என்னும் ஒரேசொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வருநிலையணி.

### ஆ) பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது, பொருள் பின்வருநிலை அணி.

“அவிழ்ந்தன தோன்றி, அலர்ந்தன காயா,
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.”

இப்பாடலில் மலர்தல் என்னும் ஒரு பொருளில் அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல் ஆகிய சொற்கள் வந்துள்ளன. எனவே, இது பொருள் பின்வருநிலையணி.

### இ) சொற்பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, சொற்பொருள் பின்வருநிலை அணி.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

இப்பாடலில், தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொற்பொருள் பின்வருநிலையணி.

### 5. பிறிதுமொழிதலணி

உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

மென்மையான மயில்தோகையே ஆயினும், அதனை அளவுக்கு விஞ்சி வண்டியிலேற்றின் அச்சு ஒடிந்துவிடும் என்பது உவமை.

பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்றுகூடின், தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது, இதனால் பெறப்படும் பொருள். எனவே, இது பிறிதுமொழிதலணி.

## மாதிரி வினாக்கள்

### அ) அணியைச் சுட்டி விளக்குக.

1. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
   மேவன செய்தொழுக லான்.

2. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
   சொல்லில் பயனிலாச் சொல்.

3. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
   நீங்கின் அதனைப் பிற.

### ஆ) சிறுவினாக்கள்

1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
2. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.
3. இரட்டுறமொழிதலணி என்றால் என்ன ? சான்று காட்டி விளக்குக.
4. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ? சான்று தந்து விளக்குக.

## வகுப்பறைத் திறன்கள்

### அ) பேசுதல் திறன்

எதிர்காலத்தில் நீங்கள் பணிபுரிய விரும்பும் துறை எது ?அத்துறையைத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன ? இவை குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) படித்தல் திறன்

உரைப்பத்தியிலுள்ள நடைச்சிறப்பைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சந்தனமெடுத்துச் செய்த உருவமொன்று நடந்து வருகிறது. கையிலோர் ஊன்றுகோல். தரைக்கு வலிக்குமே என்று அஞ்சியோ என்னவோ மெதுவாக ஊன்றப்படுகிறது. அருள்பொழியும் முகம்; கனிவு ததும்பும் விழிகள்; புன்னகையைத் தேக்கியிருக்கும் பொக்கைவாய்ப் பூவிதழ்கள். அவரைச்சுற்றி நூற்றுக்கணக்கானவர் இருக்கின்றனர் என்றாலும், அவர்களெல்லாம் பகல் நேரத்து விண்மீன்களாகவும் அவர் மட்டுமே கதிரவனாகவும் நம் கண்களுக்குக் காட்சி அளிக்கின்றார். அவர் வாய்மையின் வடிவம்; அன்பின் திருவுருவம்; அவர்தாம் கருணைக்கடல் காந்தியடிகள்.

1. இப்பத்தியின் நடைச்சிறப்பை விளக்குக.
2. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகங்களை எடுத்தெழுதுக.
3. காந்தியடிகளின் முகத்தோற்றம் எவ்வாறு இருந்தது ?

### இ) எழுதுதல் திறன்

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

ஈ) கட்டுரை

நூலகத்தின் பயன்கள்

உ) கடிதம்

வேலைவேண்டி விண்ணப்பம்.

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் நட்பாகப் பழகும் திறன்

எழிலனும் தமிழரசனும் நெருங்கிய நண்பர்கள். ஆனால், எழிலனுக்குத் தமிழரசன் மட்டுமே நண்பன். தமிழரசனுக்கோ வகுப்பில் மட்டுமன்றிப் பள்ளியிலும் அனைவரும் நண்பர்களே; பார்க்கும் யாவரிடத்திலும் அன்பாகவும் நட்பாகவும் பழகுவான். பெரியவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வான். தன்னால் முடிந்த உதவிகளும் செய்வான். எழிலனும் நல்ல மாணவன்தான். ஆனால், தானாகச் சென்று பழகமாட்டான். வினாவுக்கு மட்டுமே விடை சொல்வான். தமிழரசனிடம் எல்லாரும் நெருங்கிப் பழகுவது, எழிலனுக்கு வேதனை தந்தது.

1. இவர்களில் யாரைப்போல் இருப்பது நல்லது ?
2. தன்னிடம் அனைவரும் நெருங்கிப் பழகுவதற்கு எழிலன் என்ன செய்யவேண்டுமென்று நீ நினைக்கிறாய் ?
3. உங்களுக்கு நண்பர்கள் உண்டா ? எத்தனைபேர் ?

athiyamanteam.com Video Course & Test Batch for TNPSC, Assessor, RRB, TNUSRB Call : 8681859181

## மதிப்புக்கல்வி

### அறிவுத்தாகம்

பலர் உறக்கம் வரவில்லையே என்று நூல்களைப் படிப்பார்கள். சிலருக்கு நூல்களைப் படித்தாலே உறக்கம் வந்துவிடும். ஆனால், அந்த மாபெருந்தலைவரோ படிப்பதற்குத் தனக்கு நேரமில்லை, நேரமில்லை என்று எப்போதும் கூறிக் கொண்டிருப்பார். ஆனால், பாராளுமன்றத்தில் பேசும்போது அதிகமான மேற்கோள்களைப் பயன்படுத்திப் பேசுவார்.

படிப்பதற்கு நேரமில்லை என்று கூறும் நீங்கள் எப்படி இவ்வளவு மேற்கோள்கள் காட்டுகிறீர்கள் ? என்று அவரிடம் மற்றையோர் கேட்டனர். அதற்கு அவர் திருடுகிறேன் என்றார். கேட்டவர்கள் புரியாமல் வியப்புடன் அவரை நோக்கினர்.

ஒரு நாள் உறங்குவதற்கு ஐந்து மணி நேரத்தை என் உதவியாளர் எனக்கு ஒதுக்கித் தந்தால் அதில், இரண்டு மணி நேரத்தைப் படிப்பதற்காகத் திருடுகின்றேன் என்றார் அவர்.

காலத்தைப் பொன்போன்று போற்றியவர் அவர். நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராய்த் திகழ்ந்தார். அவர்தான் நமது முதன்மையமைச்சர் நேரு.

நாமும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் நல்ல நூல்களைத்தேடிப் படிக்கவேண்டும்.

1. நீங்கள் பாடப்புத்தகம் தவிரப் பிற நூல்களைப் படிப்பதுண்டா ?
2. உண்டு என்றால் நாளொன்றுக்கு எத்தனை பக்கங்கள் படிக்கிறீர்கள் ?
3. உங்களூரில் உள்ள நூலகத்தில் நீங்கள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளீர்களா ?

## மொழியாக்கம்

### அ) தமிழாக்கம் செய்க.

Library is a place for reading books. There will be a librarian in each library. He takes care of all the books in the library. It has story books in English and Tamil. It also has books on Science, Economics and Commerce. There are newspapers and magazines in Tamil and English. We can read them there silently. It is a place for silent reading. Books can be borrowed for two weeks from the library. It is useful for everyone.

### ஆ) இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

| | |
|---|---|
| 1. Small rudders guide great ships. | சிறு துரும்பும் பல் குத்த உதவும். |
| 2. You must walk before run. | சிந்தித்துச் செயல்படு. |
| 3. Distance lends enchantment to the view. | இக்கரைக்கு அக்கரை பச்சை. |
| 4. Measure is a treasure. | அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. |
| 5. Make hay while the Sun shines. | காற்றுள்ள போதே தூற்றிக்கொள். |